# சைவ சித்தாந்தப் பெருமன்றம்

## சென்னை

2936

# நூற்றாண்டு விழா மலர்

1905 - 2005



"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்"




## This is how the sales graph looks for manufacturers and foam converters doing business with Springfeel.

Springfeel foams are manufactured with the latest technology in the world. For manufacturers and foam converters this means foam of highest quality, zero defects, a good reputation and a cakewalk when it comes to exports. Springfeel is today a leading supplier of foam to niche markets like furnishing, PU mattresses, sports goods, textile laminates and apparels, leather industries, coir mattresses, carpet under lays and many more. For these markets, extraordinary flexibility with foam is mandatory.

With its finger firmly on the pulse of the markets, Springfeel has consistently taken on board the latest ideas one of which is the rebonding process. This process reduces foam wastages to almost zero making Springfeel one of the few capable of handling even the smallest of foam application.

In fact going by the trends, the applications of foam seems infinite.

Springfeel has invested heavily in technology and infrastructure. Its state-of-art plant coupled with a young group of professionals at the helm has enabled Springfeel to develop a large and growing list of loyal clientele in a short span of just six years. Most importantly, the real strength on which we rest firmly is the trust of our esteemed customers.

**Springfeel**

**Polyurethane Foams Private Limited**

51/2A, Kelambakkam-Vandalur Road, Pudupakkam, Tamil Nadu – 603 103, India. Ph. 04114 - 274085 – 87 Fax. 04114 – 274084
Email id : emailus@sancharnet.in

உ

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழா மலர்

## விழா நாள் : 2005 சூலை 22, 23, 24


பதிப்பாசிரியர்:

முனைவர் அ. நாகலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
சோழன் நகர், பட்டாபிராம், சென்னை - 600 072.



வெளியீடு:

**சைவ சித்தாந்தப் பெருமன்றம்**

(தொடக்கம்: 07-07-1905)

4, (முதல்மாடி) வேங்கடேச அக்கிரகாரம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004.

விலை ரூ. 150/-

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 3 |
| I. | கூடிச் செயல்புரிவோம் | 5 - 8 |
| II. | வாழ்த்தும் வையகம் | 1 - 19 |
| III. | வளரும் மன்றம் | 1 - 48 |
| IV. | வழிகாட்டும் பெரியோர்கள் | 1 - 37 |
| V. | ஓங்கும் திருமுறைகள் | 1-111 |
| VI. | ஒளிரும் சாத்திரங்கள் | 1-100 |
| VII. | மலரும் சமுதாயம் | 1-102 |
| VIII. | ஆங்கிலக் கட்டுரைகள் | 1 - 54 |
| IX. | அறிவோம் ! நுகர்வோம்! | |


## அட்டைப் பட விளக்கம்

ஓவியர் திரு ந. சீனிவாசன் (அண்ணா பல்கலைக் கழகம்) அவர்களால் கணினி வடிவமைப்பில் உருவாக்கம் பெற்றது.

சிதம்பரத்தில் நூற்றாண்டு விழா நடைபெறுவதால், விண்வெளியைக் குறிக்கும் நீல நிறம் பின்னணியாக உள்ளது. ஆன்மா சிவபெருமானை (சிவலிங்கம்) நெருங்கி வரும்போது ஆணவம் அழிந்து (இருள் நீங்கி) உள்ளொளி பெருகுவதைக் குறிக்கின்றது.

சைவத்தைக் குறிக்கும் வகையில் காவி (சிவப்பு) நிறமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.


அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், எண். 9, ஐயா தெரு, இராயப்பேட்டை, சென்னை-14. போன் : 28353871





திருவெண்காடு : விருஷப வாகனதேவர் - உமையம்மை

# பதிப்புரை

- *மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்*
*எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவு இல்லை!* - - *திருஞானசம்பந்தர்*

திருப்பாதிரிப்புலியூர் அருள்திரு. ஞானியார் சுவாமிகள் முன்னிலையில், சுவாமி வேதாசலத்தால் (மறைமலை அடிகள்) விசுவாவசு ஆண்டு ஆனித்திங்கள் 24ஆம் நாள் (07.07.1905) **சைவ சித்தாந்த மகா சமாஜம்** தோற்றுவிக்கப்பெற்றது; 1982ல் **சைவ சித்தாந்தப் பெருமன்றம்** என்று பெயரில் சிறு மாற்றம் பெற்றது. பெருமன்றம் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன! எனவே, இது நூற்றாண்டு விழா (2005) ஆகும்!

'கோயில்' எனப்படும் சிதம்பரத்தில் 1906 ஆம் ஆண்டு முதலாண்டு விழாவும், 50 ஆண்டுகள் நிறைவில் (1955) பொன் விழாவும், 60 ஆண்டுகள் நிறைவில் (1965) வைர விழாவும், 80 ஆண்டுகள் நிறைவில் (1986) முத்து விழாவும் சிறப்பாக நடைபெற்றன. இனித்தமுடைய எடுத்த பொற்பாத நடராசர் நடம்புரியும் அச்சிதம்பரத்திலேயே ஏனைய விழாக்களைப் போன்று இந்த நூற்றாண்டு விழாவும் பார்த்திப ஆண்டு ஆடித்திங்கள் 6, 7, 8 (2005 சூலை 22, 23, 24) நாள்களில் நடப்பது சாலப்பொருந்தும்.

பெருமன்ற நூற்றாண்டு விழாவில் மன்ற வெளியீடுகளாகப் பன்னிரு நூல்கள் வெளிவருகின்றன. அறிஞர் பெருமக்களின் 'மாநாட்டுத் தலைமைப் பேருரைகள்' என்பதும், 'Essays on Saiva Siddhanta' என்பதும், சிதம்பரம் வெளியீடாம் 'முந்நூல் தெளிவு' என்பதும் குறிப்பிடத்தக்கவை.

நூற்றாண்டு விழா அறிவிப்பின்படி, 'பெருமன்றச் சிறப்பு அஞ்சல் உறை' ஒன்று பெருமன்றப் 'பெருமங்கல விழா'வில் (07.07.2005) சென்னையில் வெளியிடப்பெற்றது. இவ்விழா சிதம்பரத்தில் நடைபெற உள்ள நூற்றாண்டு விழாவின் முன்னோடி விழாவாகச் சிறப்பாக நடைபெற்றது.

நூற்றாண்டு விழாவில் மலர் ஒன்று வெளியிட வேண்டும் என்று விழாக்குழுவும் சிதம்பர வரவேற்புக் குழுவும் விரும்பின. அம்மலரின் பதிப்புப் பொறுப்பினைத் 'தமிழ்த் தென்றல் திருவிக' ஆய்வாளர் - சித்தாந்த இரத்தினம் - ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அ. நாகலிங்கம் அவர்களுடைய தலைமையில் இயங்கும் மலர்க்குழுவிடம் ஒப்படைக்கப்பெற்றது.

வாழ்த்துரை, மற்றும் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள், விளம்பரங்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் வழங்கிய அனைத்து பேரன்பர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி. கட்டுரைகள் பல விரிவாக எழுதப்பட்டிருந்ததால், அவற்றைச் சுருக்கி வெளியிட முயன்றும் சிலவற்றை மலரில் சேர்க்க இயலவில்லை; அறிஞர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம். இந்த நூற்றாண்டு விழா மலர் சிறந்த முறையில் கூத்தப்பெருமானின் திருவருளால் வெளிவருவதற்கு உறுதுணை செய்தோர் பலர். குறிப்பாக, பெருமன்றத் துணைத் தலைவர்கள் சிவத்திரு. முருகு. இராமலிங்கம், முனைவர் வெ. கனகசுந்தரம் மற்றும் பொருளாளர் திரு. க. கிருசுணன், பொதுச் செயலாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, மன்றத் தொண்டர் திரு. கு. ஆதிகேசவலு உள்ளிட்ட அனைத்து அன்பர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

அச்சகத்தில் இரவு பகல் பாராது உடனிருந்து பிழைதிருத்தம் செய்ததுடன், அரிய கருத்துகளைக் கூறி உதவிய மலர்க் குழு உறுப்பினர் – 'சைவ சித்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழ் முன்னாள் துணை ஆசிரியரும் பெருமன்றப் பெரியோர் பலருடன் பழகியவரும் ஆகிய ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர் சே.கு. சாந்தமூர்த்தி அவர்களுக்கும் அச்சுப்பிழை திருத்தித் தந்த பொறிஞர் நா. கலியாணசுந்தரம், திருமதி நா. கலையரசி ஆகியோருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றி. நூற்றாண்டு விழா மலர்ப் பணியினைத் தம் சொந்தப் பணியாகக் கருதி அல்லும் பகலும் அரும்பாடுபட்ட 'அலமு அச்சக' உரிமையாளர் திரு. துரை. இராமநாதன் அவர்களுக்கும் அச்சக ஊழியருக்கும் ஏனைய அன்பர்களுக்கும் இறைவன் திருவருள் சிறக்க விழைகிறோம்.

பெருமன்ற நூற்றாண்டு விழா மலர்ப்பணியில் பங்கேற்றுப் பல நெருக்கடிகளுக்கு இடையே எங்கள் பங்கைச் செய்ததில் குறைகள் சில இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது பெருமனத்துடன் இம்மலரைத் தமிழ் – சைவ அன்பர்கள் வரவேற்பார்களாக!

எம் கடன் இறைபணி செய்வதே!

இவ்வண்ணம்,

**செ.வே. சதானந்தன்**
சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர்

**ஏ.எம். சுவாமிநாதன்**
நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்

சிதம்பரம்,
*22-07-2005.*

**அ. நாகலிங்கம்**
மலர்க்குழுத் தலைவர்

# I. கூடிச் செயல்புரிவோம்!

1. சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழாக்குழு 5

2. நூற்றாண்டு விழா வரவேற்புக்குழு, சிதம்பரம் 7

3. சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயற்குழு 8

# கூடிச் செயல்புரிவோம்!

## I. சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழாக்குழு

(அனைவர் பெயர்களுக்கு முன் 'சிவத்திரு' என்பதைச் சேர்த்துப் படிக்கவும்)

*தலைவர்:* சித்தாந்த இரத்தினம் முனைவர் ஏ. எம். சுவாமிநாதன், (இ.ஆ.ப.)
*தமிழக அரசு நிதிச் செயலர் (பணி நிறைவு)*

*துணைத் தலைவர்:* ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப. (பணி நிறைவு)
*கட்டட அமைப்புக் குழுத் தலைவர்*

முனைவர் பு.ரா. சுந்தரவடிவேலு,
*நிதிக்குழுத் தலைவர் (தலைவர், சக்தி நிட்டிங் லிமிடெட்)*

பாம்பன் - வாரியார் அடிப்பொடி சித்தாந்த இரத்தினம்
செ.வே. சதானந்தன் *(பெருமன்றத் தலைவர்)*

*செயலாளர்:* சி. கிருஷ்ணமூர்த்தி
*(பெருமன்றப் பொதுச் செயலாளர் மற்றும் விழாக்குழுச் செயலாளர்)*

*பொருளாளர்:* க. கிருசுணன்
*(பெருமன்ற மற்றும் விழாக்குழுப் பொருளாளர்)*

### நிதிக்குழு

*தலைவர்:* முனைவர் பு.ரா. சுந்தரவடிவேலு

*உறுப்பினர்கள்:*

எஸ். விஸ்வநாத சிவாச்சாரியார்.
எஸ். தியாகராஜன்
ப. முருகன்
பி.கே. சுவாமிநாதன்
ஏ. மாணிக்கம்
சிவ. சரவணன்

### கட்டடக்குழு

*தலைவர்:* ச. மெய்கண்ட தேவன்

*உறுப்பினர்கள் :*

சிவ சரவணன்
டாக்டர் கே. இராமலிங்கம்

### நூல் பதிப்புக் குழு

*தலைவர்:* பேராசிரியர் முனைவர் திருமதி வெ. கனகசுந்தரம்
*(பெருமன்ற துணைத்தலைவர்)*

*உறுப்பினர்கள்:*

க. கிருசுணன்
புலவர் எ. வேலாயுதன்
முருக. ஏழுமலை
பி.வி. சுப்பிரமணியன்
முனைவர் சரளா இராசகோபாலன்
வி.எஸ். நாராயணசாமி
நளினி சுப்பையா
கோ. செல்வம்

## மலர்க்குழு

*தலைவர்:* பேராசிரியர் முனைவர் அ. நாகலிங்கம்

*உறுப்பினர்கள்:*

பேராசிரியர் சே.கு. சாந்தமூர்த்தி
பொறியாளர் ஆர். கண்ணன்
ந. ஒளியரசு
புலவர் நா. அரசு
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் ஆர். கோபாலகிருஷ்ணன்
மு.பெ. சத்தியவேல் முருகன்
க. சச்சிதானந்தன்
மீ. சிவசண்முகம்
டாக்டர் சந்திரசேகரன்
முனைவர் சிவ. மாதவன்
பேராசிரியர் தே.இரா. ஜயராமன்
ஜி. எம். சுந்தரம்

## கருத்தரங்கக் குழு

*தலைவர்:* முனைவர் பி.டி. பாலாஜி (ஆங்கில சித்தாந்தா - இதழ் ஆசிரியர்)

*உறுப்பினர்கள்:*

டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்
டி.எஸ். தியாகராஜன்
கு. வைத்தியநாத ஈசான தேசிகர்
பி.கே. குமாரசுவாமி
பேராசிரியர் முருக. இராமலிங்கம்
முனைவர் அரங்க. இராமலிங்கம்
கோ. நாகநாதன்
பி. கிருஷ்ணன்

## விழாப் போட்டிகளின் குழு

*தலைவர்:* ஆர். செல்வராஜ்

*உறுப்பினர்கள்:*

பழனிவேலு
இ.பி. திரிபுரசுந்தரம்

*சித்தாந்தம் ஆசிரியர்:* புலவர் எ. வேலாயுதம்

*கணக்குத் தணிக்கையாளர் :* ஏ.கே. பரமேஸ்வர ராவ்

*வரவேற்புக்குழு அமைப்பாளர்:* முருகு இராமலிங்கம்.

## நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்கள்

அருட்செல்வர் நா. மகாலிங்கம்
கு. ஆளுடையபிள்ளை
இரா.கி. சச்சிதானந்தம் (காவேரிப்பாக்கம்)
பேராசிரியர் ப. இராமன்
தேவகி முத்தையா
இரா. முத்துக்குமாரசுவாமி
பா. மூக்கப்பிள்ளை
ஜோதி ஆனந்தவேலு (பாண்டிச்சேரி)
சுவர்ணா சோமசுந்தரம் (கோவை)
முனைவர் ச. கங்காதரன் (மதுரை)
டாக்டர் அ. மாணிக்கம் (குரோம்பேட்டை)
முனைவர் சாரதா நம்பிஆரூரன்
ஆர். வசந்தகுமார் (கோவை)
கோபிநாதன்
சி. அக்னி சுந்தரம்
ஆர். வைத்தியநாதன்
முனைவர் அவ்வை. நடராசன்
டி.என். ராமச்சந்திரன் (தஞ்சை)
ஆதி முருகவேள் (திருச்சி)
திருநாவுக்கரசு முதலியார்
பி. முருகன்
பி.கே. குமாரசாமி (வெள்ளக்கோயில்)
ச. பாலசுப்பிரமணிய முதலியார் (சீர்காழி)
அருள் நமசிவாயம் (தஞ்சை)
முனைவர் கோமதி சூரியமூர்த்தி (மதுரை)
இளமுருகன் (புன்செய்ப் புளியம்பட்டி)
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் அருணை பாலறாவாயன்
எம்.சி. நித்தியானந்தம்
கிருஷ்ணன் (சென்னைப் பல்கலைக் கழகம்)
சிவ சரவணன்
ஆறுமுகம் (பெண்ணாகடம்)

## 2. நூற்றாண்டு விழா வரவேற்புக்குழு, சிதம்பரம்

*தலைவர்:* முனைவர் ச. அகத்தியலிங்கம்

*துணைத்தலைவர்:* கயிலைச் செல்வர் சு. திருநாவுக்கரசு பிள்ளை
கயிலைப் புனிதர் மு. இராமலிங்கம் செட்டியார்

*செயலர்&ஒருங்கிணைப்பாளர்:* முருகு. இராமலிங்கம் (**துணைத்தலைவர், பெருமன்றம்**)

*துணைச்செயலாளர்:* சீனு. அருணாசலம்

*பொருளாளர்:* கயிலைச் செல்வர் எஸ். ஆர். இராமநாதன்

*துணைப் பொருளாளர்:* கயிலைமணி ந. சுப்பிரமணியன்

*உறுப்பினர்கள்:*

புலவர் சுந்தரேசம் பிள்ளை
என்.எம்.பி. நடேசன்
சிதம்பரம் மயில்வாகனன்
கல்வியாளர் க. சுவாமிநாதன்
டாக்டர் சோ. முருகன்
மெ. மீனாட்சி சோமசுந்தரம்

ஆர். கே. சிவகுமார்
பின்னலூார் டாக்டர் ஜி.வி. இராமலிங்கம்
ஜி.வி பாலதண்டாயுதம்
எ.பி.ஆர். சரவணன்
ஏ.எல். பழனியப்பன்
கயிலைமணி ஜி. பாஸ்கரன்
ஏ.என். நடராசன்
டாக்டர் கே. ஆர். முத்துக்குமரன்
டாக்டர் கே. பழனிவேலு
எஸ். கலியபெருமாள்
ஆர்.எம்.எஸ்.டி. சுப்பையா
கயிலைமணி டி.எஸ்.ஜி. வேங்கடாசலபதி
சேது. சுப்பிரமணியன்

## 3. சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயற்குழு

| | |
|---|---|
| *தலைவர்:* | செ. வே. சதாநந்தன் |
| *துணைத் தலைவர்:* | முனைவர் வெ. கனகசுந்தரம் |
| | முருகு. இராமலிங்கம் |
| *பொதுச்செயலாளர்:* | சி. கிருஷ்ணமூர்த்தி |
| *செயலாளர், நூல்நிலையம்:* | பி.வி. சுப்பிரமணியன் |
| *செயலாளர், அறக்கட்டளைச் சொற்பொழிவு:* | முருக. ஏழுமலை |
| *செயலாளர், கடிதப் போக்குவரத்து:* | மு. செல்வராசு |
| *பொருளாளர்:* | க. கிருசுணன் |

*செயற்குழு உறுப்பினர்கள்:*

நா. அரசு
க.அ. சிவஞானம்
அ. முத்துராம்
அருள். சிவசுப்பிரமணியன்
எல்.கே. முத்து
ரா. அய்யப்பன்
கே. நாகநாதன்
மா. ஆனந்தகுமார்
நா. வீரப்பன்

*'சித்தாந்தம்' ஆசிரியர்:* திருமுறைமணி புலவர் எ. வேலாயுதம்

ஆங்கில இதழ் *'சைவ சித்தாந்தா' ஆசிரியர்:* முனைவர் பி.டி. பாலாஜி



தவத்திரு. மறைமலை அடிகள்
(1876-1950)



அருள்திரு. ஞானியார் சுவாமிகள்
(1873-1942)



சர். பொன்னம்பலம் இராமநாதன்



ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை



ம.பாலசுப்பிரமணிய முதலியார்



திரு.வி.கலியாணசுந்தரனார்

# பெருமன்றப் புரவலர்



கைலை தி.ந.மாணிக்கம்



திருமதி. சாரதா கிருசுணன்



சைவ சித்தாந்தப் பெருமன்றப் பணிகளைப் பாராட்டி, திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 17-01-2005 ல் அளித்த 'சித்தாந்தச் சுடர் நிலையம்' என்னும் விருதினை மன்றத் தலைவர் சிவத்திரு. செ.வே.சதானந்தன் பெறுதல்.

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழா வரவேற்புக்குழு, சிதம்பரம்



நிற்பவர்கள் இடமிருந்து வலம்: சிவத்திரு ப.செல்வம், சிவத்திரு சீனு அருணாசலம், சிவத்திரு சிதம்பரம் மயில்வாகனன், சிவத்திரு ஆர்.எம்.எஸ்.டி. சுப்பையா, சிவத்திரு சேது சுப்பிரமணியன், சிவத்திரு ஆர்.கே. சிவக்குமார், சிவத்திரு ஏ.வி. நடராசன், சிவத்திரு ந.சுப்பிரமணியன், சிவத்திரு டி.எஸ்.ஜி.வெங்கடாசலபதி, சிவத்திரு எஸ்.கலிய பெருமாள், சிவத்திரு ஏ.பி.ஆர்.சரவணன்

உட்கார்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்: சிவத்திரு கே.பழனிவேலு, சிவத்திரு ஜி.வி.பாலதண்டாயுதம், சிவத்திரு சு.திருநாவுக்கரசு பிள்ளை, சிவத்திரு ச.அகத்தியலிங்கம், சிவத்திரு செ.வே.சதாநந்தன், சிவத்திரு மு.இராமலிங்கம் செட்டியார், சிவத்திரு முருகு.இராமலிங்கம், சிவத்திரு எஸ்.ஆர்.இராமநாதன் செட்டியார்



சித்தாந்த இரத்தினம்
முனைவர் ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப.(பணி நிறைவு)
சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்



பாம்பன்-வாரியார் அடிப்பொடி சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன்
சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர்
மற்றும் நூற்றாண்டு விழாக்குழுத் துணைத் தலைவர்



சிவத்திரு.
ச.மெய்கண்டதேவன்.இ.ஆ.ப.(பணி நிறைவு)
நூற்றாண்டு விழாக்குழுத் துணைத்தலைவர்



சிவத்திரு. பு.ரா.சுந்தரவடிவேலு
நூற்றாண்டு விழாக்குழுத் துணைத்தலைவர்
மற்றும் நிதிக் குழுத்தலைவர்



சிவத்திரு. முருகு. இராமலிங்கம்
பெருமன்றத் துணைத்தலைவர் மற்றும்
நூற்றாண்டு விழா வரவேற்புக்குழு
அமைப்பாளர்



பேராசிரியர் முனைவர்
திருமதி. வெ.கனகசுந்தரம்
பெருமன்றத் துணைத்தலைவர் மற்றும்
நூற்றாண்டு விழா நூல் பதிப்புக் குழுத்தலைவர்



சிவத்திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
பெருமன்ற பொது / விழாக்குழுச் செயலாளர்



சிவத்திரு. க.கிருசுணன்
பெருமன்ற / விழாக்குழுப் பொருளாளர்



பேராசிரியர்
முனைவர் அ.நாகலிங்கம்
நூற்றாண்டு விழா மலர்க்குழுத் தலைவர்



முனைவர் பி.டி.பாலாஜி
ஆங்கில சைவசித்தாந்தா இதழாசிரியர் மற்றும்
நூற்றாண்டு விழாக் கருத்தரங்கக் குழுத்தலைவர்

## பெருமன்றச் செயற்குழு உறுப்பினர்கள்


சிவத்திரு. முருக.ஏழுமலை, செயலாளர்


சிவத்திரு. மு.செல்வராஜ், செயலாளர்


சிவத்திரு.நா.அரசு, முன்னாள் செயலாளர்


சிவத்திரு. ரா.அய்யப்பன்


சிவத்திரு. அ.முத்துராம்


சிவத்திரு. நா. வீரப்பன்


கயிலை மணி எல்.கே.முத்து


கே. ஆதிகேசவலு, மன்றத் தொண்டர்

## நூற்றாண்டுப் பெருமங்கல விழா 7-7-2005



முனைவர் ஏ.எம்.சுவாமிநாதன். சந்தான குரவர் சிலைகளைத் திறந்து வைத்தல்



தமிழ்நாடு அஞ்சல் துறை இயக்குநர் திருமதி. சுமதி இரவிச்சந்திரன்.
பெருமன்றச் சிறப்பு அஞ்சல் உறையை வெளியிடல்.

## நூற்றாண்டுப் பெருமங்கல விழா 7-7-2005



விழாத் தலைவர் நீதியரசர் எஸ்.நடராஜன். சைவ சித்தாந்தத் தொண்டர் மாமணி விருதைப் பேராசிரியர் தே.இரா.ஜெயராமனுக்கு வழங்கல்.




நூற்றாண்டுப் பெருமங்கல விழாவில்
மலேசியா டான் ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் சிறப்புரையாற்றல்.

# சிறப்பு அஞ்சல் உறை

சிறப்பு உறை विशेष आवरण Special Cover



சைவ சித்தாந்தப் பெருமன்றம் நூற்றாண்டு விழா

Saiva Siddhanta Perumanram शैव सिद्धांत पेरुमन्रम

शताब्दी वर्ष 1905 - 2005

Centenary 1905 - 2005





தவத் திரு ஞானியார் சுவாமிகள்
तवतिरु ज्ञानियार स्वामिगल
**Thava Thiru. Gnaniar Swamigal**

அருள் திரு மறைமலை அடிகள்
अरुल तिरु मरैमलै अडिगल
**Arul Thiru. Maraimalai Adigal**

Date of Release 07 - 07 - 2005




चेन्नई - Chennai - 600 004
7-7-2005

"Saiva Siddhanta Philosophy is the choicest product of the Dravidian intellect. The Saiva Siddhanta System is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India." - Rev .G.U.Pope.

Saiva Siddhanta Perumanram was founded in 1905 by Thava Thiru. Gnaniar Swamigal and Arul Thiru. Maraimalai Adigal and nurtured by eminent men like J.M. Nallasamy, Thiru.Vi. Ka., A. Somasundaram, M. Balasubramaniam etc.

The Perumanram seeks to propagate the philosophy and practices of Saiva Siddhantam through Conduct of lectures, seminars, festivals and publication of books and periodicals.

Special Cover Released during the Centenary Celebration of
**Saiva Siddhanta Perumanram**
Chennai - 600 004.

INDIA POST

Design Approved by
Principal Chief Postmaster General
Tamil Nadu Circle, Chennai - 600 002.

## சந்தான குரவர்



மெய்கண்டார் அருணந்திசிவம் மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம்




இலங்கை தெல்லிப்பழையில் நடந்த பவழ விழா (1981)
மாநாட்டு மேடையில் முன்னாள் தலைவர்கள் பெ.திருஞானசம்பந்தம்,
கொ.நீ.சிங்காரவேலு, இடையே சைவர் மாநாட்டுத் தலைவர் முரு.பழ.இரத்தினம் செட்டியார்.

# II. வாழ்த்தும் வையகம்


1. மாண்புமிகு பி.சி. இராமசாமி 1
2. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 2
3. சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 3
4. திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் 4
5. சீலத்திரு திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் 4
6. கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமி அடிகள் 5
7. ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் 6
8. சிவத்திரு ஞானியாரடிகள் 6
9. ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் 7
10. ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள் 7
11. தவத்திரு சாது சண்முக அடிகளார் 8
12. ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சத்திய ஞான பண்டார சந்நிதி சுவாமிகள் 8
13. சிவத்திரு மருதவாண தேசிகர் 9
14. ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதிகள் 9
15. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் 10
16. தவத்திரு முத்து சிவராம அடிகள் 10
17. ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 11
18. எம்.எஸ். இராமையா பிள்ளை 11
19. தவத்திரு குமரகுருபர சுவாமிகள் 12
20. பி.டி. சிவலிங்கம் 12
21. சி.வா. கிருஷ்ணமூர்த்தி 13
22. புலவர் ச. குழந்தையம்மாள் 14
23. சிவத்திரு குருபழநி அடிகள் 15
24. தவத்திரு பாலமுருகனடிமை 16
25. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 17
26. சிவத்திரு யோகானந்த அடிகள் 18
27. **D. Natarajah** 19

# வாழ்த்தும் வையகம் !

**மாண்புமிகு பி.சி. இராமசாமி,**
இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை அமைச்சர்

தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

6.7.2005.

உலக சமயங்களில் முன்னைப் பழமைக்குப் பழமையாகவும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் திகழும் ஒப்பற்ற சமயம்தான் நம் சைவ சமயம் ஆகும்.

சைவ சமயம், கடவுள், உயிர்கள், உலகம் என்ற மூன்றினைப் பதி, பசு, பாசம் எனக் குறிப்பிட்டு அவற்றைத் தெளிவுபடுத்திக் கூறியுள்ள அரிய கருத்துக்களே "சைவ சித்தாந்தம்" எனப் பாராட்டப்படுகின்றன.

சைவ சித்தாந்த அருநெறியை அவனியில் பரப்புவதற்காக 1905ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பெற்ற "சைவ சித்தாந்தப் பெருமன்றம்" 2005 ஆம் ஆண்டு ஜூலை 22, 23, 24 நாட்களில் தில்லையில் நூற்றாண்டு விழா காண்பது அறிந்து நான் மிகுந்த மன மகிழ்ச்சி அடைகின்றேன்.

*"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்*
*வழுக்கிலாத் தவம் தானங்கள்"*

என்பனவற்றை வலியுறுத்துவது நம் சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் நற்கொள்கைகளின் வழி நல்லாட்சி நடத்தி வருகிறார் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி "அம்மா" அவர்கள்.

"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்று அறங்களில் சிறந்த அன்னதானத்தைப் பறைசாற்றுவது நம் சைவ சித்தாந்தம்.

இன்றைக்குத் தமிழகமெங்கும் உள்ள 171 திருக்கோயில்களில் நாளும் அன்னதானம் மிகச் சிறப்புற இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை வாயிலாக நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் "அம்மா" அவர்கள் ஆற்றிவருகிறார்கள்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என அன்பையும் மனித நேயத்தையும் வலியுறுத்துவது நம் சைவ சித்தாந்தம்.

கோயிலில் உள்ள யானைகள்கூட துன்பத்துக்குள்ளாகக்கூடாது என்ற நம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி "அம்மா" அவர்களின் எண்ணத்தில் உதித்ததுதான் யானைகள் புத்துணர்ச்சி முகாம்.

*"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார்*
*அடியார்தமை அமுது செய்வித்தல்"*

என்ற தெய்வச் சேக்கிழார் பொன் மொழியைப் பின்பற்றித் திருக்கோயில்களில் மிகச் சிறப்பாக அன்னதானம் நிகழ்த்தியும், நாளும் திருப்பணிகள் செய்வித்துச் சிறப்புறத் திருக்குட நீராட்டு விழாக்களை நிகழ்த்தியும், சைவ சித்தாந்த நெறி நின்று அறநிலையத்துறையில் பொற்காலத்தை உருவாக்கி வருகிறார்கள் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி "அம்மா" அவர்கள்.

இன்றைய பெருமைமிக்க நம் அம்மாவின் ஆட்சியில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் நூற்றாண்டு விழா காண்பது எனக்கு மிகுந்த மன மகிழ்வினைத் தருகின்றது என்பதைத் தெரிவித்துச் "சைவ சித்தாந்தப் பெருமன்றத்"தின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெறவும் விழாவின் போது வெளியிடப் பெறும் நூற்றாண்டு விழா மலர் பக்திப் பெருமணம் பரப்பவும் என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
தருமபுரம், மயிலாடுதுறை (அஞ்சல்) – 609 001

*17.7.2005*

*ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே*

சிவசம்பந்தம் உடையதே சைவம், இது சிவநெறி எனப் போற்றப் பெற்றது. சிவநெறி ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகமெலாம் பரவி இருந்தது. இடையில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரை சமண, பௌத்தர்களின் ஆதிக்கத்தால் சிறிதே தொய்வு எய்தியது. இந்நிலையை திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் செஞ்ஞாயிறாகத் தோன்றி விளக்கம் செய்தனர். அதன்பின்னர் இந்நெறியை சுந்தரர், மணிவாசகர் இருவரும் போற்றிப் புரந்தனர்.

இச்சிவநெறிக்கு மூலம் வேதம், சிவாகமம், பதினெண்புராணங்கள், தேவாரத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்களாகும். இதன் அடிப்படையிலேயே நமது சிவநெறியாகிய "சைவசித்தாந்தம்" மக்களிடையே மலர்ந்து வருகிறது. இருந்தபோதிலும் மீண்டும் தளர்வு எய்திய காலத்தில்தான் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு ஞானியார் சுவாமிகளும் தவத்திரு மறைமலை அடிகளும் மற்றும் சில பெரியவர்களும் 1905ம் ஆண்டு தோற்றுவித்த சமய நிறுவனம் "சைவசித்தாந்த மகாசமாஜம்" ஆகும். சிறு பன்னிரு திருமுறைகள், சித்தாந்த சாத்திர நூல்கள் முதலியவற்றை நல் அறிஞர்கள் பலரைக்கொண்டு அழகுற பதிப்பிக்கப்பெற்று அடக்க விலையில் மக்கட்கு கிடைக்குமாறு மாபெரும் தொண்டினைச் செய்து வருகிறது.

"சைவ சித்தாந்தம்" என்னும் மாத இதழும், ஆங்கிலத்தில் "சைவசித்தாந்தா" என்னும் மும்மாத இதழும் வெளியிட்டும். திருமுறை இசைப்பயிற்சி வகுப்புகள், மங்கையர் மாநாடு, சமய மாநாடுகள் பல நிகழ்த்திவரும் இந்நிறுவனம் 1982ஆம் ஆண்டுமுதல் "சைவசித்தாந்தப் பெருமன்றம்" என்கிற தமிழ்ப்பெயரோடு இயங்கி சைவசித்தாந்தத்தில் சிறந்த சான்றோர்கட்கு 'சித்தாந்த சரபம்' என்கிற விருது வழங்கியும் பெருமன்றத்திற்கு சிறப்புறப்பணி செய்யும் தக்கவர்களை தேர்வு செய்து 'சித்தாந்த தொண்டர் மாமணி' என்கிற விருது வழங்கியும் சிறப்புடன் இயங்கி வருகிறது. இப்போது நூற்றாண்டு விழாக்காண இருப்பது பெருமகிழ்வைத் தருகிறது.

இந்நூற்றாண்டு விழா பொன்னம்பலம் எனப் போற்றப்பெறும் தில்லை மாநகரில் தில்லையம்பலவன் திருவருள் துணையோடு 3 நாட்கள் பெருவிழாவாக நிகழ இருப்பது பாராட்டத்தக்கது.

நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெறவும் பெருமன்றம் நிலையான பணிகள் பலவும் ஆற்றி மென்மேலும் வளர்ச்சியடையவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

**சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

ஆதீன கர்த்தர்,
திருவாவடுதுறை ஆதீனம்,
திருவாவடுதுறை - 609 803.
28.4.2005.

உலகில் வாழும் மக்கள் சிறந்த குறிக்கோளைக்கொண்டு, அதற்கேற்ற நெறி முறையில் வாழ்வதே சிறந்த மக்கள் வாழ்க்கையாகும். இம்மக்களுக்குச் சிறந்த குறிக்கோளையும் அதற்கேற்ற நெறிமுறைகளையும் தருவது சமயங்கள். இச்சமயங்கள் பழையனவும் புதியனவுமாய் உலகில் விளங்குகின்றன. தொன்மைச்சிறப்பு மிக்க சைவ சமயம் மக்கள் வாழ்க்கையில் நெடுங்காலமாகப் பின்னிப் பிணைந்து காணப்படுவது சைவ சமயத்தின் முடிந்த முடிவான கொள்கையே சைவ சித்தாந்தம் எனப் போற்றப் பெறுவது. சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிபு என்பது பொருளாகும்.

சைவ சித்தாந்தக் கொள்கையை நமது செந்தமிழ் அருளாளர்களும், சுவாமி விவேகானந்தர், ஜி.யு.போப் போன்றவர்களும் புகழ்ந்து போற்றியிருப்பது சைவ சித்தாந்தத்தின் மாட்சியைப் புலப்படுத்தும். சைவத் திருமுறைகளை இலக்கியமாகக் கொண்டு அமைந்த நூல்களே சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் மெய்கண்ட நூல்கள். மெய்கண்ட நூல்களைச் சார்ந்து உரையும் பாட்டுமாக எழுந்த தமிழ் நூல்கள் பல யாவரும் உணர, சைவ சித்தாந்த பெருமன்றம் நூறு ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருவது பாராட்டத்தக்கது.

*சைவ சமய மேசமயம் சமயா தீதப் பழம்பொருளைக்*
*கைவந் திடவே மன்றுள்வெளிக் காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்*
*பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்*
*தெய்வச் சபையைக் காணபதற்குச் சேர வாரும் சகத்தீரே*

என்று தாயுமானவர் அருளியது போன்று சைவ சமயத்தின் மாட்சியையும், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினையும் உணர்ந்த நல்லன்பர்கள் ஒன்றாய் இணைந்து,

*அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே*

என்னும் கொள்கையுடையவராய்ச் செயலாற்றி, சைவ சித்தாந்தப் பெருமன்றத்தை ஆல்போல் தழைக்கச்செய்தனர். அவ்வாறு தொண்டாற்றியவர்களும், தொண்டாற்றுபவர்களும் பாராட்டிற்குரியவர் ஆவர். சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறவும், விழா மலர் திருநெறிய மணம் பரப்பவும் நமது கடவுளாகிய **அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன்** திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

கயிலை மாமுனிவர்

**திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

*அதிபர், காசித்திருமடம், திருப்பனந்தாள் – 612 504*

*2.6.2005*

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழா சூலை 22,23 மற்றும் 24 தேதிகளில் நடைபெறவிருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

சைவத்தின்மேல் சமயம் வேறில்லை எனவும் அதில் சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை என்பதை அறுதியிட்டு உறுதிப்படுத்துவன சைவ சமயத் தோத்திரங்களும், சாத்திரங்களுமாம். இவை இரண்டும் சைவத்தின் இரு கண்கள் எனப் போற்றப்படுவன. 'தோத்திரமும், சாத்திரமும் ஆனார் தாமே' என்பது அப்பர் திருவாக்கு.

சைவ சமயத் தோத்திரங்கள் பரவிய அளவிற்குச் சாத்திரங்கள் பரவவில்லை என்பது வெளிப்படை. சைவ சமயத் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்தும் சைவ சித்தாந்தச் செம்பொருளைப் பரப்பும் வகையில் பெருந்தொண்டு புரிந்து வருவது இப்பெருமன்றமேயாம்.

சிவத்திரு. ஞானியார் அடிகளும், மறைமலை அடிகளாரும் இணைந்து தோற்றுவித்த மன்றம் இன்று நூற்றாண்டு விழாக்காணவிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

திருமுறைகள், சாத்திரங்கள்பற்றி அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திச் சைவ சமய மறுமலர்ச்சிக்கு உறுதுணையாய் விளங்கும் மன்றம் மேலும் வளர்ந்து பல்லாண்டுகள் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தொண்டாற்றத் திருவருள் துணைநிற்குமாக.

விழா இனிது நிறைவேறவும் பங்கேற்றுப் பயன்பெறுவோரும், விழாக்குழுவினரும் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், தீர்க்காயுளும் பெற்று வாழ அருளுமாறும் செந்தில்பதிவாழ் கந்தவேள் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

---

***சீலத்திரு திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்***

*மெய்கண்டார் பீடம், தொண்டை மண்டல ஆதீனம்,*
*57, வி.சி. பரமசிவம் தெரு, காஞ்சிபுரம் – 631 502.*

*15.6.2005.*

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இந்தியப் பெருநாட்டின் ஒரு சிறப்பான காலக்கட்டத்தில், இந்தியக் குடிமக்களிடையே சாதி-இன வேறுபாடின்றி மக்கள் யாவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கே வங்கத்தில் பிரம்ம சமாஜமும், பஞ்சாபில் ஆரிய சமாஜமும், மராட்டியத்தில் பிரார்த்தனா சமாஜமும் தோன்றி ஒற்றுமைக்குப் பாடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜம் தோன்றி பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றி திருமடங்கள் செய்யாது விட்ட பணிகளை எடுத்துக் கொண்டு மாவட்டந்தோறும் ஊர்கள் - நகரங்கள்தோறும் சென்று நூல்கள் - சொற்பொழிவுகள் - தீக்கைகள் வாயிலாகப் புதுப்பொலிவை உண்டாக்கி வளர்த்துக் கொண்டுவரும் இப்பெருமன்றம், தனக்கென ஒரு சொந்த இடத்தைத் தேடிக்கொண்டு வளர, சிதம்பரத்தில் நடக்க இருக்கும் நூற்றாண்டு விழா மாநாட்டில் வெளிவர இருக்கும் மாநாட்டு மலரும், கருத்தரங்கம் – சொற்பொழிவுகள் – ஆய்வரங்கம், நூல் வெளியீடுகள் ஆகிய யாவும் சிறப்புடன் இனிது நிறைவேற எல்லாம் வல்ல ஏலவார் குழலி உடனாய திருஏகம்பத்தை வேண்டி வாழ்த்துகிறோம்.

**கயிலை மாமுனிவர் வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகள்**

பேரூர் ஆதீனம், பேரூர் - 641 010.

13.6.2005

1. செந்தமிழ் நாட்டினில் சைவத்திருநெறி வளர்ச்சி நாடும்
சிந்தனையாளர் கூடி ஞானியார் அடிகள் சீர்சால்
நந்தலில் தமிழைப் போற்றும் மறைமலையடிகள் நட்பால்
தந்த ஆய்வுரையால் சைவசித்தாந்த சமாசம் கண்டார்.

2. மெய்கண்டார் அருளும் மேலாம் சிவஞானபோத நூலின்
ஐயுறவகல சான்றோர் முதல்நூலே என்றெல்லோரும்
மையல் அற்றுணரத் தந்தார் திருமுறை மக்கள் ஏற்க
செய்தனர் மிகக் குறைந்த செலவினில் வெளியிட்டார்கள்.

3. பற்பலவாகும் நூல்கள் பல பதித்திலக்கியத்தின்
நற்பொருள் விளங்கத் தந்தார் நல்கு கட்டளைகள் ஏற்று
சொற்பொழிவு ஆற்றச் செய்வார் தொடர்ந்து நாடெங்கும் அன்பர்
முற்பட மாநாடாக முதிர்பல உரைகள் தந்தார்.

4. உலகுபோற்றும் சிவநெறியின் உயர்வாம் சைவசித்தாந்தம்
இலகும் இதழ்கள் ஆங்கிலத்தில் இனியதமிழில் நல்லறிஞர்
பல நல்லனவாய் ஆய்ந்தெழுதிப் பரப்பும் பணியில் நூற்றாண்டு
நிலவும் மாநாட்டினை நடத்தும் நேயமிக்கார் பணிவாழி!

5. தில்லைக் கோயில் திருமுறைகள் சேர்ந்த கோயில் தமிழ் மன்னர்
எல்லைக்குரிய முடிசூட்டும் இனியகோயில் நால்வர்களும்
நல்கும் பாடல் ஆடல்வல்லான் நாட்டமிகச் செய்திருக்கோயில்
செல்வர் கோயில் திருக்களிற்றுப்படியில் தமிழ் சேர்ந்திட வேண்டும்.

6. நூற்றாண்டாகும் விழாக்காணும் பெருமன்றத்தின் நோக்கத்தில்
ஏற்றம் மிகுந்த தமிழ் மன்றில் இறைவன் செவிக்கு எய்திட வேண்டும்.
தோற்றும் மதிசேர் சிவனெழுதும் பாடல் தோய்ந்த இடமது நம்
தேற்றமிக்க ஆடல்வல்லான் திருமுன் அன்பர்கள் பாடிட வேண்டும்.

7. நலம் சேர் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் நற்பணிகள்
உலகெங்கிலும் நம்திருமுறைகள் ஓத வழிகாட்டிடச் சான்றோர்
இலகும் குழுக்கள் பலவமைந்து ஏற்றமிக நம்கோயில் தோறும்
பலரும் ஏற்றத் தாழ்வின்றி பரவச் செய்யும் பணி வாழி!

8. ஒண்தீந்தமிழாகம மறையாய் உவந்து போற்றத் திருமுறையின்
பண்கள்பாடி வாழ்வியலில் பரவத்தக்க அருளியலின்
எண்ணும் உணர்வு கருவறையில் ஏற்றம் பெறவே நூற்றாண்டு
திண்மையாக வழிகாட்டும் சீர்மை வளர வாழ்த்துகின்றோம்.

புனித மிக்க

**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்,**

*ஆதீன கர்த்தர், மதுரை ஆதீனம்,*

*70, தெற்காவணி மூலவீதி, மதுரை - 625 001.*

*28.5.2005*

அன்புமிக்க டாக்டர் திரு. அ. நாகலிங்கம் அவர்களுக்குத் திருவருளைச் சிந்தித்து, ஆசிகளுடன் எழுதிக் கொள்வது. தங்கள் 24.5.2005 ஆம் நாளிட்ட அன்பு மடல் கிடைத்து மகிழ்ந்தோம். சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா சிதம்பரம் மாநகரில் 2005 ஜூலை 22, 23, 24 ஆகிய நாட்களில் சிறப்புற நடக்கட்டும். உலக மக்கள் அனைவரும், சைவ சித்தாந்தப் பேருண்மையையும், மனித நிலையாமைத் தன்மையையும் உணர்ந்து, மனிதத் தன்மையுடனும், சிவபக்தியுடனும் திகழ்ந்து "மண்ணில் நல்ல வண்ணம்" வாழட்டும்!! எல்லோர்க்கும் ஆசீர்வாதம்!

---

**சிவத்திரு ஞானியாரடிகள்**

*ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்,*

*திருக்கோவலூர் ஆதீனம்,*

*திருப்பாதிரிப்புலியூர்*

"சைவசித்தாந்தம்" நம் தமிழ்நாட்டின்கண் தொன்றுதொட்டு விளங்கி வரும் நன்னெறி ஆகும். திருவருளின் உதவியால் நம் தண்டமிழ்ச் சான்றோர் தாம் செய்த ஆராய்ச்சி, அனுபவங்கள் மூலம் உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்காட்டிய நன்னெறியே இது. தமிழக மக்கள் இந்த நெறியில் நின்று தம் வாழ்க்கையை நடத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவாக உலக மக்கள் தெரிந்து கொள்ளும்பொருட்டு, நம் மடாலய ஞானச்சுடராக விளங்கிய ஐந்தாம் பட்டம் ஞானியாரடிகள், நம் மடாலயத்தில் தவத்திரு. மறைமலை அடிகள் உடனிருக்க 7-7-1905 இல் "சைவ சித்தாந்த மகா சமாஜம்" எனும் தொண்டு நிறுவனத்தைத் தோற்று வித்தார்கள்.

சென்னையில் அமைந்து அவ்வமைப்பு பல சான்றோர்களால் வளர்க்கப்பட்டு, ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, பல்வேறு தொண்டுகளைச் செய்து, சைவசித்தாந்தப் பெருமன்றம் என இன்று நூற்றாண்டுவிழா காண்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திருவருள் துணையுடன், சைவத் தலைநகராம் தில்லைப் பெருங்கோவிலின் திருக்கூத்தப் பெருமான் திருவடிபோற்றி சூலை 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களில் பெரும் மாநாடு நிகழ இருப்பதும், அதன் நினைவாய் ஞான மலர் வெளியிட இருப்பதும் அறிந்து மகிழ்கின்றோம்.

இம்மன்றம் மேலும் பயனுறு வகையில் பல தொண்டுகள் செய்து பல நூறு ஆண்டுகளைக் கண்டிட, நம் மடாலயத்தில் இருந்தருளி அருளோச்சும் செந்தமிழ்ச் செவ்வேள் திருவருளையும், சிவத்திரு ஞானியார் அடிகள் குருவருளையும் போற்றி வாழ்த்துகின்றோம்.

**மயிலம் பொம்மபுர ஆதீனம்**
**ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்** மயிலம் - 604 204, விழுப்புரம் மாவட்டம்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பிலான மடல், கிடைக்கப் பெற்றோம்.

எல்லாம் வல்ல சிவபரம் பொருளைப் போலவே, தோற்றம் காண முடியாத நிலையில் உள்ள செந்தமிழையும் சிவநெறியையும் மக்கள் போற்றிப் பிறவிப்பயன் கொள்ள வேண்டும் என்னும் பெருநோக்கில், கடந்த நூற்றாண்டில் அருள்மிகு ஞானியார் சுவாமிகளாலும், தவத்திரு மறைமலையடிகளாலும் தோற்றுவிக்கப் பெற்ற தொண்டு நிறுவனம் சைவ சித்தாந்தப் பெருமன்றம் ஆகும். மன்றத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் கடந்த நூறு ஆண்டுகளாக அருட்சான்றோர்கள், அறிஞர்கள், பொருட்செல்வர்கள் முதலானோர், ஒல்லும் வகையெல்லாம் ஓவாது பணிபுரிந்துள்ளனர், பணிபுரிகின்றனர். "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கூடுதல்" என்னும் "ஈரிரண்டும் ஞானம்" என்பர் சான்றோர். ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்னும் இவ்வையைந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை என்பார் அருணந்திசிவாசாரியார். "ஞானம் ஒன்றே முத்திக்கு ஏது" என்பார் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள். இத்தகு உவமையிலாக் கலைஞானத்தையும், உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் மனிதகுலம் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வினை அடைவான் வேண்டி, பெருமன்றம் ஆற்றிவரும் பெரும்பணிகள் போற்றத்தக்கன.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் பாவுக்கரசராம் நாவுக்கரசரின் வாக்கின்படி, மன்னுயிர் எல்லாம் இறையருள் இன்பத்தைத் துய்க்கும் வகையில் தன்னலம் கருதாது தொண்டுள்ளம் கொண்ட மக்கள் வாழும் வகையை வகையுறக் காட்டுமாறு நூற்றாண்டு விழா அமைக என்று நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

விழாவின் சார்பில் வெளிவரவுள்ள மலரானது, ஞானமலராக அமைந்து மணம் வீசிச்சிறக்கவும், இத்தகைய தொண்டுகளில் பங்கேற்றுப் பணிபுரிவர்கள், பயன்கொள்பவர்கள் ஆகியோர் அனைவரும் "சகல செல்வயோகமுற்ற பெருவாழ்வு" பெறவும் எல்லாம் வல்ல மயிலந்தண் மாமலை மணக்கோல முருகன் திருவருளையும், ஆதீன குருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர், ஆதிசிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும் நீடு நினைந்து வாழ்த்துகின்றோம்.

---

**ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** சூரியனார்கோயில்,
திருமங்கலக்குடி - 612 102.
20-06-2005

சைவ சித்தாந்த மகா சமாஜம் என்னும் பெயருடன் தொடங்கப்பெற்று, திருமுறைப்பணிகளையும். சித்தாந்தத் தொண்டினையும், திருக்கோயில் வழிபாட்டினையும் ஒருங்கிணைத்துச் சீரிய செயல்கள் பலவற்றைச் செய்து சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க ஒல்லும் வகையால் உயர் பணிகளை ஆற்றும் 'சித்தாந்தம்' என்னும் செவ்வியநெறியிலான திங்களிதழ் வாயிலாக அளப்பரும் பணிகள் ஆற்றிச் சிறந்தமையுடன் பின்னாளில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் எனும் பெயருடன் தொடர்ந்து இயங்கிச்சூலைத் திங்களில் ஆடல் வல்லான் அருட் கூத்தியற்றும் தில்லை மாநகரில் நூற்றாண்டு விழா காண விருப்பதறிந்து பெருமகிழ் வடைகின்றோம். விழா இனிது சிறக்கவும் விழா மலர் மணந்து பொலியவும் எமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய காளத்தீசன் திருவடி மலர்களைத் துதித்து ஆசிர்வதிக்கின்றோம்.

**தவத்திரு சாது சண்முக அடிகளார்**

*மடாதிபதி, தவத்திரு சாது சுவாமிகள் திருமடம்,*
*மேற்கு கிரி வீதி, அடிவாரம், பழனி - 624 601.*

*5.6.2005.*

சைவ சித்தாந்தப் பெருமன்றம் நூற்றாண்டு விழாவை நடத்த உள்ளது கண்டு மகிழ்ச்சி. "தொடங்குதல் எளிது தொடர்ந்து நடத்துதல் அரிது" என்று கூறுவர். எத்தனையோ காலமாற்றம் இருநூற்றாண்டுகளை இணைத்துள்ளது. நூறு ஆண்டுகளில் நிர்வாகத்தில் எத்தனையோ தலைமுறைகள், காலச் சூழல்கள், மக்கள் மனமாற்றங்கள், நாகரீகங்கள், கலாச்சாரம் போன்றவற்றைக் கடந்து கால வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டு வரலாற்றில் இடம் பெற்று முத்திரை பதித்துள்ளது சைவ சித்தாந்தப் பெருமன்றம்.

காரணம், அருளாளர்கள், ஞானிகள், சீலமிகு பெருமக்களாகிய தவத்திரு ஞானியாரடிகள், மறைத்திரு. மறைமலை அடிகள் போன்றோர் நிறைந்த மனத்துடன் நல்அருள் நோக்குடன் தொடங்கியதன் விளைவே இன்னும் நாம் அறுவடை செய்துகொண்டே இருக்கின்றோம். விளைச்சல் தீர்ந்தபாடில்லை. விளைந்து கொண்டே இருக்கின்றது. எனவே திறந்த மனமுடையவர்கள் ஞானிகள், அருளாளர்கள் எதைத் தொடங்கினாலும் அது வீழ்வதில்லை. இடையில் தடைபடுவதில்லை என்பது சைவ சித்தாந்தப் பெருமன்றம் உணர்த்தும் மாபெரும் உண்மை! இப்பெருமன்றம் தொடர்ந்து வீறுநடைபோட்டு மேன்மேலும் வளர நமது வழிபடு கடவுளும், தண்டமிழ்க் கடவுளுமாகிய ஞானதண்டாயுதபாணியின் திருவருளையும், நமது ஆதிகுருமுதல்வர் தவத்திரு சாதுசாமிகள் தண்ணருளையும் நீள நினைகின்றோம்.

---

**ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதி சுவாமிகள்**

*ஆதீன கர்த்தர், செங்கோல் ஆதீனம்,*
*பெருங்குளம் - 628 752.*

*30-06-2005*

சைவ சித்தாந்தப் பெருமன்றம், பன்னிருதிருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள், சைவசித்தாந்தம் ஆகியவைகளைப் பரவச் செய்யும் முயற்சிகளையும், இப்பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா நடக்க விருப்பதையும் போற்றுகின்றோம்.

சைவசமயப்பணிகளையும் சமுதாயப் பணிகளையும் சைவ சித்தாந்தப் பெருமன்றம் அயராது நூறாண்டு காலமாகச் செய்து வருவதைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இச்சிறந்த சைவப்பணி 1905ம் ஆண்டு தொடங்கப்பெற்று 2005 ஜூலை மாதம் 22, 23, 24 தேதிகளில் நம் தில்லையில் நடக்கவிருப்பதையெண்ணி உள்ளம் பெருமகிழ்ச்சியடைகிறது.

மேலும் இவ்விழாவினை யொட்டி மலர் ஒன்று வெளியீடு செய்வதையும் சிறப்புடையதாக எண்ணுகிறோம்.

இம்மலர் நன்கு மலர்ந்து திக்கெட்டும் சிவமணம் மகிழ்ந்து வீசட்டும். இச்சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் அயர்ச்சியிலா முயற்சி, உயர்ச்சி பெற்று மேன்மேலும் சிறப்புடன் விளங்க நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய அருள்மிகு அழகியதிருச்சிற்றம் பலமுடையான் திருவருளை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

"நன்மை பெருகுக! அருள்நெறியே வந்தணைக!"

சிவத்திரு. மருதவாண தேசிகர் (வள்ளல் சந்தான மடம்) நாச்சியார்கோவில் ஆதீனம்,
திருநறையூர், நாச்சியார் கோவில் - 612 602.

27-06-2005

சென்னையில் சென்ற 1905ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டு ஆல்போல் தழைத்து படர்ந்து வளர்ந்து சென்ற 1982லிருந்து சைவசித்தாந்தப் பெருமன்றம் என்ற பெயருடன் சான்றோர்கள் பலருடைய சீரியமுயற்சியாலும் தொண்டாலும் வளர்ந்து நாளது 2005ம் ஆண்டு சூலைத் தங்கள் 22, 23, 24ஆகிய மூன்று தினங்களில் அதற்கான நூற்றாண்டு விழாவினை சிதம்பரத்திலே பல சான்றோர்கள் முன்னிலையில் கோலாகலத்துடன் கொண்டாடி நூற்றாண்டு விழா மலரும் வெளியிடும் செய்தியினை அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகின்றோம் மேலும் மன்றம் எதிர்காலத்தில் தான் செய்துவரும் சைவசித்தாந்தத் தொண்டினை மேன்மேலும் சிறப்பாக பணியாற்றி சைவசித்தாந்தத் தொண்டும் தமிழ்த்தொண்டும் வளரச் செய்து பல்லாண்டு காலம் இனிதே புகழுடன் விளங்க நாம் வணங்கும் ஸ்ரீ சிதம்பரேஸ்வர மூர்த்தியின் திருவடித்தாமரையினை தொழுது வாழ்த்துகின்றோம்.

---

ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதிகள் வேளாக்குறிச்சி ஆதீனம்,
திருப்புகலூர் - 609 704.

25.6.2005

பாரதநாட்டின் பண்பாடு கலாச்சாரம், சமூக கட்டமைப்பு சமயம் சார்ந்த தெய்வீக உணர்வுடன் கூடியதாகும். கோயில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லும் அளவிற்குத் தெய்வ மணங்கமழும் திருக்கோயில்கள் நாடெங்கிலும் உள்ளன. பார்க்கின்ற இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எம்பெருமான் அருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த சான்றோர்களின் அருள்மொழிகள் ஆண்டவனின் பெருமையை நமக்கு நினைவூட்டிக்கொண்டேயிருக்கின்றன. அதுமட்டுமின்றி அருளாளர்களின் அருள் வாக்குகள் வாழ்வியலுக்கு வழிகாட்டி உய்யும் நெறி உணர்த்தி அருளுகின்றன. விஞ்ஞானத்தின் விளைவால் உலகில் மாறுதல்கள் ஏற்பட்டு வரும் இந்நாளிலும் அந்தமும் ஆதியுமிலாத அருட்பெருஞ் சோதியை வாழ்த்துவதிலும் வணங்குவதிலும் எண்ணற்ற மக்கள் ஈடுபடுகிற காட்சி நம் நாட்டிற்குத் தனிப்பெருமை தரும் காட்சியாகும்.

கொள்கை அடிப்படையில் சைவ சமய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பரப்புவதற்கு பல நிறுவனங்கள் தோன்றின. இவ்வகையில் ஆதீனங்களைத் தொடர்ந்து பல அன்பர்களின் கூட்டு முயற்சியால் இச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் தோற்றுவிக்கப்பட்டு ஆற்றிவரும் பணி அனைவர் உள்ளத்திற்கும் நிறைவைத் தருவது. இத்தகு மன்றம் நூற்றாண்டு விழா காண்பதறிய மிக்க மகிழ்ச்சி. மன்றப் பணிகள் சிறந்தோங்கி மேன்மேலும் விழாக்கள் கண்டு நற்பயன் நல்கிடுமாக. இச் சைவ சமயக் கொள்கை வழியில் வந்தவர் பண்டுதொட்டுப் பலராவர். "சைவ சித்தாந்தரே" என முதற்கண் கூறியவர் திருமூலர். அவ்ரே சைவம் என்ற சொல் சிவத்தோடு இயைபுடையதென்பர். சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி அம்மான் எனவும் சிவன் எனும் நாமம் அல்லது அறையோம் எனவும் அப்பரும் அருள்வர்.

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனோடு ஒப்பார் இங்கு யாவருமிலர்" என்பர் திருமூலர். அச்சிவ பரம்பொருள் உலகம் உய்ய வகுத்த நெறியே சிவநெறி; சைவ சமயநெறி. இந்நெறிக் கொள்கைகள் ஒரு நாட்டுக்கோ, ஒரு இனத்துக்கோ ஒரு மொழி பேசுவோர்க்கோ உரியன அல்ல. அதன் கொள்கைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளுதற்குரியன.

ஆகவே, எல்லாப் பிறவிகளுக்கும், நமக்கு நிரந்தரமாக அமைந்துள்ள அம்மையும் அப்பனுமாகிய இறைவனின் பெருங்கருணையையும், பேரருள் தன்மையையும் உணர்ந்து மேன்மேலும் இறைவன் திருவருளுக்கு ஆட்பட்டு நற்செயல்களைச் செய்து நாம் உய்வோமாக.

இப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா மலர் நன்முறையில் மலர்ந்து தமிழ் உலகமும் சைவ உலகமும் நூற்பயன் நுகர்ந்து பேரின்பம் பெற்றுள்ள ஸ்ரீ அஜபா நடனத்தியாகேசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

---

**தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** குன்றக்குடி - *630 206.*

நூறாண்டுகளுக்கு முன் சைவம், சித்தாந்த சாத்திரங்கள், திருமுறை ஆகியவற்றைத் தமிழ் மரபு நெறியில் தழைத்தோங்கச் செய்யும் முயற்சி தொடங்கப் பெற்றது. திருப்பாதிரிப்புலியூர் திருவருள்திரு ஞானியார் சுவாமிகள் திருவுள்ளம்பற்றி ஒரு நிறுவனம் தொடங்கப்பெற்றது. சுவாமிகள் இருபதாம் நூற்றாண்டின் ஞானப் பேரொளி. தமிழும் வடமொழியும் சைவமும் சங்கமித்த பெருங்கடல்; வாழ்நாளில் எவரையும் வீழ்ந்து வணங்காத திரு.வி.க. அவர்களால் வணங்கப்பெற்ற ஞானப் பெட்டகம். அப்பெருமகனார் தோற்றுவித்த சைவ சித்தாந்த மகா சமாஜம் சித்தாந்தப் பெருமன்றமாக ஒளிர்ந்து வருகிறது. இவ்வாண்டு இப்பெருமன்றத்தின் நூற்றாண்டு என்பதறிந்து பெரிதும் மகிழ்கிறோம்.

நமது குருமகாசந்நிதானம் அருளாட்சி தொடங்கிய காலக்கட்டத்தில், இப்பெருமன்றத்தின் ஆண்டுவிழா ஒன்று, நமது குன்றக்குடித் திருமடத்தில் இனிது நிகழ்ந்த வரலாறு நம் நினைவுக்கு வருகின்றது. சிவஞான போதம், தமிழ் நூலே என்பதை இம்மன்றச் செயலர் திரு. ம. பாலசுப்பிரமணியனார் இம்மன்றவழி நிறுவி, நூலாக எழுதியதையும் நினைந்து மகிழ்கின்றோம்.

சைவப் பாதிரியார் சச்சிதானந்தம் பிள்ளை, ஞானத் தமிழாகரர் முனைவர் வை. இரத்தினசபாபதி முதலிய அறிஞர் பெருமக்களின் பணி இப்பெருமன்றத்திற்கு உரமாக அமைந்தது. நினைவுகூரத்தக்கது. காலத்தின் தேவை அறிந்து, தமிழ் நெறியின் தடம் மாறாமல் அருட்பணி செய்துவரும் இப்பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா, சைவ ஆதீன மகாசந்நிதானங்களின் நல்லாசியோடு நிகழ இருப்பது நமக்கு மகிழ்வளிக்கின்றது. விழா இனிதே சிறக்கத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

---

**தவத்திரு. முத்துசிவராம அடிகள்** மடாதிபதி, திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடம்,
தென்சேரி - *641 669.*

*27-06-2005*

சைவ சித்தாந்தப் பெருமன்ற துணைத்தலைவர் ஜெ. முருகு. இராமலிங்கம் அவர்களுக்கு தென்சேரிமலை சுவாமிகள் எழுதியது. நலம் நலமேயாகுக. தங்களின் சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழா செய்தி தாங்கள் அனுப்பிய கடிதத்தின் வாயிலாக சூலைத் திங்கள் 22,23,24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது குறித்து மிக்க மகிழ்வுற்றோம். "அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலத்தில்" நடைபெறும் விழா சிறக்கவும், இவ்விழா நினைவாக தாங்கள் வெளியிடும். விழாமலர் சிறக்கவும் எல்லாம் வல்ல அம்பலவாணப் பெருமானின் செந்தாமரைத் திருவடிகளை நீள நினைந்து வணங்கி வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

*மடாதிபதி, துலாவூர் மடம்.*

*28-06-2005*

சைவ சித்தாந்த மகா சமாஜம் என்ற பெயரில் 7.7.1905ல் திருப்பாதிரிப்புலியூர் அருட்திரு. ஞானியார் சுவாமிகளும் தவத்திரு. மறைமலைஅடிகளும் இணைந்து தோற்றுவித்தார்கள். அச்சமயத்தில் வேத, ஆகம பாடசாலைகளும், தேவாரப் பாடசாலைகளும் சிறப்பாக இருந்து வந்தன. ஆனால் சைவ சித்தாந்தத்தையும், சாத்திரங்களையும் பரப்புவதற்கு தனிப்பட்ட நிறுவனம் அவசியம் எனக் கருதி இம்மன்றம் தோற்றுவிக்கப்பெற்றது. "மஹாசமாஜம்" என்ற பெயர் மாற்றம் பெற்று 30.5.1982லிருந்து சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்று வழங்கப்பெற்று வருகிறது.

சைவசமயப்பணிகளையும், சமுதாயப்பணிகளையும் செய்துவரும் சைவ சித்தாந்தப் பெருமன்றம் உலகம் தழுவிய ஒருஅமைப்பாகும். இம்மன்றம் சைவ சமயமும், தமிழும் சைவ சித்தாந்தமும் தழைக்க மேன்மேலும் சிறப்பாகப் பணியாற்றத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இம்மன்றத்தின் நூற்றாண்டுவிழா 2005ஆம் ஆண்டு சூலைத் திங்கள், 22,23,24 தேதிகளில் சைவர்களின் திருக்கோவிலாகத் திகழும் சிதம்பரத்தில் நடைபெற இருப்பது திருவருட் செயலே ஆகும். நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற அருள்தரு மங்களாம்பிகை உடனாய அருள்மிகு வாஞ்சிநாதப் பெருமான் திருவருளையும், அருட்டிரு நிரம்ப அழகிய தேசிக குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

---

**எம்.எஸ். இராமையா பிள்ளை**

*தலைவர், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை,*
*திருஞானசம்பந்தர் மடாலயம்,*
*41, வடக்கு ரத வீதி, தூத்துக்குடி - 628 002.*

*21.6.05.*

7-7-1905ல் தோன்றிய உங்கள் பெருமன்றம் இன்று நூற்றாண்டு விழாக்காணும்பேறு பெற்றமையை அறிந்து பெருமகிழ்வு எய்துகின்றோம். பெருமன்றத்தைக் கட்டிக்காத்து, இன்று வரை வளர்த்த சைவச் சான்றோர்களை வியந்து போற்றுகிறோம்.

பெருமன்றம் நடத்திவரும் தமிழ், ஆங்கில இதழ்கள் அரிய செய்திகளை சைவ உலகிற்குத் தருவதோடு, ஆன்றோர் சான்றோர் பலரை ஒருங்கிணைக்கும் பாலமாகவும் இருந்து வருகிறது.

ஞானமா நடராசப் பெருமான் அருளாட்சித் தலத்தில் விழா நடக்க இருப்பது சாலப் பொருத்தம் உடையதாக உளது.

நூற்றாண்டு விழாக் குழுவின் முக்கிய நோக்கங்களாகத் தாங்கள் அறிவித்திருக்கும் ஆறு திட்டங்கள் நிறைவு பெறவும், விழாவின் எல்லா நிகழ்வுகளும், சொற்பொழிவு, கருத்தரங்கு ஆகியவைகளும் சிறப்புற நடைபெறவும் தில்லைக் கூத்தன் திருவடி மலர்களைப் பிரார்த்திக்கிறோம்.

தவத்திரு குமரகுருபர சுவாமிகள் மடாதிபதி, கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோயமுத்தூர் - 641 006.

உரைப்பார் உரைஉகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலை புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே

நூற்றாண்டு விழாக்காணும் சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள். முதுபெரும் தவஞானி ஞானியார் சுவாமிகளும், தவத்திரு. மறைமலை அடிகளாலும் தோற்றுவிக்கப்பட்ட சைவ சித்தாந்தப் பெருமன்றம் இன்றுவரை வளர்பிறையாகவே சைவப்பணிகளைச் சிறப்புற செய்து வருவதை சைவ உலகினர் யாவரும் அறிந்ததே.

மன்றத்தின் பெரும் வளர்ச்சியில் சைவசித்தாந்தப் பெருமக்கள் பலரும் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டு சிறப்புப் பணியாற்றியுள்ளனர். முன்னோர்கள் காட்டிய அறவழியில் மன்றத்தின் பணி மேலும் மேலும் வளர 'அவனருளால் அவன் தாள் வணங்கி' வாழ்த்துகின்றோம்.

---

பி.டி. சிவலிங்கம் செயலர், ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபை,
வெட்டுவாணம் - 635 809 (வழி) பள்ளிகொண்டா வேலூர் மாவட்டம்.

23.06.2005

"உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடிவாழ்த்தி வணங்குவோம்."

சிவபெருமானை நெஞ்சார்ந்த தெய்வமாக துதி செய்து மகிழ்வதே சைவ சமயத்தினுடைய தலையாய கொள்கையாகும். இப்பெருமானின் அருளை உலகுஎலாம் பரப்பும் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா காண்பதில் உள்ளப்பூரிப்போடு பெருமை அடைகிறோம். இப்பெருமன்றம் உயர்ந்தோங்கி எந்நாளும் சைவ சமயப் புகழ்பரப்ப உமையொரு பாகன் திருத்தாள் பணிந்து மலர் வெளியீட்டினை மகிழ்வுடன் பாராட்டி வரவேற்கிறோம்.

சி.வா. கிருஷ்ணமூர்த்தி தலைவர், ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை,
9/5, டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

20.6.2005.

*நானேயோ தவம் செய்தேன்? சிவாயநம எனப் பெற்றேன்!*
*தேன்ஆய் இன் அமுதமும்ஆய் தித்திக்கும் சிவபெருமான்*
*தானே வந்து, எனது உள்ளம் புகுந்து, அடியேற்கு அருள் செய்தான்*
*ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே! (மணிவாசகர்)*

எல்லாம் வல்ல குருவருளாலும், திருவருளாலும் சைவ சித்தாந்தப் பெருமன்ற நூற்றாண்டு விழா இனிதே சிறப்பாக நடைபெறும். காரணம், இதன் ஒருங்கிணைப்புக் குழுவினர் அனைவரும் சீரிய பண்பாளர்கள். எதையும் செவ்வனே நிறைவேற்றும் ஆற்றலும், புகழும், அருளும் உடையவர்கள்.

*வகுத்தான் வகுத்தவகை யல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (குறள்)*

சைவ சித்தாந்தப் பெருமன்றம் தனது 50ஆம் ஆண்டு விழாவினை சைவ சித்தாந்த மகாசமாஜம் என்ற பெயரில் இதே சிதம்பரத்தில் நடத்தியது. அதுபோது அடியேன் செயற்குழுவில் பங்காற்றினேன். அதுபோன்று ஒரு பெருவிழா இனிக் காண்பது அரிதே. கொழும்புவிலிருந்து அமைச்சர் திரு. நடேசன் பிள்ளை விழாத் தலைவர் பங்கேற்றவர்களில் ஒருசிலர் சைவப் பெரியார் சச்சிதானந்தப் பிள்ளை, திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், ஆலால சுந்தரஞ் செட்டியார், சண்முக சுந்தரஞ் செட்டியார் (திருவெம்பாவை உரை வெளியீடு), வெள்ளைவாரணர், பு.ரா.சாமிநாதன், முருகவேள் ஆவர். சிதம்பரம் சிவத்திரு. இரத்தினஞ் செட்டியார் (நடராஜ் ஜுவல்லரி) அவர்கள் முன்னின்று நடத்தினார்கள். அந்த மூன்று நாட்களும் உணவு, உறையுள் சிறப்பாக இருந்தன. மறக்க முடியாத உபசரிப்பு. எதிர்பாராமல் வாரியார் சுவாமிகளும் மாநாட்டில் பங்கேற்றார்கள். பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா அதேபோன்று அமைய, எல்லாம் வல்ல செந்தில் ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக. பெருமன்றம் மேன்மேலும் வருகிற ஆண்டுகளில் சிறப்புற்று விளங்க விழைகிறேன்.

புலவர் ச. குழந்தையம்மாள்
செயலளர்,
திரு. பாகம்பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி.

*"மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்*
*துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்*
*பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை*
*விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"* - சேக்கிழார்

அருள்மிகு ஞானியார் சுவாமிகள், தவத்திரு. மறைமலையடிகளார் ஆகிய இரு அருட்பெருஞ் சான்றோர்களால் தோற்றுவிக்கப்பட்ட சைவ சித்தாந்தப் பெருமன்றம் அளப்பரிய சைவப் பணிகளால் உலகளாவிய சிறப்பினைப் பெற்று, தமிழகத்தில், ஓங்குபொருட்சமய முதற் சைவநெறி தான் பெற்ற புண்ணியக்கண் எனத் திகழ்ந்து, நூற்றாண்டு விழாக் காண்கிறது. ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, திரு.வி.க., ந.ரா.முருகவேள், கிருபானந்த வாரியார், திருமுறைக் காவலர். சோமசுந்தரம் செட்டியார் போன்ற அறிஞர் பெருமக்கள் பலர், பெருமன்றம் என்னும் ஆலமரத்தினை நீருட்டி உரமிட்டு வளர்த்தனர். பெருமன்றம் என்னும் ஆலமர நிழலிலே தங்கிப் பயன்பெற்றவர்கள் பலர். அடியேனும் அவர்களில் ஒருவர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பெருமன்றத்தின் ஆண்டு சைவ மங்கையர் மாநாட்டில் உரையாற்றியும், தலைமை ஏற்றும் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்று, பல அறிஞர் பெருமக்களின் தொடர்புகள் கிடைக்கும் பேறுபெற்றுப் பெருமையடைந்தேன். சித்தாந்தம் என்னும் திங்களிதழ், "சைவ சித்தாந்தா" என்னும் முத்திங்கள் இதழ் நடத்தியும், அறக்கட்டளைகளை நிறுவி சமய நூல்களை வகுப்புகள் நடத்தியும், சான்றோர்களைப் போற்றியும், செய்து வரும் சைவப்பணிகளால் அளக்கலாகா அளவும், பெருமையும் பெற்று, சைவப்பயிர் வளர வேலியாக அமைந்த சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சிறப்பினை என் சொல்லி வாழ்த்துவது! சொல்லுவதற்கரியேன் வாழி!

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும்" என வேண்டிய திருஞான சம்பந்தரின் அருளுரையைச் செயல்படுத்தும் வகையில் பணியாற்றி, நூற்றாண்டு விழாக்காணும் புனிதர் பேரவையாகிய பெருமன்றம் பல்லாண்டென்னும் பதங்கடந்தானைப்போல, உலகெலாம் நிலவி, பல்லாண்டு, பல்லாண்டு சைவப்பணியாற்றி பல நூற்றுக்கணக்கான விழாக்களைக் கண்டு சிறக்கவும், தில்லையம்பதியில் நிகழும் நூற்றாண்டு விழா, மங்கலம் பொலிந்து நிகழவும், பெருமன்றத்தின் பொறுப்பாளர்கள் நூற்றாண்டு விழாக் குழுவினர்கள், விழாவில் கலந்து கொள்ளும் பேறு பெற்றவர்கள் அனைவரும் பலநலனும் பெற்று, பல்லாண்டு வாழ்ந்து, மண்ணினில் பிறந்த பெரும்பயனை எய்தவும், தில்லைக் காத்தன் திருவடி மலர்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

வெல்க! நூற்றாண்டு விழா! வளர்க! பெருமன்றத்தின் பணிகள்!
வாழ்க! சீர் அடியார் எல்லாம்!

**சிவத்திரு. குருபழநி அடிகள்** *திருக்குறள் பீடாதிபதிகள், குருகுலம், மதுராந்தகம் - 603 306*

*27-06-2005*

செந்தமிழ் மக்களின் சிந்தனைத் தெளிவிலே பிறந்தது சைவ சமயம். அது தொன்மையும் மேன்மையும் உடையது. உலகில், ஏன் நம்முடைய நாட்டிலேயே காலப்போக்கில் பல்வேறு சமயங்கள் வழங்கி வருவதனால் சைவத்தையும் ஒரு சமயம் என்று சொல்ல நேர்ந்தாலும் சைவம் உலகளாவிய பொதுமை உடையது, சமயாதீத எல்லையைச் சுட்டிக்காட்டுவது.

சைவசமயம் போலவே சைவப்பணியாற்றி வரும் திருமடங்களும் பழமையும் பெருமையும் உடையவை. காலந்தோறும் இடந்தோறும் சைவத்தமிழ் தழைக்கத் தோன்றிய மன்றங்களும் பல. அவற்றுள் ஒன்றாக ஒப்பற்றதாகத் திகழ்வது சைவ சித்தாந்தப் பெருமன்றம்.

சைவத்தின் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டிய அருளாசிரியர்களாகிய அருள்திரு. ஞானியாரடிகளாலும் தவத்திரு. மறைமலை அடிகளாலும் தோற்றுவிக்கப்பட்டது என்பதே பெருமன்றத்தின் பெருமைக்குச் சான்றாகும். திருமுறைகளையும் மெய்கண்டநூல்களையும் எளிய விலையில் அச்சிட்டு எல்லார்க்கும் கிடைக்குமாறு செய்தது பெருமன்றப் பணிகளில் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்புடையது.

ஆண்டுதோறும் நடைபெறும் ஆண்டுவிழாக்கள் அவ்வப் பகுதிகளில் எழுச்சியையும் உள்ளக் கிளர்ச்சியையும் ஏற்படுத்தி, சைவத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கியும், நம் இல்லங்கள்தோறும் சித்தாந்த இதழின் வாயிலாகவும் பெருமன்றம் சித்தாந்தச் சிந்தனை விருந்தளித்து வருகிறது.

நாயன்மார்கள் திருநாள்கள், சான்றோர் விழாக்கள், சித்தாந்த வகுப்புகள், பள்ளிகள்தோறும் தேவார வகுப்புகள், இவையெல்லாம் பெருமன்றத்தின் புதுமைப் பணிகள்.

இவ்வாறு தோற்றுவித்த காலந் தொடங்கி ஆற்றல்மிக்க பேரன்பும் ஊற்றமுடன் செயலாற்றும் திறமும் கொண்ட பெரியோர்களால் வழிவழியாக வளர்ந்துவரும் பெருமன்றம் இன்று நூற்றாண்டு விழாக் காண்பது அளப்பரிய மகிழ்ச்சியினை அளிப்பதாக உள்ளது.

பெருமன்றத்தின் நூற்றாண்டுக் கால வளர்ச்சியினைக் காட்டும் நூற்றாண்டு விழா மலர், செந்தமிழ்த் தேன் ததும்பிச் சிவமணம் கமழும் திருவளர் தாமரையாகத் திகழும் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!

சைவத்தமிழ் உள்ளங்களில் பெருமகிழ்வினையும் பெருமிதத்தையும் தோற்றுவிக்கும் பெருமன்றம் நாளும் நாளும் வளர்ந்து மேலும் மேலும் சிறந்து சைவத் தமிழ் ஒளி வழங்கித் திகழ ஆடல்வல்லான் அடிமலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**தவத்திரு. பாலமுருகனடிமை**

*அருள்மிகு பால முருகன் திருக்கோவில்,*
*இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.*

உலகத்துயிர்கள் எல்லாம் உடலால் வாழ்கின்றன. மனித இனம் மட்டுமே உடலாலும் உள்ளத்தாலும் வாழ்கிறது. மனித இனத்தில்கூட பெரும்பான்மையோர் உடலால் மட்டுமே வாழ்ந்து உள்ளத்தைப்பற்றிக் கவலைப்படாமல் திரிகின்றனர்.

மக்களின் மனத்தைப் பதப்படுத்த, பண்படுத்த தோன்றியனவே சமயங்கள். அச்சமயங்களில் உலகளாவிய பார்வையும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கொள்கையும் கொண்ட சமயங்கள் இந்தியப் பெருநாட்டில்தான் தோன்றின. அதிலும் தென்னகமான தமிழகத்தில் 'தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க' என்ற குறிக்கோளோடு தழைத்து வந்துள்ள சமயம் சைவ சமயம்.

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறைந்து எல்லை இல்லாத சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவசமயம்.

ஒவ்வொரு சமயமும் அவ்வச்சமயத்தார் பின்பற்ற மிக எளியதாக இருக்கும்பொருட்டு பல மார்க்கங்களை அறிமுகப்படுத்தின. சைவ சமயம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் வழி, முறையே சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஆகியவற்றைப் பரப்பியது.

இம்மார்க்கங்கள் தன்னலமின்மையே உண்மையான சமயப்பற்று என்றும், ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு தன்னலமின்றிப் பிறர்க்கென வாழ்கின்றானோ, அந்த அளவிற்கு அவன் ஆன்ம ஞானம் பெற்றுச் சிவபெருமான் அருகே இருக்கும் தகுதி பெறுகிறான் என்றும் விளக்குகின்றன.

| 2. | 19.2.90 | வித்துவான், சிவ. மீனாட்சி சுந்தரசிவை திரு.கே. நச்சினார்க்கு இனிய சிவம் "முருகனருள்" 82, ஜி.என்.செட்டி ரோடு தி. நகர், சென்னை-17. | தந்தையார் "திவான்பகதூர்" திரு. கே. தெய்வசிகாமணி முதலியார் நினைவு அறக்கட்டளை | ரூ. 1,000/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 15.8.90 | திருமதி சரசுவதி அம்மாள் 45, முத்து தெரு, சாந்தராம் மயிலை, சென்னை–4. | திரு. இரத்தின சபாபதிப் பிள்ளை நினைவு அறக்கட்டளை | ரூ. 1,000/– | |
| 4. | 27.7.95 | டாக்டர் ஆர். விஜயராகவன் 2193, கே.பிளாக், குவெம்பு நகர் மைசூர் – 570 023. | திருமதி. நவநீதம்மாள் இராஜமாணிக்கம் பிள்ளை நினைவு அறக்கட்டளை | | |
| 5. | 16.12.02 | கு. இரமணன், கு. சம்பந்தம் மனை எண் 1026, பு.எண். 18 76வது தெரு, 12–வது செக்டார் கே.கே. நகர், சென்னை–78. | பெற்றோர் வில்வராணி குமாரசாமி பிள்ளை இரேணு அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 5,000/– | |
| | | | மொத்தம் | ரூ. 10,500/– | |

## (ஆ) வள்ளலார் விழா – ஆனி – கிருத்திகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 15.8.99 | திரு.த.ந. மாணிக்கம் 4, ஈசான மூர்த்தி கோவில் தெரு திருவொற்றியூர், சென்னை–19 | "நமசிவாயம் – சொர்ணம்மாள்" அறக்கட்டளை (ஒற்றியூரும்) வள்ளலாரும் என்று பொருள் பற்றி சிந்திக்க | ரூ. 5,001/– | 11.2.2004 அன்று முனைவர் சா. சரவணன் உரையாற்றினார் |
| 2. | 10.4.06 | திரு. மு. கந்தப்பன் 16 பகுதி, ஜி. 19வது தெரு, பெல்லி ஏரியா, சென்னை–40 | தாத்தா, பாட்டி, பெற்றோர் நினைவாக | ரூ. 5,000/– | |
| | | | மொத்தம் | ரூ. 10,000/– | |

## 12 (அ) அருணகிரிநாதர் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 30.5.78 | திரு. எம். சிவராமன், பி.ஏ., 61, 21வது மெயின் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை–28. | அருணகிரி நாதர் விழா | ரூ. 1000/– | இவ்விழா 7.8.04 அன்று நடைபெற்றது. முனைவர் சு. திருநாவுக்கரசு (மயிலம் கல்லூரி) |
| 2. | 27.5.95 | டாக்டர். நிர்மலா பொன்னம்பலம் 37. எத்திராஜ் நகர், சென்னை–33 | அருணகிரிநாதர் விழா (சுவை நீர் வழங்க) | ரூ. 1000/– | முதல்வர் எனும் கந்தர் அநுபூதித்தத்துவம் பொருளில் உரையாற்றினார். |
| 3. | 8.99 | திரு. என். சிவராமகிருஷ்ணன் 59, இந்திரா நகர், 1வது அவென்யூ, அடையார், சென்னை–20 | அருணகிரி நாதர் விழா அறக்கட்டளை | ரூ. 5,001/– | |
| | | | மொத்தம் | ரூ. 7,001/– | |

## (ஆ) கந்தசஷ்டி விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 10.1.79 | திரு.பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, சென்னை–28. | பெரிய பெருமாள் பிள்ளை நினைவு கந்தபுராண அறக்கட்டளை | ரூ. 1000/– | இவ்விழா 11.1.03 அன்று முனைவர் ப. இராமன் சஷ்டி பெருமை பற்றி சொற்பொழி வாற்றினார். |
| 2. | 30.10.84 | திரு. சாது தங்கவேல் சுவாமிகள் பழநி | கந்த சஷ்டி விழா அறக்கட்டளை | ரூ. 1000/– | |
| 3. | 15.9.91 | திரு. அ. வைத்தியநாதன் விழுப்புரம் | திருமதி. வை. வேதநாயகி அம்மாள் நினைவு கந்த சஷ்டி விழா அறக்கட்டளை (சொற்பொழிவு, வழிபாடு) | ரூ. 1000/– | |
| | | | மொத்தம் | ரூ. 3000/– | |

## (இ) முருகன் வழிபாட்டு விழா – தைப்பூசம் ஒட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 12.1.93 | திரு. தி. சிவநேசன் பிளாட் நெ. 397, 6வது 28வது தெரு, கருணாநிதி | கடலூர் மாவட்டம் புதுப்பேட்டை சிவத்திரு ஐயாவு செட்டியார் | ரூ. 3001/– | இவ்விழா 4.2.04 அன்று நடந்தது முனைவர் பா.இராமன்முருகுவேள் நினைவு விழாச் சிறப்பு என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். |
| 2. | 19.5.01 | அருட்டிரு பால முருகனடிமை சுவாமிகள் அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி | முருகன் அறக்கட்டளை ஆண்டு தோறும் மார்ச் 20ஆம் தேதி நடத்த | ரூ. 5000/– | |
| | | | மொத்தம் | ரூ. 8,001/– | |

## 13. பாம்பன் சுவாமிகள் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 19.8.76 | திருமதி. இராசாம்பாள் அம்மையார் காவாந்தாண்டலம் | பாம்பன் சுவாமிகள் அறக்கட்டளை | ரூ. 1000/– | இவ்விழா 24.1.2004 ஞாயிற்றுக்கிழமை திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதியில் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். தலைமையில் நடைபெற்றது. பெருமன்றத் தலைவர் பாம்பனார் வாரியார் அடிப்பொடி திரு.செ.வே. சதாநந்தன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் அசோக சாலவாசம் என்ற நூலுக்கும் விளக்கவுரை ஆற்றினார் |
| 2. | 1983 | திரு. சாது தங்கவேல் சுவாமிகள் | பாம்பன் சுவாமிகள் அறக்கட்டளை | ரூ. 1000/– | |
| 3. | 14.11.87 | திரு.ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., 54, அடஞ்சாமுதலி தெரு, இராஜா அண்ணாமலைபுரம் சென்னை – 600 028 | திரு. ஏ.வி. இராமநாதன் அறக்கட்டளை (விழாவில் தேநீர் வழங்க) | ரூ. 1250/– | |
| 4. | 8.8.97 | திருமதி. கனகாம்புஜம் அவர்கள் நடராசன், டி.திருவேரகம் 7,8வது தெரு, முதல் அவின்யூ, அசோக் நகர், சென்னை – 83. | பெற்றோர் செங்கற்பட்டு வேதாசல முதலியார் ருக்மணி அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 5000/– | |
| 5. | 15.2.98<br>9.5.05 | திரு. செ.வே. சதாநந்தன் 7, 8வது தெரு, முதல் அவின்யூ அசோக் நகர், சென்னை – 83 | மாமியார், மாமனார் திருமதி சங்கரி அம்மாள் திருவாளர் புருத்திப்புத்தூர் நடராச முதலியார் நினைவு அறக்கட்டளை | ரூ. 5000/–<br>ரூ. 2000/– | |
| 6. | 20.8.99 | திரு. மகாதேவன் சதாநந்தன் S/o. திரு.செ.வே. சதாநந்தன் 7,8வது தெரு, முதல் அவின்யூ அசோக் நகர், சென்னை–83 | பாட்டனார் புருத்திப்புத்தூர் நடராச முதலியார் பாட்டியார் சங்கரி அம்மாள் நினைவு "பாம்பன் சுவாமிகள்" அறக்கட்டளை | ரூ. 12,000/– | |
| 7. | 27.6.00 | திரு. அருணகிரி பொன்னம்பலம் 37, திருவள்ளுவர் தெரு, எத்திராசு நகர், மேற்கு மாம்பலம் சென்னை–33. | தந்தையார் திரு. அருணகிரி முதலியார் நினைவு அறக்கட்டளை தேநீர் வழங்க | ரூ. 1000/– | |
| | | | மொத்தம் | ரூ. 28,250/– | |

## 14. (அ) மாணவர் நன்னெறி மனப்பாடப் போட்டிப் பரிசு விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 31.3.85 | திரு. ஆதி. வை. இராமலிங்கம் சென்னை–1 | திரு. ஆதி.வை. இராமலிங்கம் மணி விழா நினைவு அருட் பாடல்கள் / மனப்பாடப் போட்டி அறக்கட்டளை | ரூ. 5000/– | |

### (ஆ) மாணவர் பன்னிரு திருமுறைகளில் மனப்பாடப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 17.3.02 | திரு. ஆர். செல்வராசு 6, சிவானந்தா நகர், கொளத்தூர் சென்னை–99. | பன்னிரு திருமுறைகள் போட்டி நிகழ்த்தி பரிசு அளிப்பது தொடர்பாக அறக்கட்டளை | ரூ. 6000/– | பெருமன்ற வளாகத்தில் 14.3.04 அன்று நடைபெற்றது. |
| 3. | 10.5.05 | செல்வி இந்திராநம்பி ஆரூரன் | | ரூ. 5000/– | 30 மாணவர்களும் 10 பெரியவர்களும் பங்கேற்றனர் |
| 4. | 30.1.05 | P.K. சாமிநாதன் | P.K. கதிர்வேலு இராசாம் பாசு அறம் | ரூ. 5000/– | |
| | | | மொத்தம் | ரூ. 16,000/– | |

## 15. திருமூலர் விழா – ஐப்பசி – அசுவினி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 11.5.85 | திரு.கே.எல். பழநிச்சுவாமி பி.ஏ., எல்.டி 43, 5வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24. | திருமூலர் விழா அறக்கட்டளை (திருமந்திரம் சொற்பொழிவு) | ரூ. 1000/– | 7.11.03 அன்ற இவ்விழா நடைபெற்றது |
| 2. | 6.11.92 | திரு. வி. பொன்னம்பலவாணன், பி.இ. "சாந்தி நிகேதன்" 31, பந்தர் கார்டன் தெரு, சென்னை – 11. | பாட்டனார் ஆரணி தா. தங்கவேலு முதலியார் பாட்டியார் ரேணு அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/– | முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார். |
| 3. | 24.4.93 | திருமதி. பாக்யலட்சுமி திரு. சீனிவாசன் அஜந்தா பிளாட் 134/– 7வது அவென்யூ, அண்ணாநகர், சென்னை–40 | தந்தை சங்கரநாராயணன் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/– | |
| 4. | 17.10.99 | திரு. ச. நமசிவாயம் எண். 11, மேற்குச்சாலை மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை–35 | பாட்டனார் டாக்டர் டி.சி. சோம சுந்தரம் பிள்ளை தந்தையார் பிள்ளை நினைவு அறக்கட்டளை | | |
| | | | மொத்தம் | ரூ. 8001/– | |

### 15. (அ) திருமந்திர விழிப்புணர்வு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 22.3.01 | திரு.பி.எஸ். பிரபாகரன் 10, தேவரங்கபுரம் விரிவு, செவ்வாய்பேட்டை சேலம் – 636 002 | பீட்டர் ந. கிருஷ்ணயய்யர் நினைவு அறக்கட்டளை ஆண்டு தோறும் பள்ளி மாணவர்களிடையே திருமந்திரம் மனப்பாடப் போட்டி அல்லது திருமூலர் திருமந்திர விழிப்புணர்வு பற்றி | ரூ. 5000/– | 28.10.03 அன்று நடைபெற்றது திருமந்திரச் செல்வர் டி.வி. வெங்கட்ராமன் உரையாற்றினார் |

### 16. திருவெம்பாவை விழா - மார்கழி - திருவாதிரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.4.84 | திரு.கே.எல். பழனிச்சாமிப்பிள்ளை 43, ஐந்தாவது குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், சென்னை-24 | திருவெம்பாவை அறக்கட்டளை | ரூ. 1000/- | மார்கழிச் சிந்தனை விழாவுடன் இணைந்து நடத்தப்பட்டது. |
| 2. | 21.10.01 | திருமதி நவநீதம்மாள் சிவனகம் எண். 6, பேராசிரியர் குடியிருப்பு தாம்பரம் - 59 | மகன்மணி விழா நடைபெற்றதை யொட்டி பேராசிரியர் ஆலால சுந்தரர் நினைவில் மார்கழி திருவாதிரை திருவெம்பாவை, அறக்கட்டளையில் சேர்க்க | ரூ. 2000/- | |
| | | | மொத்தம் | ரூ. 3000/- | |

### 17, 9வது / 11வது திருமுறைகள் சொற்பொழிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.484 | திரு.கே.எல். பழனிச்சாமிப்பிள்ளை 43. ஐந்தாவது குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், சென்னை-24. | தாயார் திருமதி. ருக்மணி அம்மாள் நினைவு அறக்கட்டளை (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு) | ரூ. 1500/- | இவ்விழா 12.10.03 அன்று நடைபெற்றது. செல்வி. மு. இரகுபாய் அவர்கள் ஒன்பதாம் பதினோராம் |
| 2. | 16.5.87 | திரு.கே.எல். பழனிச்சாமிப்பிள்ளை 43, ஐந்தாவது குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், சென்னை-24 (11ஆம் திருமுறை) | மாமனார் அரங்கசாமி மாமியார் தேவகி அம்மாள் | ரூ. 1500/- | திருமுறைகளில் சைவ சித்தாந்த உண்மைகள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். |
| | | | மொத்தம் | ரூ. 3000/- | |

### 18. ஔவையார் விழா - டிசம்பர் கடைசி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 30.5.92 | திரு.கே. ஏகாம்பரம் 226, 3வது தெரு, 6வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை-40 | தமக்கையர் திருமதி ஆண்டாள் அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 2500/- | 10.12.03 அன்று செல்வி மு.ரகுபாய் ஔவையாரின் சித்தாந்தமும் திருவிளையாடல் புராண கருப்பொருளும் என உரையாற்றல் |

### 19. குமரகுருபரர் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1.8.87 | திருமதி. ஜமுனா கமலக்கண்ணன் 17, தாண்டவராயன் தெரு, இராயப்பேட்டை, சென்னை-4. | அநும கொண்டா திரு. நடராச முதலியார் திருமதி. லட்சுமி தேவ. திரு. கமலக்கண்ணன் நினைவு அறக்கட்டளை (குமரகுருபரர் நூல்கள் பற்றிய சொற்பொழிவு | ரூ. 1000/- | |
| 2. | 27.9.87 | திரு.நா.மு. பொன்னம்பலம் பிள்ளை தபால்பெட்டி எண் - 6 சிதம்பரம் - 608 001. | சிதம்பரம் நா.மு. பொன்னம்பலம் பிள்ளை 80ஆம் ஆண்டு நினைவு விழா அறக்கட்டளை (மார்கழி மாதம்) கார்த்திகை நட்சத்திரம் அன்று குமரகுருபர சுவாமிகளின் நூல்கள்) | ரூ. 1500/- | |
| 3. | 24.4.93 | திருமதி. பாக்கியலட்சுமி திரு. சீனிவாசன், அஜந்தா பிளாட் 134/9, 7வது அவென்யூ நகர், சென்னை-40. | திருமதி. காந்திமதி, டாக்டர் பாக்கியம் செல்லம்மாள் அண்ணா நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/- | |
| 4. | 6.5.93 | கயிலைப் புனிதர் காசிமட அதிபர் திருப்பனந்தாள் | குமரகுருபரர் விழா அறக்கட்டளை (மதுரை மீனாட்சி அம்மை இரட்டை மணி மாலை) | ரூ. 5000/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | 28.10.00 | திரு. கிரிராசு பொன்னம்பலம் 37, திருவள்ளுவர் தெரு, எத்திராசு நகர், மேற்கு மாம்பலம், சென்னை-30 | பாட்டனார் திரு. அருணகிரி முதலியார் நினைவு அறக்கட்டளை தேநீர் வழங்க | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 9500/- | |

## 20. சோமசுந்தர நாயகர் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 7.9.87 | திரு. சி.ஜி. நடராச முதலியார் திருவொற்றியூர், சென்னை-19 | | ரூ. 1000/- | |
| 2. | 29.10.03 | திரு. வேணுகோபால் 7/2, Haris Road, K.B. Nagar, Ch-20. | | ரூ. 2500/- | 29.10.03 அன்று நடைபெற்றது. முனைவர் சா. சரவணன் உரையாற்றினார் |
| 3. | 29.10.03 | பிரகாஷ்குமார் 6, 1st Main Road, K.B. Nagar, Ch-20 | | ரூ. 2500/- | |
| 4. | 29.10.03 | G. கணேசு & லட்சுமி 15/B வீத் கேசில் வடக்கு தெரு, சென்னை - 28 | | ரூ. 2500/- | |
| 5. | 29.10.03 | K.G. கஜரத்தினவேலு 15B வீத் கேசில் தெரு, சென்னை - 28 | | ரூ. 2500/- | |
| | | | மொத்தம் | ரூ. 11,000/- | |

## 21. அபிராமி அந்தாதி விழா - நவம்பர் 10 அன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 10.1.87 | திரு.டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) முன்னாள் தலைமைச் செயலர் தமிழ்நாடு அரசு, சென்னை | திருமதி. இராஜலட்சுமி வெங்கட்ராமன் நினைவு அறக்கட்டளை | ரூ. 1500/- | இவ்விழா 9.11.03 நடைபெற்றது திருமயிலாடுதுறை முனைவர் கனகசுந்தரம் அம்மையார் அவர்கள் |
| 2. | 16.10.87<br>12.04 | திரு.டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) முன்னாள் தலைமைச் செயலர் தமிழ்நாடு அரசு, சென்னை | திருமதி. இராஜலட்சுமி நினைவு அறக்கட்டளை | ரூ. 2500/-<br>ரூ. 5000/- | அபிராமி அந்தாதி சைவ சித்தாந்தம் எனும் பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். |
| 3. | 30.03.00 | திருமதி. சுகுணா பொன்னம்பலம் 37, திருவள்ளுவர் தெரு, எதிராசு நகர், சென்னை - 33 | தாயார் திருமதி துரைசாமி அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 11,000/- | |

## 22. பட்டினத்தார் விழா - ஆடி உத்திராடம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 5.10.88 | திரு. சி. மாசிலாமணி, எம்.ஏ.எம்.எல். 9, கோவிந்தப்பநாயக்கன் வீதி, சென்னை - 1 | பிமாமனார் கு.கை.நா. குப்புசாமி முதலியார் திருமதி. யசோதா அம்மாள் நினைவு அறக்கட்டளை (பட்டினத்தார் நூல்கள் பற்றி சொற்பொழிவு) | ரூ. 2000/- | 31.7.04 அன்று முனைவர் வெ. கனகசுந்தரம் பட்டினத்தார் காட்டும் வாழ்வியல் நெறி என்று பக்தி சொற்பொழிவாற்றினார். |
| 2. | 27.12.90 | திருமதி. இராஜலட்சுமி சந்திரசேகரன் 'சிவசக்தி' 50, மெய்மலர்ஸ் ரோடு கீழ்ப்பாக்கம், சென்னை - 10. | திரு. மு. சந்திரசேகர முதலியார் நினைவு அறக்கட்டளை (பட்டினத்தார் விழாவில் பிரசாதம் வழங்க) | ரூ. 1000/- | |
| 3. | 24.04.03 | திரு. சங்கர நாராயணன் அஜந்தா பிளாட் 134/9 7வது அவென்யூ அண்ணாநகர், சென்னை - 40. | சங்க நாயனார் கோயில் அருணாசல முதலியார் / லட்சுமி அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/- | |
| 4. | 17.8.03 | திரு. நா. வீரப்பன், சென்னை-90. | | ரூ. 3000/- | |
| | | | மொத்தம் | ரூ. 7000/- | |

## 23. தாயுமானவர் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 13.2.87 | திருமதி.பி. சரசுவதி சிவம் 24, பேகம் தெரு, இராயப்பேட்டை சென்னை – 14. | திரு. பி.வி. பசுவதி முதலியார் அறக்கட்டளை தாயுமானவர் விழா | ரூ. 1000/- | 27.1.04 அன்று நடைபெற்றது பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ச. முத்துக்குமரன் உரையாற்றினார் |
| 2. | 28.2.91 | திருமதி. பி. சரசுவதி சிவம் 24, பேகம் தெரு, இராயப்பேட்டை சென்னை – 14. | திரு. பி.வி. பசுவதி முதலியார் அறக்கட்டளை தாயுமானவர் விழா | | |
| 3. | 27.2.97 | திரு. ஆனந்தவேலு மயிலை, சென்னை – 4. | தாயுமானவர் விழா சொற்பொழிவு | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 2500/- | |

## 24. சங்க இலக்கியம், தொல்காப்பியம் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 10.12.88 | திரு. கே.எல்.பழனிச்சாமி, பி.ஏ., எல்.டி 43, 5வது குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24. | வாக்கால்பட்டு திரு. கிருஷ்ணசாமி மகன் திரு. இலட்சுமணப்பிள்ளை நினைவு "சங்க இலக்கிய விழா" அறக்கட்டளை | ரூ. 2000/- | அறக்கட்டளை விழா 20.9.03 அன்று நடைபெற்றது. புலவர் இராம. வெங்கடேசன் அவர்களால் சொற்பொழிவு நடைபெற்றது. |
| 2. | 10.12.93 | திரு.கே.எல். பழனிச்சாமி, பி.ஏ., எல்.டி. 43, 5வது குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24 | முப்பாட்டனார் வார்கால்பட்டு சிவபூசை செல்வர் திரு. நாராயணசாமிப் பிள்ளை நினைவு தொல்காப்பியம் விழா அறக்கட்டளை | ரூ. 2000/- | |
| | | | மொத்தம் | ரூ. 4000/- | |

## 25. தில்லை சிற்றம்பலப் பதிகங்கள் – ஜனவரி 19 அல்லது ஜனவரி 3ஆம் வாரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 5.2.89 | திரு. பொன் நடேசன், திருமதி. லலிதா நடேசன், எண். 9, பார்க் அவென்யூ கேசவப் பெருமாள்புரம், சென்னை – 28. | மும்மொழிக் கொண்டல் ஞானசம்பந்தன் பிள்ளை நினைவு அறக்கட்டளை (தில்லைச் சிற்றம்பலப் பதிகங்கள் பற்றிய சொற்பொழிவு | ரூ. 2000/- | இவ்விழா 27.1.2004 அன்று நடைபெற்றது. பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ச.முத்துக்குமரன் உரையாற்றினார். |
| 2. | 20.1.89 | திரு. பொன்நடேசன் திருமதி. லலிதா நடேசன் எண். 9 கேசவப் பெருமாள் புரம், சென்னை–28 | மும்மொழிக் கொண்டர் திரு. பொ. திருஞான ஞானசம்பந்தன் பிள்ளை நினைவு அறக்கட்டளை (தில்லைச் சிற்றம்பலப் பதிகங்கள் பற்றிய பொற்பொழிவு | ரூ. 2000/- | |
| | | | மொத்தம் | ரூ. 4000/- | |

## 26. தவத்திரு ஞானியார் அடிகள் நினைவு விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 19.2.90 | திருமதி மீனாட்சி சுந்தரசிவை திரு. நச்சினார்க்கு இனி சிவன் "முருகன் அருள்" 82, ஜி.என். செட்டி ரோடு, தி. நகர், சென்னை – 17. | தந்தையார் "திவான் பகதூர்" திரு. வே. தெய்வசிகாமணி முதலியார் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/- | இவ்விழா 30.7.04 அன்று நடைபெற்றது. புலவர் இராம வெங்கடேசன் அவர்கள் ஞானியார் அடிகளின் சித்தாந்தம் என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 16.6.92 | புலவர் திரு. ஆ. வீரராகு<br>27, பாரதிதாசன் தெரு,<br>இலக்குமிபுரம், குரோம்பேட்டை,<br>சென்னை - 44 | திருமதி. அலர்மேலு ஆடிய பாதம்<br>நினைவு அறக்கட்டளை | ரூ. 2000/- | |
| 3. | 19.4.98 | திரு.எம்.ஆர். தாமோதரன்<br>எண். 12, முருகேசன் ரோடு,<br>தி. நகர், சென்னை - 17. | ஞானியார் அடிகள் நினைவு<br>அறக்கட்டளை "சித்தாந்த சரபம்"<br>முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்களின் நற்பெயரால் | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 4000/- | |

## 27. திருக்குறள் முற்றோதல் - வைகாசி - அனுடம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 13.4.91 | முனைவர் கா.பொ.இரத்தினம்<br>எச். 12/9, கலாஷேத்திரா காலனி<br>சென்னை - 90 | பெற்றோர் திரு. பொன்னம்பலம்<br>பத்தினிப் பிள்ளை அவர்கள் நினைவு | ரூ. 2500/- | இம்முற்றோதல் 14.10.03 நடைபெற்றது. முனைவர் திருமதி. சரளா ராசகோபாலன் அவர்கள் வள்ளுவர் கண்ட இல்லறம் பற்றி உரையாற்றினார். |

## 28. சிவஞான சுவாமிகள் விழா - சித்திரை - ஆயில்யம் பதி இலக்கணம் ஞான வழிபாடும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.9.91 | திரு. பாரி கௌரி சங்கரன்<br>எச். 12/9, கலாஷேத்திரா காலனி<br>சென்னை - 90. | | ரூ. 2500/- | |
| 2. | 27.5.91 | திரு. பாரி கௌரி சங்கரன்<br>62, கோதண்டராமசாமி கோயில்சாமி<br>மேற்கு மாம்பலம், சென்னை-33 | "சித்தாந்தப் பேராசிரியர்"<br>கண்ணப்ப முதலியார்<br>நினைவு "சிவஞான சுவாமிகள்"<br>அறக்கட்டளை (மாபாடியம் கூற வேண்டும்) | ரூ. 500/- | இவ்விழா 28.4.04 அன்று முனைவர் வெ. கனகசுந்தரம் அம்மையார் பதி இலக்கணமும் ஞான வழிபாடும் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். |
| 3. | 13.4.90 | திரு. கொ. ஏகாம்பரம் முதலியார்<br>226, 3வது தெரு, 6வது மெயின்பதி<br>ரோடு, அண்ணாநகர், சென்னை - 40. | முத்துவிழா அறக்கட்டளை<br>இலக்கணமும், ஞானவழிபாடும் | ரூ. 2000/- | |
| | | | மொத்தம் | ரூ. 5000/- | |

## 29. தவத்திரு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் விழா - கார்த்திகை - மகம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 11.12.91 | முனைவர் கா.பொ. இரத்தினம்<br>எச். 12/9 கலாஷேத்திரா<br>குடி இருப்பு, பெசன்ட் நகர்,<br>சென்னை - 90. | தவத்திரு. ஆறுமுக நாவலர் விழா<br>அறக்கட்டளை தவத்திரு. ஆறுமுக<br>நாவலர் விழா அறக்கடளை | ரூ. 2000/- | 18.11.03 புதன்கிழமை அன்று நடைபெற்றது. க. சச்சிதானந்தம் ஆறுமுக நாவலரின் பணி என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். |
| 2. | 15.10.97 | முனைவர் கா.பொ.இரத்தினம்<br>எச். 12/9 கலாஷேத்திரா<br>குடி இருப்பு, பெசன்ட் நகர்,<br>சென்னை - 90. | தவத்திரு. ஆறுமுக நாவலர் விழா<br>அறக்கட்டளை | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 3000/- | |

## 30. இளையான்குடி மாறர் விழா - ஆவணி - மகம் மங்கையர்க்கரசியார் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 9.5.92 | திரு.கே. அருணாச்சலம்<br>எம்.ஏ.பி.காம்<br>எண்.1 வாசு வீதி<br>கீழ்ப்பாக்கம், சென்னை-10. | தந்தையார் கோ. ஏகாம்பர<br>முதலியார் நினைவு அறக்கட்டளை<br>இளையான்குடிமாறார்,<br>மங்கையர்க்கரசியார் விழா | ரூ. 4000/- | 23.9.03 அன்று நடபெற்றது. புலவர் திரு.க.பாலசுந்தரம் அவர்கள் குடிமாற நாயனாரின் இல்லற மாண்பும் மங்கையர்க்கரசியார் வைராக்கியத் தொண்டும் என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். |

### 31. காரைக்கால் அம்மையால் விழா – பங்குனி – சுவாதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 30.5.92 | திரு. சுந்தரசாமி வாலவனூர் வட்டம் வளவானூர், கடலூர் மாவட்டம் | காரைக்கால் அம்மையார் விழா அறக்கட்டளை | ரூ. 1000/– | இவ்விழா 7.4.04 அன்று நடைபெற்றது. முனைவர் திருமதி வெ. கனகசுந்தரம் அவர்கள் |
| 2. | 26.4.94 | திருமதி. என்.சிவகாமி நடராசன் சென்னை | திரு. நடராசன் நினைவு காரைக்கால் அம்மையார் அறக்கட்டளை | ரூ. 3001/– | அறிமுக உரை வழங்க மயிலம் வேல் கார்த்திகேயன் அன்றே நின் திருவரும் காணாதே ஆட்பட்டேன் எனும் தலைப்பில் உரையாற்றினார். |
| 3. | 11.6.94 | திருமதி. சாந்தி தயாநிதி சென்னை – 4 | தந்தை கமலக்கண்ணன், தாய் நேத்தி – ராம்பிகை, கணவர் தயாநிதி நினைவு அறக்கட்டளை | ரூ. 1001/– | |
| 4. | 3.6.2000 | திருமதி. சி.செ. விசாலாட்சி அம்மாள் திரு. ஈஸ்வரப்ப செட்டியார் 21/11ஏ, ராமசாமி தெரு ஆற்காடு | தந்தையார் திரு. செங்கல்வராயச் செட்டியார் தாயார் திருமதி லட்சுமி அம்மாள் நினைவு அறக்கட்டளை | ரூ. 1000/– | |
| 5. | 28.4.01 | திரு. அருணகிரி பொன்னம்பலம் 37, திருவள்ளுவர் தெரு, எத்திராஜ் நகர், மே. மாம்பலம், சென்னை – 33. | காரைக்காலம்மையார் விழாவின் போது (குருபூசை) சுவைநீர் வழங்க | ரூ. 1000/– | |
| | | | மொத்தம் | ரூ. 7003/– | |

### 32. திருக்குறட் குமரேச வெண்பா சொற்பொழிவு – ஐப்பசி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.5.93 | கரூர் அண்ணாமலை பழநியப்பன் புரசைவாக்கம், சென்னை–7 | கரூர் அண்ணாமலை முதலியார் நினைவு அறக்கட்டளை (ஜெகவீர பாண்டியன் திருக்குறட் குமரேச வெண்பா சொற்பொழிவு) | ரூ. 3000/– | இந்த சொற்பொழிவு 22.10.2003 அன்று நடைபெற்றது. புலவர் த. இராமலிங்கனார் திருக்குறள் குமரேச வெண்பா பற்றி சிறப்புரை ஆற்றினார். |

### 33. சிற்றம்பல நாடிகளின் துகளறு போதம் சொற்பொழிவு – சித்திரை திருவோணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 23.6.93 | திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரம் "மல்லிகா" 507 திவான் பகதூர் ரோடு, ஆர்.எஸ். புரம், கோவை | கோவை சோமசுந்தரம் நினைவு அறக்கட்டளை | ரூ. 3000/– | 11.5.04 அன்று நடைபெற்றது. புலவர் திரு. இராமலிங்கனார் அவர்கள் துகளறு பேதம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். |

### 34. சண்டேசுவரர் நாயனார் விழா – தை – உத்திரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 14.10.96 | டாக்டர். எஸ். மாணிக்கம் எம்.பி.பி.எஸ். பெசன்ட் நகர், சென்னை | திரு. இலட்சுமணன் நினைவு அறக்கட்டளை (சண்டேசுவர நாயனார் குரு பூசை) | ரூ. 3000/– | இவ்விழா 10.02.04 அன்று நடைபெற்றது. புலவர் இராம. வெங்கடேசன் உரையாற்றினார் |

### 35. பார்வை அற்றோர்க்குப் பரிசு (3 ஆண்டுகளுக்கு ஒரு முறை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.5.95 | திரு. சம்பந்தம் செட்டியார் செட்டி குளம் வீதி அரிமழம் – 602 201. | அரிமழம் ச. தெய்வயானை ஆச்சி நினைவு அறக்கட்டளை (மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பார்வை அற்ற மகளிர்க்குப் பரிசு) | ரூ. 1000/– | இப்பரிசளிப்பு 1.12.2001 அன்று நடைபெற்றது. |
| 2. | 7.98 | அ.மு. மகாலிங்கம் அகரம் ஆண்டாள் குப்பம் அஞ்சல் சுனாம்பேடு (வழி) செய்யூர் வட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் | | ரூ. 500/– | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 1.3.02 | லேட். ஏ.கே. சுப்பிரமணியம் செட்டியார் தனபாக்கியம் 20, பொம்மு செட்டி தெரு சென்னை - 3. | காலஞ்சென்ற ஏ.கே சுப்பிரமணியம் செட்டியார் நினைவாக பூவிருந்தவல்லி பார்வையற்றோர் மகளிர் பள்ளிக்கு வைப்பு நிதியாக (சோம சுந்தரம் செட்டியார் விழாவில் அறக்கட்டளை தொகையாக) | ரூ. 2000/- | |
| 4. | 1,3.02 | எம். ஜெயராமன், ஜே. புனிதா 878, 10ஆவது மத்திய குறுக்குத் தெரு, நகர், வியாசர் பாடி, சென்னை-39. | பூவிருந்தவல்லி பார்வையற்றோர் மகளிர் பள்ளிக்கு மகளிர்க்கு வைப்பு நிதியாக சோமசுந்தர செட்டியார் விழாவில் அறக்கட்டளை தொகையாக | ரூ. 500/- | |
| | | | மொத்தம் | ரூ. 4000/- | |

## 36. தனி மனித ஒழுக்கம் - ஜூன் - 8 அன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 26.8.95 | திரு. அ.ப. வைத்தியலிங்கம் 58, தண்ணீர்த் தொட்டி வீதி விழப்பள்ளம், குறிஞ்சிப்பாடி | தனிமனித ஒழுக்கம் அறக்கட்டளை (தனி மனித ஒழுக்கம் தூய்மையான வாழ்வு அமையச் சொற்பொழிவு) | ரூ. 4000/- | 19.6.02 புதன்கிழமை அன்று நடந்தது. திரு. கி.சிவக்குமார். எம்.இ. அவர்கள் தனிமனித ஒழுக்கமும் சைவ சித்தாந்தமும் என்ற பொருளில் உரையாற்றினார் |
| 2. | 17.08.01 | திரு. அ.ப. வைத்தியங்கம் 58, தண்ணீர்த் தொட்டி வீதி விழப்பள்ளம், குறிஞ்சிப்பாடி - 607 302, | தனி மனித ஒழுக்கம் சொற்பொழிவாற்றினார்கள். | ரூ. 1005/- | |
| | | | மொத்தம் | ரூ. 5005/- | |

## 37. திருமுருக கிருபானந்த வாரியார் நினைவு விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஜூலை 96 | திரு.செ.வே. சதாநந்தன் "திருவேரகம்" 7, 3வது தெரு முதல் அவின்யூ, அசோக்நகர் சென்னை - 83. | பெற்றோர் திருமதி கனகாம்புஜம் திரு.பி. நடராஜன் நினைவு அறக்கட்டளை (கிருபானந்த வாரியார் நினைவு விழாச் சொற்பொழிவு | ரூ. 500/- | இவ்விழா 15.02.04 அன்று நடைபெற்றது. நீதியரசர் ஏச. நடராசன் தலைமை உரை ஆற்றினார் முனைவர் வெ. கனகசுந்தரம் |
| 2. | 22.2.99 | திரு. கூ.சு. பிரேம்பாபு 945, ஹங்கடன் காமன் ஃபரீமான்ட் சி.ஏ. 94536 யு.எஸ்.ஏ. | திரு. டி. தணிகாசலம், லட்சுமி ஆகியோர் நற்பெயரில் அறக்கட்டளை | ரூ. 10,000/- | வரவேற்புரையும், தலைவர் செ.வே. சதாநந்தன் அறிமுக உரையும் ஆற்றினார். |
| 3. | 27.1.01 | திரு. T.T. Prembabu 230, Summer orl Circle San Roman CA 94383 USA California | கிருபானந்த வாரியார் விழா | ரூ. 5000/- | முனைவர். வை. இரத்தினசபாபதி வாரியார் சுவாமிகள் ஒரு சகாப்தம் என்ற தலைப்பில் உரையாற்றினார் |
| | | | மொத்தம் | ரூ. 20000/- | |

## 38. ஒட்டக்கூத்தர் விழா - ஆவணி - உத்திராடம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.9.99 | திரு.பொ.சி. சாம்பசிவம் 8 ஆடம் தெரு, மயிலை, சென்னை-4 | "மயிலை பொ.சி. சாம்பசிவம்" ஒட்டக்கூத்தர் விழா அறக்ட்டளை | ரூ. 4000/- | 2.9.03 அன்று நடைபெற்றது. ஏ.வே. வேலாயுதனார் மலரில் வரும் கூத்தன் என்ற பொருளில் சொற்பொழிவாற்றினார் |
| 2. | 5.1.99 | திரு. பொ.சி. சாம்பசிவம் 8 ஆடம் தெரு, மயிலை, சென்னை-4 | (ஒட்டக் கூத்தர் பற்றியும் அவரது 4 நூல்களைப் பற்றியும் சொற்பொழிவு நடத்திட) கூடுதல் தொகை | ரூ. 1000/- | |
| | | | மொத்தம் | ரூ. 5000/- | |

### 39. உண்மை நெறி விளக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 19.3.97 | திரு.ஏ.ஆர். வேலாயுதம் ஆனைமலை, கோவை | மாமனார் சுப்பிரமணிய முதலியார் நினைவு அறக்கட்டளை (உண்மை நெறி விளக்கம்), சொற்பொழிவு | ரூ. 5000/- | இச்சொற்பொழிவு 5.11.03 அன்று நடந்தது. முனைவர் சா.சரவணன் நெறி விளக்கத்திற்கு சைவ சித்தாந்தம் என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். |

### 40. மெய்ப்பொருள் நாயனார் விழா – கார்த்திகை – உத்திரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 6.6.97 | திரு.கே.இ. அருணாச்சலம் எம்.ஏ., பி.காம், 1 வாசு வீதி கீழ்ப்பாக்கம், சென்னை–10 | மாமனார் சி.எஸ். லோகநாத முனைவர் சா. சரவணன் குருபூசையன்று விழா மற்றும் சொற்பொழிவு | ரூ. 5000/- | 19.11.03 அன்று நடைபெற்றது. மிகவல்ல மெய்ப்பொருள் என்ற பொருளில் முனைவர் சா. சரவணன் சொற்பொழிவாற்றினார். |

### 41. பெரிய புராணப் பெண்டிர் – ஆடி முதல் அல்லது இரண்டாவது வெள்ளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 6.6.97 | திரு.கே.இ. அருணாச்சலம் எம்.ஏ.பி.காம், 1, வாசுவீதி கீழ்ப்பாக்கம், சென்னை – 10 | சகோதரிகள் திருமதி. கே. சரசுவதி அம்மாள், திருமதி. கே. ஜெயலட்சுமி அம்மாள், குமாரி. கே. தேவகி ஆகியோர் நினைவு அறக்கட்டளை (வட திருமுல்லை) வாயில் சிவன் ஆலயத்தில் பெரியபுராணம் வரும் பெண்டிர், சி.கே.எஸ். எழுதிச் (சேக்கிழாரும் சேயிழையாரும் என்ற நூலை தழுவி) | ரூ. 5000/- | 18.08.04 அன்று நடைபெற்றது. செல்வி மு. இரகுபாய் "பெரிய புராணப் பெண்டிரின் பெருமைகள்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். |

### 42. திருப்புகழ் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் குருபூசை விழா – கார்த்திகை – அஸ்வினி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 27.4.99 | திரு.என். சிவராமகிருட்டினன் 59, இந்திரா நகர், 1வது அவின்யூ | "வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் குரு பூசை விழா" அறக்கட்டளை (சொற்பொழிவுகள் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் ஒட்டிய பொருள், அன்பர்களுக்கு சிற்றுண்டி சுவை நீர் வழங்கிட) | ரூ. 10,000/- | இக்குருபூசை விழா 5.12.04 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. சிவத்திரு மதிவண்ணன் திருப்புகழின் மாண்பும் வள்ளிமலை சுவாமிகளின் பெருமையும் என்னும் பொருளில் உரையாற்றினார். |

### 43. திருத்தொண்டர் புராணத் தொகையடியார் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 4.11.99 | திரு. சேது பழனியப்பன் த/பெ. பழனியப்பன் எஸ்எரெம் விவேகானந்தா, ஆஸ்ரமா 220, ஜாலான் டன் சம்பந்தன் பிரிக் பீல்டு கோலாம்பூர் – 504 70 | தாயார் சிவபூசைச் செல்வி திருவாத்தாள் நினைவாக திருத்தொண்டர் புராணத் தொகை யடியார் விழா அறக்கட்டளை (ஆண்டு தோறும் மே 23 ஆம் நாள் அன்று நடத்தியும் அன்பர்களுக்கு இனிப்பு, காரம் சுவைநீர் வழங்கிடவும் | ரூ. 10,000/- | சென்னை அருள்மிகு சைதாப்பேட்டை "காரணீசுவரர் திருக்கோயிலில் தொகையடியார்" விழா நடைபெற்றது. புலவர் எம்.கே பிரபாகரமூர்த்தி திருத்தொண்டர் |

### 44. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 16.12.00 | திரு. டி.எஸ். தியாகராஜன் "சிவாலயா" எண் 112 காரணீஸ்வரர் கோயில் தெரு மயிலாப்பூர், சென்னை–4 | பெற்றோர் திருக்குவளை வை. இராம சீனிவாசன் மங்கையர்க்கரசி அவர்கள் நினைவு அறக்கட்டளை | ரூ. 5,000/- | 14.12.03 அன்று இவ்விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் இ. சுந்தரமூர்த்தி பிள்ளை அவர்களின் தொண்டில் சைவமும் தமிழும் எனச் சிறப்புரையாற்றினார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 26.3.98 | திரு.சி.ஜி. நடராச முதலியார் சென்னை – 19 | | ரூ. 1,500/– | |
| | | | மொத்தம் | ரூ. 6,500/– | |

## 45. திரு.வி. கலியாண சுந்தரர் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 21.10.01 | திருமதி ஈ.பி.டி. சாருமதி சரவணன், 39, மில்லர்ஸ் ரோடு கீழ்ப்பாக்கம், சென்னை–10 | பெருமன்றம் தோன்றக் காரணங்களில் ஒருவரான திரு.வி.க.வும் பெருமன்ற சைவத் தொண்டு பற்றி சொற்பொழிவு | ரூ. 5,001/– | 16.12.03 அன்று சென்னை பல்கலைக் கழக வளர்ச்சி முனைவர் எம். மகாலிங்கம் சொற்பொழிவாற்றினார்கள். |

## 46. மார்கழி சிந்தனை அறக்கட்டளை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 12.1.02 | திரு.க. கிருசுணன் பொருளாளர் 1டி, கிழக்கு மூர் வின்கேட், கார்டன் பு. எண். 4, பள்ளிச்சாலை, சென்னை – 600 028. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை பெற்றோர் கந்தசாமிப்பிள்ளை அம்மணியம்மாள் நினைவாக | ரூ. 5,000/– | 30 நாட்களும் காலை 7.30க்கு தொடங்கி நடந்தது. 16.12.03 அன்று தமிழக அரசு மோனள் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன் தொடங்கி முனைவர் |
| 2. | 13.12.02 | திரு.கே.ஏ. சிவஞானம் 31, அல்ராசா பெசன்ட், கோர்ட் 101 எல்லையம்மன் கோயில் தெரு, சென்னை–20 | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 1,000/– | வை. இரத்தினசபாபதி திரு அம்மானை பற்றியும் முனைவர் வெ. கனகசுந்தரம் "திருப்பள்ளியெழுச்சி" பற்றியும் உரையாற்றினார். 14.03.94 அன்று அரசுச் செயலர் திரு. ச.மெய்கண்ட தேவன் தலைமையில் நிறைவு விழா நடைபெற்றது. |
| 3. | 13.1.02 | திருமதி. எஸ். ரம்யா ஸ்ரீநிவாசன் த/பெ. தி. ஜெயபாலன் மேலாளர் பு.எண். 5, சிங்காரம் தெரு, மயிலை, சென்னை–4. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 1,000/– | |
| 4. | 13.1.02 | திருமதி. சிவகாமி நடராசன் 27, கஸ்டம்ஸ் காலனி, ஹாஸ்பிடல் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை–15 | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 5,000/– | |
| 5. | 14.1.2002 | திரு. தாமோதரன் திருமதி. வெ.கனகசுந்தரம் செவ்வேளகம் 26/5, இரண்டாவது சாலை, கோட்டூர்த் தோட்டம் சென்னை – 85. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை பெரியப்பா குப்புசாமி அம்மணியம்மாள் நினைவாக | ரூ. 5,000/– | |
| 6. | 14.1.02<br>7.1.03<br>18.12.03<br><br>3.12.04 | திரு. ஜி. வெங்கடாசலம் 101, Sigmet Castle 30/24, வால்மீகி தெரு திருவான்மியூர், சென்னை–41 | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 2,000/–<br>ரூ. 2,000/–<br>ரூ. 2,000/–<br><br>ரூ. 2,000/– | |
| 7. | 14.1.02 | செல்வி மு. இரகுபாய் 3, அரிசிக்கார தெரு, மயிலாப்பூர், சென்னை – 4. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 1,001/– | |
| 8. | 7.2.02 | திரு.கோ. நாகநாதன் 151, ப.எண். 64, ரங்கநாதபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம் சென்னை – 24. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 5,000/– | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | 7.2.02 | திருமதி. அமுதா மாதவன் 151, ப.எண். 64, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம் சென்னை–24. | மார்கழி சிந்தனை அறக்கட்டளை | ரூ. 5,000/– |
| 10. | 13.4.02<br>10.12.03<br>18.4.05 | திரு.கே. முத்துசாமி 27/13, 4வது பிரதான சாலை, சென்னை – 24. | அமரராகிய மனைவி சுப்புலட்சுமி நினைவு அறக்கட்டளை | ரூ. 1,000/–<br>ரூ. 1,000/–<br>ரூ. 1,000/–<br>ரூ. 1,000/– |
| 11. | 31.12.02<br>10.01.04 | திரு. வை. சிவராசன் 21/9, முதல் தெரு, ரங்கராஜபுரம், சைதாப்பேட்டை, சென்னை – 15. | மார்கழி சிந்தனை | ரூ. 1,001/–<br>ரூ. 1,000/– |
| 12. | 14.01.03 | திரு. ஜே. பாலாஜி, 5 சிங்காரி தெரு, சென்னை–15. | | ரூ. 1,000/– |
| 13. | 19.01.03 | திரு. சாமிநாதன் 58, ஜெத் நகர், இரண்டாவது தெரு, சென்னை–28. | | ரூ. 1,000/– |
| 14. | 14.08.03 | ப. முருகன் எம்.ஜே. 17வது அவின்யூ, அசோக் நகர், சென்னை–83. | | ரூ. 5,000/– |
| 15. | 18.01.03. | ஆர். பங்கஜம்மாள், 33/34, வெங்கடாசலம் தெரு, பெரம்பூர், செ–12. | | ரூ. 1,000/– |
| | | C/o. பழனிகுமார் கணவர் நினைவாக ஆற்காடு இராமச்சந்திரன் அறக்கட்டளை | | ரூ. 1,000/– |
| 16. | 6.3.04 | மோகன், டி.டி.கே. சாலை, சென்னை–18. | | ரூ. 10,005/ – |
| 17. | 1.3.05 | டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் கோலாலம்பூர், மலேசியா | | ரூ. 5,000/– |
| | | மொத்தம் | | ரூ. 64,007/– |

## 47. டான் ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார்

**யுவான் ஸ்ரீ தெய்வானை ஆச்சி பெற்றோர் நினைவாக நிறுவிய அறக்கட்டளை 12.6.2004 அன்று தேவி காலோத்தர ஆகமம் வெளியிடப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 17.12.03 | நூல் வெளியீட்டிற்காக | ரூ. 25,000/– |
| 07.01.04 | | ரூ. 1,000/– |
| 09.01.04 | | ரூ. 400/– |
| | மொத்தம் | ரூ. 26,400/– |

## 48. சித்தாந்த வளர்ச்சி

| | | |
|---|---|---|
| 27.03.04 | டாக்டர் பி.ஆர். சுந்தரவடிவேலு, செ–32. | ரூ. 5,000/– |
| 30.03.04 | க. கிருசுணன், சென்னை–28. | ரூ. 1,500/– |
| 30.03.04 | பி.வெ. சுப்பிரமணியன் | ரூ. 1,400/– |
| 9.6.04 | முனைவர் வை. இரத்தினசபாபதி | ரூ. 1,500/– |
| | மொத்தம் | ரூ. 9,400/– |

## 49. ஆங்கில சித்தாந்தா

| | | |
|---|---|---|
| 7.04 | G.N. ரங்கநாதன் செண்பகவல்லி | ரூ. 15,784/– |

## 50. தவத்திரு அரகர்த்தர் சிவாச்சாரியக் குருபூசை

| | | | |
|---|---|---|---|
| 12.04 | G.M. சுந்தரம் சென்னை–20 | அ. சண்முக முதலியார் அறக்கட்டளை | ரூ. 5,000/– |

## 51. சந்தானாசாரியர் சிலைக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| | 4.05 | கிருஷ்ணன், மலேசியா | | ரூ. 10,000/– |

## 52. சுனாமி நிதி

| | | | | |
|---|---|---|---|---|
| | 4.05 | முருகு. இராமலிங்கம், சென்னை | | ரூ. 10,005/– |

## 53. மறைமலையடிகள் விழா

| | | | | |
|---|---|---|---|---|
| | 10.3.05 | சாரதாநம்பி ஆரூரன், சென்னை–28 | | ரூ. 5.000/– |

## 54. கட்டட நிதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 1.3.05 | டான்ஸ்ரீ சோமசுந்தரம் செய்யார் கோலாலம்பூர், மலேசியா | | ரூ. 25,000/– |
| 2. | 18.4.05 | ப. குருசாமி | | ரூ. 4,000/– |
| 3. | 5.7.05 | ந.சா. தங்கம், சென்னை | | ரூ. 1,000/– |
| 4. | 12.04. | கோ. நாகநாதன் | நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவு | ரூ. 50,000/– |
| | | | மொத்தம் | ரூ. 80,000/– |

# 9. பெருமன்றச் சான்றோர்கள்

## 1. அறிஞர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை

அறிஞர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை 1964ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாள் திருச்சிராப்பள்ளியில், மாணிக்கம் பிள்ளை - செல்லத்தம்மாள் தம்பதியருக்குப் பிறந்தார். இவர் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தொடக்க காலத்தலைவர்களுள் ஒருவராவார்.

இளமை முதல் இவர் தமிழிலும் சமயத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். திருச்சியில் 'சைவ சித்தாந்த சபை' ஒன்றை நிறுவி ஞாயிறுதோறும் சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் சொற்பொழிவுகளை நிகழ்வித்தார்.

1887இல் சென்னை நீதிமன்ற வழக்கறிஞரானார். 1895ல் 'சிவஞானபோத'மும் 1897இல் 'திருவருட் பயன்' நூலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

மறைமலையடிகளும், ஜே.எம்.என். அவர்களும் நெருங்கிய நண்பர்கள். 1905இல் தோற்றுவிக்கப்பட்ட சைவ சித்தாந்த மகா சமாஜ நோக்கங்களையும், பணிகளையும் தாம் நடத்திய "சித்தாந்த தீபிகை" இதழில் வெளியிட்டமை சமாஜ வளர்ச்சிக்கு வித்தாயது.

சமாஜத்தின் முதலாண்டு விழாவை 1906இல் சிதம்பரத்தில் நடத்தினார். 1908 இல் நாகப்பட்டினத்திலும், 1911இல் சென்னையிலும் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழா மாநாடுகளில் தலைமை தாங்கினார். 'சித்தாந்தம்' என்னும் தமிழ்த் திங்கள் இதழ் தொடங்குவதற்குக் காரணராக இவர் இருந்தார். டாக்டர் ஜி.யு.போப் அவர்களோடு தொடர்பு கொண்டவர். சிகாகோ சென்று திரும்பிய விவேகானந்தரை ஜே.எம்.என் அவர்களும், சண்டமாருதம் சோமசுந்தர நாயகரும் சென்னையில் சந்தித்துச் சைவ சித்தாந்த மெய்ப்பொருள்களைப் பற்றிப் பேசினர் என்பர்.

## 2. சர். பொன்னம்பலம் இராமநாதன்

சர். பொன்னம்பலம் இராமநாதனுடைய தந்தையார் தருமவான் முதலியார் பொன்னம்பலம் ஆவார். இவர் இலங்கையில் 'கொச்சிக்கடை'ச் சிவன் கோயிலைக் கட்டிய வள்ளல் ஆவார். சர். இராமநாதனும் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளார். இவருடைய தாய் மாமன் சமய ஒப்பீட்டுத் துறையில் முன்னோடியாகிய விளங்கியவராகிய சர். முத்துக்குமாரசாமி ஆவார்.

இராமநாதன் அரசியலிலும், சட்டத்துறையிலும் பெரும் பதவிகள் வகித்தவர்; புகழ் பெற்றவர். தஞ்சை குரு அருள் பரானந்த சுவாமி அவர்களால் இவர் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. அரசியலிலிருந்து சமயத்துறைக்குத் திரும்பினார். சமயத்துறையில் பல நூல்கள் எழுதியிருப்பினும், பகவத்கீதை, மத்தேயு மற்றும் யோவான் ஒப்பாய்வு, Culture of Soul Among Western Nations ஆகியவற்றைப் படைத்துள்ளார். தம் நூல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துரைத்தார். மிஸ். ஹாரிசன் என்ற ஆங்கிலேயப் பெண்ணை மணந்தார். பரானந்தா என்னும் புனைபெயரில் அழைக்கப்பட்டார். இலங்கையில் மட்டுமல்லாமல் பிற நாடுகளிலும் இவர்புகழ் ஓங்கியிருந்தது.

மணிப்பிரவாள நடையில் திருக்குறள் பாயிரவியலுக்கும், தரும சாத்திர பாடம் என்ற பெயரில் ஆத்திசூடியை மந்திரங்கள் என்று சுட்டியும் உரை விளக்கம் செய்துள்ளார்.

**3. தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார்**

1883ல் பிறந்து 1953ல் மறைந்த இப்பெரியார் தமிழாசிரியராகவும் பின்னர் தேசபக்தன், நவசக்தி நாள், வார இதழாசிரியராகவும் 40 ஆண்டுக்காலம் தமிழுலகுக்குச் சேவை செய்தவர். தமிழ் மொழி, இலக்கியம், சமயம், தொழிலாளர்துறை, அரசியல், மகளிர் முன்னேற்றம் முதலிய துறைகளில் பயன் கருதாத்கொண்டு புரிந்தவர். இராயப்பேட்டை பாலசுப்ரமணிய பக்த ஜன சபையை மாணவப்பருவத்திலேயே நிறுவியவர்.

சைவ சமயத்தில் இருந்து கொண்டே பிற சமய அறிஞர்களுடன் பழகியும் நூல்களைப் பயின்றும் அச்சமயங்களின் உட்கிடையை உணர்ந்து, சைவத்தின் சமரசம், தமிழ் நூல்களில் பௌத்தம், திருமால் அருள்வேட்டல், இராமலிங்கர் திருவுள்ளம், முருகன் அருள்வேட்டல், கிறிஸ்துவின் ஆருள்வேட்டல், அருகன் அருகே அல்லது விடுதலை வழி புதுமைவேட்டல், பொதுமைவேட்டல் எனப்பல சமரச நூல்களை எழுதியுள்ளார்.

சமாஜத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்; இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். திருவதிகை, மதுரை மாநாடுகளில் தலைமை வகித்தவர். பெருமன்றம் வளரப் பெருந்துணை புரிந்தவர். இவருடைய கட்டுரைகள் சில இம்மலரில் வேறு இடங்களில் இடம் பெற்றுள்ளன; அவற்றிலிருந்தே இவருடைய பணிகளை நன்கு அறியலாம்.

**4. சைவப்பாதிரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை**

பிள்ளையவர்கள் சைவத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். சிறு வயதிலிருந்தே திருமுறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஆழ்ந்து கற்றவர். தவத்திரு. ஞானியார் சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், மறைமலையடிகள் ஆகியோருடன் நெருங்கிய பழக்கம் உடையவர். இவர் சைவப் பிரசாரம் செய்வதையே கடமையாகக் கொண்டிருந்தார். இதன் காரணமாக இவரைச் 'சைவப் பாதிரியார்' என்றும், 'வார வழிபாட்டுப் பிதா' என்றும் கூறுவர்.

இவர் 30.7.1887 அன்று சென்னை இராயப்பேட்டையில், சபாபதி பிள்ளைக்கும், மீனாட்சி அம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தார். பிள்ளையவர்கள், திரு.வி.க.வோடு இராயப்பேட்டை வெஸ்லியன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். இருவரும் 1901இல் 'இளைஞர் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கினர். பின்னர் 30.9.1903இல் 'ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை'யாக மாற்றினர். அதன் செயலாளராகவும், 33 ஆண்டுகள் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். இத்துடன் இவர் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்.

சில ஆண்டுகள் மன்றச் செயலாளராகவும், பல ஆண்டுகள் தலைவராகவும் சிறப்பாகச் செயல்பட்டார். பெருமன்ற நிர்வாகத்தில் சிக்கல்கள் நேரும்போதெல்லாம், பெருமன்ற நண்பர்கள் இவரை நாடித் தலைமைப் பதவியை ஏற்கச் சொல்வார்கள். இவர் சமாஜத்தையும், சபையையும், இரு கண்களாகப் போற்றி வந்தார். பாம்பன் சுவாமிகள் வரலாற்றையும், அவரது நூல்கள் சிலவற்றுக்கு உரையும் எழுதியவர்.

**5. ம. பாலசுப்பிரமணிய முதலியார்**

பெருமன்றத்தாரால் 'ம.பா.' எனக் குறிக்கப்பெற்றவர். 'மயிலை கிழார்', 'இளமுருகனார்', 'மயிலை மாதவதாசன்' என்ற பெயர்களைப் புனைந்து கொண்டவர்.

1916ஆம் ஆண்டில் மயிலாப்பூரில் சமாஜத்தின் ஆண்டு விழாவிற்கு வெளியூரிலிருந்து தம் தந்தையாரோடு வந்தவர் இங்கேயே ஒன்றிவிட்டார். 1921ஆம் ஆண்டின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சமாஜ ஆண்டு விழா நடைபெற்றது. அதில்தான் திரு. கி. குப்புசாமி முதலியார் இவரைச் செயலராக்கிச் செயல்பட வைத்தார். மன்றத்தின் நிதி நிலைமை குறைந்திருந்த சூழலில் சமாஜத்திற்கு உயிரூட்டியவர். அடக்க விலைப் பதிப்புக்களாகத் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகள், 14 சாத்திரங்கள், திருப்புகழ், சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி முதலிய நூல்கள் இவரால் உருவாயின. இவைதாம் இன்றுவரை பெருமன்றத்தின் பெயரை நிலை நாட்டுகின்றன. 7 ஆண்டுகளாக நின்று போயிருந்த சித்தாந்த இதழை வெளியிட்டவர் இவரே.

22 ஆண்டுகள் செயலராகப் பணியாற்றினார். மூன்றுமுறை சித்தாந்த இதழ் ஆசிரியராக இருந்தார். இருமுறை மாநாட்டு விழாத் தலைவராகத் திகழ்ந்துள்ளார். தம் மணிவிழா மலரில் தன் வரலாற்றுக் குறிப்பும் இணைத்துள்ளார்.

**6. சிவத்திரு. தி.கி. நாராயணசாமி நாயுடு**

'நல்லார் இணக்கமும் நின்பூசை நேரமும் ஞானமும் மற்றுஅல்லாது வேறுநிலை உளதோ?' என்ற பட்டினத்தார் பாடலையே தம் வாழ்க்கையின் தத்துவமாக வாழ்ந்த பெரியார் தி.கி. நாராயணசாமி நாயுடு.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் தலைவர், துணைத்தலைவர், செயலாளர் முதலிய பதவிகளை வகித்தவர். திருச்சிற்றம்பலம் கிழக்கு மருதூர் நாராயணசாமி நாயுடு 22.9.1906இல் பிறந்தவர். பாட்டியாரால் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் தொடர்பு கிட்டிற்று. மடப்பற்று, சைவப்பற்று ஏற்பட்டுச் சைவரானார். திரு.வி.க. பேச்சு இவரைக் கவர்ந்தது. திரு.வி.க. மூலமாக சைவ சித்தாந்த மகா சமாஜச் செயலர் ம. பாலசுப்பிரமணிய முதலியாருடன் தொடர்பு உண்டாயிற்று.

சமாஜத்தார் வெளியிட்ட சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி போன்ற பல நூல்கள் இவருடைய பொருள் உதவியால் வெளிவந்தன. ஞானியார் சுவாமிகள் 60ஆம் ஆண்டு விழா, பட்டமேற்ற பொன்விழா முதலியவற்றை இவர் சிறப்புற நடத்தி வைத்தார். பல நிறுவனங்களில் அறங்காவலராக விளங்கினார்.

இவர் பண்டிதரிலும் அதிகம் படித்தவர்; பதிப்பு வரலாறு அறிந்தவர். தல யாத்திரையில் மிகுந்த ஆர்வமுடையவர். இக்கால இளைஞர் பின்பற்றத்தக்க அறிஞர்.

**7. வித்தகர் கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, இ.ஆ.ப.**

கோபிசெட்டிப்பாளையத்தில் நூறாண்டுகளுக்கு முன் முத்துக் குமாரபிள்ளைக்கும் பழனியம்மைக்கும் மகனாகப் பிறந்தார். பல மாவட்டங்களில் ஆட்சியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் ஆட்சிமொழிக் குழுவில் மொழிபெயர்ப்புத்தனி அலுவலர் பணிசெய்தார். ஓரிரு ஆண்டுகள் பெருமன்றச் செயலாளராக இருந்து சுமார் 7 ஆண்டுகள் பெருமன்றத் தலைவராகத் திகழ்ந்தார். 1965ல் அவர்தம் பெருமுயற்சியால் 'சைவ சித்தாந்த' ஆங்கிலஇதழ் மலர்ந்தது. பல

சைவ நூல்கள் வெளியிட்டார். ஆங்கிலம், மற்றும் தமிழில் பல கட்டுரைகள் வரைந்தார். வள்ளலார் பற்றிய அரிய ஆங்கில நூலும், தமிழ் உரைநடை வரலாறு பற்றி ஓர் ஆய்வு நூலும் வெளியிட்டார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் 'கோயில் களஞ்சியம்' வெளியீடுகளின் சிறப்பாசிரியராகப் பெருஞ்சாதனை புரிந்தார். காஞ்சி, கும்பகோணம், சிதம்பரம், திருமயிலை திருவான்மியூர், திருவொற்றியூர் முதலிய பல கோயில்களைப் பற்றி நிறைய தனி நூல்கள் எழுதினார்.

தமிழகப் புலவர் குழுவின் தலைவராக விளங்கி 'ஓங்கு தமிழ்' என்ற இதழ் தொடங்கினார். 1994ல் உயிர் துறக்கும் போதும் 'சைவ சித்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழ் ஆசிரியராக அணிசெய்தார், தொண்டின் வடிவமாக எளிமையின் உருவமாக 'அன்பே சிவம்' 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தார்.

**8. அறிஞர் கொ.நீ. சிங்காரவேலு**

கொ. நீ. சிங்காரவேலு முதலியாரைப் பெருமன்றத்தில் கொ.நீ.சி. அல்லது C.N.S. என்றே சொல்வார்கள்.

இவர், தலைமைச் செயலகத்தில் மேனிலை எழுத்தராகப் பணிபுரியத் தொடங்கி இறுதியில் உதவிச் செயலராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பற்று காரணமாக தெ.பொ.மீயிடம் தமிழ் கற்று எம்.ஏ. பட்டம் தேறினார். மற்றும் திரு.ம.பா. அவர்களால் சைவ சித்தாந்தப் பெருமன்றத்துடன் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

பெருமன்றத்தில் தலைவர், துணைத்தலைவர், செயலர் எனப் பல்வேறு நிலைகளில் தொண்டு புரிந்தவர். சமரச நோக்குடைய காரணம்பற்றிக் கிறித்துவ மையங்களில் இவருடன் கலந்துரையாட அழைப்பு வரும். அங்கெல்லாம் சென்று நம் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கியவர்.

மலேயா வாழ் செட்டிநாட்டுப் பெருமக்களுள், சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டவர்களுடன் நெருங்கிய நட்பு வைத்துள்ளவர். இதனால் நம் பெருமன்றத்துக்குக் கிடைத்த நன்மை, கோலாலம்பூர் சித்தாந்தப் புரவலர், சித்தாந்த கலாநிதி, சைவபூஷணம் திரு.ஆர்.வி. கந்தையா அவர்களின் அறக்கட்டளையாகும். அவர்கள் அச்சில் இல்லாத சித்தாந்த சாத்திர நூல்களை வெளியிடுதல் வேண்டும் என்று மன்றத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கியிருக்கிறார். இதற்கு மூலமாக விளங்கும் கொ.நீ.சிக்குப் பெருமன்றம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

**9. திருமுறைக்காவலர் சோமசுந்தரம் செட்டியார்**

அண்ணாமலை செட்டியார் - ருக்மணி அம்மாள் தம்பதியரின் தவப்புதல்வராக 1885 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11ஆம் நாள் செட்டியார் அவர்கள் பிறந்தார். இளமையிலேயே கடவுள்பக்தி மிக்கவர். எம்.ஏ. வரை படித்தவர். தம்முடைய அன்னையார் பெயரால் 'ருக்மணி குக்கர்' - சமையல் அடுக்குப் பாத்திரம் என்ற கண்டுபிடிப்பை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்.

கல்லூரிப் பேராசிரியராகக் காக்கினாடாவில் பணியாற்றிய இவர், அறிவியல் கண்டுபிடிப்பிற்குப் பிறகு, தம் தொழிலை விட்டு அவ்வுற்பத்தி செய்யும் தொழிலில் இறங்கிவிட்டார். கௌரிவாக்கம் S.I.V.E.T. கல்லூரிக்குழுத் தலைவராகவும் விளங்கினார்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராகவும், துணைத் தலைவராகவும், சித்தாந்தம் ஆசிரியராகவும் பணியாற்றிய பெருமை படைத்தவர். பெருமன்றத்தார் வெளியிட்ட திருமுறை வெளியீடுகளுக்குப் பொருள் வழங்கியிருக்கின்றார். சுந்தரர் தேவாரம், திருவாசகம் போன்ற அருள் நூல்களுக்குத் தாமே குறிப்புரையும் எழுதி அடக்க விலைக்கு வெளியிட்டிருக்கிறார். பெருமன்றத்தின் எதிர்கால நலன்கருதி, சென்னை அந்திக்கடையில் (Evening Bazaar) ஒரு கட்டடத்தைப் பெருமன்றத்திற்கு உரிமையாக்கினார். அதைச் சரிவர நிர்வகிக்க கட்டடப் பொறுப்பு வாரியம் ஒன்றை அமைத்தார். சைவத்தைப் பரப்புவதற்கும், குறிப்பாக, தேவாரப் பயிற்சியை ஊக்குவிப்பதற்கும் அவர்கள் நன்கொடையாக வழங்கியுள்ள கட்டடத்தின் வருவாய் பயன்படுகின்றது. செட்டியார் அவர்களுக்குப் பெருமன்றமும் சைவ உலகமும் பெரிதும் நன்றிக்கடன்பட்டிருக்கின்றன.

**10. முனைவர் வ.ஆ. தேவசேனாபதி**

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தத்துவம் பயின்றவர். தேவசேனாபதி சென்னைப் பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை உடையவர்.

தமிழ் மொழியில் சமயம் தொடர்பான முனைவர் பட்ட ஆய்வாக 'சிவஞான சித்தியார் அறுவர் உரை'யை தேவசேனாபதி, பேராசிரியர் எஸ்.எஸ். சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் மேற்பார்வையில் முடித்தார்.

திருப்புகழ் என்னும் நூலை முதலில் அச்சில் வெளியிட்ட வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் பெயரர் தேவசேனாபதி. தணிகைமணி செங்கல்வராய பிள்ளை இவர்க்கு சிறிய தந்தை ஆவார்.

பெருமன்றம் நடத்தும் 'Saiva Siddhanta' என்ற ஆங்கில முத்திங்கள் இதழுக்குப் பல ஆண்டுகளாக ஆசிரியராக விளங்கி, உலக அளவில் சிறந்த இதழாக விளங்கச் செய்தவர்கள்.

இந்திய தத்துவக் கழகத்தில் (Indian Philosophical Congress) செயலராகப் பொறுப்பில் சிறந்த பணியாற்றினார். அமெரிக்கா, கனடா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் சைவ சித்தாந்தம் பற்றிச் சொற்பொழிவு ஆற்றியவர். மணிவாசகரின் திருவாசகத்தையும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியையும் ஒப்பாய்வு செய்ததுடன், கந்தரலங்காரம், உமாபதி சிவத்தின் அருள்மொழித் திரட்டும், திருவருட்பயனும் ஆகிய நூல்களை ஆங்கில ஆக்கம் செய்தவர். குருகுலம் அழகரடிகள் சார்பில் நடந்த சைவ சித்தாந்தப் பெருமன்ற ஆண்டு விழா மாநாட்டில், தலைமை உரை ஆற்றியவர். திருவாவடுதுறை, தருமபுரம், குன்றக்குடி ஆதீனங்களால் சிறப்பிக்கப்பட்டார்.

**11. அறிஞர் மு. அருணாசலம்**

மு. அருணாசலம் ஒரு பல்கலை வித்தகர்; முதிர்ந்த இலக்கிய அறிஞர்; பழுத்த சைவ சித்தாந்தி; தேர்ந்த வரலாற்று ஆய்வாளர்; சீரிய காந்தியவாதி; கிரந்த மொழியில் சைவ ஆகமங்களைப் பயின்றவர்.

பத்தொன்பது ஆண்டுகள் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 'சித்தாந்தம்' இதழ் ஆசிரியராக அயராது தொண்டாற்றியவர். இவர் தமிழிலக்கிய வரலாற்றினை நூற்றாண்டு வாரியாக வகுத்து பல தொகுதிகள் எழுதி வெளியிட்டார். தமிழ் 'சித்தாந்தம்', ஆங்கில 'சைவ சித்தாந்தா' இதழ்களில் எழுதிப் பெருமை சேர்த்தார்.

1940இல் மயிலம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 35வது ஆண்டு விழாவில் சைவ இளைஞர் மாநாட்டில் தலைமையுரை ஆற்றினார். History of Tamil Literature. Festivals of Tamil Nadu, History of Tamil Music முதலிய பல ஆங்கில நூல்களும் எழுதியுள்ளார்.

**12. புலவரேறு ந.ரா. முருகவேள்**

சென்னைக் கருகில் கூடுவாஞ்சேரிப் பகுதி நந்திவரத்தில் பிறந்த ந.ரா. முருகவேளின் இயற்பெயர் சுந்தரராசன். அவரது ஆசான் மறைமலையடிகளால் மேற்கண்ட தனித்தமிழ்ப் பெயர் சூட்டப் பெற்றார். கிறித்தவக் கல்லூரியில் கற்றார். சில காலம் சென்னையில் உயர்நிலைப் பள்ளிகளிலும், சென்னை கிறித்தவக் கல்லூரியிலும் பணிபுரிந்தார். இந்து அறநிலையத்துறையின் 'திருக்கோயில்' இதழ்ஆசிரியர் பணியில் 22 ஆண்டுகள் நீடித்து தமிழ்கூறும் நல்லுலகில் தனிப்பெரும் புகழை நிலைநாட்டினார். அருட்டிரு மறைமலையடிகளார் மாட்சி, கோயில் திருவுருவங்கள், சைவ சித்தாந்தம், திருக்கோவையார் பற்றிய ஆய்வு முதலிய நூல்கள் எழுதினார்.

சைவ சித்தாந்தப் பெருமறைத் திங்கள் இதழின் ஆசிரியராக 12 ஆண்டுகள் சிறந்த தொண்டு செய்தார். இவரது அழகிய கவிதை இதழ்களில் மலர்ந்து சைவ மணம் வீசின. பல ஆங்கிலக் கவிதைகளையும் நல்ல தமிழ்க் கவிதைகளாக்குவதில் வல்லவர். இவரைப் பாராட்டி சைவ ஆதீனங்களும், தமிழ் அமைப்புகளும் வழங்கிய பட்டங்கள் பல.

குமரகுருபரர், திருப்புகழ் அமிர்தம், ஈழகேசரி, செந்தமிழ்ச் செல்வி முதலிய இதழ்களில் தொடர்ந்த கட்டுரைகள் எழுதினார்.

**13. அம்பை இரா. சங்கரனார்**

அம்பா சமுத்திரத்தில் 17-1-1920ல் இராமலிங்கருக்கும் முத்தம்மைக்கும் திருமகனாகத் தோன்றியவர் சங்கரனார். இவர் துணைவி பழநியாச்சி ஆவர். இவருக்கு மகளிர் மூவரும் ஆண்கள் எண்மருமான மக்கட் செல்வங்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர். 1943 முதல் 1978 வரை பல்வேறு இடங்களில் தமிழாசிரியப் பணிபுரிந்துள்ளார்.

அம்பை தவத்திரு. சாமிநாத குருவின் தொடர்பால், வடமொழி, தமிழ், ஆங்கிலம் மொழிகளை அறிந்தவர். இறைவழிபாட்டில் பயிற்சியும் பெரியோர் கூட்டுறவும் பெற்றவர். சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியாக விளங்கினார்.

இவருடைய இலக்கியப்பணிகள் உரைநடை, செய்யுள், பதிப்பு எனப் பலதுறைகளில் விரிந்துள்ளன. பல சமய அமைப்புகள் இவருக்குப் பல விருதுகள் வழங்கியுள்ளன. 1940 முதல் பெருமன்றத் தொடர்புகொண்டு தம்மறைவு வரை அரும்பணி ஆற்றியவர். 1960ல் இலங்கை திருக்கேதீசுரத்தில் இளைஞர் மாநாட்டுத் தலைவராகவும் பல்லாண்டுகள் மன்றச் செயலாளராகவும் சித்தாந்தம் இதழ் ஆசிரியராகவும் திகழ்ந்தவர். சைதை நாராயண குரு உயர் நிலைப்பள்ளி வளர்ச்சிக்கும் தொண்டு செய்தார்.

இப்புலவர் பொது நலத்தில் புலமை நலம் பொருந்தி, உடல் குளிர, உயிர் தழைக்க, உணர்ச்சி ஓங்க அரிய கருத்துக்களை எளிய முறையில் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர். இவர் கலைபயில் தெளிவும், கருத்துச் செறிவும், கட்டுரை வன்மையும் கொண்டவர். சீரிய நோக்கங்களில் தூய

ஈடுபாடு கொண்டவர். மரபுவழி, யாப்பியல் இலக்கணப்படி செய்யுள் இயற்றும் தமிழ்க் கவிஞராகவும் திகழ்கிறார். முதுநிலை நிலையிலும் நடுங்கா இவரது நாவின் உரை. நூல்பல இயற்றி, உரைநூல் பல எழுதி, பழைய சில நூல்களைப் பதிப்பித்து, தமிழ்த் தாத்த உ.வே.சா.வின் தொண்டைத் தொடர்ந்து செய்து வருபவர். ஓய்வுபெற்ற பின் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பணி ஆற்றினார்.

**14. முனைவர் வை. இரத்தினசபாபதி**

1929இல் திருப்பாதிரிப்புலியூர், வண்டிப்பாளையத்தில் பிறந்த இவர், 1905 இல் சைவ சித்தாந்த மகா சமாஜ அமைப்பையும், 1928இல் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் "சித்தாந்தம்" இதழையும் தோற்றுவித்த தவத்திரு. ஞானியாரடிகளின் சீடராக அவர் திருமடத்தில் கல்விகற்றவர்.

மயிலம் தமிழ்க்கல்லூரியில் படித்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழும், தத்துவமும் பயின்று முனைவர் பட்டம் பெற்றவர். தமிழ்த்துறையிலும், தத்தவத்துறையிலும் பணி செய்தவர். 1977 முதல் 1986 வரை சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத் துறையிலும், 1986 முதல் 1991 வரை சைவ சித்தாந்தத் துறையிலும் பேராசிரியராகவும், தலைவராகவும் பணியாற்றியவர்.

முப்பதுக்கும் மேற்பட்டோர் எம்.பில்.,பி.எச்.டி., பட்டம் பெற நெறிப்படுத்தினார். 1995 முதல் 2004 வரை 'சித்தாந்தம்' இதழ் ஆசிரியராகத் திகழ்ந்தவர். இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் விருது போன்ற பல விருதுகள் பெற்றவர்.

இவர் தேவார மூவர் பற்றிய ஆய்வு நூல்கள், திருமுறைத் தெளிவே சிவஞான போதம், சிவஞான முனிவர் நோக்கில் சைவ சித்தாந்தம், திருமுறைப் பெருமை, சேக்கிழார் திருநெறி, திருமுறைச் செந்நெறி, தமிழக வாழ்வியற் சிந்தனை, சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை முதலிய ஞான நூல்களின் ஆசான்.

மெய்கண்ட சாத்திரங்கள், துகளறு போதம், தத்துவப் பிரகாசம், சர்வ ஞானோத்தர ஆகமம், தேவி காலோத்தர ஆகமம் ஆகியவைகளைச் சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்காக, செம்மையாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

# 9. சைவ சித்தாந்த மகா சமாஜம்

– திரு.வி.க.

1911-ம் ஆண்டு டிசம்பரில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஜெ.எம். நல்லசாமி பிள்ளை தலைமையில் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாக் கூட்டத்தில் முதல் முதல் பேச இடம் பெற்றேன். அக்கூட்டத்தில் யான் பேசிய பொருள் 'சைவன் எவன்' என்பது. சைவம் ஒரு குறிப்பிட்ட ஒரு சமயம் அன்று என்றும், அது பொதுமையது என்றும், முனைப்பற்ற தொண்டிலே விளங்கும் அன்பு நிலையே சைவம் என்றும், அந்நிலை சாதிமதங் கடந்தது என்றும், இன்னோரன்ன இயல்புகளையுடைய ஒருவனே சைவன் ஆவன் என்றும் என்னால் விளக்கப்பட்டன. என் பேச்சு சாதிச்சைவர் முகத்தைக் கறுகச் செய்தது.

1912-ம் ஆண்டுக்கு அமைச்சராகச் சச்சிதானந்தம்பிள்ளை தெரிந்தெடுக்கப்பட்டார். அத்தெரிவு ஜெ.என்.இராமநாதனுக்கும் எனக்கும் ஊக்கமூட்டிற்று. நாங்கள் மூவரும் பாதிரிமாரைப்போல வேலை செய்யத் தொடங்கினோம்; ஆதி திராவிடச் சகோதரர்கள் உறையும் இடங்கட்குச் செல்ல உறுதி கொண்டோம். முதல் முதல் நுங்கம்பாக்கம் எங்கள் கருத்தில் படிந்தது. சிவநேயர் பழனிசாமி பிள்ளையின் நட்பு எனக்கு அப்பொழுதே கிடைத்து. பலப்பல இடங்கட்கு வலிந்து வலிந்து சென்று சைவப் பிரசாரம் செய்வோம்; சென்னையின் நானாபக்கங்களிலும் உழல்வோம். பிள்ளையார் கோயில் மண்டபங்களெல்லாம் எங்கள் பிரசார மேடைகளாயின. திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், திருமுல்லைவாயல் முதலிய திருப்பதிகளின் திருவிழாக்களிலே எங்களைக் காணலாம். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆக்கத்துக்குப் பாடுபட்டோம்; பட்டோம்; பெரும் பாடுபட்டோம்.

ஆண்டுக் கூட்டம் காஞ்சியில் பொன்னம்பலம் பிள்ளை தலைமையில் கூடிற்று. யான் 'அப்பர் கொள்கை' என்ற பொருள்பற்றிப் பேசினேன். அப்பேச்சைச் சென்னையினின்றும் திருத்தணிகைக்குப் புறப்பட்ட ஒரு சாதி வைசப்புலவரும், ஒரு கிறிஸ்துவப் பாதிரியாரும் உரையாடிய முறையில் நிகழ்த்திக் காட்டினேன். கடவுளைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், சீர்திருத்தத்தைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் அப்பர் அருளியுள்ளவற்றைச் சுருங்கிய முறையில் சைவப் புலவர் பாதிரியார்க்கு விளக்கினார். அவ்விளக்கம் பாதிரியார் நெஞ்சை அப்பர் கொள்கையில் படிவித்தது. இருவருந் திருத்தணிகை அடைந்தனர். பாதிரியார் சைவப்புலவரைப் பார்த்து, ''யானும் உம்முடன் கோயிலுக்கு வருகிறேன்'' என்றார். சைவப்பழம் விழித்தது. ஏற இறங்கப் பார்த்தது. ''இவ்வளவுதானா உமது ஏட்டுச் சைவம்! அப்பர் கொள்கைப்படி நடக்க உமது சமூகம் இடங்கொடுக்கவில்லையே! சமூகச் சீர்திருத்தஞ் செய்ய முற்படுங்கள். சைவ சித்தாந்த சமாஜம், சீர்திருத்தத்தில் ஏன் தலையிடலாகாது? ஏட்டுச் சைவத்தால் என்ன பயன் விளையும்?'' என்று கேட்டார் பாதிரியார். இவ்வாறு முழங்கிப் பேச்சை முடித்தேன். தலைவர் என் கருத்தை முற்றுந் தழுவியே பேசினார். சாதிச்சைவர் உள்ளம் கொதித்தது. அவர் என் செய்தல் கூடும்! காலக்கடவுள் என் பக்கம்!

1913-ம் ஆண்டிலே சமாஜ ஆண்டுவிழா வேலூரில் நடைபெற்றது. தலைமை வகித்தவர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளென்னும் ஞானியார் சுவாமிகள். சுவாமிகளை யான் முன்னே நேரிற் கண்டதில்லை. முதல்காட்சி வேலூரிலேயே. அடிகளின்தோற்றம் மரகதமலையில் முளைத்த ஞாயிறே போன்றிருந்தது. யான் பேச எடுத்த பொருள் "சிவஞான போத நுட்பம்". சிவஞான போத வரலாற்றிலே நந்தியெம்பெருமானுக்குச் சீகண்டர் இருபத்தெட்டு ஆகமங்களை அறிவுறுத்தினரென்றும், அதனால் அவர் ஞானம் பெறவில்லையென்றும், பின்னே ரௌரவ ஆகமத்திலே பாச விமோசனப் படலத்திலேயுள்ள சிவஞானபோதச் சூத்திரம் பன்னிரண்டையும் மெய்க்குரவர் அறிவுறுத்தினரென்றும், நந்தியெம்பெருமான் ஞானம் பெற்றன ரென்றும் சொல்லப்பட்டிருப்பதை அலசி, "ரௌரவ ஆகமம் இருபத்தெட்டில் ஒன்றுதானே. அதிலுள்ள சிவஞானபோதப் பகுதியைச் சீகண்டர் மறந்துவிட்டாரா அல்லது அஃது அறிவுறுத்தப் பெற்றபோது நந்தியெம்பெருமான் உறங்கினாரா?" என்றதும் மேடை அதிர்ந்தது; வீறிட்டது. நல்லசாமி பிள்ளை "தப்பு - தப்பு" என்று சீறினார்; யாழ்ப்பாணம் சபாரத்தினம் முதலியார், "நிறுத்தும் - நிறுத்தும்" என்று உறுத்தார். குழப்பத்தை அடக்கக் குரலை உயர்த்தி வேகத்தில் இறங்கினேன். சபை அமைதியடைந்தது. மேலுந் தொடர்ந்து பேசி, "சிவஞான போதத்தின் மூலமொழியென்ன? வடமொழியா? தென்மொழியா?" என்று கேட்டு, "சிவஞானபோதம் மொழி கடந்த ஒன்று" என்று தெளிவு செய்கையில், நல்லசாமி பிள்ளை "தப்பு-தப்பு" என்று மீண்டும் கூக்குரலிட்டார். என் பேச்சு முற்றுப் பெற்றது. நல்லசாமி பிள்ளை பேச எழுந்தார்; சபாரத்தினம் பேச எழுந்தார். "இஃது ஒழுங்குமுறையா" என்று தலைவர் காதைக் கடித்தேன். இருவரும் என்கூற்றை மறுத்தனர். விடைகூற விரைந்தேன். பெருந்தலைமை என் விரைவை அடக்கியது. அடிகள் முடிவுரையில் என் பேச்சைப் பற்றித் தங்கருத்தை வெளியிட்டபோது, "குழந்தை கையில் கத்தியும் பழமுங் கொடுக்கப்பட்டால் அது கையையும் அறுத்துக் கொள்ளுமன்றோ?" என்று குறிப்பிட்டார். கூட்டங் கலைந்தது. பலர் பலவாறு பேசிச் சென்றனர். நல்லசாமி பிள்ளையும், சபாரத்தினமும் முறை தவறியே நடந்தனரென்றும், தலைவர் அவ்விருவரையும் இடையில் பேசவிட்டது ஒழுங்குமுறையாகாதென்றும், காரணங்கூறாமல் அடிகள் குழந்தை-கத்தி என்றதும், தவறென்றும் சி.டி. பார்த்தசாரதி முதலியார் வெளிப்படையாகப் பலர் கேட்க விளம்பினார். "நடுநிலையர் எங்கும் உள்ளனர்" என்று சொல்லிக்கொண்டு யான் இரத்தினவேல் முதலியார் வீட்டுக்குச் சென்றேன். அவ்வீடு ஒரு சொற்போர்க் களமாயிற்று. அடுத்தநாள் காலையிலே ஞானியார் சுவாமிகளிடத்திருந்து அழைப்பு வந்தது. யான் அடிகளைக் கண்டேன். ஏறக்குறைய ஒரு மணி நேரம் அடிகள் என்னிடம் உரையாடினார். முன்னாள் நிகழ்ச்சியை அவருந் தொடவில்லை; யானுந் தொடவில்லை. அந்நிகழ்ச்சி என்னை உறுத்தவே இல்லை. அடிகளின் அறிவும் அன்பும் என்னை ஆண்டன. அவர்தம் தொண்டர் குழாத்திலே யானும் ஒருவனானேன்.

1914ம் ஆண்டில் விழா கூடலூரில் நடந்தது. தலைவர் ஞானியார் சுவாமிகளே. அதில் யான் "முப்பொருளுண்மை"யைப் பற்றிப் பேசினேன். முன்னே பேசிய பலர் காலவரம்பை மீறிய காரணத்தால் காலநெருக்கடி ஏற்பட்டது. மணம்பூண்டி குமாரசாமி பிள்ளையும், மணிமலங்கம் திருநாவுக்கரசு முதலியாரும், சச்சிதானந்தம் பிள்ளையும், யானும் சுருங்கிய நேரத்தில் பேசுவதென்று உறுதி செய்தோம். யான் பாசத்தைப் பற்றி ஐந்து நிமிடமும், பசுவைப்பற்றி ஐந்து நிமிடமும், பதியைப் பற்றி ஐந்து நிமிடமும் பேசினேன்.

பின்னே சமாஜம் மேலும் மேலும் இவரவில்லை; இழிந்தே போயிற்று. காரணம் சமாஜத்தில் அழுக்கு மூட்டைகள் நிரம்பினமையும், சீர்திருத்தக்காரர் ஒதுங்கினமையுமாம். யான் பலதிற வேலைச்சூழலிடை மூழ்கலானேன். அதனால் சமாஜ நினைவு எனக்கு அடிக்கடி தோன்றுவதுமில்லை. சமாஜம் மறையுமோ என்று ஐயுறத்தக்க நிலைமையும் உற்றது. 1924-ம் ஆண்டில் ஞானியார் சுவாமிகள் முயற்சியால் சமாஜம் மீண்டும் உயிர்த்தெழுந்தது. விட்டும் தொட்டும் கூட்டங்களுக்கு யான் போவதுண்டு.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வெள்ளி விழா, கிழக்கு மருதூரில் பெருநிலக் கிழவர் நாராயணசாமி நாயுடுவின் திருமணத்தின்போது (1930) அவர் முயற்சியால் நடந்தேறியது. முதல்நாள்விழா என் தலைமையில் கொண்டாடப்பட்டது. அத்தலைமையுரை “நினைப்பவர் மனம்” என்னும் நூலாக வெளிவந்துள்ளது.

1934-ம் ஆண்டுக் கூட்டம் திருவதிகையில் ஈண்டியது. அதற்குத் தலைமைவகிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. திறப்பு விழா ஞானியார் சுவாமிகளால் நிகழ்த்தப் பெற்றது. மகாநாட்டைச் சிறப்பிக்கப் பலதிறக் கூட்டங்கள் செறிந்தன. வரவேற்புக்குழு எவ்வகையிலும் இடுக்கணுறவில்லை; எல்லாவற்றையும் தாங்கும் முறையிலேயே அக்குழு அமைந்தது. பண்ருட்டி இராஜகோபாலசெட்டியார், மருதூர் நாராயணசாமி நாயுடு, திருவெண்ணெய்நல்லூர் சின்னசாமி ரெட்டியார் முதலியவரின் அன்புத் தொண்டுகள் என்றும் மறக்கற்பாலனவல்ல. என் தலைமையுரையில் ஜைநத்துக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தேன். அது சைவ நூல்களை மட்டும் ஆராய்ந்தவர்க்கு ஒருவிதக் கலக்கத்தை உண்டாக்கியது. அக்கலக்கம் கலகமாக மூளவில்லை. ஞானியார் சுவாமிகள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், வேங்கடசாமி நாட்டார், தூத்துக்குடி முத்தையா பிள்ளை முதலியோர் எனது தலைமையுரையைப் பற்றிக் கூடிக் கூடிப் பேசினரென்று சில இளைஞர் வாயிலாகக் கேள்வியுற்றேன்.

இவ்வாண்டு மதுரையில் கூடப் போகும் சமாஜ விழாக் கூட்டத்துக்கு யான் மீண்டும் தலைவனாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறேன். காலநிலை சமாஜப் போக்கை மாற்றும் என்று எதிர்பார்க்கிறேன்.

நன்றி : திரு.வி. கலியாணசுந்தரனார் - திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பூம்புகார் பதிப்பகம், பக். 465-468.

# 10. மன்றம் வாழ்க செழித்தே!

– கவிஞர் அரங்க. முத்துமணி,
முன்னாள் செயலாளர், சைவ சித்தாந்தப் பெருமன்றக்கிளை, தஞ்சை

1. அகரத்தின் வடிவாகும் ஈசன் தன்னை, அனுதினமும் போற்றிடவே, தோத்திரங்கள்!
பகருங்கால் பண்ணுடனே பரவிப் பாடப் பைந்தமிழில் தந்தார்கள் நால்வர்; மேலும்,
புகழ்பெற்ற அருளாளர் பலரும் தோன்றிப் பொன்னான நூலெல்லாம் நமக்குத் தந்தார்;
பகலவன்போல் புராணங்கள் ஒளியை வீசிப் பரமனையே வழிபடவே துணையாய் நிற்கும்!

2. சைவத்தின் சிறப்பெல்லாம் சாற்று கின்ற சாத்திரங்கள் பதினான்காம்; அவற்றில் நல்ல
மெய்கண்டார் சிவஞான போதத் தோடே மேன்மைகொள் சித்தியுடன் அருளின் நூல்கள்,
வையந்தான் போற்றுகின்ற மறையின் செல்வர் வாக்குடனே, உமாபதியார் நூல்கள் எட்டும்
உய்யவழி காட்டிடுமாம்; இவைகள் யாவும் உணர்த்துவது முப்பொருளின் உண்மை யாகும்!

3. முப்பொருளில் பதியைப்போல் பசுவு மாகும்; மொழியுங்கால் பாசமுமே அனாதி யாகும்;
எப்பொருளும் ஆக்குபவன் இறைவன்; அந்த இறைவன்தன் பாதங்கள் சேரு தற்கே
செப்புங்கால் பாசந்தான் தடையாய் நிற்கும்; சிவன்கோயில் வழிபாட்டைச் செய்யும் காலை
அப்பாசம் நீங்கிவிடும்; அதற்கும் சற்றே அடுத்ததொரு தடையாகும் மும்மலங்கள்!

4. மும்மலத்தில் ஆணவந்தான் முதலில் தோன் றும்; மொழியுங்கால் கன்மமுடன் மாயை சேர
நம்மையுமே தொடர்வதுதான் மூன்றாம்; என் றும் நன்மைகளைச் செய்யாது தடையாய் நின் று
செம்மலர்கள் நோன்றாது சேர லொட்டா, சிவனடியார், திருக்கோவில் யாவும் போற்றி
அம்மலங்கள் கழுவிடவே வேண்டும்; பின்னர் அரனாரைத் தொழுவதற்குத் தடைகள் வாரா!

5. அவரவர்தம் வினைக்கேற்பப் பிறவி தோன் றும்;
அப்பிறப்பை அறுப்பதற்கே சாத னங்கள்
சிவன்கோயில் திருத்தொண்டு; உழவாரத்தால்
செதுக்குவதும், கூட்டுவழி பாடு தன்னை,
உவகையுடன் செய்வதுவும், நான்கு மார்க்கம்
உறவாகக் கொண்டுமிகத் தொண்டு செய்வோம்!
குவலயத்தில் சைவத்தின் கொள்கை யெல்லாம்
குன்றமனமேல் தீபமென ஒளிர வேண்டும்!

(வேறு)

6. இந்தநற் கொள்கையெங்கும் ஏற்றத்தைக் காண்பதற்கே
வந்திட்ட மன்றங்கள்தாம் வரலாற்றில் நிற்க வில்லை;
சிந்தையில் ஒன்றிச்சைவ சித்தாந்தப் பெருமன் றந்தான்
நற்றமிழ் மொழியைப்போல நாளெல்லாம் வளர்க்கக் கண்டோம்.

7. பன்னருஞ் சிறப்புமிக்கப் பாதிரிப்புலியூர் வாழ்ந்த
மன்புகழ் ஞானியாரும், மறைமலை அடிக ளாரும்
தென்றலாம் திரு.வி.கவும் தீந்தமிழ்க் காசுப்பிள்ளை
ஒன்றிய பணியினாலே உயர்ந்தது இமயம் போல!

8. அருளாளர் பழநிச்சாமி அம்பைசங் கரனார் மற்றும்
திருமிகு தியாகராசன் திகழ்ந்திடும் சைவ நல்லோர்
பெருமன்றம் வளர்வதற்கே பெரும்பணி செய்யக் கண்டோம்;
திருவருள் துணையினாலே திகழ்ந்திடும் நூறாம் ஆண்டில்!

9. சிவமணம் கமழும்சிந்தை, செந்தமிழ் போற்றும் தன்மை,
உவகையில் மன்றத் தோடே ஒன்றிட்ட சிறப்பின் மேன்மை,
தவப்பெருஞ் சைவச் சீலர் சதானந்தப் பெரியார் தாமே
புவனந்தான் போற்றுகின்ற பொன்னான தலைவராவார்!

10. அன்புடன் பண்பும் சேர்ந்த அறவழி அண்ணலாவார்!
தன்பெருந் துணையாய் நின்று, தழைத்திடச் செய்யக் கண்டோம்!
இன்னருள் செய்யும் ஈசன் இருப்பிடம் தில்லையாகும்;
பொன்னிகர் நூறாம் ஆண்டும் பொலிவினை நல்கு மன்றோ!

## 11. வாழி பெருமன்றம் !

- கவிதாயினி சா. சித்ரா,
தமிழாசிரியை, கபிலர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருக்கோவலூர்.

மறைநான்கும் சிவனாரின் திருமுகத்தே
மலர்ந்தவையே! இவைசிவத்தை அடையும் மார்க்கம்!
பிறைசூடும் பெருமானின் புகழைப் பாடும்
பேருண்மை அடியாரின் உளத்தின் தோன்றல்!
நுரைமூடும் கடற்கரங்கள் கரையைத் தொட்டே
நோக்கமின்றி அலைவதென அலையும் நெஞ்சை
கரைசேர்க்கும் பெரும்மார்க்கம் சைவம் என்னில்
கண்டவர்க்கே விண்டுரைக்க இயலும் காணீர்!

அருள்ஒளியான் சடைமுடியான் அண்டமுற்றும்
ஆளுகின்ற பெருமானே! சிவமே! அன்பர்
பெருமைதனைப் போற்றுகின்ற இறையே! வாழும்
பெருஞ்சித்தன் குருமுனிவன் அகத்தியர்க்குத்
திருவான செழுந்தமிழை அளித்து வேதம்
தெளிகின்ற ஐந்தெழுத்தை அவர்க்குஓதி
மறையானாய் சைவத்தின் வேதமானாய்
மண்ணாளும் எம்சிவமே காணும் தேவே!

அவன்முகமே கடல்போன்று விரிந்த வானம்;
அவன் வழியே கதிர்நிலவு ஒளி-இருட்டு;
அவன் மூச்சே கடுங்காற்று; மலையின் தென்றல்;
அவன் உடலே பரந்தநிலம் கடலும் மண்ணும்;
அவன் அசைவே உயிரினங்கள் நாமெல்லோரும்;
அவன்கொடையே தமிழ்என்னும் அமிழ்தம் வேதம்
அவன் ஆட்டே நடமாடும் வாழ்க்கை; எங்கும்
அவன் நிறைந்தே ஆடுகின்றான் அவன்பேர் ஈசன்!

வேதங்கள் புகழ்கின்ற நாதன், நீண்ட
வெள்ளிமலைக் கதிபன், திருத்தொண்டர் அன்பில்

நாதமென வாழ்கின்ற குடியான், பாடும்
நற்றமிழின் பாமாலைக் கடிமை, என்றும்
தீதறுக்கும் தொழிலாளன், ஈசன் என்னும்
திருவான ஐந்தெழுத்தில் திகழும் சோதி,
ஓதுவார்க்குப் பெருந்துணைவன் இவனே யன்றி
ஒய்கின்ற போதெவர்க்கும் துணைவருண்டோ?

சைவத்தைப் பரப்புகின்ற சிவத்தின் தொண்டர்
சலியாத உழைப்புடையோர், பெருமன்றத்தை
ஐயன்நம தீசன் புகழ் பாடுதற்கும்
அவனடியார் அருள்தொண்டைக் கூறுதற்கும்
உய்ய இங்கு கண்டார்கள் ஞானியாரின்
உளப்பண்பில் உருவாகி திருவுமாகி
மெய்தவத்தோர் பாடியதை மெய்யென்றாக்கி
மேவுதலால் இம்மன்றம் வாழி! வாழி

திருக்கோவல் ஆதினம் கண்டெடுத்த
சிவத்தொண்டர் தமிழ்க்கரசர் ஞானியாரால்
அருந்தொண்டால் தமிழ்வளர்க்கும் வீரட்டானம்
ஆளுகின்ற சிவனாரின் அருளை எங்கும்
பெருமையுடன் பரப்புவதற்கு நடந்தார்! ஈசன்
பெற்றெடுத்த தொண்டருக்குள் அடக்க மானோர்
கருவினிலே திருவான ஞானியாரால்
கண்டெடுத்த இம்மன்றம் வாழி! வாழி!

நூற்றாண்டைக் கடக்கின்ற சைவ மன்றம்
நிலையான பெரும்புகழால் என்றும் வாழும்
உற்றாகும் பெருஞ்சிவமே உணவுமாகி
உயிர்காக்கும் உலகிற்கு என உரைக்கும்
ஆற்றல்மிகு சித்தர்களும் ஞானியாரும்
அணிஅணியாய் இம்மன்றத்தில் வாழக் கண்டோம்
கூத்தாடும் நடராஜன் தில்லைவாழும்
கோச்சடையன் அருள்நிறைந்த இம்மன்றம் வாழி!

# IV. வழிகாட்டும் பெரியோர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. டாக்டர் ஆனந்த குமாரசுவாமி | - | *கொ. நீ. சிங்காரவேலு* | 1 |
| 2. சமயத்துறையில் இறங்கிய முதற்பொறியாளர் | - | *சி.எஸ். குப்புராஜ்* | 5 |
| 3. ஞானியார் சுவாமிகள் | - | *திரு.வி.க.* | 11 |
| 4. பாவலர் போற்றும் நாவலர் திலகம் | - | *ம. பாலசுப்பிரமணியம்* | 13 |
| 5. நெடும்புகழ் அடிகளாரும் தொடர்ந்துயர் தமிழ்த்தொண்டும் | - | *மலையமான்* | 18 |
| 6. ஞானியார் சுவாமிகள் | - | *தே.இரா. ஜயராமன்* | 22 |
| 7. மறைமலை அடிகள் | - | *திரு.வி.க.* | 24 |
| 8. விபுலானந்தர் | - | *திரு.வி.க.* | 28 |
| 9. அழகரடிகள் | - | *மா. அமிர்தலிங்கம்* | 29 |
| 10. சைவப்பெருந்தொண்டர் முத்துசாமிப் பிள்ளை | - | *சே.கு. சாந்தமூர்த்தி* | 33 |
| 11. சைவச் செம்மல் சுப்பிரமணியம் | - | *சி. திருநாவுக்கரசு* | 36ஃ37 |

# 1. டாக்டர் ஆனந்த குமாரசுவாமி*

- தெய்வத்திரு கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ.,
*முன்னாள் தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.*

டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் பிறந்த நூற்றாண்டு விழா இந்தியாவிலும் பிற நாடுகளிலும் கொண்டாடப்பெறுகின்றது. அவர் நினைவாக இந்திய அரசாங்கமும் ஒரு தபால் வில்லை வெளியிட்டது. அவர் வாழ்க்கையையும் சாதனையையும் நினைவுபடுத்திக்கொள்வது தமிழர்களின் கடமையாகும்.

ஓர் ஆங்கிலக் கவி, "பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நினைவுபடுத்திக் கொள்வதினால் நம்மை அறியாமல் நாம் உயருகிறோம்" என்று கூறியுள்ளார். ஆனால் திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைப்பற்றி நமக்குக் கிடைத்த செய்திகள் மிகக் குறைவே. அவர் சிறந்த கலாயோகியும் கர்மயோகியும் ஆவார். அவருக்குத் தம்மைப்பற்றிய சிந்தனை கிடையாது. அவர், தம் வாழ்க்கையைப்பற்றி எழுதவோ, பேசவோ விருப்பமும் நேரமும் இல்லாதவர். ஆனால் அவர் சாதனைகள் அளப்பரியன!

அவரைப்பற்றி எழுதுமுன் அவர் முன்னோர்களைப்பற்றிச் சிறிது ஆய்வது பயனுடைத்து. இவருடைய பாட்டனார் பெயர் குமாரசுவாமி முதலியார். இவர் யாழ்ப்பாணத்தில் பருத்தித் துறையைச் சேர்ந்த கருடாவில் என்னும் கிராமத்தில் இருந்த ஆறுமுகம் பிள்ளைக்கு இரண்டாவது மகனாக 1783ஆம் ஆண்டில் தோன்றியவர். முதல் மகன் பெயர் வாரித்தம்பி. இவர்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கிழக்கு இந்தியக் கம்பெனியார் இலங்கையில் காலூன்றியபின் இவ்விரு உடன் பிறந்தவர்களும் கொழும்பு வந்து வாணிபம் செய்தனர். குமாரசுவாமி முதலியார் ஆங்கிலம் கற்று, கொழும்புத் துறைமுக நீதிபதியின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பின் அவர் செல்வாக்கு வளர்ந்து 1833ஆம் ஆண்டில் இலங்கையில் நிறுவப்பெற்ற முதல் சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1836ஆம் ஆண்டு முதல் அவர் இறக்கும் வரையில் இப்பதவியை அவர் திறம்பட வகித்தார். இவருக்குப் பின் திரு. குமாரசுவாமி முதலியாரின் குடும்பத்தினரே இப்பதவி ஏற்றுவந்தனர்.

திரு. குமாரசுவாமி முதலியார் விசாலாட்சி அம்மையாரை மணந்து முத்துக்குமாரசுவாமி என்னும் மகனையும், செல்லாச்சி என்னும் மகளையும் ஈன்றார். திரு. முத்துக்குமாரசுவாமி முதலியாருக்கும் அவர் மனைவி எலிசபத் க்யோபீபி என்ற ஆங்கிலப் பெண்ணுக்கும் பிறந்தவர்தாம் நம் ஆனந்த குமாரசுவாமி. செல்லாச்சி அம்மாள் பொன்னம்பல முதலியார் என்பவரை மணந்து, குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்ற மும்மணிகளை ஈன்றெடுத்தார்கள். இம்மும்மணிகளின் புகழ் தனிச்சரிதம். அதை இங்கு விவரிக்கவில்லை. இக்குடும்பமே புகழ் வாய்ந்த குடும்பம். விசாலாட்சி அம்மையார் தெய்வ பக்தியிலும், தமிழிலும், இசையிலும் தேர்ச்சி பெற்றவர்.

திரு ஆனந்த குமாரசுவாமியின் தந்தையாராகிய திரு. முத்துக்குமாரசுவாமி முதலியார் பன்மொழிப் புலவர்; ஆங்கிலம், தமிழ், சிங்களம், பாலி, லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைக்

கற்றவர். இவர் சிறு வயதிலேயே இலங்கையில் நீதிபதியாக நியமிக்கப்பெற்றார். இவர் 1857-ல் தமது 23-ஆம் ஆண்டிலேயே இலங்கை ராயல் ஏசியாடிக் சொசைடி (Royal Asiatic Society) என்ற புகழ்பெற்ற சங்கத்தின் ஆதரவில் 'சைவ சித்தாந்த சாத்திரம்' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை படித்தார். அக்காலம் சித்தாந்த சாத்திரங்கள் அச்சில் வராத காலம். பின்னர் 1860-ல் அதே சங்கத்தின் ஆதரவில் 'இந்தியத் தத்துவ சாத்திரம்' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை படித்தார். இவர் இங்கிலாந்தில் பாரிஸ்டராகப் பணிபுரிந்தார். இவர்தாம் முதல் இந்து பாரிஸ்டர். இதற்கு முன் கிருத்தவர்களும் யூதர்களும்தாம் பாரிஸ்டராக வரலாம் என்ற விதி இருந்தது. இவர் முயற்சியாலேயே இவ்விதி மாற்றப்பெற்றது. அப்போது அரிச்சந்திர நாடகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, விக்டோரியா இராணியின் முன்னிலையில் நடித்துக் காட்டி அவ்வம்மையார் பாராட்டைப் பெற்றார். அவ்வரசாங்கத்திடம் 'சர்' பட்டம் பெற்றார். அப்போது இங்கிலாந்தில் பிரதம அமைச்சராக இருந்த டிஸ்ரேலி என்பார் இவரை விக்டோரியா மகாராணிக்கு அறிமுகம் செய்து வைத்தார். டிஸ்ரேலிக்கு இவரிடத்தில் அளவு கடந்த மதிப்பு. டிஸ்ரேலி சிறந்த நாவலாசிரியர். அவருடைய முடிக்கப்படாத கடைசி நாவலில் ஒரு புத்த பிக்குவாக வரும் கதாபாத்திரம், திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களையே நினைவில் வைத்து உருவாக்கினது என்பார்கள். பாலி மொழியில் இருக்கும் இரண்டு பௌத்த நூல்களைத் திரு முத்துக்குமாரசுவாமி அவர்கள் முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தாயுமானார் பாடல்கள் சிலவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் 1867-ஆம் ஆண்டில் சென்னை வந்தபோது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற விரும்பினார். அப்போது இருந்த முறைப்படி அவர் நீதிபதி முன் பைபில் நூலைத் தொட்டுப் பிரமாணம் செய்யவேண்டும். அப்படிச் செய்ய இவர் மறுத்தார். இங்கிலாந்திலேயே இவர் பாரிஸ்டராகப் பதவியேற்றபோது பைபில் நூலைக்கொண்டு பிரமாணம் செய்யத்தேவையில்லை என்று வாதாடினார். இவ்வழக்கை உயர் நீதிபதிகள் ஒன்றுகூடி (Full Bench) விசாரித்துச் சாதாரண உறுதிமொழி (Simple affirmation) போதும் என்று முடிவெடுத்தார்கள். ஆனால் இவர் சென்னையில் நீண்டநாள் இருந்ததாகத் தெரியவில்லை. இவர் இலங்கை அரசியலில் பெரும்பங்கு கொண்டு, இலங்கைச் சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்து சிறப்பான பணியாற்றியுள்ளார். இராமநாதனின் மருகர் கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்களின் கொள்ளுப் பாட்டனாராகிய இலக்கணம் இராமசாமி பிள்ளையிடமும், ஆறுமுக நாவலரிடமும் திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு.

இவ்வாறு பல துறைகளில் தம் புகழை நிலைநாட்டிய சர். முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் 1879ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதி தமது 46ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார். இவர் மரணம் இலங்கை மக்களைத் துயரக் கடலில் ஆழ்த்தியது. இலங்கையில் புகழ் பெற்றிருந்த "உதய தாரகை" என்ற இதழ் இவர் மறைவைப்பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது:-

"இலங்காபுரி மகாராசனாகிய இராவணேசுவரனுடைய சிகரங்களில் விளங்கா நின்ற சூரியப்பிரபை என்ற நவரத்தின மகுடங்களைக் குரங்கரசனாகிய சுக்ரீபன் பறித்தெடுத்து மானபங்கம் செய்தான் என்ற பழங்கதைபோல, மரணேசுவரனாகிய கூற்றுவனும் இலங்கை மங்கையின் சிரேஷ்ட இரத்தினங்களுட் சிறந்து விளங்கிய சர். முத்து குமாரசுவாமி இரத்தினங்களைப் பறித்தெடுத்து மானபங்கம் செய்து ஐயையோ! எம் இளஞ்சிங்கம் இறப்பதே என்னே என்னே என்று எவரையும் இரங்கவும் கலங்கவும் வைத்துப் போயினன்".

அவர் இறக்கும்போது அவர் ஒரே மகனான, உலகப் புகழ் பெற இருக்கும் ஆனந்த கெண்டிஷ் குமாரசுவாமிக்கு வயது இரண்டு ஆண்டுகளுக்கு மூன்று மாதம் குறைவு. இவர் பிறந்த நாள் 1877ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் தேதி.

இங்கு ஒரு வியப்பான ஒற்றுமையைப் பார்க்கலாம். இவர் தந்தை முத்துக்குமாரசுவாமி அவர்களும் தம் இரண்டாம் ஆண்டிலேயே தம் தந்தையை இழந்தார். அவரை வளர்க்கும் பொறுப்பு, பக்தியும் கல்வியும் ஒருங்கே பெற்ற தம் தாய் விசாலாட்சி அம்மைக்கே வாய்த்தது. திரு. ஆனந்த குமாரசுவாமியும் தம் இரண்டாமாண்டிலேயே தம் தந்தையை இழந்தார். தம்மை வளர்க்கும் பொறுப்பைத் தம் தாய், கெண்ட் எலிசபெத் கிளே பீபி (Lady Elizabeth Clay Beeby Coomarasamy of Kent, England) அவர்களே ஏற்கவேண்டி யிருந்தது. அவ்வம்மை சிறந்த, பழமையான, பண்பு வாய்ந்த, ஆங்கிலக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இங்கிலாந்திலேயே வளர்க்கப்பெற்றார். அவர் சிறு வயதில் எவ்வாறு வளர்ந்தார், கல்வி கற்றார் என்பதை அறியத் தேவையான குறிப்புகள் இல்லை. ஆனால் அவர் தம் 12ஆம் ஆண்டிலேயே இங்கிலாந்தில் வைகிலிப் (Wycliffe) கல்லூரியில் சேர்க்கப்பெற்றார் என்பதும், 1900ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் புவி அமைப்பு இயல், தாவர இயல் (Geology and Botany) பாடத்தில் முதல் வகுப்பு ஆனர்ஸ் சிறப்புடன் பி.எஸ்சி. பட்டம் பெற்றார் என்பதும் தெரியவருகிறது. அவர் பட்டம் பெற்ற பின் இலங்கைக்கு வந்தார். அங்குத் தம் 26ஆம் வயதில் இலங்கையில் கனிப்பொருள் மதிப்பிடும் துறைக்கு இயங்குநராக (Director of Mineralogical Survey of Ceylon) அமர்த்தப்பெற்றார் 1903 முதல் 1906 வரை இப்பணியில் இருந்து இவர் இலங்கையில் கனிப்பொருள் மதிப்பீடுபற்றி இரண்டு அரிய நூல்களை வெளியிட்டார். இவர் ஒரு புதிய உலோகத்தைக் கண்டுபிடித்து அதற்குத் 'தோரியனைட்' என்று பெயரிட்டார். இவ்வாராய்ச்சிகளின் விளைவாக இலண்டன் பல்கலைக்கழகத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றார்.

இவர் புவி அமைப்பு இயல் ஆராய்ச்சிக்காக இலங்கையில் சுற்றுப்பயணம் செய்யும்போது, அங்குள்ள சிற்பம் ஓவியம் முதலிய கலைப் பொருள்களை ஆராய்ந்து சில பொருள்களைத் திரட்டியும் வந்தார். பின்னர் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கலை ஆராய்ச்சி செய்து கலைப் பொருள்களைத் திரட்டினார். இந்திய தேசிய இயக்கங்களிலும் இவர் அக்கறை காட்டி ஆங்காங்குப் பேசியுள்ளார். இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி ஆகியோருடன் பழகியுள்ளார். இங்கிலாந்து சென்று ஒரு சிறு அச்சு இயந்திரம் வாங்கிச் சில நூல்களை எழுதி அச்சிட்டார். இக்காலத்தில் இவர் வெளியிட்ட நூல்களில் சில 'இடைக்காலச் சிங்களக் கலை', 'தேசியக் குறிக்கோள் நெறிபற்றி கட்டுரைகள்', 'புத்தரும் பௌத்தமும்' முதலிய நூல்கள்.

இந்தியாவிலும் இலங்கையிலும் தாம் திரட்டிய கலைப் பொருள்களைக் காசிப் பல்கலைக் கழகத்திற்கு இலவசமாகக் கொடுத்து, ஒரு தனிக் கலைக்கூடம் நிறுவத் திரு. ஆனந்த குமாரசுவாமி முயன்றார். ஆனால் அப்போது இருந்த அரசோ, பல்கலைக் கழகமோ, இதில் ஒருவித ஆர்வமும் காட்டவில்லை. பின்னர் அமெரிக்காவில் பெரிய செல்வரும் கலாரசிகருமாகிய டாக்டர் டெமன் வால்டோ ராஸ் (Dr. Deman Waldo Ross) என்பவர், டாக்டர் ஆனந்த குமாரசுவாமி திரட்டி வைத்திருந்த கலைப்பொருள்களை வாங்கி, தாம் வைத்திருந்த பொருள்களையும் சேர்த்து, பாஸ்டன் என்ற நகரத்திலுள்ள அரும்பொருட்காட்சிச் சாலைக்கு இனாமாகக் கொடுத்தார். அக்காட்சிச் சாலையைச் சீரமைப்பதற்காகத் திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களையே இந்திய முகமதிய கலைப்பகுதிக்குக் காப்பாளராக (Keeper) நியமித்தார்கள். பின்னர் அக்கலைக் கூடத்தில் ஆராய்ச்சி

உறுப்பினராக (Fellow) நியமிக்கப்பெற்றார். 1917 முதல் தம் இறுதி ஆண்டாகிய 1947 வரை 'பாஸ்டன்' காட்சிச் சாலையிலேயே இருந்த சுமார் 500 (பெரியனவும், சிறியனவுமாகிய) வெளியீடுகளை வெளியிட்டார். அவர் அக்கலைக் கூடத்திலிருந்து ஓய்வு பெற்று இமயமலைச் சாரலில் ஒரு துறவியாகக் காலங்கழிக்கத் திட்டமிட்டார். ஆனால் இறைவன் அவரை 1947 செப்டம்பர் 9ஆம் நாளை கைலையங்கிரிக்கே அழைத்துக் கொண்டார். இந்தியக் கலையையும் தத்துவத்தையும் மேல்நாட்டில் கொடிகட்டிப் பறக்கச் செய்த ஞானி மறைந்துவிட்டார்.

திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களுக்கு கிரீக், லத்தீன், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம், ஃபிரெஞ்ச், ஜர்மன், ஸ்பேனிஷ், தமிழ், பரிஷியன், இந்தி, சிங்களம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை உண்டு. அவர் எழுதிய நூல்களில் சிலவற்றின் தலைப்புக்களைப் பார்த்தாலே அவர் புலமையின் அகலத்தையும் ஆழத்தையும் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நூலிலும் அவர் எழுதிய அடிக்குறிப்புகள் அவர் ஒரு கலைக் களஞ்சியம் என்பதைக் காட்டும். சில நூல்களின் பெயர்கள் வருமாறு:- (1) இந்தியக் கலையின் நோக்கம், (2) கீழை நாடுகளின் அறிவுரை, (3) இரு ஓவியர்கள், (4) இடைக்காலச் சிங்களக் கலை, (5) கலையும் சுதேசியமும், (6) இந்திய ஓவியங்கள், (7) விஸ்வகர்மா, (8) இந்தியா, இலங்கைக் கலையும் கைவினையும், (9) புத்தரும், பௌத்தமும், (10) இராசபுதன் ஓவியம், (11) சிவபெருமான் திருநடனம், (12) இந்தியக் கலைக்கு ஒரு முன்னுரை, (13) இந்தியக் கலைப்பட்டியல், (14) இந்திய, இந்தோனேஷியக் கலையின் வரலாறு, (15) வேகத்தைப் பற்றிய ஒரு புது நோக்கு, (16) இந்து மதமும் பௌத்தமும், (17) சொல்லழகு அல்லது சிந்தனை அழகு, (18) காலமும் காலம் கடந்ததும்.

'சிவபெருமான் திருநடனம்' என்ற நூல்தான், உலகப் பொதுமக்கள் பார்வையை இவர் பக்கம் ஈர்த்தது என்று சொல்லலாம். அந்நூலில் இப்பொருள் பற்றிய கட்டுரை தவிர இந்தியாவைப் பற்றிப் பதின்மூன்று கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவர், வாழ்க்கையில் விஞ்ஞானியாகத் துவங்கி, கலை ஆராய்ச்சியாளராக அரும்பி, மெய்ஞ்ஞான ஆசிரியராக மலர்ந்து, ஞானியாகவே கனிந்து வாழ்ந்தார். இவருடைய நுண்மாண் நுழைபுலத்தை வியக்காத பேரறிஞர்கள் உலகில் இல்லை என்று சொல்லலாம். "இவருடைய பரந்த நூலறிவும் ஊடுருவிச் செல்லும் நுண்ணறிவும் இவருக்குக் கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையே பாலம் அமைக்கும் ஒப்புயவர்வற்ற திறமையை நல்கியுள்ளது" என்று ஆல்டுஸ் அக்ஸ்லி என்ற மேல்நாட்டு அறிஞர் கூறியுள்ளார். "இவரைக் கலை ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், பெரும்புலவர் என்ற இன்னோரன்ன வகையில் எவ்வாறு வருணித்தாலும், இவர் இவற்றிற்கும் மேம்பட்ட ஒருவராக, வகைப்படுத்த முடியாத குணங்கள் உடையவராக விளங்குகிறார்" என்று இரவிந்திரநாத் தாகூர் கூறியுள்ளார்.

*"திறமான புலமை யெனில் வெளிநாட்டோர்*
*அதை வணக்கம் செய்தல் வேண்டும்"*

என்ற பாரதியார் வாக்குக்கு எடுத்துக்காட்டாக இவர் நூல்கள் அமைந்துள்ளன. இவர் சாதனையைக் கண்டு தமிழர்கள் பெருமிதம் அடைவதோடு, இவர் நூல்களில் சிலவற்றையேனும் படித்துப் பயன் அடைவார்களாக!

**குறிப்பு:** டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்களின் முன்னோர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும், இலங்கை திரு. ச. அம்பிகைபாகன், பி.ஏ., அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து அவர் அனுமதி பெற்று எடுக்கப்பெற்றவை. அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஆனந்த குமாரசுவாமியைப்பற்றி அண்மையில் திரு. கே.சி. கமலையா அவர்களும், திரு. எஸ். சந்திரசேகர் அவர்களும் ஆங்கிலத்தில் நூல் வெளியிட்டுள்ளனர். திரு. கே. சி. கமலையா அவர்களின் 'ஆனந்த குமாரசாமியும் நடராச தத்துவமும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் 'ஆனந்த குமாரசுவாமி - கலை வரலாற்று ஆசிரியரும் தத்துவ ஆசிரியரும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் ஆங்கில இதழ் "சைவ சித்தாந்தா"வில் முறையே 7ஆம் தொகுதி 3ஆம் இதழிலும், 10ஆம் தொகுதி 2ஆம் இதழிலும் வந்துள்ளமை காண்க. மலேயாவில் உள்ள திரு. எஸ். துரைராச சிங்கம் என்பவர் "சர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் வாழ்க்கையும் நூல்களும்" என்பதுபற்றி ஒரு நூலும், திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்களைப் பற்றிப் பல நூல்களும் வெளியிட்டுச் சிறந்த பணியாற்றி வருகிறார்.

---

* நன்றி : 1. சித்தாந்தம், 1977 அக்டோபர் இதழ்
2. கொ.நீ. சிங்காரவேலு - சைவசித்தாந்தக் கட்டுரைகள், பக், 76-82.

## 2. சமயத்துறையில் இறங்கிய முதற்பொறியாளர்*

- சிவத்திரு சி.எஸ். குப்புராஜ், பி.இ.,

*முன்னாள் துணைத்தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.*

*15/8, 3வது பிரதான சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028.*

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் சமய ஆராய்ச்சியும் தமிழ் மொழி ஆராய்ச்சியும் செய்வதற்கு, தமிழ்ப் பண்டிதர்களும் வழக்குரைஞர்களுமே முன் வந்து பணி செய்தனர். அறிவியலாரும் பொறியாளர்களும், அது தமக்குரிய களம் அல்ல எனக் கருதி ஒதுங்கி நின்றனர்.

அந்தக் காலக்கட்டத்தில் ஒரு பொறியியல் வல்லுநர் இந்தத் துறையில் இறங்கி, அநேக சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்து வியத்தகு முடிவுகளை வெளியிட்டார். அவர்தான் பொறியாளர் பா.வே. மாணிக்க நாயக்கர்.

சமீப காலத்தில், பலப்பல பொறியாளர்கள் இத்துறையில் பணியாற்றுவதைக் காண்கிறோம். இவர்களுக்கெல்லாம் முன்னோடியும் வழிகாட்டியுமாக விளங்கியவர் பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்களாவார்.



சேலம் நகரினை அடுத்த பாகல்பட்டி என்னும் கிராமத்தில், 1871 ஆம் ஆண்டு அவ்வூர் மிட்டாதாரர் குடும்பத்திலே பிறந்தார் மாணிக்க நாயக்கர். தகப்பனார் வேங்கடசாமி நாயக்கர்; தாயார் முத்தம்மையார்.

இவர் பிறந்தது வேளாளர் குலமேயாயினும், இவரது முன்னோர்களில் ஒருவர் விஜய நகர சாம்ராஜ்யத்தில் சேனைத் தலைவராகப் பணியாற்றியமையினால் இவரது குடும்பத்திற்கு நாயக்கர் என்னும் பட்டம் கொடுக்கப் பட்டதாகத் தெரிகிறது.

சேலம் கல்லூரியில் இளங்கலை (எப்.ஏ.) வகுப்பில் தேறியபின், சென்னை பொறியியல் கல்லூரியில் சேர்ந்து 1896ஆம் ஆண்டு பி.இ. பட்டம் பெற்றார். இப்போது கிண்டியில் செயல்படும் பொறியியல் கல்லூரி, அக்காலத்தில் சேப்பாக்கத்தில் செயல்பட்டு வந்தது.

வகுப்பில் முதல் மாணவராகத் தேறி, பதின்மூன்று பரிசுகளையும் ஒரு தங்கப் பதக்கத்தினையும் பெற்றார்.

பொதுப்பணித்துறையில் உதவிப் பொறியாளராகப் பொறுப்பேற்று, வெகு விரைவாகப் பதவி உயர்வுகள் பெற்று மேற்பார்வைப் பொறியாளரானார். 1913ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று மான்செஸ்டர் பொறியியல் கல்லூரியில் Reinforced Cement Concrete வடிவமைப்பது குறித்து ஆராய்ச்சிகள் செய்தார். அப்போது தான் அத்துறை சோதனை நிலையில் இருந்தது.

இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தவுடன், பொறியியல் கல்லூரியில் பேராசிரியர் பணியினை ஏற்றார்.

மேற்பார்வைப் பொறியாளராகவும், பொறியியல் பேராசிரியராகவும் பணிபுரிந்த முதல் இந்தியர் இவரே. அதுவரையில் அப்பதவிகளில் எல்லாம் வெள்ளையரே இருந்தனர்.

இனி அவரது தமிழாராய்ச்சியினைப் பற்றிய ஒரு சில செய்திகளைக் காண்போம்.

1917ஆம் ஆண்டு "The Tamil alphabet and its Mystic Aspect" என்ற ஒரு ஆங்கில நூலினை எழுதினார். அதில் கூறப்படும் ஒரு கருத்து:

முளை எழுத்தென்றும் பிரணவ எழுத்தென்றும் கூறப்படுகின்ற குறில் உயிராகிய ஒகரம் ஏனைய தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் விடச்சிறப்பாகக் கருதுதற்குரியது. ஒகரம் பல்வேறு வகையில் உருமாறி அகர வெழுத்தாவதையும் பிறகு வேறு எழுத்துக்களாகி அடிப்படையான அடையாளங்களால் அமைந்த மூல மந்திரங்களைத் தோற்றுவிப்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.




ஒகரத்தை 180 டிகிரி சுழற்றினால் அகரக் குறியாக மாறுகிறது.

அகரத்தை, அ, உ, ம் எனும் முப்பகுதிகளாகப் பிரிக்கலாம்.

மெய்யெழுத்திற்கு இட்ட புள்ளி நீண்ட இலிங்க உருவினதாகக் காணப்படுகின்றது.




அகர உயிரில் மூன்று பகுதிகளைப் பிரித்தெடுத்தால் இலிங்க வடிவமும் உ, ம என்ற எழுத்துக்களும் தோன்றுகின்றன. உ, ம என்பது பார்வதியைக் குறிக்கும்.

அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களையும் தன்னிலடக்கிய ஒரெழுத்தாய் அகரம் விளங்குகின்றதைப் பார்க்கிறோம். இம் மூன்றெழுத்துக்களும் பிரணவமாகிய ஒகரத்தின் பகுதிகளாதலால் அகரம் பிரணவத்தின் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு நிற்கின்றது.

அகரத்திலிருந்து பெறப்பட்ட உகர மகரங்களாகிய எழுத்துக்களைப் பிரித்தெடுத்தபின் இலிங்க வடிவினதாகிய புள்ளி மிகுந்து நிற்கின்றது. இதை எடுத்து மகரத்தின் மேல் வைப்போமாயின் மகர ஒற்றுத் தோன்றுகின்றது. இதனால் மகரம் அல்லது மாயை சிவன் முன் ஆற்றலொடுங்கி அடங்கி விடுமென்பது காட்டப்படுகின்றது.



எழுத்துக்கள் எவ்வாறு மாறினும் இலிங்க வடிவமுடைய புள்ளி தனியே திரிபின்றி நிற்பதைக் காண்கிறோம். சிவன் அல்லது பதியில் மாறாமை, அழியாமை, தானாயிருக்கும் தன்மை, ஒன்றேயாகும் பண் ஆகியவை இதனால் குறிக்கப்படுகின்றன.

இவ்வாறே ஐந்து அகர எழுத்துக்களை, வெவ்வேறு விதமாக வெட்டியெடுத்து, சீரமைத்தால் பஞ்சாக்கர மந்திரமும் சடாச்சர மந்திரமும் உருவாகும் என்பதனைப் படம் போட்டுக் காட்டுகிறார்.



Drawing in Engineers language என்று கூறுவதுண்டு. புலவர்கள் சொற்களினால் கூற முயலும் கருத்தினைப் பொறியாளர்கள் படத்தின் மூலமாகத் தெரிவிப்பார்கள்.

ஒரு இயந்திரம் அமைக்கவோ, ஒரு கட்டடம் கட்டவோ அல்லது ஒரு அணை எழுப்பவோ வேண்டுமானால் அக்கருத்தினைச் சொற்களால் விவரிக்க இயலாது. படம் போட்டுக் காட்டினால்தான் முடியும். அதே முறையினை மாணிக்க நாயக்கரும் கையாளுகிறார்.

சிவவாக்கியர் எனும் சித்தர், நமசிவய எனும் அஞ்செழுத்துக்கு விளக்கம் கூறும் பாடலை இவர் படத்தினால் விளக்குகிறார்.




யோகப் பயிற்சியில், அடியிலிருந்து இடுப்புவரை 'ந' கார மெனப்படுகின்றது. இது நிலத்தைக் குறிக்கின்றது.

இடுப்பிலிருந்து நெஞ்சுவரை 'ம' காரம் நீரைக் குறிக்கின்றது.

நெஞ்சிலிருந்து நாடிவரை 'சி' காரம் தீயைக் குறிக்கின்றது.

நாடியிலிருந்து மூக்குவரை 'வ' காரம் காற்றைக் குறிக்கின்றது.

மூக்கிலிருந்து உச்சந்தலைவரை 'ய' காரம் வான் பகுதியைக் குறிக்கின்றது.

*"ந வ்விரண்டு காலதாய் நவின்ற ம வ் வயிறதாய்ச்*
*சி வ்விரண்டு தோளதாய்ச் சிறந்த வ வ்வு வாயதாய்*
*ய வ்விரண்டு கண்ணதாய் எழுந்துநின்ற நேர்மையிற்*
*செவ்வையொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே"*

என்பது சிவவாக்கியர் பாடல்.

இடுப்பிற்குக் கீழே உள்ள கால்கள் நிலத்தின் இறுகிய தன்மையுடையன. மேலே நெஞ்சுவரையிலுள்ள பகுதியில் நீர் மிகுந்து காணப்படுகின்றது. இதற்குமேல் கழுத்தளவு தீயின் தன்மை வாய்ந்தது. இங்கு உடலுக்கு வெப்பந்தரும் கருவிகள் இடம் பெற்றுள்ளன. இதற்குமேல் காற்றை உள்வாங்கி விடுகின்ற கருவிகள் அமைந்துள்ளன. யாவற்றிற்கும் மேலிருக்கின்ற மூளை 'ஆகாசம்' என்னும் வான் தன்மையுடையது. இவ்வமைப்பின் கருத்து உடலில் மட்டுமன்றி மற்றெல்லாவற்றிலும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு நாயக்கர் அளித்த நுட்பமான விளக்கங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவனவாகவுள்ளன.

பொறியியல் துறையிலும் அவர் பலப்பல வியத்தகு சாதனைகளைப் புரிந்துள்ளார்.

இத்தகைய நுண்ணறிவு படைத்த பொறியாளர், தமிழறிஞர், சமயஞானி அறுபது ஆண்டுகளே வாழ்ந்து, 1931ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

அவர் மறைந்த பிறகு, வழக்கம்போல், தமிழறிஞர்கள் ஒன்று கூடி, இரங்கல் கூட்டம் போட்டு, அவரைத் தமிழுலகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று ஆதங்கப்பட்டார்கள்.

இதுகுறித்து, தமிழ்த்தென்றல் திரு.வி.க. கூறுகிறார்:

"எஞ்சினியர் மாணிக்க நாயக்கர் கூர்த்த மதியினர்; பேர் அறிஞர் அவர் ஒரு பெரிய ஊற்று, அதினின்றும் புதுமைகள் சுரந்த வண்ணம் இருக்கும். நாயக்கர் ஆராய்ச்சிகள் தமிழின் தனிமையை நிலைபெறுத்துவன. அவ்வாராய்ச்சிகளில் மிக மிகச் சிலவே வெளிவந்தன. எல்லாம் வெளி வந்திருப்பின் சரித்திர உலகில் தமிழ்நாடு ஒரு தனி மதிப்புப் பெற்றிருக்கும். தமிழ் நாட்டின் தவக்குறை. மாணிக்க நாயக்கருடைய முழுமையான அறிவொளி உலகில் சுடர் விடாதவாறு ஒரு சிலர் அதனை மண் போட்டு மூடி மறைத்து விட்டனர்" என்று தமிழ்த் தென்றலும் ஆதங்கப்படுகிறார். "நமது மாணிக்கம் பிராமணரிடைத் தோன்றியிருந்தால் அதன் ஒளி வேறு விதமாகியிருக்கும்" என்று கூறி இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்தவர்களைச் சாடுகிறார்.

நாயக்கர் மறைந்து 66 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும்கூட அவரது ஆராய்ச்சிகள் முழுமையாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. வெளிவந்த மிகச்சில விவரங்களும் அநேகமாக மறக்கப்பட்டுவிட்டன. தமிழுலகம் அவரது படைப்புக்களை வெளிக்கொணர ஆவன செய்யுமென்று எதிர்பார்க்கலாமா?

---

நன்றி : சித்தாந்தம் 1997 டிசம்பர் இதழ், பக். 355-361. பொறியாளர் சி.எஸ். குப்புராஜ் - சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு, பக். 44-47.

# ३. ஞானியார் சுவாமிகள்*

– திரு.வி.க.

ஞானியார் சுவாமிகளின் முழுப்பெயர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் என்பது. சுவாமிகள் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடத்தின் தலைவராயிருந்தவர். அம்மடத்தின் கிளையுள்ள திருப்பாதிரிப்புலியூர் அறப்பள்ளியே சுவாமிகளின் உறைவிடமாயிருந்தது.

தமிழ்நாட்டில் எத்துணையோ மடங்கள் உள்ளன. அவைகள் என்னை ஈர்த்தனவா? இல்லை. அம்மடங்களுள் ஒன்றாகிய ஞானியார் மடம் மட்டும் என்னை ஈர்க்குமோ? பின்னை என்னை ஈர்த்தது எது? ஞானியார் சுவாமிகளின் பரந்த கலையொளி.

ஞானியார் சுவாமிகள் தென்மொழியில் பெரும்புலமை வாய்ந்தவர்; வடமொழியில் புலமையுடையவர். சுவாமிகட்கு ஆங்கிலமுந் தெரியும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சுவாமிகளிடத்தில் இயற்கைப் புலமை அமைந்திருந்தது.

சுவாமிகளை யான் முதல் முதல் 1913-ம் ஆண்டிலே வேலூரிலே சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா மேடையிலே கண்டேன். அந்நாள் நன்னாள்.

ஆறுமுக நாவலரை யான் கண்டதில்லை. அவரது நாவன்மையைப் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இளமையில் யான் கண்ட நாவலர் கதிரைவேற் பிள்ளையே. ஞானியார் சுவாமிகள் பேச்சைக் கேட்ட பின்னைத் தமிழ்நாட்டில் மற்றுமொரு நாவலர் இருத்தலைக் கண்டேன். தமிழ்நாட்டிலும் கிளாட்ஸன்கள் சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது.

ஞானியார் சுவாமிகள் அறப்பள்ளித் தலைமையேற்று அரை நூறாண்டு ஆயபோது, அப்பள்ளிச் சார்பில் பொன் விழா (1939) கொண்டாடப்பட்டது. அவ்விழா மலரில் என் சிறு மொழியும் இடம் பெற்றது. அம்மொழியில் இரண்டொரு பகுதியை அகழ்ந்து ஈண்டுத் தருகிறேன். அஃது ஈண்டைக்குப் பொருத்தமாகும்.

'............ முருகன் சேவடி வருடி யுருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்குஞ் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக் கதிர் விரிக்குந் திருமேனியும், 'சண்முகா - சண்முகா' என்று நீறளிக்கும் நீண்ட கையுங் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு, என்னுள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற்கிறது. அஃது எவர் உள்ளத்தையுங் கவரும்; எவர்க்கும் எளிதில் இன்பூட்டும்......

. . . . . . ஞானியார் சுவாமிகள் மாணாக்கருக்குப் பாடஞ் சொல்லும்போதும், சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் தொல்காப்பியனாராகவும், நக்கீரராகவும், திருவள்ளுவராகவும், இளங்கோ அடிகளாகவும், கச்சியப்பராகவும், கம்பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீலகண்டராகவும், சிவஞான முனிவராகவும், பிறராகவும் முறை முறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச்

சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக் கேட்டுப் புலவரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றோ?

. . . . . சுவாமிகளின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல்மடைத் திறப்புக்கா - வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுதலுக்கா - பெரும்புயலுக்கா - ஓயா மழைக்கா? எதற்கு - எதற்கு ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப.

திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருந்து அடியவர்க்கருள்புரியும் கோவலடிகள் கருமை பூத்த ஒரு பொறுமை மலை. அம்மலையினுச்சியில் - மூளையில் - கலைமேகங்கள் பொழிந்த அறிவு மழைநீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடில்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருட்கள் மிகுந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக்காய்ப் பரவிப் பரந்து, அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும். நீர் பருகப் போந்த புலி, கரடி, யானை, மான், பசு முதலியன அருவி முழக்கிலெழும் இன்னொலி கேட்டு அதில் ஈடுபட்டுத் தன் தன் பகைமை மறந்து மயங்கி நிற்கும். கலை நீராடுவோர் வெள்ளத்திலுறும் மின்விசையால் பிணி நீங்கப் பெறுவர். ஞானியார் சுவாமிகள் பேச்சால் விளைந்த நலன் அளப்பரிது....'

சுவாமிகள் முதன்முறை தென்னாடு நோக்கியபோதும், சென்னை போந்தபோதும் என் பத்திரிகைகள் முன்னணி வேலைகள் செய்தன. அடிகள் தென்னாடு சென்றபோது 'தேசபக்தன்' தொண்டாற்றினான்; சென்னை சேர்ந்தபோது 'நவசக்தி' பணி செய்தாள்.

தமிழ்நாட்டிலே பலவிடங்களிலே பலதிற விழாக்கள் ஞானியார் தலைமையிலே நடைபெறும். அவ்விழாக்களில் என் ஒலி பெறாதன மிகச் சிலவாயிருக்கும். சுவாமிகள் தலைமையில் யான் பேசிய பொருள் வகைகள் பலதிறம். அவைகளையெல்லாம் சுவாமிகளின் முடிவுரை அணி செய்யும்.

ஞானியார் இலௌகிகத்தில் வல்லவராம். ஆனால் சுவாமிகள் என்னிடம் இலௌகிகம் பேசியதே இல்லை; பெரிதும் பொதுக்காரியங்களைப் பற்றியே பேசுவர். சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபைக்கு இரண்டாம் முறை சுவாமிகள் எழுந்தருளியபோது சுவாமிகளும் யானும் ஒய்வாக உரையாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது சுவாமிகள், 'நீங்கள் ஏன் செல்வரை அருவருக்கிறீர்' என்று கேட்டார். 'யான் செல்வரை அருவருப்பதில்லை; ஒரேயிடம் செல்வம் திரள்வதை அருவருக்கிறேன்; செல்வரிடம் பொருளுக்குச் செல்வதில் எனக்கு அருவருப்புண்டு' என்றேன்.

யான் இளமைதொட்டு ஞானியார் சுவாமிகளை வணங்கி வந்தேன். ஒருவரை ஒருவர் வணங்குதல் கூடாதென்று சிலர் பேசுவர். அவருள் ஒருவர் 'நீங்கள் ஏன் ஞானியாரை மட்டும் வணங்குகிறீர்' என்று கேட்டார். அதற்கு 'ஞானியாரை வணங்கும் பழக்கம் எனக்கு இன்று ஏற்பட்டதன்று. அஃது ஏற்பட்டு நீண்ட காலமாயிற்று. அதை வலிந்து நிறுத்தப் புகுவது ஆணவமாகும்' என்று பதிலிறுத்தேன்.

ஞானியார் சுவாமிகள் முதல் ஆண்டு விழா கடந்த (1942) தைப்பூசத்தில் இரண்டு நாள் நடைபெற்றது. முதல்நாள் சுவாமிகளின் படத்திறப்பு என்னால் நிகழ்த்தப்பட்டது. இரண்டாம் நாளும் யான் பேசுதல் நேர்ந்தது. அப்பொழுது ஓரிடத்தில் 'யான் ஒருவரை வணங்கி வந்தேன். அவரும் மறைந்தார்...' என்று குறிப்பிட்டேன்.

ஞானியாரின் மடத் தலைமையும், சிவிகை ஊர்தலும், இன்ன பிறவும் சுவாமிகளை வெளியூர் செல்லாதவாறு தகைந்து வந்தன. அவைகள் சுவாமிகளைச் சிறைப்படுத்தின என்றே சொல்வேன். இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகள் சுவாமிகளின் தமிழைப் பருக எவ்வளவு விழைந்தன என்பதை யான் அறிவேன்.

1941-ம் ஆண்டு அன்பர் இராமசாமி நாயுடு என்பவர் தென்னாப்பிரிக்காவினின்றுஞ் சென்னை போந்தனர். அவர் சுவாமிகளையும் என்னையும் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்துச் செல்ல விரும்பினர். சுவாமிகளைக் காண நாயுடுவும் யானும் காஞ்சி சென்றோம்; சுவாமிகளைக் கண்டோம். நாயுடு சுவாமிகளிடம் தமது கருத்தைத் தெரிவித்தனர். 'எனக்குள்ள தடைகளை முதலியார் சொல்வர்' என்ற பதில் சுவாமிகளிடத்திருந்து நகைப்புடன் பிறந்தது. காஞ்சியில் கண்ட அந்நகைமுகக் காட்சியே இறுதியதாயிற்று.

* நன்றி : திரு.வி.கலியாணசுந்தரனார் - திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பூம்புகார் பதிப்பகம். பக். 131-134.

# 4. பாவலர் போற்றும் நாவலர் திலகம்*

- தெய்வத்திரு ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
*முன்னாள் செயலாளர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.*

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திருக்கோவலூர் ஆதீனத்துப் பெருந்தவத்திரு அரசு கட்டிலேறி, ஞானச்செங்கோலோச்சித், தமது சீடப்பெருங்குடி மக்களைச் சிவநெறிக்கண் நிறுத்தி, அவர்கட்கு நல்வாழ்வை அளித்து, ஆறெழுத் தருமொழியாம் சீருடைப் பெருவாளேந்தித், திருநீற்றுக் கவசம் பூண்டு, மாயப்படை வாராமற் காத்துத் தமிழ் மண்டிலமெங்கணும் தாவிப்பரக்கும் பெரும்புகழுடையராகத் திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருப்பது நண்பர்கள் அறிந்ததொன்று. சுவாமிகள் இவ்வாதீனத் தலைமை பூண்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா திருப்பாதிரிப்புலியூரில் 1939 வருடம் நவம்பர் மாதம் 18, 19-ம் தேதிகளில் கொண்டாடப்படும். அவ்விழாவிற் கலந்து கொண்டு நமது சமாஜம் ஒரு வணக்கப்பத்திரம் வாசித்தளிக்கும். அக்காலை நமது சமாஜத்தினர் பெருந்திரளாகக் கூடியிருந்து சுவாமிகளுடைய பொன்மொழிகளைச் செவிமடுத்துச் சுவாமிகள் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பேரறிஞர் பலரும் பல கழகப் பிரதிநிதிகளும் வந்து நம்மோடு கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவைக் கொண்டாடும் வகைகள் பலவற்றுள் ஒன்று சுவாமிகளுடைய குணாதிசயங்களைக் காய்தல் உவத்தல் கூட்டல் குறைத்தலின்றி உள்ளவாறே தெரிவித்தல் இம்முறையில் யான் அறிந்தவற்றைச் சுருங்கக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம். இக்கட்டுரையைக் கண்ணுறும் அன்பர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்து நன்றி செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

1. சுவாமிகள் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் சிறந்த புலமையுடையவர்கள் என்பதை அனைவரும் அறிவர். தமது சொற்பொழிவுகளில் சுவாமிகள் கூறும் அடிப்படையான கொள்கைகட்கு வேதம், சிவாகமம், புராணம், திருமுறை, சித்தாந்த சாத்திரம் முதலியவற்றிலிருந்து தெளிவான ஆதாரங்கள் காட்டுவதை அறிஞர்கள் குறிப்பெடுத்துக்கொள்ளும் காட்சியை நம்மிற்பலர் பலமுறை கண்டிருக்கிறோம். ஏனையோர் தங்கள் உபந்நியாசங்களில் பிரமாணங்களைக் கூறும்போது தங்கட்கு அவற்றின் பொருள் விளங்குவதாகப் புலப்படுத்துவதில்லை; கேட்போரும் பலர் உபந்நியாசங்களில் வடமொழிப் பிரமாணங்களும் பிறவும் கிளிப்பிள்ளை வாக்காகவே உபந்நியாசகர்களால் கூறப்படுகின்றனவோ என்று ஐயுற நேரிடுகிறது, சுவாமிகளுடைய உபந்நியாசங்களில் இவ்வித சந்தேகம் எஞ்ஞான்றும் எழுந்ததில்லை. பற்பல உபநிடத மேற்கோள்களைப் பதம் பதமாகப் பிரித்துப் பொருள் கூறுவதோடமையாது அவற்றிற் கூறப்படும் உண்மைகள் புராணங்களில் எவ்வாறு உபப்பிரமாணம் செய்யப்பட்டுள்ளன வென்பதையும் தேவார ஆசிரியர்களும் சந்தான குரவர்களும் அவைகளை எவ்வாறு அழகுபட விவரித்துள்ளார்கள் என்பதையும் சுவாமிகள் விவரிப்பதைக் கேட்கும் அன்பர்கள் "ஈதன்றோ செவிச்செல்வம், இத்தகைய சொற்பொழிவுகளை நமது செவிகள் கேட்கவும் பெறின் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று தமது நெஞ்சுக் குரைப்பார்கள். சுவாமிகள் வேத சிவாகம புராண வாக்கியங்களை விளக்குங்கால் வேதம்போம் வாயார் அங்காந்த வாயாராகிப் பிரமித்துத் தம்பித்திருக்கும் காட்சியையும் நம்மிற் சிலர் காணும்பேறு பெற்றுளோம்.

2. சுவாமிகள் மிகத்தெளிவாகப் பேசும் பேராற்றலுடையவர்களென்பதை மகளிரும் சிறாரும் கூறுவர். முப்பொருளுண்மை, அத்துவித இலக்கணம் போன்ற கடினமான பொருள்களை விளக்குங்கால் இருப்புக் கடலையை மெல்வது போன்ற துன்பமான முறையை அறவே விடுத்து மிகச்சுலபமான சொற்களால் பல சாதாரண உவமைகளின் துணைகொண்டு எளிய நடையில், பொருளின் நுட்பம், புதைந்த கருத்து, தருக்கமுறை முதலியவற்றைச்சுவாமிகள் விளக்கும்போது இளம்பிள்ளைகளும் பெண்மக்களும் கண்சம்பாது முகஞ்சுளியாது ஒளிவீசுங்கண்களோடும் மலர்ந்த முகங்களோடும் செவிவாயாகச் சொல்லமிர்தம் பருகுங் காட்சியைக் கண்காள் காண்மின்களோ! வேறு சிலர் உபந்நியாசங்களில் நுவலப்படும்பொருளை அறியமாட்டாது இடர்ப்பட்டுக்கேட்போர் பலர் தம்முள் வேறு பொருள்களைப்பற்றிப் பேசிச் சந்தடிசெய்து கேட்கும் சிலரையும் கேட்கவொட்டாது தடை செய்யும் காட்சியைக் கண்காள் காணற்க! "அவையறிந் துரைத்தல்" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் "ஒளியார்முன் ஒள்ளியராதல் வெளியார்முன் வான்சுதை வண்ணங்கொளல்" என்னுங்குறளுக்கு இலக்கியமாயுள்ளவர்கள் சுவாமிகளே யென்பதைக் காண்டல் கருதல் உரையென்னும் மூவகைப் பிரமாணத்துள் காட்சியளவிலேயே அறியக் கூடுமென்பதை வற்புறுத்தவே காட்சிகள் சிலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறினேன்; பின்னும் கூறுவேன்.

3. சுவாமிகள் தமிழில் நிரம்பிய பற்றுடையவர்கள் என்பதை யறியாதார் யாரேவுளர்? திருமுறைகளிலும் கந்தரநுபூதி போன்ற பனுவல்களிலும் சிவஞானச் செல்வர்கள் திருவாக்கிலுமுள்ள சொல்லாழம் பொருளாழம் சொன்னயம் பொருணயம் முதலியவற்றைச் சுவாமிகளைப்போல வேறு

யாவரே எடுத்துக் கூறுவர்? ஒரு சொல்லின் முழுப் பொருளையும் முழு நயத்தையுமறிய ஒருநாள் போதாதே! சுவாமிகள் பெரிய புராணத்திற் சில செய்யுள்களையும் கந்தரநுபூதிப் பாக்களையும் பாடமாகக் கூறக்கேட்டோர் தாம் "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது கடலளவு" என்றல்லது வேறென்ன கூறுவர்? "தம்மினுங்கற்றாரை நோக்கிக் கருத்தழிக எற்றே இவர்க்கு நாம் என்று" எனத் தமது மனத்துக் குரைத்தலைத் தவிர சுவாமிகளைக்கண்ட புலவர் வேறென் செயவல்லார்? கண்ணப்ப நாயனார் புராணப்பிரசங்கத்தில் நாயனார்க்குத் திண்ணன் என்ற பிள்ளைத் திருநாமம் ஏற்பட்டதை விளக்கித் தமிழ்ப்பற்றை யூட்டும்போது சுவாமிகள் தமிழார்வத்தைக்கண்டு மகிழாதார் யாவர்? 'பேபி' யென்றும் 'ரோஸ்' என்றும் அறியாது பெயரிட்ட தாய் தந்தையர் வெட்கித் தலைகுனிவதைக் காணாதார் யாவர்?

4. சுவாமிகள் நுண்ணிய பொருள்களை விளக்குமிடத்தும் பிறாண்டும் எளிய உவமைகளைத் துணையாகக் கொள்ளும் பேராற்றலுடையவர்கள். சிலர் எளிய பொருள்களை விளக்கப் புகுந்துழி சிக்கலான உவமைகளை எடுத்துக்காட்ட முயன்று இடர்ப்படுவர். கண்ட உருவத்தைக் கொண்டு காணாத கடவுளை யறிகிறவன் புத்திசாலியென்று சுவாமிகள் கூறுவதுண்டு. இதற்குவமையாகப் பள்ளிக்கூடத்தில் இரண்டு பிள்ளைகளும் பழகி மாணவன் "ட" என்ற எழுத்தைப் பார்த்ததும் "ட" என்ற ஒலியை உச்சரிப்பதையும், பழகாத புதிய மாணவன் ஒருவன் அவ்வொலியை உச்சரிக்கமாட்டாது அவ்வெழுத்தைப் பார்த்து அது ஒருகோடு என்பதையும் எடுத்துக் காட்டிக் கோடு என்று எண்ணுவது பொய்யல்ல. ஆனால் தாழ்ந்த அறிவுநிலை யென்றும் கண்ட எழுத்தைக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாது காதுக்கே புலப்படும் ஒலியை யறிவதே உயர்ந்த அறிவுநிலையென்றும், இவ்வாறே திருக்கோயிலிலும் உருவங்களைக் கல்லென்றும் செம்பென்றும் நினைப்பது தாழ்ந்த நிலையென்றும் கடவுளென்று தொழுவது உயர்ந்த நிலையென்றும் சுவாமிகள் மிக்த் திறமையாக விளக்குவதைக் கேட்பவர் உள்ளம் கேட்குந்தோறும் பூரிக்கும். மும்மலங்களினுண்மைக்கு "அவன் ஆணவம் பிடித்துத்திரிகிறான்", "அவன் கருமம் அவனை விடுகிறதா", "அவன் மாயையிலே மூழ்கிக் கிடக்கிறான்" என்று தமிழ்நாட்டுக் கிழவிகளும் கூறும் பழக்கத்தைச் சுவாமிகள் சுட்டிக் காட்டுவதை நாம் பன்முறை கேட்டின்புற்றுள்ளோம்.

5. சுவாமிகள் உபந்நியாசங்களில் அவ்வப்போது நகைச்சுவை பொருந்தப் பேசுவதையும் நாம் மறத்தலாகாது. சிலர் நகைச்சுவைக்கென்றே முயன்றுவேண்டாத கிளைக்கதைகளை வருவித்துக்கொண்டு வீணாகப் பொழுது போகிறதே யென்று அறிஞர்கள் நினைக்கும்படி செய்வதுண்டு. சுவாமிகளுடைய முறை அத்தகையதல்ல. தாழ்ந்த அருவருப்பான பொருள்களை அறவே விடுத்துக், கற்பூரத்தில் தீப்பற்றுவதுபோல் புத்தி கூர்மை மிக்கவர்கள் சடுதியிற்பற்றி இன்புறக்கூடியவைகளே சுவாமிகளுடைய நகைச்சுவைமொழிகள். மிளிரும். இவற்றைக் கோவையாக்கி ஒரு நூல் வெளியிடலாம். தாலிபுலாக நியாயமாக ஈண்டு ஒன்றே கூற விரும்புகிறேன். அஷ்டபுஷ்பங்களுள் ஒன்று பாதிரி. இதில் சிவப்புப்பாதிரி, வெள்ளைப்பாதிரி என இருவகை யுண்டு. சிவப்புப் பாதிரியே பூசைக்குகந்தது; வெள்ளைப்பாதிரி நீக்கப்படுவது. இதைக் குறிக்குமிடத்து "வெள்ளைப்பாதிரி ஒவ்வாதது.... வேறொரு பொருளிலும்" என்று சுவாமிகள் கூறியபோது குழுமியிருந்த கூர்த்தமதியினர் புன்னகை செய்தனர்; ஏனையோர் புன்னகையின் காரணத்தை யறியாது விழித்தனர். வெள்ளைப்பாதிரிப் புஷ்பமும் ஆகாத வஸ்து, நமது சமயத்தைக் குறைகூறி ஏமாற்றித் தாழ்ந்த வகுப்பினர்களைத் தனது சமயத்துக்கு ஈர்த்துச் செல்லும் வெள்ளைப்பாதிரியும் (வெள்ளைக்காரப்பாதிரியார்) ஆகாது என்றுணர்ந்தவரே புன்னகை செய்தவராவார்.

6. இவ்வளவில் சுவாமிகளுடைய உபந்நியாசங்களின் தன்மை முதலியவற்றைச் சுருக்கிக் கொண்ட இனிச் சுவாமிகள் தமது சீடர்களோடும் ஏனைய அன்பர்களோடும் அளவளாவி நடந்து கொள்ளும் முறைகள் சிலவற்றைக் குறிக்க விரும்புகிறேன். முதன்முதலாவதாக நாம் கண்டு வியப்புறக்கூடியது சுவாமிகளுடைய ஞாபகசக்தி. உபநிடதங்களையும் தோத்திர சாத்திரப் பாடல்களையும் ஞாபகம் வைத்திருப்பதே நம்மிற் பலருக்கு அசாத்தியமான காரியம். அவற்றோடு ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிலை விவரங்களையும் நினைவிலிருத்தி அவரவரோடு அளவளாவுங்கால் அவற்றைப்பற்றி விசாரிக்கும்போதும் சுவாமிகள் இனிய சொற்களால் மிகுந்த விநயத்தோடும் பரிவோடும் அவரவர்கள் சுகதுக்கங்களில் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டும்போதும் கேட்போர் மனங்குளிர்ந்து உவகை யெய்துவர். "சுவாமி குழந்தைபோலப் பேசும்" என்று கூறாத கிழவியுமில்லை, குமரியுமில்லை. "சொல்லின் செல்வன்" என்று மேடை மீதேறிப் பிரசங்கம் செய்யும் ஆற்றல் மிக்கவர்களைப் புகழ்வதுண்டு. மேடைமீதிலும், மேடை விட்டிழிந்த பின்னும், மேடை மீதேறும் வரையிலும் எஞ்ஞான்றும் இன்சொற் பகர்ந்து செஞ்சொற்பெருக்கி வன்சொற்கடிந்து பொன்சொல் வழங்கும் சுவாமிகளுக்கே "சொல்லின் செல்வன்" என்ற பட்டம் பொருந்தும்.

7. சுவாமிகள் சாந்தம், பொறை, வெகுளாமை முதலிய நற்குணங்கள் நிறைந்த சத்துவ குணக்குன்றெனக் கூறல் மிகையாகாது. "யாகாவா ராயினு நா காக்க" என்ற முதுமொழியை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் உயர்வு சுவாமிகட்கேயுரித்து. சுவாமிகளிடம் உபகாரம் பெற்று வாழ்ந்தவர்கள் தங்கள் தீவினைவசப்பட்டு நன்றியை மறந்து மறம் செய்து தவறிழைத்துப் பின்னர் அரச தண்டத்துக் குட்பட்டுச் சரணாகதியென வந்த காலத்து நமது சுவாமிகள் தலைநாளிற்காட்டிய அன்புடனேயே அவர்களை ஏற்று மன்னித்த தெய்வச் செயல்களைப் புலிசைவாசிகளும் வேறு பல நண்பர்களும் நன்கறிவர். குறளர் ஒருவர் "கைதவமறியாச் செய்தவமுடையோய் நினது கடிதங்கண்டோம்" எனத் தொடங்கும் குறும்புக் கடிதமெழுதியதற்கு வெகுளாது அவருடனிருந்து ஒரு மகாநாட்டைத் தலைமை வகித்துச் செம்மையாக நடத்திக் கொடுத்துப் பிறகு பத்தாண்டுகள் கழிந்த பின்னர் அன்னார் ஒரு கழகத்துக்குத் தீங்கிழைப்பதைத் தவிர்க்கவேண்டி இச்செய்தியை வெளியிட்டு அன்னாருடைய உண்மை நிலையைப் பலர் அறியும்படி வெளிப்படுத்தியதைக் கண்டு அன்பரனைவரும் வியப்பெய்தினர். 1927 வருடம் சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் விசேட மகா நாடொன்றில் சுவாமிகளின் தலைமையின் கீழ்ச் சொற்பொழிவாற்றிய ஹைகோர்ட்டு ஜட்ஜ் ராமேசம் அவர்கள் தமது சொற்பொழிவில் சுவாமிகள் திருவதனத்தில் சாந்தம் நிறைந்த பொலிவு காணப்படுகிறதென்று வாயாரப் புகழ்ந்து கூறியதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

8. சுவாமிகள் இக்காலத்திய உலகப்போக்கை நன்கறிந்து அதற்கேற்பப் பிறவி மக்களோடு ஒழுகும் பேராற்றலுடையவர்கள். இக்காலத்திய துறவிகளில் இருவகையினரை எளிதிற்காணலாம். பலர் நீறில்லாப்பாழ் நெற்றியராய் நாடோறும் முகக்ஷவரம்செய்த பொலிவுடையராய் உட்சட்டை மேற்சட்டை காற்சட்டை உடற்சட்டை மேற்போர்வை முதலிய ஆடைப்பெருக்குடையராய்ச் சமயப்பற்றை மட்டும்விட்டு ஏனையபற்றுக்களை விடாதவராய்க் காணப்படுகின்றனர்; வேறு சிலர் ஜோசியம் சொல்லுதல், மருந்து தருதல், மந்திரித்தல் முதலிய பல தொழில்கள் செய்து செல்வர்களை யடுத்து அவர்களுடைய பரிவார நிழலில் வாழ்கின்றனர். வேறு பல வகையான ஒழுக்கமுடைய கல்லாடை புனைந்த கள்வர்களுமுண்டு. இவர்களெல்லாம் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவோராகத் தங்களைக் கூறிக்கொள்வதுண்டு. அறிவு படைத்த உலகம் இவர்கள் ஒழுக்கத்தைத் துரும்பாக மதிக்கும். சுவாமிகள் இத்தகைய துறவிகளை நோக்க வேறொரு பிறவி, வேறோர் உலகத்தவர் என்றே கூறல்வேண்டும். இவ்விருபதாம் நூற்றாண்டில் காலம் தாழ்க்காது காரியங்களைச் செய்யும்

கொள்கை வேரூன்றி வருகிறது. நமது சுவாமிகள் குறித்த கால வெல்லைகளைப் பாராட்டி நடக்கும் நவநாகரிகம் நிரம்பப்பெற்றவர்கள். தங்களுடைய சமய ஒழுக்கத்துக்கும் துறவொழுக்கத்துக்கும் இன்றியமையாதனவற்றை ஒரு சிறிதும் நெகிழவிடாது ஏனைய வழிகளில் அன்பர்கள் விண்ணப்பத்துக் கிணங்கி அவர்களை மகிழ்வித்துத் தாமும் மகிழும் பெருமை வாய்ந்தவர்கள். சில அறிஞர்களைக் கழகங்கள் அழைப்பதென்றால் மிகுந்த பணச்செலவும் உடலூழியமும் வாய்ந்த ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். சுவாமிகள் அவ்வாறின்றி அன்பர்கட்கெளியராக விரும்பிப் போந்து தொண்டாற்றி ஆசீர்வதிப்பதைத் தமிழ்நாடு நன்கறியும். தங்கள் திருமடத்தில் அன்பர்களையும் காணவரும் பேரறிஞர்களையும் ஆரவாரமின்றி உள்ளன்போடு சுவாமிகள் உபசரிப்பதைக் கண்டு இல்லறத்தார் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்.

9. சுவாமிகள் தம்மை யடைந்த இளைஞர்கட்குக் கல்வி புகட்டி அவர்களை நல்வழிப்படுத்தித் தகுந்த உத்தியோகங்களில் தக்கார் துணைகொண்டு அவர்களை அமர்த்தி அவர்களுடைய நல்வாழ்க்கையைக் கண்டு இன்புறுவதை நம்மிற் பலரறிவர். சில பெரும்புலவர்கள் தம்மை யடைந்தவரை ஓம்பாது அவர்களைத் தங்கள் சாசுவத அடிமைகளாகப் பாவித்துத் தங்கள் புத்தக வேலை, அச்சு வேலை ஆராய்ச்சி வேலை முதலியவைகளில் அவர்களைச் சிற்றாள்களாகப் பணிவித்து வேலைக்கேற்ற ஊதியமோ புகழ்ச் சொல்லோ நன்றியோ செலுத்தாத வன்கண்ணரா்க வெறுக்கப்படுவதையும் நாமறிவோம். சுவாமிகளுடைய உதவியால் கல்வி பெற்றவர்களையும் வேலையி லமர்ந்தவர்களையும் இத் தமிழ்நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் காணலாகும். மந்திரி முதல் மந்தமதி யீறாகவும் லக்ஷாதிபதி முதல் பிக்ஷாதிபதியீறாகவும் உள்ள பல திறப்பட்ட பலதரமுடைய மக்களோடும் பழகி அவர்கள் நன் மதிப்பைப் பெற்றுத் தம்மையடைந்தவர்கட்கு உபகாரம் செய்யும் வழி அவர்கள் நட்பையும் தமது செல்வாக்கையும் பயன்படுத்திப் புகழ் கொள்ளும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகச் சுவாமிகள் திகழ்கின்றார்கள்.

10. சுவாமிகள் தம்மையடைந்து வேண்டுவார் வேண்டுவதே ஈயும் கொள்கையுடைவர்கள். விரும்பிக் கேட்போர் வசதி ஒன்றையே நோக்கித் தங்கட்கு ஏற்படும் சிரமத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது கேட்போர் விண்ணப்பத்துக் கிணங்குவ தொன்றையே சுவாமிகளுடைய பெருங்கருணை யறியுமல்லது பிறிதொன்றில்லை. மிருகவைத்திய சாலையிற் பணிபுரியும் நண்பர் ஒருவர் ஒரு சிறு நூலைப் பாடங்கேட்க விரும்பி நண்பகல் பதினெட்டு நாழிகையே தமக்கு வசதியான நேரமென்று தெரிவிக்க, அவருடைய வேண்டுகோளுக்கிரங்கி அவருடைய அறிவு நிலைக்கேற்ற முறையில் அச்சிறு நூலிலுள்ள செம்பொருள்கள் அனைத்தையும் பாடமாகச் சொல்லி முடித்து அவர்களைச் சுவாமிகள் ஆசீர்வதித்தார்கள். இவரைப்போல வேறு நூல்களைப் பாடங்கேட்டவர்கள் ஆயிரக்கணக்கிலடங்காதவர்கள். எவ்வித கைம்மாறுமின்றிக் கேட்போர் உயிர் நலமொன்றையே கருதித் தமது உயர்ந்த அறிவுநிலையிலிருந்து பல படிகளிறங்கிக் கேட்போர் நிலைக்கேற்ற சொற்கள், பொருள்கள், முறைகள் முதலியவற்றைக் கருணையோடு கைக்கொண்டு அவர்கட்குப் பாடஞ்சொல்லும் செயல் இறைவனது தடத்த இலக்கணத்தை நினைவூட்டுகின்றது.

சுவாமிகளுடைய குணாதிசயங்களைப் புகழ்வதற்கு என் போலியரால் இயலாது. இயன்றவரை சிற்சில கூறினேன். வேறு பல புலவர் பெருமக்கள் விரிவாக எழுதவும் பேசவும் கூடுமாதலின் இம்மட்டில் அமைகின்றேன். பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிக்கக் கருதும் பூனையின் ஆசை போன்றதே என்னை எழுதத் தூண்டியது. ....

---

நன்றி : சித்தாந்தம் 1939 இதழ், பக். 504-513.

# 5. நெடும்புகழ் அடிகளாரும் தொடர்ந்துயர் தமிழ்த்தொண்டும்

- கவிஞர் முனைவர் மலையமான்
டாக்டர் ரங்கா தெரு, சென்னை - 600 018.

உண்மையான துறவிகள் உயர்ந்தவர்கள். மனத்தால் மதிக்கத்தக்கவர்கள். அவர்களால் சமுதாயம் பயன் அடைகின்றது. மானிடம் முன்னேறுகிறது. மேலை நாடுகளிலும் சமயத் துறவிகள் வாழ்ந்தார்கள்/வாழ்கின்றார்கள். அவர்கள் சமயப் பணிக்கே தம்மை முழுமையாக ஈகம் செய்தவர்கள். ஆனால் தமிழகத் துறவிகள் சமயத்தோடு, தாய்மொழித் தமிழையும் வளர்த்தார்கள்/வளர்க்கிறார்கள். இது தனிப்பெரும் சிறப்புக்கு உரியது. மேலை நாட்டுச் சமயத் துறவிகளில் சிலர் இங்குச் சமயப்பணியுடன் தமிழ்த்தொண்டும் புரிந்தார்கள் எ.டு.: கால்டுவெல், போப், பெஸ்கி. இது, மற்றவரையும் தன்பால் ஈர்க்கும் தமிழின் தனித்த ஆற்றலை அறிவிக்கின்றது.

அப்பர், சம்பந்தர் முதலியோர் சைவத்தையும் தமிழையும் ஓம்பினார்கள். பின்வந்த குமரகுருபரர், சிவப்பிரகாசர், இராமலிங்க அடிகள், வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள், குன்றக்குடி அடிகளார் முதலியோரும் முன்னோரின் அடிச்சுவட்டில் நடை பயின்றார்கள். தொண்டுக் கையால், தாய்மொழிக்குப் பெருமை மணிமுடி சூட்டினார்கள். தம் பாடல்களாலும், செயல்முறைகளாலும் தமிழின் உயர்வை எடுத்துக் காட்டினார்கள்.

ஞானியாரடிகள் அண்மைக் காலத்தில் வாழ்ந்த நெடும்புகழ் துறவி. வான் புகழ் தமிழை வளர்த்த துறவி. நாளும் வேளைதோறும் தமிழ் மெலிந்துவரும் இன்றைய நிலையில், அருந்தமிழ் வளர்க்கப் பெரும்பாடுபட்ட அடிகளாரை - அவர் ஆற்றிய தொண்டை நினைத்துப் பார்ப்பது, காலத்தின் தேவையாகும். இளைத்த உள்ளங்களுக்கு ஊட்டம் தரும் உன்னத கடமையாகும்.

அடிகளாரின் தமிழ்த்தொண்டு, ஆறு முக நிலையில் அமைத்தது. அவை 1. பாடம் சொல்லுதல் 2. சொற்பொழிவாற்றுதல் 3. தமிழ்க் கல்லூரி/சங்கம் நிறுவுதல் 4. தமிழ்த் தொண்டர்களைப் பாராட்டுதல் 5. அறிவுறுத்தல் 6. நூலியற்றல் என்பவை.

**1. பாடம் சொல்லுதல்**

ஆசிரியப்பணி அரும்பெறல் சிறப்புக்குரியது. புகட்டும் கல்வி மூலம், ஒருவனைச் சிந்தனையாளராக மாற்றக் கூடியது. இளம் உள்ளங்கள் பின்பற்றக் கூடிய வழியைக் காட்டக்கூடியது. மாணவக் கப்பல்களின் கலங்கரை விளக்கமாக இலங்கக்கூடியது. இத்தகைய புத்தொளி பாய்ச்சக்கூடிய ஆசிரியப் பணியை அடிகளார், வாழ்வின் முடிவுவரை தொடர்ந்து புரிந்தார். மாணவரின் மன இருளை மாற்றினார். அவர்தம் செவிகளில் தமிழ்த்தேனை ஊற்றினார். நிலைத்த பலன்தரும் பெரும்பணி ஆற்றினார்.

அப்போது சிலர் தமிழ்ப்புலவர் படிப்புப் பெற விரும்பினார்கள். ஆனால் அவர்களை ஏழ்மை நெடுஞ்சுவர்கள் தடுத்தன. இதனை அடிகளார் உணர்ந்தார். அவர்களை அன்போடு அழைத்தார்.

அவரே பாடம் கற்பித்தார். பல்கலைக் கழகத் தேர்வு எழுத முடியாமல் நல்லோர் சிலர் தவித்தார்கள். அவர்களுக்காக அடிகளாரே கட்டணம் கட்டினார். தனிப்படப் படித்தவர்கள் தேர்வு வாயிலுக்குள் நுழைய முடியாதபடி முடக்கப்பட்டபோது உரியவர்களுடன் உரையாடினார். அவர்கள் ஆக்கம் பெறும்படிச் செய்தார். இப்படி மிகப் பலரின் முன்னேற்ற முகத்தில் உதவிப்பெரும்பொட்டு வைத்தார் ஞானியாரடிகளார்.

கிறித்துவ மடாலயத்துத் துறவுநிலைக் கன்னியர் சிலர் தமிழ் இலக்கணம் கற்க விரும்பினார்கள். அதை அடிகளாரிடம் பாடம் கேட்க விழைந்தார்கள். அவரை அணுகினார்கள். அவர்களின் விருப்பம் நிறைவேற அடிகளார் துணை நின்றார். வாழ்வு வானத்தின் மேற்குத் திசையில் மெல்ல சரிந்து கொண்டிருந்த வயதில் மூத்தவர்களின் மனத்தில் விரிந்த அறிவுப் பசிக்கும் அவர் விருந்து அளித்தார். கார்க்கூர் என்ற சிற்றூரில் அடிகளார் தங்கியிருந்தபோது, தவறி விழுந்த காரணத்தால் அவருடைய கால் எலும்பு முறிந்தது. அந்தத் துன்ப நிலையிலும் அடிகளார் மாணவர்களுக்குப் பாடம் சொல்லி வந்தார்.

இவர் பாடம் சொன்ன முறை ஈடிணை அற்றது. இவர் சித்தாந்த பாடம் நடத்தினார். இலக்கணக் கல்வி புகட்டினார். சமயப் பனுவல்கள் போற்றி உரைத்தார். இவற்றை எளிமையாக நடத்தினார். தெளிவாக அறிவுறுத்தினார். பாடல்களை இசையோடு பாடிக் காட்டினார். பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, மேற்கோள் முதலியவற்றை எடுத்துரைத்தார். சொல் வைப்பு முறை, சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றை மனத்தில் பதியும்படிக் கூறினார். இவரிடம் பயின்ற பலர், பின்னர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தார்கள். எனவே, அடிகளார் ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியர் என்ற போற்றப்பட்டார்..

**2. சொற்பொழிவாற்றுதல்**

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

என்றார் பொன்றாப் புகழுடைய திருவள்ளுவர். இப்பாடலுக்கு இலக்கியமாக அடிகளார் இலங்கினார். இவர் கடல்மடை திறந்ததுபோல் பேசும் பேராற்றல் பெற்றவர். கேட்டார்ப் பிணிக்கும் சொல்லாற்றல் கொண்டவர். சமயநூல் பெருவிருந்தைத் தன் நாக்குக் கரண்டியால் அள்ளி அள்ளிப் பிறர் நெஞ்ச இலைகளில் படைத்தவர். இவர் ஆயிரக்கணக்கில் சொற்பொழிவாற்றினார். ஐந்து மணி நேரம்வரை உரை நிகழ்த்தும் திறம் பெற்றவர். அவ்வளவு நேரமும் தம் இருக்கை நிலையை மாற்றிக் கொள்ளாதவர். சிற்றூர்களிலும், பேரூர்களிலும் இவர் முழங்கினார். தமிழகமெங்கும் தமிழ் முரசறைந்தார். நாடு போற்றும் நாவலராக - அருந்தமிழின் காவலராக இவர் விளங்கினார்.

**3. தமிழ்க் கல்லூரி, சங்கம் நிறுவுதல்**

சில தமிழ் மன்னர்கள், தமிழ் மண்ணில் வடமொழிக் கல்லூரிகளை நிறுவினார்கள்; ஆதரித்தார்கள்; வளர்ச்சிக்கு நிதி தந்தார்கள் [(எ-டு). காந்தளூர்ச்சாலை, காஞ்சி ஆகிய ஊர்களிலிருந்த வடமொழிக் கல்லூரிகள்]. ஆனால் தமிழ் மூவேந்தர்களில் எவருமே தமிழ்க்கல்லூரியை நிறுவியதாகவோ அதன் வளர்ச்சிக்குக் கொடை வழங்கியதாகவோ வரலாறு வாய்திறந்து கூறவில்லை.

அடிகளார் கல்வியகங்கள் நிறுவும் அரும்பணி புரிந்தார். மணிவிழா கண்ட அவர் அதன் நினைவாகத் தமிழ்க் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். அதன் வளர்ச்சிக்குப் பத்தாயிரம் பொற்காசுகள் அளித்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1938இல் வெள்ளிவிழா கொண்டாடியது. அடிகளாரின் தலைமையில் சீரும் சிறப்புமாக அது நடைபெற்றது. அப்போது அடிகளார், புலவர் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். (அண்மைக்காலம்வரை அது உயிருடன் இருந்தது).

அடிகளாரின் தூண்டுதல் காரணமாகப் பாண்டித்துரை தேவரால் 1901இல் மதுரையில் (நான்காம்) தமிழ்ச்சங்கம் பிறந்தது. அதன் கிளையாகச் சேதுபதி கலாசாலை என்ற தமிழ்க் கல்லூரி தோன்றியது. 1941இல், திருவண்ணாமலையில் அடிகளார் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவினார். 1903இல் புலிசை வாணி விலாச சபை அவரால் தொடங்கப்பட்டது. 7.7.1905இல் சைவ சித்தாந்த மகாசமாஜம் அடிகளாரால் தொடங்கப்பட்டது. இப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கி இவற்றின்மூலம் தமிழ்த்தொண்டு தொடர்ந்து நடைபெறுவதற்கு நல்வழி வகுத்தார். சொல்லாலும் செயலாலும் செல்வழி காட்டினார்.

**4. தமிழ்த்தொண்டர்களைப் பாராட்டுதல்**

சீராட்டாத குழந்தை சிறப்பு அடையாது; பாராட்டாத அறிஞருக்கும் ஊக்கம் கிடையாது. இதைத் தமிழர்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தம்மில் சிறந்தவர்களைப் போற்றிப் பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனம் இல்லை. உழைக்கும் உண்மைத் தொண்டரை உயர்த்திச் சொல்வதற்கு மனம், வாய் திறப்பதில்லை. ஆனால் அடிகளார் இந்த நிலைக்கு மாறாக இருந்தார். அவர் தக்கவர்களைப் போற்றினார்; தமிழறிஞர்களைப் பாராட்டினார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தமிழகத்தில் அமுதத்தமிழை வளர்த்த நல்லமைப்பு. அதைத் தன் கண்ணேபோல் போற்றி வளர்த்தார் உமாமகேசுரம் பிள்ளை. அவருடைய புலமையையும் அருந்தொண்டையும் போற்றும் முறையில் அவருக்கு அடிகளார், "தமிழவேள்" என்ற பட்டம் சூட்டினார். அங்கே தொண்டாற்றிய புலவர் வேங்கடாசலம் பிள்ளைக்குக் "கரந்தைக் கவியரசு" என்ற பட்டம் தந்தார். கடலூர் மாவட்ட நீதிபதி ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையின் தமிழ்த்தொண்டையும் அடிகளார் பாராட்டினார். சிவஞான போதத்தை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படிச் செய்தார்.

**5. அறிவுறுத்தல்**

இனியது, இன்னாதது என்பதை அறிவது மட்டும் அறிவு அன்று. பிறரால் உணரப்படாததை அறிவதும் அறிவு அன்று. நிகழ்காலத்தின் அடிப்படையில் வருங்காலத்தை உணர்வதும் அறிவு அன்று. சூழலின் இயல்பறிந்து கொள்வதும் அறிவு அன்று. நன்றின்பால் உய்ப்பதே அறிவாகும் என்றார் பெரும்பாவலர் திருவள்ளுவர். தூய்மைச் செந்தமிழ் இன்று சாய்க்கடை அடையாறுபோல் மாறி வருகின்றது. சங்க காலம் முதல் இன்றுவரை தமிழில் பிறமொழிச் சொற்கள் நுழைந்தன. அவை தாமாகவும் நுழைந்தன. திட்டமிட்டு நுழைக்கவும்பட்டன. வடமொழி, தெலுங்கு, உருது, டச்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து சொற்கள் தமிழில் கலந்தன. இன்று இந்திச் சொற்களும் தமிழ் மொழியில் இடம் பெற்று வருகின்றன. இவை தமிழின் தூய்மையை அழிக்கின்றன. வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களைச் சாகடிக்கின்றன. தமிழின் சொல் வளத்தை நாசமாக்குகின்றன. இதை அடிகளார் தெளிவாக உணர்ந்தார்; வேதனைப்பட்டார்; தமிழர்களுக்கு உணர்த்தினார். "முருகன் என்ற சொல்லுக்குத் தெய்வம் என்று பொருள். வடமொழியில் கூறினால்தான் நம்

மக்கள் அறிகின்றனர். நம் தாய் மொழியாகிய தமிழ்மொழியை நாம் அறிகின்றோமில்லை. "லாயத்தில் குதிரை" என்கிறோம். லாயம் – தமிழ்ச்சொல் அல்ல. வெவ்வேறு அரசியல் (ஆட்சி) இருந்த காலத்தில் வெவ்வேறு மொழிகள் தமிழ்நாட்டினுள் நுழைந்தன. ஆங்கிலப் பள்ளியை அறியாது வீட்டினுள் அடங்கிக் கிடக்கும் பெண்களும் 'டயத்துக்கு வரவில்லையே' என்கிறார்கள். இங்ஙனம், வேற்றுச் சொற்கள் வேகமாக நம் தமிழ்மொழியில் புகுகின்றன. யாவரும் இதைக் கவனித்தல் வேண்டும்" என்று அடிகளார் அறிவுறுத்தினார் (1941).

இன்று பெரும்பாலான கல்வியகங்களில் ஆங்கிலமே பாடமொழியாக உள்ளது. தமிழர்கள் தமிழை மறந்து கொண்டே - மங்கிக் கொண்டே தேய்கிறார்கள். தாய்மொழியாம் தமிழைப் படிப்போர் குறைந்து கொண்டே வருகிறார்கள். தமிழ் நூல்களைப் படிப்போர் அருகிக் கொண்டே வருகின்றார்கள். இந்நிலையை அடிகளார் அன்றே கவனித்தார். "தமிழ்ப் புத்தகங்களை நன்றாகப் படிக்க வேண்டும். சுவற்றில் பழகல் வேண்டும். இல்லையேல் தமிழரென்று வெளியில் கூறிக்கொள்வோருக்கு வெட்கமில்லை என்றே நான் கூறுவேன்" என்று அவர் எடுத்துரைத்தார்; எச்சரிக்கை விடுத்தார். அன்று அவர் செய்த அறிவுறுத்தல்கள், இன்றும் மேற்கொள்ளத்தக்கவையாகவே உள்ளன.

**6. நூல் இயற்றல்**

அடிகளார் தமிழகமெங்கும் சென்றார்; நல்லுரை நவின்றார். ஆயிரக்கணக்கான மேடைகளில் முழங்கினார். அவை கேட்போரின் நெஞ்சங்களில் பதிவாயின. ஆனால், அவை காற்றோடு கை கோத்துக் கொண்டன. அவை தொகுக்கப்படவில்லை. இது தமிழினம் செய்த மாபெரும் தவறு. ஆயினும், சைவ சித்தாந்தப் பெருமன்றம் 1955இல் ஞானியார் அடிகளார் நினைவு மலர் ஒன்றை வெளியிட்டது. அடிகளாரின் சொற்பொழிவுச் சுருக்கங்கள் அந்த நூலில் மிளிர்கின்றன. அதில் அடிகளார் இயற்றிய குருதுதி என்ற நூலும் இடம் பெற்றுள்ளது. இதைத்தவிர, அவர் பல தோத்திர நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றில் திலகவதி அம்மைத் துதி என்ற நூல் மட்டுமே கிடைத்துள்ளது. நூல்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பைப் பண்டே இழந்துவிட்ட பழந்தமிழகம், அடிகளாரின் மற்ற நூல்களையும் இழந்துவிட்டுக் கண்ணைக் கசக்கிக் கொண்டு தேம்புகிறது.

**நிறைவுரை**

அடிகளார் மிகப் பரந்த உள்ளம் பெற்றவர். ஆகவேதான், அவர் தந்தை பெரியாரின் "குடியரசு" இதழைத் தொடங்கி வைத்தார். ரோமன் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்த ஞானப்பிரகாச முதலியாரின் அழைப்புக்கிணங்கி, அவர் இல்லம் சென்றார். அங்கே சீதா கல்யாணம் பற்றிச் சொற்பொழிவும் செய்தார். திருஅயிந்திரபுரத்து வைணவ சமயத்தினர், தம் ஊரில் உரை நிகழ்த்தும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார்கள். அடிகளார் இசைந்தார். அங்கு சென்றார். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" என்ற தலைப்பில் அரிய பொழிவு நிகழ்த்தினார். அப்போது அவருக்கு நீண்ட நெடிய மாலை சூட்டப்பட்டது. உடனே அவர் "நான் நெடுமாலை அடைந்தேன்" என்று சிலேடையாகச் சொன்னார்.

அவர் பல தமிழறிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். உ.வே.சாமிநாதையர், பரிதிமால்கலைஞர், மறைமலையடிகள், திரு.வி.கலியாண சுந்தரனார் முதலியோர் அவரிடமிருந்த பல கூறுகளை ஏந்திக் கொண்டார்கள்.

"ஞானியார் சுவாமிகள் மாணாக்கருக்குப் பாடம் சொல்லும்போதும் சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் தொல்காப்பியராகவும் நக்கீரராகவும், திருவள்ளுவராகவும், இளங்கோவடிகளாகவும், கச்சியப்பராகவும், கம்பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீலகண்டராகவும், சிவஞான முனிவராகவும், பிறராகவும் முறைமுறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச் சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக் கேட்டுப் புலவரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றோ!" என்று திரு.வி.க. அடிகளாரைப்பற்றி வியந்து கூறியுள்ளார். இத்தகைய பேராற்றல் பெரியாரின் வாழ்க்கை மிகவும் விரிவாக - பெருநூலாக - வெளிவருதல் வேண்டும். அதற்குத் தக்கவர்கள் முனைந்து செயற்பட வேண்டும்.

# 6. ஞானியார் சுவாமிகள்*

- சைவ சித்தாந்த தொண்டர் மாமணி - பேராசிரியர் தே.இரா. ஜயராமன்,
*ஆங்கிலத்துறை, இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை - 600 072.*

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முதல் மற்றும் இடைக்காலங்களிலும் 'ஞானி யார்?' என்ற வினாவிற்கு "திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்" என்ற விடையே தமிழ் கூறும் நல்லுலகில் நிலவி வந்தது.

திருநாகேச்சுரத்தில் வீர சைவ தம்பதியினராகிய அண்ணாமலை ஐயருக்கும், பார்வதி அம்மையாருக்கும் 17-5-1873ல் அடிகளார் பிறந்தருளினார்கள்; பழனியாண்டி எனப் பெயர் சூட்டப் பெற்றார். வீரசைவ மரபின்படி பிள்ளைப் பருவச் சடங்காகிய சிவலிங்கத் தாரணை செய்து வைக்கப்பட, திருப்பாதிரிப்புரியூர் ஞானியார் மடாலயத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

மடலாயத்தின் நான்காவது குருமூர்த்திகள், பெற்றோரிடத்து ஞானச் செல்வரை மடத்திற்கு அளித்து விடும்படி ஆணையிட்டார். இதன் மூலம் பழனியாண்டி என்ற அப்பாலகருக்கு இவ்வுலகில் பிறந்த ஆறாம் மாதமே குருநாதன் திருவடி தொழும் பேறு கிடைத்து விட்டது.

இள்மையில் தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் பயின்றார் பழனியாண்டி. தமது பதினேழாவது வயதில் 20-11-1889 அன்று, "சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்" என்னும் பட்டப் பெயருடன் பட்டம் சூட்டப்பெற்றார். திருக்கைலாய பரம்பரை திருக்கோவலூராதீனம் ஐந்தாம் பட்டத்து அருள் ஞானியாராக அவர் அமர்ந்தார்.

கல்வி கற்கும் அவா மேலீட்டினால் கூடலூர் நேடிவ் கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர்களை மடாலயம் வருவித்து தமிழும் ஆரியமும் பாடம் கேட்டார் சுவாமிகள்.

அடிகளார் தமிழகத்தில் தமிழார்வமும் சமய எண்ணமும் குன்றி வந்ததைக் கண்டு வருந்தினார். தமிழ் மேன்மையுற, தமிழர் நன்னெறியடைய ஆங்காங்கு கழகம் அமைத்து அங்கெல்லாம் தாமே எழுந்தருளி சொற்பொழிவாற்றுவதுதான் தக்கது எனக் கருதினார்.

அடிகளாரின் அறிவுரைப்படி பாஸ்கர சேதுபதியவர்கள், 24.5.1901ல் மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவினார். 1903ல் புரிசை மடாலயத்தில் 'வாணி விலாச சபை'யை அடிகளாரே நிறுவினார். பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் அநாதித்துவக் கொள்கை தமிழகத்தில் மறுமலர்ச்சி அடையச் செய்வதற்கு எண்ணம் கொண்ட அடிகளார், அதே எண்ணம் கொண்டிருந்த மறைமலையடிகளின் விருப்பப்படி சென்னையைத் தலையிடமாகக் கொண்ட சைவ சித்தாந்த மகாசமாஜம் என்னும் அமைப்பை தமது மடாலயத்தில் 7-7-1905ல் தொடங்கினார். 'முருகப் பெருமான் திருவருளும், மடாலய முதல் குருநாதரவர்களின் அருளும் சமாஜ வளர்ச்சிக்கு துணை புரிக' என வாழ்த்தி மகிழ்ந்தார்.

1912ல் கோவல் வீரட்டானத்தின் குடமுழுக்கு அன்று, அங்குள்ள ஞானியார் மடத்தில் 'கோவல் சைவ சித்தாந்த சமாஜம்' அடிகளாரால் நிறுவப்பட்டது. 1919 ஜனவரியில் அடிகளார் தலைமையில் வேத மடம் 'ஸ்ரீ வாகீச பக்த பத சேகர சபை'யின் முதல் ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், 'பிறமதம் புகுந்தோர் விரும்பினால் மீண்டும் அவரை சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்' எனும் தீர்மானம் கொண்டு வந்தார். இதுகுறித்து சுவாமிகள் திலகவதியாரை மேற்கோள் காட்டி நிகழ்த்திய சொற்பொழிவு, அனைவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருக வைத்ததாம்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு ஆக்கம் தேடும் பொருட்டு 1927ல் முதன்முறையாக சுவாமிகள் சென்னைக்கு எழுந்தருளினார். அவர் தலைமையில் பாலசுதியேட்டரில் (இன்றைய பிராட்வே டாக்கீஸ்) நடைபெற்ற கூட்டத்தில் அக்கால நீதிபதி சர்.வே.பா. இராமேசம், பா.வே. மாணிக்க நாயக்கர், திரு.வி.க. முதலாய பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். அக்கூட்டத்தில் நின்று போயிருந்த சித்தாந்தம் இதழை மீண்டும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அதன்பின் சுவாமிகள் பற்பலர் அழைப்பிற்கிணங்கி பல இடங்களில் அருளுரையாற்றி அன்பர் மனங்களில் நீங்கா இடம் பெற்றுப் பிரியா விடை கொண்டு புலிசை திரும்பினார். சென்னை அன்பர்கள் தம் நன்றியறிதலை அறிவிக்கும் பொருட்டு கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டினர். நகர மக்கள் சார்பில் சர் ஏ. ராமசாமி முதலியார், சுவாமிகளின் அரிய தொண்டுகளைப் பாராட்டி ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவாற்றினார். பிரிவு உபசாரப் பத்திரம் ஒன்றும் வாசித்தளிக்கப் பெற்றது.

தாய்த் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலக் கல்விக்கே தமிழர் முக்கியத்துவம் கொடுத்த அந்நாளில் தமிழ்க் கல்லூரிகள் தோன்ற அடிகளாரே காரணராக இருந்தார்.

சுவாமிகள் தமிழகத்தில் அனைத்துத் தலங்களுக்கும் யாத்திரை செய்துள்ளார். அப்போது குமரி கோட்டாற்றில் சில நாட்கள் தங்கி சொற்பொழிவாற்றினார். அங்கு வேலாயுத முதலியார் எனும் அன்பரின் விருப்பப்படி சுவாமிகளது வடிவத்தை ஓவியர்கள் சித்திரங்களாகத் தீட்டினர்.

சுவாமிகள் அடியவர்களுக்காக 1933ல் அறுபதாண்டு நிறைவு விழாவும், 1939ல் பட்டம் ஏற்று ஐம்பது ஆண்டு நிறைவு விழா அபிஷேகமும் கொண்டருளினார். மகாமகோபாத்தியாயர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ரசிகமணி டி.கே.சி. போன்றோர் இவற்றில் பங்கேற்றனர்.

1941 அக்டோபரில் திருவண்ணாமலை தீப தரிசனத்தன்று காற்று மழை பாராது, தனது அறுபத்தெட்டாவது வயதில் கிரிவலம் செய்து முடித்தார் சுவாமிகள்.

31-1-1942 சனிக்கிழமை இரவு பழநி முருகனை தரிசித்து, அன்பர் ஒருவரது மகளின் திருமணத்தில் கலந்து கொள்ள புறப்பட்டார். விடியல் 3 மணிக்கு புறப்பட்டு 8 மைல் வந்தவுடன் உடல்நலம் மாறுபட்டது. அந்நிலையிலேயே அவரது ஆன்மா திருவருளில் கலந்து ஒன்றியது.

திருஞானசம்பந்தர் திருநாளாகிய வைகாசி மூலத்தில் தோன்றி, பழநியப்பன் திருநாளாகிய தைப்பூசத்தில் சுவாமிகள் பரிபூரணம் எய்தியது சிவபுண்ணிய வசத்தால் ஏற்பட்ட பேறாகும்.

சுவாமிகளது ஆசியுடன் தொடங்கப்பெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜம், இப்போது 'சைவ சித்தாந்தப் பெருமன்றம்' என்னும் பெயருடன், சென்னை மயிலாப்பூரில் இயங்கிக் கொண்டுள்ளது.

அந்த மன்றம் இவ்வாண்டு (1905-2005) நூற்றாண்டு விழா காண்பது குறிப்பிடத்தக்கது.

---

நன்றி : தினமணி 2005 ஏப்ரல் 1 : வெள்ளிமணி.

## 7. மறைமலை அடிகள்*

– திருவி.க.

மறைமலையடிகள் யார்? சுவாமி வேதாசலம். அடிகள் கிறிஸ்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக யிருந்தவர். அவரது பழைய பெயர் நாகை - வேதாசலம் பிள்ளை என்பது. அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக்கொண்டு வேதாசலனாராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கிறார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனார் தமிழ் - செந்தமிழ் - சங்கத் தமிழ் - என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவுஞ் செய்தது. இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ் நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனார்க்குண்டு என்று அறுதியிட்டுக் கூறுவேன். அவர் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்; வடமொழியுந் தெரிந்தவர்.

ஈழக் கதிரைவேற் பிள்ளைக்கும் நாகை வேதாசலம் பிள்ளைக்கும் அடிக்கடி நிகழ்ந்த வாதப்போர், மிக இளமையில் இவருடன் கலந்து உறவாட, என்னை விடாமல் தகைந்தது. பின்னை 1910-ம் ஆண்டில் சிந்தாதிரிப்பேட்டையில் வேதாசலனாரின் சொல்லமிழ்தைப் பருகுந் தவமுடையவனானேன். அவரது தமிழ் உடலும், தமிழ் உரையும், தமிழ்க் குரலும், தமிழ்ப் பொருளும் என்னை அவர்தம் தோழனாக்கின; தொண்டனாக்கின.

வேதாசலம், அடிகளாகிப் பல்லாவரத்தை உறைவிடமாகக் கொண்டபோது, அடிகள் ஒருநாள் இராயப்பேட்டை நண்பர் சிலரை வரவழைத்தார்; பகலில் தமிழ் விருந்தளித்தார்; மாலையில் திரிசூலத்தில் சிவ விருந்தளித்தார். தமிழும் சிவமும் ஒன்றிய மறைமலை அடிகளின் விருந்து மறக்கற்பாலதன்று.

முன்னாளில் மறைமலையடிகள் அடிக்கடி இராயப்பேட்டை போதருவர்; 'குகானந்த நிலைய'த்தில் தங்குவர். அடிகட்கு எல்லாப் பணிகளையும் யானே செய்ய முந்துவன். மற்றவரும் போட்டியிடுவர். இரவில் சங்க நூல்களில் எனக்குற்ற ஐயங்களை அடிகளிடம் வெளியிடுவன். அடிகள் படுக்கையில் கிடந்துகொண்டே ஐயங்களைக் களைவர். வேறு பல தமிழ்ப் பேச்சுக்களும் எங்களிடை நிகழும்.

மறைமலை அடிகளுடன் யான் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபைக்கு இரண்டுமுறை சென்றேன்; நாகை முதலிய சில இடங்கட்குஞ் சென்றேன்; சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். அந்நாளில் தமிழ் வானத்தில் ஒரு தூய திங்களென அடிகள் திகழ்ந்ததை யான் கண்டேன்.

வெஸ்லி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு யான் முயன்ற வேளையில் *தகுதித்தாள் ஒன்று மறைமலை அடிகளால் வழங்கப்பட்டது. அஃது இன்னும் என்னிடத்தில் இருக்கிறது.

அடிகளால் டி.எம். அச்சகம் என்றொன்று அமைக்கப்பட்டது. அதைத் திறக்குந் தொண்டு எனக்குக் கிடைத்தது. அத்திறப்பு விழா சுருங்கிய முறையில் செவ்வனே நடைபெற்றது. 'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கு அடிகளின் வாழ்க்கை ஓரிலக்கியம்.

யான் கல்லூரி விடுத்து அரசியலில் தலைப்பட்டதை மறைமலை அடிகள் ஆதரித்தாரில்லை; என்னைக் கடிந்தும் பேசினர். தமிழ்ப் புலவர்களில் என்னைக் கடிந்து பேசுவோர் உலகில் ஒருவர் இருக்கிறாரெனில் அவர் மறைமலை அடிகளே யாவர்.

1929-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் சுவாமிகள் முயற்சியால் சுவாமிகளின் பள்ளியில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் சைவர் மகாநாடொன்று கூடியது. அது மறைமலை அடிகள் தலைமையில் நடைபெற்றது. தென்னாட்டுச் சைவக் குழாங்கள் அம்மகாநாட்டில் மலிந்தன. மகாநாடு ஆறு நாள் சிறப்பாக நடந்தது. நிகழ்ச்சி முறைகள் பல தென்னாட்டுச் சரித்திரத்தில் குறிக்கத்தக்கன. இறுதிநாள் மாலையில் திருஞானசம்பந்தரைப் பற்றி யான் பேசப் புகுந்தேன். கூட்டம் பெருகியது. பள்ளியின் இடம் போதவில்லை. பெருங்கூட்டம் வெளியே திரண்டது. யான் நீல வானத்தின் கீழ்ப் பேசலானேன். என் வாழ்நாளில் யான் பேசிய பேச்சுக்களில் நினைவூட்டிக்

---

* Pallavaram, 28th March, 1916

From SWAMI VEDACHALAM.

Formerly Lecturer in Tamil in the Madras Christian College, Now Master of the Sacred Order of Love, Pallavaram, and Editor of 'Jnanasagaram' and 'Oriental Mystic Mayna'.

For the last four or five years I have had an intimate acquaintance with Pandit T.V. Kalyanasundram Mudaliar of Royapettah, and all along I was much pleased with his sweet manners, high thinking and sound scholarship in Tamil language and literature. His breadth of mind and great philanthrophic spirit mark him out as a rare scholar in the class of modern Tamil Pandits. I am sure both by his example and precept he would prove himself to be a Model Tamil Teacher to the students of any College-class.

VEDACHALAM

கொள்ளத் தக்கனவற்றுள் அன்றைய பாதிரிப் புலியூர் பேச்சும் ஒன்று. என் பேச்சின் மாண்பை இங்கே யான் எப்படிப் பேசுவேன்! தமிழ்க் குழவி - ஞான சம்பந்தம் - என் நாவில் நிலவியது; அமைதிக் கூட்டத்தில் பொலிந்தது; தலைமை வகித்த அடிகளிடம் தவழ்ந்தது. எல்லாம் ஞானசம்பந்தமாகவே திகழ்ந்தன. அடிகள் ஞானசம்பந்தரைத் தமது ஆருயிர்க் குருவாகக் கொண்டவர்; அவர் தமிழில் மூழ்கியவர். அத்தகைய உள்ளம் என் பேச்சில் எளிதில் திளைத்தது. அடிகள் கண்ணீர் மல்க எழுந்தார்; முடிவுரை கூறினாரில்லை. மறைமலையின் மனம் என்மீது படிந்தது. என்னைப் புகழும் அளவில் முடிவுரை நின்றது. புகழ்ச்சி தெய்வீகம் வரை சென்றது. அப்புகழுரையின் ஆவி அணித்தே என் தலைமையில் காட்சியில் நடைபெற்ற ஞானியார் சங்க ஆண்டு விழாவில் சங்கத்தார் எனக்களித்த நன்மொழித் தாளில்* எதிரொளி புகுந்தது.

என் பேச்சைக் குறித்து அடிகளிடத்தினின்றும் அடிக்கடி எச்சரிக்கை எழும். 'இரைந்தும் விரைந்தும் பேசுவது உமக்கு இயற்கையில் அமைந்துள்ளது. அதை ஓரளவிலேயே பயன்படுத்தல்வேண்டும். இயற்கைச் சக்தியை அளவின்றிப் பயன்படுத்தினால் அஃது உடலுக்கு ஊறு செய்வதாகும்' என்று அடிகள் அறிவுறுத்துவர். எச்சரிக்கையும் அறிவுறுத்தலும் என் காதில் நுழையும்; ஆனால் என் மனத்தில் நுழைவதில்லை. அடிகளின் நன்மொழியை அலட்சியஞ் செய்யவேண்டுமென்பது எனது நோக்கமன்று. என் பிறவிக்கூறு நன்மொழிமீது கவலை செலுத்த விடவில்லை. யான் பெற்ற இயற்கைச் சக்தியின் வரம்பு கடந்தே பேசினேன். விளைந்ததென்னை? எனது உடலின் வன்மையும் பேச்சின் வன்மையும் மென்மையாயின.

மறைமலை அடிகள் உடல் ஓம்புவதில் கண்ணுங் கருத்துமுடையவர்; தமது நிலையம் போதருவோரை உடலோம்பலில் மனஞ் செலுத்துமாறு வலியுறுத்துவர்; எனக்குஞ் சொல்வர். அடிகளின் உடலோம்பு முறைகளைக் கடைப்பிடிக்க யான் முயன்றேன். அம்முயற்சி சில மாத காலமாதல் இடையீடின்றி நிகழ்ந்ததா? இல்லை. சில வாரக் கணக்கிலேயே அது வீழ்ந்தது. என் வாழ்க்கை வானக்கப்பலில் பறப்பது. அப்பறவைக்கு நேரம் ஏது? ஓய்வு ஏது? ஒன்று மட்டும்

---

*. . . . . . . . அறிஞர்களால் தமிழ்க் கடலெனப் போற்றப்படும் மறைமலையடிகள் தலைமை பூண்ட திருப்பாதிரிப்புலியூர் சைவர் மகாநாட்டில் சென்ற ஞாயிறன்று, திருஞானசம்பந்தர் பெருமை பற்றி ஒன்றரைமணி நேரம் வரைத் தாங்கள் நிகழ்த்திய அறிவும் ஆற்றலும் உண்மையுஞ் செறிந்த விரிவுரை கேட்ட அவ்வடிகளே மெய்ம்மறந்தவர்களாகி "நமது ஆண்டவன் ஆளுடைய பிள்ளையாரின் மூலமாகவே இறைவனைக் காணல் வேண்டுமென்ற **உண்மையை** அறிவானும், அநுபவத்தானும் மிகத் திறம்பட அழகமைய பொருத்திக்காட்டி நம்மனைவர் நெஞ்சை யெல்லாம் நீராயுருக்கிய திருவாளர் - திரு.வி. கலியாணசுந்தர முதலியார்க்கு நாம் இப்பிறவியிலல்லாது எப்பிறவியிலும் கடப்பாடுடையோமா யிருத்தல் வேண்டும். திருஞானசம்பந்தர் வாயிலாக உண்மைக் கடவுட் காட்சியைக் காண்டல்வேண்டுமென எடுத்துரைத்த இவரை **நாம் தெய்வமாகக் கொள்வோமாக**" என்று உரைத்தாரென்றால் ஏழையேங்கள் தங்களை எம்மொழியால் போற்றிப் புகழ்ந்துரைப்போம்; பின்னும் அவ்வடிகளே "ஞானசம்பந்தரைப் போற்றும் இத்தெய்வம் எல்லா நலனும் பெற்று நம்மிடை நீண்டநாள் நிலவுவதாக என்று இறைவனை இறைஞ்சுவோமாக" என்று ஆராமையோடும் ஆர்வத்தோடும் மெய்ம்மறந்து மொழிந்தருளினார்கள். நாங்கள் வேறு மொழி கூறாது **அவ்வடிகள் உரைத்த மெய்ம்மொழியையே உளங்கொண்டு தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து** சமயத் தொண்டு புரிந்து நாட்டினரைச் சமயப்பற்றுடையவராகச் செய்யச் செவ்வேட்பரமன் திருவருள் பாலித்தருள வேண்டுகிறோம். (25-6-1929).

நிலைத்தது. அஃது எது? அஃது 'எனிமா'. அதுவுஞ் சென்னையிலேயே. வெளியூர் அதை நாடுவதில்லை.

மறைமலை அடிகளின் கருத்துக்கும் என் கருத்துக்கும் வேற்றுமையுண்டா? இல்லையா? சிலவற்றில் உண்டு. அரசியல் துறையில் அடிகள் போக்கு வேறு; அடியேன் போக்கு வேறு. இரண்டுக்குஞ் சந்திப்புண்டாதல் அரிது. அடிகள் எழுத்தில் ஆரியர் தமிழர் என்ற பிரிவை வளர்க்குங் கருவிகளிருக்கின்றன. அவை மக்களின் ஒருமைப்பாட்டையும் வளர்ச்சியையும் குலைக்குமென்பது எனது உட்கிடக்கை. மறைமலை அடிகள் சமய நூல்களிலும் தத்துவ நூல்களிலும் புகுந்து ஆராய்ச்சி என்று வெளியிடுங் கருத்துக்களை என் மனம் ஏற்பதில்லை. சமயமும் தத்துவமும் ஆராய்ச்சிக்கு எட்டாதன என்பதும், அவ்வாராய்ச்சியால் மக்கள் வாழ்க்கை நலம்பெறாது முரட்டுக்கும் மூர்க்கத்துக்கும் இரையாகுமென்பதும் எனது எண்ணம். ஒருவர் பன் மனைவியரை மணக்கலாமென்று அடிகள் அறைவது எனது நோக்குக்கு முற்றும் முரண்பாடு. 'ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன்' என்பது எனது கொள்கை.

மறைமலையடிகளிடத்தில் பலவித நல்லியல்புகளுண்டு. அவைகளுள் சிறந்த ஒன்று இரக்கம் - ஜீவகாருண்யம். அடிகளின் இரக்கப் பண்பை விளக்குதற்கு ஈண்டொரு நிகழ்ச்சி குறித்தல் சாலும்.

இராமலிங்க சுவாமிகளை யொட்டிக் கதிரைவேலருக்கும் வேதாசலனாருக்கும் பல திற வாதங்கள் நடந்தன. சிவனடியார் திருக்கூட்டங்கள் இரண்டாகப் பிரிந்தன. ஒரு கூட்டம் கதிரைவேற் பிள்ளையை ஆதரித்தது; மற்றொன்று வேதாசலத்தை ஆதரித்தது. பின்னைய கூட்டம் கதிரைவேற் பிள்ளைக்கு பலவித தீங்கு செய்ய முயன்றது. கதிரைவேலர்மீது கல்லெறிந்தது; அவரை இழித்து இழித்துத் துண்டுகள் வெளியிட்டது; அவரைப்போன்ற உருவஞ்செய்து அதைப் பாடையிலிட்டுக் கொளுத்தியது; இவைகளெல்லாம் போக, மற்றொரு கொடுமை நிகழ்த்த உறுதிகொண்டது. அஃது இராமலிங்க சுவாமிகள் கொள்கைக்கு. முற்றும் மாறுபட்டது. அஃதென்ன? கொலை!

வழக்குக் காலத்தில் கதிரைவேற் பிள்ளை இரவு பத்து மணிவரை சிந்தாதிரிப்பேட்டையி லிருப்பர்; சில சமயம் பன்னிரண்டு மணி வரை இருப்பர்; அதற்குமேல் புரசை நோக்குவர். ஒருநாள் அவரை வழியிலே கொலைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாம். அச்செய்தி வேதாசலனார்க்கு எப்படியோ எட்டியது. வேதாசலனார் இரக்கம் உடையவர்; இராமலிங்க அடிகளின் அருள் நெறியில் நிற்பவர்; அவர் என் செய்தார்? யாழ்ப்பாணத்து மாணாக்கர் ஒருவர் வாயிலாகக் கொடுமையைக் கதிரைவேற் பிள்ளைக்கு அறிவித்தனர். அன்று கதிரைவேற் பிள்ளை தக்க காவலுடன் சென்றனர். கொலைஞர் கருத்து நிறைவேறவில்லை இந்நிகழ்ச்சியை எனக்குச் சொன்னவர் மறைமலையடிகளே.

மறைமலை அடிகட்கு மக்கட்பேறு உண்டு. அவர்தம் மக்களில் ஒருவர் மறை. திருநாவுக்கரசு. இவர்க்குப் பொதுத் தொண்டில் ஊக்கம் அதிகம். இவர் நாட்டுப்பற்று மேலீட்டான் இருமுறை சிறைக்கோட்டம் நண்ணினர். இப்பொழுது திருநாவுக்கரசின் வாழ்க்கை தமிழ்த்தொண்டுக்கும் சிவத்தொண்டுக்கும் பயன்பட்டு வருகிறது. வித்துவான்கள் கிராமத்தொண்டு செய்தல் வேண்டுமென்பது எனது வேணவா. அது வித்துவான் திருநாவுக்கரசு வாயிலாக நிறைவேறி வருகிறது. ஒரு தொண்டரை - தமிழ்த் தொண்டரை - சிவத்தொண்டரை - மகனாகப் பெற்ற பெருமை வாய்ந்த மறைமலையடிகள் வாழ்க.

நன்றி : திரு.வி.கலியாணசுந்தரனார் - திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பூம்புகார் பதிப்பகம், பக். 126-131.

# 8. விபுலானந்தர்*

- திரு.வி.க.

சுவாமி விபுலானந்தர் யாழ்ப்பாணத் தோன்றல்; இலங்கைச் செல்வம். அவர் தமிழிலுங் கலைஞர்; ஆங்கிலத்திலுங் கலைஞர். அவர்தங் கலை மணம் அவரது பேச்சிலும் எழுத்திலுங் கமழ்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விபுலானந்தர் தமிழ்ப் பேராசிரியரா யிருந்தபோது அவர்தங் கலைத்திறங்களெல்லாம் வெளியாயின.

சுவாமிகள் முயற்சியுடையவர். அவரது முயற்சி அவரைக் கயிலைக்குச் செலுத்தி மீட்டது; பண்டைத் தமிழர் கண்ட யாழை மீண்டும் உயிர்ப்பிக்க ஊக்கியது.

சுவாமி விபுலானந்தரைச் சென்னையில் சிலமுறை கண்டிருக்கிறேன். ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை ஆண்டு விழாவிலும் வேறிடங்களிலும் அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன்.

யான் இரண்டுமுறை இலங்கை நோக்கினேன்; ஒருமுறை (1926) கொழும்பிலே தென்னிந்திய இளைஞர் சங்க ஆண்டு விழாவிலே தலைமை வகிக்கச் சென்றேன்; இன்னொருமுறை யாழ்ப்பாண மாணாக்கர் காங்கிரஸிலே (1929) தலைமை பூணச் சென்றேன். முன்முறை யாழ்ப்பாணத்திலும், பின்முறைத் திருக்கோணமலையிலும் விபுலானந்தர் தலைமையில் பேசினேன். திருவண்ணாமலையில் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா நடைபெற்றபோதும் அவர் தலைமையில் எனது சொற்பொழிவு நிகழ்ந்தது.

மயில்வாகனனார் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து விபுலானந்தராய்த் தொண்டுசெய்து வருகிறார். அவர் மடத்தில் சேர்ந்து விபுலானந்தராகாமல் தொண்டாற்றியிருப்பரேல், அத்தொண்டு அவரது இயல்புக்கேற்ப இன்னும் விரிந்த முறையில் கலையுலகுக்குப் பயன்பட்டிருக்குமென்று யான் கருதுகிறேன். விபுலானந்தர் போன்ற கலைஞர்கள் மடங்களில் சிக்குறலாகாதென்பது எனது கருத்து. மடக் கட்டுகள் கலைஞரின் சில உரிமைகளையாதல் சிறைப்படுத்தியே தீரும்.

நன்றி : திரு.வி.கலியாணசுந்தரனார் - திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பூம்புகார் பதிப்பகம், பக். 134-135.

# 9. அழகரடிகள்

- புலவர் மா. அமிர்தலிங்கம்,
*7, சுதர்சன நகர், காஞ்சிபுரம் - 1.*

**சைவ வானத் தமிழ் நிலவு**

ஞாலம் உய்ய, நாம் உய்ய, சைவ நன்னெறியின் சீலம் உய்யத் தோன்றிய அருளாசிரியர்களில் அழகரடிகளாரும் ஒருவர். இருபதாம் நூற்றாண்டின் சைவப் பெரும் பேராசிரியராக விளங்கிய அவர்கள் 1904இல் மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில் பாலசுந்தரமாகத் தோன்றியவர்கள். வளர்ந்து மொழி பயின்றபின் பெரும் பேராசிரியர் மறைமலையடிகளாரின் மாணவராய் இளவழகனார் ஆனார்கள். அருளாசிரியத் தலைமையேற்றபோது அழகரடிகளாராய்த் திருக்குறள்பீட முதற்குரவராக விளங்கினார்கள். (இப்பொழுது சிவத்திரு குருபழனி அடிகளார் இரண்டாவது பீடாதிபதிகளாக அருளாட்சி புரிந்து வருகின்றார்கள்).

**சங்க நூற் பெரும்புலவர்**

அடிகளார் 19ஆம் வயதிலேயே சிறந்த உரையாசிரியராக விளங்கினார்கள். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவராக விளங்கிய காலங்களில் சங்க இலக்கியச் சால்பினை உணர்த்தும் 'சங்க நூற் கட்டுரைகள்', 'சங்க இலக்கிய இன்கவித்திரட்டு', 'பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை', 'பொருளியல் வாழ்க்கை' ஆகிய சங்கத் தமிழ்க் கருவூலங்களைச் 'செந்தமிழ்ச் செல்வி'க்கு அணிகலனாக வழங்கினார்கள். 'ஔவையார் திருவுள்ளம்', 'சிவப்பிரகாசர் செந்நெறி', 'அதிவீரராமர் அறநெறி' போன்ற நூல்களும் குறிப்பிடத்தக்கவை. அவர்களது 'தொல்காப்பியக் குறிப்புரை' - கையடக்கப் பதிப்பு அந்நாளில் தமிழ் மாணவர்களின் கைக்கு அணிகலனாக விளங்கியது. 'மெய்கண்ட சாத்திர உரைநடை'யும் எழுதியுள்ளார்கள்.

**ஆசிரியப் பேரன்பு**

அடிகளார், தம் ஆசிரியரிடத்து அளப்பரிய பேரன்பும், பெருமதிப்பும் கொண்டவர்கள். சென்னை செல்லும்போதும், திரும்பும்போதும் பல்லாவரம் வந்தவுடன் பேருந்திலேயே எழுந்து நின்று பல்லாவரம் கடந்த பிறகே அமருவார்கள். 'மறைமலை அடிகளாரின் வரலாற்று மாட்சி'யை எழுதியுள்ளார்கள். அடிகளார் தொடங்கிய 'சிவஞானபோத ஆராய்ச்சி'யைத் தொடர்ந்து நிறைவு செய்தார்கள். 'மறைமலையடிகள் கல்விக் கழகமும்' நடத்தினார்கள்.

**பெருமன்றத் தொடர்பு**

ஆசிரியரவர்களிடத்துப் பேரன்புடையவராக விளங்கியதுபோன்றே மறைமலை அடிகளார் தொடங்கிய சைவ சித்தாந்தப் பெருமன்றத்தினிடத்தும் பேரன்பு கொண்டிருந்தார்கள். 1975இல் குருகுல வெள்ளி விழாவின்போது பெருமன்ற ஆண்டு விழாவினை நான்கு நாட்கள் குருகுலத்தில் நடத்தினார்கள். ஆசிரியர் பெயரால் அறக்கட்டளை நிறுவி, 'இலக்கியத்தில் சித்தாந்தம்', 'இலக்கணத்தில் சித்தாந்தம்' என்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தத்

திட்டமிட்டார்கள். இரண்டாண்டுகள் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சொற்பொழிவு நூல்களையும் வெளியிட்டார்கள். அவ்வாறே திருக்கழுக்குன்றத்திலும் சில ஆண்டுகள் ஞானியாரடிகளார் பெயரால் சொற்பொழிவுகளும், நூல் வெளியீடுகளும் நடைபெற்றன.

**சமயத் துறைக்கு வருதல்**

அடிகளார் கழகப் புலவராக விளங்கிய காலத்தில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் 'புறநானூற்று மாநாடு' நடைபெற்றது. அடிகளார் '*புறநானூறும் சமயமும்*' என்ற பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள். "'புறநானூறும் சமயமும்' என்ற சொற்பொழிவுதான் என்னை அடிகளாரிடம் பேரீடுபாடு கொள்ளச் செய்தது" என்று பேராசிரியர் *சஞ்சீவி* கூறியுள்ளார்கள். ஆனால், அடிகளாரோ "புறநானூறும் சமயமும் என்ற சொற்பொழிவுதான் என்னை இலக்கியத் துறையிலிருந்து சமயத் துறைக்கு வரச் செய்தது" என்றும், "திருவள்ளுவரும் அகர முதல எழுத்தெல்லாம் என்று இலக்கியத்தில் தொடங்கி, ஆதிபகவன் முதற்றே உலகு என்று சமயத்தில் முடித்துள்ளார்" என்றும் கூறியுள்ளார்கள்.

**சைவப் பெரும் பேராசிரியர்**

அடிகளார் சைவப் பெரும் பேராசிரியராக விளங்கியபோது, புலவர் முருகவேள் போற்றுவதுபோல், கலைநயத்தால் சம்பந்தர், கனிந்த அன்பால் மணிமொழியார், தொண்டின் திறத்தினால் நாவரசர், உலகியலால் சுந்தரனார், வீண்பற்றில்லாத துறவுள்ளத்தால் பட்டினத்தார், பொதுமை உணர்வால் வள்ளலார் என்று சொல்லும்படி விளங்கினார்கள். அக்காலத்தில் அவர்கள் ஆற்றிய விரிவுரைகள் அளவில்லாதன. அந்த விரிவுரை வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள். அடிகளாரின் 'சிவஞான போத விரிவுரை', 'கந்தர் அனுபூதி விரிவுரை', 'திருக்கோவையார் நுட்பம்', 'அருட்பெருஞ்சோதி அகவல் உரை' ஆகியவை அடிகளாரின் அணுக்க அன்பர்களின் ஆசிரியப் பேரன்பினால் நூலுருவாக வெளிவந்துள்ளன. 'சொல்லுகின்ற சொற்களெல்லாம் கவிதையாகும்' என்ற புகழுக்குரிய குருகுலப் பெருங்கவிஞர் சி.து. கன்னிசாமி அவர்கள் 'அழகரடிகள் அம்மானை', 'அழகரடிகள் பிள்ளைத் தமிழ்ப் பதிகம்' போன்ற நூல்களை இயற்றியுள்ளார்கள்.

**திருமுறைத் தொண்டு**

'சென்னை சிவனடியார் திருக்கூட்டச்' சார்பில் திருக்கழுக்குன்றத்தில் ஆனி மகத் திருநாளில் 'திருமுறைத் திருவிழா' நடைபெறச் செய்தார்கள். திருஞானசம்பந்தர் திருநாளில் திருக்கழுக்குன்றத்தில் திருமுறைவாணர்கள் கூடித் 'திருமுறை இசை விழா' நடத்த வேண்டுமென்று விரும்பினார்கள். அந்தப் பொறுப்பை இசைப் பேரரசி *சேலம் செயலட்சுமி* அவர்களுக்கு அளித்தார்கள். 'அப்பர் தொண்டரணி'யும் நிறுவினார்கள். 'சுந்தரர் திருநாளும்' கொண்டாடுவதற்கு ஆவன செய்தார்கள். திருமுறை ஆசிரியர்களைப் போன்று சைவ சமய எழுச்சியும், கிளர்ச்சியும் தரும் 'திருத்தலப் பயணங்களைச்' சென்னைச் சிவனடியார்கள் கூட்டச் சார்பில் மேற்கொண்டார்கள். '*சைவம்*' இதழாசிரியராகவும் விளங்கினார்கள்.

**தொடரும் தொண்டு**

ஔவைக்கு அதியனும், கபிலருக்குப் பாரியும் போல, அடிகளாரிடம் பெருமதிப்பும், பேரன்பும் கொண்டு விளங்கிய அறப்பேரொளி கயப்பாக்கம் முத்துலிங்க ரெட்டியார் அவர்களும், அவர்களை

அடுத்து அவர்களுடைய இளவல் வேளாண்மாமணி முத்து மல்லா ரெட்டியார் அவர்களும், குருகுலப் புரவலராக விளங்குகின்றார்கள். அடிகளாரின் அணுக்க அன்பர்கள் என்ற பெருமைக்குரிய ந.ரா. ஆடலரசு, ஆறுமுக அடிகள், வ.ஏ. சண்முகம், க.ந. பலராமன், நு. மகாலிங்கம் ஆகியோர் அடிகளாரின் குறிக்கோளை ஏற்று, திருமுறைத் தொண்டினைத் தொடர்கின்றார்கள்.

**திருக்குறள் செயலகம்**

1949இல் மாம்பாக்கத்தில் திருக்குறள் செயலகமாகக் 'குருகுலம்' என்ற பேரமைப்பைத் தொடங்கினார்கள். குருகுலம் என்பது இவ்விடத்து மாணவர்கள் கல்வி பயிலும் இடத்தைக் குறிப்பதன்று. திருவள்ளுவரைக் குருவாகக் கொண்ட ஆர்வலர், அன்பர், மாணவர்களின் குலம் (கூட்டம்) என்று பொருள்தரும். திருக்குறள் கருத்துக்களைப் பார்த்த அளவிலேயே புரிந்துகொள்ளும்படிச் செயல்முகத்தால் விளக்குவதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்தமைத்தார்கள்.

தமிழகத்தின் பாடல்பெற்ற தலங்கள்தோறும் குருகுலக் கிளை நிலையங்கள் அமைய வேண்டும், ஒவ்வொரு நிலையமும் குருகுலத்தில் ஒவ்வோர் அதிகாரச் செயலை மேற்கொள்ள வேண்டும் என்றும் திட்டமிட்டார்கள். இது நாடு தழுவிய மிகப் பெரிய திட்டம். இன்று ஒல்லும் வகையிலான பணிகள் குருகுலத்தில் நடைபெற்று வருகின்றன.

**திருக்குறள் முழக்கம்**

தமிழகத்தின் சென்னிப்பதியாக விளங்கும் சென்னையம்பதியில் பேட்டைதோறும் திருக்குறள் முழக்கம் செழிக்கச் செய்தார்கள். ஒருமுறை குருகுலத்திற்கு வருகைதந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள், "யாரும் நினைத்துப் பார்க்காத நேரத்தில், யாரும் நினைத்துப் பார்க்காத முறையில் அடிகளார் திருக்குறளுக்குத் தொண்டு செய்தவர்கள்" என்ற பாராட்டினார்கள். 'முல்லைக் கொடி' என்ற பிறை இதழையும் பின்னர் 'பொதுமறை' திங்கள் இதழையும் தொடங்கினார்கள். பொதுமறை இதழ் தொடர்ந்து வெளிவருகின்றது.

**திருக்குறளில் சமய நோக்கு**

அடிகளார் திருக்குறளுக்கு செய்த பணிகளில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் நிறுவியுள்ள மு.வ. திருக்குறள் பரிசுத் திட்டத்தின்படி வெளிவந்த 'திருக்குறள் அறம்' சிறப்புடையது. இந்நூல் சமய நோக்கில் அமைந்தது என்று திறனாய்வாளர் கருதுவர். அடிகளாரே, "தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தாம் தெய்வ உணர்வில் திளைத்தற்கு ஏதாவது ஒரு தகுதியான சமய நெறியை மேற்கொண்டிருப்பார்" என்றும், "சமய நெறியிலும், தன்னலத்தை ஏற்றிக் கொண்டு தவிக்கும் பலதரமான மக்களுக்கு எவ்வகையான காழ்ப்பும் உண்டாகாதபடி பொது முறையில் தமது திருக்குறள் மறையை இரக்கத்தோடு அருளிச் செய்திருக்கிறார்" என்றும், "நுணுகி நோக்குவார்க்குச் சிறப்பியல் உண்மைகள் கட்டாயம் வெளிப்பட்டுவிடும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**அடிகளார் காட்டும் சமய உண்மைகள்**

திருவள்ளுவர், கடவுளின் இயல்பு உரைத்து, கடவுளின் அருள் விளக்கமாகிய வான் சிறப்புக் கூறி, வான் சிறப்புக்குக் காரணமாகிய நீத்தார் பெருமை பேசி, நீத்தாருக்குப் பெருமை தருகின்ற அறத்தின் வலிமையை எடுத்துரைக்கின்றார் என்று திருக்குறள் பாயிரத்தெளிவில் கூறியுள்ளார்கள்.

'பெரிய புராண விரிவுரை'யில், திருக்குறளின் 'நீத்தார் பெருமை'யும் பெரியபுராணத் 'திருக்கூட்டச் சிறப்பு'ம் ஒருங்குவைத்து எண்ணத்தக்கன என்றும் கூறியுள்ளார்கள்.

சிறப்பியல் நோக்கில் ஆதிபகவன் என்பதற்கு, அம்மையப்பன் என்றும், இருள், மருள், மாசு என்பவற்றிற்கு ஆணவம், கன்மம், மாயை என்றும் பொருள்கொண்டு அதற்குக் காரணமும் காட்டுவார்கள். காமம், வெகுளி, மயக்கம் என்னும் அகக் குற்றங்கள் மும்மலங்களின் குற்றங்கள் என்று கூறுவார்கள்.

### சிவஞானபோதச் சிறப்புரை

'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகுதல்' என்பதன் விரிவும், விளக்கமுமே சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தத் தலைமணி நூல் சிவஞானபோதம். சிவஞானபோத ஐந்தாம் நூற்பாவில் உலகம், உயிர், கடவுள் என்ற மூன்று பொருள்களும் இடம்பெறுகின்றன. உலகம் உயிர்களின் முன்னே காட்சி அளிக்கின்றது. இறைவன் உயிர்களுக்கு உலகத்தைக் காட்டுகின்றான். கடவுளால் உலகத்தைக் காண்கின்ற உயிர்கள் கடவுளைக் காண்பதில்லை. இதுவே ஐந்தாம் நூற்பா உணர்த்தும் உண்மை.

### அடிகளார் தரும் விளக்கம்

இந்நூற்பாவினை விளக்குமிடத்து, புறமனம் வெளியுலகத்தோடு தொடர்பு கொள்கின்றது. உயிர் நடுமனத்தில் இருக்கின்றது. இறைவன் அடிமனத்தில் இருக்கின்றான். உயிர்கள் புறமனத்தோடு கூடி, வெளியுலகத் தொடர்பு கொள்ளும்போது இடர்ப்பாடுகள் எதிர்ப்படுகின்றன. ஆனால் அடிமனத்திலுள்ள இறைவனோடு தொடர்பு கொண்டு, பின்னர் வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற வாழ்வியல் பேருண்மையினையும் விளக்கியுள்ளார்கள். திருஞானசம்பந்தர் சமணர்களோடு வாதிடச் சென்றபோது, திருக்கோயிலுக்குச் சென்று, இறைவன் இசைவு பெற்றே சென்றதனையும் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

### சித்தாந்த நுட்பம்

அடிகளார் 1955இல் 'குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட ஆண்டு விழா'வில் '*அன்பின் பிழம்பு*' என்ற தலைப்பில் விரிவுரையாற்றத் தொடங்கியபோது, திருக்கூட்டத்தலைவர் சிவசேனாதிபதி குமாரசாமிச் செட்டியார் அவர்கள் கண்ணப்பர் வரலாற்றில் சித்தாந்த நுட்பங்களைக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

கண்ணப்பரை அலைக்கழித்து அவருக்கு நீர்வேட்கை ஏற்படுத்திய (வீழ்த்தப்பட்ட) பன்றியே ஆணவ மலம் என்றும், நாணனும் காடனும் நல்வினை, தீவினை என்றும் கூறினார்கள். நாம் செய்த நல்வினை தீவினைகளே நமக்குச் சுற்றமாச் சூழ்ந்துகொள்வதனை இவ்விளக்கம் உணர்த்துவதாக உள்ளது.

### பழ அடியாரும், புத்தடியாரும்

'சிவஞானபோத ஆராய்ச்சிப் பேருரை'யில் பன்னிரண்டாம் நூற்பா விளக்கத்தில் 'அன்பர் என்பவர் பழ அடியார் என்றும், 'வேடமும் தொழுக' என்னுமிடத்தில் குறிப்பிடப்படுபவர் புத்தடியார் என்றும் கூறியுள்ளார்கள். அரன் கழல் நாடிச் செல்லும் அருள் ஞானச் செலவில் நம்மைவிடப் பெரியவர்களாகிய அயராத அன்புடையவர்களைப் பின்பற்றிச் செல்லுதலும் புத்தடியாரை அரவணைத்துச் செல்லுதலும் முறைமையாகும் என்பதனை இவ்விளக்கத்தினால் உணரலாம்.

இங்ஙனம் அடிகளார் தம்முடைய செவ்விய, சீரிய சிந்தனைகளால் சைவத் தமிழ் உலகத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்கள். நினைந்துருகும் அன்பர்கள்தம் உள்ளத்தில் தமிழும், சிவமும், தவமும் கலந்தொளிரும் திருக்கோலத்தோடு என்றென்றும் விளங்குபவர்கள்.

வாழ்க அடிகளார் புகழ்! வளர்க அவர்கள் தொடங்கிய தொண்டு!

## 10. சைவப்பெருந்தொண்டர் முத்துசாமி பிள்ளை

– சித்தாந்த இரத்தினம் பேராசிரியர் சே.கு. சாந்தமூர்த்தி, எம்.ஏ., பிஎல், டிப். இதழியல் *மேனாள் சைவசித்தாந்தா ஆங்கில இதழ்த் துணை ஆசிரியர், திரு.வி.க. பணி மன்ற நிறுவனர்.*

**குடும்பம்**

தெய்வத் தமிழகத்தில் அருளும் பொருளும் பொங்கும் கொங்குச்சீமையில் 1904ஆம் ஆண்டில் கார்காத்த வேளாளர் மரபில் கோ.மு. முத்துசாமி பிள்ளை பிறந்தார். இவரது பெற்றோர் பழனியம்மையும் முத்துக்குமாரபிள்ளையும் ஆவர் உள்ளூர் 'டைமண்டு ஜூபிலி' உயர்நிலைப் பள்ளியில் படித்தார். தமிழிலக்கணத்தில் முதன்மை பெற்றமைக்காக இவரது தமிழாசான் இலட்சுமி நரசய்யர் பரிந்துரையால் அரசு உதவி நிதி கிடைத்தது. முயன்று கல்வியில் முன்னேறி இளங்கலை பட்டம் பெற்றார். மாநில அரசின் வருவாய்த் துறையில் வேலை கிடைத்தது. குணவதியாம் தங்கம்மாளை மணந்தார். ஒரே மகள் திருவாட்டி தனம்மாளை மணந்த மருமகன் திருவாளர் பழனிச்சாமி ஆவார். முத்துசாமி பிள்ளையின் மனைவி தங்கம்மாள் 1982ஆண்டில் காலமானார்.

**மாவட்ட ஆட்சியர் பணி**

1926 முதல் 1947 வரை கோவை, ஈரோடு, காங்கேயம், 1948ல் கரூர், 1949-ல் லால்குடி, முசிறி, 1950ல் தஞ்சை ஆகிய இடங்களில் துணைவட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் பணி புரிந்தார். தஞ்சையில் இருந்தபோது தம் அலுவலகத் தோழர் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமானின் தூண்டுதலால் தமிழ்ப்புலவர் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். புலமை பெற உதவியோர் 'இளங்காடு பொன்னண்ணர் களத்தில் வென்றான் யோகியாரும்' திருவையாறு கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராய் இருந்த மும்மொழிக்கொண்டல் பெ. திருஞானசம்பந்தமும் (பின்னாளில் பெருமன்றத் தலைவராயும் திகழ்ந்தவர்) ஆவர்.

நாளடைவில் தம் திறமையும் நேர்மையும் கொண்ட மனம் நிறை உழைப்பால் இந்திய ஆட்சிப்பணியில் (இ.ஆ.ப. - I.A.S.) தகுதி எய்தி மாவட்ட ஆட்சியர் பதவிக்கு உயர்ந்தார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராக விளங்கியபோது முதுகளத்தூர் கலவரம் விளைத்த

பொதுமக்களை நல்வழிப்படுத்த இவரே, 'ஊருக்கு நல்ல பிள்ளை வீட்டுக்குச் செல்லபிள்ளை', 'பேயோட்டுவோம்' 'கற்புக்கரசி கண்கண்ட தெய்வம்' போன்ற நாடகங்களை இயற்றி மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படுத்தினார். வட்டார வளர்ச்சிப் பணியாளர்களை கிராமங்களில் நடிக்கச் செய்து கள், சாதிவெறி முதலிய தீமைகளுக்கு எதிராக மக்களைச் சீர்திருத்தி சமூக அமைதிக்குப் பாராட்டத்தக்க பணிகள் புரிந்து ஒய்வு பெற்றார்.

**மொழி பெயர்ப்புப் பணி**

மாவட்ட ஆட்சியாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு இவர் முன்னரேபெற்ற தமிழ்ப் புலவர் தகுதி அடிப்படையில் தமிழக அரசு ஆட்சிமொழிக்குழுவில் மொழி பெயர்ப்புத் தனி அலுவலர் என்ற பதவியில் அமர்த்தப் பெற்றார். அப்பணியில் இருந்த ஏழாண்டுகளில் எண்ணற்ற சட்டவிதிக்கையேடுகளைத் தமிழாக்கம் செய்து சாதனை படைத்தார். அக்குழுவில் அதே காலத்தில் இவருடன் ஆட்சி மொழி ஆய்வராகக் கீ. இராமலிங்கனாரும், குழுச்செயலராக சிவநெறிச்செம்மல் கொ.நீ. சிங்கார வேலுவும் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுக்குழுப் பணி:**

அ) இந்து சமய அறநிலையத் துறை வழங்கிய 'சைவ சித்தாந்த வல்லுநர் குழு' உறுப்பினர் மற்றும் தலைவர் பதவிகளில் சில ஆண்டுகள் அணிசெய்தார்.

ஆ) திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமனம் முதலியவை குறித்து ஆய்வறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட நீதியரசர் மகராசன் குழு உறுப்பினராக சித்தாந்தம் ஆசிரியர் மு. அருணாசலத்துடன் இவரும் பணியாற்றும் சிறப்பினைப் பெற்றார்.

**சைவசித்தாந்தப் பெருமன்றத் தொண்டு**

முத்துசாமிபிள்ளை கோவையில் இருபதாண்டுகள் அரசுப்பணியில் நீடித்த காலத்தில், பேரூர் சாந்தலிங்க அடிகளார் சைவத்திருமடத்தில் 'சத்வித்யா சன்மார்க்க சங்கம்' நிகழ்த்திய மாசிமக குருபூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்; ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார், மருதூர் கணேச சாஸ்திரிகள், சூளை வீரசுப்பைய சுவாமிகள் போன்ற சான்றோர் பேருரைகளைக் கேட்கும் பேறு கிட்டியது. இப்பின்னணியில் தமிழக அரசுச் செயலாளர் சித்தாந்தச் செம்மல் நல். முருகேச முதலியார் 1953ல் சைவப்பணியாற்றுமாறு முத்துசாமிபிள்ளைக்குச் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தை அறிமுகம் செய்துவைத்தார். 1957ல் பெருமன்றச் செயலாளராகவும், 1962 முதல் 1969 வரை ஏழாண்டுகள் இப்பேரமைப்பின் தலைவராகவும் அருந்தொண்டு ஆற்றினார். 1964ல் பேரூரில் நடந்த 59வது ஆண்டுப் பெருமன்ற மாநாட்டில் 'சைவ சித்தாந்தா' என்ற பெயரில் ஆங்கிலத்தில் முத்திங்கள் இதழ் தொடங்கத் தீர்மானம் நிறைவேற்றினார். இத்திட்டத்திற்குரிய நிதி பற்றிய அறைகூவலை எதிர்கொண்டு, கருமமே கண்ணாகி நூறு உறுப்பினரையும் நிதியையும் திரட்டினார். அடுத்த ஆண்டே 1965ல் சிதம்பரத்தில் கூடிய பெருமன்ற வைர விழாவில் நல். முருகேசனாரை ஆசிரியராக்கி, 'சைவ சித்தாந்தா' ஆங்கில காலாண்டு ஏட்டின் முதல் இதழை வெளியிட்டு வெற்றி கண்டார். திருமயிலையில் 1968ல் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் தலைமையிலும் 1969ல் காஞ்சியில் நல். முருகேசனார் தலைமையிலும் பின்னாளில் 1991ல் திருவொற்றியூரிலும் பெருமன்ற மாநாடுகள் நடைபெறவும் முத்துசாமி பிள்ளைதான் பெருங்காரணராகத் திகழ்ந்தார் என்பது நாடறிந்த உண்மை.

1970-இல் வேலூரில் பெருமன்ற 65ஆம் ஆண்டுச் சைவர் மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றினார். 1971இல் மதுரைப் பல்கலைக் கழகத்தில் 'சைவ சித்தாந்த இருக்கை' நிறுவ அமைக்கப்பட்ட நிதிக்குழு உறுப்பினராகத் திகழ்ந்தார். 1973 முதல் 1976 வரை பெருமன்றக் காப்பாளராக விளங்கினார். 1977-ல் மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவில் உரையாற்றினார். தொடர்ந்து பெருமன்றப் பணியாளர் குழு ஆங்கில சைவ சித்தாந்தா முத்திங்கள் இதழ் ஆலோசனைக்குழுக்களில் இடம் பெற்றார். 1986 பிப்பிரவரியில் ஆயிரம் பிறைகண்ட சைவப் பெரியார் வரிசையில் பெருமன்றம் பாராட்டிச் சிறப்புச் செய்தது. 1987-இல் சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை மற்றும் கோவைகிழார் இராமச்சந்திரன் செட்டியார் நூற்றாண்டுவிழாச் சிறப்புரைகள் வழங்கினார். 1988இல் புதுவையில் நடந்த பெருமன்றத்தின் 82ஆம் ஆண்டு விழா மாநாட்டில் தலைமை வசித்தார். தமது பேருரையில் தமக்குச் சைவத்தொண்டில் வழிகாட்டிய பெருமக்கள் என்று மயிலைகிழார் 'மாதவதாசன்' ம. பாலசுப்பிரமணிய முதலியார், சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம்பிள்ளை, திருமுறைக் காவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் மூவரையும் போற்றினார். அத்துடன் ஆட்சிமொழிக்காவலர் கீ. இராமலிங்கனார், 'திருக்கோயில்' மற்றும் 'சித்தாந்தம்' ஆசிரியர் ந.ரா. முருகவேள், வை. குஞ்சிதபாதம், சொ. சண்முகம், மு. நாராயணசாமி முதலியார், மா. தியாகராசன், பி.எம். நாயனார், அ. இராமசாமி, க.கலியாணம் என்னும் ஒன்பதின்மரையும் பெருமன்றத்தொண்டில் தம்முடன் நெருங்கிப் பழகிய உத்தமத் தோழர்கள் என்று பதிவு செய்து சிறப்பித்தார். 1990-இல் தஞ்சை மாநாட்டில் 'சைவசமய ஆக்கப்பணி மற்றும் சமூக வாழ்க்கையில் இலக்கியத்தின் பங்கு' குறித்த கருத்தரங்கில் வாழ்த்துரை வழங்கினார். 1991 மார்ச்சில் திரு.வி.க. மணிமண்டபத்தில் பெருமன்றம் எடுத்த 'ஆயிரம் பிறைகண்ட சைவம் வளர்த்த சான்றோர்' மு. அருணாசலம், கொ. நீ. சிங்கார வேலு, கி.இல. பழனிச்சாமி, நெ.த. கிருஷ்ணசாமி ஆகிய நால்வர் முத்துவிழாவுக்குத் தலைமை பூண்டு பாராட்டுரை பகன்றார். 1991 ஜூலையில் திருவொற்றியூரில் நிகழ்ந்த பெருமன்றத்தின் 85ஆம் ஆண்டுவிழா மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் பொறுப்பேற்று புது முயற்சிகளாக காதொலி மருத்துவ இலவச முகாமும், குழந்தைகளுக்குச் சிவபூசைப்பயிற்சியும் நடத்தித் தாம் தொகுத்த 'திருவொற்றியூர் தியாகராசர் திருக்கோயில்' நூலும் வெளியிட்டார். தம் முதுமையையும் பொருட்படுத்தாது, 1993ல் பெருமன்ற ஆங்கில வெளியீடாகிய 'சைவ சித்தாந்தா' முத்திங்கள் இதழின் ஆசிரியர் பொறுப்பேற்று தலையங்கக் கட்டுரைகள் தீட்டி தம் இறுதிமூச்சு வரை சீரிய சிவப்பணியில் ஒளிர்ந்தார்.

### எழுத்துப்பணி

திரு. முத்துசாமி பிள்ளை தமிழில் பல சமய நூல்களும், ஆங்கிலத்தில் சில நூல்களும் எழுதியுள்ளார். சித்தாந்தம் இதழ் முதலியவற்றில் சில நல்ல கட்டுரைகளும் வரைந்திருக்கிறார். இவரது நூல்களில் சில : சைவ சித்தாந்தத் தேனமுது, திருப்புகழில் சைவ சித்தாந்தம், திருஞானசம்பந்தரும் சமய மறுமலர்ச்சியும், சிவராத்திரி பிரதோஷ வழிபாடுகள், திருவான்மியூர் மருந்தீசர் நாடகம், விசுவநாதர் கோயில் - (காசியிலும் தமிழகத்திலும்) என்பன. இவரது திருமயிலையும், பூம்பாவையும், சைவப் புண்ணியக் கண்கள், சிவலிங்க வழிபாடு என்ற மூன்று நூல்களும் முனைவர் சு. இராசசேகரன் என்பவரால் எழுதப்பட்ட 'திருமயிலைத் திருத்தலம் இலக்கிய வரலாற்றுப் பார்வை' என்றஆய்வேட்டில் துணை நூல்கள் என்று பதிவுத் தகுதி பெற்றன. 1988ல் தமிழ் உரைநடை வரலாறும் நெறிமுறைகளும் என்ற இருநூறு பக்க ஆய்வுநூலை வெளியிட்டார்.

1968ஆம் ஆண்டிலேயே இவர் எழுதிய வள்ளலார் போதனையும் சாதனையும் குறித்த Thiru Arutprakasa Vallalar Ramalinga Swamigals Teachings and Achievements என்ற அரிய ஆங்கில நூலும் (110 பக்கம்) வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கோ. மு. முத்துசாமி பிள்ளையைச் சிறப்பாசிரியராகக் கொண்டு '**கோயில் களஞ்சியம்**' அறிமுகத் தொகுதியும், வடஆற்காடு கோயில்கள் குறித்த இருபெருந்தொகுதிகளும், காஞ்சிபுரம் கோயில்கள் பற்றி ஒரு தொகுதியும், 2004 வரை **தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தால்** வெளியிடப்பட்டன. மற்றும் மகாமகமும் கும்பகோணமும், சிதம்பரம், திருவரங்கம், திருவானைக்கா, தக்கோலம் கோயில்கள் குறித்து தனித்தனி சிறுநூல்களை எழுதிவெளியிட்டார். 'சித்தாந்தம்', மற்றும் 'Saiva Siddhantha' இதழ்க் கட்டுரைகளாகவும் பலவற்றை எழுதியுள்ளார்.

**தமிழகப் புலவர்** குழுத் தலைவராகவும் திகழ்ந்து 'ஓங்கு தமிழ்' என்ற முத்திங்கள் இதழ் மலரவும் காரணராக அமைந்தார் என்பதும் கருதத்தக்கது. பல முதிய ஓதுவாரும், புலவர்களும் அரசு உதவி பெற பரிந்துரை செய்து வாழ்வித்தார்.

தமிழும் சைவமும் தழைக்க பல்வேறு தொண்டுகள் புரிந்த வித்தகர் முத்துசாமி பிள்ளை 4-1-1995 தம் 91வது வயதில் சிவன் சேவடி சேர்ந்தார். இச்செந்தமிழ்ச் சிவநெறிப் பெருஞ்சீலராகிய '**நினைப்பரிய தனிப்பெரியோன்**' புகழ் தமிழ் கூறும் நல்லுலகில் நின்று நிலவுக!

## 11. சைவச் செம்மல் சுப்பிரமணியம்

– துணைத் தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம், தஞ்சை.

யு. சுப்பிரமணியனார் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) 11.7.1922இல் டி. உலகநாதத் தஞ்சைராயரின் மகனாகப் பிறந்தார். சொந்த ஊர் தஞ்சை மாவட்டம் மிலட்டூர் கிராமம். குடந்தை கலைக்கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்து 1948இல் கரூரில் திரு. முத்துசாமி பிள்ளை அவர்கள் துணை ஆட்சியராக இருந்தபோது தலைமை எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். ஆரம்பப் பணியிலிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர், அறநிலையத்துறை ஆணையர் போன்ற உயர் பொறுப்புகளை ஏற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்து, இரண்டு ஆண்டுகள் பணி நீட்டிப்பினைத் தொடர்ந்து 1982இல் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

சமுதாயப்பணி

**தஞ்சை சைவ சித்தாந்தப் பெருமன்றம்:** இந்த மன்றத்திற்கு அமரர் யு. சுப்பிரமணியனார் ரூ. 10,000/- அறக்கட்டளை நிறுவி புத்தணர்வு அளித்தார். இப்பெருமன்றம் முதலில் திருச்சிற்றம்பலம் சிவத்திரு. மு. அருணாசலம், எம்.ஏ. அவர்களைத் தலைவராகக்கொண்டு இயங்கியது. பிறகு யு.சு. அவர்கள் 4.5.86லிருந்து தலைவர் பொறுப்பேற்றுக் கடைசிவரை (27-10-1991) மாதக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தி சிறப்பித்து வந்தார். சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் மாநில மாநாடு 1990 பிப்ரவரி திங்கள் இவருடைய தனிப்பட்ட முயற்சியால் மிகச் சிறப்பாக தஞ்சையில் நடத்தப்பெற்றது. மாநாடு செலவு போக மிகுந்த ரூ. 3,400/-ஐ தஞ்சை மன்றத்தின் பெயரில் வைப்பு நிதியாகச் செலுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் திருவாரூர் மாநாட்டிற்கு ரூ 2,000/- தஞ்சை மன்றப் புத்தக வெளியீட்டிற்காக ரூ. 2,500/- நன்கொடை அளித்து உதவினர்.

**தஞ்சைத் தமிழ்ச் சங்கம்:** தமிழ் மொழி வளர்ச்சிக்காக யு.சு. அறக்கட்டளை நிறுவி சங்கத்தைத் துவக்கி மாதக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வந்தார்.

**சால்பகம்:** சைவ வளர்ச்சி மற்றும் தமிழ் வளர்ச்சிக்காக யு.சு. அறக்கட்டளை நிறுவி, அந்நாளைய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் கா. காளிமுத்து அவர்களையும் கொண்டு துவங்கி 3 வரலாற்று நூல்கள், 8 தமிழ் வளர்ச்சி நூல்கள், 3 சைவ சமய நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார்.

தமிழர் சமயம், தமிழர் வேதம், தமிழர் கோயில்கள் என்ற ஆராய்ச்சி நூல் எழுதி வெளியிட்டார். இந்நூலை ஆய்வு செய்து பல மாத, நாள் இதழ்கள் உயர்நீதிமன்ற நீதிபதி, ஆதீன கர்த்தர்கள், மன்றங்கள், கவிஞர்கள், ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அலுவலர்கள் பாராட்டி வாழ்த்துக்களை வழங்கி உள்ளனர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் இந்நூலைப் பாராட்டி ரூ. 5,000/- பரிசு வழங்கியுள்ளது. தமிழகப் புலவர் குழுவினர், இந்நூலை ஆராய்ந்து, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 21.4.91ல் பாராட்டி மகிழ்ந்தனர்.

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற ஆண்டுவிழாவில், சைவ இளைஞர் மாநாடு அறக்கட்டளை ரூ. 3,000/- 12.5.90ல் யு.சு. அவர்களால் நிறுவப்பெற்று இந்நூல் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவு நடந்து வருகிறது.

முடிவுரை: யு. சுப்பிரமணியனார் அவர்கள் அறநிலையத்துறை ஆணையராக இருந்தபோது, சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றம், தற்பொழுதுள்ள இடத்தைக் குறைந்த வாடக்கைக்கு மன்றத்திற்கு அமைத்துக் கொடுத்தார்கள்.

சென்னை "சைவ சித்தாந்த மகா சமாஜம்" என்ற பெயரில் இருந்ததை 1981ம் ஆண்டு சென்னை "சைவசித்தாந்தப் பெருமன்றம்" எனப் பெயர் மாற்றம் செய்யக் காரணமாக இருந்தார்.

பெருமன்றத்தில் 87ம் ஆண்டு அறிக்கையில் "காப்பாளர்கள்" என்ற சான்றோர்கள் வரிசையில் திரு. யு. சுப்ரமணியன் அவர்களும் ஒருவராகக் குறிப்பிடப் பெற்றுள்ளார்.

யு. சுப்பிரமணியனார் அவர்கள் சைவசித்தாந்தப் பேரறிஞராய், தமிழ் இலக்கியச் சான்றோராய், சமுதாயத் தொண்டராய் விளங்கினார்.

# V. ஓங்கும் திருமுறைகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | திருமுறைச் சிறப்பு | - நர. ஆடலரசு | 1 |
| 2. | திருமுறைகளில் திருத்தில்லை | - க. வெள்ளைவாரணனார் | 2 |
| 3. | மூவர் தேவாரங்களில் தில்லைச் சிற்றம்பலம் | - சு. பாலசுந்தரம் | 12 |
| 4. | சிவ தாண்டவம் - சில குறிப்புகள் | - பி. சந்தோஷ்குமார் | 15 |
| 5. | கால்மாறியாடிய கூத்தன் | - மு.அ. மாணிக்கவேலு | 19 |
| 6. | கண்ணப்பர் வரலாறு உணர்த்தும் உண்மை | - சிவ. மாதவன் | 22 |
| 7. | அந்தாதியின் அற்புதம் | - மு. பாலகிருஷ்ணன் | 25 |
| 8. | காரைக்காலம்மையும் அக்கமாதேவியும் | - எம்.எஸ். சாந்தா | 31 |
| 9. | திருநாவுக்கரசர் | - விஜயலட்சுமி இராமசாமி | 36 |
| 10. | தேவார மரபுப் பின்னணி | - ச. கங்காதரன் | 40 |
| 11. | தேவாரத்திரட்டு | - ஜெ. மகாதேவன் | 44 |
| 12. | இயற்கை வளம் போற்றும் தேவாரம் | - கு. சேது சுப்பிரமணியன் | 46 |
| 13. | தேவாரத்தில் சைவ சித்தாந்தம் | - வ.த. இராமசுப்பிரமணியம் | 49 |
| 14. | திருத்தொண்டத் தொகை : தோற்றமும் ஏற்றமும் | - கே. சந்தானராமன் | 52 |
| 15. | திருவாசகம் | - முத்து சு. மாணிக்கவாசகனார் | 56 |
| 16. | பாடல் நெறி | - தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் | 62 |
| 17. | ஞானப்பாடல் | - க. சம்பந்தனார் | 67 |
| 18. | திருமந்திரத்தில் மறைமொழிச் சொற்கள் | - சரளா இராசகோபாலன் | 71 |
| 19. | ஒரு பண்டைத் திருமுகம் | - பாலூர் கண்ணப்பர் | 74 |
| 20. | பெரிய புராணத்தில் சைவ சித்தாந்தம் | - சொ. பரமசிவம் | 79 |
| 21. | திருமுறைச் சிறப்புகள் | - கி. மஞ்சுளா | 83 |
| 22. | தாயுமானார் போற்றும் அருளாளர்கள் | - கு. சுந்தரமூர்த்தி | 88 |
| 23. | தாயுமானவர் பாடல்களில் சைவ சித்தாந்தம் | - சு.ந. சொக்கலிங்கம் | 91 |
| 24. | சிறுவர்க்கான சைவ சமய விளக்கம் | - முருகு. இராமலிங்கம் | 96 |
| 25. | தோத்திர நெறி | - சிவ. பார்வதி | 99 |
| 26. | ஆறுமுக நாவலரின் வேதாகமக் கோட்பாடு | - க. கணேசலிங்கம் | 102 |
| 27. | ஞானியார் அடிகளின் துதிகளும் மாலையும் - ஓர் அறிமுகம் | - வ. ஞானப்பிரகாசம் | 107-111 |

# 1. திருமுறைச் சிறப்பு

- சிவநெறிச் செம்மல் சிவத்திருத் தொண்டர் ந.ரா. ஆடலரசு,
சென்னை - 15

1. உலகியலைக் காத்தல் உயிர்நலங்கள் ஓம்பல்
கலையியலைக் காணிக்கை யாக்கி - நிலவும்
அருளியலால் எங்கும் அமைதிநிலை நாட்டல்
திருமுறைகள் செய்யும் சிறப்பு.

2. இம்மை மறுமை எனும் இருமை வாழ்க்கைக்கும்
செம்மை நெறி காட்டும் சிந்தை நெறி - வெம்மை நிலை
மாற்று முயர் மந்திரமாம் மன்னு திருமுறைகள்
போற்றவரும் பொற்புகளெல் லாம்.

3. வாழ்வியலின் உண்மை கண்டு வாழும் நெறியிவற்றைத்
தாழ்வின்றிச் சாற்றும் தகவுடனே - ஏழுமைந்தும்
ஆயதிருமுறைகள் ஆன்ற அருமருந்தாய்த்
தோயும் துயர் துடைக்கு மால்.

4. வள்ளுவனார் மெய்ந்நெறியில் வந்த திருமுறையைக்
கள்ளமிலா தோதியுயிர் கட்கிரங்கி - மெள்ள மெள்ளத்
தம்மைத் திருத்திக் கொள்வோர் உலகில் தாழாமல்
செம்மை மிக வாழ்வர் செழித்து.

5. சாதி உணர்வகற்றிச் சார்ந்தே ஒருகுலமாய்
மேதினியெல்லாம் தெய்வ மேன்மையினைப் - போதித்தே
ஒன்றாய் உறவாகி ஒப்புரவுற்றே உயர
நன்றாம் திருமுறையை நாடு.

6. மனக்கவலை மாற்றும் மருந்தாகும், எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும் - தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப் போல
வையத் துயர்ந்தனஇல் மற்று.

7. வாழ்வைத் துறக்காமல் வாய்ப்பில் மயங்காமல்
மூழ்கித் திளைத்து முடங்காமல் - சூழ்வித்து
நீரைப் புணையால் கடக்கும் நிலையினுயர்
சீரைத் திருமுறையால் செய்.

8. உயிர் உலகம் ஒன்றாம் கடவுள் உலாத்தின்
செயல்யாவும் மற்றைச் சமயத்து - இயல்புகளும்
சாற்றுகின்ற மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றுதற்கு
ஊற்றாம் திருமுறைகள் ஓது.

9. தமிழர் நிலை ஓங்கத் தமிழ் வாழ வேண்டில்
அமிழ்தாம் திருமுறையை அன்பால் - சமய
நிலையங்கள் வாழ்க்கை நெறி நிகழ்ச்சி எல்லாம்
மலைவற வழங்குதலே மாண்பு.

10. வாழி, திருமுறைகள்! வாழி, சைவநெறி!
வாழி, பெருமன்றம் நீடுழி! - வாழி
உலகமெலாம் உண்மைச் சமயநெறி ஓர்ந்தே
அலகில் துயர் எல்லாம் அகன்று!

# 2. திருமுறைகளில் தில்லை*

- திருமுறையாராய்ச்சிக் கலைஞர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

உலக மக்கள் எல்லோரையும் தன்பால் ஈர்த்து உய்யும் நெறிகாட்டி யருளும் தெய்வத் திருத்தலங்கள் பலவற்றுள்ளும் தலைமை வாய்ந்தது தில்லைப்பதியாகும். 'பெருமை நன்றுடைய தில்லை' (4-57-4) எனத் திருநாவுக்கரசராற் போற்றப்பெறும் இத்தலம், உலகமாகிய புருடனுக்கு நெஞ்சத் தாமரையாகத் திகழ்வது. இதன்கண் அருள் ஞானப் பெருவெளியாகிய திருச்சிற்றம்பலத்திலே எல்லாம் வல்ல சிவபெருமான் மன்னுயிர்கள் உய்தி பெறுதல் வேண்டித் தனது அருட்சத்தியாகிய சிவகாமியம்மை காண ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருள்கின்றார் என அருள் நூல்கள் கூறுகின்றன. புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் ஆலின் கீழ் அமர்ந்த சிவலிங்கப் பெருமானைப் பெரும் பற்றாகக் கொண்டு வழிபாடு செய்தமையால் இது பெரும்பற்றப்புலியூர் எனவும் இங்குச் சிவபெருமான் அமர்ந்த அருள் நிலையம் பெரும்பற்றப்புலியூர்த் திருமூலட்டானம் எனவும் போற்றப் பெறுவனவாயின.

மனுவின் மைந்தனாகிய சிங்கவர்மன் தனது உடம்பின் கண் ஏற்பட்ட வெண்ணிற நோய் காரணமாக அரசாட்சியினை வெறுத்துப் பல தலங்களையும் வழிபட்டு வருபவன். இத்தலத்தில்

வியாக்கிரபாத முனிவரை வணங்கி அவர் பணித்த வண்ணம் சிவகங்கையில் நீராடித் தனது உடற் பிணி நீங்கிப் பொன்னிற மேனி பெற்றமையால் இரணியவர்மன் எனப் பெயர் பெற்றான். திருமாலுக்குப் பாம்பணையாகத் தொண்டு புரிந்த ஆதிசேடன், தாருகாவனத்தில் இறைவன் ஆடிய ஆனந்தத்திருக்கூத்தினைக் கண்டு மகிழ விரும்பிப் பதஞ்சலி முனிவராய் அவதரித்துத் தில்லைப்பதியை யடைந்து வியாக்கிரபாதமுனிவருடன் கூடி இறைவனை வழிபட்டிருந்தபோது அவ்விருவருங் காணச் சிவபெருமான் தில்லையம்பலத்திலே சிவகாமியம்மையுடன் தோன்றி ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருளினான் எனவும் அது முதல் அம்முனிவர்கள் வேண்டிக்கொண்ட வண்ணம் பல்லோரும் காண அத்திருக்கூத்தினை இடைவிடாது என்றும் ஆடியருள்கின்றான் எனவும் கோயிற் புராணம் கூறும்.

தில்லை மன்றுள் இறைவன் ஆடியருளும் இத்திருக்கூத்தினை மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர் ஆகியோருடன் கண்டு தொழுதவர், திருமுறை யாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவரும் சிறந்த சிவயோகியாருமாகிய திருமூல நாயனாராவர். இச்செய்தி,

*"நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்*<br>
*நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி*<br>
*மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்*<br>
*என்றிவ ரென்னோ டெண்மரு மாமே"* *(திருமந்திரம் - 67)*

எனவும்,

*"செப்புஞ் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும்*<br>
*அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்*<br>
*தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்*<br>
*ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே"* *(திருமந்திரம் - 74)*

எனவும் வரும் திருமூலர் வாய்மொழியால் நன்கு விளங்கும். தில்லைப் பெருமான் வியாக்கிரபாத முனிவருடைய குழந்தை பாலில்லாது அழுதபோது பாற்கடலையே வருவித்துக் குழந்தையின் பசிதீர்த்தருளினார். இச்செய்தி, 'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடலீந்தபிரான்' என வரும் திருப்பல்லாண்டிற் குறிக்கப் பெற்றுள்ளது.

பொற்பதியாகிய தில்லை, உலக புருடனின் நெஞ்சத்தாமரையாகவும் இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் சந்திக்கும் இடமாகவும் இறைவனது அருட்கூத்து நிகழும் இடமாகவுந் திகழ்வதனை,

*"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை*<br>
*கூரும் இமவான் இலங்கைக் குறியுறும்*<br>
*சாரும் தில்லைவனத் தண்மா மலயத்தூ*<br>
*டேறும் சுழுமுனை இவைசிவ பூமியே"* *(2747)*

என வரும் திருமந்திரம் இனிது புலப்படுத்துவதாகும்.

தில்லைப்பதியிலே நுண்ணிய ஞானவெளியாகிய திருச்சிற்றம்பலத்திலே இறைவன் நிகழ்த்தியருளும் அற்புதத் திருக்கூத்தினை நேரிற் கண்டு மகிழ்ந்தவர் திருமூலதேவர் என்பது,

*"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி*
*உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்*
*பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடம்*
*சிற்றம் பலமென்று தேர்ந்து கொண்டேனே"* (2770)

என வரும் திருமந்திரத்தாற் புலனாகும். 'நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி' என்றது ஆறாதாரங்களுள் ஆக்ஞை எனப்படும் இடத்தினை உற்று உற்றுப் பார்த்தல்-ஐம்புலனடக்கி ஒருமை நிலையிலிருந்து கூர்ந்து தியானித்தல், அங்ஙனம் தியானிக்கும் நிலையில் நாதாந்தத்தின் அஞ்செழுத்தாகிய மந்திரவுருவில் ஒளிப் பிழம்பாய் ஆடல் புரியும் இறைவனது திருக்கூத்துப் புலனாகும் என்பார். 'உற்றுற்றுப் பார்க்க ஒளி விடும் மந்திரம்' என்றார். உயிர்கள் தமக்குப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ள எல்லாப் பொருள்கட்கும் பற்றுக் கோடாகத் திகழ்பவன் பரமன் ஒருவனே என்றறிவுறுத்துவார். 'பற்றுக்குப் பற்றாய்ப் பரமனிருந்திடம்' என்றார். இறைவன் உயிர்களின் உள்ளமாகிய நெஞ்சக் கமலத்திலே நுண்ணிய பரவெளியாகிய ஞான ஆகாசமே இடமாக அருட் கூத்தியற்றுகின்றான் என்பதனைத் தில்லைச் சிற்றம்பலத் திருக்கூத்தினால் தெரிந்துகொண்டேன் என்பார். 'பரமன் இருப்பிடம் சிற்றம்பலமென்று தேர்ந்து கொண்டேனே, என்றார். "நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத் தஞ்செழுத்தாய் உற்றுருவாய் நின்றாடல்" (30) எனவும் "சிவாய நமவென்னுந் திருவெழுத்தஞ்சாலே, அவாய மற நின்றாடுவான்" (31) எனவும் வரும் உண்மை விளக்கத் தொடர்கள் இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கன.

மன்னுயிர்களின் சித்தத்தில் எழுந்தருளிய இறைவன் ஐம்பெரும் பூதங்கள், அவற்றிடமாகப் பொருள்களையறியும் வாயிலாகிய ஐம்பொறிகள், அவற்றின் வழி நிகழும் புலனுகர்வுகள், வேதப்பொருளாய் விளங்கும் திருவைந்தெழுத்து, வேதத்தின் மிக்க சிவாகமங்கள், கலைகள் காலம், ஊழி, சுவை முதலிய புலனுணர்வுகள் ஆகிய எல்லாவற்றிலும் வேறறக் கலந்து நின்று திருக்கூத்து நிகழ்த்தி யருளுந் திறத்தினை,

*"பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்*
*வேதங்கள் ஐந்தின் மிகும் ஆகமந்தன்னில்*
*ஓதும் கலைகாலம் ஊழியுடன் அண்டப்*
*போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே"* (2730)

எனவரும் திருமந்திரம் விரித்துரைக்கின்றது. புணர்தல் - வேறறக்கலத்தல்.

*"பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்*
*பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்*
*கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை*
*வேதங்கள் தொழுதேத்த விளங்குதில்லை கண்டேனே"* (கண்டபத்து - 10)

எனவரும் திருவாசகம், மேற்குறித்த திருமந்திரத்தை அடியொற்றி யமைந்துள்ளமை காணலாம்.

*"அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்*
*உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்*
*கண்டங் கரியான் கருணை திருவுருக்*
*கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே."* (2732)

எனவரும் திருமந்திரம், உமையம்மையார் காணத் திருவம்பலத்திலே இறைவன் ஆடியருளும் ஒரு பெருந்திருக்கூத்தின் இயல்பினை விரித்துரைப்பதாகும். இத்திருமந்திரப் பொருளை விரித்து விளக்கும் முறையில் அமைந்தது,

*'கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி*
*அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின்மேலாம்*
*சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று*
*பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி' (பெரிய-தில்லைவாழ் - 2)*

எனவரும் சேக்கிழார் நாயனார் வாய்மொழியாகும்.

சிற்றம்பலம் எனத் தில்லையம்பலத்தைக் குறித்து வழங்கும் இச்செந்தமிழ்ச் சொல்லே சிதாகாசம் என்ற பொதுப் பொருளில் சிதம்பரம் என வழங்கப் பெறுவதாயிற்று.

*எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி*
*எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்*
*எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்கும்*
*தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே. (2722)*

எனவரும் திருமந்திரப் பாடல் ஒன்றில் மட்டுமே சிதம்பரம் என்ற சொல் வழங்கப் பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளில் வேறு எங்கும் இப்பெயர் எடுத்தாளப் பெறவில்லை.

தாயின் முலைப்பாலையே உணவாகக் கொண்டு வளரும் பசுங் குழந்தைகட்கு நோய் வந்தால் அந்நோயைத் தீர்க்கும் மருந்தினை அக் குழந்தையின் குடர் தாங்காதென்று அம்மருந்தினைத் தாயே உண்டு அதன் பயனைக் குழந்தைகள் பெறும் நலம் பெறவுதவுதல் உலகியலிற் கண்டது. உலக மீன்ற பெருமாட்டியாகிய சிவகாமியன்னையும் இறைவனது திருக்கூத்தினை மன்னுயிர்கள் நேரிற்காண வியலாத நிலையில் அவ்வுயிர்களின் பிறவி நோய் நீங்கப் பெருமான் செய்தருளும் திருக்கூத்தினை தான் உடனிருந்து கண்டு அதன் பயனை மக்களுக்கு வழங்கியருள்கின்றார். இந்நுட்பம்,

*"அருமானவாண் முகத்தாள் அமர்ந்து காண*
*அமரர் கணந்தொழுதேத்த ஆடுகின்ற*
*பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானை" (6-1-3)*

என வரும் திருநாவுக்கரசர் வாய்மொழியாலும், இத் தொடர்ப் பொருளை விரித்து விளக்கும் முறையில்,

*"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென*
*நோயுண் மருந்து தாயுண் டாங்கு*
*மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப*
*வைய மீன்றளித்த தெய்வக் கற்பின்*
*அருள் சூற்கொண்ட வையரித் தடங்கண்*
*திருமாண் சாயல் திருந்திழை காணச்*
*சிற்சபை பொலியத் திருநடம் புரியும்*

*அற்புதக் கூத்த" (சிதம்பர மும்மணிக்கோவை. 2)*

என வரும் குமரகுருபரர் வாய்மொழியாலும் இனிது புலனாதல் காணலாம்.

மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் தில்லைக்குரியனவாகத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் எட்டும், சுந்தரர் திருப்பதிகம் ஒன்றும் ஆகப் பதினொரு திருப்பதிகங்கள் கிடைத்துள்ளன. தில்லைப்பதியை யடைந்த திருஞானசம்பந்தர் அண்ணலார் தமக்கு அளித்த ஞானமேயான அம்பலமும் தம் உள்ளத்தில் நிறைந்த ஞானத்தின் கண் நிகழும் ஆனந்தமாகிய ஒரு பெருந்தனிக் கூத்தும் ஆகிய தமது அகக் காட்சியினைத் தில்லைச் சிற்றம்பலத்திலே புறக்காட்சியாகவும் கண்ணாரக் கண்டு கும்பிட்டார். 'உணர்வின் நேர் பெற வருஞ்சிவ போகத்தினை உருவின்கண், அணையும் ஐம்பொறியளவினும் எளிவர அருளினை' என்று கூறித் தில்லையம்பல வாணரை வணங்கிக் 'கற்றாங்கு எரியோம்பி' என்னும் பதிகத்தைப் பாடித் தில்லை வாழந்தணர்களைச் சிறப்பித்தருளினார். திருவேட்களத்தினைத் தங்குமிடமாகக் கொண்டு காலந்தோறும் அம்பலவாணரை வழிபட்டு மகிழ்ந்தார். திருவேட்களத்திலிருந்து திருநீலகண்டப் பாணருடன் தில்லைப் பதியிற் புகுந்த போது இறைவனுக்குத் தொண்டு புரியும் தில்லை வாழந்தணர் அனைவரும் சிவகண நாதர்களாகத் தோன்றக் கண்டு அக் காட்சியைத் திருநீலகண்டப்பாணர்க்கும் காட்டி 'ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்' என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

ஊனாலும் உயிராலும் உள்ள பயன் பெற விழைந்து தேனாரும் மலர்ச் சோலைத் தில்லை யினையடைந்த திருநாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலவர் திருமுன் அணைந்த போது 'என்று வந்தாய்' என அன்புடன் வினவும் திருக்குறிப்புடன் கூத்தப் பெருமான் நாவுக்கரசர்க்குக் காட்சி கொடுத்தருளினார். இத்திருவருட் குறிப்பினைக் 'கரு நட்ட கண்டனை' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தில்,

*ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்*
*கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காகச்*
*சென்றுதொழு மின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்*
*'என்று வந்தாய்' எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே.*

என வரும் திருவிருத்தத்திற் குறித்துள்ளமை காணலாம். தம்மை நோக்கி 'என்று வந்தாய்' என இறைவன் வினவிய வினாவுக்கு விடை கூறுவார் போல,

*பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ*
*எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ யிகழவேண்டாம்*
*முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற*
*அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே*

என வரும் திருநேரிசையினையும் அன்னம் பாலிக்கும் என்னும் திருக்குறுந்தொகையினையும் பாடிப் போற்றினார். பின்பு திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய தலங்களை வணங்கிப் 'பனைக்கை மும்மத வேழ முரித்தவன்' என்னுந் திருக்குறுந்தொகையினைப் பாடித் தில்லையை யடைந்தார். 'அரியானை யந்தணர் தஞ் சிந்தையானை' என்னும் பெரிய திருத்தாண்டகம் பாடி அம்பலவரை வணங்கிச் 'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்குஞ் சென்னி' என்னும்

திருநேரிசையையும், 'பாளையுடைக்க முகோங்கி' என்னும் திருவிருத்தத்தினையும் பாடிப் போற்றினார்.

*குனித்த புருவமுங் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல்*
*மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த பொற்*
*பாதமுங் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே*
*யிந்த மாநிலத்தே.*

எனவும்,

*"வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்"*

எனவும் வரும் திருப்பாடல்களில் தில்லையைக் கண்டு வழிபடுதலே மக்கட் பிறப்பின் மேலான பயன் எனவும் இப்பயனைப் பெறுதற்குச் சாதனமாகிய இப்பிறப்பினை மதித்துப் போற்றுதல் வேண்டும் எனவும் அப்பரடிகள் அறிவுறுத்திய திறம் நினைந்து போற்றுதற்குரியதாகும். இறைவன் கோயில் கொண்டருளிய எல்லாத் தலங்களிலும் மிகவும் பெருமை வாய்ந்தது இத்தில்லைத் தலமே என்பதனைப் "பெருமை நன்றுடைய தில்லை" (4-57-4) என வரும் தொடரில் நாவுக்கரசர் குறித்துள்ளமை அறியத்தகுவதாகும். சிவபெருமான் பல்வேறு தலங்களிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பினும் அம்முதல்வனுடைய திருவருட் கலைகள் யாவும் ஒருங்கே புக்கு ஒடுங்கி நிற்கும் பொது நிலையும் இறைவன் அருட் கூத்தியற்றும் புலியூர்ச் சிற்றம்பலமே என்னும் உண்மையினை உணர்த்தும் முறையில் தாண்டக வேந்தர் அருளிய திருப்பதிகம் "மங்குல் மதி தவழும்" எனத் தொடங்கும் புக்க திருத்தாண்டகமாகும்.

நம்பியாரூராகிய சுந்தரர், தில்லைப்பதியையடைந்து இறைவனது திருக்கூத்தினைக் கண்டு வணங்கி மனிதப் பிறவியே அடியேற்கு வான் தரும் இன்பத்தை வழங்கியது எனக் கண்களில் நீர் சொரியக்கசிந்து அறிவரும் பதிகமாகிய சொன் மாலையிற் பரவிப் போற்றினார். சுந்தரர் கொங்கு நாட்டிற் பாண்டிக் கொடுமுடி முதலிய தலங்களைப் பணிந்து காஞ்சியாற்றின் கரையிலுள்ள பேரூர்த் திருக்கோயிலையடைந்த போது பேரூர்ப் பெருமான் தில்லை மன்றுள் நின்றாடுந் தமது திருக்கோலத்துடன் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்ட சுந்தரர், 'தில்லையம் பலவன் திருக்கூத்தினைக் கண்டு கும்பிடப் பெற்றால் இனிப் புறம் போய்ப் பெறுதற்கு யாதுளது' என்று கூறிப் பேரூரினின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் பாடிப் பரவித் தில்லைப்பதியை யடைந்து கூத்தப் பெருமானை ஆர்வமுறக் கண்டு தொழுதார். 'நன்னெறியில் ஒழுகியவர்கள் வழுவி நரகினையடைந்து துன்புறாதபடி தடுத்தாட் கொள்ள வல்ல இறைவனை நமக்கு உரிமையாகப் பெற்றோம்' எனத் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தும் முறையில் 'மடித்தாடும் அடிமைக் கணன்றியே' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். அப்பதிகத் திருக்கடைக் காப்பில் "மீ கொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றோ" எனத் தில்லையம்பலவன் கொங்கு நாட்டுப் பேரூரில் ஆடற் கோலம் காட்டியருளிய திறத்தைக் குறிப்பிட்டுள்ளமை காணலாம். பேரூர் இறைவன் தம் பொருட்டுத் தில்லைத் திருநடனத்தைக் காட்டியருளினமையால் அத்தலத் திறைவனைக் 'குடகத் தில்லையம்பல வாணன்' (7-10-2) என

நம்பியாரூரர் குறித்துள்ளமையும் இங்கு நினைக்கத்தகுவதாகும். பேரூர் மேலைச் சிதம்பரம் என வழங்குதற்கும் இந் நிகழ்ச்சியே காரணமாகும்.

'கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லை' எனவும், செல்வர் வாழ்தில்லை, விழாவாரணிதில்லை, சீலத்தார் தொழுதேத்துஞ் சிற்றம்பலம், தில்லைமாநகர்ச் சிற்றம்பலம், கற்றவர் தொழுதேத்துஞ் சிற்றம்பலம், தூய செம்பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம், தேரினார் மறுகில் திருவாரணி தில்லை' எனவும், புலியூர்ச் சிற்றம்பலம் எனவும் தேவாரத் திருமுறைகளில் இத்தலம் போற்றப் பெற்றுள்ளது.

திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவராகிய மணிவாசகப் பெருமான், திருப்பெருந்துறையிற் குருவாய் வந்தருளிய 'இறைவன் நலமலிதில்லையுட் கோலமார் தருபொது வினில் வருக' எனப் பணித்த வண்ணம் தில்லைப் பதியையடைந்து, கூத்தப் பெருமானை அழகிய மணி வார்த்தைகளால் பாடிப் பரவிப் புத்தரை வாதில் வென்று தவச்சாலையில் தங்கியிருந்தார். அப்போது இறைவனே மறை முனிவராகி வந்து திருவாசகம் முழுவதையும் எழுதிக்கொண்டதுடன் 'தில்லைச் சிற்றம்பலவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருட் கோவை யொன்று பாடித் தருக' எனக் கேட்டு அதனையும் எழுதிக்கொண்டு 'திருவாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையார் எழுதியது' எனத் தமது கைச் சாத்திட்டுத் தில்லையம்பலத்தில் வைத்து மறைந்தருளினார். அவ்வேட்டினைக் கண்டு வியப்புற்ற தில்லைவாழந்தணர்களும் அடியார்களும் திருவாதவூரடிகளை யடைந்து அதற்குப் பொருள் விரித்தருளும்படி வேண்ட அடிகளார் அவர்களுடன் தில்லைப் பொன்னம்பலத்தை யடைந்து 'திருவாசகத்துக்குப் பொருளாவார் தில்லையம்பலவரே' எனச் சுட்டிக்காட்டி எல்லோருங் காணத் தில்லையம்பலத்துட் புக்கு மறைந்தருளினார் என்பது வரலாறு. எனவே எட்டாந் திருமுறையாகிய திருவாசகமும் கோவைத் திருவாசகமும் தில்லைச் சிற்றம்பலத்துடன் நெருங்கிய தொடர்புடைய பனுவல்கள் என்பது நன்கு பெறப்படும்.

திருவாசகம், சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளையுடையது. அவற்றுள் இருபத்து நான்கு பகுதிகள் தில்லையில் அருளிச் செய்யப்பெற்றன. திருச்சிற்றம்பலக் கோவை முழுவதும் தில்லைச் சிற்றம்பலவனைப் போற்றும் தோத்திரமாகவும் அகனைந்திணைப் பொருளை நாடகமாக விரித்துக் கூறும் துறைப் பகுதிகளாகவும் அமைந்துள்ளது. முத்தி நெறியாகிய பேரின்ப நிலையினை யடைதற்குச் சாதனமாகிய பத்தி நெறியில் இலக்கியமாகத் திகழ்வது திருவாசகம். உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத ஒருவன் ஒருத்தியின் இன்ப அன்பினை வளர்க்கும் அகத்திணை யொழுகலாற்றை விரித்துக் கூறுமுகமாகப் பத்தி நெறியின் பயனாகிய முத்திநெறியின் பெற்றியினை உய்த்துணர வைப்பது திருச்சிற்றம்பலக் கோவை.

தில்லைப்பொன்னம்பலத்திலே சிவபெருமான் தென்திசை நோக்கி ஆடல் புரிந்தருளுந் திறத்தினைத் 'தென்பாலு கந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்' எனவும், 'தென் மாத்திசை வசை தீர்தரத்தில்லைச் சிற்றம்பலத்துள், என்மாத் தலைக்கழல் வைத்தெரியாடும் இறை' எனவும் வரும் தொடர்களாலும், பதஞ்சலி முனிவர் வேண்டுகோட்கிணங்கித் தில்லையில் இறைவன் ஆடல் காட்டியருளும் அற்புத நிகழ்ச்சியைப் 'பதஞ்சலிக்கருளிய பரமநாடக' எனவும் 'நாகந்தொழ எழில் அம்பலம் நண்ணி நடநவில்வோன்' எனவும் வரும் தொடர்களாலும் அடிகள் போற்றியுள்ளார். தில்லையில் அந்தணர் மூவராயிரவர் குழுமிக் கூத்தப் பிரானை வழிபடும் முறைமையினையும், தம் காலத்தில் தில்லையம்பலத் திருமுற்றத்தே திருமால் அறிதுயிலமர்ந்த கோலத்தில் இடம் பெற்றிருந்த செய்தியினையும் திருக்கோவையில் அடிகள் குறித்துள்ளமை காணலாம்.

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மரும் பாடிய திருவிசைப் பாப் பதிகங்கள் இருபத்தெட்டும் திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொன்பது திருப்பதிகங்களின் தொகுதி ஒன்பதாந் திருமுறையாகும். இவற்றுள் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மட்டும் பதினாறு பதிகங்கள் உள்ளன. அவற்றுள் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் 'மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள்' எனத் தில்லை மாநகரையும் அங்கு வந்து இறைவனை வழிபடும் சிவனடியார்களையும் வாழ்த்தித் தொடங்குகின்றது.

பல்லவர் மரபிலே தோன்றித் தொண்டை நாட்டையாண்ட வேந்தர் பெருமான் காடவர்கோன் என்பார் அரச பதவியை மைந்தரிடம் ஒப்படைத்துத் துறவூண்டு தில்லைச் சிற்றம்பலம் முதலிய ஒவ்வொரு திருக்கோயிலையும் ஒவ்வொரு வெண்பாவினாற் பாடிப் போற்றினார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பாவின் முதற் பாடல்,

*"ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே உற்றாரும்*
*கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற*
*நல்லசிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே*
*தில்லைச்சிற் றம்பலமே சேர்."*

என்பதாகும். நம்பியாரூரர்க்குத் தோழராய்க் களையாவுடலோடு கயிலை சென்ற சேரமான் பெருமாள் நாயனார், தில்லைத் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்த நிலையிற் பாடிப் பரவிய செந்தமிழ்ப் பனுவல் பொன்வண்ணத்தந்தாதி என்பதாகும். பொன்னார் மேனியனாகிய இறைவனைக் கண்டு காதலித்த தலைவியொருத்தி அவனையடையப் பெறாமையால் வருந்தித் தன்னுடம்பு பொன்போலும் பசலைநிறம் பெற்றுத் தானும் தன் தலைவனும் பொன்வண்ணமாகிய உருவொப்புமை பெற்று விளங்குந் தன்மையினைக் கூறுவதாக அமைந்தது.

*"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்*
*மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந்*
*தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்ட*
*என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே"*

எனவரும் இவ்வந்தாதியின் முதற்பாடல். இத்திருவந்தாதியின் முதற்பாடல் பொன்வண்ணம் எனத் தொடங்கி நூறாவது செய்யுள் பொன்வண்ணமே என முடிந்தது. அந்தாதியாய் அமைதலின் இது பொன்வண்ணத் தந்தாதியென்னும் பெயருடைய தாயிற்று.

"கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு அருளிய திருமுகத்தழகுறு சிறு நகை இறைவன்" எனவும், ஊன்புக்க வேற்காளியின் கோபந் தவிரத் "தேன்புக்க தண்பனை சூழ்தில்லைச் சிற்றம்பலவன் தான்புக்கு நட்டம் பயிலும்" எனவும் வரும் திருவாசகத்தை அடியொற்றிய நிலையில் நக்கீரதேவநாயனார்,

*"தாரகன்நன் மார்பிற்றனிச் சூலம் - வீரங்*
*கொடுத் தெறியு மாகாளி கோபந் தவிர*
*எடுத்த நடத்தியல்பு போற்றி"*

எனப் போற்றித் திருக்கலிவெண்பாவில் இறைவனது திருநடனத்தைப் பரவிப் போற்றியுள்ளார்.

இவ்வாறே பரணதேவநாயனாரும்,

*“ஆங்குரைக்கலாம் பொன் மலர்ப்பாத மஃதன்றே*
*யாங்குரைக்கலாம் பொன்னணிதில்லை - யாங்குரைத்த*
*அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலாய் நின்ற*
*அம்பலத்தும் அண்டத்து மாம்”* (சிவ-17)

எனவும்

*“அடுத்த பொன்னம்பல மேசார்வும் அதனுள்*
*அடுத்த திருநட்ட மதுவே”* (சிவ-26)

எனவும்,

*“ஆர் துணையாக அங்கிருப்பதம்பலவர்”* (சிவ 47)

எனவும் சிவபெருமான் திருவந்தாதியில் தில்லையைப் போற்றியுள்ளார்.

சிவநெறிச் செல்வர்களால் எத்தகைய அடைமொழியுமின்றிக் கோயில் எனப் போற்றப் பெறும் சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலம். திருவெண்காட்டடிகள் வெண்பா, கலித்துறை விருத்தம், அகவல் என்னும் நால்வகைப் பாக்களும் ஒன்றன்பின் ஒன்றாக, அந்தாதியாகத் தொடுத்துவர நால்வகை மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போன்று பாடிய பனுவல் கோயில் நான்மணிமாலை என்பதாகும். பதினோராந் திருமுறையில் அமைந்த இதன்பாடல்கள் யாவும் தில்லைப் பெருமானைப் போற்றிப் பரவும் தோத்திரமாகவும் சைவ சித்தாந்த நுண்பொருள்களை நுண்ணிதின் விளக்கும் சாத்திரமாகவும் விளங்குகின்றன.

கோயிலாகிய தில்லைச் சிற்றம்பலத்திலே அருட்கூத்தியற்றும் அம்பலவாணரைப் பண்ணார்ந்த விருத்தமாகிய கட்டளைக் கலித்துறையால் நம்பியாண்டார் நம்பி பரவிப் போற்றிய செந்தமிழ்ப் பனுவல் கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்பதாகும். பண்ணோடியன்ற பாடல் என்ற பொருளுடைய 'பண்ணியல் விருத்தம்' என்ற தொடர், 'லகரத்திற்கு ரகரம் போலியாய்ப் பண்ணியர் விருத்தம்' என்றாயிற்று. இனி, 'கோயில் திருப்பண்ணியர்' என்ற தொடர்க்குத் 'தில்லைப்பெருங்கோயிலில் திருத்தகவினதாகிய அருட்கூத்தினை நிகழ்த்தியருளுபவர்' எனப் பொருள் கொண்டு கூத்தப் பெருமானைப் பரவிய விருத்தம் எனப் பொருளுரைத்தற்கும் இடமுண்டு. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடியதுடன் தேவாரத் திருமுறைகளைப் பரவிப் போற்றினார் என்பது திருமுறைகண்ட வரலாறாகும்.

அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான் அநபாய சோழன் விரும்பிய வண்ணம் தில்லைப்பதியையடைந்து பொன்னம்பலவாணரை வழிபட்டு 'உலகெலாம்' என அம்பலவர் அருளிய மெய்ம்மொழியை முதலாகக் கொண்டு,

*உலகெலா முணர்ந் தோதற் கரியவன்*
*நிலவுலா வியநீர் மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

என அம்பலவாணரை வாழ்த்தி வணங்கித் திருத்தொண்டர் புராணமாகிய வரலாற்றுக் காப்பியத்தினைத் தில்லைப்பதியில் தங்கிப் பாடி முடித்தருளினார். இவ்வரலாற்றை உமாபதிசிவம் தாம் இயற்றிய சேக்கிழார் நாயனார் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளமை இங்கு உணர்தற்கரியதாகும்.

'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' ராகிய சேக்கிழார் நாயனார், தில்லைவாழந்தணர் புராணத் தொடக்கத்தில்,

*ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்*
*சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்*
*பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்*
*போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.*

எனத் தில்லைத் திருக்கூத்தினைப் பரவிப் போற்றுகின்றார். இத்திருப்பாடலும் இதனையடுத்து வரும் 'கற்பனை கடந்த சோதி' என்ற முதற் குறிப்புடைய திருப்பாடலும் எல்லாம் வல்ல இறைவனது உண்மை யிலக்கணத்தினையும், அம்முதல்வன் மன்னுயிர்கள் உய்திபெறத்தில்லைத் திருவாளர் திருச்சிற்றம்பலத்தில் நிகழ்த்தியருளும் அற்புதத் திருக்கூத்தின் நுட்பத்தினையும் நன்கு புலப்படுத்துவனவாகும்.

தில்லைநகரில் சிறப்புடைத் திருமுடி சூடிய இரண்டாங் குலோத்துங்க சோழமன்னன் காலத்தில் வாழ்ந்த அருண்மொழித்தேவர், தம் காலத்து மருதத்தண்பனையும் தாமரை மலர்ந்த ஓடையும் திருநந்தவனமும் சோலைகளும் மதிலும் புறத்தே சூழப்பெற்று, எழுநிலைக் கோபுரங்களையுடைய அழகிய திருவீதியினைப் பெற்று விளங்கிய தில்லை மாநகரின் எழில் நலத்தினைத் தடுத்தாட் கொண்ட புராணத்திலும் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும் திருஞானசம்பந்தர் புராணத்திலும் சொல்லோவியஞ் செய்து காட்டியுள்ளார். நம்பியாரூரர் வடதிசை வாயிலாகவும் திருநாவுக்கரசர் மேற்றிசை வாயிலாகவும் ஆளுடைய பிள்ளையார் தென்திசை வாயிலாகவும் தில்லைப்பதியை யடைந்த வழியமைப்பினைச் சேக்கிழாரடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவனும் அளவில்லாத பேரொளியினனும் ஆகிய இறைவன் ஆடல்புரிந்தருளும் ஞான நிலையமாகிய திருவளர் திருச்சிற்றம்பலம், அருமறைகளின் முதலிலும் நடுவிலும் கடையிலும் அன்பர்கள் சிந்தையிலும் விரிந்து விளங்கும் திருவளரும் ஒளியினாற் சூழப்பெற்றுத் தூய செம்பொன்னினால் (திருவைந்தெழுத்து) எழுதிவேய்ந்த சிறப்பினையுடையதாகும். இந் நுட்பத்தினை

*அருமறை முதலில் நடுவினிற் கடையில்*
*அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த*
*திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம்* (பெரிய தடுத்தாட் - 104)

எனவரும் தொடரில் சேக்கிழார் நாயனார் புலப்படுத்திய திறம் நினைந்து போற்றுதற்குரியதாகும்.

# 3. மூவர் தேவாரங்களில் தில்லைச் சிற்றம்பலம்

- பேராசிரியர் முனைவர் சு. பாலசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி.,
*தமிழ்த்துறைத் தலைவர், எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி, சென்னை.*

தில்லை என்பது தலத்தையும் திருச்சிற்றம்பலம் என்பது சிவபரம்பொருள் அருட்கூத்து நிகழ்த்தும் அம்பலத்தையும் குறிப்பன. பிற சிவ தலங்களினும் மிகத் தொன்மையானது தில்லைச் சிற்றம்பலம் ஆகும். சங்க நூல்களில் காணப்பெறும் மதுரை வெள்ளியம்பலத்தைப்பற்றிய குறிப்பு அதன் பழமையை உணர்த்தும். அதற்கு முன்னதாகத் தில்லைப் பொன்னம்பலம் இருந்ததனால்தான் வெள்ளியம்பலம் புதிதாக ஏற்பட்டது என்று அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையை மேற்கோள்காட்டி மு. அருணாசலம் நிறுவுவர்.

மறைமலையடிகளாரும் தில்லைச் சிற்றம்பலம் இந்நிலவுலகில் முதற்கண் உண்டாகிய திருக்கோயில் ஆகும் என்றும், சைவப் பெருமக்களின் "சிவராஜதளி" என்றும், பொன்னம்பலத்தை ஒருகாற் சொல்லின் அது "சிவ" என்னும் திருமறையை இருபத்தோராயிரத்து அறுநூறு முறை சொல்லி உருவேற்றியதற்கு ஒப்பான பெரும்பலனைத் தரும் என்றும் விளக்குவர். திருச்சிற்றம்பலத்தில் உள்ள கூத்தப் பெருமானே அனைத்துக்கும் ஆதாரமானவன் என்பது சைவ உலகம் கொண்ட நம்பிக்கை. "கோயில்" என்னும் சொல்லானது தில்லையில் கூத்தப்பெருமான் விளங்கும் பொன்னம்பலத்தையே குறிக்கும் என்பர் வை. இரத்தினசபாபதி.

இத்தலத்தையே கோயில் எனச் சிறந்தெடுத்தோதுதலும், உடம்பினுள் இறையனார் வெளிப்பட்டு நின்று ஆடல் இயற்ற நிற்கும் நெஞ்சகம்போல் உலகினுள் அவ்வாறு நிற்றல்பற்றி என்க. "இறைவன் ஏனைத் தலங்களினும் எழுந்தருளி அருள் செய்தார் ஆயினும் தில்லைச் சிற்றம்பலமே அவர் உறைவிடமாகும் எனத் தில்லைச் சிற்றம்பலமே "கோயில்" எனப்படுதலை விளக்கியவாறு என்னும் சி. அருணைவடிவேல் முதலியாரின் குறிப்புரையும் நோக்கத்தக்கது. மேலும் புராண, இதிகாச, உபநிடதக் கருத்துக்களோடும் திருமூலரின் திருவாக்கின்படியும் தில்லைச் சிற்றம்பலத்தின் தொன்மையை அறிய முடிகிறது.

பல்வகைப் பெருமைகளையும் சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு திகழும் தில்லைச் சிற்றம்பலத்தையும், அம்பலத்து அருட்கூத்து நிகழ்த்தும் ஆதி இறையையும் மூவரும் பாடிப் பரவியுள்ள "கோயில்" பதிகங்கள் பதினொன்றினைச் சிறப்பாகவும் பிற பதிகக் குறிப்புகளைப் பொதுவாகவும் கொண்டு இங்கு விளக்கப்பெறுகிறது.

தில்லைச் சிற்றம்பலத்து ஆதியைப் புகழ்ந்து போற்றும் வகையில் திருஞானசம்பந்தர், கற்றாங்கெரியொம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம், பரப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ் சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம், செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச் செல்வ மதிதோய செல்வ முயர்கின்ற செல்வர் வாழ்தில்லை, திருமகளோடு கூடிய பெரிய தில்லைச் சிற்றம்பலம் என்றும் சிவாகமங்களைக் கற்றும் நாற்பாதங்களிலும் வல்ல

சைவப்பெருமக்கள் தொழுது ஏத்தும் சிற்றம்பலம் என்பதனைக் "கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலம்" என்றும் மேலும் பலவாறு போற்றிப் பரவுகின்றார்.

சம்பந்தர் சிற்றம்பலத்துப் பெருமானைக் குறிப்பிட்டுப் பரவுகையில் "சிற்றம்பலமேய பிறப்பில் பெருமான்" என்கிறார். பிறப்பில்லாப் பெருமான் சிவன் ஒருவனே ஆவன். பிறவா யாக்கைப் பெரியோன் என்று சமணத் துறவி இளங்கோவடிகளும், பிறப்பிலி இறப்பிலி என்று வைணவ ஆழ்வார் வில்லிபுத்தூராரும் போற்றியிருப்பதை இங்கு ஒப்பு நோக்கலாம். மறைகளை உலகிற்குத் தந்தவனான சிவன் உலகேத்தும் வண்ணம் உறையும் கோயில் சிற்றம்பலம் என்றும், எல்லாத் தலங்களுள்ளும் ஓர் ஆண்டிற்குள் ஆறு நாள் அபிடேக விசேடமுடைய தலம் சிதம்பரமே ஆதலின், "ஆடினாய் நறுநெய்யோடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலமே நாடினாய் இடமாய்" என்றும் போற்றுகின்றார். உலகில் எத்தனையோ தலங்கள் இருக்க, தில்லைச் சிற்றம்பலத்தை இட்டமாக விரும்பியது என்கொலோ என்று ஒரு பாடலில் பரவுவதன் மூலம் பெருமான் தான் நடம் செய்வதற்கு ஏற்ற இடமாகத் தில்லைச் சிற்றம்பலத்தையே தேர்வு செய்தான் என்னும் பேருண்மை பெறப்படுகிறது.

தில்லைச் சிற்றம்பலமே அவன் நிலையாகத் தங்கும் இடம் என்பதை, "சிற்றம்பலம் மன்னினாய்" என்னும் வாக்கினால் உணர்த்துகின்றார். மேலும் ஆதியாய்க் கிடமாய சிற்றம்பலம் .... ஏரினால் அமர்ந்தாய்" என்று பணிவதால் ஞான கானத்தால் வழிபடுதலை யொழியாததொரு செம்மையால் அழகான திருச்சிற்றம்பலத்தைத் திருக்கூத்தெழுச்சியினால் விரும்பியவன் எனும் பொருளமைப்பால் ஈசனின் திருக்கூத்துக்கு ஏற்ற இடம் சிற்றம்பலமே என்பது பெறப்படுகிறது.

மூவருள் திருநாவுக்கரசரே தில்லைக்கூத்துத் தரிசனத்தில் அதிகமான ஈடுபாடும் நேயமும் கொண்டவர் என்பதை அவரின் கோயில் திருப்பதிகங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அப்பர் பெருமான் தில்லைச் சிற்றம்பலத்தைக் குறிப்பிடுகையில், மஞ்சடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலம், நாறு பூட் சோலைத் தில்லை நவின்ற சிற்றம்பலம், வையகந்தன்னின் மிக்க மல்கு சிற்றம்பலம், முதலான திருத்தொடர்களால் போற்றுகின்றார்.

தில்லைச் சிற்றம்பலத்தின் பெருமையானது அனைத்துத் தலங்களைக் காட்டிலும் மேலானது என்பதனை அறிவிக்கும் வகையில், "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம், பொன்னம்பாலிக்கும்" என்று தெரிவிக்கின்றார். பேரின்ப வீட்டினை நல்கும் தில்லைச் சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வைத் தரும் பெற்றிமை வாய்ந்ததாகும். அன்னம் என்பது வீட்டின்பத்தைக் குறிக்கும். "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்னும் திருவாசகத்தில் சோறு என்னும் சொல் பேரின்பம் என்னும் பொருளைத் தருவதால் உணரலாம். மேலும் தம் பதிகங்களில் தில்லைச் சிற்றம்பலத்தைப் போற்றும் வகையில் பலவாறாகக் குறிப்பிடுகின்றார்.

திருநாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலவனைப் போற்றுகையில், துஞ்சுதல் உற்ற ஆணவ இருளானது பிளந்து மறையுமாறு ஞானாக்கினி வடிவமாக இறைவன் கூத்து நிகழ்த்துமிடம் சிற்றம்பலம் என்கின்றார். எல்லோரும் பிறவியே வேண்டாம் என்று பிறவாமையை வேண்டி நிற்க, நாவுக்கரசர் தில்லைக் கூத்தைக் காணும் மனிதப் பிறவியை இன்னும் முதல்வன் கொடுப்பானோ என ஏங்கிப் பாடுகின்றார். தில்லைக் கூத்துக் காட்சியைக்கண்ட அளவிலேயே இவ்வுடம்பு உள்ளபோதே பரமுத்திப் பேரானந்த அதீத நிலையை எய்தித் திளைக்க வைப்பதால் இவ்வாறு வேண்டுகின்றார். இதனால் பிறதலத்து மூர்த்த தரிசனத்தைக் காட்டிலும் தில்லை தரிசனமே மானிட தேகம் உள்ளபோதே ஆனந்தம் விளைவிப்பது என்று அறியப்படும் பேருண்மையாகும்.

தில்லைச் சிற்றம்பலத்தானை "மூர்த்தியை முதலாய ஒருவனை" என்கின்றார். உலகத் தோற்றத்தின் முன் அதற்கு மூலமாய் முன்னின்ற ஒருவன் என்னும் பொருள் பொதிந்த இத்தொடர், "சத்தே முதற்கண் ஒன்றாய் அத்வீதியமாய் இருந்தது" என்னும் சாந்தோக்கிய உபநிடதத்தின் உரைபற்றி எழுந்ததாகும். மெய்த்தொண்டர் பெருமானின் திருக்கூத்தைக் கண்ட தம் கண்களால் மற்றெவற்றையும் காணார். திருக்கூத்து அல்லாதவற்றைக் காண்போர் பேய்த் தொண்டர், காணும் கண்கள் பீளை உடைய கண்கள் எனத் திருநாவுக்கரசர் பகர்வதிலிருந்து தில்லைக்கூத்துத் தரிசனத்தின் சிறப்பும் பெருமையும் அறியப்படுகின்றன.

அனைத்துத் தல மூர்த்தங்களின் கலைகள் சிற்றம்பலத்து ஒடுக்கம் என்பது தத்துவம். "வேதங்குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே அனைத்து நின்னில யங்காண்பானடியனேன் வந்தவாறே" - (இலயம் - ஒடுங்குதல்) என்னும் அப்பரின் வாக்கினால் இப்பேருண்மையினை அறிய முடிகிறது.

சுந்தரர் தில்லைக் கூத்துப் பெருமானைத் தம் பதிகத்துள் பொதுவாகப் போற்றி, ஈற்றடிகளில் "புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றோ" எனப் பரவுகின்றார்.

கோயில் திருப்பதிகங்களைத் தவிரப் பிற பதிகங்களில் அவ்வத்தலத்துப் பெருமானைப் போற்றித் துதி செய்யும்போது மூவரும் தில்லைச் சிற்றம்பலத்தையும் தில்லைக் கூத்தப் பெருமானையும் போற்றிப் பணிகின்றனர். சம்பந்தர் கீழைத் திருக்காட்டுப்பள்ளி இறைவனாரைப் பாடித் துதிக்கையில், திருமால், தில்லைக் கூத்தாகிய ஆனந்த நடனம் கண்டு மனம் நெகிழ்ந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். புகலி என்னும் சீர்காழித் தலத்துறை இறைவனை ஏகபாதம் என்னும் யாப்பமைப்பில், "புண்டரிகத்தவன் மேவிய புலியே, புண்டரிகத்தவன் மேவிய புகலியே" என்கிறார். இப்பதிக அடிகளில் தில்லை கனக சபையில் பெருமான் நிகழ்த்தும் ஞானானந்தக் கூத்து பற்றிய செய்தி பொதிந்துள்ள நுட்பமான கருத்தைச் ச. தண்டபாணி தேசிகர் சிறப்பாக எடுத்துரைப்பார். மேலும், திருச்செங்காட்டாங்குடி, திருவாழ்கொளிபுத்தூர், திருவுசாத்தானம், திருஅம்பர் மாகாளம் ஆகிய தலப் பதிகங்களில் தில்லைப் பொதுக்கூத்தினைச் சம்பந்தர் கருதிப்பாடுகின்றார். தில்லையில் தில்லைவாழ் அந்தணர்களை உருத்திர கணங்களாகத் தாம் கண்ட காட்சியினைத் திருமுறைக்காட்டுப் பதிகத்தில் உணர்த்துகின்ற பாங்கு நினைக்கத்தக்கதாகும்.

திருநாவுக்கரசரின் பிற பதிகங்களில் தில்லைச் சிற்றம்பலக் கூத்து சுட்டப்பெறுகின்றது. எல்லாக் கோயிலிலும் மிக்க தில்லையுள் இருப்பவனே என்று திருச்சத்தி முற்றத்திலும், மன்றனை என்று திருவண்ணாமலையிலும், தில்லையான் தென்பராய்த்துறைச் செல்வனை என்று திருப்பராய்த்துறையிலும், பொதுவில் நாயகன் என்று திருப்பூந்துருத்தியிலும், தில்லைச் சிற்றம்பலத்துறை செல்வனார் என்று திருச்சோற்றுத்துறையிலும் கண்டு போற்றுகின்றார். இவ்வாறே திருக்கோடிகா, திருவதிகை வீரட்டம், திருக்கருகாவூர், திருநாகைக்காரோணம், திருவாரூர் அரநெறி, திருவாரூர், திருவீழிமிழலை, திருப்புள்ளிருக்குவேளூர், திருப்புத்தூர், திருச்சாய்க்காடு, திருஆலம் பொழில், திருவையாறு ஆகிய பதிகங்களில் வைத்துப் பாடுகின்றார்.

பொதுப் பதிகங்களாகத் திகழ்வனவற்றுள் க்ஷேத்திரக் கோவையில் தில்லைச் சிற்றம்பலத்தையே முதலில் வைத்துப் பாடுகின்றார். இப்பதிகத்திற்குக் குறிப்புரை எழுதிய சி. அருணைவடிவேல் முதலியார், "தில்லையே மற்ற தலங்களைவிட முதன்மையானது" என்பதற்கு உரிய ஆதாரங்களைக் காட்டுவர். பாவநாசத் திருக்குறுந்தொகை, பாவநாசத் திருப்பதிகம்,

தனித்திருத்தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம், திருவங்கமாலை ஆகியவற்றுள்ளும் தில்லைக் கூத்தினைக் குறிப்பாகச் சுட்டுகின்றார்.

சுந்தரர், திருநாவலூர் பதிகத்துள் "ஆட்டங்கொண்டார் தில்லைச் சிற்றம்பலத்தே" என்றும் "பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப் புலியூர்" எனத் திருஇடையாறு பதிகத்திலும், "தில்லை அம்பலத்துள் நிறைந்தாடுங் கூத்தனை" என்று திருக்கோலக்கா பதிகத்திலும் தில்லைக் கூத்தினைச் சுட்டுகின்றார். திருக்கானப் பேர் பதிகத்தில் இறைவன் எத்தலத்தில் நடனம் செய்யினும், அதற்குச் சிறப்பிடம் தில்லையே எனப் பகர்வதுடன், அவர் பாடியுள்ள பொதுப் பதிகங்களான திருநாட்டுத் தொகைப் பதிகத்திலும், ஊர்த்தொகைப் பதிகத்திலும் தில்லைச் சிற்றம்பலத்தைக் குறிப்பிட்டுள்ளதையும் அறியலாம்.

இதுகாறும் மூவரும் தில்லைச் சிற்றம்பலத்தையும், தில்லைத் திருக்கூத்தினையும் எத்தகை உயர்வாகக் கொண்டு போற்றிப் பரவியுள்ளனர் என்பது உணரமுடிகின்றது.

## 4. சிவதாண்டவம் - சில குறிப்புகள்

- பி. சந்தோஷ்குமார், பி.எஸ்.சி., பி.டெக்.,
*(மேனேஜர், கிரௌண்ட் சப்போட், இந்தியன் ஏர்லைன்ஸ், சென்னை)*

உயிர்கள் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும், பேரின்ப நிலையில் சாவா மூவாப் பெருவாழ்வில் பொருந்துவதும் ஆடல்வல்லானின் அசைவினாலேயே நிகழ்கின்றன. தாண்டவங்கள் அல்லது நிருத்தங்கள் எனப்படுபவை யாவும் ஆடல்வல்லானின் அசைவுகளே. அஞ்செழுத்தின் இயக்கம் உருவமாகத் திகழ்வதே ஆடல்வல்லானின் ஆனந்தத் தாண்டவம் எனப்படுகின்றது.

மேலும், இறைவன் இயற்றும் பஞ்சகிருத்தியமே (ஐந்தொழிலே) ஆனந்தத் தாண்டவம் எனவும் படுகின்றது.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு".*
*(ஐந்தொழில் - தோற்றம், திதி, சங்காரம், திரோதம், முத்தி)*

மோனிகளாய் ஞானிகளாய் நிற்கும் சீவன்முத்தரின் தனிமன்றுள் நின்றாடும் எந்தையார் திருநாமம் அஞ்செழுத்தே திருஉருவாகக்கொண்டு மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டு மலம் சாய அமுக்கி அருள்தா னெடுத்து நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்தான் இறைவன் திருக்கூத்தெனப்படுகின்றது. இங்ஙனம் திருவைந்தெழுத்தால் உருவங்கொள்கின்ற சிவன் செய்யும் செயல்களெல்லாம் அவனது கூத்தாக அமைகின்றது. அக்கூத்துக்கள்தாம் பலவாகும் எனத் தெரிகின்றது. சிவன் ஆற்றியருளும் தொழில்கள் ஐந்தாவனபோல் அவன் இயற்றும் திருக்கூத்தும் ஐந்தெனத் தெரிகின்றது. அவை, சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்பனவாகும். இதனை,

*"சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்*
*சொற்பத மாம் அந்தச் சுந்தரக்கூத்தனைப்*
*பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை*
*அற்புதக் கூத்தனைப் யாரறிவாரன்றே."*

என்னும் திருமந்திரத்தால் அறியலாம். 1. ஆனந்தக்கூத்து இயற்றுவதற்கு அரங்காக நிற்பது சத்தியே என்பார் திருமூலர் அடுத்த மந்திரத்தில். இதனையே மனவாசகங்கடந்தார் 'பரையிடமா நின்று' என்பார். இந்த ஆனந்தக்கூத்தே சொரூபநிலைக் (இயற்கைநிலை அல்லது உண்மைநிலை) கூத்து என்றும், ஏனை நான்கும் தடத்தநிலை (பொதுத்தன்மை)க் கூத்து என்றும் கூறப்படுகின்றது. 2. சுந்தரக்கூத்து என்பது ஐந்தொழில் பற்றிய கூத்து என்றும், 3. சிவன் உருவத்திருமேனி கொண்டு பொற்பதிகளில் - தெய்வத்தன்மையுடைய தலங்களில் (ஐந்து சபைகளில்) அனைத்து வகையான கூத்துக்களையும் ஆடுவதே பொற்பதிக்கூத்து என்றும், 4. தில்லைத் திருக்கோயிலின்கண் உள்ள திருவம்பலத்தில் செய்யப்படும் கூத்தே பொற்றில்லைக் கூத்து என்றும், 5. கூத்தப் பெருமான் வணக்கமே அனைத்துத் திருமேனிகளின் வணக்கமாம். எனவே அவனது அனைத்து கூத்துக்களுமே அற்புதக் கூத்து என்றும் கூறப்படுகின்றன.

*"பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்*
*உரை உணர்வுக் கெட்ட ஒருவன் - வரைமகள்தான்*
*காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்*
*பேணுமவர்க் குண்டோ பிறப்பு"*
*(பரையிடம் - திருவம்பலம்)*

திருவம்பலத்தான் திருநடம் விரும்பிக்காண்பவர் பிறப்பறுப்பர் என்கின்றது இவ்வுண்மைவிளக்கச் செய்யுள்.

இதுகாறும் நாம் கண்ட ஆனந்த தாண்டவம் தவிர மேலும் ஓர் ஆறு தாண்டவங்கள் பேசப்படுகின்றன. அவை,

**சந்தியா தாண்டவம்:** இதுவே இறைவன் நந்திதேவரின் இருகொம்புகளுக்கிடையில் சந்திப்போதில் (பிரதோஷ காலங்களில்) நின்றாடும் கூத்து எனப்படுகின்றது. 'அந்தி நிருத்தம் அனல் கை ஏந்தி அழகன் ஆடுமே' - காரைக்கால் அம்மையார், மூத்த திருப்பதிகம். 'சந்திக்கண் நடமாடும் சதுரனை, அந்தி வண்ணனை ஆரழல் மூர்த்தியை' - பொது, மறக்கிற்பனே யென்னுங் குறந்தொகை 5:93:2.

**உமா தாண்டவம்:** உமைகாண நின்றாடியகூத்து. 'கூடிய இலயஞ் சதிபிழையாமைக் கொடியிடை உமையவள்காண, ஆடிய அழகா அருமறைப்பொருளே' - சுந்தரமூர்த்தி சுவாமிகள், வடதிருமுல்லைவாயில். 'காடரங்காவுமை காண அண்டத்திமையோர் தொழ நாடகமாடியை' - அப்பர், திருவீழிமிழலை. 3:9:7, 'இவரோடு மாறும், இவள் காணுமாறும் இதுதான் இவர்க்கோரியல்பே' - அப்பர், பொது. 4:8:3. 'ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்' - உபதேசம், திருமந்திரம். பக்.2.

**கௌரிதாண்டவம்:** உமாதேவியார் தம் கருமைநிறம் நீங்கத் தவம்செய்து செம்மைநிறம் பெற்றபோது அம்மையார் காண நின்றாடிய கூத்து. இக்கூத்து திருப்புத்தூர் திருக்கோயிலிலும், மாயூரம் திருக்கோயிலிலும் இறைவன் ஆடுவதாகக் கூறப்படுகின்றது.

**காளிகா தாண்டவம்:** இதுவே ஊர்த்துவ தாண்டவம் எனவும் கூறப்படுகின்றது. பழையனூர் திருவாலங்காட்டில் இவ்வூர்த்துவ தாண்டவத்தையும் காளிகாம்பாள் கோயிலையும் காணலாம். சிவன் படைப்புக் காலத்தில் உயிர்களைக் காளியின் பிடியிலிருந்து விடுவித்தற்கு ஆடிய தாண்டவம் இதுவே எனப்படுகின்றது. காளி, தாருகன் என்னும் அசுரனை அழித்த காலத்தில், (அவனது குருதி தரையில் விழுந்தால் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும் ஒவ்வொரு தாருகன் முளைத்து விடுவான் ஆகவே) அவனது குருதியைக் குடித்த காரணத்தால் அவனைப்போலவே உலகை அழிக்கத் தொடங்கியபொழுது அவளது கோபம் தணிய ஆடியது.

*"தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்*
*ஊன்புக்க வேற்காளிக்(கு) ஊட்டாங்காண் சாழலோ"*

என்பது திருவாசகம்.

**திரிபுர தாண்டவம்:** திரியும் முப்புரங்களைத் தீக்கிரையாக்கியபின் ஆடிய கூத்து. திருவதிகை வீரட்டத்தானத்துக்கருகில் நெய்வேலி நகருக்குள் இத்திருக்கோயிலைக் காணலாம். ஏவினையால் எயில் மூன்றும் எரித்த கோலத்தில் இறைவன் திருக்கரங்களில் அம்பும் வில்லும் திகழக் காணலாம்.

முப்புரம் எரித்தஞான்று மூவருக்கருள் செய்தானன்றோ, அதனை எடுத்துக் காட்டுமுகத்தான் நெய்வேலி பகுதியில் எங்கும் செம்மண்ணாகக் காண, ஓரிடம் மட்டும் வெள்ளை நிறத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அவ்விடம் வேகாக் கொல்லை என்னும் பெயர் பெற்றிருக்கின்றது. இம்மாதிரியான விடயங்கள் பல காணப்படுகின்றன. இத்திருநாட்டின்கண், மானசரோவர் எனும் தடாகத்துக்குப் பக்க இராவணஸ்தல் என்னும் பெயரால் ஒரு தடாகம் காணப்படுகின்றது. இராவணன் தவம் செய்த இடம் என்னும் அத்தடாகத்து உள்ள நீரை யாரும் தொடுவதில்லை என்றும் கூறப்படுகின்றது. பஸ்மாசுரனை எரித்த இடம் கயிலாயம் செல்லும் வழியில் பஸ்ம மலையாகக் காணப்படுகின்றது; கைவைத்தால் பஸ்மமாக வருகின்றது. தமிழ்நாட்டின்கண் காமனை எரித்த இடத்தில் இன்றளவும் கருமை நிறம் கொண்ட சாம்பல் எடுக்க எடுக்க வந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. கடலூருக்கருகில் கல்லினொடு பூட்டிக் கடலில் எறியப்பட்ட அல்லியம் பூம்பழனத்து ஆமூர் நாவுக்கரசனை கையேறவிட்ட இடம் கரையேறவிட்டகுப்பம் என்று இன்றளவும் காணப்படுகின்றது. இதுமாதிரி எவ்வளவோ சான்றுகள்.

அட்டவீரட்டச் செயல்களைப் பற்றிய உண்மைநிலை என்று கீழ்க்கண்ட கருத்தும் நிலவுகின்றது.

*"பூமன்சிரம் கண்டி அந்தகன் கோவல் புரமதிகை*
*மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்*
*காமன் குறுக்கை யமன் கடவூரிந்தக் காசினியில்*
*தேமன்று கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே"*

மேல் ஓதிய ஆண்மைச் செயல்கள் எட்டினையும் ஒருபுடையாகக் கருதுங்கால் கீழ்வருமாறு கொள்ளலாம். அந்தகன் - உடலுறாது உயிர் மலத்துடன் மட்டும் ஒட்டியிருக்கும் தொல்புலம்பு (புலம்பு - தனிமை) தக்கன் - ஆணவச் செருக்கு. இஃது உடலுடன் கூடியபின் தோன்றுவது. அயன், அரி, யான், எனது என்னும் செருக்கு. சலந்தரன் - கொடுவினை. தக்கன் ஆணவச் செருக்கினையும், அயன், அரி, யான், எனதெனும் செருக்கினையும், சலந்தரன் கொடுவினையையும் குறிக்கும், குறிப்பாதலான். இவை முறையே ஆணவம், மாயை, கன்மம் காரணமாகும். முப்புரம் மும்மல காரியம். அத்தியாகிய யானை - மயக்கம். காலன் - வெகுளி. காமன் - காமம். அவ்வெட்டினையும் நினைவூட்டும் வெண்பா வருமாறு:

*"தொல்புரம் பந்தகன் சொல்லாணவம் தக்கன்*
*மல்யான்யென தயன்மால் வன்மைவினை வல்ல*
*சலந்தரனாம் மும்மைபுரம் அத்திகாலன் காமன்*
*மலம் வெகுளி காமம் எண்வீறு"*

இக்கதைகள் உண்மையுணர்த்தும் புனைவு உருவகமே யென்னும் உண்மையினைத் திண்மையுற உலகுக்குணர்த்தியருளியவர் நம் திருமூலரேயாவர். ஏனைத் திருமுறைகள் அங்ஙனம் உணர்த்தாமைக்குக் காரணம் அவை இறைவன் புகழினையே முதன்மையாகக் கொண்டமையான் என்பர்.

இறைவன் திரிபுரம் எரிந்தது தமது சிரிப்பொன்றினாலேயே என்றும் கூறுவர். இதனை 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற, ஒன்றும் பெருமிகை உந்தீபற', 'தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும் அச்சு முறித்ததென் றுந்தீபற, அழிந்தன முப்புரம் உந்தீபற' எனும் திருவாக்குகளானும் அறியலாம்.

**சங்கார தாண்டவம்:** மகா சங்கார காலத்திலே ஆடும் கூத்து. 'ஈமப் புறங் காட்டிற் பேயோ டாடல் புரிவானே' - சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருஆலங்காட்டுப் பதிகம். சிவன் சருவ சங்காரத்தின் பின் உடல் அற்ற உயிர்களோடு கூடி நடனம் ஆடுதலே பேய்களோடு கூடி ஆடுவதாகும். கொடுகொட்டி, (கொடுகொட்டி என்பது இன்னியங்களின் ஒன்று என்னும் பொருள்படும்படியும் பாடுகின்றார் சொல்வேந்தர்) பாண்டரங்கம், காபாலம் என்னுங் கூத்துக்களே சங்கார தாண்டவம் எனக் கருதப்படுகின்றன. இறைவன் தன் தாண்டவத்தை இயற்றுகையில் உலகப் பொருள்கள் அனைத்தையும் அழித்துக் கொண்டே அவன் கையொட்டி ஆடினான்; இதுவே 'கொடுகொட்டி' எனலாயிற்று. அங்ஙனம் அழித்தவற்றின் வெண்சாம்பலைப் பூசியாடும் ஆடலே 'பாண்டரங்கம்' எனலாயிற்று. தலை யோடு முதலிய எலும்புகளை ஏந்தியும் தாங்கியும் நின்றாடும் ஆடலே 'காபாலம்' எனலாயிற்று என்பர்.

சங்காரத் தாண்டவம் அல்லது சம்ஹாரத்தாண்டவம் ஊழித்திருக் கூத்தாகவும் அந்தி நிருத்தமாகவும் கொள்ளப்படுதலும் உண்டு. சங்காரத் தாண்டவம் வேறு பிரளய தாண்டவம்

வேறு எனக் கருதுவதும் உண்டு. சிலர் சங்காரத் தாண்டவம் மார்க்கண்டேயருக்காகக் காலனை வதைக்கும் முகத்தான் சிவன் ஆடியது என்றும் கூறுவர்.

எழுவகைத் தாண்டவம் ஒருபுறமிருக்க இறைவனைத் துவாதசதாண்டவச் சிறப்பினனாகக்கருதி, ஆடல்வல்லானின் வியக்கத்தக்க தாண்டவங்களைத் தேர்ந்தெடுத்து ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், சிருங்காரத் தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முனிதாண்டவம், சங்கார தாண்டவம், உக்கிர தாண்டவம், பூதத் தாண்டவம், பிரளயதாண்டவம், புசங்கதாண்டவம், சுத்த தாண்டவம் எனப்பன்னிரெண்டாயும் இயம்புவர்.

# 5. கால் மாறி யாடிய கூத்தன்

- முனைவர் மு.அ. மாணிக்கவேலு, எம்.ஏ., எம்.பில். பிஎச்.டி.,
*முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை விவேகானந்தா கல்லூரி, சென்னை - 600 004.*

**முன்னுரை**

தமிழகத்தில் பெரும்பாலான கோயில்களில் ஆனந்த தாண்டவ நடராசர் திருமேனிகள்தான் காணப்படுகின்றன. ஆனால், ஒரு சில கோயில்களில் வேறுபட்ட நடராசர் திருமேனிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றே, 'கால் மாறியாடிய கூத்தன்' என்பது. கூத்தன் என்பது நடராசருக்கு முன் வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. நடராசர் என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்ட ஒன்று. இனி, கால் மாறியாடிய கூத்தனைப் பற்றிக் காண்போம்.

**திருமேனிகளின் அமைப்பு**

திருவாரூருக்குக் கிழக்கே 14 கி.மீ. தொலைவில் உள்ளது கிழ்வேளூர் என்னும் ஊர். இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் அட்சயலிங்க சுவாமி. அவ்விறைவனை, அப்பர் பெருமான் ஆறாம் திருமுறையில் 'கேடிலியப்பர்' என்று குறிக்கிறார்.[1]

அக்கோயில் திருமேனியின் பிரபையானது, நீண்ட வட்ட வடிவில் அமைந்துள்ளது. சடையானது ஐந்தைந்தாக இரு பக்கமும் பரவியுள்ளது. வலப்பக்கச் சடையில் கங்கையும், இடப்பக்கச் சடையில் பிறையும் காணப்படுகின்றன. நடராசரின் வலக்கைகளில் ஒன்று அபயக்கரமாகத் திகழ்கிறது, மற்றவற்றில் உடுக்கை, சூலம், மழு, கத்தி ஆகியன வுள்ளன. இடக்கைகளில் ஒன்று வேழ முத்திரையாகவுள்ளது. மற்றவற்றில் தீ, பாசம், தண்டம், கேடயம் ஆகியன வுள்ளன. அவருடைய வலக்கால் இறக்கிய நிலையில் உள்ளது. இடக்கால் வளைத்து ஊன்றப்பட்டுள்ளது. முயலகன் வலக்காலை மடித்துத் தூக்கியும் இடக்காலை மடித்து ஊன்றியும் படத்துள்ளான்; இடக்கையில் பாம்பைப் பிடித்துள்ளான்; பார்வை, தூக்கிய திருவடியை நோக்கியுள்ளது. வலது ஆள்காட்டி

விரலால் தூக்கிய திருவடியைச் சுட்டுகிறான். சிவகாமி பிரபையின்றி யுள்ளாள். பிரமா தாளம் போடுகிறார்; விஷ்ணு மத்தளம் வாசிக்கிறார்; சரசுவதி வீணை வாசிக்கிறாள்; இந்திரன் புல்லாங்குழல் ஊதுகிறான், இலட்சுமி கையால் தாளம் போடுகிறாள்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், வெள்ளியம்பலத்தில் உள்ள நடராசர் கற்சிலைக்கு அருகில் ஒரு கால் மாறி யாடிய திருமேனியுள்ளது. இந்நடராசருக்குப் பிரபை நீண்ட வடிவில் அமைந்துள்ளது. சடை ஐந்தைந்தாக இரு பக்கமும் பரவியுள்ளது. வலப்பக்கச் சடையில் கங்கையும், இடப்பக்கச் சடையில் பிறையும் காணப்படுகின்றன. நடராசரின் வலக்கைகளில் அபயக்கரத்தில் சூலமும், மற்றக் கைகளில் உடுக்கை, அங்குசம், பாசம், கதாயுதம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. இடக்கைகளில் ஒன்று வேழ முத்திரையில் உள்ளது. மற்றக் கைகளில் நெருப்பு, வில், கேடயம், தண்டம் ஆகியனவுள்ளன. காலடியில் உள்ள முயலகன் இடப்புறம் தலை வைத்துப் படுத்துள்ளான். வழக்கமான ஆனந்த தாண்டவத்தில் வலப்பக்கம் தலை வைத்துப் படுத்திருப்பான். அவன் இடக்கையில் பாம்பைப் பிடித்துள்ளான். வலக்கை ஆள்காட்டி விரலால் தூக்கிய திருவடியைச் சுட்டுகிறான். சிவகாமி பிரபையின்றி உள்ளாள்.

அக்கோயில் இரத்தின சபையில் உள்ள கால்மாறி ஆடிய நடராசர் திருமேனியின் பிரபையானது நீண்ட வட்டவடிவில் அமைந்துள்ளது. சடையானது மும் மூன்றாக இரு பக்கமும் பரவியுள்ளது. வலப்பக்கச் சடையில் கங்கையும், இடப்பக்கச் சடையில் பிறையும் இடம் பெற்றுள்ளன. நடராசரின் இடது உள்ளங்கையில் தீயுள்ளது. மற்றொரு கை வேழ முத்திரையாகவுள்ளது. வலது கையில் உடுக்கையுள்ளது. மற்றொரு கையான அபயக்கரத்தில் படமெடுத்த பாம்பு சுற்றிக்கொண்டுள்ளது. தூக்கிய திருவடி உயர்த்தித் தூக்கப்பட்டுள்ளது. முயலகன் வலக்காலை மடித்துத் தூக்கியும் இடக்காலை மடித்து நீட்டியும் படுத்துள்ளான்; வலக்கை ஆள்காட்டி விரலால் தூக்கிய திருவடியைச் சுட்டுகிறான்; இடக்கையில் பாம்பைப் பிடித்துள்ளான். சிவகாமி பிரபையின்றியுள்ளாள்.

திருப்பத்தூர் தாலுக்கா வன்னியன் சுரக்குடியில் ஸ்ரீ சொக்கநாதஸ்வாமி கோயிலில் இடக்காலை ஊன்றி, வலக்காலைத் தூக்கி ஆடும் நடராசர் திருமேனி உள்ளது என்கிறார் ச. தண்டபாணி தேசிகர்.[2] அக்கோயில் திருமேனியின் பிரபை வளைந்து, இறுதியில் நீண்டு உள்ளது. சடை இல்லை, வலக்கையில் உடுக்கையும், மற்றொன்று அபயக்கரமாகவும் உள்ளது. இடக்கையின் உள்ளங்கையில் தீயுள்ளது. மற்றொன்று வேழ முத்திரையாக உள்ளது. முயலகன் வலக்காலை மடித்து நீட்டியும், இடக்காலை மடித்து ஊன்றியும் படுத்துள்ளான்; வலக்கை ஆள்காட்டி விரலால் தூக்கிய திருவடியைச் சுட்டுகிறான்; இடக்கையில் பாம்பைப் பிடித்துள்ளான். சிவகாமி இல்லை.

மேற்கண்ட திருமேனிகளில் கீழ்வேளூர், மதுரை திருமேனிகளில் பத்துக் கைகள் காணப்படுகின்றன. மதுரை இரத்தினசபை நடராசருக்கும் வள்ளியம் சுரக்குடி நடராசர் திருமேனிக்கும் நான்கு கைகள்தான் உள்ளன. இதற்குக் காரணம் சிற்பியின் கைவண்ணமே.

**கால் மாறி யாடக் காரணம்**

இமயமலையில் சிவபெருமான் பார்வதியைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சியைக் காண உருத்திரர் முதலானோர் வடதிசையில் கூடினர். அதனால் தென்திசை தாழ்ந்தது. இதனையறிந்த சிவபெருமான் அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்பினார். வடதிசையும், தென்திசையும் சமனாகியது. திருமணம் இனிது நிறைவேறியது. அகத்தியருக்கு, இறைவன் தன்

திருமணக் கோலக்காட்சியினைக் காட்டினார். பின்னர் அகத்தியர் வலதுபாத தரிசனம் வேண்டினார். இறைவனும் வலது பாதத்தை மேலே உயர்த்தி ஆடிக் காட்டினார் எனக் கீழ்வேளூர் தலவரலாறு குறிப்பிடுகிறது.[3] இங்குதான் முதன்முதலில் இறைவன் கால்மாறியாடினான்; பின்னர்தான் மதுரையில் ஆடியது என்று அக்கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.[4]

புராணக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அகத்தியருக்காக இறைவன் கால் மாறியாடினான் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது. அக்கோயிலுக்குச் சிறப்பு சேர்ப்பதற்காக, அக்கோயில் நிர்வாகத்தினர் அங்குதான் இறைவன் முதலில் கால்மாறியாடினான் என்று கூறியிருக்க வேண்டும்.

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் உள்ள கூத்தன் முதலில் வலத்தாளை ஊன்றி ஆடியதாகவும் பின் இராஜசேகர பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்கி, இடத்தாள் ஊன்றி ஆடியதாகவும் திருவிளையாடற்புராணம் தெரிவிக்கிறது.[5] இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. வன்னியன் சுரக்குடி ஸ்ரீ சொக்கநாதசுவாமி கோயிலில் உள்ள கூத்தன் கால் மாறியாடியதற்கு எந்தக் காரணமும் கற்பிக்கப்படவில்லை.

பாஸ்கரத் தொண்டைமான் இறைவன் கால் மாறியாடிதற்குப் பின்வரும் காரணத்தைக் கற்பிக்கிறார்.

> "வலக்காலை ஊன்றி நின்றபோது சக்தி உதவவில்லை. ஆதலினால், மலங்கள் அடங்க ஐயனும் அழுத்தமாக ஊன்ற முடியவில்லை. அதனால் மறைத்தல் தொழில் பூரணத்துவம் பெறவில்லை. அத்தொழில் சரிவர நடக்க, சக்தியின் துணை வேண்டியிருந்திருக்கிறது. இறைவனுக்கு இடப்பாகத்தில் உள்ள சக்தியை நாடியிருக்கிறார். இதனால், கால்மாறி ஆடி, மறைத்தல் தொழிலை கொஞ்சம் அழுத்தமாகவே செய்ய தம் இடக்காலையே ஊன்றியிருக்கிறார் இவ்வளவுதான் இரகசியம்."[6]

மேற்கூறிய கருத்துத் தத்துவ அடிப்படையில் பொருத்தமாகத் தோன்றுகிறது.

**முடிவுரை**

இதுவரை கால்மாறியாடிய கூத்தர் திருமேனிகளின் அமைப்பையும், கால் மாறியாடியதற்கான காரணத்தையும் ஆராய்ந்தோம். சிற்பியின் கைவண்ணத்தால், கால் மாறியாடிய கூத்தர் திருமேனிகள் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பிற்காலத்தார் ஒரு கதையைக் கற்பித்து விட்டனர். இது மேலும் ஆய்விற்குரியது.

**குறிப்புகள்**

1. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை) திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடவெளியீடு, ஐந்தாம் பதிப்பு, 1986, பக். 274-277.
2. தண்டபாணி தேசிகர் ச., ஆடல்வல்லான், திருவாவடுதுறை ஆதின வெளியீடு, முதற்பதிப்பு, 1967, பக்,228.
3. கணபதி தேசிகர், சொ.(தொ), கீழ்வேளூர் தலவரலாறு, ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி தேவஸ்தான வெளியீடு, தஞ்சை, முதற்பதிப்பு, 1969, பக். 11-12.
4. கோயில் நிர்வாகத்தினர் கொடுத்த பேட்டி நாள்: 25.11.1989.
5. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணம், கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1979, பக், 20-21,
6. பாஸ்கரத் தொண்டைமான், தொ.மு., கல்லும் சொல்லாதோ கவி, எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, முதற்பதிப்பு, 1960, பக். 118.

# 6. கண்ணப்பர் வரலாறு உணர்த்தும் உண்மை

- முனைவர் சிவ. மாதவன், புதுச்சேரி.

தமிழ் பக்தி இலக்கியங்கள், பக்தி இயக்கம் உருவாகி வளர்ச்சிபெற உதவின. பக்தி இயக்கம் வைதிக சமய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது. அதே வேளையில் தமிழ்நாட்டின் தொன்மை மிக்க மரபுகள் சிலவற்றை நிலைநிறுத்திக் கொள்ளவும், அதன்வழித் தமிழ்ச் சமய நெறியைப் பரப்பிடவும் பக்தி இயக்கம் ஊன்றுகோலாய் விளங்கியது. பக்தி இயக்க எழுச்சியின் விளைவால் சிவனிய மாலிய நெறிகள் மறுமலர்ச்சி பெறத் தொடங்கின. இவற்றிற்கு மன்னர்களின் ஆதரவு பெருகியது. சிவனியம் மாலியம் என்னும் இவையிரண்டும் இருபெருஞ்சமய நிறுவனங்களாகப் புத்துயிர் கொண்டன. இத்தகு பின்னணியை மனத்திற் கொண்டு, சைவ இலக்கியங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளின் ஊடே பொதிந்திருக்கும் கருத்துகளின் வாயிலாக இலக்கியக் கோட்பாடுகள் பலவற்றை இனங் காண முடியும். எனினும் கண்ணப்பர் வரலாறு திருமுறைகளில் பதிவானதன் பின்னணியை மட்டும் இக்கட்டுரை விளக்குவதாக அமைகின்றது.

**கண்ணப்பர் வரலாறு: பதிவாதல்**

குறிப்பிட்ட ஏதேனும் ஒரு செய்தி அல்லது நிகழ்வு அடுத்தடுத்து வரும் காலங்களில் வாழ்ந்த மக்களின் நினைவில் இடம்பெற்று, அவர்களிடமிருந்து சமுதாயத்தில் பரவலாக உலவி, பின்பு கவிஞர்களால் ஏதேனும் ஒருவகையில் எடுத்தாளப்படுதல்; இடையீடின்றி அச்செய்தி அல்லது நிகழ்வு பின்வரும் இலக்கியங்களில் பதிவாதல் என்னும் இலக்கியப் பண்பைத் திருமுறைகளில் காணமுடிகின்றது. இவ்விலக்கியப் பண்பு 'கருத்துத் தொடர்ச்சிக் கோட்பாடு' என்னும் புதிய பெயரைப் பெறவல்லதாகிறது. திருமுறைகளில் காணப்படும் கருத்துத் தொடர்ச்சிக் கோட்பாட்டிற்கு ஏற்ற எடுத்துக்காட்டாக அமைவது கண்ணப்ப நாயனாரின் வரலாறு ஆகும்.

திண்ணன் என்னும் இயற்பெயரமைந்த கண்ணப்பர் தேவார மூவருக்கும் காலத்தால் முற்பட்டவர். அவர் இலக்கியம் எதுவும் படைக்கவில்லை. பிறருடைய வாழ்வில் அவர் எவ்வித அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை. அவரது வாழ்வில் நிகழ்ந்த அற்புதமே திருமுறைக்கவிஞர்களின் பாடுபொருள்களுள் ஒன்றாகியுள்ளது. தேவார மூவரும் கண்ணப்பரின் பண்பை - பக்திச்சிறப்பை அன்புணர்வு மேற்பட்ட வழிபாட்டு நெறியைத் தம் படைப்புக்களில் சுட்டியுள்ளனர். அவர்களுள் திருநாவுக்கரசர், கண்ணப்பர் திறத்தைச் சற்று விரிவாகக் கூறியுள்ளார்.

*காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப்பாரம்*
*தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டித்*
*தீப்பெருங்கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத்தன்கண்*
*கோப்பதும் பற்றிக் கொண்டார் குறக்கை வீரட்டனாரே. (4-482).*

என்பது அப்பர் தேவாரம்.

இப்பாடலில், வேடர் குலத்தைச் சேர்ந்த 'திண்ணனார்' என்னும் பெயரும் இல்லை; இறையருளால் பெற்ற கண்ணப்பர் என்னும் பெயரும் இல்லை; ஆனால் இப்பாடலில் வரும் வில்,

கையில் இறைச்சி, தோற் செருப்பால் தொட்டது, வாயினில் நீர் முகந்து வந்து அபிடேகம் செய்தது, இறைவன் கண்களிலிருந்து குருதி வழிதலைக் கண்டது, தன் கண்ணைப் பறித்தது என்று குறிப்பிடப்பெறும் செயல்களால் இஃது கண்ணப்பரையே குறிக்கின்றது என முடிவுக்கு வருவர். இவ்வாறு முடிவிற்கு வர 12ஆம் நூற்றாண்டில் எழுந்த பெரியபுராணத்தில் இச்செயல்கள் விரிவாகப் பேசப்படுதல் காரணமாகும். 7ஆம் நூற்றாண்டு இலக்கியத்தில் பதிவான தகவல் 12ஆம் நூற்றாண்டில் வரலாற்றுருவம் பெற்று முழுமைபெறுகின்ற பாங்கு எண்ணத்தக்கது.

இனி, திருஞானசம்பந்தர் தமது பதிகங்களில் மூன்று இடங்களில் கண்ணப்பர் வரலாற்றைக் குறிக்கின்றார்:

*கானலைக்கும் அவன் கண் இடந்து அப்ப நீள்*
*வானலைக்கும் தவத்தேவு வைத்தான் (3-35-7)*

*வாய்கலசம் ஆக வழிபாடுசெய்யும் வேடன் மலராகும் நயனம்*
*காய் கணையினால் இடந்து ஈசனடி கூடு காளத்தி மலையே. (3-69-4)*

*கண்ணப்பர்க்கு அருள் செய்த கயிலை எங்கள்*
*அண்ணலாரூர் ஆதி ஆனைக்காவே. (3-109-7)*

இம்மூன்றனுள் முதலிரண்டில் கண்ணப்பரின் பெயர் குறிப்பிடப்படாமல் அவரது அன்புணர்வு சார்ந்த வழிபாட்டு நெறி சுட்டப்பெறுகின்றது. இறுதிப் பாடலில் கண்ணப்பர் என்னும் பெயர் குறிக்கப்பெற்று, அவருக்குக் கிடைத்த அருள் கூறப்படுகின்றது.

'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்' என்று சுந்தரர் கண்ணப்பரின் பெயரைச் சொல்லிப் பாடியுள்ளார். இவ்வாறு தேவார மூவரும் கண்ணப்பர் பற்றிய செய்தியைத் தம் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர்.

அடுத்ததாக, திருவாசகம் படைத்தளித்த மாணிக்கவாசகரின் பாடலொன்றில் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்னும் தொடர்வழி, கண்ணப்பர் குறிக்கப்படுகின்றார். அவரது அன்புநெறி இப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமது அன்பின்மையையும், கண்ணப்பரின் அன்புடைமையையும் ஒப்புமைப்படுத்திக் கூறும் போக்கு இருந்தபோதிலும் இறைவன் தன்னை ஆட்கொண்ட தன்மை என்னும் கருத்துகள் மட்டுமே மாணிக்கவாசகரின் இப்பாடலில் இடம்பெற்றுள்ளன. கண்ணப்பரின் வேறு செயல்கள் எதுவும் இதன்கண் குறிக்கப்படவில்லை. 'திருத்தோள் நோக்கம்' என்னும் பதிகத்தில்,

*பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்*
*செருப்புற்ற சீரடிவாய்க்கலசம் ஊனமுதம்*
*விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு*
*அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ (8-15-3)*

என்னும் பாடல் கண்ணப்பர் பெயர் குறிப்பிடாமல் அவரது வரலாற்றைச் சுட்டுகின்றது. அப்பரும், சம்பந்தரும் தத்தம் பாடல்களில் குறிப்பிட்ட செய்திகள் மாணிக்கவாசகரின் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ள தன்மை நினைக்கத்தக்கது.

அடுத்து, ஒன்பதாம் திருமுறையில்,

*கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்*
*அடியார் அமருலகம் ஆள நீ ஆளாதே*
*முடியா முத்தீ வேள்வி மூவாயிரவரொடும்*
*குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத்தாடினையே (9-19-2)*

என்று கண்ணப்ப நாயனார் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அவர் மட்டுமல்லாது 'அல்லியம் பழனத்து ஆமூர் நாவுக்கரசைச் செல்ல நெறிவகுத்த சேவகனே' என அப்பர் வரலாறும்,

*'எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்*
*சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி (9-19-4)*

என்னும் பாடலில் திருஞானசம்பந்தர் பற்றிய குறிப்பும்,

*களையா உடலோடு சேரமான் ஆரூரன்*
*விளையா மதம் மாறா வெள்ளானைமேல் கொள்ள*
*முளையா மதிசூடி மூவாயிரவரொடும்*
*அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே (9-19-5)*

என்னும் பாடலில் சுந்தரர், சேரமான் பெருமாள் ஆகியோரும் குறிப்பிடப்பெறுகின்றனர்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் மட்டும் கண்ணப்பர் குறித்த செய்தி காணக்கிடைக்கவில்லை. அடுத்து 11ஆம் திருமுறையில் நக்கீரர் 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' என்னும் தமது சிற்றிலக்கியத்திலும் கல்லாடதேவ நாயனார் இயற்றியுள்ள 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' பாடலிலும் கண்ணப்பர் வரலாறு விரிவாக இடம் பெற்றுள்ளது. இதே 11ஆம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி தமது 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் நூலில்,

*நிலத்தில் திகழ் திருக்காளத்தியார் திருநெற்றியின்மேல்*
*நலத்தில் பொழிதரு கண்ணிற் குருதிகண்டு உள்நடுங்கி*
*வலத்தில் கடுங்கணையால்தன் மலர்க்கண் இடந்தப்பினான்*
*குலத்தில் கிராதனங் கண்ணப்பனாமென்று கூறுவரே (திருத். திருஅந். 11)*

என்று கண்ணப்பர் தம் கண்ணை இடந்தப்பிய செயலைக்குறித்துள்ளார். இவற்றை அடியொற்றிச் சேக்கிழாரும் தமது திருத்தொண்டர் புராணத்தில் கண்ணப்பர் வரலாற்றை விரித்துரைத்துள்ளார். 10ஆம் திருமுறை தவிர்த்து, பிறதிருமுறைகளில் பதிவு செய்யப்பட்டிருந்த கண்ணப்பர் குறித்த செய்திகளை மிகவும் சுருக்கமாகப் பதிவாகியிருந்த செய்திகளை - களப்பணி செய்து மிக விரிவாக வரலாறாக உருவாக்கி ஆவணப்படுத்தியவர் சேக்கிழார்.

**கண்ணப்பர் வரலாறும் பின்னணியும்**

இவ்வாறு ஒரு நாயன்மாரின் வரலாறு அவருக்குப் பின்வந்தோரால் விரிவாகப் பேசப்படுவதன் தேவை என்ன? என்னும் வினாவை எழுப்பிப் பார்ப்பது நல்லது.

* தமிழ்நாட்டு இறைவழிபாடு அன்புநெறி சார்ந்தது, சடங்கியல் சார்ந்த வழிபாட்டு முறைகளைவிட இறைவனை அன்புணர்வால் வழிபடல் போதுமானது ; மேலானது என்னும் பண்டைக் கொள்கையின் அடையாளமாகத் திகழ்ந்தவர் கண்ணப்பர். அவரது வழிபாடு அல்லது பக்தி அன்பினை அடிப்படையாகக்

கொண்டது. உள்ளம் முழுவதும் நீக்கமற நிறைந்திருந்த அன்புணர்ச்சியால் ஏற்பட்ட நெகிழ்ச்சி தந்த வழிபாடு அது. இம்மரபு போற்றப்படவேண்டும் என்று கருதியதனாலேயே கண்ணப்பருக்குப் பின்வந்த திருமுறைக் கவிஞர்கள் பலரும் அவரை விதந்துரைத்துள்ளனர் எனலாம்.

எனவே, ஒரு கருத்துத் தொடர்ச்சியின் பின்புலமாகத் தொன்னெறி போற்றிக்காக்கப்பட வேண்டும் என்னும் பெருவிருப்பம் புதைந்துள்ளமை உணரவேண்டிய உண்மையாகும். ஆதலால், இதனை நன்குணர்ந்த சேக்கிழார் கண்ணப்பர் வரலாற்றைக் கூறுகையில்,

*சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர்தாமும்*
*கார்வரை அடவிசேர்ந்தும் காணுதற்கரியார் தம்மை*
*ஆர்வம் முன்பெருக ஆரா அன்பினில் கண்டுகொண்டே*
*நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்*

எனப் போற்றியுள்ளார்.

மேலை நாட்டினரும் கண்ணப்பர் வரலாற்றைத் தொன்மைத் தமிழ்வழிபாட்டு நெறியின் அடையாளமாகவே காணுகின்றனர். மேலும் அவர்கள் கண்ணப்பர் வரலாறு ஒரு தொன்மம் (Myth) எனக் கருதுகின்றனர். அத்துடன் தென்னக அல்லது தமிழகத் தொன்மமாக அது கருதப்படுகின்றது. கண்ணப்பர் ஏறத்தாழ கி.மு. காலப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் அவரது வரலாறு வாய்மொழி வரலாறாகத் தமிழ் மண்ணில் வழங்கப்பட்டு, தேவார மூவர்களாலும், பிறதிருமுறை ஆசிரியர்களாலும் இலக்கியங்களில் பதிவாகியுள்ளதென்றும் **பால் மிராபில்** (Paul Mirabile) என்னும் அறிஞர் கருதுகிறார். பால் மிராபிலின் கருத்துப்படி தமிழ் மண்ணில் நிலவி வந்த தொன்மை வாய்ந்த, இயற்கை வழிப்பட்ட, அன்புணர்வு வயப்பட்ட வழிபாட்டின் குறியீட்டு வடிவமாகக் கண்ணப்பர் திகழ்கிறார். எனவே கண்ணப்பர் வரலாறு தமிழ் மரபைத் தூக்கி நிறுத்துவது என்னும் கருத்து ஆழமாக உணரப்பட்டதாலேயே சேக்கிழார் தமது நூலில் கண்ணப்பர் வரலாற்றைத் தமிழ்வழிபாட்டு மரபாக ஆவணப்படுத்தியுள்ளார் எனலாம்.

## 7. அந்தாதியின் அற்புதம்

- பேராசிரியர் முனைவர் மு. பாலகிருஷ்ணன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
*(பாரதி பாங்கன்)* சென்னை.

**அந்தாதி**

அந்தாதி, சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. அந்தம், ஆதி என்ற இரண்டு சொற்களின் இணைப்பே அந்தாதி. ஒன்றன் அந்தமே, அடுத்துவரும் மற்றொன்றனுக்கு ஆதியாக அமைவது, அந்தாதியின் இயல்பாகும். அந்தாதி, செய்யுள் வடிவத்தில் பயின்று வரும். செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகிய தொடைவகையுள் அந்தாதியும் ஒன்று. அது அந்தாதித் தொடை எனப்படும். ஒரு

செய்யுளின் இறுதியில் நிற்கும் எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ, அடுத்த செய்யுளுக்கு முதலாக வரத்தொடுப்பது அந்தாதித்தொடை. செய்யுள்களைத் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள, அது பெரிதும் துணை செய்யும். அந்தாதித் தொடை, நூல் முழுவதும் பயின்றுவரும் இலக்கியமே அந்தாதி இலக்கியம் ஆகும். அந்தாதி இலக்கியங்கள் அளவற்றவை. அவற்றுள் தொடக்க காலத்தில் எழுந்தவை, வெண்பாவில் அமைந்தன.

**முதல் அந்தாதி இலக்கியம்**

சமய நெறிக்கு, அந்தாதி முறையில், வெண்பாக்களைப் பயன்படுத்திய வகையில், அற்புதத் திருவந்தாதியே முதன்மையானது. அப்பெருமை, காரைக்கால் அம்மையாருக்கே உரிமை. சைவத் திருத்தொண்டர் அறுபத்து மூவருள், காரைக்கால் அம்மையாரும் ஒருவர். அவருடைய பாடல்கள், சைவத் திருமுறைகளில், பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**பேய் வடிவமும் பிறந்த பாடலும்**

காரைக்கால் அம்மையாருடைய இயற்பெயர் புனிதவதியார்; கணவன் பரமதத்தன். அம்மையாரது தெய்வீகப் பெருஞ்சிறப்பை உணர்ந்த பரமதத்தன், அச்சமும் தடுமாற்றமும் கொண்டான்; அவரைவிட்டு விலகினான்; வேறு திருமணம் செய்து கொண்டான்; தன்னிருப்பிடம் அறிந்து, சுற்றத்தாருடன் வந்த அம்மையாரை, தன் குடும்பத்தோடு வந்து, அவர் திருவடியில் விழுந்து வணங்கினான். அச் செயலால், துணுக்குற்ற அம்மையார், "கணவன், தன்னை விலக்கிய பிறகு அவனுக்குப் பயன்படாத அழகிய வடிவம் தனக்குத் தேவையில்லை" என்று நினைத்தார்; இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றார்; பசுஞானம், பாசஞானம் இரண்டினையும் நீக்கிப் பதிஞானம் ஒன்றிலேயே மனம் ஒன்றியிருந்தார். அத்தகைய ஒன்றிய உணர்வில், அவர் இறைவனைப் பரவிய பாடல்களே அற்புதத் திருவந்தாதி.

இறைவனோடு ஒன்றிய உணர்வில், அவர் நினைத்ததும், செய்ததும், பாடிப் பரவியதும் அற்புதமானவை. அற்புதம் எனபது நவரசத்தில் ஒன்று. அது அதிசயத்தையும் அழகையும் உணர்த்தும்.

**அம்மையார் ஆண்டவனிடம் வேண்டிப் பெற்றவை**

ஆண்டவனிடத்தில், அடியார்கள் கேட்ட வரங்களும் பெற்ற பேறுகளும், பல்வேறு திறத்தன. ஆனால், காரைக்கால் அம்மையார், இறைவனை வேண்டிப் பெற்றவை தனிச்சிறப்பு வாய்ந்தவை; அற்புதமானவை. எலும்புருவாய் பேயுருவம் வேண்டிய தோடல்லாமல், அம்மையார் மேலும் வேண்டியனவாகச் சேக்கிழார் பெருமான்,

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல், உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்"*

என்று குறிப்பிடுகிறார்.

**தாயில்லாச் சிவனுக்குத் தாய்**

சிவபெருமான் அம்மையும் அப்பனும் இல்லாதவன். அதனால்தான் அவனைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்கிறார் இளங்கோவடிகள்; 'தாயுமிலி தந்தையிலி தான் தனியன்'

என்கிறார் மணிவாசகர். அச்சிவபெருமான் தனக்குத் தாயாக ஒருவரை மகிழ்ந்து ஏற்றான் என்றால், அத் தாயின் பெருமை சொல்லவும் ஒல்லுமோ?

காரைக்கால் அம்மையார் எலும்பு வடிவுடன் கயிலை மலையில் தலையினால் நடந்துவரும் தன்மையைக் கண்ட உமாதேவி, சிவபெருமானை நோக்கி, "ஐயனே, தலையினால் நடந்து இங்கு ஏறும் ஓர் எற்பின் யாக்கை அன்பு என்னே!" என்று வியந்து உரைத்தார். அப்போது இறைவன், "உமையே, வரும் இவர், நம்மைப் பேணும் அம்மை காண்" என்றார்; அம்மையாரை நோக்கி, "அம்மையே" என்று அன்போடு அழைத்து அருள்புரிந்தார். அஃது அற்புதத்திலும் அற்புதமாகும்.

**அற்புதத் திருவந்தாதியின் பொற்புகள்**

நூற்றியொன்று வெண்பாக்களைக் கொண்ட அற்புதத் திருவந்தாதி, ஆண்டவனுடைய அற்புதச் செயல்களையும் இயல்புகளையும் தோற்றப் பொலிவையும் கூறுவது; சைவ சித்தாந்த உண்மைகளை விளக்குவது; அழகிய உவமைகளால் ஆனது; எளிய, இனிய நடையினது; ஆழ்ந்து அகன்ற நுண்ணிய கருத்துகளை உடையது.

**பச்சிளம் பருவத்திலேயே பரமனை எண்ணுதல்**

மழலை பேசும் குழவிப் பருவத்திலிருந்தே தாம் இறைவனிடம் அன்புகொண்டு ஒழுகி, அது நாளுக்கு நாள் மேம்பட்டு வந்த தன்மையை,

*"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்*
*சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"*

என்று அம்மையாரே குறிப்பிடுகிறார். இதுவே அவரது முதல் வாக்கு. பச்சிளம் பருவத்திலேயே பரமனை எண்ணுதல் என்பது, அற்புதமன்றோ!

**பாரதக் கதை நிகழ்ச்சி**

இறைவனது அற்புதத் தன்மையைப் பாரதக் கதை நிகழ்ச்சி ஒன்றிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குகிறார் அம்மையார். விசயன், பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகச் சிவபெருமானைக் குறித்துத் தவம்புரிந்தான். அவனது ஆற்றலை உலகத்தவர்க்கு உணர்த்துவதற்காகச் சிவபெருமான், வேடன் வடிவங்கொண்டார்; அவனெதிரே தோன்றினார்; அவனோடு போர்புரிந்தார்; தோற்றவராக அவனிடம் வில்லடியும் ஏற்றார். ஆகவே, இறைவனுக்கு எது தகும், எது தகாது என்றும், அவரால் எது முடியும், எது முடியாது என்றும் பிறரால் அறிய ஒண்ணாது. இறைவனது இத்தகைய அற்புதத்தை,

*"ஏதொக்கும் ஏதொவ்வாது ஏதாகும் ஏதாகாது*
*ஏதொக்கும் என்பதனை யாரறிவார் - பூதப்பால்*
*வில்வேடன் ஆகி விசயனோடு ஏற்றநாள்*
*வல்வேடன் ஆன வடிவு"*

என்று அம்மையார் அதிசயித்துப் பாடுகிறார்.

இறைவனை மிக அரியவன் எனக் கருதினால், மிக எளிய வேடனாக வருகின்றான்; மிக வலியவன் எனக் கருதினால், மிக மெலியவனாக விசயனின் வில்லடி ஏற்கிறான். ஆதலினால், இன்ன பண்புடையவன் என அவனை அறுதியிடல் முடியாது என்பது அம்மையார் கருத்து.

**அட்ட மூர்த்தம்**

இறைவன் ஞாயிறாகவும், திங்களாகவும், பஞ்ச பூதங்களாகவும், ஒவ்வோர் உயிரையும் இயக்கும் இயமானனாகவும், இருக்கின்ற தன்மையை அட்டமூர்த்தம் என்பர். அம்மையாரும்,

*"அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்*
*அவனே புவிபுனல்காற் றாவான்- அவனே*
*இயமான னாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான*
*மயனாகி நின்றானும் வந்து"*

என்கிறார்.

**அளவறிந்து ஆடும் இறைவன்**

இறைவனுடைய உயர்வு, ஆழம், அகலம் ஆகியவற்றையும், அவனது அசைவினால் நிகழக்கூடியவற்றையும், உலகநிலை அறிந்து அவன் ஆடுந்தன்மையையும்,

*"அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள்*
*முடிபேரின் மாமுகடு பேரும்; கடகம்*
*மறித்தாடும் கைபேரில் வான்திசைகள் பேரும்*
*அறிந்தாடும்; ஆற்றாது அரங்கு"*

என்று அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

பெருமானுடைய திருவடிகள் அசையின், பாதாள உலகம் அசையும்; திருமுடி அசையின் வான்முகடு அசையும்; கைகள் அசையின் எட்டுத் திசைகளும் அசையும்; ஆற்றாத அந் நிலைமைகளை அறிந்தவனாகி, அப்பெருமான், பொன்னம்பலத்தில் அருட்கூத்தினை அடங்கிய வடிவுடன் நிகழ்த்துகிறான். அது இறைவனது அற்புதச் செயலாகும். ஏனெனில், இறைவன் ஆடாவிட்டால் உலகம் இயக்கமின்றி நின்றுவிடும். எனவே, அவன் ஆடவும் வேண்டும்; ஆடும்போது, அவன் நிதானமாகவும் அளவாகவும் ஆடவேண்டும்.

**ஒன்றாய், உடனாய், வேறாய்**

உலகத்துப் பொருள்களைப்பற்றிய அனுபவத்தை உணருகின்ற உயிருக்கு, இறைவன் உடனிருப்பவனாகித்தானே அறிபவனாக விளங்குகின்றான்; உயிருக்கும் பொருளுக்கும் வேறானவனாக இருந்து, அவ்வுயிருக்கு அப்பொருளைப்பற்றி அறிவிப்பவனாகவும் விளங்குகின்றான்; அவ்வுயிர் அப்பொருளை உணர்வதற்குக் கருவியாகிய அறிவாகவும் இருக்கின்றான்; அவ்வுயிரினாலே அவ்வறிவைக் கொண்டு அறியப்படுகின்ற மெய்ப்பொருளாகவும் விளங்குகின்றான்.

இறைவனுடைய இச் செயல்கள், சைவ சித்தாந்தத்தில், காணும் உபகாரம், காட்டும் உபகாரம் என்ற பெயர்களால் கூறப்படும்.

*"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போலக்*
*காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்*
*அயரா அன்பின் அரன்கழல் செலுமே"*

என்பது சிவஞான போதம்.

இச் சித்தாந்தக் கருத்தைக் காரைக்கால் அம்மையார்,

*“அறிவானுந் தானே அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற*
*மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்*
*அப்பொருளுந் தானே அவன்”*

என்று அழகுற மொழிகின்றார்.

**காண்பன யாவும் கடவுள் காட்சியே**

இறையடியார்களுக்கு எந்தப் பொருளும் இறைவனாகவே தோன்றும். காரைக்கால் அம்மையாரும் இதற்கு விலக்காகார். அவர் ஒரு நாளையே சிவபெருமானாகக் காண்கின்றார். காலை நேரம் போன்று சிவபெருமானுக்கு மேனி சிவந்து விளங்கும்; நடுப்பகல் போன்று அவன் மேனியில் உள்ள வெண்ணீறு வெண்மையாக விளங்கும்; மாலைநேரம் போன்று அவனது சடைக்கற்றை பொன்னிறமாய்ப் பொலியும்; நள்ளிரவு போன்று அவனது கழுத்து கருப்பாக இருக்கும்.

*“காலையே போன்றிலங்கும் மேனி ; கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்*
*தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை; மற்றவற்கு*
*வீங்கிருளே போலும் மிடறு”*

என்பது அம்மையாரது அழகிய பாடல்.

அம்மையாருக்கு ஒரு மலையைப் பார்த்தாலும் சிவபெருமானாகத் தோன்றுகிறது. ஏனெனில், சிவபெருமானுக்குரிய உயர் வடிவம், வலிமை, அளத்தற்கருமை, அசைவின்மை, வளஞ்செய்கை ஆகிய தன்மைகள் மலையினிடத்தும் உள்ளவை. மேலும், மலையில் பாம்புகள் தங்கும்; அதன் முகட்டில் நிலவு தவழும்; அதன் சரிவுகளில் மான் அசையும்; புலி பயிலும்; அருவி இறங்கி வரும். சிவபெருமானிடத்திலும் பாம்புகள் கங்கணமாகவும் மாலையாகவும் தங்கும்; அவனது திருமுடியில் பிறை நிலவு திகழும்; கையில் மான் இருக்கும்; உடலில் புலித்தோலாடை பொலியும்; சடையில் கங்கை காணப்படும். ஆகவே, மலையும் சிவனும் சமம் என்று அம்மையார் சிலேடைப் பொருளில்,

*“பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்*
*தாம்பயின்று தாழருவி தூங்குதலால் - ஆம்பொன்*
*உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்*
*திருவடியின் மேய சிலம்பு”*

என்று பாடல் இசைக்கின்றார்.

**சிவந்த கை**

அழலேந்தி ஆடும் சிவனது கை, சிவந்திருப்பதைப் பற்றிக் காரைக்கால் அம்மையார்,

*“அழலாட அங்கை சிவந்ததோ? அங்கை*
*அழகால் அழல் சிவந்ததோ?”*

என்று வியந்து சொல்லுவது, கலிங்கத்துப் பரணியில் சொல்லப்படும்,

*"பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ?*
*படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ?"*

என்பதைப் போன்று அமைந்து இன்பத்தை ஊட்டுகிறது.

**அற்புதமான கற்பனை**

'பாம்பொடு திங்கள் பகை' என்பது உலக வழக்கு. சிவபெருமான் பாம்பை அணிந்திருக்கிறான்; திங்களையும் சடையில் சூடியிருக்கிறான். பாம்பு திங்களுக்குத் தீங்கு செய்ய முயல்வது இயல்பே ஆனால், சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்போ அவன் தலையில் இருக்கும் திங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. ஏனெனில், சிவபெருமான் அணிந்துள்ள பாம்போ அறிவற்றது. அது, அவன் மார்பில் பூண்டுள்ள பன்றிக் கொம்பினைப் பார்க்கும்; அடுத்து அவன் தலையில் சூடியுள்ள பிறைநிலவைப் பார்க்கும். வளைவும் வெண்மையும் ஒத்துள்ள அவ்விரண்டில் எது திங்கள் என்று தெளிய முடியாமல், அவ்வறிவற்ற பாம்பு, இன்றளவும் திகைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு, ஓர் அற்புதமான காரணத்தைக் கற்பித்துக் காட்டுகிறார் காரைக்கால் அம்மையார்:

*"திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்;*
*பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்; - ஒருநாள்*
*இதுமதியென் றொன்றாக இன்றளவும் தேரா*
*ததுமதியொன் றில்லா அரா"*

**நினைப்பார் நினைக்கும் வடிவில் நிற்கும் இறைவன்**

"இறைவனுடைய பெயரும் அருளும் செயலும் கேட்ட அளவிலேயே, முன்னமே நான் அவனுக்கு ஆட்பட்டேன்; அவனது திருவுருவத்தைக் காணாமலே அடிமைபூண்டேன்; அவனையே எண்ணிக் கரைந்து உருகுகின்ற நான், இன்றும் அவனது திருவுருவத்தைக் காணவில்லை; 'உங்கள் தலைவனாகிய இறைவன் எவ்வடிவம் உடையவன்?' என்று என்னை வினவுகின்றவர்களுக்கு யான் என்ன மறுமொழி கூறுவேன்? எந்த உருவந்தான் உனது உருவம்?" என்று இறைவனையே கேட்கிறார் காரைக்கால் அம்மையார்:

*"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்;*
*இன்றும் திருவுருவம் காண்கிலேன்; - என்றுந்தான்.*
*எவ்வுருவோன் உம்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது?"*

நினைப்பார் நினைக்கும் வடிவம் கொண்டு அருள்புரிபவன் இறைவன் என்பதே இப்பாடலின் நுட்பமான பொருளாகும்.

*"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே*
*மாதொரு பாகனார் தாம் வருவர்"*

என்னும் சிவஞான சித்தியாரும் இதனை வலியுறுத்தும்.

**அற்புதமோ அற்புதம்!**

அற்புதத் திருவந்தாதியை ஓதி, ஆண்டவனை மிக்க அன்புடன் வணங்குபவர்கள், அவனது திருவடி நீழலை அடைந்து இன்புறுவர்; மேலும் மேலும் அவனது அருட்புகழைப் பாடியவாறு

அவனைப் போற்றிக் கொண்டேயிருப்பர். இக்கருத்தை அம்மையாரே,

*"உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்*
*கரைவினால் காரைக்கால் பேய்சொல் - பரவுவர்*
*ஆராத அன்பினோ(டு) அண்ணலைச் சென்றேத்துவார்*
*பேராத காதல் பிறந்து"*

என்னும் அற்புதத் திருவந்தாதியின் இறுதிப் பாடலில் அறுதியிட்டு உறுதி கூறுவது அற்புதத்தின் சிகரம்.

**முடிவுரை**

உலகப்பற்று நீங்கி, உடலின் தொடர்புவிட்ட தூய்மையான நிலையில், இறைவனிடம் வைத்த பேரன்பினால் மனம் கசிந்து உருகியவர் காரைக்கால் அம்மையார். அவரது அற்புதத் திருவந்தாதி, அப்பேரன்பின் வெளிப்பாடாகவே விளங்குவது. ஆகவே, அதனைத் தொட்ட தொட்ட இடந்தோறும் அன்பு ஊற்றெடுப்ப விளங்குதல் வியப்பில்லை. அன்பு கனிந்த நிலையில் அம்மையார் பாடிய பாடல்கள், அற்புதமாகவும், இறைவனின் அற்புதங்களையும் அமைவுற எடுத்துக்காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

# 8. காரைக்காலம்மையும் அக்கமா தேவியும்

- முனைவர் (திருமதி) எம்.எஸ். சாந்தா,
*தமிழ்ப்பேராசிரியை (ஓய்வு), சென்னை.*

**தமிழகத்தில் சைவ சமயம்**

இறைபக்தியும் ஆன்ம ஞானமும் நிறைந்தது இந்திய நாடு. தான் யார்? தன்னைப் படைத்தவர் யார்? தானாகிய ஆன்மா தன்னைப் படைத்தவனாகிய பரம்பொருளோடு எவ்வாறு இணைந்து ஒன்றுபடுகின்றது? உண்மையான ஞானம் எது? என்று மனிதன் சிந்தித்த மெய் உணர்வின் விளைவாக இந்நாட்டில் தொன்றுதொட்டு வேதங்களும் ஆகமங்களும் உபநிடதங்களும் புராணங்களும் சமயங்களும் இலக்கியங்களும் தோன்றியுந்துள்ளன.

மனிதனின் சமய சிந்தனையின் விளைவாகப் பல்வேறு சமயங்கள் தோன்றி வளர்ந்தன. அவ்வாறு பாரத நாட்டில் தோன்றிய சமயங்களுள் என்று தோன்றியதென்று அறுதியிட்டுக் கூறவியலாத தொன்மை வாய்ந்த சமயமாகச் சைவ சமயம் விளங்குகின்றது. இச்சைவ சமயத்திலிருந்து தமிழகத்தின் சைவ சித்தாந்தம், காஷ்மீரத்தின் சிவ அத்வைதம் (திரிகா தத்துவம்), கருநாடகத்தின் வீரசைவம், குஜராத்தின் பாசுபதம், வங்காளத்தின் சைவம் ஆகியவை உருவாயின.

தமிழகத்தில் சைவ சமயம் நாயன்மார்களின் திருத்தொண்டாலும், பக்தி இலக்கியத்தாலும், சித்தாந்த சாத்திரங்களாலும், தழைத்து வளர்ந்தது. அடியார் தொண்டாலும், ஆண்டவன் திருப்பாடலாலும், பக்திநெறி மலர்ச்சி பெற்றது. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தந்த பக்தி இலக்கியத்தால் தமிழ் மொழி "பக்தியின் மொழி" என்னும் சிறப்பினை அடைந்துள்ளது.

சைவ பக்திநெறியும், அந்நெறியைப் பரப்பிய சைவ நாயன்மார் வரலாறுகளும் தமிழ்நாட்டிலிருந்து அதன் அருகிலுள்ள நாடுகளான கருநாடகம், ஆந்திரம் ஆகிய இடங்களுக்கும் பரவின. கன்னட நாட்டில் சைவ சமய அடியார்களின் வரலாறுகள் வீடுதோறும் பேசப்படும் கதைகளாக விளங்கின என்பர் எம். சிதானந்த மூர்த்தி.[1]

**காரைக்காலம்மையின் சிறப்பு**

தமிழில் சைவ பக்தி இலக்கியத்தின் எழு ஞாயிறாக இலங்குபவர் காரைக்காலம்மையார். சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் மகளிர் மூவரே. அவர்கள் நின்றசீர் நெடுமாறன் (கூன்பாண்டியன்) மனைவியாராகிய மங்கையர்க்கரசியும், சுந்தரரின் தாயார் இசை ஞானியாரும், காரைக்காலம்மையாரும் ஆவர். இம்மூவருள்ளும் இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டிலும் வல்லவர் காரைக்காலம்மையார். திருவாலங்காட்டில் இறைவனின் ஊழி நடனத்தைக் கண்டு இன்புற்று, ஈசனடிக்கீழ் என்றும் இருந்து அவனது ஆடலுக்கேற்பக் கீதமிசைக்கும் பேறுபெற்றவர். சிவ ஆலயங்களில் மற்ற அனைத்து நாயன்மார் உருவச் சிலைகளும் நின்ற கோலத்தில் இருக்க அம்மையாரின் உருவச் சிலை மட்டும் அமர்ந்த கோலத்தில் அமைந்திருப்பது இவண் குறிப்பிடத்தக்கது.

சைவத்திருமுறைகளின் முன்னோடியாகத்திகழும் காரைக்காலம்மை தத்துவச் செறிவும், மெய்ஞ்ஞான உணர்வும் இணைந்த இலக்கிய நயம் வாய்ந்த எளிய, இனிய பக்திப் பாடல்களைப் பாடிய பெருமைக்குரியவர். நாயன்மாருள் காலத்தால் முற்பட்ட இம்மாதரசி பல இலக்கியப் புதுமைகளைச் செய்துள்ளார்.

இசையால் இறைவனைப் பாடும் பதிகப் பெருவழியைத் தொடங்கிவைத்தமை, பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலில் பாடுபவர் பெயர், பாடுவோர் பெறும் நலன்கள் ஆகியவற்றைக் கூறும் முறையை அமைத்தமை, அந்தாதி யாப்பைப் பயன்படுத்தியமை, முதன்முதலாகத் தமிழ்த் தோத்திரப் பாடல்களில் சிவபெருமான் திருக்கூத்தைக் கூறியமை, ஆன்ம அனுபவ இலக்கியமாக, பத்தி இலக்கிய வகையாக, தாமே பேய் வடிவம் பெற்று இறைவனின் ஊழிக் கூத்தைக் கண்டு இடுகாட்டரங்கில் பேய்கள் புடைசூழ அவன் ஆடும் காட்சியைப் பாடியமை ஆகியவை காரைக்காலம்மையார் தமிழ் பக்தி இலக்கியத்திற்குத் தந்த புதிய கொடைகளாகும்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தவரான காரைக்காலம்மையார் குழவிப்பருவத்தில் மழலை பேசத் தொடங்கியபோதே சிவன் சேவடிப் பெருமையைப் பேசினார். சில காலம் இல்லற நெறியில் சிறப்புற வாழ்ந்து பின்னர் பற்றற்ற துறவியாகி இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றார். இவ்வடிவம் ஒரு புதுமையாகும். கயிலையும் திருவாலங்காடும் சென்று ஈசனடிக் கீழ் என்றும் இருந்து அவனது ஆடலுக்குப் பாட்டிசைக்கும் அற்புதத்திரு ஆயினார்.

அந்தாதி, பதிகம், இரட்டைமணிமாலை என்னும் மூன்று புதிய இலக்கிய அமைப்புகளை முதன்முதலில் தமிழிலக்கியத்திற்குத் தந்தவர் அம்மையார். கட்டளைக்கலித்துறை என்னும் யாப்பிற்கு

மூல இலக்கியம் அம்மையார் பாடிய இரட்டைமணிமாலையே. அற்புதத்திருவந்தாதி 101 பாடல்கள், திருவிரட்டை மணிமாலை 20 பாடல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (இரண்டு) 22 பாடல்கள், ஆக மொத்தம் 143 பாடல்களைப் பாடியுள்ளார்.

அடியாருக்கு உணவிட்டுத் தொண்டாற்றியதால் கணவனுக்குத் தெய்வமாகவும், இறைவனுக்கே தாயாகவும் ஆகும் பேறு பெற்ற காரைக்காலம்மையாரின் வழிபாடு தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியுள்ளது. அவரது வரலாறும் கன்னடம், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பரவியுள்ளது. ஆன்ம ஞானம், ஆன்ம சுதந்திரம், ஆன்ம முக்தி ஆகியவற்றைப் பெற்றுப் பெண்குலத்திற்குப் பெருமை தேடித்தந்த சிவஞானச் செந்திரு காரைக்காலம்மையார்.

**அக்கமாதேவியின் மாண்பு**

கருநாடகம் செய்த தவப்பயனாய் வந்துதித்த அக்கமாதேவி வீரசைவத்தின் ஐந்து தூண்களில் ஒருவர் என்று போற்றப்படுபவராவர். கன்னட இலக்கிய வரலாறு என்னும் வானத்தில் ஒளிமிகுந்த ஒரு தாரகையாகச் சுடர் வீசித் திகழ்கின்றார் மகாதேவியக்கா. இந்திய நாட்டின் தலைசிறந்த, பக்தியும் மெய்ஞ்ஞானமும் வாய்க்கப்பெற்ற பெண் கவிஞர்களுள் அக்கமாதேவியும் ஒருவர். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு ஆகும். இக்கால கட்டத்தில் கருநாடகத்தில் வீரசைவம் பெருவளர்ச்சி பெற்றது. இதனால் அங்கு சமய மறுமலர்ச்சியும், சமுதாய சீர்த்திருத்தப் புத்துணர்ச்சியும், வசன இலக்கிய எழுச்சியும் தழைத்தன.

கன்னட நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. பசவர், சென்னபசவர், அல்லமர், சித்தராமர் முதலிய சிவசரணர் (சிவனடியார்)களால் வீரசைவம் புதுவளர்ச்சியும், மறுமலர்ச்சியும் கண்டது. கருநாடகம் தந்த ஒப்பற்ற ஞானி, சீர்திருத்தச் சிந்தனையாளர், சமயவாதி என்று போற்றப்படும் பசவண்ணரின் அனுபவ மண்டபத்திற்கு நாடெங்குமிருந்து சிவசரணர்களும் சிவசரணியர்களும் வந்து குழுமினர். ஆன்மீக உரையாடலில் கலந்து கொண்டனர். அக்கமாதேவி என்னும் ஒப்பற்ற கதிரொளியும் அம்மண்டபத்தில் அவ்வமயம் பரவியது.

அக்கமாதேவி சிவனை இட்டலிங்க வழிபாடு செய்த வீரசைவர். இவருக்குத் திருமணம் நிகழ்ந்ததா? இல்லையா? என்பது ஓர் ஆய்வுக்குரிய வினாவாக உள்ளது. இல்லற சுகத்தை விரும்பாது, ஆடை அணி கலன்கள் அற்ற திகம்பரியாகி, அஞ்சா நெஞ்சுடன் கல்யாண் நகருக்குச் சென்றார். அங்கு பசவரின் அனுபவ மண்டபத்தில் அல்லமருடன் தத்துவ உரையாடலில் கலந்து கொண்டார். அவர் கூறியபடி அங்கிருந்து ஸ்ரீசைலத்தில் உள்ள கதலிவனம் சென்று அங்குள்ள சென்னமல்லிகார்ச்சுனனுடன் இட்டலிங்க ஐக்கியமானார்.

சிறந்த மெய்ஞ்ஞானமும், பக்திநலமும் வாய்க்கப்பெற்றவராகிய அக்கமாதேவி வசன இலக்கியப் படைப்பாளருள் ஒருவராகவும், பெண்வசனகாரருள் தலையாயவராகவும், முதல்வராகவும் திகழ்கின்றார். வசனம் என்பது அக்காலத்தில் கருநாடகத்தில் வளர்ச்சி பெற்ற புத்திலக்கிய வகையாகும். அக்கமாதேவி 343 வசனங்கள், சிருட்டி பற்றிய வசனம்[1], யோகாங்க திரிவிதி (67 மூன்றடிப் பாடல்களைக் கொண்டது), 17 பதங்கள் (நாட்டுப்புறப் பாடல்போன்று, கீர்த்தனங்கள் போன்று அமைந்தவை) ஆகியவற்றைப் படைத்துள்ளார். "பெண் கௌரவம், பெண் சுதந்திரம், பெண் ஆன்மீகம், இலக்கியப் படைப்பு" என்னும் நான்கு சாதனைகளைப் புரிந்துள்ளார் அக்கமாதேவியார் என்பர் சித்தய்ய புராணிகர்.[2]

**அம்மை, அக்கா - இலக்கிய நயங்கள் சில**

காரைக்காலம்மையார், அக்கமாதேவி ஆகிய இருவருமே சிறந்த இலக்கியப் படைப்பாளர்கள். அம்மையின் பாடல்களில் இறைவனின் அன்பிற்கு ஏங்கும் பாங்கு நிறைந்துள்ளது. சிவபெருமானின் உருவ வருணனை, அவனுக்குத்தாம் ஆட்பட்ட திறம், தம்மை அவன் ஆட்கொண்ட நலம் ஆகியவை அவரது பாடல்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. இறைவனையே 'அப்பா' என்று அழைத்த அம்மையின் பாடல்களில் அவன்மீது அவர் கொண்டுள்ள தாயன்பு புலனாகின்றது.

*"நீயுலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய*
*தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய*
*மட வரலார் வந்து பலியிடார் அஞ்சி*
*விட அரவம் மேலாட மிக்கு"*[3]

என்று சிவபிரானிடம் அன்போடு வேண்டுகின்றார்.

*"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்*
*தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவற்கு*
*வீங்கிருளே போலும் மிடறு"*[4]

என்று பகலிரவாகிய பொழுது மாற்றங்களிலும் அச்சிவனையே காண்கின்றார்.

அக்கமா தேவியின் படைப்புகளில் ஒன்றாகிய வசனங்கள், உரைநடையிலமைந்த வசன கவிதைகளாக விளங்குகின்றன. வீரசைவ தத்துவங்களும், சமுதாய அற நெறிகளும், சென்னமல்லிகார்ச்சுனனாகிய சிவனையே கணவனென்று கொண்ட சரணசதி, இலிங்கபதி பாவமும் இவ்வசனங்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. அக்கணவனின் அன்பிற்கு ஏங்கும் காதல் ஏக்கத்தினை - ஆன்மாவின் துடிப்பினை இவரது வசனங்கள் தெளிவாகக் காட்டுகின்றன:

*"சென்னி மல்லி கார்ச்சுனனைத் தவிர*
*பிற கணவர்கள்*
*எனக்குக் கருவேல முள்ளனையரம்மா!*
*என்னால் அவர்களைத் தொட இயலாது*
*அருகில் செல்ல இயலாது*
*நம்பி, நச்சிப் பேசவும் இயலாது*
*சென்ன மல்லிகார்ச்சுனனைத் தவிர*
*பிற கணவர் நெஞ்சங்களில்*
*முள்ளிருப்பதால்*
*என் கரங்களால் அவர்களை*
*அணைக்க இயலாதம்மா!'"*[5]

என்று தம் காதலை எடுத்துரைக்கின்றார்.

*"கண்ணுக்கழகு குருவையும் பெரியோரையும் காணுதல்*
*காதுக்கழகு பெரியோரின் புகழ்ப் பாடல்களைக் கேட்டல்*
*சொல்லுக்கழகு உண்மை பேசுதல்*

*உரையாடலுக்கு அழகு நல்ல பக்தர்களின் சொற்களைக் கூறல்*
*வாழும் வாழ்க்கைக்கு அழகு நல்லோர் தொடர்பு*
*இவையற்ற வாழ்க்கை வாழ்தல்*
*எதற்குப் பயனய்யா சென்ன மல்லிகார்ச்சுனா"*[6]

என்பது அக்கா கூறும் சமுதாய நல்லறம்.

**அம்மையும், அக்காவும்**

தமிழகம் செய்த தவப்பயனாகவும், கருநாடகத்தின் திருவருட் பேறாகவும், தோன்றியவர்கள் காரைக்காலம்மையும், மகாதேவியக்காவும். இவ்விரு மெய்ஞ்ஞானப் பெண்மணிகளும் இடம், மொழி, காலம் ஆகியவற்றால் வேறுபட்டவராயினும் ஆன்ம ஞானம், ஆன்ம சுதந்திரம், ஆன்ம முக்தி ஆகிய குறிக்கோள்களில் ஒன்றுபட்ட நோக்குடையவர்கள். அம்மை தமிழ்ச் சைவ, பக்தி நெறியில் எழுஞாயிறு. அக்கா கருநாடகத்தின் வீர சைவ மறுமலர்ச்சியின் முழுப்பரிதி.

அம்மையார் வரலாறு கன்னடத்திலும், அக்கமாதேவியின் வரலாறு தமிழிலும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. அம்மையார் நாயன்மாருள் ஒருவராக, ஆடும்பெருமான் திருவடிக்கீழ் அமர்ந்து இசை பாடும் பேய் வடிவ உருவினராக வழிபடப்பெறுகின்றார். அக்கமா தேவி உமையம்மையின் சத்துவகலை மடந்தை அவதாரம் என்று போற்றப்படுகின்றார். சமய சாதனை, பெண் ஆன்ம உரிமைச் சாதனை, தத்துவமும் மெய்ஞ்ஞானமும் இணைந்த இலக்கிய நயம் வாய்ந்த பக்தி இலக்கியப் படைப்புச் சாதனை என்னும் இம்மூன்றும் புரிந்த இவ்விரு மெய்ஞ்ஞானியரும் தமிழகமும், கருநாடகமும் இவ்வுலகிற்கு ஈந்த அரும் பெருஞ் செல்வங்களாவர்.

**அடிக்குறிப்புகள்**

1. எம். சிதானந்த மூர்த்தி, பசவண்ணர் வாழ்க்கை வரலாறு, ப. 35.
2. சித்தய்ய புராணிகர், மகாதேவி, ப.27, ப. 25 (கன்னடநூல்).
3. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, ப. 57.
4. மேற்படி ப. 65.
5. அக்கமா தேவியின் வசனங்கள், ப. 50 (கன்னடநூல்) அக்கமா தேவியின் அமுதவாக்கு (இக்கட்டுரையாசிரியரின் மொழி பெயர்ப்பு நூல்)
6. மேற்படி ப. 273.

# 9. திருநாவுக்கரசர்

- முனைவர். விஜயலட்சுமி இராமசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.

தமிழில் தோன்றிய சங்க இலக்கியத்தைப் போலவே திருமுறை இலக்கியமும் சிறப்பாகச் சொல்லுவதற்கு உரியது. சங்ககால மக்களின் வாழ்வியலை அறிவதற்குச் சங்க இலக்கியம் ஆவணமாகப் பயன்படுதல்போல், இடைக்காலத் தமிழ் மக்களின் சமுதாய வரலாற்றினை அறிந்து கொள்ளுவதற்குத் திருமுறை இலக்கியம் ஆவணமாகத் திகழ்கிறது. சங்கப் புலவர்களைப் போலவே திருமுறை ஆசிரியர்கள் பல ஊரினர், பல தொழிலினர், பல குலத்தினர், பல காலத்தவர், பல வேந்தர்கள்.

நம்பியாண்டார் நம்பியின் உதவியால், திருமுறையின் பெரும்பகுதியைத் தில்லைக் கோவிலில் கண்டெடுத்துத் தமிழகத்திலும் தன்னாட்சி பரவியிருந்த தென் கிழக்காசிய நாடுகளிலும் பரப்பிய பெருமைக்குரியவன் முதலாம் இராசராசசோழன். திருமுறைகளின் தோற்றமும், மீண்டும் அவற்றைக் கண்டெடுத்துப் பரப்பிய சூழலும் தமிழர் வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியது என்றே சொல்லலாம்.

தமிழர் பண்பாட்டுக்கு இடுக்கண் ஏற்பட்டபோதும், தமிழ்க் கலைகளுக்கு ஊறு நேரிட்டபோதும், தமிழர்தம் பண்பாட்டினையும் கலைச் செல்வங்களையும் இறைக் கொள்கைகளையும் பேணிக் காக்கும் பெருநோக்கில் பக்தி இயக்கம் தோன்றியது. பக்தி இயக்கமே பக்தி இலக்கியங்கள் தோன்ற வழி வகுத்தது. இந்த இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெற்றது. எனவே மக்கள் மொழியாகிய தமிழுக்கு முதன்மை வழங்கப் பெற்றது. இவ்விலக்கியத்தின் விளைவாகத் திருமுறைகள் தோன்றின.

12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தில் கூறப்படும் 63 நாயன்மார்களில் ஒருவரும், 4,5,6 திருமுறைகளைப் பாடியவரும்தான் திருநாவுக்கரசர்.

திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூர் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் திருநாவுக்கரசர். தந்தையார் புகழனார்; தாயார் மாதினி; உடன் பிறந்த தமக்கையார் திலகவதியார்.

தமக்கை திலகவதியாருக்குப் பல்லவ மன்னனின் சேனாதிபதியாகிய கலிப்பகையார் என்பவரை உரிய கணவர் என்று திருமணம் பேசப்பட்டது. ஆனால், திருமணத்திற்கு முன்பு, போர்க்களம் சென்று கலிப்பகையார் வீரமரணம் அடைந்தார். தம் மகளுக்கு உறுதிசெய்யப்பட்ட கணவர் இறந்தார் எனக் கேட்ட தந்தை புகழனார் மரணமடைந்தார்; சிறிது காலத்தில் தாயார் மாதினியாரும் இறந்து விட்டார். தந்தையும், தாயும், நிச்சயிக்கப்பட்ட கணவரும் இறந்தபோதும் வேறு திருமணம் செய்யாது தம் தம்பியாகிய நாவுக்கரசரை வளர்க்கும் பொருட்டுத் திலவதியார் வாழ்ந்து வந்தார்.

நாவுக்கரசரின் இயற்பெயர் மருள் நீக்கியார். மருள் நீக்கியார் தம் வாழ்வில் தொடர்ந்து நிகழ்ந்த துன்ப நிகழ்ச்சிகளால் வருந்தித் தாமும் திருமணம் செய்யாது பாடலிபுத்திரம் சென்று

சமணர்களின் நூல்களைக் கற்றுத் தேர்ச்சியுற்றுச் சமண மதத்தில் சேர்ந்தார். அங்குப் பலரிடம் வாதிட்டு வெற்றி பெற்றதனால் அவர், 'தருமசேனர்' என அழைக்கப்பட்டார்.

திருவாமூரில் இருந்த தமக்கை திலகவதியார், தம் தம்பி சமண மதத்தில் சேர்ந்தார் என அறிந்து வருந்தினார். அப்போது சிவபெருமான் அவருடைய கனவிலே தோன்றி, "விரைவில்உன் தம்பி சமணத்திலிருந்து விடுதலை பெற்று வருவான். சூலை நோய் எனும் கடும் வயிற்று வலியை அவனுக்குத் தந்து ஆட்கொள்வோம்" எனக் கூறினார்.

சமணர்களோடு இருந்த மருள் நீக்கியாராகிய தருமசேனருக்குத் திடீரென்று கடும் வயிற்று வலி ஏற்பட்டது. வலியின் வேதனையால் வருந்தினார், துடித்தார்; அரற்றினார்; துன்புற்றார். உடனிருந்த சமணர்கள் மந்திரங்களாலும் மூலிகைகளாலும் குணப்படுத்த முயன்று அதில் தோல்வி உற்றுத் தருமசேனரைக் கைவிட்டு விலகிச் சென்றனர்.

சாதாரணமாக மக்கள் யாராக இருந்தாலும் வாழ்க்கையில் துன்பம் ஏற்பட்டாலும், உடல்நிலை பாதித்தாலும், உள்ளம் நோகும்பொழுதும், அன்புக்குரியவர்களை, நட்புக்குரியவர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசையுறுவது இயல்பு. சிறு குழந்தைகள் உடல் நிலை சரியில்லாதபோது தம்முடைய தாய் தம் அருகிலேயே இருக்கவேண்டும் என்று நினைப்பதும் இயற்கைதான். வயதானவர்கள் நோய்வாய்ப்பட்ட போது தம்முடைய மகளையோ, மகனையோ, உடன்பிறப்புக்களையோ பார்க்கவேண்டும் என்று எண்ணுவதும் இயற்கைதான். இந்த இயற்கைக்குத் தருமசேனரும் விதிவிலக்கல்ல. வலியால் மிகவும் துன்பமுற்றபோது, தம் சகோதரியாரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவரை அழைத்தார். அவரோ, "சமணர்கள் வாழுமிடத்திற்கு நான் வரமாட்டேன். என்னிடத்திற்கு நீ வருக" எனக் கூறினார்.

அதைக்கேட்ட தருமசேனர் மனம் வருந்தி, எப்படியாயினும் தம் தமக்கையாரைப் பார்த்துவிட வேண்டும் என எண்ணினார். இச்சமண மதத்தில் சேர்ந்ததால்தானே இத்துன்பம் வந்தது. இப்போதே, இதைவிட்டு நீங்குவேன் எனச் சொல்லி, சமண மதத்திற்குரிய கமண்டலம், மயிற்பீலி போன்றவற்றை விடுத்து இரவோடு இரவாகத் திலகவதியாரிடம் வந்து சேர்ந்தார்.

திலகவதியார், தம் தம்பியாகிய தருமசேனரை அழைத்துக்கொண்டு, வீரட்டானேசுவரர் கோயிலை அடைந்து, திருநீறு வழங்கிச் சிவபெருமானை வணங்குமாறு கூறினார். தருமசேனரும், சிவபெருமானை வணங்கி,

*"கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நானறியேன்*
*ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்*
*தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட*
*ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே!"*

என்ற பதிகம் பாட, அக்கொடிய வயிற்று வலி நீங்கியது. அப்போது விண்ணிலிருந்து "திருநாவுக்கரசு எனும் பெயரால் தேவாரப் பதிகங்களைப் பாடுக" - என அசரீரி ஒலி எழுந்தது. அது முதல் அவரும் திருநாவுக்கரசர் எனப் பெயர் கொண்டு ஊர் ஊராகச் சென்று, சிவத்தலங்களில் பாடத் தொடங்கினார். அதோடு மட்டுமல்லாமல், செல்லுகின்ற ஊர்தொறும் உள்ள கோவிலைச் சுத்தம் செய்கின்ற "உழவாரப் பணி"யினைச் சிறப்புடன் செய்து வந்தார்.

தருமசேனர் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு சென்றுவிட்டார் என்பதை அறிந்த சமணர்கள் கோபங்கொண்டு, அப்போது அரசாட்சி செய்து வந்த பல்லவ மகேந்திரவர்மனிடம் சென்று தருமசேனர்மீது குற்றம் சுமத்தினர். உடனே அரசரும் திருநாவுக்கரசரைப் பிடித்து வரச்செய்து, நான்கு வகையான கொடுமையான தண்டனைகளைக் கொடுக்கிறான்.

முதலில் கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் நாவரசரை இட்டு மூடச் செய்தான். சின்னாட்கள் கழித்துத் திறந்து பார்த்தபொழுது, சற்றும் அயர்வின்றி, நாவுக்கரசர் வெளியில் வந்தார். அவரை அதிர்ச்சியுடன் கண்ட சமணர்களும் மன்னனும் உள்ளே எவ்வாறு இருந்தீர்கள் எனக் கேட்க, நாவுக்கரசர், சுண்ணாம்புக் காளவாய் சிவபெருமானுடைய திருவடி நிழலாக, வீணாகானமும், சந்திரனும், தென்றலும், இளவேனிலும், பொய்கையும் போலக் குளிர்ந்தது என்றார்.

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"*

இது கேட்ட மன்னன் சினம் கொண்டு, நாவுக்கரசரைக் கல்லுடன்சேர்த்து கட்டிக் கடலில் தள்ளிக் கொல்ல ஆணையிட்டான்.

அப்போது, நாவுக்கரசர்,

*"சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்*
*கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சிவாயவே"*

என்று பத்துப் பாடல்களைப் பாட, கட்டிய கயிறு அறுந்து போயிற்று. கடலிலே, கல்லானது தெப்பமாய் மிதந்து, திருப்பாதிரிப்புலியூரில் வந்து கரை சேர்ந்தது.

இது கண்ட சமணர்கள் வியந்து, எப்படியாவது இவரைக் கொல்ல வேண்டுமென்று, மதம் பிடித்த யானையைத் திருநாவுக்கரசர் மீது ஏவி விட்டனர். அப்போது நாவுக்கரசர்,

*"சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்*
*வண்ணவுரிவை உடையும் வளரும் பவள நிறமும்*
*அண்ணலரண் முரணேறும் அகலம் வளாய அரவும்*
*திண்ணன் கெடிலப்புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்*
*அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை"*

என்று திருப்பதிகம் பாடி அருளினார். யானை நாயனாரை வலம் செய்து அப்புறம் போயிற்று.

இதையும் கண்ட சமணர்கள் மேலும் வியந்தனர். நஞ்சு கலந்த சோற்றைக் கொடுத்து, நாயனாரைக் கொல்ல வேண்டும் என்ற உறுதி பூண்டு, நஞ்சு கலந்த சோற்றைக் கொடுத்தனர். சமணர்கள் கொடுத்த நஞ்சு, அமுதமாகி நாவுக்கரசருக்கு இனிமை தந்ததை,

*"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே*
*அஞ்செழுத்தோ திநாளும ரனடிக்கன்பதாகும்*
*வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலாவமணர் தந்த*
*நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே"*

என்ற பாடலால் அறியலாம்.

இப்படி எல்லாம், சமணர்கள் துன்பங்கள் பலவற்றைச் செய்தபோதும், துன்புறாத நாவுக்கரசரின் பெருமைகளை உணர்ந்த பல்லவ மன்னனும் சைவ நெறியிலே சேர்ந்தான் என்பது வரலாறு.

பின், திருநாவுக்கரசர் பல ஊர்களுக்கும் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பதிகம்பாடி வழிபட்டார். ஒருமுறை திருமறைக்காட்டில், திருஞானசம்பந்தர் ஏறி வந்த முத்துச் சிவிகைப் பல்லக்கினைத் தாமும் ஒருவராகச் சுமந்து வந்தார். திருஞானசம்பந்தர் அதுகண்டு வருந்தி, நாவுக்கரசரின் செயல்களைக் கண்டு வியந்து, அப்பரே என அகம் குளிர அழைத்தார்.

நாவுக்கரசர் ஒருமுறை, திங்களூர் எனும் ஊர் வழியாகச் சென்றார். அவ்வூரில் வாழ்ந்த அப்பூதி அடிகள் தாம் செய்து வருகின்ற தருமச் செயல்களாகிய அன்ன சத்திரம், தண்ணீர்ப் பந்தல், கிணறு, குளம் - இவற்றிற்கெல்லாம் திருநாவுக்கரசர் பெயரைச் சூட்டியிருந்தார். அதுமட்டுமல்லாமல் தம் மைந்தர்களுக்கும் அப்பெயரையே இட்டிருந்தார்.

திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளாரிடம் தம்மை வெளிப்படுத்தியவுடன், அவர் மகிழ்ந்து தம் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார். விருந்திற்காக ஏற்பாடுகளைச் செய்யும்பொழுது, மூத்த திருநாவுக்கரசு தோட்டத்தில் வாழைஇலை நறுக்கச் சென்றபோது அரவு தீண்ட, அச்சிறுவன் தன் தாயிடத்தே செய்தியைச் சொல்லி மயங்கி விழுந்து இறந்தான்.

தாய் பதறி அப்பூதியடிகளிடம் கூற, அவரும் மிக வருந்தினார். ஆயினும், திருநாவுக்கரசர் வரும் விருந்திற்குக் கேடுவரக் கூடாது எனக்கூறி, குழந்தையைத் துணியால் மூடி ஒரு புறத்தே வைத்து விட்டு, மற்ற ஏற்பாடுகளைச் செய்தார். திருநாவுக்கரசரும் வீட்டிற்கு வந்தார். அனைவருக்கும் திருநீறு வழங்கினார். அப்போது மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று கேட்க, 'அவன் இப்போது இங்கே உதவான்' என அப்பூதியடிகள் வருந்திக் கூற, நடந்ததை அறிந்த நாவுக்கரசர் மிக வருந்தி, மூத்த திருநாவுக்கரசின் உடலைக் கோவிலுக்கு எடுத்துச் சென்று,

*"ஒன்று கொலாமவர் சிந்தை உயர்வரை*
*ஒன்று கொலாம் உயரும்மதி சூடுவர்*
*ஒன்று கொலாம் இடுவெண்டலை கையது*
*ஒன்று கொலாமவ ரூர்வது தானே"*

என்று திருப்பதிகத்தைப் பாடியருள, உடனே மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்று எழுந்தான்.

பின்னர் நாவுக்கரசர் சோழ மண்டலம், பாண்டி மண்டலம் சென்று பதிகங்களைப் பாடி வந்தார். நின்ற திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம், க்ஷேத்திரக் கோவை - எனப் பல திருப்பதிகங்களைப் பாடினார். எனவே 'தாண்டக வேந்தர்' என அழைக்கப்பட்டார். இவர் தம் எண்பதாவது வயதில், முதிர்ந்த நிலையில் திருப்புகலூர் சென்று,

*"எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களை கணில்லேன் கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்கவடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே"*

என்று திருத்தாண்டகம் பாடிப் பரமசிவனுடைய திருவடியை அடைந்தார்.

திருமுறைகள் தமிழிசையை வளர்த்தன. கோவில் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை முதலிய அருங்கலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. தமிழ்ப் பற்றையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்தன. திருமுறைப் பாடல்கள் யாவும் கல்போன்ற உள்ளத்தையும் கனிவிக்கும் ஆற்றல் படைத்தவை.

கற்போரை அருள்நெறியில் நிற்கச் செய்பவை. திருமுறைகள் தமிழில் தோன்றிய மறைமொழிகள் என்றே சொல்லலாம். திருமுறை பாடியவர்களின் எண்ணங்கள் எல்லாம் தூய்மையானவை; ஆழமானவை; பற்றோடு பாசத்தோடு அன்போடு கூடியவை. எனவேதான் அவர்களின் எண்ணங்கள் பலருக்கும் அன்று முதல் இன்றுவரை வழிகாட்டியாக இருக்கின்றன.

## 10. தேவார மரபுப் பின்னணி

- முனைவர் ச. கங்காதரன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
*பேராசிரியர் & தலைவர், சைவ சித்தாந்த தத்துவத்துறை,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

*"வேதம் பசு, அதன் பால் மெய் ஆகமம், நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளூறு நெய், - போதமிகு
நெய்யின் உறுசுவையாம், நீள்வெண்ணை மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்"*

என்பது ஒரு பழம்பாடல். நால்வர் ஓதும் தமிழ், வேதம் ஆகமம் என்பவற்றின் மரபில் தோன்றுகிறது. நால்வர் ஓதும் தமிழின் சுவையாக அமைவதே மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். இக்கட்டுரையில் தேவாரத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் இந்திய தத்துவமரபு, சித்தாந்த மரபுப்பின்னணிகளை நோக்கலாம்.

*"திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மைசெய்து*
*பருகி ஊறலைப் பற்றிப் பதமறிந்து*
*உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே*
*அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே"*

என்பது அப்பர் குறுந்தொகை.

உலகில் தோன்றும் சிக்கல்களுக்குக் காரணம் சிந்தை கோணலாக இருப்பதே. திருகலாகிய சிந்தையின் கோணலைச் சரிசெய்து, பெருகலாம் தவம், பேதமை தீரலாம். சிந்தையின் திருகைச் சரிசெய்தால்தான் நம் உள்ளத்தில் இருக்கிற இன்ப ஊறலோடு தொடர்பு கொள்ளலாம். அப்போதுதான் சிவபிரானைப்பற்றிய உருக்கம் நம் மனதில் தோன்றும். உருக்கம் அவ்வாறு தோன்றும்போதுதான் ஆனைக்கா அண்ணல் நம் அருகில் இருப்பதை உணர்ந்து நாம் இன்புறலாம். 'அருகுநின்றிடும் ஆனைக்கா அண்ணல்' என்னும் தொடருக்கு, சொற்பொருள் மட்டும் பாராது, அத்தொடர் தெரிவிக்கும் மரபுப் பின்னணியை நாம் நோக்கினால்தான், பொருளை முழுமையாக உணர முடியும்.

*"நெருங்கி இணைந்த இரு பறவைகள் ஒரே கிளையில்*
*ஒட்டி இருக்கின்றன. அந்த இரு பறவைகளில்*
*ஒன்று சுவை மிகுந்த பழத்தை அருந்துகிறது.*
*மற்றொன்று பழத்தை அருந்தும் பறவையைப் பார்க்கிறது."*
*- சுவேதாசுவத்தர உபநிடதம் IV. 6.*

ரிக்வேதத்திலும், முண்டக உபநிடதத்திலும் இதே கருத்து வருகிறது. இந்நிகழ்வின் தத்துவக் கருத்தைப் பின்வருமாறு நோக்கலாம்:

பழத்தை அருந்தும் பறவை சீவான்மா. பழத்தை அருந்துதல் கன்மத்தை நுகர்வதைக் குறிக்கும். பக்கத்தில் உள்ள பறவையானது வெறுமனே பழத்தை அருந்துகிற பறவையைப் பார்க்காமல், எவ்வாறு பழத்தை அருந்தினால் மேற்கொண்டு கன்மம் தொடராது என்பதை அமைதியாக அறிவுறுத்திக்கொண்டு இருக்கிறது என்னும் உண்மை விளங்கும். பழத்தை அருந்துகிற பறவை பக்கத்தில் இருக்கும் பறவையைப் பார்க்கவில்லையானால், பழத்தை அருந்தும் பறவைக்குப் பார்க்கும் பறவை செய்யும் உதவி விளங்காது. அதுபோல உலகத்தில் சிக்கல் வரும்போது, அதைத் தீர்ப்பதற்குரிய வழியையும் சிவபிரான் உள்ளிருந்து உணர்த்தி வருகிறார். உள்நோக்கித் தன் உணர்வுடன் உணரும் ஆன்மாவுக்கே இவ்வுண்மை விளங்கும். இவ்வாறு உள்நோக்கிப் பார்க்காத உயிருக்குச் சிவபிரான் உதவும் உதவி விளங்காது.

இதே கருத்து திருமந்திரத்திலும் வருகிறது. மரக்கிளைக்குப் பதில் ஆற்றங்கரையைத் திருமூலர் கொண்டு, இரு அன்னங்கள் ஆற்றங்கரையில் நெருங்கி இருக்கின்றன. இவ்வாறு நெருங்கி இருந்தும் பக்கத்தில் இருந்து, உதவிபுரியும் அன்னத்தை அறியவில்லையானால், இவ்வாறு அறிய இயலாத முட்டாள் அன்னம் திருவருள் பேற்றை அணுகாது என்று திருமூலர் கூறுகிறார். மனிதன் துன்பப்படும்போது - தனக்கு ஒரு உதவியும் இல்லை என்று எண்ணும்போது அந்தத் துன்பத்தை அம்மனிதனே அனுபவிக்கும்படி அமைகிறது. அவ்வாறு இல்லாமல் எந்த நிலையிலும் திருவருள் நமக்கு உதவிக்கொண்டிருக்கிறது என்ற நினைவுடன் சிவபிரான் திருவடியை வேண்டி, அத்திருவடி நமக்கு உரிய உதவியைத் தருவதை நாம் நம் நடைமுறை வாழ்வில் உணரலாம்.

இதோ திருமந்திரப்பா:

*"அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்*
*துன்னி இரண்டும் துணைப் பிரியா தன்னம்*
*தன்னிலை அன்னம் தனியொன்றது என்றக்கால்*
*பின்ன மடவன்னம் பேறணுகா தன்றே".*

இவ்வாறு திருமந்திரம், வேத உபநிடதப்பகுதிகளைப் படித்து அதன் பின்னணியில் அப்பர் தேவாரத்தைப் படித்தால் பொருள் நமக்கு முழுமையாக விளங்கும். சொல்லின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும் என்று மணிவாசகர் அருள்வார். இவ்வாறு பாட்டின் பொருளை உணர்வதற்குச் சைவ சித்தாந்த தத்துவப் பின்னணியும் நமக்கு இன்றியமையாத தேவையாகும்.

தோத்திரத்தில் உள்ள நெகிழ்வு முதன்மை பெறுகிறது; சாத்திரத்தில் கருத்துக்களின் முறைமை முதன்மை பெறுகிறது.

*"விளையாததோர் பரிசில்வரு பசுபாசவேதனை ஒண்*
*தளையாயின் தவிரவ் வருள் தலைவன் அதுசார்பாம்*
*முளையார் தரு கதிராயிரம் உடையவவ் வனோடு*
*முளைமாமதி தவழும் உயர் முதுகுன்ற டைவோமே"* - *சம்பந்தர்*

எல்லா உலகங்கட்கும் உயிர்களுக்கும் தலைவனாக உள்ள சிவபிரான், இவ்வுலகத்து அணுக்கமாக விளங்கி நின்று அருள்புரிதற்கு இடமாக உள்ள முதுகுன்றம் எனும் தலத்தை அடைந்து நின்று அவனை வழிபடுவோம் என்பது இப்பாட்டின் கருத்து. இதில் தலைவனுக்குக் கூறும் அடைமொழியும் முதுகுன்றத்துக்குக் கூறும் அடைமொழியும் உண்மையின் இணைப்பு நிலையை - சித்தாந்தத்தின் அடிப்படை நிலையை நன்கு விளக்குபவை.

இறைவன் தலைவன் எனவும், உயிர் பசு (கட்டுற்றது என்னும் பொருள் உடையது) எனவும், கட்டு பாசம் எனவும் குறிப்பிடப்படுகின்ற உண்மையை நாம் உணரலாம்.

பாசம் கட்டுவது என்னும் பொருளில் உயிரின் அறிவு செயலை மறைக்கும் ஆணவத்தைக்குறிக்கும். வேதனை என்பது உயிர்களுக்கு உண்டாகிய நுகர்ச்சிகளாகிய இன்ப துன்ப மயக்கங்களைக் குறிக்கும். அஃது இங்கு ஆகுபெயராய் நின்று, இன்ப துன்ப மயக்கங்கட்குக் காரணமாகிய இருவினையைக் குறிக்கிறது.

ஒண்தளை என்பது உயிர்கட்கு அறிவு, செயல்களை விளக்குவதாயும் தடை செய்வதாயும் உள்ள உலகப் பொருள்களையும் அவற்றின் முதற்காரணமான மாயையினையும் குறிக்கிறது. உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் (தநு, கரண, புவன, போகம்) என இவை பொதுவாகக் குறிக்கப்படும். நமக்கு உடல் இன்றி, உலகப் பொருள்களின் தொடர்பு இன்றி அறிவு விளங்காது என்பது கண்கூடு.

நனவு, கனவு, உறக்கம் என்னும் உணர்வு நிலைகளைத் தன்னோக்கு உணர்வில் உணர்ந்து பார்த்தால் உடலோடும் மனதோடும் நம் அறிவிற்குத் தொடர்பு உள்ளவரை அறிவு விளக்கம் உள்ளது. அத்தொடர்பு நீங்க அறியாமையாகிய உணர்வு இழப்பு ஏற்படும் என உணரலாம். ஒண்தளை என்பது ஒட்பத்தை - அறிவை விளக்கும் தளை. அஃதாவது மாயை

பசுவும், பாசவேதனை ஒண்தளை ஆயினவும் பசு இவற்றைத் தவிர்த்து இன்புறும்படி அருளும் தலைவனும் என்றும் உள்ள தோற்றமில் பொருள்கள் (அநாதி நித்திய பதார்த்தங்கள்). இவ்வுண்மையை உணர்த்துதற் பொருட்டு "விளையாததோர் பரிசில் வரு" என்னும் பெயர்எச்சத் தொடரை முதலில் வைத்தனர் சம்பந்தர். அஃது அம்மூன்றனோடும் தனித்தனி கூட்டி உரைக்கப்படும்.

விளையாதது பசு; விளையாதது பாசம்; விளையாதது தலைவன்.

ஒரு காலத்தில் தோன்றியது எனப்படாத தன்மையில் தோற்றமில் காலமாக உடம்போடு கூடிப் பிறந்தும் அதனைப் பிரிந்து மறைந்தும் வருவது பசு எனப்படும் உயிர். பாசம் என்பதும் அவ்வுயிர்களைத் தோற்றமில் காலமாகப் பிணித்து வருவது. இஃது ஆணவம். உயிர்கள் ஆணவத்தில் மட்டும் அழுந்தி நிற்கும் தனிநிலை (கேவல அவத்தை), ஏனைய தளைகளோடு கூடிநிற்கும் நிலை கூட்டு நிலை (சகல அவத்தை) என இரு நிலைகளை உடையது. பாசம் தனி நிலையில் உயிர்களின் அறிவை மறைத்து நிற்கும். கூட்டு நிலையில் அறிவு ஓரளவு விளங்கும்.

தலைவன் இங்ஙனம் பாசத்தைத் தொழிற்படுமாறு செய்து, உயிர்களின் ஆற்றல்களை நுணுகி வளரும்படி செய்வான். இச்செயல் மறைத்தல் திரோபவம் எனப்படும் இம்மறைத்தல் தொழில் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழிலிலும் அடங்கும். இச்செயலின் அடையாளமாகவே இறைவன் திருக்கையில் மூவிலைவேல் உள்ளது.

*"மூன்று மூர்த்தியுள் நின்றியலும் தொழில்*
*மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்"*

என அப்பர் அருள்கிறார். உயிர்கள் இறைவன் நியமிக்கும் ஒழுங்கு கட்டுப்பாட்டினால் தம் உணர்வு மலர்ந்து விரியப்பெறும். தாய் குழந்தைக்கு நேரத்தில் உதவி செய்வதுபோல சிவபிரான் உயிர்களுடைய தன்மை கருதி ஒவ்வொரு நொடியும் பாசமாகிய பற்றை அறுத்து வளர்த்து வருகிறான்.

*"பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே" (பாரித்தல் - வளர்த்தல்) - மணிவாசகர்.*

உயிருக்குத் தற்போதுள்ள நிலையிலிருந்து பக்குவத்தை மிகுதிப்படுமாறு பெருமான் செய்வான். பக்குவம் முதிர்வு பெறும் நிலையில் முதல்வன் உயிர்களுக்குத் தன்னோடு உள்ள தொடர்பை விளக்கி ஆட்கொள்வான். இன்ப நிலை அப்போது ஆன்மாவுக்கு முழுமையாக விளங்கும். இந்நிலையைப் 'பாச ஒண்தளையாயின தவிரவ் அருள் தலைவ'னால் ஏற்படும் என்று சம்பந்தர் அருள்கிறார்.

தேவாரத்தை நாம் பலகால் பயில வேண்டும். தேவாரத்தின் பொருள் உணர்ந்து கொள்ள சாத்திரத்தை நாம் கற்கவேண்டும். சைவ சித்தாந்த சாத்திரம், இந்திய தத்துவ சாத்திரங்கள் என்பவற்றைப் படித்து, பிறகு திருமுறைகளை நோக்கும்போது திருமுறைகளின் பொருள் சிறப்பை நாம் மிகுதியாக உணரலாம்.

# 11. தேவாரத் திரட்டு

- 'திருமுறை மாமணி' ஜெ. மகாதேவன்,
*திருவான்மியூர், சென்னை*

மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ் இப்போது பொதுவாகத் "தேவாரம்" என்று அழைக்கப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் 'திருக்கடைக்காப்பு' என்றும், திருநாவுக்கரசர் அருளியவை 'தேவாரம்' என்றும், நம்பியாரூராகிய சுந்தரர் அருளியவை 'திருப்பாட்டு' என்றும் வழங்கப் பெற்றன.

தேவாரம் என்றால் படித்தாலும், கேட்டாலும் இறைவன் மீது பேரன்பு கொள்ளச் செய்யும் அருட்பாடல்கள் என்றொரு பொருளுமுண்டு. தேவாரம் ஓதுவதால் பல நன்மைகள் நமக்கு உண்டாகும். குருவருளும், திருவருளும் பெருக்கி, இம்மை, மறுமை நலன்களை வழங்கிச் சிவமாம் பேரின்பத்தில் திளைக்கச் செய்யும்.

*இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்க் கெடலுமாம்*
*அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே*

எனும் சுந்தரர் வாக்கு ஈண்டு சிந்திப்பதற்குரியது.

தற்போது நமக்குத் திருஞானசம்பந்தர் பதிகங்கள் - 384; அப்பர் பெருமானின் பதிகங்கள் - 312; சுந்தரர் பதிகங்கள் - 101 ஆக மொத்தம் 797 பதிகங்கள் கிடைத்துள்ளன. அவற்றை முறையே பாராயணம் செய்வது மிகக்கடினம். அதனால் பெரியோர்கள், எளிதில் பாராயணம் செய்யக்கூடிய வகையில், தோத்திரம், சாத்திரம் அடிப்படையில் திரட்டி (தொகுத்து)த் தேவாரத்தை நமக்கு வழங்கியுள்ளனர். அவை 'தேவாரத்திரட்டு' என்று போற்றப் பெறுகின்றன.

தோத்திர முறையில் 'அகத்தியர் தேவாரத்திரட்டு'ம், சாத்திர முறையில் உமாபதி சிவம் அருளிய 'தேவார அருள்முறை திரட்டு'ம் சைவ அன்பர்களால் போற்றிப் பாராயணம் செய்யப்பெற்று வருகின்றன.

**அகத்தியர் தேவாரத்திரட்டு**

சிவாலய முனிவருக்காக அகத்தியர் பெருமான் 1. குருவருள் 2. பரையின் வரலாறு (திருநீறு) 3. ஐந்தெழுத்து உண்மை, 4. கோயில் திறம், 5. இறைவனின் திருவார் திருமேனி, 6. திருவடி, 7. அர்ச்சனை, 8. அடிமைத்திறம் ஆகிய எட்டு தலைப்புகளில் 25 முழுமையான திருப்பதிகங்களைத் தொகுத்தருளியிருக்கின்றார்கள். திருஞான சம்பந்தர் அருளியவை 10, அப்பர் அருளியவை 8. சுந்தரர் அருளியவை 7 ஆக திருப்பதிகங்கள் மொத்தம் இருபத்தைந்தாகும்.

*"குருவருளும் வெண்ணீறு எழுத்தஞ்சும் கோயில்*
*அரன்உருவும் என்தலைமேல் ஆக்கும் திருவடியும்*

*சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கு என்று*
*இட்டார் அகத்தியனார் எட்டு."*

என்பது அகத்தியர் தேவாரத்திரட்டின் நுதலிய பொருள் குறித்த வெண்பாவாகும்.

இதற்குச் சித்தாந்த வித்தகர் சிவத்திரு கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்கள் அருமையான உரை வழங்கியிருக்கின்றார்கள். அதனை வெளியிட்ட பெருமை தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு உரியது. தற்போது இவ்வுரை நூல் கிடைப்பது அரிதாய் உள்ளது.

பேராசிரியர் முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் அருமையாக எளியமுறையில் விரிவான உரையெழுதி வெளியிட்டுள்ளார்கள்.

அகத்தியர் தேவாரத்திரட்டினை அன்பர்கள் பல இடங்களில் முற்றோதலாகவும், தனித்தும் ஓதிப்பயன் பெற்று வருகின்றனர். இது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

**தேவார அருள் முறைத்திரட்டு**

சந்தானக் குரவர்களில் நான்காமவராகிய உமாபதி சிவம் தொகுத்தருளிய 'தேவார அருள்முறைத் திரட்டு' இதுவாகும். இது அகத்தியர் தேவாரத் திரட்டினைப் போல் மக்களிடையே அதிகம் பரவவில்லை என்பது வருத்தத்திற்குரியது. சாத்திரமுறையில் தொகுக்கப் பெற்ற அருள் நூல்.

உமாபதி சிவம், தாம் பாடியருளிய திருவருட்பயன் என்ற சாத்திர நூலின் பத்து அதிகாரங்களையே தலைப்புகளாகக் கொண்டு 99 திருப்பாடல்களை இந்நூலில் தொகுத்தருளியுள்ளார். சம்பந்தர் அருளிய 23 பாடல்களும், அப்பர் அருளிய 64 பாடல்களும், சுந்தரர் அருளிய 12 பாடல்களும் ஆக மொத்தம் 99 திருப்பாடல்கள் முறையாக இந்நூலில் அழகாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

பத்து தலைப்புகள் முறையே 1. பதிமுதுநிலை 2. உயிரவை நிலை 3. இருள்மலநிலை 4. அருளது நிலை 5. அருளுரு நிலை 6. அறியும் நெறி 7. உயிர் விளக்கம் 8. இன்புறு நிலை 9. அஞ்செழுத்து அருள்நிலை 10. அணைந்தோர் தன்மை ஆகியன. இந்நூலுக்கு அரியதோர் விரிவுரையினைச் சித்தாந்த பண்டிதர் கழகப் புலவர்த் திரு ப. இராமநாத பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். இதனை 1961ல் வெளியிட்ட தென்னிந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் தமிழ் சைவத் தொண்டுகள் நம் நெஞ்சில் என்றும் நிலைத்திருப்பன.

அகத்தியர் தேவாரத்திரட்டு 10 ஆம் நூற்றாண்டிலும், தேவார அருள் முறைத் திரட்டு 14 ஆம் நூற்றாண்டிலும் தோன்றின என்பர் அறிஞர் பெருமக்கள்.

இவ்வரிய தேவாரத்திரட்டுக்களை முறையே ஓதினால் தேவாரம் முழுமையும் (முதல் ஏழு திருமுறைகள் - அடங்கன்முறை) ஓதிய பயன் கிடைக்கும் என்பர் பெரியோர்.

அதனால் சைவப் பெருமக்கள் தேவாரத் திரட்டினை அன்புடன் ஓதி, பெரும் பயன் பெறுவார்களாக. எல்லாம் சிவன் செயல்.

# 12. இயற்கை வளம் போற்றும் தேவாரம்

- சித்தாந்த இரத்தினம் திரு. கு. சேது சுப்பிரமணியன், பி.எஸ்.ஸி, (விவ) டி.எஸ்.எஸ்.,
*முன்னாள் வேளாண்மை இணை இயக்குநர், மேலாளர், வி.எஸ்.டிரஸ்டு, சிதம்பரம் - 608 001.*

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை மறைந்து இன்று மனிதன் செயற்கை வாழ்வை மேற்கொண்டதன் காரணமாக இயற்கைவளம் அழிந்து உலகம் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி சுற்றுச் சூழல் மாசுபடும் நிலைக்கு வந்துவிட்டது. ஒரு நாட்டின் வளம் சீரிய முறையில் செயல்படவேண்டுமானால் நாட்டின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பங்கு வனவளம் இருக்கவேண்டும் என வனவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்று நம் நாட்டின் வனவளம் 22% விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளது. இதனால் நீர்வளம், நிலவளம், கடல்வளம் ஆகிய அனைத்தும் குறைந்து பூமி உருண்டையே வெப்பக் கோளாக மாறிவருகிறது.

மனிதனுடைய வாழ்வுக்கு ஆதாரமான உண்டி, உறையுள், உடை, மருந்து இவைகள் இயற்கை வளத்தை ஒட்டியுள்ளதால், பசி, குளிர், நோய், வெப்பம் ஆகியவற்றைத் தோற்றுவிப்பதும், நீக்குவதும் அதனுடன் உள்ள தொடர்பேயாகும். இயற்கையின் எண்ணிறந்த வளத்தையும், வனப்பையும் புலவோர் பலர் பண்டைக்காலம் முதல் இன்றுவரை எழுதியும் பாடியும் வந்தாலும் அதன் எல்லையைக் காண இயலவில்லை. சங்ககால இலக்கியங்களிலிருந்து தற்கால கவிஞர்கள்வரை இயற்கை வளத்தின் பேரழகைப் பாடாதவர்களே இல்லை எனலாம். இருந்தும் இசைப்பாட்டின் வழியாக இயற்கைப் பொருளழகைப்பாடுவது உணர்வுக்கு மகிழ்வூட்டி இன்பம் பயப்பதாகும். அதிலும் ஞானப்பனுவல்களாம் மூவர் தேவாரம் காட்டும் இயற்கைப் பொருளழகின் சுவையினைப் பருகும்போது உள்ளம் உருகி இறையுணர்வு பெருகும் பாங்கினை நாம் அறியலாம். தேவாரம், திருவாசகம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் காலங்களில் அவர்களின் தெய்வப்பனுவல்கள் மூலமாக அறியப்படும் இயற்கை வளம் தற்காலத்தில் நிலவவில்லை என நினைக்குந்தோறும் ஏக்கமும், கவலையும் மிகுகின்றது. இவர்களுள் ஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாடல்களில்தான் இயற்கைவளம் பற்றிய வருணனைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

நிலவளம் கூறும் ஞானசம்பந்தர் திருமுல்லைவாயில் என்னும் தலத்தின் அழகைப் பின்வருமாறு கூறுகிறார்:

*"காலாடு நீல மலர்துன்றி நின்ற கதிரேறு செந்நெல் வயலில்*
*சேலோடு வாளை குதிகொள்ள மல்கு திருமுல்லைவாயில் இதுவே"*

காற்றில் கருங்குவலை மலர்கள் ஆட, கதிர்முற்றியுள்ள செந்நெல் வயல்களின் சேல் ஓடித்திரியும், வாளை குதித்துத் துள்ளவும், விளங்குகின்றது அத்தலம் என அதன் வளத்தைப் பாடுகிறார். திருவீழிமிழலைப் பதிகத்தில்,

*"தேங்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச் செண்பகம் வண்பலா விலுப்பை*
*வேங்கை பூ மகிழ்ஆல் வெயிற்புகா, வீழி மிழலையான் என வினை கெடுமே"*

என்னும் பாடலில் திருவீழிமிழலை என்னும் தலம் பாக்கு, தென்னை, செண்பகம், பலா, இலுப்பை, வேங்கை, மகிழம், ஆல் என மரங்கள் அடர்ந்து வளர்ந்த வெயில் புகாத ஊர் என அதன் வளத்தினைக் கவிநயத்துடன் கூறுவது சுவைத்து இன்புறுவதாகும். இதில் பாக்கு, தென்னை, பலா ஆகிய இவை பயன்தரும் மரங்கள். மகிழம், வெண்பகம் முதலியவை மணம் வீசும் மலர்கள். ஆல், இலுப்பை, வேங்கை முதலியவை, மழைவளம் பெருக உதவும் மரங்கள். இவ்வாறு பல வகை மரங்களும் செழித்து வளர்ந்ததால் வெயிலும் புகாத ஊராக விளங்கிற்று என்றால் வளம் எவ்வாறு மிகுந்திருந்தது என்பதை உணரலாம்.

திருவெண்காட்டுப் பதிகத்தில் ஞானசம்பந்தர்,

*"விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்*
*மிடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று*
*தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையைக்*
*கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டும் காட்சியதே"*

என்று திருவெண்காட்டின் மலர்ச்சோலையில் மடல் அவிழ்ந்த தாழையின் நிழலைக்கண்ட நீர்நிலையில் வாழும் கெண்டை மீன்கள், தம்மைக் கொத்திச் செல்லும் நாரைகள் என அஞ்சி, தாமரையின் இடையில் மறைய அதனைக்காணும், கடலிலிருந்து வெளிவந்த முத்துக்கள் நகைப்பது போன்ற காட்சியுடையது ஆகும் என கடல் வளத்தையும் நீர்வளத்தையும் ஒருங்கே உருவகப்படுத்திக் கூறியுள்ளமை நம்சிந்தனைக்கு நல் விருந்தாகும்.

திருவலம்புரத்து இறைவன் உறையும் இடம் குவளையும், செந்நெலும் விளைய, இடையில் ஆம்பலும் நெய்தலும் திகழ, தெருக்களில் மாமரங்களும் தென்னையும் வளர, கனிகள் வழங்கும் தோட்டம் பெருக, ஆங்கு குருகினம் கூடி மகிழ்ந்து இறகுகளை விரித்து மகிழ வலம்புரம் (கீழபெரும்பள்ளம்) என்னும் தலம் விளங்கும் என நாவுக்கரசர்,

*"அருகெலாம் குவளை செந்நெல் அகவிலை ஆம்பல் நெய்தல்*
*தெருவெலாம் தெங்குமாவும் படம்விழும் படப்பைஎல்லாம்*
*குருகினம் கூடி யாங்கே கும்மலித் திறகு உலர்த்தி*
*மருவெலாம் இடங்கள் காட்டும் வலம்புரத் தடிகளாரே".*

வயல் வளத்தினைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

மலைவளம் பாடும் சுந்தரர் திருபருப்பதம் என்னும் பதியில் மான்களின் கூட்டமும், மரை இனமும், மயிலும் எங்கும் உலாவி, தம் விருப்பதிற்கேற்ப உணவு வகைகளைத் தேடி, சுனைகளின் வரும் நீரைப் பருகி, பூத்த பெரிய மரங்களில் உராய்ந்து அவற்றின் செறிவூடே சென்று தேமதுரச் சோலைகளில் உறங்குகின்ற திருப்பருப்பதம் என்னும் மலையே எங்கள் இறைவன் உறையும் மலை எனக் கவிநயத்தோடு கூறும் பாடல் இதோ:

*"மானும் மரை இனமும் மயில் இனமும் கலந்து எங்கும்*
*தாமே மிக மேய்ந்து தடம் சுனை நீருகளைப் பருகி*
*பூமா மரம் உரிஞ்சிப் பொழில் ஊடே சென்று புக்குத்*
*தேமாம் பொழில் நீழல் துயில் சீபர்ப்பத மலையே".*

இவ்வாறு மூவர் தேவாரத்திலும், இயற்கை வளம் கூறும் இனிய பாடல்கள் ஏராளம். அவைகளைப்பற்றி விரிவாகக் கூறின் மிகவும் விரிந்து பெரிய நூலாகும். அவர்கள் காலத்தில் இயற்கை வளம் மிகுந்து இருந்ததால் மழைவளம் பெருகி நிலவளம் கூடியது. தமிழ்க்குடிமக்கள் வாழ்க்கையின் நெறியறிந்து அதனை முறைப்படி குறிஞ்சி என்ற மலை சார்ந்த பகுதி, முல்லை என்ற காடுசார்ந்த இடம், மருதம் என்ற வயல் சார்ந்த நிலம், நெய்தல் என்ற கடல் சார்ந்த இடம், பாலை என்ற வறண்ட நிலம் எனப் பகுத்து வாழ்க்கை நடத்தினர். பாலை என்ற தனி நிலம் இல்லையெனவும், குறிஞ்சியும் முல்லையும் நிலைமாறியதே பாலை எனவும் நூல்வல்லார் கூறுவர். இதனை,

*முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து*
*பாலை என்பதோர் படிவம் கொள்ளும்*

என வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம். இக்கருத்தினை ஒட்டி இன்றைய சஹாரா, தார் பாலைவனங்கள் முந்தைய முல்லை நிலங்களே பின்னர் திரிந்தன என்ற அறிவியல் அறிஞர்களின் கருத்துகள் ஒத்து வருகின்றன. எனவே, இன்றைய நிலையில் ஐந்திணை நிலங்களும் திரிந்து பாலை வனங்கள் கூடுமோ என்ற அச்சம் ஏற்படுவது இயல்பே. ஏனெனில் வனவளம் அழிக்கப்படுவதால் மழை வளம் குறைந்து வருகிறது. அதனால் குளங்கள், ஏரிகள் வற்றி வருகின்றன. ஆறுகள் கழிவு நீர்கால்வாய்களாக மாறிவருகின்றன. கடல் மாசுபட்டு விட்டது. கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து வருகின்றன. இயற்கையோடு இயைந்து வாழும் உயிரினங்கள் அருகி வருகின்றன.

இயற்கை வளம் மிகுந்திருந்த காரணத்தினால்தான் மூவர் தேவாரத்திலும் அதனுடைய தாக்கம் மிகுந்து காணப்படுகிறது. அவர்கள் எடுத்துக்காட்டிய இயற்கை வளம் திரும்பாதோ என்னும் ஏக்கம், அவர்கள் பாடலைப் பயிலும்போதெல்லாம் ஏற்படுகின்றது. எனவே இப்பாடல்களைப் பயிலும் அன்பர்கள் மூலமாவது விழிப்புணர்வு ஏற்பட்டு இயற்கை வளம் இனியும் அழியாமல் பேணிக்காக்க வேண்டும் என உறுதி பூண்டால் மக்கள் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் நலம் காக்க வீட்டுக்கொருமரம் வளர்ப்போம்.!

# 13. தேவாரத்தில் சைவ சித்தாந்தம்

- கவிஞர் வ.த. இராம சுப்பிரமணியம், எம்.ஏ.
*தலைவர், தமிழ்ச் சங்கம், காஞ்சிபுரம்.*

சைவ சித்தாந்தத்தின் தலையான சாத்திர நூலாகத் திகழ்வது சிவஞான போதம். இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவர். இவர்தம் திருஅவதாரம் சைவ சமயாசாரியர்களில் முதல்வராகத் திகழும் திருஞானசம்பந்தரின் திருவருள் வழி நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சமயம் வேளாண்குலச் சான்றோராகிய அச்சுத களப்பாளர் தமக்கு மகப்பேறு வாய்த்தற் பொருட்டுத் தம் ஞானாசிரியரான அருள் நந்தி சிவாசாரியார் சுவாமிகளை வணங்கி உபதேசம் நாடினார். அப்போது ஞானாசிரியர், சைவப்பெருமக்கள் தமது வேண்டுதலை ஈடேறப் பெறுதற்குத் திருஞானசம்பந்தர் தேவாரத்தை மாலை சாத்தி வழிபட்டுப் பூசித்து, நூல் சாற்றிப் பார்த்து மெய்யருள் வெளிப்படத் தலைப் படுவர் என்று அருளினார். அச்சுத களப்பாளரும் அங்ஙனமே செய்யத் திருவெண்காட்டுத் திருப்பதிகம் வெளிப்பட்டது.

இத்தன்மையில் திருஞானசம்பந்தர் மதுரையில் நடைபெற்ற அனல்வாதத்தின்போது இவ்வாறு நூல் சாற்றி எடுக்கப்பட்ட திருப்பதிகத் திருவோலையே பச்சைப் பதிகமாகத் திகழ்ந்தது இதனைச் சேக்கிழார் சுவாமிகள், பெரிய புராணத்தில்

*"சாற்று மெய்ப்பொருள் தரும் திருமு றையினைத் தாமே*
*நீற்றுவண் கையால் மறித்தலும் வந்து நேர்ந்து ஏதால்*
*நாற்றடம் புயத்து அண்ணலார் மருவுநள் ளாறு*
*போற்றும் அப் பதிகம் போகம் ஆர்த்த பூண் முலையாள்* - 2685

என்று அருளிச் செய்தவாறும் காண்க.

நூல் சாற்றிய வகையில் அருளியவாறு அச்சுத களப்பாளர் தம் துனைவியாரோடு முக்குள நீராடி வெண்காட்டு நாதனை வணங்கிய நீர்மையில் மகப்பேறு வாய்க்கப்பெற்றார். அவரே மெய்கண்டார் ஆயினார். ஆதலின் தேவாரத் திருமுறையின் வளமையால் அவதரித்த மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதமும், அவற்றின் விளக்கமாகத் தோன்றிய ஏனைய சாத்திரங்களும் தேவாரத் திருமுறையின் வாயிலாகச் சாற்றப்படும் மெய்ம்மைகளையுடைய சாத்திர நூலாக மிளிர்தல் மெய்யருள் வயமாயிற்று.

இத்தன்மையில் தேவாரத்தில் சாற்றப்படும் கருத்தின்வழி விளங்கும் சாத்திரப் பேருண்மைகள் இரண்டொன்றைக் காணலாம். திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா என்னும் தலத்தைச் சார்ந்து சிவபெருமானை ஏத்தித் திருப்பதிகம் பாட இறைவன் பொற்றாளத்தை அருளிச் செய்கின்றார். இதன் முதல் பாடல் வருமாறு:

*"மடையில் வாளை பாய மாதரார்*
*குடையும் பொய்கைக் கோலக் காவுளான்*

*சடையும் பிறையும் சாம்பற் பூச்சும்கீழ்*
*உடையும் கொண்ட உருவம் என்கொலோ."*

**இதன் பொருள்:**

திருக்கோலக்கா என்னும் ஊர், நீர் வளம் மிகுந்தது. வயல்களில் நீர் நிறைந்து விளங்குவதால் வாய் மடையில் நீர் தேங்கி உள்ளது. ஆங்கு வாளை மீன்கள் குதித்துப் பாய்ந்து ஓடி மகிழ்கின்றன. இதன் வாயிலாக ஊரின் நிலவளம், நீர்வளம், நெல்வளம் போன்றவை காட்டப்பெறுகின்றன. மாதர்கள் பொய்கையில் நீராடும் செயலானது பத்தி நெறியை மட்டும் அல்லாது மாந்தர்தம் இறையொழுக்க மேன்மையும் வெளிப்படுத்துகின்றது. மாதர்கள் அச்சமின்றிப் பொய்கையில் நீராடுதலால் ஆடவர்தம் மேன்மைசால் நல்லொழுக்கச் சீலமும் குறிப்பால் சுட்டப்பெறுதலாம். இதனை அக்காலச் சமுதாய மேன்மையை உணர்த்துதலாகவும் காணலாம்.

அடுத்த ஈரடியில் இறைவனைப் பற்றிச் சுட்டுதலாயிற்று. சடை என்பது படைத்தல் தொழிலைக் குறித்தது. வீரபத்திரக் கடவுள் ஈசன் சடையிலிருந்து தோன்றியதாகப் புராணம் சான்று பகர்கின்றது. பிறை என்பது சந்திரனைக் குறித்து நிற்கக் காத்தல் தொழிலை உணர்த்திற்று. சாம்பல் பூச்சு என்பது அழித்தல் தொழிலைச் சுட்டும். கீழ் உடை என்பது மறைத்தல் தொழிலையும், கொண்ட உருவம் என்பது அருளல் தொழிலையும் சாற்றும்.

இப்பாடலின் பின்னிரண்டு அடிகள் சிவபெருமான் ஆற்றும் ஐந்தொழில் சிறப்பினைச் சுட்டுதலாயிற்று.

1. படைத்தல் - சடை
2. காத்தல் - பிறை
3. அழித்தல் - சாம்பற் பூச்சு
4. மறைத்தல் - கீழ் உடை
5. அருளல் - கொண்ட உருவம்

இத்தன்மையில் ஐந்தொழில் ஆற்றும் சிவபெருமான் உயிர்களின் பொருட்டுக் கருணை விளங்க மேவும் நிலையை - முதன்மை நிலையைச் சிவஞானபோதம் முதற் சூத்திரம்,

*"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்*
*தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்*
*அந்தம் ஆதி என்மனார் புலவர்"*

என்று சாற்றுகின்றது. மற்றும் சிவஞான சுவாமிகள் இச்சூத்திரத்தின் மூன்றாம் அதிகரணத்தில் சங்கார கர்த்தாவே முதற்கடவுள் எனச் சாதித்தற்கு எழுந்தது என்று அருளியமையும் நோக்கற்பாலது.

எனவே ஐந்தொழில் ஆற்றும் பரம்பொருளே சங்கார கர்த்தா எனவும், அவரே சிவபெருமான் எனவும் தேவாரத்திருப்பாட்டின் வாயிலாகச் சுட்டும் திருஞானசம்பந்தர்தம் திருவாக்கு சிவஞான போதத்தில் பொதிந்துள்ளமையைக் காணலாம்.

அடுத்து, திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பாடல் ஒன்றை ஒரு சிறிது நோக்குவோம்:

*"விண்ணுற அடக்கிய விறகின் வெவ்வழல்*
*உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்*
*பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை*
*நண்ணி நின்று அறுப்பது நமச்சி வாயவே."*

இது நமச்சிவாயப் பதிகத்தில் வரும் தேனாமிர்தப் பாடல்.

வானளவு உயரம் பெறுமாறு விறகை அடுக்கி வைத்தாலும் அவற்றை எரித்துச் சாம்பலாக்கி அழிப்பதற்கு அந்த அளவு நெருப்பு வேண்டியதில்லை. நெருப்புப் பொறி சிறிது போதும். அதுபோலவே இந்த உலகத்தில் வினையின் வாயிலாக இவ்வான்மா பிறப்பு அடைய அதனால் உண்டாகும் பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கு நமச்சிவாய என்னும் நெருப்பை ஒத்த ஒளிமேவும் சிவ மந்திரம் போதும். ஈண்டு இருவினைகளைப் போக்கும் மகாமந்திரம் திருவைந்தெழுத்தாகும் அதுவே நம்மை நண்ணி நின்று காக்கும். இதனைச் சிவஞான போதம் 9ஆம் சூத்திரத்தில்,

*"ஊனக் கண் பாசம் உணராப் பதியை*
*ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி*
*உராத்துனைத் தேர்ந்தெனப் பாசம் ஒருவத்*
*தண்ணிழ லாம்பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே"*

(உராத்துனைத்தேர் - கானல்நீர் போலும் பொய்த் தோற்றம்.) எனச் சாற்றுதலைக் காணலாம்.

இத்தன்மையில் திருவைந்தெழுத்தின் ஆற்றல் இனிது சாத்திர நூலின் வாயிலாக உணர்த்தப்படுதலையும் காணலாம்.

பண்ணிய உலகு என்று தேவாரத்தில் சாற்றப்படும் அருந்தொடரானது உலகம் ஒருவனால் செய்யப்பட்டது என்னும் பொருண்மையில் சிவஞான போதம் முதற் சூத்திரத்தில் நவின்றவாறும் அமைகின்றது.

உயிர்கள் பிறவி எடுத்த நிலையில் நல்வினை தீவினை என்னும் அழுக்குகள் சேர்கின்றன. இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "பயின்ற பாவம்" எனச் சுட்டுகின்றார்கள். இத்தகு நெறியில் "அழுக்குமெய்கொடு உன் திருவடி அடைந்தேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூர்த் திருப்பதிகத்தில் குறித்தமையும் அறியற்பாலது. இதனையே சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் வாசனா மலம் எனக் குறிப்பால் உணர்த்தியமையும் கருதத்தக்கது. இவ்வழுக்கு செம்பில் களிம்பு போன்று இயல்பாய் உண்டாகும். இதனைச் சிவ மந்திரமாம் திருவைந்தெழுத்தின் உணர்வால் போக்கிக்கொள்ள வேண்டும். இவ்வரிய உபதேசமானது "விதி என்னும் அஞ்செழுத்து" என்று சாத்திர நூலாலும், நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே என்று தேவார ஆசிரியராலும் அருளப்பட்டது.

இறைவன் திருவடிச் சிறப்பினை,

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டு அறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"*

என்று அப்பர்பெருமான் காட்டியவாறு, சிவஞான போதம் சூத்திரம் ஒன்பதில் "தண்ணிழலாம் பதி" என உணர்த்துதலையும் காண்க.

இவ்வாறு நோக்கும்போது தேவாரக் கருத்துகள் பல சைவ சித்தாந்த சாத்திரத்தில் நன்கு தோய விளங்குதலைக் காணலாம். "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்" என்னும் திருமொழிக்கு இணங்கத் தேவாரமும் சைவ சித்தாந்தமும் சைவ நீதியாய்த் தழைத்து ஓங்குக! தரணியும் இனிது விளங்குக.

# 14. 'திருத்தொண்டத் தொகை': தோற்றமும் ஏற்றமும்

- பருத்தியூர் முனைவர் K. சந்தானராமன், எம்.ஏ., டி.லிட்., பிஎச்.டி.,
*சென்னை.*

**திருவாரூரின் தொன்மை**

இறைவன் திருத்தலங்களில் திருவாரூர் மிகவும் தொன்மையானது. பிறக்க முக்தியளிக்கும் இத்தலத்தின் தொன்மையைத் திருநாவுக்கரசரின் தாண்டகம் வெகுவாகப் புகழ்கிறது. "ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ?" என்று தொடங்கும் தம் பதிகத்துள், "ஈசன் உலகில் தனியாக இருந்த ஒடுக்கக் காலத்திலேயே திருவாரூரில் கோயில் கொண்டுவிட்டான்" என்று கூறுகிறார்.

திருவாரூர் தியாகேசர் திருக்கோயிலின் முன் அமைந்துள்ள கமலாலயத் திருக்குளத்தின் கரைகளில்தான் உலகின் முதல் ஒருவழிப் போக்குவரத்து முறை தொடங்கியிருக்க வேண்டும். குடவாசல் திசையிலிருந்து திருவாரூர் நகருக்குள் நுழையும் ஊர்திகள் அனைத்தும் கமலாலயக் குளத்தின் வடக்குக்கரை மற்றும் கிழக்குக்கரை வழியாகச் செல்கின்றன. குடவாசல் திசையில் செல்லும் ஊர்திகள் தெற்கு மற்றும் மேற்குக் கரைகளின் வழியே செல்கின்றன. மோட்டார் வாகனங்கள் தோன்றுவதற்கு முன்பே இங்கு, ஒருவழிப் போக்குவரத்துத் தோன்றிவிட்டது! "வலமாகச் செல்ல வேண்டும்" என்ற மரபையொட்டி இம்முறை தோன்றியிருக்கலாம். எனினும், ஆரூரின் தொன்மைக்கு இது ஒரு நவீன எடுத்துக்காட்டு.

**சுந்தரர் வருகை**

ஆரூர் பெருமானின் அருளால் சுந்தரர், 'தம்பிரான் தோழர்' என்ற உயர்நிலை அடைந்தார். அவர் ஆரூர் திருக்கோயிலில் கண்ட பரவையாரைத் திருமணம் செய்துகொண்டு இல்லற யோகியாக இறைத்தொண்டு செய்து வந்தார்.

திருவாரூர் கோயிலிலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் பழஅடியார்கள் பலரும் கூடியிருக்கக் கண்டார் சுந்தரர். ஓடும் செம்பொன்னும் ஒன்றெனக் கருதி, வீடும் வேண்டா விறலின் நின்ற அப்பெருமக்களுக்குத் தாம் அடியனாக ஆகும் நாள் எந்நாளோ என ஏங்கியிருந்தார். புற்றிடங்கொண்ட பெருமான் சுந்தரர் முன் தோன்றி, திருத்தொண்டர்களின் பெருமையைத் தனது திருவாக்காலேயே எடுத்தியம்பினான்.:

*"பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்;*
*ஒருமையால் உலகை வெல்வார்; ஊனமேல் ஒன்றுமில்லார்;*
*அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்;*
*இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ அடைவாய்!"*

என்று ஈசன் திருவாய் மலர்ந்தருளினான். செயற்கரிய பெருமையைப் பார்த்திடில் அவர்கள் (அடியார்கள்) தமக்குத் தாமே ஒப்பாவார்கள். அதாவது, அவர்கள் பெருமைக்கு வேறு எவரும் ஈடாக மாட்டார்கள். இடையறாத தியானத்தினால் இறைவனையே தமது உருவாகக் கொண்டவர்கள்.

ஒன்றியிருந்து நினைக்கும் உயர்வினால் உலகையும் வென்றவர்கள். பிறப்பு, இறப்பு என்ற இரண்டு நிலைகளையும் கடந்து நிற்பவர்கள். உயிர்களிடத்தில் அன்பு செய்வதால் இன்பம் துய்க்கும் இயல்பினர்.

அடியார் பெருமையை இறைவன் இவ்வாறு விளக்கினான். தன்னை வணங்கி நின்ற சுந்தரரை ஈசன், "நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்து நீ நிறை சொல்மாலை கோதிலா வாய்மையாலே பாடு!" எனப் பணித்தான்.

"இவர்கள் பெருமையை யான் எப்படிப் பாடுவேன்? நீரே பணித்தருள் செய்க!" என்று சுந்தரர் ஈசனிடம் வேண்டினார்.

ஈசனும், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தான். நம்பியாரூரர் உளம் மகிழ்ந்தார். திருக்கூட்டத்தைப் பொதுவாக முதலில் வணங்கினார். பின்பு, அன்பு மேலிட, அவர்களைத் தனித்தனியே வணங்கி "அடியேன்" எனக் கூறிப் பணிந்தார்.

**தொண்டத்தொகை தோற்றம்**

திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்கள் மட்டுமின்றி, வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தொண்டு செய்த அடியார்களைப் பற்றிய செய்திகளை இறைவன் சுந்தரருக்கு உணர்த்தினான். அவனருளால் பெற்ற பதிஞானம் என்ற இறைப்பேரறிவு கொண்டு திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்.

கொல்லிக் கௌவாணம் என்ற பண்ணில் (நவரோஸ் இராகத்தில்) அமைந்துள்ள திருத்தொண்டத் தொகையில் பதினோரு பாடல்கள் உள்ளன.

திருஞானசம்பந்தரின் காலத்துக்கு முற்பட்டோர் ஒன்பதின்மர், திருஞானசம்பந்தரின் காலத்தில் வாழ்ந்தவர்கள் பன்னிருவர், சுந்தரர் காலத்தில் இருந்தவர்கள் பதின்மூவர், இன்ன காலமென்று தெளிவாகக் கூற முடியாத காலத்தவர்கள் இருபத்தொன்பதின்மர். ஆக, அறுபத்து மூவரையும், மற்றும் ஒன்பது வகை அடியார் கூட்டங்களையும் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார்.

எதனையும் எதிர்பார்க்காத, தன்னலமற்ற தொண்டு புரிந்த அடியார்களை உலகுக்கு அறிமுகப்படுத்த, அவர்களை நிலைத்து வாழச் செய்ய இறைவன் திருவுள்ளம் கொண்டு, அதனைச் சுந்தரர் வழியே செயற்படுத்தினான்.

'தொகை' என்றால் தொகுத்துக் கூறியது என்று பொருள். தற்காலத்தில், செய்தித் தொகுப்பு, மத்தியத் தொகுப்பு என்றெல்லாம் கூறுகின்றனர். பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப்பட்டவற்றைத் தொகுப்பு என்று கூறுகின்றனர். தொகுப்பு என்பதே முற்காலத்தில் தொகை என வழங்கப்பட்டது. கலித்தொகை, குறுந்தொகை என்பன எடுத்துக்காட்டுகள்.

பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்திருந்த சிவனடியார்களைப் பற்றிய செய்தித் தொகுப்பே திருத்தொண்டத் தொகை ஆகும். சில சொற்களிலேயே, சிவனடியார்களின் சிறப்புகள் இதனுள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

திருத்தொண்டத் தொகையும், அதன் பின், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியுமே சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது.

**திருத்தொண்டத் தொகையின் ஏற்றம்**

அடியார்களை அறிமுகப்படுத்த இறைவனே அடியெடுத்துக் கொடுத்தான். மேலும் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. இறைவன் தன்னைப் பாட, 'பித்தா!' என்ற ஒரு சொல்லை மட்டும் கொடுத்தான். ஆனால், அடியார்களைப் பாட, "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று ஒரு சொற்றொடரையே முதலாகக் கொடுத்தருளினான்.

தம்பிரானாகிய இறைவன், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்றார். தம்பிரான் தோழர், "திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்" என்று தொடர்ந்தார். இறைநெறியில் மறையோதும் அந்தணரும், மண்பாண்டம் செய்யும் தொழிலாளியும் ஒன்றே என்ற சமுதாயச் சமத்துவத்தைத் திருத்தொண்டத் தொகையின் தொடக்கத்திலேயே காண்கிறோம்.

திருவாரூர் பிருத்திவித்தலம். மண்தலம் தொடங்கி விண்தலம்வரை விரிந்து பரவியுள்ளது அடியவர் பெருமை. அஃது மண்தலமாகிய திருவாரூரில் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு, திருத்தொண்டத் தொகையாய் மலர்ந்தது. விண்தலம் (ஆகாயத்தலம்) ஆகிய தில்லையில் திருத்தொண்டர் புராணமாக விரிந்தது. அங்கு, இறைவன் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தான் அல்லவா? இது ஓர் அற்புத நிகழ்ச்சி!

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும், "ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே" என்று நிறைவடைகிறது.

"திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு ஆளாகிய யான் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்பதுபோல் ஒவ்வொரு அடியாருடனும் இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்" என்று சிவஞான சித்தியார் உரைக்கிறது. அதன்படி, இறைவனிடம் அன்பு பூண்டு, பின்னர் அடியவர்க்கு அடிமையாதல் மரபு. "ஆரூரில் அம்மானுக்கு ஆள்" என முதலில் உரைத்து, பின், "ஆரூரன் அடியார்க்கு அடியேன்" எனக் கூறிக்கொண்டார்.

நம்பியாரூரரின் திருவவதாரத்தின் சிறப்புப் பயனே திருத்தொண்டத் தொகையை அளித்ததாகும். இதனை,

*"தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப்*
*போதுவார் அவர்மேல் மனம் போக்கிட"*

என்று சேக்கிழார் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே, நம்பி ஆரூரரின் ஏனைய வாழ்வும் வாக்கும் ஒருபாதி என்றால், இத்திருத்தொண்டத் தொகை மட்டும் மறுபாதி எனலாம்.

மூன்று சொற்களில் தொடங்கி, இரண்டு அடிகளுக்குள்ளாக ஒவ்வொரு திருத்தொண்டரின் சிறப்பையும் சுருக்கமாக உரைத்துள்ளார். ஆனால், அச்சிறு பகுதிக்குள் எத்தனைப் பொதிபொருள்!

சிவனடியார்களுக்கு எதனையும் இல்லையென்னாது வழங்கியது இயற்பகை நாயனாரின் வாழ்க்கைக் குறிக்கோளாகவும், தொண்டாகவும் அமைந்தது. இதனை, "இல்லையே என்னாத இயற்பகை" என்ற மூன்று சொற்களில் அடக்கியுள்ளார்.

"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனக் கருதி வாழ்ந்து, பகைவனுக்கும் அருளி, அவனைத் தொழுது வென்றவர் மெய்ப்பொருள் நாயனார். அவர் வழியே உண்மையான வெற்றி வழி! (வெல்லும் ஆறு). "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" என்ற மூன்று சொற்களில் அவர்தம் வரலாறும் தொண்டும் அடங்கிவிடுகின்றன!

அகவிதழ், புறவிதழ் என்ற இரண்டு அடுக்கு இல்லாமல் ஒரே அடுக்காக இதழ்கள் பெற்றது முல்லைமலர். முல்லைமலர் மாலை வணிகருக்கு உரியது. அமர்நீதி நாயனார் அகமும் புறமும் ஒன்றானவர் என்பதையும், அவர் வணிகர் குலத்தவர் என்பதையும், அவர் துலாக் கோலில் அமர்ந்து நீதியை உலகுக்கு உணர்த்தியவர் என்பதையும், "அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதி" என்ற மூன்று சொற்களில் பொதித்து வைத்துள்ளார் சுந்தரர்.

கண்ணப்பர் கல்லாதவர். வேட்டைத் தொழிலுக்கும் புதியவர். அன்றுதான் கன்னி வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றார். எனினும், தாம் கண்ட குடுமித்தேவரிடம் ஈடில்லா பக்தி மேலிட்டது. ஆறே நாட்களில் தம் கண்களையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் முதிர்ந்த ஞான நிலை எய்திவிட்டார். ஆதலால், பட்டினத்தார், மணிவாசகர், ஆதிசங்கரர் போன்றவர்களின் அருள்நூல்களில் போற்றப்படும் மேன்மை எய்தினார். இறைவனை அறியும் அறிவே ஞானமும், கல்வியும், கலையும் ஆகும். ஆதலால் காட்டுவேடர் கண்ணப்பரை, "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்" என்று புகழ்ந்தார் நம்பியாரூரர்.

திருக்கடவூர்ப் பெருமானுக்குக் குங்கிலியத் தூபமிட எப்போதும் கலயம் தாங்கி நின்ற தொண்டரை, "கடவூரில் கலயர்" என்றார்.

சிவவழிபாட்டுக்கு ஊறு செய்தவர் தம் தந்தையே என்றாலும் அவர்தம் காலை மழுவால் வெட்டியவர் சண்டேசர். சிவ நிர்மாலியத்திற்கு உரியவர் என்ற பேறும், சண்டேசர் என்ற ஈசுவரப் பட்டமும் பெற்றுத் திகழ்பவர் அவர். பஞ்சமூர்த்திகளில் ஒருவராக விழாக்காலங்களில் இடபத்தின்மேல் உலா வரும் மேன்மையும் பெற்றவர். எனவே, அவர்தம் புகழைச் சுந்தரர்,

*"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,*
*வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த*
*அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்"*

என்ற நீண்ட தொடரால் உரைத்தார்.

ஆகமத்தைத் தமிழாற் செய்திட ஈசனால் வருவிக்கப்பட்ட ஆசிரியராகிய திருமூலரை, "நம்பிரான்" என்னும் அடைமொழியுடன் அழைத்தார்.

தொகையடியார்களாகக் குறிப்பிடும் இடத்தில், "பொய்யடிமை இல்லாத புலவர்" என்கிறார். நக்கீரர், ஔவையார் போன்ற முற்காலப் புலவர்கள், சிறிதும் அச்சமின்றித் தங்கள் கருத்தை உரைத்தனர். சுந்தரர் தமது திருப்புகலூர் பதிகத்தில், கொடுக்கிலாதானைப் பாரியே என்றும் மிடுக்கிலாதானை வீமனே என்றும் புகழும் பொய்யர்களைக் கண்டிக்கிறார். தற்காலத்தில், Hypocricy எனக் கூறும் போலித்தனத்தைப் பொய்யடிமை என்கிறார் சுந்தரர். இறைவன் புகழைப்பாடி அவனுக்குத் தொண்டு செய்வதே மெய்யடிமை ஆகும். "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்ற பாரதியாரின் பாடல் சிந்தித்து மகிழ்தற்குரியது.

**இணைப்புக்கு இடமில்லை**

திருத்தொண்டத் தொகையின் தோற்றத்திற்குப் பின்னால் அவதரித்த தாயுமானவர், குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்றவர்களை அறுபத்துநான்கு, அறுபத்தைந்து, அறுபத்தாறு என்ற முறையில் நாயன்மார் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று கூறுவோர் உளர்.

இறைவன் பதிஞானத்தால் உணர்த்தி, சுந்தரரைப் பாடச் செய்த, அறுபத்து மூவரைத் தவிர, ஏனையோர் தனியடியார் என்றாலும், தொகையடியார் என்றாலும், அவர்கள், "அப்பாலும் அடிச்சார்ந்தார்" என்ற வகையுள் அடங்குவர். அக்காலத் தமிழகத்திற்கு அப்பாலிருந்தவர்களும், திருத்தொண்டத் தொகையின் காலத்துக்கு அப்பால் (பின்னர்) தோன்றியவர்களும், "அப்பாலும் அடிச்சார்ந்தார்" பட்டியலில் அடங்குவர். எனவே, தனியான பிற்சேர்க்கை தேவையில்லை.

நெப்டியூன், யுரேனஸ் என்ற புதிய கோள்களைக் கண்டுபிடித்து விட்டாலும் நவகோள்கள் பதினொன்று ஆகாது. அறிவியல் கட்டுரை இயல்தமிழ்தான்; கணினி குறித்து இசைப்பாடல் இயற்றினால் அது இசைத்தமிழ்தான்; உடலுறுப்புகள் குறித்து அறிவியல் நாடகம் நடத்தினாலும் அது நாடகத் தமிழ்தான். முத்தமிழ் நான்காகாது.

தடய அறிவியல் என்ற புதுக்கலை அறிமுகமாகலாம். அது அறுபத்துநான்கு கலைகளில் ஒன்றான அங்கவியலின் (ஸாமுத்திரிகா சாஸ்திரத்தின்) மற்றோர் வடிவமே. கலைகள் அறுபத்து நான்குதான்.

அதுபோல் தனியடியார் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பதின்மர். அவர்கள் புகழ்பாடி நலம் பெறுவோம்.

---

# 15. திருவாசகம்*

- புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,

*ஆரணி*

*பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி*
*யுலப்பிலா வானந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெருமானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே*
*னெங்கெழுந் தருளுவ தினியே.*

இத்திருப்பாடல், திருவாசகத்துட் பிடித்த பத்து என்னுந் தலைப்பின்கீழ், ஒன்பதாவதாயுளது. குழைத்த பத்தாலான்ம நிவேதனமும், உயிருண்ணிப் பத்தாற் சிவாநந்த மேலீடும், அச்சப்பத்தா லானந்த முறுதலும் திருப்பாண்டிப் பதிகத்தாற் சிவாநந்த விளைவும் உணர்த்தியருளிய மாணிக்க வாசகப் பெருமானார், இப்பிடித்த பத்தால் முத்திக்கலப்புரைத்தருள்கின்றார். அருளுங்கால், இம்முத்திக் கலப்புக்கு ஏதுக்களை எண்ணி அவற்றைப் பாராட்டும் முறையில் ஆண்டவன் திருவருட் பேற்றைச் சிறப்பித்தருளினார். முதற்பாட்டில், குடி முழுதும் ஆட்கொண்ட பெருங்கருணையையும், அடுத்த பாட்டில், தம்மை "முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து கடைபடா வண்ணங் காத்தாண்ட கடலேயனைய கருணை"யையும், பின், அம்மையப்பர் தம் சிவபதத்தை அளித்த செல்வத்தையும், மேல், தாம் பெற்ற புகழ்ச்சியைக் கடந்த போகத்தையும், மற்று, தம் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியையும், அதன் மேல், தம் மனக்கோயிலுட் பொருந்தி, அளவிலா ஆனந்தம் அருளிப் பிறவிவேரறுத்த காட்சியையும், அதைச் சார்ந்து, தாம் பற்றுமாறருளப் பற்றிச் செய்த பூசனையை யுகந்து பூங்கழல் காட்டிய பழம் பொருள் விளக்கத்தையும், அதனை யொட்டி, தம் பத்தியாற் சிக்கெனப் பிடித்த திறத்தையும், கீழ், தாம் புக்கவிடமெல்லாம்புக்கு, பெயர்ந்தவிடமெல்லாம் பெயர்ந்து உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற வள்ளன்மையையும், முடிவில், தொடக்கெலா மறுத்த சோதி மயமான இன்பத்தையும் தெளிவுறுத்தியருளினார்.

இத்திருப்பாட்டின் பொருளைப் பலர் எழுதி வெளியிட்டனர். அவருரையெல்லாம் திருவாசகத் திருவுள்ளக் கிடையிலும் திருவாசக வுண்மையிலும் உள்ள மெய்ப்பொருளை நோக்கி யெழுதப்பட்டனவல்ல. அறிவு சான்ற முரா. கந்தசாமிக் கவிராயரும் எழுதுவதிலிளைக்காத சான்றோர் நெல்லையப்பப் பிள்ளையும் எழுதிய வுரைகள் கற்றுணரத் தக்கன. இவ்விரண்டனுள் முன்னது பதசாரங்கூறும் முறையிலிலக்கியச் சுவை பயக்கும். பின்னது சாத்திர நெறியைச் சார எழுதப்பட்டது. கவிராயர் தம் உரை முடிவில் "இன்னும் இதன் பொருளருமைப் பெருக்கத்தை வல்லார் வாய்க்கேட்டுணர்க" என்றவரெழுதியதால், இதனுரையெழுத வல்லார் தரைமிசையரோ? வேறெதன் மிசையரோ? அடியேனுக்கு நாடோறும் எப்போதும் நாவினுக் கருங்கலமாத்திகழும் இத்திருப்பாடற்குத் திருவருள் உண்ணின்று தூண்டுமளவு விளக்கம் எழுத விழைகின்றேன். விழைதலும் என் செயலன்று. பிடித்த பத்து: "முத்திக் கலப்புரைத்தல்". "மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது". "மிக்க பிறவித் துயரெல்லாம் ஒழித்து விபுத்துவம் இங்கு அளித்தலாலே பிக்கறச் சிக்கெனப் பிடித்தேன். நின்னை என்று துணிவு செப்பல்" என்னும் தலைப்பின் விளக்கங்களை (இப்பதிகத்தின் உட்பொருளை) அறிதல் வேண்டும்.

**கருத்துரை**

சிவபெருமான் தாயினும் சால இனிய பேரருளாளன். அவ்வருளாகிய வுள்ளொளியை வெளியொளியாகிய உயிர்க்குப் பெருக்குவோன். அது பெருகுந்தொறும் சிவபெருமானாகிய ஆனந்தம் உலப்பிலாது பெருகும். அவ்வானந்தத்துள்ளாழ்ந்த வுயிர்ப்புறத்தே அஃது இடைவிடாது, அருளுருவாய்த் திரிந்து திகழும். அதைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்த வுயிரை அது விட்டகலாது.

**பொருள்**

சிவபெருமானே, பாலை நினைந்து ஊட்டுகின்றதாயினும் மிக்க அன்புற்று, பாவியான என்னுடைய ஊனை உருக்கி, (உயிரின்) உள்ளே (அருளாகிய) ஒளியைப் பெருக்கி, அழிவில்லாத இன்பமாகிய தேனைச் சொரிந்து (யான் செல்லுமிடந்தோறும்) புறம்புறம் (போந்து) திரிந்த செல்வமே, யான் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன். இனி நீ எங்கு எழுந்தருள்வது?

**விளக்கம்**

(க) சிவபெருமான் உயிர்க்குப் பால் நினைந்து ஊட்டுந்தாயினுஞ் சாலப் பரிந்துதவும் அளியன்.

(உ) பாவிக்கும் இன்னருள்புரியும் புண்ணியன்.

(ங) அப் "போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியம்" உயிர்களின் (அ) ஊனினை யுருக்கி (ஆ) அவற்றின் உள்ளொளி பெருக்கி, (இ) உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறந்திரியும் செல்வமாவான். மாணிக்கவாசகர்க்கு அவ்வாறு செல்வமானவன்.

(ச) அம்முதல்வனை மாணிக்கவாசகப் பெருமானார் தம்மின் நீங்கி, எங்கும் புறப்படாத வண்ணம், தொடர்ந்து சிக்கெனப் பிடித்தருளினார். இம்முறையே இவற்றை விரித்துக் கூறுவாம்.

(க) நம் தாய் உடலெடுத்த முறைக்குரியவள். உடலோ ஒன்றல்ல, பல. அவற்றுள் எப்பிறவிக்குரியவளோ? பிறவி மலச்சார்பால் வருவது. வரவே அப்பிறவியால் வருந்தாய் மலத்தாய், அமலத்தாயாகாள். மலமகலாத உயிர்கட்கு அம்மலத்தாய் அவ்வப்பிறவி தோறும் வெவ்வேறாவாள். மலம் அகன்ற எல்லா நல்லுயிர்க்கும் அமலத்தாய் ஒருத்தியேயாய் வேறுபடாள். அவளை அகில ஜகன்மாதா என்பதன் கருத்தும் அதுவே. அத்தகைய அருட்டாயன்பினளவுக்கு இத்தகைய மருட்டாயன்பினளவு ஈடாகாது. அதனால், அருட்டாய் சாலப் பரிந்தூட்டுவாள் என்பது தெளிவுறும். மருட்டாய் மறந்து மறந்து நினைந்து நினைந்தூட்டுவாள். அருட்டாய் நினைப்பும் மறப்புமின்றி என்றும் ஒரு பெற்றித் தாயூட்டுவாள். மருட்டாயூட்டுவது அஞ்ஞானத்தைத் தரும். ஊனைப்பெருக்கும். அருட்டாயூட்டுவது மெய்ஞ்ஞானத்தைத் தரும். ஊனையுருக்கும். மருட்டாயின்பால் உள்ளிருளைப் பெருக்கும். அருட்டாயின்பால் உள்ளொளியைப் பெருக்கும். மருட்டாய்க்குத் தன் குழவியென்றும் அயற்குழவியென்றும் வேற்றுமையுண்டு. அருட்டாய்க்கு வேற்றுக்குழவிகளே யின்மையால் அப்பேதத்திற்கும் இடனில்லை. புண்ணியக்குழவி பாவக் குழவி என்றுள்ள வேற்றுமையுமில்லை. பாவிக்கும் பூரண கிருபை புரிவாள். புரியவே, அருட்டாயின் தண்ணளி நன்கு புரியும். "தாயழியாக் கருவிலிருந் தமுதூட்டுந்தாய்" என்ற சைவப் புலவர் கருத்துணர்க.

(உ) எல்லா வுயிர்களும் இறைவனுக்கு மக்கள். அம்மக்களுள் புண்ணியர்களைக் காத்துப் பாவிகளை நீத்துப் பக்ஷபாதங் காட்டுதல் பெற்றோர்க்குத் தக்கதாமோ? குற்றஞ் செய்த மக்களைத் தண்டித்தலும் திருத்துதலும் கூடும். அவர்களைத் தள்ளி அப்பாலோடே அகற்றிவிடுதல் அன்பிற்கு ஏற்ற தன்றோ! புண்ணியஞ் செய்த மக்களைக் காக்கலாம். பாவஞ்செய்த மக்களை நீக்கலாமோ?

அறமலி இதஞ் செய்வோருக்கு அநுக்கிரகத்தைச் செய்யலாம். மறமலி அதிகம் செய்தால் நிக்கிரகத்தை வைக்கலாம். அவர்களைத் தள்ளலாகாதே! நிக்கிரகங்களும் என்றோர் நேசத்தால் செய்வனவே. அந்த வகையில் அவர்களுக்குண்டான குற்றங்களைத் தீர்த்து, இனிச் செய்யாவாறு அச்சந்தோன்றச் செய்து, இந்த வகையில், புண்ணியஞ் செய்க என்பதன்றோ முறைமை? இவ்வாறு செய்வதுதான் அருட்டாயின் செயல். இதனால் அருட்டாயான இறை செயல் அருளேயாதல் விளங்கும்.

*"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல்லாற்றின்*
*வந்திடா விடின்உறுக்கி வளாரினால் அடித்துத்திய*
*பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் பரிவே யாகும்*
*இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்றும்"*

இம்முறையில் நீங்கரும் பாவஞ் செய்த மக்களையும், அப்பாவங்களைப் போக்கிக் காத்து ஆட்கொள்ளுதல் அருட்டாய்க்கு இயல்பு.

தாயைப் புணர்ந்து தந்தையைக் கொன்று தன்னையும் அகதியனாக்கிக் கொண்ட மாபாதகனுக்கும் மதுரைக் கடவுள் ஆகிய அருட்டாய் திருவருள் புரிந்த வுண்மையை இங்கு எண்ணுக.

*"அடுபழி அஞ்சா நீசர் ஆயினும் நினைக்கின் அச்சம்*
*படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண்டெங்கும்*
*விடுவதை யின்றி வேறு களைகாணும் இன்றி லீயக்*
*கடவனைக் காப்பதன்றோ காப்பு என்றான் கருணைமூர்த்தி"*

*"அன்னையைப் புணர்ந்து தாதை குரவனாம் அந்தணாளன்*
*றன்னையுங் கொன்ற பாவந் தணித்துவீடளித்த"*

தாய்க்குப் பாவஞ் செய்த மக்களைத் தள்ளுந்தன்மை ஏது? அதனால், 'பாவி யேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவியாக்கை யான் எனது என்று யாதும் இன்றியறுதலே' என்றருளிய மாணிக்கவாசகரது ஊனினை யுருக்கியது அருட்டாய்க்கு இயல்பாயதே.

(ங) உருக்கத்தைப் பற்றி எம் கட்டுரை 'ஞானசம்பந்தம்' மலர் 1 இதழ் 3-5 ல் பார்க்க:

(அ) "ஊன்றழை குரம்பைதோறும் உடலகத்தே குரம்பை கொண்டு இன்றேன் பாய்த்தி நிரம்பிய அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவதுள்ளங்கொண்டு ஓர் உருச் செய்தாங்கு எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்" என்றருளிய மணிவாசகத்தை நோக்கின், குரம்பைதொறும் அதிற் குரம்பைகொண்டு, உருக்கித் தேன் பெருக்கிய வுண்மை இனிது விளங்கும். ஊனுருக்கம் ஒளிப்பெருக்கத்திற்கு ஏதுவாதல் "இரந்திரந்துருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே" என்றதால் விளங்கும்.

(ஆ) 'உள்ளொளி' என்றதால் வெளியொளி என்ற ஒன்று இருப்பது வெளியாயிற்று. அஃது எது? வெளியும் உள்ளும் இங்கு எதைக் குறித்துக் கொள்ளப் படுகின்றன. உடம்பைக் குறித்து, அதற்கு வெளியுமுள்ளும் என்று கொள்ளவே ஈங்கு பொருந்தும். உள்ளொளி என்றது பிறிதினியைபு நீக்கி விசேடணங் கொண்டது.

ஒளிக்கும் ஒளியாயிருப்ப தொன்றனைத்தான் உள்ளொளி என்றார். "அடியேனுள்ளத்துள் ஒளிர்கின்ற வொளியே" என்று முன்னர்க் குறித்தருளிய அடிகள் கருத்தை எண்ணுக. உள்ளம், "செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ளமாகும்" (சிவஞான சித்தியார். சூ.ச. அதி.க. திருவிருத்தம். உ.) என்புழிப் போல உயிரையுணர்த்திற்று. உயிரும் ஈண்டுக் கட்டு நீங்கிய தூய ஆன்மாவேயாகும். ஆகவே 'உள்ளொளி' என்றது ஆன்மாவாகிய ஒளிக்குள் ஒளியான திருவருளைக் குறிப்பதென்க. "சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி" என்றதும் அச்சோதியையே என்க. "சோதியாய்" என்ற சேக்கிழார் பெருமான் அச்சோதியினும் வேறாக நின்றதொன்றே அவ்வாறாயிற்று என்றுணர்த்தியருளுதல் அறிக. அதைத்தான், இடர்கெடுத்தென்னை ஆண்டு கொண்டு என்னுள் இருட்பிழம்பு அற எறிந்து எழுந்த சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதி" என்று திருமாளிகைத் தேவர் அருட்பெரு மாளிகையுளடங்கி யுணர்ந்துணர்த்தி யருள்கின்றார். இதிலும், சோதியுட் சோதியாகிய சிவம் விளங்கும் இடமான உள்ளொளியையும்

அச்சத்தி விளங்கும் இடமான சுத்தாத்துமாவாகிய வெளியொளியையும் தோற்றியதுணர்க. சுடர்மணி விளக்கு என்பது உவமை. உயிரொளியை நோக்கின் அருளொளி சோதியுட் சோதியாம். அருளொளியை நோக்கின் சிவம் சோதியுட் சோதியாம். ஆகவே, தூய நல் சோதியுள் என்னும் விசேடணங்கள் 'சோதி' என்னும் தன்னேரிலாத தனக்கே உரியவாயின. இங்கு, "உணர்வெளிபோற் பிறிவரிய அத்துவிதக் கலவி" "அன்றளவி உள்ளொளி யொடாவியிடை யடங்கி இன்றளவும் நின்றதிருள்" "ஞான வொளியே ஒளியா ஒளி" என்பவற்றை அறிந்து, உள்ளொளியைப் புலப்படக் காண்க. இவ்வாறு காணாதார் "உள்ளொளி"யைப் பற்றியெழுதிய கட்டுரைகளையும் நூல்களையும் மெய்யெனக் கொண்டு பிழைபட்ட உணர்ச்சியை உலகம் எய்தாதிருக்க.

ஒளி நெறியாகிய பிரசாத யோக முணர்வார் உள்ளொளி விளங்கப் பெற்றவர். அவ் யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம். இவ்வுள்ளொளியைக் காண்டல் சைவரலலார்க்கு என்றும் இயலாது. "அந்தகருக்கு இரவி இருளாகும். ஈசன் அருட் கண்ணில்லார்க்கு ஒளியாயே இருளாம்" (சித்தியார். 317), ஆதலாற்றான், தாயுமானார், "பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா, முத்திதருந் தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே" வந்து, "பன்முத்திரைச் சமயம் பாழ்படக், கல்லாலடி வாழ்கின் முத்திரை யரசைச் சேர்"ந்து, அத் "தூய அறிவான சுகரூப சோதி தன்பால் தீயிலிரும் பென்னத் திகழு"ங்கள் என்றருளினார்.

இதுகாறும் எழுதியவற்றான் 'உள்ளொளி பெருக்கி' என்றதன் கருத்தாவது, ஊனுருக்கம் பெற்ற சுத்த ஆத்துமாவிற்கு அஃது உருக உருகப் பெருகிப் பெருகித் திகழுந் திருவருளைத் தருதல் என்றுணர்க. (திருவிளையாடல், வாதவூரடிகளுக் குபதேசித்த படலம்-48)

(இ) "உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து" என்றதன் பொருள் விளங்க அச்சிவபெருமானே "ஒரு மூர்த்தி கொடு குருகி" உணர்த்தி யருளல் வேண்டும். அடியேனுள்ளே உணர்வாய் நின்ற அந்த ஞானக் கூத்தன், குருடரையும் ஊமரையும் முடவரையும் பற்றிய பேய் அவர் பாலில்லாதவற்றைத் தோற்றாதவாறுபோல அடியேன் பாலில்லாததைத் தோற்றமாட்டான். கற்ற கலையால் உற்றறிவதும் அன்று அது. "நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார் போலே கருவி நன்னூற் போதம்" "சின்னஞ் சிறியார்கள் செய்த மணற் சோற்றை யொக்கும் மன்னுங் கலைஞான மார்க்கம்" "வாசக ஞானத்தால் வருமோ சுகம்?" "வாக்கும் மனமும் மௌனமுற"ப் பரமசிவத்தை "நோக்கும் மௌனம் இந்த நூலறிவில் உண்டாமோ? மெய்யறிவின்பத்தைத் திருவருள் கொடுத்துத் தெளியும் ஆற்றால், குருவருள் போற்றிக் கூறுவேன் சிறிது.

திருவருளும் பரசிவமும் வஸ்து பேதமாகாதன. உள்ளொளி பெருகப் பெருக உலப்பிலா ஆனந்தம் ஊற்றெடுத்துப் பெருகும். அவ்வுள்ளொளியைக் கண்டாரெல்லாருங் கடலேயனைய ஆனந்தபோகந் துய்ப்பர். அதைக் காணாதாரே இவ்வுலகில் இடரே பெருக்கி ஏசற்றிருக்கின்றனர். அவ்வுள்ளொளியைப் பெற்றே, அதுபெற மெய்யன்புற்றே, பேராத - ஒழியாத - பிரிவில்லாத - மறவாத - நினையாத - அளவில்லாத - மாளாத இன்பமா கடலைப் பெறல் இயலும். அன்பில்லார் உருக்கம் எய்தார். அன்புருக்கம் எய்தார் அருளெய்தார். அருளெய்தார் ஆனந்தம் எய்தார். "சின்மயானந்தம்" என்னுந் தொடர்ப் பொருளுணர்வார்க்கு இது தெற்றென விளங்கும். சேக்கிழார் பெருமானார், "நிலைப்பட்ட மெய்யுணர்வு", "திண்ணியவுணர்வு" "உரனுறு திருக்கூத்து" "அண்ணலார்

தமக்களித்த மெய்ஞ்ஞானமே யான அம்பலமும் தம் உள்நிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒரு பெருந்தனிக் கூத்தும்" "உணர்வு நேர்பெற வருஞ்சிவ போகத்தை" "வவ்விய மெய்யுணர்வின்கண் வரும் ஆனந்தக் கூத்தை" என்று விளங்க வுணர்த்தி யருளியவற்றை யுய்த் துணர்தல் சிவ தீக்கை பெற்ற சைவர்க்குற்ற கடனாகும். அப்பெருமானார், "காஞ்சிவாய்ப் பேரூர் குறுகிய" சுந்தர மூர்த்தி நாயனார்க்கு "நித்தனார் தில்லை மன்றுணின்றாடல் நீடிய கோலம் நேர் காட்டக், கைத்தலங் குவித்துக் கண்கள் ஆனந்தக் கலுழிநீர் பொழிதரக் காண்டலும் தொழுது வீழ்ந்து உடன் எழுந்து கரையில் (லாத) அன்பு என்பினை உருக்கப் பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்கத், தாண்டவம் புரியுந் தம்பிரானாரைத் தலைப்படக் கிடைத்தபின், சைவ ஆண்டகையாருக்கு அடுத்த அந்நிலைமை விளைவை யார் அளவறிந்து உரைப்பார்? என்று வியந்து போற்றிய இடத்தை நாமும் போற்றுவோம். "ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கி யுலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து" என்பதற்கு ஈதொன்றே தக்க நல்விளக்க மெனலாம். "அன்பினாலடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" "ஆவியோடாக்கை புரை புரை கனியப்புகுந்து நின்றுருக்கி" என்று முன்னும் அருளிய துணர்ந்து, உலப்பிலா ஆனந்தம் உள்ளொளியைப் பெருக்கும் வகையில் ஆவியையும் அதற்கிடனாய புன்புலால் யாக்கையையும் உருக்கும் முழுப் பேருண்மையை அநுபவிக்க முயல்க. அம்முயற்சிக்குத் திருவருட்டுணையே நாடுக. நாடித் தில்லை முதலிய சிவத்தலஞ் சேர்க. சிவகங்கை முதலியவற்றுள் தோய்க. திருக்கூத்தனைத் தொழுக. தொழுதால் "ஓங்கி உளத்து ஒளிவளர உலப்பிலா அன்பருளி வாங்கி வினைமலம் அறுத்து வான் கருணை தந்தா"ள்வான்.

"ஆனந்தமாய தேன்" என்றது "தினைத்தனையுள்ள தோர் பூவினிற்றேன்" போன்று சிறுமையும் அழிவும் பின்பு துயர் விளைக்குமியல்பு முடைய தன்று. நினைதொறும் காண்டொறும் பேசுந்தொறும் (திரிகரண கிருத்தியம் நிகழுந்தொறும்) எப்பொழுதும் (கரணங் கடந்து சுத்தாவத்தை எய்திய பொழுதும்) எல்லா எலும்பும் உள்ளே நெக்குருகச் செய்வது. அதைத் திரிகூட ராசப்பக் கவிராயர் என்னும் நல்லிசைப் புலவர், "ஈயறியாப் பூந்தேனே" என்றழைத்தார். உள்ளொளி பெருக்கி ஆனந்தஞ் சொரிந்து புறம் புறந்திரிந்த செல்வம் என்பதைச் சிவஞான பாடியத்துப் பதினொன்றாஞ் சூத்திரவுரைக்கண் அருள் விளக்கத்திற்கும் ஆனந்த விளக்கத்திற்கும் வேறுபாடு கூறுமாற்றல் விளக்குதலுணர்ந்துய்க.

"அவனையகன் றெங்கின்றாம் ஆங்கவனாம் எங்கும் இவனை யொழிந் துண்டாதல் இல்" என்றவாறு புறம் புறம் திரிதல் அணைந்தோர்க்கே விளங்குவ தன்றி என் போன்றார்க்கு எங்ஙனம் விளங்கும்? "உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சி" எய்துங் காலத்தன்றோ அது விளங்கும்?

(ச) "அற்பனென்னுள்ளத் தளவிலா வுன்னைத்தந்த பொன்னம் பலத்தாடீ" என்புழிப் போல "யான்" என்னுஞ் சொல்லும் "உனை" என்னுஞ் சொல்லும் வேறுபாடு தோற்றி, சிக்கெனப் பிடித்ததன் அருமையையும் இமையவர்க்கு அளவறுப்பதற்குரியவன் அடியார்க்கு எளியானாகும் சௌலப்பியத்தையும் உணர்த்தி, "யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்" என்பதை நிருபித்து, "கண்ணகத்தே நின்றுகளிதருதே"னாதலைக் காட்டி, புவனியிற் பிறந்து நாள் அவமே போக்காதவாறு நம்மைத்தூண்டி, சித்த மெனுந்திண் கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த திறம் அறிவித்து, மும்மலப் பழவல் வினைக்குள் அழுந்தாதவாறு நாம் உய்யுநெறி காட்டு வித்திட்டு ஓங்காரத்துட் பொருளொடு கலத்தலை இந்நிலத்தலை விளக்கியருளினார்.

*புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்*
*களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம்*
*அளிக்கும் அருட்கண்ணீர் சோர்ம்நெஞ் சுருக்கும்*
*ஒளிக்கும் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே (திருமந்திரம்)*

**இலக்கணக் குறிப்பு**

**முடிபு:** நினைந்து ஊட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து, உருக்கி, பெருக்கி, சொரிந்து, திரிந்த செல்வமே, சிவபெருமானே, தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், இனி நீ எங்கெழுந்தருளுவது? நீ என்னும் முன்னிலையை அமைந்தவாறே கூட்டிப் பொருள் கொள்ளல் பொருந்தாது. செல்வமே சிவபெருமானே என்னும் விளியை முற்கூறி அதைப் பிற்கூறவே தக்கது.

* நன்றி : சித்தாந்தம், பக். 49-51, 82-88.

## 16. பாடல் நெறி*

– தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், எம்.ஏ., பி.எல். எம்.ஓ.எல்.,

கடவுளை அடையும் நெறி பல.

*"தொண்டர்காள் தூசிசெல்லீர்*
*பத்தர்காள் சூழப்போகீர்*
*ஒண்திறல் யோகிகளே*
*பேர்அணி உந்தீர்கள்*
*திண்திறல் சித்தர்களே*
*கடைக்கூழை செல்மின்கள்*
*அண்டர்நா டாள்வோம்நாம்*
*அல்லற்படை வாராமே"*

எனத் தொண்டுநெறி, பக்திநெறி, யோகநெறி, சித்தநெறி நின்றாரைப் பாடுகின்றார் மாணிக்க வாசகர். இந்நெறிகளின் முறையை ஓர் உவமைகொண்டு மற்றொரு பாடலில் அப்பெரியார் விளக்கி வைக்கின்றார்.

*"சீலம் இன்றி நோன்பின்றிச்*
*செறிவே இன்றி அறிவின்றித்*
*தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்*
*சுழன்று விழுந்து கிடப்பேனை*
*மாலுங் காட்டி வழிகாட்டி*
*வாரா உலக நெறிஏறக்*
*கோலங் காட்டி ஆண்டானைக்*
*கொடியேன் என்றோ கூடுவதே"*

தொண்டு நெறியாம் சரியைக்கு வேண்டுவது சீலம்; அஃதில்லையேல் அந்நெறி செல்வார் நிலை தோலின்பாவைக் கூத்தாட்டுத்தான். அத்தகையாரையும் உய்விக்க அந்நெறியில் பற்றேற்பட ஆண்டவன் மாலுங் காட்டுகின்றான். பக்திநெறியாம் கிரியைக்கு வேண்டுவது நோன்பு: அஃதில்லையேல் எல்லாம் வெறுஞ் சுழற்சியாம்; ஆண்டவன் அத்தகையார்க்கு வழிகட்டுகின்றான். செறிவு நெறியாம் யோகத்திற்கு வேண்டுவது செறிவு (சமாதியில் கூடுதல்). அஃதில்லையேல் பிரிந்து விழுதல்தான் உண்டு; அத்தகையார்க்குக் கோலங்காட்டுகின்றான். "ஷடாதார தர்சனங்களும் த்வாதசாந்த சேவையும்" யோகிகள் கூறுகின்றனர் அன்றோ? அறிவு நெறியாம் ஞானத்திற்கு வேண்டுவது அறிவு. அஃதில்லையானால் உயிர்ப்பொருள் உயிரில்லாக் கட்டை கோலக் கிடக்க வேண்டுவதே. அத்தகையாரை ஆண்டவனே வந்து ஆளவேண்டும்; உட்கண்ணைத் திறக்க வேண்டும்.

*"முகத்திற் கண்கொண்டு காணகின்ற மூடர்காள்*
*அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்*
*மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய*
*சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறெங்ஙனே"*

என்று அந்நிலை பெருநுகர்ச்சியாய்க் கிடப்பதைத் திருமந்திரம் விளக்குகின்றது. ஆகவே, அந்நிலையை மாணிக்கவாசகனார் திருக்கோவை என்னும் அகப்பாட்டாகப் பாடியுள்ளார். எனவே வீட்டுநிலை எனும் பெருநிலை அகப்பாட்டின் இன்பநிலை என்பதாயிற்று.

பாட்டின்பம் எத்தகையது என்பதைப் பாடலைத் துய்த்தவரே அறிவர். அகப்பாட்டின்பத்தைத் துய்த்தவர் அறியமுடியுமேயன்றி அதனை எவரும் பிறர்க்கெடுத்துரைக்க இயலாது. அங்கே உண்மையை உள்ளவாறு உணர்கின்றோம்; பொய்யோ மெய்யோ என்பதற்கிடமில்லை. வெறும் பேச்சு பேசுவோரே கற்கண்டு இனிப்பா கைப்பா என்று ஆராயலாம். கற்கண்டையுண்டபின் ஆராய்ச்சி ஏது? ஐயமில்லாத தெளிவு நிலை அங்கு உண்டு. நாம் உலகில் கண்டறிந்து வருநிலையில் கண் சிலபோதுகாணும்; காது சிலபோது கேட்கும். பாட்டையோ கூத்தையோ ஓவியத்தையோ கண்டுகளிக்கும்போது கண் காணலாம்: காது கேட்கலாம்: ஆனால், அங்கே ஐம்புலனும் மனமும் உடலும் உயிரும் ஒன்றாய் இயைந்து பேரின்பம் அடையக் காண்கிறோம். அஃது ஒரு சிறையின்பமல்ல; முழுநிலை இன்பமாகும். புலனுக்கும் மனதிற்கும் கட்டுப்பட்ட உயிர் அக்கட்டெல்லாம் நீங்கி நிற்கிறது. குறளுருவாய் நின்று உலகை அளக்கிறது. நம்மை நாமே மறந்து நிற்கிறோம்; அதுமட்டுமோ, காணும் பொருளும் வேறே நிற்பதில்லை. காண்பானும் காட்சியும் காணப்படு பொருளும் ஒன்றாகிப் பேரின்ப அநுபவமாக நிற்கக் காண்கிறோம். கீட்ஸ் என்ற பாவாணர் ஓர் ஊர்க்குருவி தம் சாளரத் தெதிர்வந்தால் தாமும் ஊர்க்குருவியாக மாறி அதுபோலக் கற்களிடையே

கொத்துவதாக நினைப்பாராம். பைரன் என்ற பாவலர் "என் உள்ளமும் உயிரும் புலனும் ஒரே தாளத்திற்கேற்ப ஆடுகின்றன" என்று விளக்குகின்றார். பாட்டின்ப நிலையில் யாது காண்கிறோமோ அஃதேயாகி நிற்கிறோம் என்பர் ப்ளேக் என்பார். கடவுளின் திருவுள்ளத்தைப் பிழிந்தெடுத்து வடித்த கோதிலா அமுதே பாட்டு என்பர் ப்ரிட்ஜ் என்பார். அங்கு நாம் காண்பது, மக்கள் காண்பதொன்றல்ல: கடவுள் காண்பதொன்றே. "படைப்பின் முளை கடவுளின் கையில் சுடர் விட்டெரிகிறது. பாவலன் அங்கே முயல்கின்றான்" என்பது ப்ரெளனிங் கண்ட முடிபு. இப்பாட்டின்பம் இவ்வாறே நிற்கும் என்றும் கடவுளின்பம் போன்றதென்றும் வடமொழிப் புலவர்களும் அறுதியிட்டுக் கூறுவர். பாட்டுலகில் நாம் காண்பது அறிவின் அல்லாடல் அல்ல; உணர்வின் திருவிளையாடலேயாம். அறிவு சுட்டறிவு: உணர்வு மெய்யறிவாம் அநுபவம். இவ்வேற்றுமையை இப்போதே மேனாட்டார் உணர்ந்து வருகின்றனர். நன்னூலார் செய்யுளை விளக்கவந்து, உணர்வே பாட்டின் வடிவம் எனக் கண்டு "உணர்வினின் வலியோர் அணிபெறச் செய்வன செய்யுள்" எனக் கூறியிருப்பது காண்க. உலக இன்பத்தைக் 'கடவுளின்'பத்தோடு திருநாவுக்கரசர் ஒப்பிடுகின்றார். ஆனால்,

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"*

என்பது வெறும் உலக இன்பம் அன்று; மாசில் வீணையின்பம் இசைப்பாவாணரின் இன்பம் மற்றவையும் அஃதே போலப் பாட்டுலக இன்பமேயாம்.

கடவுளைக் கண்டறிய முடியாது. "கேட்டறியோம் நினைக் கண்டறிவாரை" என்கின்றார் மாணிக்கவாசகர். ஆனால் கடவுள் அநுபவ வடிவமாக இருக்கின்றார். பரஞானம் அபரஞானம் என்றும், உணர்வு அறிவு என்றும், உண்மை பொது என்றும் பிரித்துப் பேசுவதை நாம் அறிவோம். கடவுள் சுட்டறிவால் அறியப்படார்; உணர்வால் உணர்ந்து நுகரப்படுவார். நாம் இருப்பதனைச் சுட்டறிவால் அறிகின்ற தில்லை; ஆனால் இருப்பதால் உணர்கின்றோம். அங்ஙனமே கடவுளையும் உணர்தல் வேண்டும். கலைஞானத்திற் கெட்டாத கடவுள் சிவஞான வடிவமாவர்.

*"சிவனடியே சிந்திக்குந்*
*திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும்*
*பாங்கினில் ஓங்கியஞானம்*
*உவமையிலாக் கலைஞானம்*
*உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர்*
*தாம்உணர்ந்தார் அந்நிலையில்"*

எனச் சேக்கிழார் விளக்குதல் காண்க. ஆகவே, அறிவின் போராட்டம் ஆண்டவனிடம் கொண்டு விடுவதில்லை. ஆண்டவனிடம் முரணிநில்லாமல் அவனடியில் மனம் அடங்கி ஒற்றித்து நின்றுகாணும் ஒற்றுமைக் காட்சியையே காண நாம் முயலல் வேண்டும்; அவனருளால் அவன்றாள் வணங்குமுறை ஈதே.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும்
ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை
கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங்
குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை
கேட்க தக்கார்"
"ஏதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன்
எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர்
மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே
வந்து சார்மின்களே"

என ஞானசம்பந்தப் பெருமான் பாடுவது காண்க. இந்த உண்மையை விளக்கிவைத்த பின் நாத்திகம் பேச வாயேது?

பாட்டின்பம் போலக் கடவுளின்பம் உணர்வு வடிவமேயாம்: ஒற்றுமைக் காட்சியின் இன்னொலியாகும்: காலமும் இடமும் கட்டும் கடந்த பேரின்ப நிலையாம். உண்மை என்பது அவ்வநுபவத்தின் இயல்பாக இருக்கிறது.

"நடக்கையின் நெல்லிக் கனிஎனக் காயினான்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
.................................... ஊன் தவழ்
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்"

என மாணிக்கவாசகர் பாடுவது காண்க. சிவஞானக் காட்சியில் போதல் வருதல் இல்லை: பெருஞ் செல்வம் பேரின்பத் திருவாக நிற்கின்றது: நல்லதும் கெட்டதும் கடந்த அந்நிலையில் எல்லாம் நல்லது தான்: தீயதே இல்லை. கூறக்கூறப் பேரின்பம் சுரக்கின்றது. அவனும் உலகெங்குமாய் விளங்குகிறான்; அருளைப் பிரிந்து நில்லான்.

"நன்றுடையானைத் தீயதிலானை
நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு
பாக முடையானைச்

*சென்றடையாத திருவுடையானைச்*
*சிராப் பள்ளிக்*
*குன் றுடையானைக் கூறஎன்*
*னுள்ளங் குளிரும்மே”*

என்பது சம்பந்தர் பாடல். கடவுளுலகமும் உணர்வுலகம்; பாட்டுலகமும் உணர்வுலகம். எனவே, பாட்டை வளர்க்கக் கடவுளை வளர்த்தவராவோம் அன்றோ? பாட்டு, சொல்லும் பிறவுங் கலந்த உணர்வுலகம்; கடவுள், தூய மெய்யுணர்வு. பிறபிற மிகக் கலந்த பாடல், பிறபிற கலைகளில் செலுத்திக் கீழே தள்ளலாம்; தூயதாக்கி விடுவோமானால் கடவுளிடம் கொண்டு செல்லும். ஆகவே, உணர்வை வளர்த்தலே கடவுளைக் காணும் வழி,

*“உணர்வுடை யார்கட் குலகமுந் தோன் றும்*
*உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை*
*உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்*
*உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே”*

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

உலகப் பொருளைக் காண்கின்றோம். அதனை இன்பம் என நினைக்கின்றோம். அதனுள் மூழ்கவேண்டும். இன்பத்தின் பின்னே இறைவனைத் தூங்காமற் றூங்கிக் காணுதல் வேண்டும். அத்தகைய காட்சி பாவலர்க் குண்டு. அதனை வளர்க்க அதுவே கடவுட் காட்சியாக மாறும். ஆகவே பாட்டு நெறி நின்று பாட்டின் பழம் பொருளாம் கடவுளைக் காணுவது எளிது. ஞானமார்க்கம் என்பது சிவஞான மார்க்கமாம். பரஞான மார்க்கமேயாம்; அஃது உணர்வு நெறியாம். உணர்வு நெறியோ பாடல் நெறியாம். ஆகவே, ஞானசம்பந்தப் பெருமான்

*“பாடல் நெறி நின்றான்*
*பைங்கொன்றைத் தண்தாரை*
*சூடல் நெறி நின்றான்*
*சூலஞ்சேர் கையினான்*
*ஆடல் நெறி நின்றான்*
*ஆமாத்தூர் அம்மான்றன்*
*வேட நெறி நில்லா*
*வேடமும் வேடமே”*

எனத் தாமறிந்த பாடல் நெறியைச் சுட்டிக் காட்டுகின்றார். இந்தக் கண்கொண்டு பாடல்களை ஓதி யுணர்ந்து உணர்வுலகிற் புகுந்து உண்மைப்பொருளை அறிவோமாக.

இசையும் பாட்டும் எல்லாம் காமப்பிறப்பிடம் என்ற கொள்கையை மறுக்கப் பிறந்த ஞானசம்பந்தர் இசையால் சமாதி கூடுவதை,

*“வஞ்சமணர் தேரர்மதி கேடர்தம்*
*மனத்தறி விலாதவர் மொழி*
*தஞ்சமென என்றுமுண ராத அடியார்*
*கருது சைவனிடமாம்*

*அஞ்சுபுலன் வென்றறு வகைப்பொருள்*
*தெரிந்தெழு இசைக்கிளவியால்*
*வெஞ்சின மொழித்தவர்கள் மேவி*
*நிகழ்கின்றதிரு வேதிகுடியே”*

என வற்புறுத்திக் காட்டுவது காண்க. ஆகவே, கடவுளைத் தேடி யலைய வேண்டா. தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரந்தம் முதலியவற்றைப் பொருளுணர்ந்த ஓதக் கடவுளைக் காணலாம். பிறபிற பாடல்களைப் பாடிப் பாடிப் பழகப் பழக உணர்வு வுலகிற் புகலாம்: உணர்வுலகிடையே உண்மைக் கடவுளைக் காணலாம். தமிழும் கடவுளாய் விளங்குகின்ற நுட்பம் ஈதே. ஆகவே தமிழ்க்கடவுளும் பிறர் பிறர் கூறும் கடவுள் என நிலையாது, பாடலில் விளங்கும் பண்ணவனைப் பாடியாடிக் களித்து அக்களிப்பே உலகெங்கும் பரவத் தமிழ் முழக்கம் செய்யத் தமிழர்கள் எழுவார்களாக!

* நன்றி : திரு.வி.உலகநாத முதலியார் மணிவிழா மலர், பக். 26-28.

## 17. ஞானப்பாடல்

– சிவநெறிப்புலவர் க. சம்பந்தனார், திருப்பாதிரிப்புலியூர்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் முடிமணியாய் விளங்குவது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமாகும். அந்நூற்குப் பேருரை கண்டவர் மாதவச் சிவஞான முனிவர். அவர் காஞ்சிப்புராணம் பாடியுள்ளார். அப்புராணத்தில் சைவ சமய குரவர் நால்வருள் நீண்ட ஆயுளுடன் அகத்தும் புறத்தும் தொண்டாற்றிய பேரருளாளர் திருநாவுக்கரசு சுவாமிகள். அவரைத் தாம் பாடிய புராணத்துள் தோத்திரம் செய்துள்ளார்.

*“இடையறாப்பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்*
*படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்*
*நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்*
*தொடையறாச் செவ்வாயும் திருவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்”*

என்பது அப்பாடல். இதில் ‘ஞானப்பாடல்’ என்று திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தைக் குறிப்பிடுகின்றார் சிவஞான சுவாமிகள். ஞானப்பாடல் ஆகிய தேவாரம் ஞானத்தைத் தருவதாகவும் அந்த ஞானத்தால் பெற வேண்டிய பேரின்பப் பொருளாய் உள்ள இறைவனையும் அருளக் கூடியதாகவும் இருக்கும். ஞானமாவது மெய்யுணர்வு. திருவள்ளுவர் நிலையாமை, துறவு,

மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற நான்கு பகுதிகளால் ஞானம் என்ற உண்மைப்பொருளை உணர்த்துகின்றார். அத்தகைய ஞானத்தை நமக்கு அருளும் பாங்கில் அப்பர் ஆகிய திருநாவுக்கரசர் தேவாரம் பாடினார். அவர் பாடலுக்குத் தான்**தேவாரம்** என்று பெயர். தெய்வத்திற்குச் சாத்தும் பூமாலை போன்று அமைந்த பாடலே பாமாலையாகும். திருஞானசம்பந்தர் பாடியது 'திருக்கடைக்காப்பு' எனப்படும். நம்பி ஆரூரர் பாடியது 'திருப்பாட்டு' எனப்படும். அதனால் முதன் முதலில் தேவாரம் பாடினவர் திருநாவுக்கரசரே ஆவார். இவர் தம் அறுபத்தைந்தாம் ஆண்டில் சற்றேறக்குறைய முன் பின்னாகத் திருஞானசம்பந்தர் அவதரித்தார். அவர் தம் வயதைக் குறிப்பிடும் தனியன் பதினாறு ஆண்டு என்கிறது. அறுபத்தைந்தும் பதினாறும் எண்பத்தொரு ஆண்டுகள் இந்நிலவுலகில் இருந்திருக்கிறார் அப்பர் பெருமான்.

திருநாவுக்கரசர் பாடிய பாடல் ஞானப்பாடல் எனச் சிவஞானசுவாமிகள் குறித்த அளவில் அப்பர் பாடலாகிய தேவாரம் தொட்ட இடமெல்லாம் ஞானம் உணர்த்துவதாய் அமைந்துள்ளது. ஞானமாவது மெய்யுணர்வு என முன்னே கண்டோம். உலகியலில் நிலையாமை கண்ட மனிதன் நிலைத்த பேரின்ப வாழ்வைப்பெற அப்பர் அருள்வாக்காகிய தேவாரம் நமக்குப் பெரிதும் துணையாகின்றது. வாழும் உயிராகிய மக்களை வள்ளுவர் எண்ணும் எழுத்தும் பெறக்கூடியவர்கள் என்று குறிப்பிடுகின்றார். எண் என்பது கணிதம் என்றும், ஏரணம் என்றும் வழங்குவர். ஆனால் பகுத்தறிவு பெற்ற மனிதன் நல்ல எண்ணங்களை உருவாக்கி அதன்படி வாழ்வியலை நடத்துங்கால் அவையனைத்தும் எண்களே. அடுத்து எழுத்து என்பது, மனிதன் அடைய வேண்டிய வீடு பேற்றுக்கு உரியவனாகிய சிவபரம்பொருளை எண்ணி எப்போதும் உருவேற்றிப் பயன்பெறச் சாதனமாய் இருப்பது. அதனை ஐந்து என்றும் மூன்று என்றும் குருமுகமாக பெறுவான் அறிவான். இதனைப்பெறுதற்கு ஆன்மாக்களை வீடுபேறு அடையா வண்ணம் தடை செய்யும் தளையாக அமைவது அறியாமை அல்லது ஆணவம். அந்த அறியாமை ஆற்றல் அடங்கி இருக்க வேண்டுமானால் சிவ புண்ணியத்தைச் செய்தல் வேண்டும். சிவ புண்ணியமாவது நன்மையை விளைவிக்கும் சிவ தன்மத்தாலும் நலந்தரும் சிவயோகத்தாலும் நன்மையைப் பெருக்கும் சிவஞானத்தாலும் அது அமையும். இதனைத் திருக்களிற்றுப்படியார் என்ற ஞான சாத்திரத்தில் இடம்பெறும் பின்வரும் பாடலால் அறியலாம்:

*நல்ல சிவ தன்மத்தால் நல்ல சிவ யோகத்தால்*
*நல்ல சிவஞானத்தால் நான் அழிய-வல்லதனால்*
*ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்*
*ஆரேனும் காணா அரன்*

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றபடி நிலையில் தொண்டு ஆற்றி அதனால் நான் என்ற அகந்தை அழிய அந்நிலையில் அரன் காணப்படுவான் என்பது இதன் திரண்ட பொருள்.

அகந்தை அழிய அன்பு சாதனமாக எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவம் என்று அனைத்தையும் சிவமாகப் பாவித்துத் தொண்டாற்ற வேண்டும். அப்பர் பெருமான்,

*தொண்டலாற் றுணையுமில்லை தோலலா துடையுமில்லை*
*கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை*
*பண்டை நான்மறைகள் காணப்பரிசினனென் றென்றெண்ணி*
*அண்ட வானவர்களேத்து மையனை யாறனார்க்கே* (IV.40.4)

*நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன்கடன் னடியேனையுந்தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே (V.19.9)*

என்று அருளிய பாங்கு மனிதனுக்கு அகந்தை அழியத் தூயோனாக ஆகுதற்குரிய நெறிதொண்டு நெறியேயாகும். இதனை,

*சீலம் இன்றி, நோன்பு இன்றி, செறிவே இன்றி, அறிவு இன்றி,*
*தோலின் பாவைக் கூத்தாட்டாய், சுழன்று விழுந்து கிடப்பேனை*
*மாலும் காட்டி, வழிகாட்டி, வாரா உலக நெறி ஏற,*
*கோலம் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே?*

*- திருவாசகம் 50. ஆனந்தமாலை 3*

எனச் சீலமெனச் சரியையும், நோன்பெனக் கிரியையும், செறிவு என யோகத்தையும், அறிவு என ஞானத்தையும் மணிவாசகர் குறித்துள்ளார். அடுத்து, அப்பர் பெருமான்,

*நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்,*
*புலவர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்,*
*தலையாரக்கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சய போற்றி போற்றியென்றும்,*
*அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலறா நில்லே*

என்றும்,

*பெரும்புலர்காலை மூழ்கிப் பித்தர்க்கும் பத்தராகி*
*அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளேவைத்து*
*விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இட வல்லார்க்குக்*
*கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே.*

என்றும்,

*சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன்,*
*நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன், உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்*
*உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய் உடல் உள்ளுறு சூலை தவிர்த்தருளாய்*
*அலந்தே னடியே னதிகைக் கெடில வீரட்டானத் துறை அம்மானே*

என்றும் சரியை, கிரியை மார்க்கங்களைப் பற்பல இடங்களிலும் பாடியுள்ளார்.

*உயிராவணம் இருந்து, உற்றுநோக்கியுள்ளக் கிழியினுருவெழுதி,*
*உயிராவணம் செய்திட்டு உன் கைத்தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி,*
*அயிராவணம் ஏறாது ஆனேறேறியமரர் நாடாளாதே ஆரூராண்ட,*
*அயிராவணமே என் அம்மானே நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாரே. (VI.25-1)*

என யோக மார்க்கத்தையும் ஞானப் பாடலான தேவாரத்தில் நமக்கு உபதேசித்துள்ளார்.

*மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்*
*கனிதந்தாற் கனி யுண்ணவும் வல்லீரே*
*புனிதன் பொற் கழல் ஈசனெ னுங்கனி*
*இனிது சாலவு மேசற்றவர்கட்கே (V. 91-7)*

எனவும்,

*பெருகலாம் தவம் பேதைமை தீரலம்*
*திருகலாகிய சிந்தை திருத்தலாம்*
*பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்*
*மருகலானடி வாழ்த்தி வணங்கவே (V. 88-1)*

*ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்*
*ஞானத்தால் தொழுவே னுனை நானலேன்*
*ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு*
*ஞானத்தாய் உனை நானுந் தொழுவனே*

என்னும் மெய் யுணர்வாகிய ஞானநெறியில் வழிபடும் ஞானிகள், ஞானநெறியில் மெய்யுணர்வோடு அறிவாகிய கோலை நட்டு, அன்பாகிய கயிற்றினால் பிணைத்து முறுக வாங்கிக்கடைந்தால் விறகில் தீயினனாகிய கடவுள் பாலில் மறைந்து நிற்பவன் நெய்யென வெளிப்பட்டருள்வானென ஞான மார்க்கத்தையும் நமக்குப் புலப்படுத்தியுள்ளார். இக்கருத்தமைந்த அப்பர் பாடல்

*விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே*

எனவும் ஞான மார்க்கமாக பல அறிவுரைகளை வழங்கியுள்ளார். ஐந்தெழுத்தை இடைவிடாது எண்ணுவார் இறைவனுடைய உலகத்தில் எழுந்தருளுவார் என அப்பர் பெருமான் கருணையோடு அருளியிருக்கிறார்.

*தந்தையார் தாயார் உடன் பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமரே,*
*வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமா மாதற்கேதும் மகிழ வேண்டாம்*
*சிந்தையீருமக்கொன்று சொல்லக் கேண்மின் திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ்சென்னி*
*எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க் திருவிசும்பிலிருக்கலாமே (VI. 93.10)*

எனத்தேவாரமாகிய ஞானப்பாடலில் திருநாவுக்கரசர் திருவைந்தெழுத்தைத் தூல ஐந்தெழுத்து, சூக்கும ஐந்தெழுத்து, காரணம், மகா காரணம், மகாமநு என்ற வரிசையில் நமக்கு ஓதி உயர்நிலை அடைய உபதேசித்துள்ளார். எத்தலத்திற்கும் இல்லாத நம் திருப்பாதிரிப்புரியூர் பதிகத்தில்,

*வைத்த பொருள் நமக்காமென்று சொல்லி மனத்தடைத்துச்*
*சித்தமுருக்கிச் சிவாயநம வென்றிருக்கினல்லால்*

*மொய்த்த கதிர்மதியம்போல் வாரவர் பாதிரிப்புலியூர்*
*அத்தன் அருள்பெறலாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே (IV. 94.5)*

எனவும்,

*கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்*
*வருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேனுனதருளால்*
*திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்*
*தருவாய் சிவ கதி நீ பாதிரிப்புலியூரரனே. (IV. 94.6)*

எனவும் நுண் ஐந்தெழுத்தை நமக்கு உபதேசித்துள்ளார்.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்*
*சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்*
*ஊன்றுமலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு" - உண்மை விளக்கம்*

*"சேர்க்கும் துடி சிகரம் சிக்கெனவா வீசுகரம்*
*ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்கு*
*அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்*
*தங்கும் மகரமது தாம்"*

எனவும் தீக்கைமுறையில் குருமுகமாகப்பெற வேண்டிய திருவைந்தெழுத்தை உண்மை விளக்கம் என்ற ஞானநூல் நுவல்வதை நடராசப்பெருமான் திருவுருவில் அமைந்துள்ள முறைகளை பலபடியாக அப்பர் பெருமான் தாம் அருளிய ஞானப் பாடலான தேவாரத்தில் நமக்கு உபதேசித்துள்ளார். அத்தகைய ஞானப்பாடலான தேவாரத்தை ஓதி உணர்ந்து உய்திபெறுவோமாக.

# 18. திருமந்திரத்தில் மறைமொழிச் சொற்கள்

- பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன், சென்னை

திருமந்திரம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாக வைக்கப்பட்டுள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த மறைபொருள் (இரகசியச் சொற்கள்) என்ற பொருளில் 'திருமந்திரம்' என்ற இந்நூல் வழங்கப்படுகிறது.

தமிழின் சிறப்புக்குரிய நூலான தொல்காப்பியத்தில்,

*"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திர மென்ப"* (தொல். பொருள்: 176)

என்று குறிக்கப்பட்டுள்ளது. "சொல்லிய சொல்லின் பொருள் யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார் ஆணையிற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும்" என இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

இந்நூற்பாவிற்கு விளக்கமாகத் திருவள்ளுவரும்

*"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்"* (குறள்: 78)

என்றார். இதற்கு உரை எழுதிய பரிமேலழகரும் 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி' என்றும், 'நிறைமொழி மாந்தராவார் இருவகைப் பற்றுகளையும் நீக்கி ஐந்து புலன்களையும் அடக்கி, எவ்வுயிர்க்கும் அருளுடையவராய் வாழும் பெரியோர்' என்றும், 'ஆணையிற் கிளத்தலாவது இஃதிவ்வாறு ஆகுக எனத் தமது ஆற்றல் தோன்றச் செய்தல்' என்றும் கூறுவர்.

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளின் மூலம் 'மந்திரம்' என்ற சொல் 'மறைமொழி' என்ற பொருளை உடையது; பலருக்கும் புலப்படாமல் மறைந்துள்ள அரிய உண்மைகளைத் தன்னகத்தே பொதிந்துள்ள மொழி என்பது. உலக, நலம் பொருட்டு வழங்கும் மறைமொழியினையே 'மந்திரம்' என்பர். மறை, மந்திரம் என்பன இரகசியப் பொருள் குறித்து நிற்பன. 'பாலின் நெய், பழத்தின் சுவை, எள்ளின் எண்ணெய் என அறியப்படாமல் மறைந்து நிற்றலின் மறை என்றனர்' என்று சிவஞானசித்தியார் விளக்குகிறது. (சாதனவியல் சூ. 9 செய்யுள் 12). எனவே, மறைபொருள் அமைந்தமை நோக்கித் திருமந்திரம் என வழங்கப்பட்டது எனில் சிறப்புடையது. திருமூலர் மறைமொழியைச் 'சூனிய சம்பாஷணை' என்று குறித்துள்ளார்.

திருமூலர் ஏறக்குறைய 59 பாடல்களில் உடலை அல்லது உள்ளத்தைக் கோயிலாகப் பாடியுள்ளார். மேலும் பந்தல், நாடு, அத்திப்பழம், முட்டை இடிஞ்சில் (அகல்விளக்கு), தோற்பை, தறி, வேங்கடம், பானை, அச்சு, கால், உலைபொறி, ஊர், கோட்டை, பாடி, கரும்பு, தண்டு, சீரங்கம், குரம்பை, பழம்பதி, தோணி, தேர், நிலம், இருட்டறை, மாயப்பை, மாயாபுரி, பறவை, கழனி, உலை, கூடு, மலை எனப் பல மறைசொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

உடம்புக்குள் உயிர் நிற்பது நிலையான சம்பந்தமில்லை. ஓலைவரும் வரைதான் இந்த ஐம்புலக்காவல் இந்தச் சிறிது காலத்திற்குள் செய்ய வேண்டிய நல்லறங்களைச் செய்து கடைத்தேற வேண்டும் என்றார் திருமூலர்.

*ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது*
*ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்*
*ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்*
*ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே (1:187)*

என்றார் திருமூலர். இதில், வயல் - உடம்பு, ஐந்து குடியானவர்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்புலன்கள்; வயலில் விளையும் பயிர் - வினைப்பயன்; ஐவர்க்கு நாயகன்- இறைவன்;

ஓலை - மரணம்; காவல் விடுதல் - உயிர் நீங்குங்கால் ஐம்புலன்கள் உடலைவிட்டு நீங்குதல். என்று மறைமொழிகள் அமைந்துள்ளன. குடியானவர்களின் வாழ்க்கையொடு வாழ்வின் நிலையாமையை மறைமொழியாக அமைத்துள்ளார்.

இளமை நிலையாமை,யாக்கை நிலையாமையைக் கூறவந்த திருமூலர்,

*பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்*
*பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்*
*பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்*
*பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே* (1:182)

என்று கூறினார். நூலால் தைக்கும் நுண்ணூசி போலில்லாமல் சணல் கயிறுகளைத் தைக்கின்ற பெரிய ஊசிகள் ஐந்தும் ஒரு சணற்பைக்குள் இருக்கின்றன. அவை பருவூசியாயினும் பறக்கும் தன்மை வாய்ந்த யானைகள் ஆகும். அவை மெலிந்தால் அவை தங்கியுள்ள பையும் பறந்துவிடும் என்ற பொருள் மேலோட்டமாகத் தோன்றும். நுண்மையாக நோக்கும்போது வேறொரு மறைபொருள் தெரியும்.

உயிர் - நுண்ணூசி; ஐம்பொறிகள்-பருவூசி; பை - உடம்பு; யானை - ஐம்பொறிகள் அடங்காமல் புலன்கள் மேல் செல்லுதலால் யானை பறக்கும் மிருகமாயிற்று. பறவை - புலன்களைச் சென்று பற்றும் விரைவு பற்றி யானை பறவையாகக் கூறப்படுகிறது. பருவூசி ஐந்தும் பனித்தலைப் பொருந்துதல் - பொறிகள் புலன்களைக் கவரும் ஆற்றலை இழந்தால் உடல் இறந்து விடும்.

இத்திருமந்திரத்தில் மறைமொழிகளின் மூலம் வாழ்க்கை நிலையாமை உணர்த்தப்பட்டுள்ளது.

திருமூலரின் மறைபொருள் அமைந்த சில பாடல்களைக் படித்தால் பொருத்தமில்லாத கருத்துகளைக் கூறுவதாகத் தோன்றும். ஆழ்ந்து படித்து இதன் உட்பொருளைக் கண்டால் வியப்பு உண்டாகும்.

*வழுதலை வித்திட பாகல் முளைத்தது*
*புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது*
*தொழுதுகொண் டோடினார் தோட்டத்துக் குடிகள்*
*முழுதும் பழுத்தது வாழைக் கனியே* (திருமந்திரம் 9: சூனிய சம்பாஷணை: 4)

என்னும் இம்மந்திரத்திற்கு நேரான பொருள் கத்தரிக்காயை விதைத்தேன்; பாகற்காய் முளைத்தது. புழுதியைத் தோண்டினேன்; பூசணி பூத்தது. இதைக் கண்ட தோட்டத்துக் குடிகள் தொழுது ஓடினர்; வாழைக்கனி பழுத்தது என்பதாம். இப்பாடலின் உட்பொருளைக் கூர்ந்து நோக்கினால் வியப்பு உண்டாகும்.

வழுதலை வித்திட - யோகப் பயிற்சி செய்ய; பாகல் முளைத்தது - வைராக்கியம் தோன்றியது; புழுதியைத் தோண்டினேன் - தத்துவ ஆராய்ச்சி செய்தேன்; பூசணி பூத்தது - சிவத்தன்மை எய்தியது; தோட்டத்துக் குடிகள் - இந்திரியங்கள்; தொழுது கொண்டோடினார் - அச்சிவத்தன்மை கண்டு அஞ்சி அகன்றார்; வாழைக்கனி - ஆன்மலாபம்; முழுதும் பழுத்தது - முழுதும் முற்றிக் கனிந்தது.

யோகப்பயிற்சி செய்ய வைராக்கியம் தோன்றியது. அதனால் தத்துவங்களை ஆராய்ந்தேன்; சிவத்தன்மை அலர்ந்தது. அதனைக் கண்ட இந்திரியங்கள் அகன்றன. ஆன்மலாபம் கனிந்தது என்று மறைமொழியின்மூலம் தானும் கனிந்தமையைக் கூறினார்.

ஒரு குளத்தில் கொட்டியும் ஆம்பலும் பூத்திருந்தன. அதனருகில் அமர்ந்து வாழைப் பழத்தையும் வெல்லத்தையும் தேனையும் கலந்து உண்ணாமல், எட்டியையும் வேம்பையும் உண்கிறார்களே என்று மனிதர்களுக்காக வேதனைப்பட்டார் திருமூலர். இந்தப் பாடலில் மறைபொருளை அழகாக அமைத்துப் பாடியுள்ளார் திருமூலர்.

*கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை*
*எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்*
*கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்*
*எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே* (*திரு: 9: சூனிய: 36*)

என்றார் இப்பாடலில். குளம் - மனித உடம்பு; கொட்டி - உடம்பினுள் உள்ள 25 புறநிலைத்தத்துவங்கள்; ஆம்பல் - உடம்பினுள் உறையும் 24 அகநிலைத்தத்துவங்கள்; எட்டி - ஆணவமலங்கள்; வேம்பு - மாயை; ஜீவான்மா - வாழை; சத்திநிபாத விவேகம் - கட்டி; ஞான இன்பம் - தேன்.

வாழையாகிய ஜீவான்மா 24 அகநிலைத் தத்துவங்களையும் 25 புறநிலைத் தத்துவங்களையும் கொண்ட உடம்பினுள் இருந்து கொண்டு ஞான இன்பத்தை நுகராமல் ஆணவ மலத்திலும் மாயையிலும் கட்டுண்டு உழல்கிறதே என்று மறைமொழியால் உணர்த்தியுள்ளார் திருமூலர்.

மனிதகுலம் தீங்கனிகளைச் சுவைக்காமல் எட்டிப் பழங்களை விரும்புகிறதே என இரக்கம் கொண்டார் திருமூலர். இந்த உடம்பிலுள்ள உட்கருவிகளைக் கொண்டு கடைத்தேறுவதற்குள்ள பயிற்சி முறைகள் இருந்தும்கூட மனிதர்கள் தங்கள் வாழ்வையும் அரிய ஞான சாதனமாகிய இந்த உடம்பையும் வீணாக்குகிறார்களே என்று வருந்தினார். தாம் பாடு பட்டுத் தேடிக் கண்டு அனுபவித்த ஞான முறைகளை மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையிலே பற்பல பாக்களாக வழங்கி அருளினார். தகுதியானவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்று மறை மொழிச் சொற்களில் அறிவித்தார்.

## 19. ஒரு பண்டைத் திருமுகம்*

- வித்துவான். பாலூர் - கண்ணப்ப முதலியார்

செம்மை சான்ற திருந்திய மொழிகளில் தன்னேரில்லாத் தகைமையொடு விளங்குவது நந்தம் தண்டமிழ் மொழி யென்பது எவர்க்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். இம்மொழி சிறந்து விளங்குவதற்கு உரிய காரணங்கள் பலவாக இருப்பினும், அவற்றுள் ஒன்று இம்மொழி இலக்கிய இலக்கணங்களைப் பெற்றுத் திகழ்வதனாலேயே என்க. நந்தம் செந்தமிழ் இலக்கிய

இலக்கணங்களில் தலை சிறந்தது என்பதை, மேனாட்டு அறிஞர்கள் பலரும் ஒருமிக்கக் கூறியிருப்பதிலிருந்து நன்கு உணர்ந்துகொள்ளலாம். "இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது தமிழ்" என்று வின்ஸ்லோ பெருமகனார் கூறி இருப்பதை ஒரு சான்றாகக் காட்டலாம். இத்தகைய பெருமை மிக்க மொழியில் கடித அமைப்பில் அமைந்த இலக்கியத்தினைப் பற்றிச் சிறிது ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடிதம் என்னும் பொருள்கொண்ட சொற்கள்: முடங்கல், திருமுகம், மடல், ஓலை முதலியன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருத்தலை நோக்குங்கால், கடிதம் எழுதுதலில் நம்மவர்கள் தலைசிறந்து விளங்கினர் என்பதையும், அக்கடிதங்கள் வெறும் செய்திகளை அறிவிக்கும் திருமுகங்களாக இன்றி, பொருட்செறிவுடைய மடல்களாகவும் திகழ்ந்தன என்பதையும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருமுறைகள், தனிப்பாடல் திரட்டு போன்ற நூல்களில் பரக்கக் காணலாம்.

இத்திருமுகங்கள் மேற்கு நாட்டு அறிஞர்கள் போற்றுகின்ற செஸ்டர்பீல்டு, சிஸரோ, ஷில்லர், ஹரேஸ் வால்போல், ஜான்ஸன், கூப்பர் போன்றவர்களின் கடிதங்கட்கு எட்டுணையும் பின்வாங்குதலின்றிச் சிறப்புடையனவாக உள்ளன. "கடிதம் எழுதுவோர் ஒப்பற்ற அருங்கலையாகும்" என்று செஸ்டர்பீல்டு தன்மகன் பிலிப்புக்கு அறிவுறுத்தியிருக்கும் கருத்தை நம்மவர்கள் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நன்கறிந்தவர்கள் என்பதில் ஆசங்கை எழ இடமில்லை.

இக்காலத்தில் கடிதம் எழுதும் முறைகளைக் கண்டு அவை மேனாட்டு அறிஞர்களின் போக்கைத் தழுவி எழுதப்படுகின்றன என்று கூறி வியப்புறுகின்றவர் ஒருசிலர். அதாவது, மேற்கு நாட்டவர் தாம் கடிதம் எங்கிருந்து வருகின்றது என்பதை அறிவிக்க, முன்னர் வருகையினைக் (From) குறித்துப் பின்னர் இக்கடிதம் இன்னாருக்கு (To) எழுதப்படுகிறது என்பதையும் குறிப்பிட்டு, அதன் பின்னர்ச் செய்திகளை (subject matter) அறிவிக்கின்றனர் என்று கூறிப்பெருமிதம் கொள்கின்றனர். இம்முறைகளை நம் செந்தமிழ்மொழி உணராதார்க்கு இதனை நன்கு விளக்கவே நம் பதினோராம் திருமுறைக் கண் முதலில் விளங்கும் திருமுகப்பாசுரத்தினைத் துணைக்கொள்வோமாக. அப்பாசுரம்,

*மதிமலி புரிசை மாடக் கூடல்*
*பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு*
*அன்னம் பயில்பொழில் ஆல வாயில்*
*மன்னிய சிவன்யான் மொழிதரும் மாற்றம்*
*பருவக் கொண்மூஉப் படியென பாவலர்க்கு*
*உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்*
*குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்*
*செருமா உகைக்கும் சேரலன் காண்க*
*பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்*
*தன்போல் என்பால் அன்பன் தன்பால்*
*காண்பது கருதிப் போந்தனன்*
*மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.*

என்பது. இது திருவாலவாயுடையரால் சேரமான் பெருமாள் நாயனாருக்குப் பாணபத்திரரது வறுமை

தீரப் பொருள் கொடுத்து உதவுமாறு எழுதப்பட்டதாகும். இக்கடிதத்தில் "மதிமலி.... சிவன் யாம்" என்பது வரையில் இன்னாரிடமிருந்து இது வருகிறது என்பதும், "பருவக் கொண்மூஉ.... சேரலன் காண்க" என்பது வரையில் இன்னாருக்கு எழுதப்படுகிறது என்பதும், "பண்பால் யாழ்பயில்... வர விடுப்பதுவே" என்பதுவரையில் எழுதப்படும் செய்தி இன்னது என்பதும் எத்துணை அழகாக பொறிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நினைந்து பார்க்குங்கால் தமிழ்மொழியின் இலக்கிய நுட்ப அமைப்பின் முறைமை நன்கு புலனாகின்றதன்றோ? செஸ்டர் பீல்டு தம் திருமகனான பிலிப்புக்கு எழுதிய கடிதத்தில் "கடிதம் எழுதுவது ஓர் அருங்கலை" என்பது உண்மைதான் என்பதை மேலும் இத்திருமுகப் பாசுரங் கொண்டே உணர்வோமாக.

இப்பாசுரம் பேரறிவுப் பொருளாய் விளங்கும் இறைவரால் எழுதப்பட்டது என்பது தொன்றுதொட்ட முடிவாகும். "இறைவரோ, "பேரறிவோ, இன்பப் பெருக்கே, பராபரமே" என்று தாயுமானார் வாக்கிற்கும், "சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கண் பெருமானே!" என்ற சிவப்பிரகாசரது மொழிக்கும் பொருளாய் விளங்குபவர். அத்தகைய பேரறிவுப் பிழம்பாகிய இறைவரால் பாடப் பெற்ற இத்திருமுகப் பாசுரம், சொல்நோக்கும், பொருள்நோக்கும், தொடைநோக்கும், மற்ற எந்நோக்கும் கொண்டு இலங்குவது என்பதைக் கூறவும் வேண்டுமோ? இத்திருமுகப் பாசுரத்தினைத் தொடங்கும் பொழுதே இறைவனார் "மதிமலி புரிசை" என்று தொடங்கி மதுரையின் மதிலின் மாண்பைப் புலப்படுத்தத் தொடங்குகிறார் அன்றோ? மதுரையின் மதில் பல மாட்சிமைப்பட்ட அறிஞர்களின் அறிவுக்கூறுபாடுகள் பெற்று விளங்கியது என்பதைச் சிலப்பதிகாரம் மதில்களில் அமைந்த பொறிகள் இன்ன என்பதைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து உணரலாமன்றோ? இதனை உட்கொண்டன்றோ மதிமலிபுரிசை" என்றனர் மதிமுடி சொக்கேசர்.

"மாடக்கூடல்" என்பதும் பொருள் பொதி தொடராகும். மதுரையம்பதியின் குடிவளத்தையும், அக்குடிமக்கள் வாழும் கட்டிட அமைப்புக்களையும் காட்ட எழுந்த தொடரே இது. இவ்வாறே நாட்டின் மாடங்களைச் சிறப்பித்து "செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கி" என்று ஞானசம்பந்தப் பெருமானார் நவில்வதனாலும் அறிந்துகொள்ளலாம்.

"அன்னம்பயில் பொழில் ஆலவாய்" என்பது மதுரையம்பதியின் நீர்வளத்தையும் நில வளத்தையும் குறிப்பதாகும். நீர் மிக்கு இருந்தாலன்றி அன்னங்கள் வாழா அன்றோ? "அன்னங்கள் பயிலும் ஆலவாய்" என்பதனால் நகரில் பல சோலைகள் அமைந்து அச்சோலைகளில் நீர் நிலைகளும் பொருந்தி மக்கள் மாலை நேரங்களில் நறுமணமும், நல்லதென்றலும் துய்க்க நகரினை அமைத்திருந்தனர் நகராண்மைக் கழகத்தினர் என்பதும் தெரியவருகிறதன்றோ? இதனால், அக்கால நகராண்மைக் கழகத்தினர் நற்றொண்டும் புலனாகிறது.

இங்ஙனம் இறைவனார், மதுரையம்பதியின் மாண்புறு வளங்களை முன்னர் அறிவித்து, தம் திருமுகத்தினைத் தொடங்குவதன் உட்பொருள், வளமற்ற, வறண்ட நகரத்தினின்று எழுதப்பட்டதன்று என்பதும், பாணபத்திரரது வறுமையைப் போக்கத்தக்க வளம் இல்லாதது போலும் என்று சேரர் எண்ணாதிருக்கும் பொருட்டும் இவ்வாறு மதுரையினைச் சிறப்பித்தனர் என்க. எழுதுகின்றவர் இறைவர் என்பதையும் பண்டும், இன்றும் என்றும் உள்ள பொருள் என்பதையும் அறிவிக்க "மன்னிய சிவன் யாம்" என்ற தொடர்மூலம் விளக்கியருளினர்.

அடுத்தாற்போல், சேரமான் பெருமாள் நாயனார் சிறப்பையும் எடுத்தியம்ப எண்ணி, அவர்க்குரிய சிறப்புக்களுள் கொடைச்சிறப்பினையே விதந்து கூற உளங்கொண்டு "பருவக் கொண்மூஉப் படி யென பாவலர்க்கு உரிமையின், உரிமையின் உதவி" என்று வரைந்தனர். சேரர் பெருமானார், கொடைக்குணத்தில் ஒப்பாரும், மிக்காரும் இன்றித் திகழ்ந்தனர் என்பதைச் சேக்கிழார் பெருமானார் இம்பர் "உலகில், இரவலர்க்கும், வறியோர் எவர்க்கும் ஈகையினால் செம்பொன் மழையாம் எனப்பொழிந்து" என்று செப்பியதனாலும் தெள்ளிதின் உணரலாம். சேரன்மரபே பொதுவாகப் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் ஈந்து புகழ்பெற்றது என்பதைப் பதிற்றுப் பத்து என்னும் சங்கமருவிய நூலால் சங்கையறத் தெளிகின்றோ மல்லமோ? இந்த மரபு உரிய சேரர் பெருமானார்க்கு இருத்தல் கருதியும், நினைவுபடுத்தக் கருதியும், "உரிமையின், உரிமையின்" என்றனர். இந்த அளவில் சேரர் பெருமானாரது புகழினைப் புகழ்ந்து நிறுத்தினாரல்லர் நீலமேனிவால் இழைபாகத் தொருவர். அம்மன்னரது, குடையினையும் சிறப்பிக்க எண்ணியவராய், "குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ் செருமா உகைக்கும் சேரலன் காண்க" என்றனர். இவ்வாறு, குடையினைச் சிறப்பித்ததன் நோக்கம், அக்குடை வெயிலை மறைப்பதற்கு மட்டும் உரியதன்று குடிமக்களின் துன்ப வெம்மையை மறைக்கவும் வல்லது, காக்கவும் வல்லது என்பனவற்றை அறிவிக்கவே என்க. இக்காரணங்களைப் பற்றியே மன்னர்களின் குடைகள் மாண்புற்றிலங்குகின்றன என்பதை,

*"கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை*
*வெயில்மறைக் கொண்டன்றே வருந்திய குடிமறைப் பதுவே"*

என்ற புறநானூற்றடிகளாலும்,

*"திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்*
*கொங்கலர்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ்*
*அங்கண் உலகளித்தலான்"*

என்ற சிலப்பதிகார நூலாலும் அறிந்து கொள்ளலாம்.

"செருமா உகைக்கும் சேரலன் காண்க" என்று கழறிற்றறிவாரை சுட்டிக்காட்டியதன் நோக்கம் பின்னால் இவர் நம்பி ஆரூரருடன் கைலைக் கேகுங்கால், கலினமாவில் கடிது ஊர்ந்து செல்லவேண்டி இருக்கும் குறிப்பினை முன்கூட்டி அறிவிக்கும் பொருட்டே ஆகும். இவ்வாறு பின்னர் நிகழ்வதை முன்னரே அறியும்வண்ணம் சில அருந்தொடர்கள் அமைந்துவிடுவதை இன்தமிழ் இலக்கிய நூல்களில் இனிதுறக் காணலாம். தயரதன் தன் திருமகனான இராமனை, கௌசிக முனிவருடன் அனுப்ப விழைந்து, அவனை அழைக்கக் கட்டளையிட்ட பணியாளரிடம் 'திருவின் கேள்வனைக் கொணர்மின்' என்று கட்டளை இட்டனன் அன்றோ? இராமன், திருவுக்குக் கேள்வனாதற்கு முன்பே அவனைத் திருவின் கேள்வன் என்று குறிப்பிட்டது, பின்னர் சீதையைத் திருமணம் முடித்தலை முன்கூட்டி அறிவிக்கும் மங்கலச் சொல்லாகவன்றோ அமைந்துவிட்டது? இங்ஙனம் பின்னால் நிகழ்வதை முன்னால் அறிவிக்கும் சொற்றொடர்களை அமைப்பதற்குக் கம்பர் யாங்ஙனம் உணர்ந்தனர்? அவர் திருமுறைகளை நன்கு பயின்ற பயிற்சியினால் என்று கூறின் மிகையாகாதன்றோ?

*"செருமா உகைக்கும் சேரலன் காண்க"*

என்ற தொடர்ப் பொருளைச் செல்வன் சிந்தித்ததன் பயனன்றோ?

*"திருவின் கேள்வனைக் கொணர்மின்"*

என்று செப்பச் செய்தது?

இங்ஙனம் தம் நாட்டையும், சேரர் பெருமானார் சிறப்பையும் புகழ்ந்து கூறி இறைவர் தாம் கடிதம் தந்து அனுப்பும் பாணபத்திரரையும் சேரர்க்கு அறிமுகப்படுத்திவைக்க விரும்பியவராய் முன்னர் அவரது இசைப்புலமையினை உணர்த்த வேண்டி "யாழ்பயில் பாண பத்திரன்" என்று குறிப்பிட்டருளினர். அவ் யாழ்ப் பயிற்சியினையும் நம்முறையில் பெற்றவர் என்பதை, "பண்பால் யாழ்பயில் பாண பத்திரர்" என்ற தொடரால் விளக்கி யருளினர். யாழ்ப்பயிற்சி உடையராயினும், கல்விச் செருக்குக் காரணத்தால் கடவுளை மறந்த கயவர் அல்லர் எம்மால் உன்பால் அனுப்பப்படுவர் என்பதை நன்குணர்த்த "எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்தனர். "எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்ததனால் "நாம் அன்புடையோம் அல்லமோ" என்ற சேரர் நிலையாதிருக்கும்வண்ணம், மிக்க விழிப்புடன் "தன்போல் என்பால் அன்பன்" என்றும் எழுதி மன்னர்க்கு அத்தகைய எண்ணம் எழாதவாறு செய்தனர்.

என்னே இறைவர்தம் பேரறிவுடைமை! யாமா அதனை அளவிட்டுக் கூறவல்லர்? தம்மால் அனுப்பப்படுபவர் வறுமையுற்ற காரணத்தால் உம்பால் அனுப்புகின்றோம் என்று கூறி பாணபத்திரர்க்கு இழுக்கு உண்டாகுமாறு செய்ய எண்ணமற்றவராய், அவரது மாண்பு மணக்க "காண்பது கருதிப் போந்தனன்" என்றே திருமுகத்தில் தீட்டியருளினர். இவ்வாறு எழுதி முடித்து முடங்கலினைக் கொடுத்தனுப்பின் பொருள்கொடாமல் சேரர் அனுப்பிவிடுவரோ என்ற ஐயத்தினராய் "மாண் பொருள் கொடுத்து" என்றும் குறிப்பிடப் பொருளினை அளிக்குமாறு தூண்டினர். ஒருக்கால் சிறு பொருள் கொடுத்துச் சென்று வருக என்று செப்பிவிடுவரோ என்று சிந்தித்த சிவனார், பெரும் பொருளைக் கொடுக்க என்று கட்டளையிடுவார் போல "மாண் பொருள் கொடுத்து" என மாண்புற மடலை வரைந்தனர். இந்த அளவிலும் திருமுகப் பாசுரத்தினைத் தீட்டி முடிக்காது இறுதியில் "வர விடுப்பதுவே" என்று வரைந்து முடித்துள்ளதை என் சிற்றறிவு கொண்டு என்னென்று செப்ப வல்லேன்? ஆ! "வர விடுப்பதுவே" என்னும் செழும் தொடரைப் பன்முறையும் பன்னிப் பன்னிச் சிந்திக்க வேண்டியவராகின்றோம். இத் தொடரின் ஆழ்பொருள் அமைப்பினை அனுபவிக்கவேண்டியவரா கின்றோம்.

பாணபத்திரர் யாழ் இசையில் வல்லவர். அத்துடன் இறையன்பும் எய்தப் பெற்றவர். மேலும் இறைவனால் அனுப்பப்பட்டவர். இன்னோரன்ன சிறப்புடைய சீரியரைச் சின்னாளேனும் உடன்வைத்து உவகையும் உறவுங்கொள்ளவேண்டும் என்று உளங்கொண்டு சேரர் பெருமானார் பாணபத்திரரை நிறுத்திக் கொள்ளாதிருக்கும் பொருட்டே "வர விடுப்பதுவே" என்றனர். நாளும் யாழிசை கேட்டு இன்புறும் இறைவன் யாங்ஙனம் பாணபத்திரரைத் தணந்திருப்பர்? ஏழிசையாய், இசைப்பயனாய் இருப்பவரன்றோ இறைவர். ஆகவே உடனே பொருள் தந்து அனுப்பிவைக்க உளங்கொண்டே "வர விடுப்பதுவே" என்று கட்டளையிட்டருளினர். இத்தகைய மாண்பொருள் பலவும் மாண்புறப் பெற்ற இத்திருமுகப் பாசுரத்தினைப் பல்காலும் பயின்று பேரின்பப் பொருளைப் பெற்று இனிது வாழ்தல் நம் கடமையாகும்.

* நன்றி : திரு.வி.உலகநாத முதலியார் மணிவிழா மலர் பக். 58-63.

# 20. பெரியபுராணத்தில் சைவ சித்தாந்தம்

- முனைவர் சொ. பரமசிவம்,
*முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 600 030.*

**முன்னுரை**

பெரியபுராணம் ஓர் இலக்கியப் பெருங்கடல். இதனுள் மூழ்கி நன் முத்துக்களாகிய இலக்கியக் கருத்துக்களை வாரிக் கொணர்வோர் பற்பலர்; படிப்பதன் மூலம் நீந்தி மகிழ்வோர் எண்ணிலர்.

**எல்லாம் உண்டு**

பெரியபுராணத்தில் வாழ்வியல், வரலாறு, பண்பாடு, மருத்துவம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, நாடு, ஊர்கள், காவியம், இலக்கியம் ஆகிய எல்லாம் உண்டு. இவற்றின் இடையே சைவமும் உண்டு. அச்சைவத்தினுள்ளே சைவ சித்தாந்தமும் உண்டு.

**மறைபொருள்**

பாலில் நெய் போன்று, விறகில் தீ போன்று, சிறுவித்துள் ஒரு பெரிய ஆலமரம் போன்று, பெரியபுராணத்துள் சைவ சித்தாந்தம் அடங்கியுள்ளது. நுணுகி நோக்கின் தெரிய வரும்.

**ஐந்தெழுத்து விளக்கம்**

சி - சிவம், சிவன்

வ - சத்தி, பார்வதி

ய - உயிர்

ந - கன்மம், மாயை, மருள்

ம - ஆணவமலம், இருள், இருட்டு.

ஒருவனுக்கு ஆணவம், கன்மம், மாயை ஆகிய முப்பெரும் மலங்கள் நீங்கினால் அப்பொழுது உயிர் தனித்து நிற்கின்றது; தூய்மை பெறுகின்றது. அவ்வுயிர் சத்தியின் துணைகொண்டு சிவத்தை அதாவது சிவனை அடைகின்றது. என்பது "சிவாயநம" என்னும் மந்திரத்தின் பொருளாகும்.

**சின்முத்திரை**

'சின்முத்திரை' என்பது, கட்டைவிரலாகிய பெருவிரலையும் சுட்டுவிரலையும் தொடுமாறு வைத்துக் கொள்ளவேண்டும். நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல் ஆகியவற்றை மேல்நோக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இதைத் தான் சின்முத்திரை என்பர்.

கட்டைவிரல் - பரமான்மா - இறைவன்

சுட்டுவிரல் - சீவான்மா - உயிர்

நடுவிரல் - ஆணவ மலம்

மோதிரவிரல் - கன்மம் மலம்

சுண்டு விரல் - மாயா மலம்

நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல் ஆகியவற்றை மேல்நோக்கி வைத்திருப்பதன் மூலம், ஆணவமலம், கன்ம மலம், மாயாமலம் ஆகிய மலங்கள் விலகி ஓடிவிடுகின்றன. அவை ஓடியதும், விலகியதும் இயற்கையாகச் சுட்டுவிரலாகிய உயிர், சீவான்மா, பெருவிரலாகிய இறைவனை, பரமாத்மாவைத் தொடுவதன் மூலமாக, உயிராகிய ஜீவான்மா, இறைவனாகிய பரமாத்மாவைச் சேருகின்றது என்பது பொருளாகும்.

**தத்துவப்படிகள்**

இறைவனை உயிர், உடனே அடைய முடியாது. அது எத்தனையோ படிகளைக் கடந்து இறைவனை அடையவேண்டும். இதற்குத் 'தத்துவப்படிகள்' என்று பெயர். தத்துவங்களைப் பூதம் முதல் நாதம் வரை முப்பத்தாறாகப் பகுத்துக் கூறுவர். இந்த முப்பத்தாறு படிகளைக் கடக்கவேண்டும். பின்னர்தான் இறைவனை அடையமுடியும்.

*"ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்*
*பேறா வடியேன் பெறுமா றுளதோ"*

என்று கந்தரநுபூதியும் கூறுகின்றது. முப்பத்தாறு படிகளைக் கடந்து, அதன்மேல் நிற்கின்ற இன்பப் பேற்றினை அடையும் நாள் எந்நாளோ? எனக் கூறுகின்றது.

**திண்ணனும் நாணனும்**

சேக்கிழார் தம் பெரிய புராணத்துள், திண்ணனார், நாணன், காடன் ஆகிய மூவரும் வேட்டை ஆடுவதற்காகக் காட்டிற்குச் செல்லுவதாகக் கூறுகின்றார். ஆங்கிருந்த மலையின்மேல் இறைவனாகிய குடுமித்தேவர் இருப்பதாக நாணன் கூறுகின்றான். உடன் வந்த காடனை விட்டு விட்டு, திண்ணனாரும், நாணனும் மலைமீது ஏறுகின்றனர். அவர்கள் ஏறிய விதத்தினைச் சேக்கிழார்,

*"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்*
*பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோபானம் ஏறி*
*ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்!*
*நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்"*

எனக் கூறுகின்றார்.

திண்ணனாரும் நாணனும் புறத்தே சிவனாகிய குடுமித்தேவரை அடைய பலபடிகளைக் கடந்து சென்றனர். இது அகத்தே திண்ணனார், பூதம் முதல் நாதம் வரை முப்பத்தாறு படிகளைக் கடந்து சென்றார் எனப் பொருளாகும். இதை விரித்துக் கூறின் புறத்தே நிலம் முதல் சிவன் ஈறாக உள்ள முப்பத்தாறு படிகள் என்பனவாம்.

திண்ணனார் படிகளில் ஏற, ஏற,

*"என்மேற் பாரம் போவதொன் றுளது போலும்"*

என உணர்கின்றார். சிவத்தை நெருங்க, நெருங்க ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் ஆகிய

மலங்கள் நீங்குகின்றன. திண்ணனார் நிலத்தை விட்டுச் சிவனை நெருங்குவது, தவப்பெருக்கினாலே உயிர் உலகத்தை விடவிடச் சிவத்தைப் பற்றுகின்றது என்பதை அறியலாம். இன்பத்தை அடைய முயலுதல் ஆன்மாக்களின் இயல்பாகும். சிவமாகிய இன்பத்தை ஆன்மாக்கள் அடையும்பொழுது, அங்கு பேரொளி தோன்றும்.

**பேரொளி**

இப்பேரொளி மூன்று வகைப்படும். கண்டம், கண்டாகண்டம், அகண்டம் என்பன. விளக்கு, தீவட்டி முதலியன கண்டம் எனப்படும். கதிரவன், நிலா, நட்சத்திரங்கள் ஆகியன கண்டாகண்டம் எனப்படும். சிவ ஒளி ஒன்றே அகண்டம் எனப்படும். அகண்டமாகிய சிவஒளியின் முன், கண்ட ஒளி, கண்டாகண்டா ஒளி ஆகியன நிற்கமாட்டா; பிரகாசிக்க மாட்டா. சிவ ஒளியே ஏனை எல்லா ஒளிகளுக்கும் ஒளிதரும் காரணமாகும். ஆன்ம ஞானம், ஏனை அந்தக்கரணஞான, இந்திரிய ஞானங்களின் மிக்கு, அவற்றிற்கு மூலமாய் நிற்பது போலச் சிவவொளியே ஏனை எல்லா ஒளிகட்கும் மேலாய் நிற்பது. அது சுயஞ்சோதி, பரஞ்சோதி, அலகில்சோதி என்று பலவாறு அறியப்படும். திருவாசகமும்,

"சோதியே, சுடரே, சூழொளி விளக்கே" என விளக்குகின்றது.

இச்சோதியைத் திண்ணனார் கண்டு, கண்ணப்பராயினார்.

**பதி, பசு, பாசம்**

சைவ சித்தாந்தத்தின் தூண்களாவன பதி, பசு, பாசம் என்பன. பெரியபுராணத்துள் கூறப்பெறுகின்ற அறுபத்து மூன்று நாயன்மார்களும், பாசமாகிய மலங்களைப் போக்கி, பதியாகிய இறைவனை அடையப்பாடுபடுகின்றனர். இறுதியில் அறுபத்து மூவரும் இறைவனை அடைவதாகவே பெரியபுராணம் காட்டுகின்றது.

சிவஞானபோதம்,

*"ஊனக்கண் பாசம் உணராப் பதியை*
*ஞானக் கண்ணினில் சிந்தை நாடி" - ஒன்பதாம் சூத்திரம்*

என்னும் சூத்திரத்திற்கு, நாயன்மார்கள் அனைவரும் இறைவன் திருவடியை அடைதல் இலக்கியமாகத் திகழ்கின்றது.

**இளையான் குடிமாறர்**

இளையான் குடிமாற நாயனார், மழைக்காலத்தில், இரவு நேரத்தில் தம் மனைக்கு வந்த அடியவர்க்கு விருந்து படைக்க எண்ணினார். வயலில் வித்திய நெல்லைக் கொண்டு வந்தார். மனைவியார் அதை அரிசி ஆக்கினார். கறிக்கு என் செய்வது? எனத் துணைவியார் கலங்கி நின்றார். வீட்டுக் கொல்லையில் விளைந்த பயிரினை நாயனார் அறுத்துக் கொண்டு வந்து கறிக்கு நல்கினார். இதைச் சேக்கிழார்,

*"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்*
*பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"*

எனக் கூறுவார்.

பெரியபுராணத்திற்குச் சிறந்த உரை எழுதிய சி.கே. சுப்பிரமணியன் அவர்கள் "பிற்காலத்துச் செல்லல் நீங்குதற்காக வித்தியிருந்த நெல்முளை வாரியதனாலே வித்துமேல் விளையாமல் செய்த செயல் ஆகாமிய கர்மங்களைக் கழித்தலும், குறும்பயிர் வேருடன் பறித்ததனாலே பிராரத்த வினைகளை அழித்தலும், மனைவியின் அலக்குகளை அறுத்து மேலும் புவன போகங்களை இல்லாமல் வீட்டியதனாலே சஞ்சித கர்மங்களை அழித்தலும் குறிக்கப்பெற்றன. பாசப்பழிமுதல் - ஆணவமாகிய சகல மலத்திற்கும் வேராகி நிற்கும் மூலமலம்" என்று விளக்கம் கூறுவார்.

இளையான் குடிமாற நாயனார் அடியார்களை,

*"கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே*
*மண்டு காதலின் ஆதனத்திடை வைத்த ருச்சனை செய்தபின்*
*உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா*
*அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுத செய்ய அளித்துள்ளார்."*

எனச் சேக்கிழார் இளையான்குடி மாறர் அடியார்களாகிய தொண்டர்களுக்கு அமுதுபடைத்த விதத்தினை விளக்குவார்.

இது சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம்,

*"மால்அற நேய(ம்) மலிந்தவர் வேடமு(ம்)*
*ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே"*

என்பதற்கு எடுத்துக் காட்டு ஆகும்.

**இருவினை ஒப்பு**

மெய்கண்ட நூல்களுள் ஒன்றான திருவருட் பயன்,

*"நீடும் இருவினையும் நேராக நேராதல்*
*கூடும் (இ)றைசத்தி கொளல்"* - 51

என்று கூறுகின்றது.

நீண்டு வரும் நல்வினை, தீவினைகள் ஆகிய இரண்டையும் சமமாகக் காணுதல், நல்வினைப் பயனால் விளையும் இன்பத்தில் விருப்பமும், தீவினைப்பயனால் விளையும் துன்பத்தில் வெறுப்பும் காட்டாது இரண்டையும் சமமாக, ஒன்றாகக் கருதுதல் இருவினை ஒப்பு எனப்படும்.

பெரியபுராணத்துள் கூறப்பெறும் திருக்கூட்டத்தாரைச் சேக்கிழார் செப்பும்பொழுது,

*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடுஞ் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."*

எனக் கூறுவார்.

நன்மையையும், தீமையையும் ஒன்றாகவே கருதக் கூடியவர்கள் ஓட்டைப் பார்த்த கண்களால் பொன்னைப் பார்ப்பார்கள். பொன்னும், ஓடும் வேறுபாடு தெரியாது ஒன்றாகவே நினைப்பார்கள்.

செம்பொன்னையும் ஓடாகவே நினைப்பார்கள். வீடாகிய முத்தியைக் கூட விரும்பாத வீரர்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியும் இல்லை; கவலையும் இல்லை.

**முடிவுரை**

சேக்கிழார் பிள்ளைத்தமிழில், மீனாட்சி சுந்தரனார் சேக்கிழாரைப்பற்றி,

*"பத்திச் சுவைநனி சொட்டச்*
*சொட்டப் பாடிய கவிவலவ"*

எனப் பாராட்டுவார். பெரியபுராணத்துள் தொட்ட இடமெல்லாம் பத்தி மிளிர்வதைப் போன்று, சைவ சித்தாந்தக் கருத்துக்களும் தொட்ட இடமெல்லாம் பொங்கித் ததும்பி நிற்கின்றன.

சுருங்கக் கூறின், மெய்கண்ட சாத்திர நூல்களுள் கூறப்பெற்ற இலக்கணங்களுக்கெல்லாம் இலக்கியமாகத் திகழ்கின்ற ஒரே நூல் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அடங்கிய பெரியபுராணம் ஆகும்.

# 21. திருமுறைச் சிறப்புகள்

- கி.மஞ்சுளா, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அண்ணாமலை பல்கலைக் கழக மாணவி.*

*"திருமுறையே சைவ நெறிக் கருவூலம் தென் தமிழின் தேன்பா வாகும்*
*திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ்வேதம்*
*திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதிய அருள் தெய்வ நூலாம்*
*திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்"*

என்பது சிதம்பரத்தல தனிப்பாடலாகும்.

திருமுறையே சைவ சமயத்தவருக்கு வேதமாகும்; செந்தமிழ் வேதமாகும். தமிழ் நாட்டில் தமிழ் மொழியிலே பாடப்பெற்ற தேனினும் இனிய தேவார திருவாசகம் இந்தியா முழுவதும் பரவி காச்மீரம் வரை சென்று மக்களுக்கு நன்னெறி காட்டியுள்ளது. இத்திருமுறைகளை அடியொற்றியே மற்ற(பிற) நூல்கள் யாவும் தோன்றின. இத்திருமுறையால் சைவ சமயமே தழைத்தோங்கி நிற்கிறது.

சைவம் சிவத்துடன் சம்பந்தம் ஆவ்து என்பதை திருமூலர்,

*"சைவம் சிவத்துடன் சம்பந்தம் ஆவது*
*சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்*
*சைவம் சிவமன்றிச் சாராமல் நீவுதல்*
*சைவம் சிவானந்தம் சாயுச்சிய மாமே"*

என விளக்குகிறார். சிவத்தைச் சார்ந்து வாழ்வதே சைவ சமய நெறியாகும். இச்சைவ நெறியை உலகிற் பரவச் செய்தவர்கள் நம் திருமுறை அருளாளர்கள்.

அன்பைப் பெற வேண்டுமானால் முதலில் நம்மிடம் அன்புணர்ச்சியும், இரக்க உணர்வும் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அன்பைப் பெறும் தகுதியும் நாம் அன்பு செலுத்தும் தகுதியும் அடைவோம். அப்படிப்பட்ட அன்பு நெஞ்சம் உடையவர்கள் திருமுறைகளை நமக்களித்த அடியார்கள். சிவபெருமானின் அன்பைப் பெற அவர்கள் தங்களை (முக்கரணங்களால்) அன்பாக்கி அவனுக்குப் பாடல் வழி பாமாலை சாற்றி மகிழ்ந்து பேரின்பம் பெற்றார்கள்.

சைவ சமய குரவர் எனப் போற்றப்படும் நால்வரும் (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகப் பெருமான்) சைவ சமய ஆசாரியர்கள் ஆவர்.

ஆசாரியர் என்றால் ஆன்மீக குரு (Spritual Master) என்று பொருள். இவர்கள் நால்வரும் நம் ஆன்மீகப் பாதைக்கு வழி வகுத்துக் கொடுத்த ஆன்மீக குருமார்களாவர். உடலுக்கு இறுதிக் காலத்தில் நால்வர் தேவைப்படுவது போல உயிருக்கு நால்வர் நாம் வாழும் நாட்களில் தேவைப்படுகிறார்கள். அந்நால்வரும் சமய குரவர் நால்வரே.

அந்நால்வர் சிவபரம்பொருளைத் தம் அனுபவத்தில் நேரே கண்டு பேரின்பப் பெருவாழ்வெய்திய சிவஞானிகளாவார்கள். இவர்கள் நால்வரும் நால்வகை மார்க்கங்கள் (தாசமார்க்கம், சத்புத்ர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்) வாயிலாக இறைவனை அடைந்தவர்கள். நாமும் அந்நால்வகை மார்க்கங்கள் வாயிலாகவே இறைவனைப்பற்ற வேண்டும் என அறிவுறுத்தியவர்கள்.

**திருமுறை கண்டது**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என வழங்கும் வழக்கம் பன்னிரண்டாம் திருமுறையாகிய **திருத்தொண்டர் புராணம்** இயற்றப்பட்ட பின்னரே ஏற்பட்டதென்பது உமாபதி சிவாசாரியார் இயற்றிய **சேக்கிழார் புராணத்தால்** நன்கு விளங்கும்.

நம்பியாண்டார் நம்பியின் உதவி பெற்றுத் திருமுறைகளைத் தில்லைத்திருக்கோயிலிற் கண்டு அதை வெளிப்படுத்திய **முதலாம் ஆதித்த சோழ** மன்னனைத் **திருமுறை கண்ட சோழன்** எனப் போற்றுவர்.

அவ்வேந்தர் பெருமானது நன்முயற்சியால் **சைவத் திருமுறைகள்** தேடித் தொகுக்கப்பட்ட வரலாற்றை விரித்துக் கூறும் நூல் **திருமுறைகண்ட புராணமாகும்**. இதனை இயற்றியவர் **சைவ சித்தாந்த சந்தான குரவருள்** ஒருவராகிய கொற்றவன்குடி **உமாபதி சிவாச்சாரியார்** என்பது தொன்றுதொட்டு வழங்கிவரும் செவிவழிச் செய்தியாகும்.

திருமுறைகளை மீட்டுத் தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பிகள் ஆற்றிய சமயத்தொண்டு போற்றுதற்குரியது. இவருக்குத் துணைபுரிந்து இத்தொண்டில் ஈடுபட்ட முதல் ஆதித்தசோழனுக்கு சைவ சமயமே மிகுந்த கடமைப்பட்டுள்ளது.

திருமுறைப் பாடல்கள் அனைத்தும் இறைவன் வாய்மொழியாகும்.

"வண்டமிழால் "எழுதுமறை" மொழிந்தபிரான்" என்பதை திருநாவுக்கரசர் புராணத்தில் 180-வது பாடல் குறிப்பிடுகிறது.

சிவபெருமான் தமிழ் வேதமாகிய திருமுறைகளை அவனடியார்கள் மூலம் அருளிச்செய்தான். இதனால் திருமுறைகள் "**அருள்வாக்கு**" என்று கூறப்படுகிறது.

இவ்வுண்மையை, சம்பந்தர் வாக்கு

*"எனதுரை தனதுரையாக"* (1-76-1)

என்பதின் மூலம் தெளிவாக்குகிறது.

**பிரணவத்தில் திருமுறைகள்**

வேதங்கள் அனைத்தும் பிரணவத்துள் அடங்கும். அவ்வாறு நமக்குக் கிடைத்த பன்னிரு திருமுறையின் முதல் பாடல் "தோடு" என்னும் சொல்லுடன் தொடங்கி, இறுதிப்பாடல் "உலகெலாம்" என்னும் சொல்லுடன் முடிந்திருக்கிறது. "தோடு" என்பதில் முதல் எழுத்து "ஓ". "உலகெலாம்" என்பதில் உள்ள இறுதி (ஈற்றெழுத்து) எழுத்து "ம்" ஆகும் ("ஓம்"). இதிலிருந்து திருமுறையே சைவ சமயத்தவர்களின் தமிழ் வேதம் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் தெள்ளத் தெளிவாகிறது.

திருமுறையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றலை உடையது. இறைவன் (ஓம் எனும் பிரணவ) மந்திரவடிவாக உள்ளான். **திருமுறைகள் மந்திரங்களே** என்னும் உண்மை **திருமுறைகண்ட புராணத்தில்,**

*"மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்*
*இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து*
*பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்*
*அந்தமுறை நான்கினொடு முறை பதினொன்று ஆக்கினார்"*

என்று உமாபதி சிவம் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்.

முன்பு ஆலயங்களில் திருமுறைகளை ஓதியே இறைவனை வழிபாடு செய்துள்ளனர். திருமுறையே இறைவனுக்கு உகந்த மந்திரங்களாகும்.

**தேவாரம்**

மூவர் திருப்பதிகங்களைத் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) தேவாரம் என வழக்கம் இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில்தான் முதன்முதலிற் காணப்படுகின்றது:

*"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்*
*தேவாரஞ் செய்த திருப்பாட்டாகும்"*

என்பது அவ்வுலாவிலுள்ள தொடராகும்.

மூவர் திருப்பதிகங்களையும் தேவாரம் என்ற பெயரால் முதலில் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கியவர் சைவ எல்லப்ப நாவலராவார். இவர், தாம் பாடிய திருவருணைக் கலம்பகத்தில் சைவ சமயகுரவர் நால்வரையும் போற்றும் காப்புச் செய்யுளில்,

***"நான் மறை செம்பொருள்***
***வாய்மை வைத்த சீர் திருத்***
***தேவராமும், திருவாசகமும்***
***உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள்***
***எம் உயிர்த் துணையே"***

எனப் பாடித் தெளிவுப்படுத்தியுள்ளார்.

தேவாரம் என்பதற்கு அறிஞர்கள் பலரும் பலவிதமாகப் பொருள் கொள்வர்.

தே + ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையானது எனப்பொருள் கூறுவர் சிலர்.

தே + வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தினிடத்து அன்பைவிளைவிப்பது எனப் பொருள் கூறுவார் சிலர்.

"வாரமாகித் திருவருளுக்குப் பணி செய்தொண்டர் பெறுதென்னே" என வரும் சுந்தரமூர்த்தி பதிகத்தில் வாரம் என்னும் சொல் இறைவன்பால் மெய்யன்பர்கள் வைத்த பேரன்பு என்னும் பொருளில் வழங்கப் பெறுவது இங்குக் கருதத்தக்கதாகும். வாரம் பாடுதல் என்பது இசைப் பாடலாற் கடவுளைப் போற்றிப் பாடுதல் என்ற பொருளில் கடைச்சங்க காலத்திலிருந்து வழங்கி வந்துள்ளது.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில்,

*"தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்*
*சீரியல் பொலிய நீரல நீங்க*
*வாரம் இரண்டும் வரிசையிற் பாட"*

என வரும் தொடர்க்கு, ஆடிமுதிர்ந்தாராகிய மகளிர் நன்மை உண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப் பாடல் பாட என அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறியுள்ளனர். எனவே இத்தொடரில் வந்த 'வாரம்' என்ற சொல் தெய்வப்பாடல் என்ற பொருளில் இளங்கோவடிகளால் எடுத்தாளப்பட்டுள்ளது விளங்கும்.

**திருமுறைப் பயன்**

திருமுறைகளை அருளிச் செய்த அருளாளர்கள் கூறியுள்ளவாறு இப்பதிகங்களை பாராயணம் செய்தால் வரும் பயன்கள் எண்ணிலடங்காதவை.

துன்பங்கள் அனைத்தும் விலகும் என்பதை,

*"நல்ல கேள்வி ஞான சம்பந்தன்*
*செல்வர் சேடர் உறையும் திருப்புத்தூர்ச்*
*சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்*
*அல்லல் தீரும் அவலம் அடையாவே"* - (1-26-11)

எனச் செந்தமிழ் வேதமாகிய இப்பதிகங்களைப்பாடுபவர்கள் துன்பம் தீரும். அவர்களுக்கு வறுமையும் வந்து சேராது என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்.

**துன்பம் பாவம் விலகும்**

*"மறை ஞான சம்பந்தன் தன்னுரை செய்த*
*நிகரில்லன தமிழ் மாலைகள்*
*இசையோடு இவை பத்தும்*
*பகரும் அடியவர்கட்கு இடர்*
*பாவம் அடையாவே"* (1-12-11)

என முன்வினைப் பயனால் வந்த துன்பமும் இப்பிறவியில் ஏற்படும் பாவமும் அழியும் என்றும்,

*அத்தன் பாதம் அணி ஞானசம்பந்தன்*
*பத்தும் பாடப் பறையும் பாவமே (1-29-11)*

எனத் தெளிவுபடுத்துகின்றார்.

**தேவர்களும் சிறப்பிப்பர்**

*"விண்ணவர் விமானம் கொடுவர ஏறி*
*வியன் உலகு ஆண்டு வீற்று இருப்பவர் தாமே" (1-75-11)*

தமிழ் வேதமாகிய திருமுறைகளைப் பக்தியோடும் முடிந்தால் பண்ணோடும் ஒருமைப்பட்ட மனத்தோடு தினமும் பாடிப்பரவுபவர்களைத் தேவர்கள் விமானம் கொண்டுவந்து ஏற்றிச் செல்வர். அத்தனை சிறப்புடையது நம் திருமுறைகளாகும்.

மேலும், கல்வி, செல்வம், புகழ், வீரம், போன்றவை வந்தடையும். பெறுதற்கரிய பேறுகளைப் பெறலாம். இப்பிறப்பில் செல்வமும், மறுமையில் சிவகதியும் அடையலாம். அவர்கள் செல்லும் இடமெல்லாம் புனிதமாகும். சிவபெருமானோடு பொருந்தி ஆனந்தம் பெறலாம். இவ்வாறு கூறப்பட்டவை அனைத்தும் திருமுறை பாராயணம் செய்வதால் மட்டுமே பெறமுடியும் என்பது உண்மை.

திருமுறைப்பதிகங்களைப் பாடுவதே பெருந்தவமாகும் என்பதை,

*ஞான சம்பந்தன் சொல்லிவைப்*
*பத்தும் பாடத் தவமாமே (2-51-11)*

*சக்கரஞ்சீர்த் தமிழ் விரகன் தான்சொன்ன*
*தமிழ் தரிப்போர் தவஞ்செய்தோரே (2-73-11)*

என அடியார்கள் இப்பதிகங்களைப் பாடினாலே போதும், வேறு தவம் செய்ய வேண்டாம். இதுவே பெருந்தவமாகும் என்கிறார் சம்பந்தர்.

சைவ சமயத்தார்கள் தமிழ் வேதமாகிய திருமுறைகளை வாயாரப் பாடித் துதிப்பதையே வழிபாடாக செய்து வந்திருக்கின்றனர். ஆனால் படிக்க இயலாத, படிப்பறிவு சிறிதும் இல்லாத பாமர மக்களும் இத்திருமுறையால் வீட்டின்பம் அடையமுடியும் என்று கூறப்பட்டுள்ளது.

*"காழிந்நகர்க் கலை ஞான சம்பந்தன் தமிழ்பத்தும்*
*யாழின் இசை வல்லார் சொலக் கேட்டார் அவர் எல்லாம்*
*ஊழின் மலி வினை போயிட உயர் வான் அடைவாரே"*

என காதால் கேட்பவர் தங்கள் வினை ஒழிந்து பேரின்பமாகிய வீட்டின்பத்தை அடைவர் என்கிறார். மேலும், பிறவாத் தன்மையும் அடையாலம் என்கிறார்.

*"வல்லார்க்கு எளிதாம் பிறவா வகை வீடே"*

என்பது அப்பாடல்.

# 22. தாயுமானார் போற்றும் அருளாளர்கள்

- பேராசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி,
*அனைத்துலக சைவ சித்தாந்த நிறுவனம், தருமபுர ஆதினம், தருமபுரம்*

18ஆம் நூற்றாண்டு செய்த அருந்தவப் பயனாகத் தோன்றியவர் தாயுமானாராவர். திருமறைக்காட்டில் தோன்றிய இவர் திருச்சிராப்பள்ளியில் பணியாற்றி வந்தார். மௌனகுருவின் அருள்பெற்ற இவர், தம்மை மறந்து, தம்பணியையும் மறந்து, குருவருளால் திருவருளில் திளைத்து நிற்கலாயினர். அந்நிலையில் நின்று அருளிய பாடல்கள் பலவாம். அவற்றுள் அருளாளர்களின் அருள்வாக்கில் திளைத்து நிற்கும் திறத்தை ஈண்டு காண்போம்.

திருமுறை ஆசிரியர்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கி வழிபட்ட அருளாளர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவருமாவர். இவர்களுள், திருஞானசம்பந்தரைச் சீர்காழியிலும், திருநாவுக்கரசரைத் திருவதிகை வீரட்டானத்திலும், சுந்தரரைத் திருவெண்ணெய் நல்லூரிலுமாக இறைவன் ஆட்கொண்டமையைப் பெரிய புராணத்தால் அறிகிறோம். இவ்வருமையை நினைந்தவாறு,

*"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கு ஓர்*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

என்றருளுகின்றார் தாயுமானார். இனி இவர்கள் அருளிய அருட்பாக்களின் சுவையை

*"தேவர்எலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்*
*செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப் பாக*
*மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே*
*மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்?"*

எனவரும் திருவாக்கால் அருளிச் செய்கின்றார். இவ்வாறு பொதுவாகப் போற்றி மகிழ்ந்த தாயுமானார் சிறப்பாகவும் அவர்களைப் போற்றி மகிழ்கின்றார்.

**திருஞானசம்பந்தர்**

*வெம்பந்தம் தீர்த்து உலகாள் வேந்தன் திருஞான*
*சம்பந் தனைஅருளால் சாருநாள் எந்நாளோ.*

**திருநாவுக்கரசர்**

1. *ஏரின் சிவபோகம் இங்குஇவற்கே என்னஉழ*
*வாரம்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்பது எந்நாளோ.*

2. 'இருநிலனாய்த் தீயாகி' என்றதிருப் பாட்டின்
பெருநிலையைக் கண்டுஅணைந்து பேச்சு அறுவது எந்நாளோ.

3. அற்றவர்கட்கு அற்றசிவன் ஆம்என்ற அத்வைத
முற்றுமொழி கண்டுஅருளில் மூழ்குநாள் எந்நாளோ.

இவற்றுள் முன்னையது அப்பரடிகளின் வாழ்வையும், பின்னைய இரு பாடல்கள் அவர்தம் திருவாக்கையும் முகந்து நிற்கின்றன.

**சுந்தரர்:**

1. 'தான்என்னை முன்படைத்தான்' என்ற தகவுரையை
நான்என்னா உண்மைபெற்று நாம் உணர்வது எந்நாளோ.

2. 'என்னுடைய தோழனுமாய்' என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுஉரிமை நாம்செய்வது எந்நாளோ.

3. அடியிட்ட செந்தமிழின் அருமையிட்டு ஆரூரின்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந்து அருள்அடிகள் அடிசுதுமுடிசுது என
வடியிட்ட மறைதேவ பச்சிளங் கிள்ளையே வளம்மருவு தேவ அரசே
வனராசனுக்கு இருகண்மணியாய் உதித்தமலை வளர்காதலிப் பெண் உமையே.

4. பித்தர்இறை என்றறிந்து பேதைபால் தூதுனுப்பும்
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ.

இவற்றுள் முன்னைய இருதிருவாக்குகளும் சுந்தரின் அருள்வாக்குகளையும், பின்னைய இருண்டும் இறைவனைத் தூதுவிட்ட வரலாற்றையும் குறிக்கின்றன.

**மணிவாசகர்:**

1. வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூர் ஏறேநின் பொன்அடியும் காண்பேனோ.

2. சென்றுசென்றே அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாகி
நின்றுவிடும் என்றநெறி நிற்குநாள் எந்நாளோ.

3. ஆதியந்த மில்லா அரியபரஞ் சோதிஎன்ற
நீதிமொழி கண்டுஅதுவாய் நிற்குநாள் எந்நாளோ.

4. போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ.

இந்நான்கு திருவாக்குகளுள், முன்னையது மணிவாசகரின் திருவடிமலர்களைக் காண்டற்குரிய வேட்கையையும், அடுத்த மூன்று திருவாக்குளும், அப்பெருமான் அருளிய

திருவாக்குகளின் வண்ணம் தாம் நிற்கும்நாள் எந்நாளோ? என்ற அவர்தம் வேட்கையையும் காட்டி மகிழ்விக்கின்றன.

**திருத்தொண்டர் புராணத்துக் காணும் அடியவர்களின் அருட் செயல்களில் திளைத்தல்:**

1. கல்லால் எறிந்தும்கை வில்லால் அடித்தும், கனிமதுரச்
சொல்லால் துதித்தும், நல் பச்சிலை தூவியும், தொண்டர்இனம்
எல்லாம் பிழைத்தனர்; அன்புஅற்ற நான்இனி ஏதுசெய்வேன்;
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கண் குருமணியே!

2. நாள்தோறும் சிவலிங்கம் கண்டு உண்ணும் அதுநயந்து
மாடோர் வெள்ளிடை மன்னும் சிவலிங்கம் கண்டுமனம்
நீடு ஒரு களிஉவகை நிலைமை வரச் செயல் அறியார்
பாடோர்கல் கண்டு அதனைப் பதைப்போடும் எடுத்து எறிந்தார்.

3. அகம் நிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால்
மகவு மகிழ்ந்து உவப்பார்கள் வன்மைபுரி செயலினால்,
இகழ்வனவே செய்தாலும் இனம்புதல்வர்க்கு இன்பமே
நிகழும் அதுபோல் அதற்கு நீள்சடையார் தவம் மகிழ்ந்தார்.

4. கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும் திருமுடியில் மேவிற்றால்,
நல்வார் மற்றுஅவர் செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல் என்பர் அரனார்க்கு அஃது அலராமால்.

சாக்கியர், கண்ணப்பர் ஆகியோரின் அருஞ்செயல்களை அன்பு மீதூர இறைவன் ஏற்றருளியமையை இதனால் அறியலாம்.

"தந்தைஇரு தாள்துணித்துத் தம்பிரான் தாள்சேர்ந்த
எந்தைஇரு தாள்இணங்கே இன்புறுவதே எந்நாளோ"

எனச் சண்டிகேசுவரரின் பத்திமையையும் விளக்குதல் நினைவு கூரத்தகும்.

**நிறைவுரை:**

"கல்லாதேன் ஆனாலும் கற்றுஉணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே."

எனவரும் திருவாக்கை நினைவுகூர்ந்து நிறைவு காணலாம்.

# 23. தாயுமானவர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துகள்

- பேராசிரியர் சு. ந. சொக்கலிங்கம் எம்.ஏ.,
*முன்னாள் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.*

என்றும்போல் அன்றும் காலைக் கதிரவனின் கதிரொளி விண்ணில் விரைந்து படர்கின்றது. பறவைகளின் இன்னிசை எங்கும் ஒலிக்கின்றது. மரம், செடி, கொடிகளின் இலைகள் அசைந்து பளபளக்கின்றன. பூத்துக் குலுங்கும் மலர்கள், இதழ்களை அவிழ்த்து இனிய மணத்தை எங்கும் பரப்புகின்றன. மெல்லென வீசும் இளங்காற்று தன் பட்டுப் போர்வையால் உயிரினங்களை அன்புடன் அணைக்கின்றது. கடலிலிருந்து கட்டுமரங்கள் கரையை நோக்கி அசைந்து வருகின்றன. இரவு சென்று காலையில் மீளும் கட்டுமர மீனவர்களின் உறவினர்கள், அவர்களை வரவேற்கக் காத்துள்ளனர். எங்கும் இனிய சூழல்...

கண் இமைக்கும் பொழுது.. எல்லாம் தலை கீழாக மாறிவிடுகின்றது. கடல் அலைகள் ஒட்டகங்களாய், யானைகளாய், பனைமரங்களாய் உயர்ந்து எழுகின்றன. கரையை நோக்கிச் சீறிப் பாய்கின்றன. கரையிலிருந்து அவை மீளும்போது கரையில் எதுவுமில்லை. மக்கள், உடைமைகள் அனைத்தும் ஆழிப்பேரலைகளின் அகோரப் பசிக்கு இரையாகிவிடுகின்றன. கடற்கரையோரம் பொலிவுடன் காட்சி தந்த வீடுகள், இருந்த இடம் தெரியவில்லை; தரைமட்டமாகி விடுகின்றது. ஆழிப்பேரலையின் கொடுமையை இந்தோனேஷியா, இலங்கை, தாய்லாந்து, அந்தமான் தீவுகள், தமிழகம் என ் பல இடங்கள் எதிர்கொண்டன. அழகும் இன்பமும் கணநேரத்தில் அவலமும் அழுகையுமாக மாறிவிடுகின்றன. வாழ்வின் ஒவ்வொரு கூறும் நிலையற்றது; வேறுபடுவது; மடிவது என்பதை இயற்கைச் சீற்றம் மனிதனுக்குக் கற்பிக்கிறது. இறைவன், உயிர்களை மாயையில் ஒடுக்குகிறான். பின்னர் அவ்வவற்றின் நிலைகளுக்கு ஏற்பத் தோற்றுவிக்கிறான். இது சைவ சித்தாந்தக் கோட்பாடு. வேதாந்தக் கொள்கையை அறிந்திருக்கும் நமக்கு இது முற்றிலும் மாறுபட்ட கொள்கையாகத் தெரிகிறது. சைவ சித்தாந்தத்தின் சீரிய உண்மையை நாம் அறிந்து கொள்வது இன்றைய சூழ்நிலைக்கு மிகவும் இன்றியமையாதது.

பௌத்தமும் சமணமும் தனித்தியங்கும் சமயங்கள். சைவ சமயம், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டது. இது உலகில் உள்ள சமயங்கள் எல்லாவற்றையும்விடப பழமையும் சிறப்பும் மிக்கது எனக்கருதப்படுகின்றது. இதன் தொன்மையையும் மாண்பினையும் வரலாறுகளின் வாயிலாகவும் சமய நூல்களின் மூலமாகவும் இலக்கியங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வு ஆய்வுகளின் அடிப்படையில் சர். ஜான் மார்ஷல் சைவ சமயத்தை உலகில் மிகவும் பழமையான சமயம் (The most ancient living faith in the world) என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

சமய முறையில் நோக்கினால், சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் இச்சமயத்தைக் குறித்து விரிவாகவும் திட்பமாகவும் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் "என்னுடைய சொல் அவன் சொல்லே" என்று குறிப்பிட்டிருப்பதால் இதன் இறைத்தன்மை புலப்படுகின்றது.

இலக்கண, இலக்கிய முறைகளை நோக்கினால் தொல்காப்பியத்தில் காணப்படும் உயிர், மெய், வினை போன்ற சொற்கள் சைவ சித்தாந்தத்தில் காணப்படும் சொற்களோடு ஒன்றியுள்ளன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிவநடனம், பஞ்சாட்சரம், சிவனுடைய குணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. மணிமேகலையில் சிவனுடைய அட்ட மூர்த்தங்களைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

'சிவன்' என்னும் சொல்லுக்குத் தமிழில் செம்மை என்பது பொருள். சிவன் என்னும் சொல்லுக்கு வடமொழியில் மங்கலம் என்பது பொருள் என்று பேரறிஞர் மறைமலையடிகளார் கூறக் கேட்டுள்ளேன்.

பன்னிரு திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சைவத்தின் அடிப்படை நூல்களாகும்.

உலகம் யாவும் போற்றும் ஒரு முதல்வனின் பொதுத் தன்மைகளை இன்சுவை ததும்பும் பாடல்கள் வாயிலாகத் தெளிவுறுத்திய பாவலர் தாயுமானவர். உயர்ந்த பேரின்ப நிலை ஒன்றினையே விழைந்து செயல்படும் உயிரின் தன்மையைத் தன்னிலை முகத்தான் அவர் விளக்கிக் கூறியுள்ளார். மனம் மாயையின் நுட்பங்களையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிவானுபூதிப் பெருஞ்செல்வராகிய தாயுமானவர், எவ்வுயிரினையும் தம்முயிர்போல் எண்ணி இரங்கும் அருளொழுக்கம் கொண்ட செம்மனச் செம்மல். வடமொழி நூற்கடலையும் தமிழ்நூற்கடலையும் நிலைகண்டுணர்ந்த பேரறிவாளர். மூவர் தேவாரத்தின் இணையற்ற தீஞ்சுவையையும் மணிவாசகப் பெருமானின் திருவாசகக் கனியையும் நுகர்ந்த தகைமையாளர். அற ஒழுக்கத்திலும் அருள் ஒழுக்கத்திலும் தலைநின்று திருவருட்பதிவுநிலை எய்தியவர். அவருடைய தத்துவநெறிக் கருத்துகள் சிலவற்றை நோக்குவோம்.

*'சன்னல் பின்னலான சகலம்எனும் குப்பையிடை*
*முன்னவன் ஞானக்கனலை மூட்டும்நாள் எந்நாளோ?'*

என்பது அவர் வாக்கு.

"ஆன்மா தத்துவங்களுடன் கூடிக் காரியப்பட்டுப் பின்னிக்கொண்டு கிடக்கிற சகலாவத்தையெனும் விஷயகுப்பையில் மூல காரணமாகிய சிவபெருமான் ஞானாக்கினியை மூட்டுவிப்பது எந்தநாளோ?" என அவர் வினவுகின்றார்.

ஆன்மா நிஜமற்ற தன்மையோடு, கனவு நிலையில் பிணைந்து கொள்கின்றது அல்லது இல்லாமற் போகின்றது. மனத்தின் ஆற்றலும் அதற்கு ஏற்பக் குறைவுபடலாம்; செயலற்றும் போய்விடலாம். அஞ்ஞானம், மனத்தையும் ஆன்மாவையும் சூழ்கிறது. அஞ்ஞானம் என்னும் இருள், புற இருளைவிடக் கொடியது. ஏனென்றால் புற இருள் பிற பொருள்களைக் காணவொட்டாது தடுக்கும். ஆனால் தன் இருப்பைப் புலப்படுத்தும். இந்த ஆணவ மலமானது பிறபொருள்களின்

தன்மையை மறைப்பதுடன் தனது இருப்பையும் மறைத்துவிடுகின்றது. எனவே இஃது இருளினும் கொடியது. அஞ்ஞானத்தின் இச்சக்தி (ஆணவம்) 'ஆவாராக சக்தி' எனப்படும்.

சகலம் என்பது ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களுடன் செயல்படுவதைக் குறிக்கும். அவத்தை என்பது இந்த ஆன்மா கனவு நிலையில் நிஜமற்ற தன்மையில் இருப்பதால் அதன் ஆற்றல் குறைந்தோ நீங்கியோ உள்ள தன்மையாகும்.

முன்னவன் ஞான அக்னியை முட்டினால்தான் சகலாவத்தை நீங்கும். தன்னுடைய ஒழுக்கத்தாலும், மனத்தூய்மையாலும் இந்தச் சகலாவத்தையை நீக்கிவிடுவது எளிதன்று. ஆகவே முக்கண்ணனின் ஞான அக்னியால் மட்டுமே இதனை அகற்ற இயலும். இக்கருத்தே தாயுமானவரின் மையக்கருத்தாகும். கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருளாக இருக்குமானால், அவை ஒன்றாக வேண்டியதில்லை. முக்தியில் அவ்விரண்டும் வேறுவேறாக நிற்குமானால் ஆன்மாவிற்குப் பேரின்பம் உண்டாகாது. எனவே முக்தி நிலையில் அவை இரண்டும் வேறுஅற நிற்பதால் ஒருபொருளுமல்ல, இரு பொருளுமல்ல.

சிவஞானசித்தியாரும்,

*'........... இரண்டும்*
*அணைந்தாலும் ஒன்றாகாது'*

அந்நியமாக இருக்கும் என்று கூறுகின்றது.

மாணிக்கத்தை அடுத்துள்ள பளிங்கு, அதன் வண்ணமாய் நிற்றல்பற்றி மாணிக்கத்துடன் அதனை ஒப்பிட்டுக் கூறுதல் பொருந்தும். ஆயினும், இதனால் மாணிக்கத்திற்குப் பளிங்கு ஒப்பெனல் பொருந்தாது. இவ்வாறே, ஆன்மாவை முழுமுதலுக்கு ஒப்பு என்று ஒருவகையில் சொன்னாலும் முழுமுதல், ஆன்மாவுக்கு ஒப்பு என்று கூற இயலாது.

ஆன்மா உலகின் தளையோடு இருக்கும்போது ஆணவத்தின் வயப்பட்டு நிற்றலால், கடவுளின் கலப்பால் வரும் பயனாகிய முக்தி இன்பத்தை அனுபவிப்பதில்லை.

ஆன்மா, முக்திநிலையில் சிவத்தில் கலக்கும்போது சிவத்தின் வேறுஅற நின்று, சிவத்தின் அடிமையாகச் சிவமே ஆகி நிற்கும். ஒத்த நிலையில் ஆணவத்தோடு ஆன்மா அத்துவிதமாக நின்றாலும், பொருள் வகையில் ஆணவம் வேறு; ஆன்மா வேறு எனவே உள்ளன.

*'நன்றெனவும் தீதெனவும் எனக்கு இங்கு உண்டோ?*
*நானாகி நீயிருந்த நியாயம் சற்றே*
*இன்றெனக்கு வெளியானால் எல்லாம் வல்ல*
*இறைவா! நின் அடியாருடன் இருந்து வாழ்வேன்!' (கல்லாலின்.6)*

நன்மை என்றும் தீமை என்றும் அடியேனுக்கு இவ்வுலகில் உண்டோ? நீ, நானாயிருந்த நியாயமானது இப்பொழுது அடியேனுக்குச் சிறிது தெரிந்தால், எல்லாம் செய்யவல்ல இறைவனே! தேவரீரது அடியாரோடு இருந்து சுகஜீவியாக ஆவேன்.'

'நான்' 'நீ'யாவது என்பது ஏற்றுக்கொள்ள இயலாத கருத்து. ஆனால், அதை நியாயப்படுத்தும் வகையில் அத்வைதத்தின் முழுவிளக்கம் என்ன என்பதை வெளிப்படுத்தி நான் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தால் உன் அடியார் கூட்டத்தில் சேர்ந்து விடுவேன்.

யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவர் உள்ளனர்.

*'சொல்லுக்கு அடங்காச் சுகப்பொருளே நாமெனவே*
*அல்லும் பகலும் அரற்றுவதென்? நல்லசிவ*
*ஞானமயம் பெற்றோர்கள் நாம்இல்லை என்பர் அந்தோ!*
*மோனமய மான முறை'* (உடல் பொய்யுறவு - 25)

வாக்கினுக்கு எட்டாத இன்பமயமான முதல்வனை ஆன்மாக்களாகிய நாமே என்று இரவிலும் பகலிலும் பிதற்றுவது எதற்கு? நல்ல சிவஞான மயத்தினை அடைந்த அன்பர்கள், முதல்வனுக்கு அன்னியமாக நாம் நிற்பதில்லை என்று சொல்லுவர். ஐயோ! மவுனத் தன்மையான முறைமை இதுவேயாகும்.

தாயுமானவர் அத்வைதக் கருத்துக்கு உடன்படவில்லை. அத்வைதக் கருத்தின்படி ஆன்மாவும் பரமாத்மாவும் கலத்தல், பால் பாலோடு கலத்தலும், நீர் நீரோடு கல்த்தலும் எண்ணெய் எண்ணெயோடு கலத்தலும் போன்றதாகும். அத்வைதத்தில் ஆன்மா தனது தனித்தன்மையை இழக்கிறது. சித்தாந்தக் கருத்தின்படி ஆன்மா தன் தனித்தன்மையைத் தக்க வைத்துக்கொள்கின்றது. இது எவ்வாறெனில் நீர், எண்ணெயில் சேர்க்கப்பட்டால் நீரும் எண்ணெயும் தனித்திருக்கும். கலப்பதில்லை. அதுபோல் ஆன்மாவும் சிவனும் கட்டு நிலையில் மறந்து, தொடர்பை இடையீடின்றி உணர்ந்து, தனித்து நிற்றலே இரண்டறக் கலத்தல் என்பதன் உண்மையான பொருளாகும்.

'காணும் தன்மையுடைய கண்ணுக்கு, உயிர் அதனுடன் கலந்து நின்று உணர்த்துவதுபோல உயிருடன் கலந்து காட்டியும், கண்டும் இறைவன் உதவுவதை எண்ணும் உயிர், மறவாத அன்பினால் இறைவன் திருவடிகளைப்பற்றி நிற்கும்' என்பது சிவஞானபோதம் பதினொன்றாம் சூத்திரத்தில் கூறப்பெறுகிறது. இறைவனுக்கு அன்புடைமை, அவன் அடியாரிடத்தும், எவ்வுயிரிடத்தும் அன்பாய் இருத்தலுடன் இணைந்து நிற்பது என்பது உளங்கொள்ளத் தக்கதாம்.

*'நித்திரையாய் வந்து நினைவழிக்கும் கேவலமாய்*
*சத்துருவை வெல்லும் சமர்த்தறிவது எந்நாளோ?'*

சுழுத்தியினைப்போல் (ஆணவமலம்) அடைந்து அறிவை மயக்கும் (தத்துவங்கள் ஒன்றையும் ஆன்மா கூடாது இருப்பதாகிய) கேவலாவத்தையான சத்துருவினை வெல்லும் வல்லமை உண்டாவது எந்நாளோ?

ஆன்மாக்கள், உடல், பொறிகள் முதலியவற்றின் தொடர்பின்றி அறிவு, செயல், விழைவு ஆகியவை இன்றி, நீண்ட உறக்க நிலையில் இருக்கும்போது, ஆணவ மலத்தினால் (அஞ்ஞானத்தினால்) முழுவதும் கவரப்பெறுகின்றன. ஆன்மா, கருவிகளின் தொடர்பின்றித் தனித்திருத்தல் என்பது கேவலாவத்தை எனப்படும். இந்த எதிரியை நான் வெல்லக்கூடிய வல்லமையைத் தாங்கள் தருவது எந்நாளோ?

மனிதன் கடவுளால் கலக்கப்பட்ட ஒரு கலவை. உடல், உறுப்பு, மனம், அறிவு, முக்குணங்கள் ஆகியவற்றின் சேர்க்கையே ஆவான். சைவ சித்தாந்தத்தில் ஆணவம் என்பது வேறு. மாயை என்பது வேறு. மாயை உயிரின் விழைவு; அறிவு ஆற்றல்களை எழுப்புவது அன்றி மறைப்பதில்லை. கட்டு நிலையில் உடலில் பொருந்தினால்தான் இவை தொழிற்படுகின்றன. ஆணவம் அறிவை

மறைத்தாலும் மாயையினால் அறிவு, செயலாற்றல், விழைவு என்பவை உண்டாகும். அவை செவ்வையாக வெளிப்படாமல் தடுத்து நிற்பதே ஆணவம் என்பது சித்தாந்தம். மாயையைக் கொண்டு ஆணவத்தை எப்படிப் போக்குவது? சாணம், உவர்மண் ஆகிய அழுக்குப் பொருள்களைக் கொண்டு ஆடைகளில் உள்ள அழுக்கைப் போக்குவதுபோல, இறைவன் மாயையைக் கொண்டு மூல மலத்தைப் போக்குவான். ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களை முறையே உமி, தவிடு, முளை ஆகியவைகளுக்கு ஒப்பாகக் கூறுவது சித்தாந்த மரபு.

*'கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா ஆனந்தம்*
*மடுத்தோர் அடுத்த பொருட்கு ஆர்வம்வைப்ப தெந்நாளோ?'*

பசுத் தன்மையை அழித்து, அழிவில்லாத சிவானந்தம் உண்டோர் அடைந்த (சிவமாகிய) பொருளை அடைதற்பொருட்டு, அதனிடத்தில் நான் ஆசை வைப்பது எந்நாளோ?

மூவகை ஆன்மாக்கள் உண்டு. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தையுடைய சகலர் மும்மலங்களுள் ஒன்றாகிய மாயை நீங்கி ஆணவம், கன்மம் என்னும் இருமலங்களையுடைய பிரளயாகலர், மாயையும், கன்மமும் இன்றி ஆணவமாகிய ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர். ஆணவ மலசக்திகள் விஞ்ஞானகலரில் சூக்குமமாகவும் பிரளயாகலரில் தூலமாகவும் சகலரில் தூலதரமாயும் நிற்கின்றன.

*ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்தைத்*
*தாணுவினோடு அத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ?*

ஆணவமே ஆகாமலும், ஆணவத்திற்கு அன்னிய மாகாமலும் ஆணவத்துடன் இரண்டறக் கலந்தாற்போல, இறைவனே ஆகாமலும் இறைவனுக்கு அன்னியமாகாமலும் மெய்ஞ்ஞான இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நாள் எந்நாளோ? இது அத்துவித உண்மையினை நன்கு விளக்கியதாகும்.

ஆணவ உணர்வு உயிரறிவில் பரவியுள்ளதால், அஞ்ஞானமாகிய இருள் ஒருவரிடம் உள்ளது எனலாம். உண்மையான அறிவுநிலை - அஞ்ஞான இருளற்றநிலை ஆன்மாவில் அமிழ்ந்துள்ளமையால், ஆணவ மலம் ஒருவரிடம் இல்லை எனலாம். ஆகவே அஞ்ஞானம் இருப்பதும் இல்லையென்பதும் ஒப்பு நிலையே ஆகும்.

*'வைத்திடும் காலைப் பிடித்துக் கண்ணின் மார்பில்*
*வைத்தணைத்துக் கொண்டு கையால் வளைத்துக் கட்டிச்*
*சித்தமிசைப் புகஇருத்திப் பிடித்துக் கொண்டு*
*தியக்கமற இன்பசுகஞ் சேர்வ தென்றோ?' (கல்ஆலின். 5)*

என் தலைமீது வைக்கும் திருவடிகளைப் பிடித்துக் கண்களிலும் மார்பிலும் வைத்துத் தழுவிக்கொண்டு கைகளால் வளைத்துக்கட்டி நெஞ்சினில் பொருந்த இருத்திப் பற்றி, மயக்கமில்லாமல் பேரின்பச் சுகத்தை அடைவது எக்காலமோ?

தவங்கிடந்து பெற்ற பிள்ளையைத் தாய் தழுவி, ஆலிங்கனம் செய்து, முத்தமிட்டு, உச்சிமோந்து இன்பம் அடைவதுபோல் பலபிறவிகளில் செய்த புண்ணியத்தால் கிடைத்த அரிய திருவடியை அங்ஙனம் செய்து ஆனந்திப்பது என்றோ? எனக்கேட்பதுபோல் இன்பசுகம் சேர்வது என்றோ? என்றார்.

பின்வரும் தாயுமானவரின் பாடல் கடவுட் காட்சியின் மாட்சியைப் புலப்படுத்துவதாகத் திரு.வி.க. அவர்கள் தனிநூல் ஒன்றை இயற்றியுள்ளார்:

*'ஐவகை எனும் பூதம் ஆதியை வகுத்து அசரசர பேதம் ஆன*
*யாவையும் வகுத்துநல் அறிவையும் வகுத்துமறை ஆதி நூலையும் வகுத்துச்*

*சைவமுதல் ஆம் அளவில் சமயமும் வகுத்துமேல் சமயம் கடந்த மோன*
*சமரசம் வகுத்த நீ உன்னைநான் அணுகவும் தண்ணருள் வகுக்க இலையோ?*

*பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே! பொய்யிலா மெய்யர் அறிவில்*
*போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப் போக்கு வரவு அற்ற பொருளே!*

*தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே சித்தாந்த முக்தி முதலே!*
*சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே! சின்மயானந்த குருவே!*

*(சின்மயானந்த குரு:17)*

தாயுமானவர் பாடல்களில் பக்திச்சுவை மிகுந்து காணப்படுவதுடன், மெய்ப்பொருட்சிந்தனையும் மிகுந்துள்ள நிலையைக் காண்கிறோம். மெய்ப்பொருட் சிந்தனையாம் ஞானநெறியை எளிமைப்படுத்தியது அவரது தனிச்சிறப்பாகும். பொதுமக்களும் தத்துவங்களை அறிந்துகொள்ளும் வகையில் பாடல்களை இயற்றியது இலக்கிய வரலாற்றில் தாயுமானவர் செய்த புரட்சியாகும். இந்த அடிச்சுவட்டில் வள்ளலாரும் பாரதியும் சென்றுள்ளனர். சமரச சன்மார்க்கத்திற்கு வழிகாட்டிய பெருமையும் அதனை யாவருக்கும் உரியதாக்குமாறு நடை அமைப்பில் எளிமை கண்ட சிறப்பும் தாயுமானவர்க்கே உரியனவாம். சமய நெறியாளராக, தத்துவஞானியாக இருந்து, சமரசப் பொது நெறி கண்டவர் தாயுமானவர். இவரது பாடல்களில், சமயமும் சைவசித்தாந்த தத்துவமும் பொதுமக்களுக்குப் பயன்படுமாறு எளிமையாக்கப்பட்டுள்ள உத்தி போற்றுதலுக்கு உரியதாகும்.

# 24. சிறுவர்களுக்கான சைவ சமய விளக்கம்

- திரு. முருகு. இராமலிங்கம்,
*துணைத்தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.*

**சமயம்:** சமயம் என்பது நெறி, கொள்கை என்ற பொருளைத் தருவது. மேலும் சமயம் என்ற சொல்லுக்கு நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருளாகும். "சமயம் என்பது ஒருவனது ஒழுக்கத்தினைச் சீராக்கும் கருவியாகும்" என்பார் மார்க்கமுல்லர்.[1] மற்றும் "ஒழுக்கம் என்பது இளைஞர் கற்கவேண்டிய முதல் நூலாகும்" என்கிறார் ரஸ்கின்[2] என்ற அறிஞர். சமய உணர்வு காரணமாக மனித வாழ்வில் ஒழுக்கம் அறம், அன்பு, இன்பம் மனநிறைவு ஆகியவை ஏற்பட்டு வாழ்க்கை மேன்மையடையும். எனவே சமயம் பள்ளிச்சிறுவர் முதல் யாவர்க்கும் இன்றியமையாத தேவையாகும். சமயம் சாரா வாழ்க்கை வாழ்க்கையாகாது.

**சைவ சமயம்:** சைவம் என்பது சிவம் என்னும் செந்தமிழ்ச் சொல்லின் அடியாகப் பிறந்தது. "சைவம் சிவனுடன் சம்பந்தமானது" என்று திருமூலர் சைவத்திற்கு இலக்கணம் கூறுகிறார். சிவனுடன் ஒன்றி இருப்பதாகிய ஒரு நிலையை எடுத்துக்கூறும் சமய நெறியையே "சைவம்" என்று அவர் குறிப்பிடுகிறார். சைவ சமயம் என்பது செம்மை + நெறி அதாவது "செந்நெறி" என்னும் பொருளைத் தருவதாகும்.

**வழிபடும் கடவுள்:** சிவபெருமான், மும்மூர்த்திகளுக்குத் தலைவர். அவர்களில் ஒருவராகிய உருத்திரன் அல்லர். சிவன் என்ற சொல் எளிதில் நலம் தருபவன் என்று பொருள்படும். "சிவநெறி வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே" என்றார் திருமூலர்.

**வழிபடும் தெய்வமாக** ஒன்றை நாம் கொள்ள வேண்டும். அத்தெய்வம் சிவலிங்க உருவமாகவோ சிவமூர்த்திகள் ஆகிய 25ல் ஒன்றாகவோ விநாயகர், முருகன், வயிரவர் ஆகிய ஒன்றின் வடிவமாகவோ இருக்கலாம். இது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும்.

**சிவமூர்த்தங்கள் 25**

| | | |
|---|---|---|
| 1. லிங்கோற்பவர் | 9. அரிமர்த்தர் | 17 சரபமூர்த்தி |
| 2. நடராசர் | 10. தென்முகக்கடவுள் | 18 நீலகண்டர் |
| 3. சத்திதரமூர்த்தி | 11. பிச்சாடனர் | 19. திரிபாதர் |
| 4. கல்யாணசுந்தரர் | 12. கங்காளர் | 20. ஏகபாதர் |
| 5. அர்த்தநாரீசுவரர் | 13. காமாரி | 21. பைரவர் |
| 6. சோமாசுகந்தர் | 14. காலசம்மாரமூர்த்தி | 22. இடப ஆரூடர் |
| 7. சக்ரவரதர் | 15. சலந்தராரி | 23. சந்திரசேகர் |
| 8. திரிமூர்த்தி | 16 திரிபுராரி | 24. சுகாசனர் |
| | | 25. கங்காதரர் |

**குரு, லிங்க, சங்கம வழிபாடு:** குருவை வழிபடுவது, சிவலிங்கத்தையும் சிவமூர்த்தங்களையும் வழிபடுவது. சிவனடியார்களை (சங்கமம்) வழிபடுவது ஆகிய மூன்றும் குரு லிங்க சங்கம வழிபாடு எனப்படும்.

**முக்கிய நூல்கள்:** சைவ சமயத்திற்கு முக்கிய நூல்களாவன: தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவஆகம ஞான பாதப் பகுதிகளும் ஆகும்.

**பன்னிரு திருமுறைகளாவன:**

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் | முதல்மூன்று திருமுறைகள் | தேவாரம் |
| திருநாவுக்கரசர் | நான்கு ஐந்து ஆறு திருமுறைகள் | தேவாரம் |
| சுந்தரர் | ஏழாந்திருமுறை | தேவாரம் |
| மாணிக்கவாசகர் | எட்டாந்திருமுறை | திருவாசகம், திருக்கோவையார் |
| திருமாளிகைத்தேவர் முதலிய 9 அருளாளர்கள் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா, திருப்பல்லாண்டு |
| திருமூலர் | பத்தாம் திருமுறை | திருமந்திரம் |

| | | |
|---|---|---|
| திருஆலவாயுடையார் முதலிய 12 அருளாளர்கள் | பதினோராம் திருமுறை | |
| சேக்கிழார் | பன்னிரண்டாம் திருமுறை | பெரிய புராணம் |

இப்பன்னிரு திருமுறைகளில் 27 அருளாளர்கள் 18756 பாடல்களை அருளியுள்ளார்கள்.

**கிரியா காண்ட முக்கிய நூல்கள்:** சிவ ஆகமங்களுக்கு பத்ததிகளும் "ஆகமம் இன்றேல் ஆலயம் இன்றாம்" என்று எடுத்துரைக்கின்றன.

**முக்கிய தத்துவக் கொள்கை:** பதி, பசு, பாசம் அதாவது இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே என்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் கொள்கையாகும்.

**சைவத்தின் சிறப்பு :** உயிர், பிறப்பு, இறப்பு உடையது. கடவுள் தோற்றமும் ஈறும் அற்றவர், உயிர்க்குணம் இன்மையே கடவுளின் தன்மை எனச் சைவம் ஒன்றே கூறுகிறது. சிவ நெறியில் பிறப்பு வேற்றுமை இல்லை. ஆண் பெண் வேற்றுமை இல்லை. இவர் தேவர் அவர் தேவர் என்ற மயக்கம் இல்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறுவது சைவமே!

**சைவத்தின் தொன்மை:** "ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம்" - ஜி.யு.போப் இன்று உலகில் உள்ள சமயங்களில் பழமையும் சிறப்பும் மிக்க சமயமாக சைவ சமயம் கருதப்படுகிறது.

**சைவ சமய குருமார்கள்:** திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள்.

**சந்தான குருமார்கள்:** மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார்.

**தலைவர்கள்:** திருக்கயிலாய பரம்பரையைச் சேர்ந்த சைவ மடாதிபதிகள்.

**சமய நுழைவுக்கிரியை:** சிவ தீக்கை, சமய ஆசார அனுட்டானங்களைச் செய்யும் தகுதியைப் பிறப்பிப்பது.

**சமய சாதனங்கள் :** திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து (சிவாயநம)

**நால்வகை நெறிகள்:** இறைவனை வழிபடும் முறைகளைச் சைவம் நான்காக வகுத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். ஒவ்வொருவரின் ஆன்ம வளர்ச்சிக் கேற்பக் கைக்கொண்டு ஒழுகக்கூடிய தவநெறிகள் இவை.

**விதிக்கப்பட்ட புண்ணியச் செயல்கள்:** சிவதீக்கை பெறுவது. திருநீறு, உருத்திராக்கம் அணிவது. சிவதியானத்திற்குரிய ஐந்தெழுத்தை ஓதுதல், சிவாலயத் தொண்டு, சிவ பூசை, தமிழ்வேத பாராயணம், சிவாலய வழிபாடு, மாகேசுவர பூசை முதலிய நற்செயல்களைச் செய்வது, தீட்சை குரு, வித்யா குரு, தந்தை தாய் முதலிய பெரியோர்களை வழிபட்டு ஒழுகுவது. இரக்கம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் உடையவராய் வாழ்வது முதலியனவாம்.

**விலக்கப்படவேண்டிய செயல்கள்:** சிவநிந்தை (சிவபெருமானுக்கு ஒப்பாக வேறு கடவுளரை நினைத்தல், கூறுதல் முதலியன), சிவன் கோயிலுக்கு உரிய சொத்துக்களைக் கவர்தல், கொலை, களவு, புலாலுண்ணல், மது அருந்துதல் முதலிய தீயசெயல்களைச் செய்வது, பொய், அழுக்காறு, புறங்கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீய குணங்களை உடையவராய் வாழ்வது ஆகியனவாம்.

**சிவாலயத் தொண்டு :** "சிவாலயந்தோறும் மக்களுக்குச் சைவ சமயக் கருத்துக்களைத் தமிழ் மொழியிலேயே போதித்தல் வேண்டும்" எனச் சிவபெருமான் சிவாகமத்தில் விதித்துள்ளார். இதனைச் செய்தலும் செய்வித்தலும் ஆகும். "தேவார பாராயணமும், சைவச் சொற்பொழிவும் இல்லாத கோயில் கோயிலன்று" என்பார் தவத்திரு ஆறுமுக நாவலர். உழவாரத் தொண்டு அவசியம் செய்ய வேண்டும்.

**முப்பெரும் புராணங்கள்:** திருத்தொண்டர் (பெரிய) புராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய மூன்றும் முக்கிய புராணங்களாகும்.

**சிவாலயப் பாதுகாப்பு:** சிவபெருமான் கோயிலில் புறச் சமயத்தினரின் சொற்பொழிவோ, ஊடுருவலோ, வேறு தீங்குகளோ, ஏற்படா வண்ணம் பாதுகாப்பது.

**சைவம் ஒரு தனிச் சமயம்:** தென்னாப்பிரிக்காவில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சமய மாநாட்டில் (Parliament of world Religion) "சைவம் ஒரு தனிச் சமயம்" என்பதையும் அது இந்துமதம் அன்று என்பதையும் நிலை நாட்டப்பெற்றுள்ளது.

1. Religion consists in the perception of the infinite under such manifestations as are able to influence the moral charactor of man (Max Muller)
2. All Education must moral first, intellectual secondary (Ruskin)

## 25. தோத்திரநெறி

- கயிலை சிவ. பார்வதி,

*முன்னாள் இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை.*

*"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே*
*வழுவாதிருக்க வரமருளவேண்டும் இவ்வையகத்தே"*

நாயன்மார்களிலேயே காலத்தால் மூத்தவரும், இறைவனை தோத்திரம் பாடித் துதிக்கும் வழியை அறிவித்தவருமான **காரைக்கால் அம்மையார்**, பிறந்து மொழிபயின்ற காலத்தே இறைவனைப் பாடியவர். இவர் பிறவிப்பிணியை அகற்ற வேண்டும் என்றே இறைவனிடம் வேண்டுகிறார்:

*"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புளதேல் உனையென்றும்*
*மறவாமை வேண்டும்"*

என விண்ணப்பிகின்றார்.

பவச்சார்பை நீக்கிச் சிவச்சார்பை அடைதலே வாழ்க்கையின் பயன். இவ்வுலகப் பொருட்களைப் பதி, பசு, பாசம் என மூன்றாகப் பிரித்துவிடலாம். தன்னைப் படைத்த இறைவனையே அறிந்துகொள்ளாத பசு, பதி யார்? எனக் கேட்கின்றது. காரணம் பாசமாகிய திரை மறைப்பதினால்.

திரை விலகுகின்றபோது பசு, தன் பதியை இனங்கண்டுகொள்ளுகின்றது. இதற்கு முன்னரே பதியாகிய இறைவன் பசுவின் பரிபக்குவநிலையைக் கண்டு தானே வந்து தலையளி செய்து பசுவை ஆட்கொள்ளுகின்றான். கண்ணப்பநாயனார் புராணத்திலே, இந்நிலையைக் காண்கின்றோம். வேட்டுவக் குலத்திற் பிறந்த கண்ணப்பர், வெட்டு, குத்து, கொல், எறி முதலான சொற்களைத் தவிர வேறு நல்ல சொற்களைப் பேசி அறியாதவர் எனக் காட்டுகின்றார் சேக்கிழார். விலங்கு வேட்டைக்குச் சென்றவர் தம் நல்வினைப்பயனால் காளத்தி மலையைக் கண்டு மேலே ஏறிச் செல்லுகின்றார்; முன்னைப் பிறவிப் பயனால் பரிபக்குவநிலையை அடைகின்றார்; அவர் மலையில் ஏறிச் செல்லும்போது அப்படிக்கட்டுகளே 96 தத்துவங்களாக அமைகின்றன. அவற்றைக் கடந்த நிலையில், இறைவனைக் கண்ணப்பர் காணுமுன்னரே, இறைவனின் அருட்பார்வை கண்ணப்பர்மேல்விழ அவரது பவச்சார்பு நீங்கிச் சிவச்சார்பு ஏற்பட்டுவிடுகின்றது. அதுமுதல், நான் எனக்கு என்ற நிலைமாறி யானே தானாகிநிற்கும் அற்புதநிலையை அடைகின்றார்: நாள் ஆறில் அவருக்குத் தெய்வீகம் கைவரப்பெறுகின்றது.

இறைவனை அடைதற்கான வழியினை எல்லாச் சமயங்களும் அறிவிக்கின்றன. புறச்சமயங்களான பௌத்தமும் சமணமும் கடுமையாக உடலையும், உள்ளத்தையும் ஒடுக்கினால்தான் வீடுபேறு கிடைக்கும் என வற்புறுத்த, சைவ சமயக்குரவர்களோ மிக எளிய நிலையில் இறைவனை அடையலாம் என வாழ்ந்து காட்டியுள்ளனர். அதற்கான வழிகளே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். இவை நான்கும் இறைவனை அடைதற்கான நான்கு வழிகள் என்றே காட்டியுள்ளனர்.

இவற்றுள் சரியை என்பது அனைவராலும் மேற்கொள்ளக்கூடிய மிக எளிய வழியாகும்.

*"அங்கமெலாம் குறைந்தழுகும் தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும்*
*புனையரேனும்*
*கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும்*
*கடவுளாரே"*

என்ற அப்பரது வாக்கு எத்தொழிலைச் செய்தாலும், எந்நிலையில் வாழ்ந்தாலும் சிறிய தொண்டொன்றைச் செய்தால் போதும்: இறைவனை அடையலாம் என அறிவிக்கின்றது.

*"தலையே நீ வணங்காய் ...*
*கண்காள் காண்மின்களோ ...*
*செவிகாள் கேளுமின்களோ ...*
*மூக்கே நீ முரலாய் ...*
*வாயே வாழ்த்து கண்டாய் ...*
*கைகாள் கூப்பித்தொழீர் ..."*

என்றெல்லாம் தம் அங்கங்களை இறைவனுக்கு அடிமையாகக் கொள்ளும் திறத்தை அறிவித்த அப்பர் அடிகள், தாமே உழவாரத்தைக் கையில் ஏந்தி, திருவதிகைக் கோயில் முதலியவற்றில் புல்செதுக்கும் பணியைச் செய்துள்ளார். ஞானநிலையை அடைந்தவர் தாம் எனினும் உலக மக்களுக்கு, இச்சரீரத்தினால் ஆன தொண்டு ஒன்றைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தற் பொருட்டே 80 வயதைக் கடந்த நிலையிலும் இறைத் தொண்டு புரிந்தார் என்று அறிகிறோம்.

சரியைத் தொண்டு செய்யப் பழுத்த ஞானமோ, பரந்துபட்ட அறிவோ, ஆராய்ச்சித் திறனோ தேவையில்லை: பாமரர்களும் இதைச் செய்யலாம். கோயிலைப் பெருக்குதல், மெழுக்கிடுதல்,

மலர்பறித்துத் தொடுத்தல் முதலான சிறு தொண்டுகளைச் செய்தாலே போதும் என்பதைப் பல பாடல்களால் அறிவிக்கின்றார் **அப்பர் பெருமான்:**

*"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில் தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்*
*ஒருபோதும் திருக்கோயில் குழாராகில் உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணாராகில்*
*அருநோய்கன்கெட வெண்ணீறு அணியராகில் அளியற்றார்பிறந்த வாறு ஏதே என்னில்*
*பெருநோய்கள் மிகநலியப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"*

என்ற பாடலில் இறைவனின் திருநாமங்களைச் செபித்தல், திருவெண்ணீறு அணிதல், மலர் பறித்து இறைவனுக்குச் சாத்துதல் முதலான எளிய சரியைத் தொண்டுகளைக் குறிப்பிடுகின்றார். அங்ஙனமே மற்றொரு பாடலில்,

*"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்*
*தலையாரக்கும்பிட்டு கூம்ஆடி*

.............................

*ஆரூரா என்றென்றே அலறாநில்லே "*

என்ற பாடலால் கல்வியறிவற்றவர்களும் இறைத்தொண்டு செய்து உய்யலாம் என்பதை அறிவிக்கின்றார்.

*என்கடன் பணி செய்து கிடப்பதே தன்கடன் அடியேனையும் தாங்குதல்*

*என்றார் அப்பர்.*

இங்ஙனம் சரியைத் தொண்டை அப்பர் எவ்வாறெல்லாம் ஆற்றினார் என்பதைச்சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறிந்தோம். இவ்வாறே ஏனைய கிரியை, யோகம், ஞானம் முதலிய வழிகளிலும் இறைவனுக்குத் தொண்டு செய்யலாம். இவற்றை எந்தெந்த முறையில் எல்லாம் நம் இளைய தலைமுறையினர்க்கு எடுத்துக்காட்டலாம் என நினைந்து செயலாற்ற வேண்டும். நம் சைவசமயம் காலத்தால் மிகப்பழைமை உடையது. காலங்காலமாக எத்தனையோ படையெடுப்புகளுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாகி இருந்துள்ளது. ஆயினும்,

*"பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்*
*எல்லையறு பரம்பொருள் முன்இருந்தபடி இருப்பதுபோல்"*

இன்றுவரை தொடர்ச்சியாகச் சைவம் வளர்ந்து வருகின்றது. இனி மேன்கொள் சைவநீதி உலகமெலாம் பரவும் வகை செய்வோமாக!

*"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமும் துயர் தீர்கவே"*

# 26. ஆறுமுக நாவலரின் வேதாகமக் கோட்பாடு

- சித்தாந்த ரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்,
*ஆதீனப்புலவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்.*

அன்னியர் ஆட்சியில் சைவமும் தமிழும் ஈழத்தில் அழிவை நோக்கின. தீவிர மதமாற்ற முயற்சிகளால் இனிச் சைவம் நிலைக்காது. என்ற நிலை தோன்றியது. ஆங்கில மோகத்தில் தமிழர் தம் தாய்மொழியை மறக்கத் தொடங்கினர். அன்னிய கலாசாரத்துக்கு அடிமையாகினர்.

இந்தக் காலப்பகுதியில் தோன்றிய யாழ்ப்பாணம் நல்லூர் தவத்திரு ஆறுமுகநாவலர் (1822-1879), தன்னலமற்ற பணிகளால் சைவத்தையும் தமிழையும் அழியாமல் காத்தனர். இல்வாழ்க்கையில் ஈடுபடாமல் ஒழுக்க சீலராய் வாழ்ந்து, அவர் ஆற்றிய பணிகள் பல. அவரின் பணிகள் தமிழ் நாட்டிலும் தொடர்ந்தன. அவர் பிறந்திலரேல் ஈழத்தில் சைவம் அழிந்திருக்கும். தமிழகத்தில் அது சிதைந்திருக்கும்.

### வேதம், ஆகமம்

சைவத்துக்குப் பிரமாணமாக வேதமும் ஆகமும் கொள்ளப்படுகின்றன. பரந்துபட்ட வேத இலக்கியங்களில் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஒன்றுக்கொன்று முரண்பட்ட, வேறுபட்ட, தெளிவற்ற கருத்துக்களும் அவற்றில் உண்டு. நீண்டதொரு காலப்பகுதியில் எழுந்தவை என்பதால் இவற்றில் இத்தகைய முரண்பாடுகளும் வேறுபாடுகளும் இருப்பது இயல்பானதே. ஆயினும் இறை, உயிர், உலகு பற்றிய மனித சிந்தனையைக் கொண்ட முதல் நூலாக இவை இருக்கின்றன என்பது சிந்தனைக்குரியது.

வேதங்களின் இறுதியாக வந்தவை உபநிடதங்கள். இதனால் இவை வேதாந்தம் எனப்படுகின்றன. வேதம் என்னும்பொழுது உபநிடதங்களும் அதில் அடங்கும். இந்திய சமயங்கள் பலவற்றிற்கு வேதம் அடித்தளம் அமைத்துள்ளது. ஆகமங்களும் பலவாறாக உள்ளன. சைவத்துக்குரிய ஆகமம் சைவாகமம். வேதங்களுடன் ஒப்பிடுகையில் சைவாகமங்களிலுள்ள கருத்துக்கள் முரண்பாடுகள் குறைந்தும் தெளிவாகவும் உள்ளன. சைவ சமய தத்துவம், கிரியைகள், திருக்கோயில் அமைப்பு, வழிபாட்டு முறைகள் போன்றவை குறித்த அரிய செய்திகளை ஆகமங்கள் தருகின்றன. இதனாலேயே சைவத்துக்கு வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்று கூறப்படுகின்றது. திருமந்திரமும் இக்கருத்தைத் தருகிறது. இந்திய நுண்கலைகளுக்கும் ஆகமங்கள் தளம் அமைத்துள்ளன.

### நாவலர் வைதீக சைவரா?

ஆறுமுக நாவலரை வைதிக சைவர் என்று சிலர் வர்ணிப்பதுண்டு. திரு.வி. கலியாணசுந்தரமுதலியார் 'திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற நூலில் 'ஆறுமுக நாவலர் வைதிக சைவர்' என்று குறிப்பிடுகிறார். இங்ஙனம் குறிப்பிடப்படும் நாவலரின் வேதம் ஆகமம்

குறித்த கோட்பாடு எத்தன்மையது என்பதை அறிவது பயனுள்ளது.

ஆறுமுக நாவலர் கிறித்தவரின் சைவ நிந்தனையைக் கண்டித்தும், சைவர்களுக்குச் சைவத்தின் மேன்மையை விளக்கியும் பல நூல்களும் கண்டனங்களும் எழுதினார். பிரசங்கங்கள் செய்தார். பழந்தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து பெயர்த்துப் பதிப்பித்தார். பல சைவத் தமிழ் நூல்களை எழுதினார். சைவப்பணி, தமிழ்ப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி, அரசியற்பணி என்று அவரின் பணிகள் பலவாறு விரிந்தன. இத்தகைய பணிகளுக்கிடையில் வேதம், ஆகமம் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் அவர் எழுதியுள்ளவை மிகச் சிலவே. சைவ சித்தாந்தப் பேரறிஞராக விளங்கிய நாவலர் பெருமான் அத்தத்துவம் குறித்தும் அதிகம் எழுதவில்லை. ஆயினும் அவரின் சிறு பிரசுரங்களான 'சைவ வினா விடை' முதலாம் இரண்டாம் புத்தகங்களும், 'திருத்தொண்டர் புராணம்' பதிப்பில் அவர் எழுதிய சூசனங்களும் சைவ சித்தாந்தத்தையும் அவரின் வேதாகமக் கோட்பாட்டையும் அறியத் துணைபுரிகின்றன.

## சைவ வினா விடை

சைவ வினா விடை, பால பாடம் போன்ற நாவலரின் பாட நூல்கள் படிக்கிரமமாக, ஒவ்வொரு தரத்தினருக்கும் ஏற்ற வகையில் எழுதப்பட்டன. சைவ வினா விடை முதலாம் இரண்டாம் நூல்கள் இதற்கு நல்ல உதாரணங்களாக உள்ளன.

'உலகத்திற்கு கர்த்தா யாவர்?' என்பது இரு நூல்களிலும் முதல் வினாவாக அமைந்துள்ளது. அதற்கான விடை, 'சிவபெருமான்' என்று இரு நூல்களிலும் உள்ளது. இரண்டாவது வினா, 'சிவபெருமான் எப்படிப்பட்டவர்?' என்று இரு நூல்களிலும் உள்ளது. அதற்கான விடை 'என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்' என்று முதலாம் புத்தகத்தில் இருக்கின்றது. 'நித்தியரும், சர்வ வியாபகரும், அநாதி மல முத்தரும், சர்வஞ்ஞரும், சர்வ கர்த்தாவும், நித்தியானந்தரும், சுவதந்திரருமாய் உள்ளவர்' என்று, சித்தாந்த நூல்களில் உள்ளதுபோல், இரண்டாவது புத்தகத்தில் இருக்கிறது. இச் சொற்களின் தமிழ்ப் பதங்கள் மூன்றாம் வினாவுக்குரிய விடையாகத் தரப்பட்டுள்ளன. இதுபோன்றே சிவபெருமானின் முத்தொழில்களாகப் படைத்தல், காத்தல், அழித்தலை முதற் புத்தகத்தில் கொடுத்து, அவற்றின் விரிவாக அவரின் ஐந்தொழில்கள் இரண்டாம் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. சித்தாந்த தத்துவம் கூறும் முப்பொருள் உண்மை விளக்கம் சுருக்கமாகவும் தெளிவாகவும் இரண்டாம் புத்தகத்தில் பதியியல், பசுவியல், பாசவியல் என்ற பாடங்களில் தரப்பட்டுள்ளது. சைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நித்திய கருமங்களையும் ஒழுக்கங்களையும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளையும் பிற சைவ நெறிகளையும் இந்த இரு புத்தகங்களும் படிக்கிரமமாக விளக்கும் பாங்கு இக்காலக் கல்வியாளரும் பின்பற்றக்கூடியதொன்று. இவற்றில் உள்ள கருத்துக்களுக்கு சிவாகமங்களே மூலமாக இருப்பதையும் காணமுடிகிறது.

சைவ வினா விடை முதலாம் புத்தகத்தின் இறுதிப் பாடம் 'தமிழ் வேத இயல்' என்பது. வேதம் என்ற சொல் அறிவு நூல் என்ற பொருளில் வருவது. தமிழிலுள்ள ஞான நூல்களான திருமுறைகளைத் 'தமிழ் வேதம்' என்று சொல்லும் வழக்குள்ளது. சேக்கிழார் பெருமானும் 'தமிழ் வேதம்' என்ற சொல்லை எடுத்தாள்கிறார். ஆறுமுக நாவலரும் திருமுறைகளைத் 'தமிழ் வேதம்' என்ற சொல்லால் குறிப்பிட்டுச் சமய குரவரின் பெருமையையும், தேவார திருவாசகத்தை நியமமாக ஓத வேண்டியதன் அவசியத்தையும் 'தமிழ் வேத இயல்' என்ற பாடத்தில் விளக்குகிறார். இப்பாடத்தில்

உள்ள இறுதி வினா விடை பின் வருமாறு உள்ளன:

வினா: தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பெறுவர்?

விடை: சிவபெருமானுடைய திருவடிக்கீழ் பேரின்பத்தை அனுபவிப்பர்.

சிறுவர்களுக்காக எழுதப்பட்ட இந்நூலில், வேதத்தையும், ஆகமத்தையும் வலியுறுத்தாமல் தேவார திருவாசகமான தமிழ் வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது நாவலரின் சமய நோக்கை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. சிறுவர்களுக்குத் தமிழ்த் திருமுறைகளில் ஈடுபாட்டை உண்டாக்குவதும், முத்திக்கு வழிகாட்டுபவை அவைகள் என்ற சிந்தனையை உருவாக்குவதும் அவரின் குறிக்கோள் என்பது தெரிகிறது.

**வேத நெறியும் ஆகம வழக்கும்**

சைவ வினா விடை இரண்டாம் புத்தகத்தில் 'வேதாகமவியல்' என்ற பாடமுண்டு. வேதம், ஆகமம் குறித்த வழக்கிலுள்ள பொதுவான கருத்துக்கள் இதில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஆதரித்தோ மறுத்தோ தனது கருத்தை அவர் கூறவில்லை. வேத ஸ்மிருதிகளில் காணப்படும் வர்ணாச்சிரம முறை பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. வேதம் ஓதுவதற்கும் வேதக் கிரியைகள் செய்வதற்கும் வைதீக நெறியில் சூத்திரருக்கு அனுமதியில்லை. ஆனால் சிவாகமம் ஓதுவதற்கும் ஆகமக் கிரியைகள் செய்வதற்கும் நான்கு வர்ணத்தாருக்கும், அவரவர் பெற்ற தீட்சை முறைப்படி, உரிமை உண்டு. இதனை நாவலர் விளக்குகிறார். அத்துடன் பிராமணர் முதலிய மூன்று வர்ணத்தாரும் உபநயனம் மாத்திரம் பெற்றவராயின் வைதிகக் கிரியை மாத்திரம் செய்யலாம் என்றும், உபநயனத்தோடு சிவதீட்சையும் பெற்றால் மட்டுமே அவர்கள் தமது வைதீகக் கிரியையோடு ஆகமக் கிரியையும் செய்யலாம் என்றும் கூறுகின்றார். அவரின் இத்தகைய கூற்றுக்களிலிருந்து, வேதம் தழுவிய வைதீகக் கிரியையைவிட ஆகமக் கிரியைக்கு மேலான இடம் கொடுப்பதையும், பிராமணர் மட்டுமன்றி மற்றைய வர்ணத்தாரும் முறையாகத் தீட்சை பெற்றால், கிரியைகள் செய்யலாம் என்பதும் அவரின் கருத்தென்பது தெளிவாகவுள்ளது.

'சைவ பேதவியல்' என்ற பாடத்தில் 'ஆசாரியராவதற்கு யோக்கியர் யாவர்?' என்ற வினாவுக்கான விடையிலும் இது தெளிவாக உள்ளது. அது வருமாறு: 'பிராமணர் முதலிய நான்கு வர்ணத்தாருள்ளும் மனக் குற்றங்களும் உடல் குற்றங்களும் இல்லாதவராய் நிகண்டு கற்று இலக்கிய ஆராய்ச்சி செய்து இலக்கணமும் தர்க்கமும் நீதி நூல்களும் சிவ புராணங்களும் படித்தறிந்தவராய் தேவார திருவாசகங்களை பண்ணோடு ஓதியவராய் சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய் சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவ சமயத்தையும் போதித்தலின்கண் அதிசமர்த்தராய் உள்ளவர்'.

இங்கே ஆசாரியராகும் தகுதி எல்லா வர்ணத்தாருக்கும் உண்டு என்பது உணர்த்தப்படுகின்றது. சைவ ஆகமம், தேவார திருவாசகம் போன்றவற்றின் அறிவு தேவை என வலியுறுத்தப்படுகின்றது. வேத நூல் அறிவுபற்றியோ வேதம் ஓதல் பற்றியோ குறிப்பிடப்படவில்லை.

**உண்மை நாயன்மார் மகிமை**

சைவக் கோயில்கள் ஆகம விதிப்படி கட்டப்படல் வேண்டும். அக்கோயில்களில் சிவ தீட்சை

பெறாத பிராமணர்கள் பூசை - திருவிழாச் செய்தல், சிவ தீட்சை பெற்றவர் அது பெறாதவரை வணங்குதல், அவர் கையால் திருநீறு பெறுதல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும் என்று பிரசாரம் செய்தவர் ஆறுமுக நாவலர். சிவ தீட்சை இல்லாத வைதிகப் பிராமணர் கையாலே அவர் என்றும் திருநீறு வாங்கியதில்லை.

தமிழகத்திலுள்ள ஸ்மார்த்த பிராமணர் பலர் சைவ நாயன்மார்களையும் ஆகம நெறிகளையும் நிந்தித்தார்கள். பெரிய புராணத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட நாவலர் இவர்களை வன்மையாகக் கண்டித்தார். சைவர்கள் இதனைப் பொறுத்துக்கொண்டு வாளாவிருத்தல் கூடாது என்று பேசினார். அவரது 'பெரிய புராண வசனம்' நூலின் 'உண்மை நாயன்மார் மகிமை' என்ற அத்தியாயம் இது குறித்துக் கூறுகிறது. சைவர்கள் அனைவரும் படிக்க வேண்டியது இது.

'சாதியினும் சமயமே அதிகம். சமயத்திலும் சாதி அதிகம் எனக் கொள்வது சுருதி, யுக்தி அனுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம்' என எழுதி, வர்ணாச்சிரம அடிப்படையிலான சாதி வேற்றுமையைக் கைக்கொள்வது சைவத்திற்கு விரோதமானது எனக் கூறுகின்றார். சைவத்திலும் சாதிகள் உண்டு எனக் கூறும் நாவலர் அச்சாதிகள் சைவ நெறியில் நிற்பவரின் தரத்திற்கேற்ப அமைவதென விளக்குகிறார்.

அவரின் விளக்கப்படி சிவாகம நெறியில் நான்கு பாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பேறு பெற்றவர் சீவன் முத்தர். இவர் சிவமாகவே கொள்ளத்தக்கவர். சிவஞானிகள் முதற்சாதி, சிவயோகிகள் இரண்டாஞ்சாதி, சிவக்கிரியாவான்கள் மூன்றாஞ்சாதி, சிவச்சரியாவான்கள் நான்காஞ்சாதி. இந்நெறிகளில் வராதவர்களும் இவற்றில் முறை பிறழ்ந்து நடப்பவர்களும் ஐந்தாஞ்சாதியான கீழ்ச்சாதியினர். கோயிற் சொத்தை அபகரிக்கும் அதிகாரிகளும் சுயநலத்துக்காக ஆசாரி அபிடேகம் செய்தவர், சிவ வேடம் தரித்தவர் ஆகியோரும் இதிலே அடங்குவர்.

இத்தகைய பல விளக்கங்களை 'உண்மை நாயன்மார் மகிமை' என்ற அத்தியாயத்தில் தந்து சைவ சமயிகள் செய்ய வேண்டியவற்றைச் சுருக்கமாகப் பின்வருமாறு எழுதுகிறார்: 'சைவ சமயிகளே! நீங்கள் இவ்வுண்மைகள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து, சிவபெருமானிடத்தும் உண்மை நாயன்மாரிடத்தும் சிவாகம விதிப்படி பத்தி செய்தொழுகக் கடவீர்கள்'. நாவலரின் இவ்விளக்கங்கள் ஆகமத்திற்கும் உண்மை நாயன்மாருக்கும் மேலான இடமளிப்பதாக உள்ளன.

**பெரிய புராண சூசனம்**

சைவத்திற்கு உடன்பாடற்ற கருத்துக்களும் இடம்பெறும் வேத இலக்கியங்களை சைவத்திற்கு பிரமாணமாகக் கொள்வது பொருத்தமானதா என்ற கேள்வி எழுகிறது. திருமுறைகளில் வேதத்திற்கு உயர் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இறைவனையே வேதம் ஓதுபவனாக சம்பந்தப்பெருமான் காட்டுகிறார். ஆகமத்திற்கும் மேலான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும்போது வேதமும் ஆகமமும் சைவத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளதை அறிய முடிகிறது. ஆயினும் அவை எந்த அளவுக்கு பிரமாணமாக அமைந்துள்ளன என்பது சிந்தனைக்குரியது.

ஆறுமுக நாவலர் தனது திருத்தொண்டர் புராணத்துச் சூசனத்தில், 'சைவாகமவுணர்ச்சி' என்ற அத்தியாயத்தில், இதனைத் தெளிவுபடுத்துகின்றார். 'வேதம் முதலிய சகல சாத்திரங்களும்

சிவாகமத்திற்கு விரோதமல்லாத வழியே பிரமாணங்களாகும்.'

நாவலரின் இவ்விளக்கம் சிவாகமத்திற்கு வேதத்தைவிட உயர்ந்த இடம் கொடுப்பதாக உள்ளது. சைவத்திற்கும் சிவாகமத்திற்கும் விரோதமான கருத்துக்களும் வேதத்தில் இடம்பெறுவதைக் காட்டுவதாகவும் உள்ளது. 'சிவாகமம் வியாபகம், வேதம் வியாப்பியம்' என்று பிறிதோரிடத்தில் எடுத்துக்காட்டியும் சிவாகமத்தின் உயர்வைக் குறிப்பிடுகிறார்.

ஆகமங்களுக்கு உயர் இடம் அளிக்கும் ஆறுமுக நாவலர் அவற்றின் ஞான பாதமான சித்தாந்தத்திற்கு அதியுயர் இடம் கொடுப்பதையும் காணலாம். இரத்தினத் திரயத்திலே 'சித்தாந்தமே சித்தாந்தம், அவைக்கு வேறானவை பூருவ பட்சங்கள்' என்று கூறப்பட்டிருப்பதாக எழுதுகிறார். காமிக ஆகமத்தை உதாரணம் காட்டி நால்வேதத்தை விட ஆகமாந்தமாகிய சித்தாந்தம் உயர்ந்ததென நிறுவுகிறார். அவரின் பின்வரும் கூற்று இதனை விளக்குகிறது: 'முன் கூறிய சகல நூல்களையும் (நால் வேதங்களையும்) பரமசிவன் பூர்வ பட்சமாகச் சொன்னார். அவற்றை எல்லாம் கீழ்ப்படுத்தி பரமார்த்தமாகத் தவிரற்பாலனவும் கொள்ளற்பாலனவும் ஆகிய பொருள்களையும் நிச்சயிக்கும் சிவ சித்தாந்தத்தைச் சொன்னார். சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதின் உயர்ந்தது பிறிதொன்றுமில்லை. இந்தச் சைவ நூலே மூலமாம். சதுர் வேதங்களும் இதினின்றும் பிறந்தவையாம்.'

**முத்திக்கு சித்தாந்தம்**

பரமுத்திக்குத் துணை நிற்பது ஆகமாந்தம் என்னும் சித்தாந்த நெறி என்பதும், வேதக் கிரியைகள் அதற்குத் தடையாகவும் உள்ளன என்பதும் நாவலரின் கருத்தாகும். இதனை அவரின் திருத்தொண்டர் புராணப் பதிப்பில் உள்ள 'உபோற்காதம்' பகுதியிலிருந்து அறிய முடிகிறது: 'இதுகாறும் கூறியவற்றால் சைவ சித்தாந்தத்தைத் தவிர பரமுத்தி சித்தியாது என்பதும், அப்பரமுத்திக்கு சாதனம் சிவஞானமே என்பதும், அச்சிவஞானத்தை பயப்பன சரியை முதலிய மூன்றுமே என்பதும், வேதத்துள் விதித்த வேள்வி முதலியன எல்லாம் அநித்தியமான காமியங்களை பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தை பயவாமை மாத்திரையே அன்றி தீவினைபோல் அது நிகழ வொட்டாது தடை செய்து நிற்றலும் உடையனவேயாம்.'

வேதநெறியில் பரமுத்தி கூடாதெனினும், சித்தாந்த சைவத்தை 'வைதீக சைவம்' என்று கூறும் வழக்கம் உண்டு. இது குறித்த தனது கருத்தை, காமிகாகமத்திலிருந்து பின்வரும் மேற்கோள்காட்டி, பெரியபுராண சூசனத்தில் நாவலர் விளக்குகிறார்: "சைவமே வைதீகம் எனப்படும். வைதீகமே சைவம் எனவும்படும். சைவமானது வைதிகத்திலடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதீகமும் சைவத்தில் தாழ்ந்தது. முனிவரே, அற்றாயினும் சைவம் வேதப் பொருளோடு ஒற்றுமையாய் இருத்தலால் வைதீகம் என்றும் வேதசாரம் என்றும் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானம் பரஞானமாம். பசுபதார்த்த போதமாகிய வேதம் முதலியன அபரஞானமாம்."

மேற்கூறியவற்றால் வேதத்தைவிட மேலான இடத்தை ஆகமத்திற்கும், ஆகமாந்தமெனும் சைவசித்தாந்தத்திற்கும் ஆறுமுக நாவலர் கொடுப்பதைக் காணலாம். தமிழ் வேதமாகிய திருமுறைகளுக்கும் மேலான இடம் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

# 27. 'ஞானியாரடிகளின் துதிகளும் மாலையும்' - ஓர் அறிமுகம்

- புலவர் வ. ஞானப்பிரகாசம்,
*தலைவர், திருப்பாதிரிப்புலியூர்ச் சித்தாந்தச் சைவநெறி மன்றம்.*

ஞானியாரடிகள் 1. குருதுதி, 2. திலகவதி அம்மையார் துதி என இரண்டு துதிகளையும், ஞானதேசிக மாலை என ஒரு மாலையையும் அருளியுள்ளார்கள். சிவத்திரு ஞானியாரடிகளது சொற் பொழிவுகளைக் கேட்ட அன்பர்கள் தாம் எழுதிவைத்த குறிப்புகளைக் கொண்டு பின் விரிவுபடுத்திக் கட்டுரைகளாக எழுதித் தந்தனர். அவை நூல்களாக வெளிவந்தன. ஆனால் இச்செய்யுள் நூல்களோ அடிகள் தாமே கைப்பட எழுதியருளியவை என்பது சிறப்புக்குரியதாகும்.

**1. குரு துதி**

1932 இல் அடிகளார் குடியேற்றத்தை யடுத்த கார்க்கூர் என்ற ஊரில் தங்கியிருந்தபோது, கீழே விழுந்து, பாதத்திற்கும் முழங்காலுக்கும் இடையே முறிவு ஏற்பட்டது. குடியேற்றம், திருத்தணிகை, வேலூர் மருத்துவர்கள் எல்லாம் பார்த்து, கால் கூட வாய்ப்பில்லை என்றும், முறிந்த பகுதிக்குமேல் காலை எடுத்துவிட வேண்டும் என்றும் கூறிவிட்டனர். அடிகள் அதற்கு இசையாமல் அந்நிலையிலேயே திருப்பாதிரிப்புலியூர் வந்தனர். புத்தூரிலிருந்து வைத்தியர் வரவழைக்கப்பெற்று வைத்தியம் பார்க்கப்பட்டது.

அடிகளார் திருக்கோவலூரில் சமாதி கொண்டுள்ள தம் குருநாதரை நினைந்து மனதுருகி, தம் கால்கூடப்பெற்று, திருக்கோவலூருக்கு வந்து வழிபட வேண்டும் என வேண்டி,. தம் குருநாதர்மீது குருதுதி பாடிப் போற்றினார்கள். குருவருளால் தம் கால் கூடப் பெற்றார்கள்.

குருதுதியாக அடிகளார் அருளிய வெண்பாக்கள் மொத்தம் எத்தனை எனத் தெரியவில்லை. சிதைந்தன பல; தற்போது கிடைக்கப்பெற்றுள்ளவை 49 வெண்பாக்களாகும். அவற்றுள் சில அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. வேறு சிலவற்றுள் அந்தாதித் தொடையில்லை. அந்தாதித் தொடை இல்லாத இடங்களில் எல்லாம் பாடல்கள் காணாமல் போயிருக்கலாம். 'உலகில்' என முதற்பாடல் தொடங்குகிறது. ஆனால் இறுதிப் பாடல் 'உலகில்' என முடியவில்லை. எனவே அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் பாடப்பெற்று, இடையிலும் இறுதியிலுமாக 51 பாடல்கள் கிடைக்கப்பெறாமல், 49 பாடல்கள் மட்டும் கிடைத்திருக்கலாம்.

குருதுதி அடிகளார் திருவருட்கலப்பு (1.2.1942) எய்திய பின் ஓராண்டு கழித்து, முதல் குரு பூசை நாளில் (சித்திரபானு - தை) மஞ்சக் கொல்லை ரா. திருநாவுக்கரசு அவர்கள் உதவியால் வெளியிடப்பெற்றது. பின் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சித்தாந்தம் இதழில் (மலர் 16, இதழ்1) வெளியிடப் பெற்றுள்ளது. பின் சைவ சித்தாந்தப் பெருமன்றம் ஞானியார் அடிகள் நினைவு மலரில் (1958) முன் இணைப்பாகக் குருதுதி வெளியிடப்பெற்றுள்ளது.

இனி, நூலில் இரண்டொரு செய்திகளை அறிந்துகொள்வோம்:

உலகில் உயர்ஞானம் ஓங்க உதித்தாய்
தலைமைபெறும் ஞானமெனச் சாற்றி மல(ம்) நீங்க
நின்னை யடைந்தேனை நீயே யகற்டின்
தன்னை யறிவனோ சாற்று (1)

என்பது முதற்பாடல். "உலகம் உவப்ப" எனத் திருமுருகாற்றுப்படையும், "உலகெலாம்" எனப் பெரியபுராணமும், "உலகம் யாவையும்" எனக் கம்பராமாயணமும் தொடங்குதல் போலவே, இந்நூலும் "உலகில்" எனத் தொடங்குவது சிறப்புக்குரியது. எந்த ஒருநலனையும் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு மட்டும் பார்க்காமல் உலகம் முழுமைக்கும் பார்ப்பவர்கள் என்ற உயர்நிலையிலேயே அடிகளும் 'உலகில்' எனத் தொடங்கியருளியுள்ளார்கள்.

மேலும் இப்பாடற்செய்தி, சைவ சித்தாந்த விளக்கமாகவும் அமைந்துள்ளதை அறிகிறோம்.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் இயல்பைப் பேசுவது சைவ சித்தாந்தம். உயிரைப் பற்றிய ஞானம் பசு ஞானம். உலகைப்பற்றிய ஞானம் பாச ஞானம். இவ்விரண்டாலும் உயிர்க்கு இன்பம் இல்லை. சிவத்தைப்பற்றியறியும் பதிஞானமாகிய சிவஞானமே முத்தியின்பத்தைத் தரவல்லது. ஆதலின் அது உயர் ஞானம் எனப்பட்டது. அதனால் அது தலைமைபெறும் ஞானமாம். குருவருளாலேயே சிவஞானத்தைப் பெற முடியும். அப்போதே ஆணவம் முதலாம் மலம் நீங்கப்பெறும். இச்செய்தியை முதற்பாடலால் அறிகிறோம்.

கோவற் பதிவாழ் குருபரனே! ஆறுமுக
தேவ! எனக் கியாவருளர்? செப்புவாய் - ஓவிலா
ஆணவத்தால் ஆழ்ந்த அடியேற்கு ஒளிர்ஞானம்
பூணுறச்செய் வாரைப் புகன்று

என்பது இரண்டாம் பாடல். இதில் முதற்குருநாதர் சமாதி கொண்டருளும் இடம் திருக்கோவலூர் என்பதும், அவர்களின் திருப்பெயர் ஆறுமுகம் என்பதும் முதலில் சுட்டப்பெறுகிறது.

மேலும் ஆணவ மலத்தின் இயல்பு உணர்த்தப்பட்டுள்ளது. ஆணவ மலம் உயிர்க்கு இயல்பாகவே அநாதியே பற்றியுள்ள குணம். அது உயிரானது பாசஞானம், பசுஞானத்துடன் இருக்கும்போது, அதற்குச் சிவத்தைக் காட்டாமல், சிவஞானம் கூடியபோது, உலகை மறைத்துச் சிவத்தைக் காட்டுவது. எக்காலத்தும் உயிரை விட்டு நீங்காது அதனிடமாகவே இருப்பது. அதனால்தான் 'ஓவல்இல் ஆணவம்' எனப்பட்டது. "பண்டை மல ஆணவம்" (8) எனவும் பின்னே சுட்டப்பட்டுள்ளது.

கண்ணுக்கு உயிரானது பொருள்களைக் கண்டு காட்டுதல் போலப் பசுவாகிய உயிர்க்குக் குருவானவர் பதியைத் தாம் கண்டு காட்டுதலின் அவ்வுயிர் அன்பினால் கண்டு அரனடிசேரும் என்னும் பொருளதாகிய.

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

எனும் சிவஞான போதக் கருத்தை,

*கண்டுற வல்லேனோ காட்டாயேல் இவ்வுலகில் (8)*

எனும் அடி அறிவுறுத்துகிறது.

சைவசமய சாதனமாக விளங்கும் திருஐந்தெழுத்து, பல பாடல்களில் (12, 15, 16, 17) பேசப்பெறுகின்றன.

*முன்ஐந் தெழுத்தின் முதலிலுள நமவைப்*
*பின்ஐந் தெழுத்தினிலே பின்நிறுத்திப் - பின்மூன்றால்*
*காரண ஐந்தெழுத்தைக் கட்டுரைத்(து) ஆட்கொண்டனையே*
*ஆரணஞ்சொல் கோவலழ கா (12)*

என்பது ஒரு பாடல்.

ஐந்தெழுத்தைப் பஞ்சாட்சரம் என வடமொழியில் வழங்குவர். 'க்ஷரம்' எனும் சொல் அழிவது என்னும் பொருளுடையது. 'அ' எதிர்மறைச் சொல். பஞ்ச + அக்ஷரம் பஞ்சாட்சரம். ஐந்து அழியா எழுத்துக்கள் என்னும் பொருள்படும். உருப்போடுவாரை அழியாதிருக்கச் செய்யும் காரணத்தாலும் பஞ்சாட்சரம் எனப்படும்.

பஞ்சாட்சரம் எனும் சொல் ஐந்தெழுத்து என்னும் பொருளிலிருந்து, மந்திரம் எனும் பொருளில் வழங்கப்படுவதாயிற்று. அதனால் "சிவாய" எனும் மூன்றெழுத்து மந்திரத்தையும், 'சிவா' எனும் இரண்டெழுத்து மந்திரத்தையும், 'சி' எனும் ஓரெழுத்து மந்திரத்தையும் பஞ்சாட்சரம் எனும் பெயராலேயே வழங்கினர்.

'நம சிவாய' என்பது கால பஞ்சாட்சரம். அது உலக இன்பம் வேண்டி உருப்போடப்படுவது. அதுவே சிவநாமமாகக் கருதின் வீடு பேறளிக்கும். 'சிவாய நம' என்பது சூக்கும பஞ்சாட்சரம். அது வீடுபேறு கருதி உருப்போடப்படுவது. 'சிவாய' என்பது காரண பஞ்சாட்சரம். அது மனக் கரணத்தில் உருப்போடப்படுவது. 'சிவா' என்பது மகா காரண பஞ்சாட்சரம். 'சி' என்பது ஓரெழுத்து மந்திரம். இவையும் தன்னை மறந்த மனதில் உருப்போடப்படுவன. சிவ ஐக்கியநிலை தருவன.

முதல் ஞானியாரடிகளுக்குக் குழந்தைப் பருவத்தில் திருவண்ணாமலை ஆறாம்முறை குகை நமச்சிவாயர் தூல பஞ்சாட்சரத்தையும், பதினொன்றாம் வயதில் உமையம்மையார் சூக்கும பஞ்சாட்சரத்தையும், பதினைந்தாம் வயதில் சிவ பிரான் ஆராத்திரியர் (அர்ச்சகர்) வடிவில் வந்து காரண பஞ்சாட்சரத்தையும், பின் பத்து நாளில் வீரபத்திரர் மகா காரண பஞ்சாட்சரத்தையும், பத்தொன்பதாம் வயதில் சிவபெருமான் ஓரெழுத்துப் பாவனை எனும் பஞ்சாட்சரத்தையும், முருகப் பெருமான் 'ஓம்' எனும் பிரணவ உபதேசத்தையும் செய்ததாக வரலாறு.

சிவத்திரு. ஞானியாரடிகள் தம் குருநாதர் காரண பஞ்சாட்சரத்தைத் தமக்கு உபதேசித்ததாகக் கூறியருளினார்கள்.

சைவப்பெருமக்கள் குருபூசை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனால் பெறும் நலத்தையும் கீழ்வரும் பாடல் விளம்புகிறது.

*குருபூசை யாலே குவலயம் ஓங்கும்;*
*குருபூசை யாலே குடிகள் - மருவுவரே,*
*செல்வம் புகழாயுள் சேர்ந்த உள மனைவி*
*புல்லும் புதல்வர்தம் பேறு (48)*

(சேர்ந்த உள மனைவி - தன்னை நினைந்த கற்புள்ளம் கொண்ட மனைவி; புல்லும் புதல்வர் - அன்பால் தழுவும் பிள்ளைகள்)

குருதுதி நூலில் இன்னும் பலப்பல நுண்பொருள்கள் இயம்பப்பெற்றுள்ளன.

**ஞான தேசிக மாலை**

இந்நூல், திருப்பாதிரிப்புலியூரில், வண்டிப்பாளையம் சாலையில் கோயில் கொண்டருள் இரண்டாம் குருநாதர் திருக்கோவில் குடமுழுக்குவிழாவின்போது (1937) அவரைப் போற்றிப் பாடப்பெற்றது. ஒரு காப்பு வெண்பாவும், 22 எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்களுமாக அமைந்தது. "புலிசைச் சண்முக ஞானதேசிகனே" என்பது பாடல்தொறும் மகுடமாக அமைந்துள்ளது.

காப்புப் பாடல் விநாயகர்மேல் பாடப்பெறாமல், முதற்குருநாதரைப் போற்றுவதாக அமைந்துள்ளது. தனிச்சிறப்பாகும். நூலில் பல்வேறு சைவ சித்தாந்தச் செய்திகள் விளக்கப்பெறுகின்றன.

*"பூதலத்(து) உறுவோர் பக்குவம் நோக்கிப்*
*போகமும் வீடுமே உதவ*
*ஆத்ரத் தோடும் அருளுருக் கொண்ட*
*அற்புத சச்சிதா னந்த!"*

என முதற்பாடல் தொடங்குகிறது. "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றவாறு உலக போகத்தை விரும்புவார்க்கு உலகபோகத்தையும், வீடுபேற்றை விரும்புவார்க்கு வீடுபேற்றையும் அவரவர் பக்குவம் நோக்கிக் குருநாதர் அருளுகின்றார்.

*நின்னருள் துணையால் நீங்கினர் வறுமை; நீங்கினர் துன்பநோய் பலவும்;*
*நின்னருள் துணையால் எய்தினர் செல்வம்; நேயமும் எய்தினர் பலரும்;*
*நின்னருள் கண்டு நீங்கும்அஞ் ஞானம்; நின்னருள் ஞானமே நல்கும்;*
*தன்னிகர் பங்கு முயற்கருள் புலிசைச் சண்முக ஞான தேசிகனே!* (20)

எனும் இப்பாடலில் குருவருளால் பெறும் நலங்கள் நவிலப்படுகின்றன.

சிவபெருமான் தன்கோலம் மறைத்து மனித வடிவில் குருவாக எழுந்தருள்கிறான். எனவே குருவைச் சிவமாகவே காண வேண்டும்.

*மாண்டவர் எலும்பை, மதகளிற் றுரியை,*
*மானினை, மழுவினைத், தீயை*
*ஈண்டவை யெல்லாம் அகற்றிவந் தருளி*
*எங்களை ஆட்கொளும் குருவே (17)*

எனும் பாடலில் அடிகள் இதனை உணர்த்தியருள்கிறார்கள். வாழ்த்துப் பாடலோடு 'மாலை' நிறைவு பெறுகிறது.

**திலகவதியம்மை துதி**

சமணம் சென்ற அப்பரடிகளை மீண்டும் சைவத்திற்கு மீட்டுத் தந்த திலகவதியம்மையார் மீது அடிகளுக்கு மிகவும் பக்தி உண்டு. ஒருபோது ஞானியார் மடாலயத்தில் நிகழ்ந்த கருத்தரங்கில்,

சைவத்திலிருந்து பிறசமயம் சென்றவர்கள் மீண்டும் சைவத்திற்கு வந்தால் ஏற்றுக்கொள்ளலாமா? என்பது பற்றிப் பல சான்றோர்களும் பலவாறு கருத்துரைத்தார்கள். நிறைவில் அடிகளார், 'ஒரு பெண் மிக எளிமையாகத் திருநீறு தந்து சைவத்திற்கு ஏற்றுக்கொண்ட செய்தி எடுத்துக்காட்டாக உள்ளதே." எனக் கூறி, திலகவதியம்மையாரை நினைவுக்குக் கொண்டுவந்தார்களாம். அத்தகைய அம்மையார் மீது துதியாக ஏழு பாக்கள் அருளியுள்ளார்கள். ஐந்து அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள். எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று; நேரிசை வெண்பா ஒன்று.

*உலகமெலாம் திருநீற்றின் ஒளிவிளங்க, மணிவிளங்க, உவகை யோடும்*
*பலகலைசொல் ஐந்தெழுத்து விளங்கஅரன் பெயர் விளங்கப் பான்மை யோடு*
*தலம்விளங்க மறைவிளங்க அப்பருக்குத் திருநீறு சாற்றித் தந்த*
*திலகவதி யம்மையார் அடிக்கமலம் இரண்டினையும் சிரத்தில் சேர்ப்பாம்*

என்பது முதற்பாடல். (மணி = அக்கமணி, சாற்றித் தந்த = உபதேசம் செய்த)

அப்பரடிகளைச் சைவத்திற்கு வழிப்படுத்திவர் அம்மையார் என்பதால், அப்பரடிகளால் உலகில் விளங்கியன அனைத்தையும், அம்மையார் மீது அடிகள் ஏற்றிக் கூறியருளினார்கள்.

*சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் சுந்தரனும்*
*சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி*
*வந்திரேல் நீறுஎங்கே? மாமறை நூல்தான் எங்கே?*
*எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே?*

எனும் 'சிவானந்த மாலை'ப் பாடல் அமைப்பில்,

*தீயிலையேல் சைவமெனும் சமயம் எங்கே? அப்பர் எங்கே? நேயம் எங்கே?*
*கோயிலையாம் அடைவதெங்கே? குருக்கோலும் கொள்வதெங்கே? குருதான் எங்கே?*
*காயிலைவேல் பரசினைத் (தாங்கு) அரன்எங்கே? தேவாரம் கருதல் எங்கே?*
*மாயிரு ஞாலம்போற்றும் திலகவதி நின்னடியை வணங்கி வாழ்வாம்*

இம்மூன்று நூல்களும், அடிகளின் மாணவர் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் உரை விளக்கத்தோடு சிவத்திரு. ஞானியார் மடாலயத்தில் ஒரே தொகுதியாக வெளியிடப்பெற்றுள்ளது.

# VI. ஒளிரும் சாத்திரங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்களிற்றுப்படியார் - ஒரு திறனாய்வு | - *எஸ். மீரா கிருஷ்ணமூர்த்தி* | 1 |
| 2. | உந்தியும் களிறும் | - *சு. சண்முகவேல்* | 6 |
| 3. | சிவஞானபோதம் : பாண்டிப்பெருமாள் விருத்தியுரை | - *மு. வைத்தியநாதன்* | 9 |
| 4. | தமிழ் மெய்ந்நூல் முதற்பா | - *கா. சுப்பிரமணியம்* | 13 |
| 5. | உண்மை விளக்கத்தில் சித்தாந்த முத்தி | - *மோ. ஞானப்பூங்கோதை* | 18 |
| 6. | உண்மை விளக்கம் - ஒரு கணிதப் பார்வை | - *இரா. பாலகிருட்டிணன்* | 22 |
| 7. | சிவப்பிரகாசத்தில் அவையடக்கம் | - *அ.வே. சாந்திகுமார சுவாமிகள்* | 24 |
| 8. | சிவப்பிரகாசத்தில் முத்தி வகை | - *க. கிருசுணன்* | 28 |
| 9. | திருவருட்பயன் உணர்த்தும் அணைந்தோர் தன்மைகள் | - *கோமதி சூரியமூர்த்தி* | 31 |
| 10. | கொடிக்கவி | - *கிருஷ்ணவேணி இராமச்சந்திரன்* | 36 |
| 11. | நெஞ்சுவிடு தூது காட்டும் ஞானாசிரியர் | - *மதி. வேலாயுதம்* | 41 |
| 12. | மாதவச் சிவஞான முனிவர் | - *சோ.ந. கந்தசாமி* | 43 |
| 13. | சொக்கநாத வெண்பாவில் உயிர்க்கோட்பாடு | - *ஜா. திரிபுர சூடாமணி* | 47 |
| 14. | சாத்திரங்களில் அன்புநெறி | - *ஞான. ஏகாம்பரம்* | 51 |
| 15. | பதி, பசு, பாசவியல் | - *ஸ்ரீமத் குமரகுருதாசர்* | 59 |
| 16. | அருள் இயக்கம் | - *ஔவை சு. துரைசாமி* | 64 |
| 17. | சத சத்தாகும் ஆன்மா | - *கி. முத்துசாமி* | 71 |
| 18. | சைவ சித்தாந்த நோக்கில் வினை | - *மு. சோமசுந்தரம்* | 75 |
| 19. | சைவ சித்தாந்தச் செந்நெறி | - *ஆ. குணநாயகம்* | 82 |
| 20. | மாணவருக்குச் சைவ சித்தாந்தம் | - *தி.கி. நாராயணசாமி* | 87 |
| 21. | சுத்தாத்துவைதம் | - *செ.வே. சதானந்தன்* | 95-100 |

# 1. திருக்களிற்றுப்படியார் - ஒரு திறனாய்வு

- முனைவர் எஸ். மீரா கிருஷ்ணமூர்த்தி,
*தமிழ்ப் பேருரையாளர், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை - 609 001.*

**சைவம் - சைவ சித்தாந்தம்**

உலகின் மிகப் பழைய உயிரோட்டமுள்ள சமயம் சைவமே என்று சர் ஜான் மார்ஷல் குறிப்பிட்டுள்ளார். ஆரியருக்கு முற்பட்ட நாகரிகம், திராவிட நாகரிகம் என்று மொகஞ்சாதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சிகள் கூறுகின்றன. என்று தோன்றியது? என்று வரையறுத்துக் கூற முடியாவண்ணம் காலப்பழமை உடையது சைவ சமயம். "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று மாணிக்க வாசக சுவாமிகள் கூறியுள்ளார். இறை ஒன்று, பல அல்ல. ஒரே இறைவனை உணர்ந்து உலகுக்களித்த சமயம் சைவம். சைவம் சிவனுடன் சம்பந்தமாவது, வியைிவின் நீங்கிய முனைவன் என்றும், கடவுள் என்றும், இறை என்றும், கந்தழி என்றும் பலவாறாக இறைக் கோட்பாடு உணர்த்தப்பட்டுள்ளது.

சிவபெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள் சைவர்கள். சைவத்தின்மேல் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் வேறில்லை என்றும் உணர்ந்தவர்கள் இவர்கள். இவ்வுலகில் நிலைபெற்ற பொருட்கள் மூன்று என்பர். அவை பதி, பசு, பாசம் ஆகும். இறை, உயிர், தளை என்றும் கூறுவர். இவர்கள் அறிந்த அறிவின், முடிந்த முடிவே சித்தாந்தம் எனப்பட்டது. இச் சைவ சித்தாந்தத்தை 'இராசாங்க சமயம்' என்றும், 'திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம்' என்றும் போற்றுவர்.

இம்முப்பொருளைப் பற்றிக் கூறுவனவற்றை மெய்கண்ட நூல்கள் அல்லது சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் என்று வழங்குவர். முப்பொருளைப் பற்றிய உண்மைகள் சங்க நூல்களிலும், திருமுறைகளிலும் காணப்படும்.

பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களும் சைவ சமயக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. சைவ நூல்கள் மூன்று வகைப்படும். தோத்திரம், சாத்திரம், புராணம். இவற்றுள் தோத்திரம் என்பது வழிபாட்டு நூல்கள்; சாத்திரம் என்பது வழிபட வேண்டிய இறைவன், வழிபடும் உயிர்கள், வழிபடுதற்குரிய காரணம், அதனால் பெறும் பயன், வழிபடற்கு ஏற்படும் தடைகள் பற்றிக் கூறுவன; புராணம் என்பது வழிபாட்டால் பெறும்பயன், வழிபடார் பெறும் தீங்கு என்பவற்றை எடுத்துரைப்பது. தோத்திர நூல்கள் என்பன பன்னிரு திருமுறைகள், சாத்திரங்கள் பதினான்கு. புராணங்களுள் சிறந்தன முப்புராணம்; பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம். முப்புராணங்களும் சிவபெருமானின் மூன்று கண்கள் என்பர். வலக்கண் ஞாயிறு, பெரிய புராணம்; இடக்கண் சந்திரன், திருவிளையாடற் புராணம்; நெற்றிக்கண், நெருப்பு, கந்தபுராணம் எனப்படும். சாத்திரங்களுள் சிறந்தது சிவஞானபோதம். இது 12 நூற்பாக்களை உடையது. பன்னிரு திருமுறைகளோடு பன்னிரு நூற்பாக்களை ஒப்பிடுவர்.

**திருக்களிற்றுப்படியார்**

சைவ சித்தாந்த ஞான சாத்திரங்கள் பதினான்களுள் இரண்டாவதாகத் திகழ்வது திருக்களிற்றுப்படியார். இந்நூலின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். இவர் திருவுந்தியார் அருளிய திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரின் மாணவராகிய ஆளுடைய தேவநாயனாரின் மாணவர். ஞானசந்தானப் பரம்பரையில் பெயரர் என்ற முறையில் முதல் நூலாசிரியரின் பெயரே இவருக்கும் தீட்சா நாமமாக இடம்பெற்று உள்ளது.

**பெயர்க்காரணம்**

திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் தம்மை அடைந்த பக்குவம் உள்ள மாணவர் ஒருவர் பொருட்டு இந்நூலை அருளிச் செய்துள்ளார். சிதம்பரம் நடராசப் பெருமான் தமது பொற்சபையிலுள்ள திருவைந்தெழுத்துப் படியில் இந்நூலை இவ்வாசிரியர் வைக்கப் புகும்போது படியைத் தாங்கியுள்ள பொற்றகடு வேயப்பட்டுள்ள கல் யானை, உயிர்பெற்றுத் தன் துதிக்கையை நீட்டி, வாங்கித் தம் திருவடியில் வைக்கச் செய்து அருளினார். இக்காரணம் பற்றியே இந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் என்பது பெயராயிற்று.

திருவுந்தியார் என்ற முதல் நூலின் விளக்க நூலிது. திருவுந்தியார் 45 கலித்தாழிசைகளால் அமைந்தது என்றால், இந்நூல் 100 வெண்பாக்களால் ஆனது. தனி வெண்பாவும், சிறப்புப்பாயிரப் பாடலும் சேர்ந்து 102 வெண்பாக்கள் உள்ளன. சிறப்புப்பாயிரப் பாடல் உய்யவந்தாரின் பக்குவநிலையை எடுத்துரைக்கிறது.

**திருக்குறள் தாக்கம்**

"சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்" என்ற வள்ளுவர் வாக்கினை அப்படியே எடுத்தாண்டுள்ளார் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். உயிருக்கெல்லாம் சார்பான செம்பொருளை உணர்ந்து இரு. பற்றுமற ஒழுகினால் சாரும் துன்பங்கள், ஒழுக்கங்களை யழித்துச்சாரா என்றார் வள்ளுவர். அவருடைய மெய்யுணர்தல் என்ற அதிகாரக்கருத்து உய்யவந்த தேவநாயனாரைப் பெரிதும் கவர்ந்தது.

*சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்,*
*சார்புணர்தல் தானே தியானமுமாம் சார்பு*
*கெடவொழுகின் நல்ல சமாதியுமாம். கேதப்*
*பட வருவதில்லை வினைப்பற்று" (34)*

என்கிறார் உய்யவந்தார். சிவஞானத்தைக் கூடி நிற்றலே சிவநினைவாம். அச்சிவத்தை நினைக்கிறோம் என்ற தன்னுணர்ச்சி கெட்டுவிடின் அதுவே நிட்டைகூடல் என்கிறார். அந்நிட்டை கைகூடப்பெற்றால் பிறவிக்கு ஏதுவாய வினைப்பற்று ஏற்படாது என்கிறார் உய்யவந்தார்.

நாம் யாரைச் சார்ந்து இருக்கவேண்டும், இறுதியாக யாரைப்பற்றி எண்ண வேண்டும் என்பதற்கு விடை தருகின்றார். இரு தேவ நாயனார்களும், சாரவேண்டிய பொருள் சிவம், சிவநினைவு. சிவநினைவும், தன்னுணர்வும்கூடக் கெட்டுவிடவேண்டும். அதுவே நிட்டைநிலை. இந்நிலை கைவரப்பெற்றால் வினையும், பிறவியும் நீங்கும் என்கிறார்கள்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை, மற்றது, வேண்டாமை வேண்ட வரும்" என்ற வள்ளுவர் கருத்தினை அப்படியே எடுத்து ஆளுகிறார் உய்யவந்தார்:

*வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்*
*வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது - வேண்டினது*
*வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக*
*வேண்டாமை வேண்டுமவன் பால். (40)*

வேண்டுதல் என்றால் விரும்புதல் என்று பொருள். விரும்பும் இடத்து பிறவாமையை விரும்புக என்று கட்டளை இட்டமையால் அஃது ஒன்றுமே விரும்பத்தக்கது, பிற எவையும் விரும்பத்தக்கன அல்ல. அப்பிறவாமை அவாவின்மையை விரும்பின் தானே வந்து எய்தும் என்றமையால், வேண்டுவதாக இருப்பின் முதல்வனிடத்தே அவாவறுத்தலை வேண்டுக என்கிறார் உய்யவந்தார்.

**சமய குரவர் தாக்கம்**

*பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்*
*காலனை அன்று ஏவிக் கராங்கொண்ட - பாலன்*
*மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்*
*கரணம்போல் அல்லாமை காண் (12)*

என்கிறார் உய்ய வந்த தேவர். சிவஞானிகளுக்குக் கரணங்கள் எல்லாம் சிவகரணமாய்த் திரிபுற்றதை, பாலைநிலம் நெய்தலாகும்படி திருஞானசம்பந்தர் பாடியதும், அப்பர் சுவாமிகள் பாம்பு விடம் நீங்கும்படி பாடியதும், முதலைவாய்ப் பாலனைச் சுந்தரமூர்த்தி நாயனார் அழைத்ததின் மூலம் அறியலாம் என்கிறார்.

**மெல்வினை, வல்வினை**

இறைவனை வழிபடுவதற்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்தல் முதலிய எளிதாகச் செய்யக்கூடிய செயல்கள் அனைத்தையும் மெல்வினைகள் என்கிறார். உய்யவந்தார். வயிரவருக்குச் சிறுத்தொண்டர் தம் பிள்ளையை அறுத்துக் கறியாக்கிய கொடுவினையை வல்வினை என்று குறிப்பிடுகிறார் உய்யவந்தார். "கொல்வினையே செய்யும் கொடுவினையே யானதனை வல்வினையே" என்கிறார்.

*"பாதகமே என்றும் பழியென்றும் பாராதே*
*தாதையை வேதியனைத் தாளிரண்டும் சேதிப்பக்*
*கண்டு ஈசன் தாமாம் பரிசளித்தார் கண்டாயே*
*தண்டீசர் தஞ்செயலால் தான்" (19)*

என்கிறார். பாவம் என்றும், பழியென்றும் பாராமல், அந்தணனாகிய தந்தையின் தாளினைச் சண்டேசுவரர் சேதித்தபோது இறைவன் தானாகின்ற தன்மையை அவர்க்களித்தான் என்கிறார்.

*"செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை*
*ஐய இது அமுது செய்கென்று - பையவிருந்து*

*ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை*
*நாட்டியுரை செய்வதே நாம்" (20)*

என்கிறார். வயலில் சிந்திய செந்நெல்லரிசி, செங்கீரை, மாவடு என்பனவற்றைச் சிந்திய இடத்திலேயே இறைவன் உண்ணவேண்டும் என்று தன் கழுத்தையறிந்த அரிவாள் தாயநாயனார் பெருமானுக்கு அமுதும் ஊட்டிப் பிறவியையும் அறுத்தனர். இவரை வல்வினை செய்தவர் என்கிறார்.

**உவமை நலம்**

கடல்நீர் தாகத்தைத் தணிக்காது. அதுபோல் மெய்ந்நூல் கற்றார்க்கு ஆசிரியன் அறிவுரை மட்டும் போதுமோ? போதாது. அனுபவப் பயனை அறிவாசான் விளக்கினால் ஒழிய அறிய முடியாது. மழை பொழிந்தால் அது பயன்படும். அதுபோல் அனுபவப்பயன் வேண்டும் என்கிறார். இதனை,

*"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன் வசன*
*மாத்திரத்தே வாய்க்கு நலம் வந்துறுமோ - ஆர்த்த*
*கடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ*
*தெண்ணீர்மையாய் இதனைச் செப்பு" (6)*

என்கிறார். பசு மலம் பிற மலங்களைப் போக்கும். அதுபோல ஆசிரியர் உருவில் சிவம் தோன்றிப்பிறவியை ஒழிக்கவல்லவன் ஆவான் என்கிறார். கடலில் ஆடும் தகுதி உடையவர்க்கும் நீச்சல் தெரிந்தவர்க்கும் கடலை அளக்க முடியாது. அதுபோல, சில அன்பர்கள் முதல்வனால் ஆட்கொள்ளப்பட்டபோதும் அவர்களால் முதல்வனை அளவிட முடியாது என்கிறார். எளிய உவமைகளால் அரிய பொருளை விளங்குவதில் இவருக்கு நிகர் இவரே எனலாம்.

**பதிக்கோட்பாடு**

*"ஒன்று அவன்தானே, இரண்டு அவன் இன்னருள், நின்றனன்*
*மூன்றினில், நான்கு உணர்ந்தான், ஐந்து வென்றனன்"*

என்று திருமூலர் கூறுவதுபோல், இறை ஒன்றே, உயிர்கள் பல என்றாலும், இறை அம்மையப்பராக வந்து அருளுவர் என்கிறார் உய்யவந்த தேவ நாயனார். சக்தி, சிவம் என இரு தன்மைகளைப் பெற்றாலும் ஒருவரே உலகுக்குத் தாயும், தந்தையும் ஆவார். ஒன்றாய் உடனாய் இருப்பவன் இறைவன்:

*"எல்லா உலகிற்கும் அப்புறத்தார், இப்புறத்தும்*
*அல்லார் போல் நிற்பர் அவர்" (1)*

என்கிறார். அவன் அருளால் அவன் தாள் வணங்க இயலும்; இல்லையேல் வணங்க இயலாது என்கிறார்.

*"பாகத்து*
*அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்*
*பெருவடிவை யாரறிவார் பேசு" (5)*

என்கிறார். எங்கும் நீக்கம் அற நிறைந்தவன் இறைவன் என்பதனை "வானகமும் மண்ணகமுமாய் நிறைந்தவான் பொருளை" என்கிறார் உய்யவந்த நாயனார்.

*"ஒன்றன்று, இரண்டன்று, உளதன்று இலதன்று*
*நன்றன்று, தீதன்று நானென்று - நின்ற*
*நிலையன்று, நீயன்று நின்னறிவு மன்னு*
*தலையன்று அடியன்று தான்" (57)*

ஆதியும், அந்தமும் அற்ற இறைவனை நாம் அளக்க இயலாது என்றும், அவன் தன்மையை - பண்பை அறுதியிட்டுக் கூறமுடியாது என்றும் கூறுகிறார். "மன்னன் அருள் எவ்வண்ணம் அவ்வண்ணமே அரன் அருளும்" என்கிறார். "ஐம்பூதம் முதல் எட்டுருவாய் நின்றவன் பெண்ணுற நின்றாடும் பிரான், மன்றினுள் ஆடுகின்றவன்" என்று பதியின் தன்மையை விளக்குகிறார். "ஆணாகி, பெண்ணாய், அலியாகி நின்றவன்" என்கிறார். அறிவாய் நிற்பவனும் அவனே. அவனி முதலாகி நிற்பவனும் அவனே என்கிறார். இறைவன் ஆசிரியன் உருவிலும் நிற்பவன். அவன் இவனாய் நின்றது அவன் அருளால் அல்லது எவன் அவனாய் வந்து நிற்கமுடியும் என்று இறைமாட்சியை, கொள்கையை இயல்பாய் எளிமையாய் உணர்த்துகின்றது இந்நூல்.

**பசுக்கோட்பாடு**

"அன்றி இவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே" என்று உயிர்கள் ஐம்புலன்கள் வழிச் செல்லும் தன்மை உடையன என்பதனை உணர்த்துகிறார். "சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்றார் வள்ளுவரும். உயிர்கள் ஐம்பொறிகள் வசப்படும் என்பதும் புலனாகும். உயிர்களுக்கு ஐந்து உடம்புகள் உள. உயிர்கள் அசுத்தமாயை வழிச்செல்லும். 36 தத்துவங்களை நன்கு அறிந்தவரே பிறவி அறுக்கும் வகையறிந்தவர் என்கிறார். உயிர் சுத்த மாயையின்கண் ஆட்பட்டால் திருவடி ஞானம் பெறலாம். அதனைவிட்டு அசுத்த மாயை, பிரகிருதி மாயையில் ஆட்பட்டால், பிறவித் தொடரும், உடம்பும் நீங்காது என்கிறார்

**பாசக் கோட்பாடு**

மூல உடம்பு, தூல உடம்பு, ஆறாறு தத்துவங்கள், பாசம் நீங்கினால் சும்மா இருத்தலாகிய சாதன நெறியை அடையலாம் என்பன போன்ற கருத்துக்களை இந்நூலில் காணலாம்.

*பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து*
*பற்றிப் பரிந்து இருந்து பார்க்கின்ற - பற்றதனைப்*
*பற்றிவிடில் அந்நிலையே தானே பரமாகும்*
*அற்றமிது சொன்னேன் அறி (30)*

என்று நமக்கு ஓர் உண்மையை எடுத்துரைக்கிறார்.

பிழைக்கும் வழியைக் கூறுகிறார். "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்று வள்ளுவர் கூறுவதுபோல் ஆசாபாசங்களைக் கொண்ட உயிர், பிழைப்பதற்கு ஓர் உபாயம் கூறுகிறார் உய்யவந்த தேவ நாயனார்.

# 2. 'உந்தி'யும் 'களிறு'ம்

- சித்தாந்த வித்தியாநிதி பேராசிரியர் சு. சண்முகவேல்,
*திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், தூத்துக்குடி*

உந்தியாரில் ஒரு பாடலும் களிற்றுப்படியாரில் ஒரு பாடலும் ஈண்டு சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

*பேரின்பமான பிரமக் கிழத்தியோடு*
*ஓர் இன்பத்து உள்ளான் என்று உந்தீபற*
*உன்னையே ஆண்டான் என்று உந்தீபற (34)*

சாத்திரங்களில் காலத்தாற் முற்பட்டது என்ற பெருமை திருவுந்தியாருக்கு உண்டு.

உந்தியாரின் இப்பாடலுக்கு வித்தியாசமான பொருளை ஒருவர் சிந்தித்தார். பிரமக் கிழத்தி - அருட்சக்தி என்பது பல்வேறு உரையாசிரியர்கள் கொண்ட பொருள். இதில் தவறு இல்லை. உள்ளான் என்ற சொல்லுக்கு அச்சக்தியை விட்டு நீங்காத சிவன் என்றே எல்லா உரைகளும் கொண்டன. ஒரு பேரறிஞர் மட்டும் முத்தான்மா என்றார். எது சித்தாந்தத்திற்கு ஏலும் என்பதே நம் சிந்தனை.

**கீழ்க்கண்டவற்றை முதலில் சிந்திக்க**

1. சீவன் முத்தர் நிலைபற்றிக் கூறும் பாடலில், சிவன் பிரமக்கிழத்தியோடு இருப்பான் என்பது வேண்டாக்கூற்று.

.2. திருவருட்பயன் 72ல் கூறப்படும் ஒருவன் ஒருத்தி யாரைக்குறிக்கும் என்பதையும் உடன்சிந்திக்க.

3. ஆண்டு, ஒருவன் = சிவன்; ஒருத்தி = ஆன்மா என்று கொண்டால் நாயகன் நாயகி பாவம் சைவத்திற்கும் உண்டு என்று முடிந்து கருத்துப் பிழைபடும்.

4. நாயகன் நாயகி பாவம் வைணவத்திற்கு உண்டு, திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் உள்ள பெருத்த வேறுபாடே அதுதான். சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுர மூர்த்திப் பிள்ளையின் "இருபாவை ஆராய்ச்சி"யில் விரிவாகக் காண்க.

5. மாணிக்கவாசகரின் திருக்கோவையார் "நாயகன் நாயகி" பாவம் என்று கொண்டால் சித்தாந்தம் பிழைபடும். இல்லை, அந்நூல் அகத்துறை அன்று என்று சாதித்தால் பிரபந்த இலக்கணத்தோடும் யாப்பிலக்கணத்தோடும் முரண்படும். ஆகவே சொற்குற்றமும் சித்தாந்தக் குற்றமும் வராதவாறு சிந்தித்தால் கீழ்க்கண்டவாறு கொள்வதுதான் பொருளாகத் தோன்றுகிறது.

திருவருட்பயனில் வரும் "மடந்தையர் இருவர்" = பெத்தான்மா + பெத்தான்மா

ஒருவன் ஒருத்தி = முத்தான்மா + பிரமக்கிழத்தி

ஒருவன் ஒருத்தி = சிவன் + முத்தான்மா என்று கொண்டாலும் நாயகன் - நாயகி பாவம் வந்துவிடும்.

யோகியர் பரிபாஷையில் குமரி என்பது திரோதான சக்தியும், கிழவி என்பது அருட்சக்தியையும் குறிக்கும். கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி (உந்தி - 14) இருட்டறை மூலை இருந்த குமரி (திருமந்திரம் - 1514) ஆகியவற்றில் இத்தகைய ஆட்சி காண்க.

இறைவன் அருட்சக்தியை நாயகியாகவும், முத்தான்மாவை நாயகனாகவும் கொள்ளும் மரபு சைவத்தில் ஏற்புடைத்தா என்பது அடுத்து எழும் வினா. இஃது ஏற்புடையதாகவே ஞானிகள் போற்றி வந்தமைக்குக் கீழ்க்கண்ட பாடல்கள் சான்று பகர்கின்றன:

*"இருட்டறை மூலையிருந்த குமரி*
*குருட்டுக் கிழவனைக் கூட நினைந்து*
*குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி*
*மருட்டி அவனை மணம் புணர்ந்தாளே."* *- திருமந்திரம் - 1514.*

*என்னிடை ஞான வல்லியை நன்மணம் புணர்த்தி*
*ஆன நேயத் தரும் பொருள் வழங்கி*
*இறவா வீட்டினி லிருத்திக்*
*குறையாச் செல்வரோடு கூட்டுதி மகிழ்ந்தே.* *- சிதம்பர மும்மணிக்கோவை*

*சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி*
*மென்றோள் தடமுலை* *- சுந்தரர்: ஆமாத்தூர்*

*தென்னாவ லூர் மன்னன் தேவர்பிரான் திருவருளால்*
*மின்னாருங்கொடி மருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்*
*பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவதே சார்வாகப்*
*பன்னாளும் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார்.* *- தடுத்தாட் கொண்ட புராணம் 181.*

இதேபோல சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்தைப் பெண்பாற்படுத்து ஓதுவதும் சைவ மரபாக இருந்து வந்திருக்கிறது என்ற செய்தியை இணைத்துப் பார்க்கும் போது, இப்பேரறிஞர் கருத்தே சரியென்று தோன்றுகிறது. திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவானாக இருந்த இலங்கை, வடகோவை சபாபதி நாவலரே ஈண்டுக்குறிப்பிடப்பட்ட இரட்டை அறிஞர்.

திரோதான சக்தி மருட்டும்; அருட்சக்தி தெருட்டும். "மருள் ஆனாம் மாணாப்பிறப்பு" என்ற வள்ளுவர் வாக்கும் ஈண்டுச் சிந்திக்க.

**திருக்களிற்றுப்படியார்**

உந்திக்குப் பாடியம் போன்றது திருக்களிற்றுப்படியார்; உந்தி ஆசிரியரின் ஞானப்பேரனால் இயற்றப்பட்டது. இதில் ஒரு பாடல்:

*அது இது என்றும் அவன் நானே என்றும்*
*அது நீயே ஆகின்றாய் என்றும் - அது ஆனேன்*

*என்றும் தமை உணர்ந்தோர் எல்லாம் இரண்டாக*
*ஒன்றாகச் சொல்லுவரோ உற்று?*

இக்களிறு என்னுதலிற்றோவெனின் சைவ சித்தாந்தம் கூறும் சுத்தாத்துவிதக் கொள்கை இது என உணர்த்திற்று எனக் கூறலாம். பதவுரை காண்போம்:

| *பதம்* | *உரை* |
|---|---|
| இது அது என்றும் | "பிரக்ஞானம் பிரமம்" என்று கூறும் ரிக்வேத ஐதரேய உபநிஷத் வாக்கும் |
| அவன் நானே என்றும் | "அஹம் பிரம்மாஸ்மி" என்று கூறும் யஜுர்வேத பிரஹதாரண்ய உபநிஷத் வாக்கும் |
| அது நீயே ஆகின்றாய் என்றும் | "தத் த்வம் அஸி" என்ற சாமவேத - சாந்தோக்கிய உபநிஷத் வாக்கும் |
| அது ஆனேன் என்றும் | "அயம் ஆத்ம பிரமம்" என்ற அதர்வண வேத வாக்கும் |
| தமை உணர்ந்தார் எல்லாம் | இந்நான்கு மகா வாக்கியங்களை உணர்ந்த சிவஞானிகள் எல்லோரும் |
| உற்று | சிவோகம்பாவனையில் அனுபூதியை உற்ற பின்னர் |
| இரண்டு ஆக | பேதமாகவோ (மாத்துவர் போன்று) |
| ஒன்று ஆக | அபேதமாகவோ (சங்கரர் போன்று) |
| இரண்டாக ஒன்றாக | பேதாபேதமாகவோ (இராமானுசர் போன்று) |
| சொல்வரோ? | சொல்லுவார்களோ? |

(ஓகாரம் - எதிர்மறை)

"பொற்பணிபோல் அபேதப் பிறப்பு இலதாய் இருள் வெளிபோல் பேதமும், சொற்பொருள்போல் பேதா பேதமும் இன்றி" - என்ற (சிவப்பிரகாசம் - 7) வாக்கிற்கு அரண் செய்வதுபோல் அமைந்துள்ளது இப்பாடல். சிவஞானபோதம் - வெண்பா 78 உடனும் பொருத்தி ஆராய்க.

"சம்பந்த விசேடணம் உணர்த்துதலே அத்துவிதம் என்ற சொல்லின் நோக்கம்".

"ஈண்டுச் சுத்தம் என்றது யாதானும் ஒன்றால் விசேடிக்கப்படாது நிற்றலை"

"வேதாந்தமும், சித்தாந்தமும் வேறு என்பாரை மறுத்துப் பல பொருள்படும் சூத்திரத்தை அங்ஙனம் படாமைத் தெளித்து உரைக்கும் பாடியம்போல வேதாந்தத்தைத் தெளிந்து உரைப்பதே சைவ சித்தாந்தம் என்பார் (உமாபதி சிவம்). மகுடாகமம் முதலியவற்றில் ஓதியவாறே வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன் என்றார். ஈண்டு வேதாந்தம் என்பது வேதத்தின் முடிவுகளாகிய உபநிடதங்களை என்ற மாபாடியக் கருத்துக்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

"சுத்தாத்துவிதம்" என்ற தொகைச்சொல்லில் சுத்தம் என்றது அடையன்று. சுத்தமான அத்துவிதம் (Pure Advaitam) என விரித்தால் அது பிழை. சுத்தம் என்ற அத்துவிதம் (Advaita

as it is) என இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையாக விரித்தலே சரி. திருக்குறளில் ஆதி என்ற பகவன் என்று விரித்தாற்போல.

இத்தகைய நுட்பங்கள் எல்லாம் பெறுமாறு "புனிதம் எனும் அத்துவித" என்று இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகையாக எந்நாட்கண்ணி-மெய்கண்டார் துதியில் கூறிய தாயுமானாரின் வாக்குப் பொன்னேபோல் போற்றத்தக்கது.

"God and Soul are metaphysically distinct; but will become experimentally one by union"- திருவாசக மொழிபெயர்ப்பு என்ற ஜி.வன்மீகநாதரின் கருத்துப்பிழிவும் மிக அருமை.

சொற்செறிவும், பொருட்டெளிவும் மிடைந்து பொருந்திய இக்களிற்றுப்பாடல் சித்தாந்தம் பயிலுவோர்க்குத் தித்திக்கும் தீங்கனி.

## 3. சிவஞானபோதம் - பாண்டிப்பெருமாள் விருத்தியுரை

- சைவத் தமிழ்ச் சதுரர் புலவர் மு. வைத்தியநாதன், எம்.ஏ.,
*செயலாளர், திரிபுரச் சைவசித்தாந்த சபை, மலைக்கோட்டை, திருச்சி -2.*

**சிவஞானபோதம்**

சிவஞானபோதம் - சுத்தாத்துவித சைவ சித்தாந்த நூல்களின் தலைமணியாகும். இந்த நிலவுலகத்துப் புறவிருளை நீக்கிப் பொருள்களைக் கண்களுக்குக் காட்டுதற்குப் பன்னிரண்டு வகையுடைய ஞாயிறுபோல, தொன்றுதொட்டுவரும் மூலமல இருளின் நீக்கிச் சிவபரம்பொருளை ஆன்மாவிற்குக் காட்டி அநுபூதி நிலை பெறுவித்தற்குப் பன்னிரண்டு நூற்பா வடிவில் சிவஞானஞாயிறாக எழுந்தது இச்சிவஞானபோதம் என்பது ஆன்றோர் கருத்துரையாம்.

**முதன் நூல்**

வேதங்கள் - ஆகமங்கள் முதலிய அனைத்து நூல்களும் திருவைந்தெழுத்தால் உணர்த்தப்பெறும் இறை, உயிர், தளை என்னும் முப்பொருளுண்மைகளையே கூறப்புகுந்தன. மேலும், அவை எல்லாம் முப்பொருள்களின் தடத்த-சொரூபங்களாகிய பொதுவியல்பு, சிறப்பியல்புகளையே கூறப்புகுந்தன. ஆனால், சிவஞானபோதம் அவ்விரண்டின் இயல்புகளையும் ஒருங்குவைத்து, நேரே கூறும் சிறப்பினையுடையது. எனவே, சிவஞானபோதம் ஏனைய நூல்களைவிட முதன்மையுடையதாகும்.

**தாயகம்**

சிவஞான சந்தானாசிரியர்களில், இரண்டாமவராகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், தம் சிவஞானசித்தியார் நூலில், 'மெய்கண்ட நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்' எனக் குறிப்பிடுவதால் இந்நூலின் மேன்மையினையுணரலாம். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு ஞானநூல்கள் தவிர, ஏனைய நூல்களுக்கெல்லாம் சிவஞானபோதம் தாயகமாக விளங்குகிறது.

**தோத்திரங்கள்**

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்திகளும், மாணிக்கவாசகருமாகிய சைவ சமயாசாரியர்கள் நால்வரும், சிவபெருமான் திருவருளால் நன்மக்கள் உய்தற்பொருட்டு அவதரித்து, சிவாகமங்களின் பிழிவைத் திருமுறை நூல்களாகத் தந்தருளினார்கள். அவை தோத்திரங்கள் என்று போற்றப் பெறுகின்றன.

**சாத்திரங்கள்**

அதன்பின் மெய்கண்டதேவ நாயனார், திருவெண்காட்டுப் பெருமான் திருவருளால் தோன்றி, ஆகமங்களின், திருமுறைகளின் பிழிவாகச் சிவஞானபோதம் என்னும் ஞானப் பெருநூலை அருளினார்கள். இத்தகைய பெருமைகளையுடைய ஞானப் பெருநூலுக்குச், செய்யுள் வடிவில் அமைந்த சிறந்த பேருரை 'சிவஞானசித்தியார்'. இந்தச் செய்யுள் வடிவப் பேருரை நூலைச் செய்தருளியவர், மெய்கண்டாருடைய முதல்மாணவரும், சகலாகம பண்டிதருமாகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆவார். அதன்பின் அவ்வுரை உபதேச பரம்பரையாக வந்தது. பின்பு சம்பிரதாய உரைநூல்களும் வந்தன.

**சிவஞானசுவாமிகள்**

திருவாவடுதுறை ஆதீனப் பதினொன்றாவது குருமூர்த்திகள் காலத்தில், வடநூற்கடலையும் தமிழ்நூற்கடலையும் நிலைகண்டுணர்ந்த அருள் மாதவச் சிவஞான யோகிகள் இப்பெருநூலுக்குச் சிற்றுரையும் பேருரையும் எழுதிச் சிறப்பித்தார்கள்.

**பல உரைகள்**

பிற்காலத்தில் பல உரை நூல்கள் வெளிவந்தன. அவைகளில் சிலவற்றை அறியலாம். சிவப்பிரகாசம் பிள்ளை உரை, காந்திமதிநாத பிள்ளை உரை, மாணிக்கவாசக ஞானதேசிகசுவாமிகள் உரை, சிதம்பர சுவாமிகள் உரை, வேதாந்தப்பிரகாசர் உரை, வ.உ. சிதம்பரம் பிள்ளை உரை, சுத்தானந்த பாரதியார் ஞானதீபம், ஔவை சு. துரைசாமி பிள்ளை - சிவஞானபோதச் செம்பொருள், வார்த்திகம், சிந்தனை, திறவுஉரை, சிவஞானபோத வசனாலங்காரதீபம், சிவஞானபோதார்த்த வெகுவசனம், மறைமலையார் சிவஞானபோத ஆராய்ச்சியும் சைவ சித்தாந்த ஞானபோதமும், சிவாக்கிர யோகிகள் இலகுடிகா, சிவாத்ம ஜோதியின் வடமொழியுரை, முத்தையாப்பிள்ளை உரை, ந.ரா. முருகவேள் உரை, வரதராச பிள்ளை உரை, விருத்தாசலம் வேதாந்தமடம் சுவாமிகள் உரை, கா.சு. பிள்ளை - சிவஞானபோதசாரம், அருணை வடிவேலர் - சிற்றுரை, கிருபானந்தவாரியார் உரை இப்படிப் பல உரை நூல்கள் வெளிவந்துள்ளன.

**பாண்டிப்பெருமாள் விருத்தியுரை**

மேற்குறித்த உரைநூற்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியது பாண்டிப் பெருமாள் விருந்தியுரை. இந்நூல், திராவிட மாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞானசுவாமிகள் காலத்துக்கு முந்தியது. இவரே பின்னர் பதவுரையும் தெளிவுரையும் எழுதிச் சிறப்பித்துள்ளார்.

**முதல் உரைநூல்**

பாண்டிப்பெருமாள் விருத்தியுரை சிவஞானபோத நூலுக்கு எழுதப்பெற்ற முதல் உரை நூலாகும். தொல்காப்பிய நூலுக்கு முதல் உரை நூல் வரைந்த இளம்பூரணர்போல, இப்பாண்டிப்பெருமாள் மிக எளிமையான, அருமையான உரையை அருளியுள்ளார். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை எளிமையாக அறிய உதவியது இளம்பூரணர் உரை. சிவஞானபோதம் என்னும் மிகஉயர்ந்த சாத்திர நூலின் நுண் பொருள்களை ஒருகைவிளக்குப்போலக் காட்டியுதவியது பாண்டிப் பெருமாள் விருத்தியுரை.

**நூலாசிரியர்**

விருத்தி உரையாசிரியர் பாண்டிப் பெருமாள் திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூரில் தோன்றியவர்; தூய சைவ வேளாளர்; துறைசை யாதீனத்துச்சீடர்; ஆதீனத்தில் ஞானதீட்சை பெறாதவர்; சாத்திர உபதேசம் பெற்றவரில்லை; என்றாலும், மெய்கண்ட சந்தானத்து அநுக்கிரகம் பெற்றவர்; 'சம்பிரதாய திருட்டியால் அறிக', 'சம்பிரதாய திருட்டியால் அறிவித்தது' எனப் பலவிடங்களில் குறித்துள்ளார். சம்பிரதாயம் = அநுக்கிரகம். நல்லாசிரியர்பால் தமிழ், வடமொழிப் புலமை அடைந்தவர்; இலக்கண, இலக்கிய, தருக்க நூல்புலமையும் மிக்கவர்; புலமையில் சிறந்து விளங்கிய குமரகுருபரர், வெள்ளியம்பலவாணர்போல், இவரையும் கருதலாம். அருள்மெய்கண்டதேவநாயனாரை உபாசனாமூர்த்தியாகக் கொண்டு, சிவஞானம் கைவரப் பெற்றவர். மெய்கண்ட தேவர் அருளால், இவ்வுரையை வரைந்தார் என்பது "மெய்கண்டான் பேரருளால் ஆராய்ந்து எழுதினான்" எனவரும் உரைச்சிறப்புப் பாயிரத்தால் இவ்வுண்மை விளங்கும். சிவஞானிகள் புகழும் வண்ணம் இவர், இவ்வுரை செய்தார் என்பது "பழுதிரியும் உண்மைப் பாண்டிப் பெருமாள் - சிவஞானபோதம் தெரியவுரை செய்தான் - தவஞானிகள் உணரத்தான்" என்னும் பகுதியால் தெளியலாம்.

**அளவை நூல்விளக்கம்**

சிவஞானபோதம் முதற்நூற்பாவிற்கு உரைஎழுதத் தொடங்கிய பாண்டிப் பெருமாள், சிவஞானசித்தியார் அளவைநூல் இலக்கணம் பதினான்கு திருவிருத்தங்களுக்கு விரிவான உரை முதலில் எழுதியுள்ளார். இதனைப் "பெத்தமறு பாண்டிப் பெருமாள்" என்னும் வெண்பா இனிது உணர்த்தும்.

திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட சிந்தனையுரை, சம்பிரதாயவுரை, சிற்றுரை, பேருரைகளில் கண்ட சிவஞானபோத நூற்பாக்களும் எடுத்துக்காட்டு வெண்பாக்களும் பல இடங்களில் பாண்டிப் பெருமாள் அவர்களால், வேறுபாடங் கொள்ளப்பெற்று, உரையும் செய்யப்பெற்றுள்ளன.

**கல்லால் நிழல்மலை வில்லார்: உரைநயம்**

கல்லாலினுடைய நிழலிலே எழுந்தருளியிருந்தார். எனவே, தம்மை வழிபட்டவர்களை அருளுதல் காரணமாகச் சரியை, கிரியை, யோக ஞானமாகிய ஆகமங்களை அருளிச் செய்தவர் என்பதாம். மலைவில்லார் - மகாமேருவாகிய மலையை வில்லாக வளைத்தவர். எனவே, தம்மை வழிபடாதவர்களை நிக்கிரகித்தவர் என்பதாம். ஆர் - என்பதைக் கல்லால் **நிழலார்**; **மலைவில்லார்** என இரண்டிடத்தும் கூட்டிப் பொருள்கொள்ள வேண்டுமாம். அருளியபொல்லார் - அவரால் அருளப்பெற்ற பொல்லாத பிள்ளையார் என்னும் திருநாமத்தையுடைய மூத்த நாயனார். இணையடி நல்லார் புனைவரே - அவருடைய இரண்டு சீர்பாதங்களையும் அறிவால் உயர்ந்த, தவங்களை உணர்ந்த ஞானவான்கள் சூடுவார்கள். எனவே, சிட்டரை அநுக்கிரகித்தும், துட்டரை நிக்கிரகித்தும் செய்ய வல்லவரே கர்த்தா என்பதாம். ஆதலால், அவரால் அருளப் பெற்ற மூத்த நாயனாரும் அத்தைன்மையர் என்றாயிற்று. அது வழிபடுவோருடைய பாசத்தை நிக்கிரகித்து வீட்டை அநுக்கிரகிப்பர் என்னும் பொருள் தருவதாயிற்று. ஞானிகள் அவர் சீர்பாதங்களைப் புனைவதால், யானும் அது செய்யக் கருதினேன் என்கிறார்.

**பாயிர விளக்கம்**

சிவபெருமான் - நந்திதேவர் பெருமானுக்கு அருளிச் செய்து தொகுத்துரைத்த, பன்னிரண்டு கிரந்தத்தையும், பன்னிரண்டு நூற்பாக்களாக மொழிமாற்றம் செய்து பொல்லாப் பிள்ளையார் பிரதிபட்சத்தருளிச் செய்ய, அதற்கேற்ற உதாரணவெண்பா, அவையடக்கம் ஒன்றுடன் எண்பத்து மூன்றாக அருளிச் செய்தவர் மெய்கண்ட தேவர் என்பதாம்.

ஆக்கியோர் பெயர்: மெய்கண்டதேவர். வழி: நந்திமுனிகணத்து அளித்தது. எல்லை: கேட்போரது பொருண்முடிவு. நூற்பெயர்: சிவஞான போதம். யாப்பு: மொழி பெயர்த்தல். நுதலியபொருள்: பதிபசுபாசங்கள் உணர்த்தல். கேட்போர்: பொல்லாதபிள்ளையார். பயன்: சுவாநுபூதியாக நேயத்தழுந்தல். காலம்: சத்திநிபாதம் நிகழ்தல். களம்: திருவெண்ணெய்நல்லூர். காரணம்: கதிப்பால் செல்ல ஏதுநெறி எனும் இவர்கட்கு அறிய உணர்த்துதல்.

**தனிச்சிறப்பு**

சிவஞானசித்தியார் பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அதிகார அடைவு முந்துநூல் அடைவாகவே உள்ளது. மேல்கோள்- ஏது முதலியன ஆசிரியர்தம் நடையில் உள்ளன. உதாரண வெண்பாக்களும் அவ்வாறு அமைந்துள்ளன. அளவை நூற்செய்திகள் மிக விரிவாக உள்ளன. சிவஞான சித்தியார் சுபக்க விளக்கமே மிக அதிகம். பரபக்க விளக்கம், மறுப்புகள் அதிகம் இல்லை. ஒரோவழி மறுக்குமிடங்களில் சமயங்கள், மதங்கள் பெயர்களைக் கூறியுள்ளார்.

**வழக்குச் சொற்கள்**

ஞானநூல்நிலையில் மிக அரிய மரபுச் சொற்களைப் பயன்படுத்திய உரையாசிரியர் பாண்டிப் பெருமாள், வழக்குச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். 1. கர்த்தா கிருத்தியம் *செய்கைச்சே*, கன்மம், புசித்து *வருகச்சே*, அவ்விரண்டும் ஒருதானத்தில் *கிடக்கச்சே*, ஒன்றாய் *இருக்கச்சே* இரண்டாய் இருக்கும், எங்கும் தானாய் *நிற்கச்சே* 2) பிராரத்தம் புசிக்க *வேணும்* குருவும் சற்குருவாக *வேணும்*, நூலும் வேதாகமமாய் இருக்க *வேணும்*. 3) படலம்: திமிரம் திமிரம் நீங்கினகாண். 4) யான் சொல்ல *வேணுமோ*? *நிற்கச்சே* என்பவை சான்றுகள்.

**ஆய்விற்கு**

'எந்தை சனற்குமாரன்' வெண்பா பெரும்பகுதி வேறுபாடமாக உள்ளது. சித்தியார் சுபக்கச் செய்யுள்கள் வேறு பாடம் கொள்ளப்பெற்று உரையில் காட்டப்பெற்றுள்ளன. சிவஞான சுவாமிகள் உரை வந்தவுடன் பாண்டிப் பெருமாள் உரை அருகி மறைந்தது. சம்பிரதாய முறையில், திருவாவடுதுறை உபதேசமரபில் ஞானசாத்திரம் கேட்போர், முதலில் இவ்வுரையையே கற்பர்; கேட்பர். நூல் ஆய்வாளர்கட்கு இந்நூல் மிகவும் உதவும்.

**அறிய நேர்ந்தவை**

பாண்டிப்பெருமாள் மிகப்பெரிய இலக்கணப் புலமையாளர். ஞானாமிர்தப் பயிற்சியாளர். அளவைநூல் அறிவு மிக்கவர். சித்தியார் முழுவதும் ஆராய்ந்தவர். பரசமய மறுப்பு மிகவும் குறைவு. மெய்கண்டார் சத்தியத்தைத் தரிசித்தவர் எனக் கூறல்.

*"பெத்தமறு பாண்டிப் பெருமாள் சிவஞான*
*சித்தியள வைக்கும் தேர்ந்துணர்ந்து - முத்தித்*
*திறமுடைய வண்மைச் சிவஞான போதத்*
*துடனெழுதி னான்நல் லுரை."*

# 4. தமிழ் மெய்ந்நூல் முதற்பா*

- அறிஞர் கா. சுப்பிரமணியம் பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.

பண்டைத் தமிழர் தொழிற்கலை, கவின்கலை, மெய்க்கலை என்பவைகளில் தலைசிறந்து விளங்கினர். அவர்கள் மெய்க்கலைக்குரிய பண்டை முழுநூல்கள் இப்போது கிடையாது போயினும் அக்கலையின் கருத்துக்கள் தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும், பிற சங்க நூல்களிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் கடவுள், உயிர், மெய், வினை முதலிய சொற்கள் மெய்க்கலைச் சார்பானவை. "வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்றவிடத்து, இயல்பாகவே வினையினின்று நீங்கியும் விளங்கியும் உள்ள அறிவுடையவன் முதல்வனெனவே, வினையுட்பட்டு இருள் போன்ற தொன்றால் மறைக்கப் படுதலின் விளங்காத அறிவுடைய உயிர் உண்டென்பதும், அவ்வுயிர்க்கு வினையையும் இருளையும் நீக்கி உண்மை அறிவு அளிப்பவன் முதல்வன் என்பதும் போதருதல் காண்க. திருவள்ளுவ நூலில், 'இருள்சே ரிருவினை', 'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு மருள்' என்னும் சொற்றொடர்களால் இருள், வினை, மருள் என்ற மூவகைக் கட்டு உயிர்க்கு உண்மை தெற்றெனப் புலப்படும். கடவுள், உயிர், எழு பிறப்பு, ஊழ், வீடு முதலியவற்றி னியல்பு அந்நூலில் தெள்ளிதிற் காணப்படும். எட்டுத்தொகைக்

கடவுள் வாழ்த்துக்களில் சிவபெருமானது மாதொருபாக வடிவம், கூத்த வடிவம் முதலியன விதந்தோதப்பட்டன. கலித்தொகை 133-ஆம் பாடலில் தென்முகத் தெய்வவடிவம் பேசப்படுதல் காண்க. அதன் 129வது செய்யுளில் உலகத்தைப் படைப்பவனும் ஒடுக்குபவனும் ஒருவன் என்பது விளக்கப்பட்டது. பரிபாடலில் முருகக்கடவுள், திருமால் என்னும் தெய்வங்களில் வைத்து முழுமுதற் கடவுளினியல்பு விரித்துரைக்கப்பட்டது. சங்க நூல்களுக்குப் பின் வந்த அருள் நூல்களிலும் பெருங் காப்பியங்களிலும் சிவபெருமானது உயர்வும், சிவசத்தியின் இயல்பும் பொங்கி மிளிர்கின்றன. அவை விரிக்கிற் பெருகும்.

சிறந்த தமிழ் நூல்கள் எவற்றினும் தமிழரது முழுமுதற் கடவுளைப் பற்றி மெய்க்கொள்கைக்கு மாறாக யாதுங் காணப்படுவதில்லை. முற்காலத்தில் தமிழ்ச் சொற்களால் விளக்கப்பட்ட கருத்துக்கள் பல. பிற்காலத்தில் பிறமொழிச் சொற்களால் விளக்கப்பட்டன. தமிழ் நூல்கள் மறையவே, வடநூல்கள் சிற்சில விகற்பங்களோடு தமிழ்நூற் கருத்துக்களை விளக்கலாயின. வடசொற் கலந்த தமிழ் நூல்களே பிற்காலத்தில் சமய நூல்களாகத் தோன்றின. அவைகள் துதி நூல் வடிவாகவும், மெய்ந்நூல் வடிவாகவும் அமைந்துள்ளன. அவை யெல்லா வற்றிற்கும் திறவுகோலாகவுள்ள தனிச் சிறு முழுநூல் ஆசிரியர் மெய்கண்டாரது சிவஞான போதமாகும். வித்துள் மரம் அடங்கினாற்போல அதனுள் தமிழர் மெய்ந்நூல் விரிவனைத்தும் அடங்கி நிற்கிறது. அதன் முதற் சூத்திரக் கருத்துக்களை இவண் தொகுத்துக் கூறுகின்றாம்.

ஐம்பொறிகளால் சுட்டி யறியப்படும் பொருள்கள் உள்பொருள்களே. அவ்வுள் பொருள்களின் தொகுதியே உலகம் எனப்படும். கானலானது சேய்மையில் நீர் போலத் தோன்றினாலும் அது இல்பொருளன்று. நீர் போலத் தோன்றிய அதன் தோற்றமே பொய்யாம்; இல்லாததற்குத் தோற்றமில்லை. ஒரு பொருள் ஒரே நிலையில் எப்பொழுதும் காணப்படாமை காரணமாக அது இல்பொருளாகாது. நிலையாமை காரணமாக அதனைப் பொய்யென்று கூறுதலால் அது இல்பொருளாவதில்லை. நீர் ஆவியாக மாறிக் கண்ணுக்குப் புலனாகாது மறைந்துவிட்டால், அது இல்பொருளெனப் படாது. உள்பொருள் இல்பொருளாவதில்லை. இல்பொருள் உள்பொருளாவதில்லை. உள்பொருள் காரியநிலை காரணநிலை என இரண்டு நிலையுடையது. காரிய நிலையில் அது வெளிப்பட்டுத் தோன்றும். காரணநிலையில் அது புலனாகாமல் நுட்பமாயிருக்கும். ஒரு பொருள் காரணநிலையிலிருந்து காரியநிலைக்கு வருவதே அதன் தோற்ற மெனப்படும். காரிய நிலையிலிருந்து காரணநிலைக்கு மீளுதல் அதன் ஒடுக்கம் எனப்படும். பல பொருள்களின் கலப்பால் ஒரு பொருள் தோன்றும். கலந்த பொருள்களின் பிரிவால் அது ஒடுங்கும்.

உலகப் பொருள்கள் உண்மையில் இல்பொருளாயின் அவற்றின் தோற்றமும் ஒடுக்கமும் பொய் யெனவே முடியுமாதலின் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி பயனற்றதாகும். அதுபோல, ஒரு பொருள் மண் போலக் கிடந்த இடத்திற் கிடப்பதானால் அதற்குத் தோற்றமும் ஒடுக்கமும் இல்லையாகலின், அதைப்பற்றி ஆராய வேண்டிய அவசியமுமில்லை. அறிவுடைய பொருள்களை அவை சார்ந்துள்ள அறிவில் பொருள்களின் வாயிலாகவே நாம் அறிகின்றோம், பருவுடம்பு, நுண்ணுடம்பு முதலியவற்றின் தொடர்பு யாதுமில்லாது அறிவு மாத்திரையாய் நிற்கும் உயிரைப் பற்றி நாம் நேரிலே யாதும் அறியமுடியாது.

சடப்பொருள்களெல்லாம் சுட்டியறியப்படும் தன்மையன. சுட்டப்படும் ஒரு பொருளை ஆய்ந்து பார்க்கின் அது நுட்பமான பல பகுதிகளை யுடையதாய்க் காணப்படும். நுட்பமான பகுதியை அணு என்றல் மரபு. அணு என்பதும் ஒரு வடிவு உடையது; ஆதலினாற்றான் பல அணுக்கள்

கூடுகின்றன என்று பேச இடமுண்டு. வடிவென்பது திரட்சி காரணமாக உண்டாவதாதலின், அத்திரட்சி அதற்கு முற்பட்ட நிலையிலுள்ள ஒரு பொருளின் கண்ணே ஏற்படவேண்டும். திரட்சி ஏற்படாத முதல் நிலையில் உள்ளது எதுவோ அதுவே சடப்பொருளின் மூலமாகும். அம்மூலமே மாயை எனப்படும். மாயை என்பது மாயா என்பதன் திரிபு: மாயா = மாய்+ஆ. மாய்தல், ஆதல் என்ற இருசொற்களின் பகுதியே இவையென வுணர்க. மாய்தல் = மறைதல் அல்லது ஒடுங்குதல், ஆதல் = உண்டாதல். எல்லாச் சடப்பொருள்களும் ஒடுங்கித் தோன்றுதற்கு அடிப்படையாகிய சடமூலம் மாயை எனப்பட்ட தென்றறிக.

மாயையினின்று ஒரு பொருள் திரட்சிப் படுதல் தானே இயல்வதா மென்னில் அத்திரட்சி அதனியற்கையாகும். திரட்சி எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டே போகவேண்டும். உண்மையில், திரட்சியும் அதற்குமாறான ஒழுக்கமும் காணப்படுகின்றன. உதாரணமாக, மக்களுடம்பு சில காலம் வளர்ந்து கொண்டேபோய், பின் ஒடுங்கும் நிலை அடைகின்றது. வளர்ச்சியும் ஒடுக்கமுமாகிய இருவேறு தன்மைகள் ஒன்றி னியற்கைத்தன்மைக ளாகமாட்டா. எனவே, ஒரு பொருள் இருதன்மை அடைதற்கு மற்றொரு பொருளின் தொடர்பினை உடையதாம். வளர்ச்சி ஒரு நிலையினின்று தொடங்குவதாகத் தோன்றுமிடத்து அத்தொடக்கத்தைத் தோற்றமென்ப; வளர்ச்சியை நிலை என்ப; ஒடுக்கத்தை அழிவு என்ப. ஆதலின் நூல்களில் ஒவ்வொரு சடப்பொருளும் தோற்றம், நிலை, அழிவு என முத்தொழிலுடையதாகப் பேசப்படும்.

சடப்பொருள்கள் அறிவுடையனவல்ல. அவற்றை அறிவுடைய பிறிதொரு பொருளியக்கினால் அவை இயங்கும் ஒரு சடப் பொருள் அணுக்களாகப் பிரிய அவ்வணுக்களும் திரட்சியற்று மாயையிலொடுங்குமாயின் மாயையினின்று அணுக்களைத் தோற்றுவித்தற்கும், அவைகளைச் சேர்த்துப் பொருளாக்குதற்கும், அவற்றைத் தோன்றியவாறே மீள ஒடுக்குதற்கும் அறிவுடைய பொருளின் சார்பு வேண்டப்படும்.

உலகப் பொருள்களெல்லாம் அறிவுடைப் பொருள், அறிவில் பொருள் என்னும் இருபெரும் பகுப்பினு ளடங்கும். அறிவுடைய வுயிர் அறிவில்லாத உடம்பின் தொடர்பினாலேயே அறியப் படுகின்றது. உடம்பு ஆண் பெண் என இருதிறப்படும். இவ்விரு பகுப்பையும் சேர்த்துச் சுட்டி யறியப்படும் உலகப் பொருள்கள் முத்திறப்படுதலின் அவற்றின் தொகுதியை ஆசிரியர் மெய்கண்டார் 'அவன் அவள் அது எனுமவை' என்றார். அறிவுளி, அறிவிலி என்ற இரண்டு பகுப்பே அவர் கொள்ளின், அறிவுடைப் பொருளின் தோற்ற வளர்ச்சிக் கேதுவாகிய ஆண் பெண் என்ற பகுப்பு தெள்ளிதிற் புலனாகா தென்க. மேலும், அறிவுடைப் பொருளின் தோற்ற வொடுக்கங்களுக் கேதுவாகிய ஒன்று அறிவுடைப் பொருளாகவே இருத்தல் வேண்டும் என்ற குறிப்பும் தெளிவாக விளங்காது.

சுட்டியறியப்படும் பொருள்களின் தொகுதியாகிய உலகம், கருத்தினால் சுட்டியறியப்படுவதே. ஒவ்வொரு சடப்பொருளும் முடிவில் மாயையிலொடுங்குமெனவே, சடப்பொருள்களின் தொகுதியாகிய உலகமும் சுட்டற்ற மாயையில் முடிவில் ஒடுங்குவதே யாகும். சடப்பொருள் ஒவ்வொன்றின் இயக்கமும் அறிவுப் பொருளின் சார்பால் ஏற்படுதலின், உலகத்தி னியக்கமும் அறிவுடைய ஒருபொருளின் சார்பால் ஏற்படுவதாகும். உலகத்தை மாயையினின்று தோற்றுவித்து அதன்கண் மீள அதனை ஒடுக்குபவன் அறிவுடைய ஒரு முதல்வனென உணர்க. உடம்பை இயக்கும் உயிர் போல உலகத்தை முதல்வன் இயக்குபவனென்றறிக.

சிலர் உலகத்தின் பல பகுதிகளே தோற்றம் ஒடுக்கம் உடையனவாகும், உலக மனைத்துந்தோன்றி ஒடுங்குவதில்லை என்பர். அவர் கூற்று பல கடவுளர் உளர் என்ற கொள்கையில் முடிவதாகும். உலகத்தின் அமைப்பை உணர்ந்தோர் அங்ஙனம் கூறாரென்க. உலகங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பேருலகம் தன்னுள் எல்லாவற்றையும் ஓர் ஒழுங்கு முறைப்படி அடக்கிக்கொண்டு தனக்கு ஆதாரமாகிய ஒன்றினைச் சார்ந்து நிற்கின்றது. உலகங்களெல்லாவற்றையும் ஒன்று படுத்துகின்ற முறை ஒன்று அடிப்படையில் இல்லாமற் போனால் அவைகள் ஒன்றோடொன்று தாக்கி அழிவெய்தும். சில அழிதல் காணப்படுமெனின், அது ஒரு பகுதியில் நிகழுமாற்றமேயன்றி அடிப்படைக்கு மாறான அழிவாகாது. உடம்பில் ஓரிடத்தில் புண்தோன்றி மாற்றம் அடைவதால் உடம்பு முழுதும் அழிவெய்தாமை அறிக. அடிப்படையில் முரண் ஏற்படுமானால் உடம்பு சாதல்போலப் பேருலகமும் ஒடுங்கும் என்பதை ஒருவாறு காட்டுதும். நமது கதிரவனைச்சுற்றி ஓடும் உலகங்களின் தொகுதி ஓர் அண்டமாகும். கதிரவன் ஒளி முற்றிலும் ஒடுங்குமாயின் அவ்வண்டமும் ஒடுங்கிவிடும். கதிரவன் ஒளி நாளுக்கு நாள் குறைவுபடுகின்ற தென்பதும், கதிரவனும் அவனைச் சுற்றியுள்ள அண்டமும் பெருஞ்ஞாலத்தின் நடுவிலுள்ள ஒரு பெருங் கதிரவனைச்சுற்றி ஓடுகின்றன வென்பதும் வான நூலார் கொள்கை. அப்பெருங் கதிரவனது ஒளி ஒடுங்குமாயின் பெருஞாலம் முற்றுமே ஒடுங்கும். பெருஞாலம் என்பது சடப் பொருள்களின் பிண்டமேயாதலின் அதனை முறையே தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் செய்யவல்ல அறிவுடைய முதல்வன் ஒருவன் வேண்டும். முதல்வர் பலரெனின், பன்மை வேறுபாடுணர்த்தும். வேறுபட்ட பலரும் ஒரு முறையைப் பின்பற்றி நடப்பதற்கு அவர்கள் வழிபடுத்தும் ஒரு முதல்வன் வேண்டும். அவனே பேர்உலகத் தலைவனாவான்; பேருலகை ஒடுக்குபவனும் அவனே என அறிக.

எல்லாரும் ஒடுங்கிய விடத்தில் அவற்றை ஒடுக்குகின்ற ஒருவனே எஞ்சி நிற்பன். சடப்பொருள்க ளெல்லாம் மாயையிலொடுங்கு மெனவே, சடப்பொருட் சார்புடைய உயிரும் அதன்கண் ஒடுங்குமென்பது போதரும். மீள உலகந் தோன்றுங் கால், மாயையினின்றே அது தோன்றும். அது வித்திலிருந்து முளை தோன்றுவது போல என்க. பொருள்கள் ஒடுங்கியவாறே தோன்று மென்பது நெல்வித்தினின்று நெல்லே தோன்றுவது போலவும் கமுகு தோன்றாமை போலவுமென்க. சடப்பொருள் தானே தோன்றாதாகலின் எஞ்சி நின்ற அறிவுடைய முதல்வன் செயலினால் உலகம் தோன்றுமென்க. எல்லாவற்றையும் ஒடுக்கியதனால் ஒடுக்கி அல்லது ஒடுங்கி எனப் பெயர்பெற்ற இறைவனே உலகத் தோற்றத்திற்கும் காரணாவானெனவறிக.

அறிவுடைய முதல்வன் அறிவில்லாத உலகத்தைத் தோற்றுவித்தலும் ஒடுக்குதலும் ஒரு நோக்கத்தோடு செய்பவனாதல் வேண்டும். அவன் தற்பயன் கருதி யாதும் செய்யின், ஒன்றையும் தன்பொருட்டு வேண்டாத தன் முற்றுத்தன்மைக்கு அது இழுக்காகும். தோன்றுவதாலும் ஒடுங்குவதாலும் சடத்திற்கு விளையும் பயன் யாது மில்லை. சடப்பொருளிற் கலந்து நிற்கும் அறிவுடைப் பொருளாகிய உயிர்களின் பொருட்டே உலகத்தோற்ற முதலியனவற்றை இறைவன் நிகழ்த்துதல் வேண்டும். உயிர்கள் சடப்பொருளின் உதவியின்றி அறிவு விளங்கப்பெறுவதில்லை. ஐம்பொறிகளாகிய சடப்பொருளின் உதவியின்றி அறிவு விளங்குவதில்லை. ஐம்பொறிகள் புறக்கருவிகளெனின், மனம், புத்தி முதலியன அகக் கருவிகளாகும். இவ்வறிவுக் கருவிகள் போலவே, செயற் கருவிகளும் சடப் பொருள்களே. அறியவும் செய்யவும் உள்ள இடமும், இடத்திலுள்ள நுகர்பொருளும் சடப்பொருள்களே. ஆகவே, உயிர்களுக்கு உடம்பு, அகக்கருவி, தங்குமிடம், நுகர் பொருள் முதலியவற்றை மாயையினின்று தோற்றுவித்துப் புணர்த்துபவன் முதல்வனே அப்புணர்ப்பே படைப்பு எனப்படும்.

உயிர்கள் அறிவித்தால் அறியும் தன்மையனவாதலின், தானே எல்லாவற்றையும் அறியும் முதல்வனது இயல்பு உடையன வல்ல. ஆதலால் அவைகள் இறைவன் பகுதிகளாக மாட்டா. என்னை? இருவேறு தன்மையுடைய பொருள்கள் ஒரு பொருளாக மாட்டா வென்க. இறைவனும் உயிரும் அறிவுப் பொருளாயினும் இறைவன் முதன்மையுடைய தலைவன்; உயிர்கள் அவனால் ஆட்கொள்ளப்படும் அடிமைகள். இறைவன் உயிர்களைப் படைப்பதில்லை. இறைவன் எப்பொழுதிருக்கின்றானோ அப்பொழுதே உயிர்களும் உள்ளன. இக்கருத்துப் பற்றியே 'என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ' என்றார் தாயுமானவர்.

உயிர் அறிவுடைப் பொருளாயினும் கருவிகள் இல்வழி எதனையும் அறியாதாகலின், அதனறிவைக் கருவிகளில்வழி மறைக்கின்ற தொன்று இருத்தல் வேண்டும். அதனைச் சிறிது நீக்கவே, இறைவன் கருவிகளை உயிர்க்குக் கொடுக்கின்றான். கருவிகளோடு கூடிய வழியும் உயிர் தன் முழு அறிவும் விளங்கப் பெறாமையின் அது முதல்வனை நாடாது சடப்பொருளையே நாடும். ஏனெனில் சடக் கருவியால் சடப்பொருளே புலனாகுமென்க. உயிர் தன் சிற்றறிவு கொண்டு சடவுலகிற் செய்யும் வினைகளுக்கேற்ப வினைப் பயன்களை நுகரும். பகலில் வேலை செய்தவன் இரவில் இளைப்பாறுதல் போலச் சடவுலகம் தோன்றி நிலைபெறும் போது அதன்கட் பொருந்தி வினைகளைச் செய்யும் உயிர் சடவுலகம் ஒடுங்கிய காலத்து இளைப்பாறும். இரவிற்றுயில் கொள்பவன் காலையில் கிளர்ச்சியுடன் எழுந்து வேலை செய்வதுபோல, உலக ஒடுக்கத்தின்போது இளைப்பாறிய உயிர் மீள உலகந் தோன்றியபோது கிளர்ச்சியோடு அறிதல் செய்தல் முதலியன நிகழ்த்தும் உயிர்க்குச் சடவுலகத்தின் தொடர்பு அவ்வுலகப் பற்றைவிட்டு முதல்வனை அடையுங் காலம்வரை வேண்டப்படுதலின், ஒடுங்கிய உலகம் உயிரின் பொருட்டு மீளவும் தோன்றுதல் வேண்டும்.

உயிரின் அறிவை மறைக்குமிருள் ஆணவமலம் எனப்படும். ஆணவத்தோடு கூடிய உயிரின் செயல் கரும மலம் எனப்படும். உயிர்க்கு உலகத்தோடு உள்ள தொடர்பு மாயா மலம் எனப்படும். மாயையில் உலகம் ஒடுங்குவதாலும் அதினின்று மீளத் தோன்றுவதாலும் 'ஒடுங்கி மலத்துளதாம்' என்ற சூத்திரப் பகுதிக்கு மாயையி லொடுங்கி மீள அதன்கண் நின்று உலகம் தோன்றுமென்று பொருள் கொள்வது ஒருமுறை. கரும மலம் பக்குவப்படுதற்கு உலகம் ஒடுங்குவதால், 'ஒடுங்கி மலத்து' என்ற விடத்து 'மலம்' என்ற சொல் கரும மலத்தைக் குறிக்கும் என்றலும் ஒன்று. இருண் மலமாகிய ஆணவத்தைப் படிப்படியாகத் தொலைக்கவே உலகம் மீளத் தோன்ற வேண்டியிருத்தலின் 'மலத்துளதாம்' என்ற விடத்து 'மலம்' என்பது ஆணவத்தைக்குறிக்கும் என்பதும் பொருந்தும். 'ஒடுங்கி' என்பதற்கு 'ஒடுங்கி யாகிய இறைவனாலே' என்று சிறப்புப் பொருள் கொண்டார் ஆசிரியர் சிவஞான முனிவர்; அது பொருத்தமுடைத்தே.

எல்லாம் ஒடுங்கிய காலத்தே எஞ்சி நிற்பவன் எல்லாவற்றையும் ஒடுக்கிய ஒருவனே என்பதை உற்று நோக்குங்கால் அவனொழிந்த பிறரெல்லாம் வெவ்வேறு வகைப்பட்ட உடம்பின் துணைகொண்டு பொருள்களைச் சுட்டியறியு மியல்புடைய உயிர்களே யாமென்பது போதரும். உயிர், உலகம் என்னும் இவற்றுள் ஒன்றுமாகாத ஒரு பரம்பொருள் பேராற்ற லுடைமையின் அஃதொன்றே உலக முழுமுதலாகும். இரண்டாவது மிகையாம். உயிர்கள் பலவும் அப்பரம்பொருளின் வேறாய இயல்புடையனவாய் அப்பெரும் பரம்பொருளின் துணையை எக்காலத்தும் நாடி நிற்பனவாகலின் வீட்டு நிலையிலும் அவை அப்பொருட்கு அடிமையாவனவே.

இவ்வுண்மைகள் அளவை நூலறிவுடையாரால் நுட்பமாகக் கண்டு கூறப்பட்டனவாகும். இவற்றையெல்லாம் உள்ளடக்கியே ஆசிரியர் மெய்கண்டார் நூலின் முதல் நூற்பா எழுந்ததாகும்.

*'அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்*
*தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்*
*அந்தம் ஆதி என்மனார் புலவர்'.*

* நன்றி : திரு.வி. உலகநாத முதலியார் மணிவிழா மலர், பக். 20-24.

# 5. 'உண்மை விளக்க'த்தில் சித்தாந்த முத்தி

- சித்தாந்த வித்யாநிதி, முனைவர் மோ. ஞானப்பூங்கோதை,
*தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை - 9.*

**முன்னுரை**

பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்ற 'உண்மை விளக்கம்', சைவ சித்தாந்தத்தை எளிமையாக விளக்குகின்ற நூலாகும். மெய்கண்டாரின் நேரடி மாணவர்களுள் ஒருவரான மனவாசகங்கடந்தார் இந்நூலை வினா-விடை வடிவில், குருவானவர் தம் மாணவரின் ஐயத்தை நீக்குவதுபோல் அமைத்திருப்பது தனிச் சிறப்பாகும். பஞ்ச பூதங்களிலிருந்து தொடங்கி மாயை பற்றியும், ஆணவம் பற்றியும், வினை பற்றியும், உயிர் பற்றியும், இறை பற்றியும், அவன் தொழில் பற்றியும், அஞ்செழுத்துச் சாதனம் பற்றியும், முத்திப் பயன் பற்றியும் எனச் சைவ சித்தாந்தத்தை முழுமையாக விளக்குகின்றது இந்நூல். அவற்றுள் முத்தி பற்றிய பகுதியை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**சித்தாந்த முத்தி**

பொதுவாக முத்தி என்பதற்குப் பலர் பலவகையான விளக்கம் தருவர். உயிர், தன்னை அறிவதே முத்தி என்பர் சிலர்; இவ்வுலகிலிருந்து விடுபடுவதே முத்தி என்பர் வேறு சிலர்; இறையோடு ஒன்றாகி விடுவதே முத்தி என்பர் மற்றும் சிலர்; எவ்வுணர்வுமின்றிக் கல்போல் கிடப்பதே முத்தி என்பர் இன்னும் சிலர். ஆனால், எக்காலத்திலும் தனித்திருக்க இயலாத உயிர் மலத்தோடு அத்துவிதமாகி நின்ற நிலை நீங்கி, சிவத்தோடு அத்துவிதமாகி சிவானந்தத்தில் திளைத்து நிற்றலே சிவாகமங்கள் கூறுகின்ற சித்தாந்த முத்தியாகும்.

முத்திநிலை என்பது உயிர் சிவத்தோடு ஒன்றிய நிலை; ஏகனாதல்; இரண்டறக் கலந்த நிலை. இந்நிலையில் உயிர் சிவத்தோடு ஒன்றாகிக் கலந்து நின்றாலும், அவ்வுயிர் இல்லாமற் போய் விடவில்லை; அழுந்தி இருந்து ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதனைத் 'தானாதல்' என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடும். 'தான்' என்பது சிவத்தைக் குறிக்கும். எனவே, தானாதல் என்பது சிவமாதல் எனப் பொருள்படும். 'அவனே தானே ஆகிய அந்நெறி' என்பது மெய்கண்டார் வாக்கு. மனவாசகங் கடந்தாரும், உ ண்மை விளக்கத்தில் 'தான் ஏது?' என்னும் கேள்வி மூலம் முத்திநிலை பற்றி விளக்குகிறார்.

**முத்திநிலை**

முத்திநிலை பற்றி மனவாசகங்கடந்தார் பல உவமைகள் மூலம் எடுத்துக் காட்டுகிறார். பழுத்த பழத்தில் இருக்கும் அதன் சுவை, மலரிலே இருக்கும் மணம், தீயிலே இருக்கும் சூடு, வீணையிலே இருக்கும் எழில் மிகுந்த நாதம் இவையெல்லாம் எவ்வாறு ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாதபடி இருக்கின்றனவோ அதைப்போல முத்திநிலை அடைந்த பெரியோர் சிவத்தோடு பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டு நிற்பர். இதனை,

*" முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போது அங்கி*
*வித்தகமாம் வீணை இவையிற்றின் - ஒத்த*
*இரதம் மணம் வெம்மை எழில்நாதம் போல*
*விரவுவர் என் று ஓ தும் விதி"*

என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

மெய்கண்டார் பரம்பரையிலே பின்னர் தோன்றிய ஸ்ரீ குருஞானசம்பந்தரும்,

*" இத்தனத்தில் அங்கி எரிஉறு நீர் தேனிரதங்*
*கந்தமலர்ப் போதுவான் கால் ஒளிகண் - சந்ததமும்*
*அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்*
*முத்தியிலே நிற்கும் முறை"*

என்று 'சிவபோக சார'த்திலே விவரிக்கிறார். மேலும் மனவாசகங்கடந்தார் உயிரின் பெத்த நிலையையே முத்தி நிலைக்கு உதாரணமாக்குகிறார். பெத்த நிலையில் உயிர், கருவி கரணங்களைச் சார்ந்து நின்று, தான் வெளிப்பட்டுத் தெரியாமல் அக்கருவி கரணங்களையே காட்டி நிற்பதுபோல் முத்தி நிலையில் சிவத்தைச் சார்ந்து தான் வெளிப்பட்டுத் தெரியாமல் சிவத்தையே காட்டி நிற்கும் என்பது அவர் கருத்து.

'யான்' என்கிற உடற்சார்பும் 'எனது' என்கிற உலகச்சார்பும் ஆகிய பற்றுக்களே சிவத்தை அனுபவிக்க முடியாமல் உயிர்களைத் தடுக்கின்றன. ஆடுகின்ற ஊஞ்சலின் இரு கயிறுகளும் அறுந்தால் அந்த ஊஞ்சலைத் தரை, தாய்போல் தாங்கிக் கொள்ளும். அதுபோல இரு பற்றுகளும் அறுந்தால் சிவம் உயிரைத் தாங்கிக் கொண்டு தானாக்கி விடும். அந்நிலையில் உயிரின் அறிவு வெளிப்பட்டு நிற்காது. 'யான் அனுபவிக்கிறேன்' என்கிற முனைப்பும் இருக்காது. சிவத்தோடு முழுமையாக அழுந்திய இந்நிலையைக் 'கூட்டில் வாள் சாத்தி நிற்றல்' என்று திருவுந்தியார் குறிப்பிடும். "யான் எனது அற்ற இடமே திருவடியா மோன பரானந்தம் முடியாக..." என்கிறார்

குமரகுருபரர். பெறுவானும் (ஞாதிரு), பெறுந்தகுதியும் (ஞானம்), பேறும் (நேயம்) ஆகிய மூன்றும் தனித்து இல்லாமல் நேயத்தில் அழுந்திய இந்நிலையை, 'மூன்றாய தன்மை தோன்றாத இன்பம்' என்று 'திருவருட்பயன்' சுட்டும்.

உயிரறிவு வெளிப்பட்டுத் தோன்றாத இத்தன்மையை மனவாசகங்கடந்தார் ஓர் உதாரணத்தின் மூலம் உணர்த்துகிறார். காலைப் பொழுதில், சூரியன் புலர்வதற்கு முன் ஒளிவீசி நின்ற தேய்பிறை காலத்துச் சந்திரன் பொழுது புலர்ந்ததும் சூரியனின் பேரொளி வெள்ளத்தில் அடங்கிப் போய்விடும். சந்திரனும் அதன் ஒளியும் அங்கு இருந்தும் இல்லாததுபோல் அடங்கி நிற்கும். அதுபோல முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து இறையருளில் அழுந்தி நிற்கும் ஆன்மாவும் தான் வேறாக நில்லாது அடங்கி நின்று இன்புறும் என்பதை,

*" ஆதவன்தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி*
*பேதமற நிற்கின்ற பெற்றிபோல் - நாதாந்தத்து*
*அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து இன்பக்*
*கண்ணில் அழுந்தியிடும் காண்"*

என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

*" யானாகிய என்னை விழுங்கி வெறுந்*
*தானாய் நிலைநின்றது தற்பரமே"*

என்று அருணகிரியார் கூறுவதையும் நாம் அறிவோம்.

**உயிரின் உண்மையியல்பு**

உயிர் படிகம் போன்றது. படிகம் (கண்ணாடி), தான் சார்ந்த பொருளின் தன்மையை - நிறத்தைக் கவர்ந்து அப்பொருளாகவே காட்சியளிக்கும். அதுபோல ஆன்மாவும் பாசத்தைச் சார்ந்து நிற்கையில் பாசப் பொருளாகவும் பின் சிவத்தைச் சார்ந்து சிவமாந் தன்மை பெற்றும் நிற்கும்.

முத்தியில் உயிர் சிவத்தைச் சார்கிறது என்று கூறுவதில் ஒரு சிந்தனை உள்ளது. ஆன்மா சென்று சிவத்தை அடைந்தது என்று கொள்வோமானால், சிவனது பூரண நிறைவுக்குள் உயிர் அடங்கியில்லை என்பதாகி விடும். முத்தியில் சிவம் தான் வந்து ஆன்மாவைச் சார்ந்தது என்று கொள்வோமானால், என்றும் ஒன்றாய் உடனாய் இருந்து உதவுகின்ற சிவத்தின் அத்துவிதத் தன்மை மாறுபடும். பின் இதை எப்படித்தான் கொள்வது என்பதை மனவாசகங்கடந்தார் ஓர் உவமை மூலம் மிக அழகாகத் தெளிவுபடுத்துகிறார்.

பிறவிக் குருடன் ஒருவன் இருக்கிறான். நாளும் சூரிய ஒளியிலேயே உழன்றிருந்தும் அந்தச் சூரிய ஒளியை அவன் பார்த்ததில்லை. அவன் கண்ணில் உள்ள படலமாகிய குற்றம் சூரிய ஒளியைப் பார்க்கமுடியாதபடி அவனைத் தடுக்கிறது. ஒருநாள் மருத்துவன் ஒருவன் மூலம் அப்படலமானது நீக்கப்பட்டு அவன் கண், பார்க்கும் ஆற்றலைப் பெறுகிறது; சூரிய ஒளியையும் பார்க்கிறது. இந்தச் சூரிய ஒளி எப்போதும் இருந்ததுதான். ஆனால், அவனுக்கு அது புதிதாகத் தெரிகிறது. அதுபோல, ஆணவமல மறைப்பினால் சிவானந்தத்தை ஆன்மா உணராதிருந்தது. உரிய காலத்தில் - பக்குவமுற்ற நிலையில் ஞானாசிரியர் மூலம் மலம் நீக்கப்பட்டபின், தன்னுடனேயே என்றும் இருந்த சிவானந்தத்தைப் புதிதாக உணருகிறது ஆன்மா என்னும் கருத்தினை,

*சென்றிவன்தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்*
*அன்றுஅவன்தான் ஒன்றுமெனில் அன்னியமாம் - இன்று இரண்டும்*
*அற்ற நிலை ஏதென்னில் ஆதித்தன் அந்தன் விழிக்*
*குற்றமற நின்றதுபோல் கொள்"*

என்ற பாடல் மூலம் நாம் அறியலாம்.

எனவே, முத்திநிலை என்பது உயிர்க்கு இயற்கை நிலையாகும். அதுவே அதன் உண்மை இயல்பு. சகல நிலையில் ஆணவத்தின் மறைப்பினாலும் உலகச் சார்பினாலும் உயிர், தன் உண்மை இயல்பை உணர முடியாத நிலையில் இருக்கிறது.

**முத்தியில் முப்பொருளின் நிலை**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் நித்தம். கால வரம்பற்ற, இடவரம்பற்ற வியாபகப் பொருளாகிய இவை என்றும் உள்ளவை என்பதே சைவ சித்தாந்தக் கொள்கை.

பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்ற வகையிலும் பேரின்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்ற வகையிலும் உயிரும் சிவமும் முத்தியிலும் உள்ளன என்பதை நாம் உணர முடிகிறது. ஆனால் ஆன்மாவிடத்துச் சமநிறைவாகக் கலந்து விரவி இருக்கும் பாசப் பொருளாகிய ஆணவ மலம் முத்தியிலும் உடன் இருக்கும் என்றால் மலநீக்கம் - மலபரிபாகம் என்பதன் பொருள் என்ன என்ற ஐயம் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் முத்தியிலும் ஆணவ மலம் இருக்கும் என்பதே உண்மை.

ஒளி மேலிடுவதால் இருள் கீழ்ப்பட்டு அடங்கி விடுகிறதேயொழிய இல்லாமல் போய் விடுவதில்லை. அதுபோல, சிவப் பெருக்கினால் ஆணவமலம் தன் சக்தி மடங்கி நிற்குமே யொழிய இல்லாமல் போய்விடாது. சிவமேயாய் நிற்கும் உயிர்களிடத்துச் செயல்பட மாட்டாமல் அடங்கி விடும். இவ்வாறு அதன் வலிமை கெடுதலே 'மலம் நீங்குதல்' எனப்படுகிறது. இயற்கையான சிவானந்த அனுபவத்திற்குத் தடை செய்யாமல் மடங்கி நின்று உயிரிடத்துப் பேரின்பத்தை விளைவிக்கிறது. இக்கருத்தினை மனவாசகங் கடந்தார்,

*" முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள்*
*சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு- மெத்தவே*
*இன்பம் கொடுத்தல் இறை; இத்தை விளைவித்தல் மலம்;*
*அன்புடனே கண்டு கொள் அப்பா"*

என்ற வெண்பா மூலம் தெளிவுபடுத்துகிறார்.

**முத்திக்குச் சாதனம்**

சரியை, கிரியை, யோகம் என்னும் இறப்பில் தவத்தின் பயனாகக் குரு மூலம் ஞான உபதேசம் கிடைக்க அதுவே முத்திக்குச் சாதனமாகும் என்பது சைவ சித்தாந்தக் கருத்து. குரு மூலம் பெற்ற அஞ்செழுத்து மந்திரத்தை விதிப்படி எண்ணுவதை மெய்கண்டார் சாதன இயலில் - ஒன்பதாம் சூத்திரத்தில் எடுத்துரைக்கிறார். மனவாசகங்கடந்தாரும்,

*" அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்*
*அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் - அஞ்செழுத்தே*
*ஆனந்த தாண்டவமும் ஆறானுக்கு அப்பாலாம்*
*மோனந்த மா முத்தியும்"*

என்று கூறுவதோடு, குரு வழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம (வேடம்) வழிபாடு ஆகியவையே முத்திக்கு அழியாத காரணமாகும் என்று வலியுறுத்துகிறார்.

*" .......குரு லிங்க வேடம் எனக் கூறில் இவை கொண்டார்*
*கருவொன்றி நில்லார்கள் காண்."*

**முடிவுரை**

உயிர் வேறு; சிவம் வேறு என்பதும், தனக்கென ஆனந்தம் இல்லாத உயிரை ஈடேற்றி, தானாக்கி, சிவானந்தத்தை அனுபவிக்கச் செய்வது சிவமே என்பதும், உயிர் சிவமாந் தன்மையோடு அச்சிவானந்தத்தை முழுமையாக அனுபவிப்பதே முத்தி என்பதும், அதுவே உயிர்க்கு இயற்கை என்பதும், முத்தியிலும் ஆணவ மலம் ஆனந்தத்தை விளைவித்துக் கொண்டு அடங்கி இருக்கும் என்பதும் முத்திக்குச் சாதனமாவது குரு, லிங்க, சங்கம வழிபாடே என்பதும் இக்கட்டுரை மூலம் பெறப்பட்ட கருத்துக்களாகும்.

*" உள்ள மலநீங்கி யோங்கு சிவாநந்த*
*வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்*
*கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்*
*சித்தாந்த முத்தியெனத் தேறு."*

# 6. உண்மை விளக்கம் - ஒரு கணிதப் பார்வை

- பேராசிரியர் இரா. பாலகிருட்டிணன், எம்.எஸ்சி., பி.எட். எம்.ஃபில்.,
*இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை - 72.*

சைவ சித்தாந்த நெறியை விளக்கும் மெய்கண்ட நூல்கள் பதினான்கில் ஒன்றாகிய உண்மை விளக்கம், சைவ நெறியினர் உணரவேண்டிய உண்மைகள் அனைத்தையும் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் நூலாகும். இந்நூலின் ஆசிரியர் மனவாசகங்கடந்தார். சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்டாரின் மாணவர் எனவும் இந்நூலின் காலம் கி.பி. 1265 எனவும் ஆராய்ச்சியாளர் மூலம் அறிகிறோம்.

மாணவர் கேட்பதாக அமைந்த ஏழு வினாக்களுக்கும் அவற்றின் தொடர்பான இரு வினாக்களுக்கும் பதில் அளிப்பதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. சுத்த வினாக்கள் எனப்படும் அந்த ஏழு வினாக்களுள் முதல் வினா 36 தத்துவங்கள் பற்றியதாகும். அத்தத்துவங்களின் பிரிவுகள் பின்வருமாறு:

1. ஆன்ம தத்துவங்கள் 24. இவற்றின் உட்பிரிவுகளாக ஐம்பெரும்பூதங்கள் (5), பொறிகள் - புலன்கள் (10), தொழிற்பொறிகள் (5); உட்கருவிகள் (4) அமைந்துள்ளன.

2. வித்தியா தத்துவங்கள் 7. அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன.

3. சிவதத்துவங்கள் - 5. அவை சுத்தவித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் ஆகியன.

வேதக் கணிதம் (Vedic Mathematics) என்பது தற்போது மிகவும் பிரபலமடைந்து வருகிறது. இக்கோணத்தில் உண்மை விளக்க நூலில் வரும் சில எண்களை நோக்குவோம். கணிதத்தில் 2, 3, 5, 7, 11, 13, ............................ என்ற எண்கள் பகா எண்களாகும். இந்த எண்களை 1 அல்லது அதே எண்ணால் தவிர வேறெந்த எண்ணாலும் பகுக்க இயலாது. (உம்: 7 = 7x1) மட்டுமே சாத்தியம். உண்மை விளக்கத்தில் கேட்கப்படும் சுத்த வினாக்கள் 7, தொடர்பு வினாக்கள் 2, தத்துவங்களில் வரும் பெரும் பூதங்கள் 5, தொழிற்பொறிகள் 5, வித்தியா தத்துவங்கள் 7, சிவதத்துவங்கள் 5 என்பதைக் காணலாம். இந்த எண்கள் பகா எண்கள் என்ற கோணத்தில் நோக்குகையில் பின்வரும் கருத்துக்கள் உருவாகின்றன:

(1) 7 சுத்த வினாக்களும் பிரிக்க இயலாதவை. சைவ நெறிகளை முழுவதுமாக உணர 7 வினாக்களையும் எழுப்பி விளக்கம் பெறுதல் வேண்டும் (2) 36 தத்துவங்களை மூன்று வகையாகப் பிரித்து அறிதல் வேண்டும். (3) பெரும்பூதங்கள் மற்றும் தொழிற்பொறிகள் குறித்த தத்துவங்களையும், வித்தியாதத்துவங்கள் மற்றும் சிவதத்துவங்களையும் நன்கு பிரிக்க இயலாத பகுதிகளாக ஒட்டுமொத்தமாக வைத்து உணரவேண்டும்.

அடுத்ததாக, ஆன்ம தத்துவங்களில் முதன்மையாக வரும் பஞ்சபூதங்கள் குறித்த விளக்கங்கள் பின்வரும் அட்டவணையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அவற்றின் வடிவங்கள் நமது சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

| *பூதம்* | *வடிவு* | *நிறம்* | *எழுத்து* | *அடையாளம்* | *அதிதெய்வம்* | *தொழில்* | *குணம்* |
|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | நாற்கோணம் | பொன்மை | ல | வச்சிரம் | நான்முகன் | படைத்தல் | திண்மை |
| நீர் | அரைவட்டம் | வெண்மை | வ | தாமரை | திருமால் | காத்தல் | குளிர்ச்சி |
| தீ | முக்கோணம் | செம்மை | ர | சுவத்திகம் (Swastik) | உருத்திரர் | அழித்தல் | எரித்தல் |
| காற்று | அறுகோணம் | கருமை | ய | அறுபுள்ளி | மகேசுவரர் | மறைத்தல் | பரந்து கிடப்பது |
| விண் | வட்டம் | புகைநிறம் | அ | அமுதத்துளி | சதாசிவம் | அருளல் | எங்கும் நிறைந்து நிற்றல் |

வடிவ கணிதம் மூலம் முதல் நான்கு வடிவங்களையும் இறுதி வடிவமாகிய வட்டம் தன்னுள் அடக்கியிருப்பதைக் காணலாம். அமுதத்துளி என்ற புள்ளியை (அடையாளம்) மையமாகக் கொண்ட விண் வட்டம் அருள் என்ற முடிவற்ற ஆரத்தைக் கொண்டது (Infinite Radius). இதில் சதாசிவம் எங்கும் நிறைந்து நின்று அருள் புரிகின்றார். இந்த வட்டத்திற்குள் (சதாசிவத்தில்) மற்ற நான்கு வடிவங்களும் (பூதங்களும்) அடக்கம் என்ற பொருளை உணர்த்துவதாகத் தோன்றுகிறது.



ஐம்பெரும் பூதங்கள் குறித்த தத்துவங்களை முழுவதுமாக உணர்ந்த சைவ நெறியாளர்களிடம் மேற்கண்ட வடிவத்திற்கு மேலும் தெளிவான விரிவான விளக்கங்களைப் பெற முடியும் எனலாம்.

## 7. 'சிவப்பிரகாச'த்தில் அவையடக்கம்

ஸ்ரீலஸ்ரீ. அ.வே. சாந்திகுமார சுவாமிகள்
*சைவ சித்தாந்த தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*

சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நூல்களில் தலைசிறந்து விளங்குகின்ற சிவஞானபோதமும், அதன் விரி நூலாகிய சிவஞான சித்தியாரும், உலகத் தோற்ற ஒடுக்கங்கள் நிகழும் காலத் தத்துவத்திலிருந்தே தொடங்குகின்றன.

'திரிபு வேறுடையது புடைநூலாகும்' எனும் நன்னூல் நூற்பாவின்படி முதல், விரி நூல்களுக்கு முரணாகாமலும், சிறுசிறு மாறுபாடுகளோடும் உமாபதி சிவாசாரியார் தாம் சொந்தமாக ஒரு வகையை வகுத்துக்கொண்டு சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்தை, உயிர்களுக்கு உணர்த்தும் முறையிலேயே ஆக்கியளித்தார்.

*"அவையடக் கியலே, அரில்தபத் தெரியின்*
*வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று*
*எல்லா மாந்தர்க்கும் வழி மொழிந்தன்றே"*[1]

என்பது அவையடக்கம் பற்றிய தொல்காப்பிய (1370) நூற்பா.

ஒரு புதிய நூல் செய்வதன் காரணத்தை உணர்த்தி, அதைச் செய்வதற்கான தம் அறிவுத்திறனால் பணியுமாம் பெருமையைப் புலப்படுத்தி, அதில் ஏற்படும் பிழைகளை அறிவுடையார்கள் பொறுத்தருள வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைத்தே 'அவையடக்கம்' செய்வது மரபாகும்.

**நூல் செய்வதன் காரணம்**

*"இது இயம்புவது யாது எனின்*
*பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல்*
*தெய்வமாக் கவி மாட்சி தெரிவிக்கவே"*[2]

என வரும் பாடலில்,

"வால்மீகி கூறிய தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த கவிதைகளின் பெருமையைத் தெரிவிக்க வேண்டும்" என்பதே நூல் இயற்றக் காரணம் எனக் கம்பர் (கம்பராமாயணம் - 6:3,4) கூறுகிறார்.

*"சிறந்திடும் வடநூல் தன்னை, தென்சொலாற் செய்தி யென்றிங்*
*குறைந்திடும் பெரியோர் கூற"*[3]

வடமொழியில் சிறப்புடன் கூறப்பட்ட பெருமைகளைத் தமிழ்மொழியில் கூறவேண்டும் என்று மதுரையில் உள்ள பெரியோர்கள் பணிக்கவே பிறப்பின் பயனை அடைவோம் என்று கருதி, திருவிளையாடற் புராணம் யாத்ததற்குக் காரணம் எனப் பரஞ்சோதியாரும் குறிப்பிடுவர்.

**நூலாசிரியர் அறிவுத்திறன்**

திருப்பாற்கடலை அடைந்து அதில் உள்ள பால் முழுவதையும் குடித்துவிட முற்பட்டதைப்போல தாம் இராமனது கதையைச் சொல்லத் தொடங்கியதாகக் கம்பரும், பெரியபுராணத்தில் இதே உவமையைக் கூறி, திருத்தொண்டர்களின் நிகர் இல்லாத சிறப்புகளை எடுத்துச் சொல்ல முற்படுகின்றேன் என்று,

*"பெருகு தெண்கடல் பெருநசை*
*ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன்"*[4]

எனச் சேக்கிழாரும், தம் அறிவுத்திறனால் பணியுமாம் பெருமையைப் புலப்படுத்தினர்.

**சான்றோர்கள் பிழைபொறுக்க வேண்டுதல்**

என் சொற்கள் எளிய சுவையற்ற, பயனற்ற சொற்களாக இருப்பினும் கற்றுத் தேர்ந்த அறிவுடையவர்கள் புராணத்தின் புனிதம் கருதி என்னை இகழ மாட்டார்கள் எனும் கருத்தில்,

*"மென்சொலேனும் வெளிற்றுரை யேனும் விண்*
*புன் சொலேனும் இகழார் புலமையோர்"*[5]

என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில் அவையடக்கம் செய்தார்.

*"அறையும் ஆடரங்கும் படபிள்ளைகள்*
*தறையில் கீறிடத் தச்சரும் காய்வரோ"*[6]

எனும் உவமை வழியாகச் சான்றோர்கள் பிழை பொறுக்க வேண்டுகிறார் கம்பர்.

**சிவப்பிரகாசத்தில் - அவையடக்கம்**

*"புராண மித்ஏவ ந ஸாதுசர்வம்*
*ந ஜனபி காவ்யம் நவாமித்ய வத்யம்"*[7]

(For a poem is not good because it is old; nor is every new poem to be blamed because it is new)

எனக் காளிதாசர், தம்முடைய மாளவிகாக்னிமித்ரம் என்னும் நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இக்கருத்தை, உமாபதிசிவாசாரியார், தம் சிவப்பிரகாசத்தில்,

*"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று*
*தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா"*[8]

எனக் குறித்தார்.

பழமையான நூல்கள் என்பதால், அவை யாவும் உயர்ந்தன என்பது தவறு. அவற்றுள் சில ஒதுக்கத் தக்கனவாயும் இருக்கலாம். புதிதாகத் தோன்றிய நூல்கள் என்பதனாலேயே அவையாவும் குறையுடையன என்பதும் தவறு. அவற்றுள் சில ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவும் இருக்கலாம்.

பழமையான நூல்கள் இருக்க, புதிய நூல்கள் ஏன் இயற்றப்பட வேண்டும் என்று கேட்போருக்கும், படிப்போர்க்கும் விடையளிக்கும் முகமாக இவ்விரண்டு அடிகளில் நூல் ஆராய்ச்சியைப் பற்றிய கருத்தை வலியுறுத்துகிறார்.

**சான்றோர் செய்தியும் - சால்பிலார் தன்மையும்**

*"... துணிந்த*
*நன்மையினார் நலங்கொள்மணி பொதியும் அதன் களங்கம்*
*நவை ஆகாது என உண்மை நயந்திடுவர்"*[9]

நன்மையைத் தெரிந்த உத்தமர்கள் ஒளி பொருந்திய மாணிக்கத்துள் பொதிந்த குற்றத்தைக் குற்றம் எனக் கொள்ளாது அதன் உண்மை நலத்தை விரும்பி அணிவார்கள். அதைப்போலவே, உத்தமர்கள் நூலின் மேன்மையைக் கருதி அதில் உள்ள குற்றங்களைக் குற்றமெனக் கருதாது அதனைப் பாராட்டுவார்கள்.

இந்த உத்தமர்களைப்பற்றிய பெரியபுராணப் பாடல் வருமாறு:

*"செப்பலுற்ற பொருளின் சிறப்பினால்*
*அப்பொருட் குறை யாவருங் கொள்வரால்*
*இப்பொருட் கென்றுரை சிறிதாயினும்*
*மெய்ப்பொருட் குரியர் கொள்வர் மேன்மையால்"*[10]

"சொல்லால் உணர்த்தப்படும் பொருள் சிறந்ததானால், அந்தச் சொல் சிறந்ததாகாது போயினும், அதுபற்றி இகழாது பொருளின் சிறப்பை எண்ணி அப்பொருளைச் சொல்லும் அச்சொல்லை

யாவரும் கைக்கொள்வர்" என்பது கருத்து.

மெய்ப்பொருட்குரிய இத்தகைய மேன்மையோர்கள்தாம் தம்மை உணர்ந்து, தமக்குத் தலைவனான இறைவனையும் உணர்ந்த சித்தாந்த சைவர்கள் என மெய்கண்டார் சிவஞான போதத்தில் குறிப்பிடுகிறார். அத்தகைய உத்தமர்கள் "குற்றங்களை நீக்கி குணங்கொண்டு பாராட்டுவார்கள்"; தவிர என்னை இகழ மாட்டார்கள் என்று,

*"தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்*
*எம்மையுடைமை எமையிகழார்"*[11]

என வரும் அடிகளில் குறிப்பிட்டு, இங்ஙனம் உத்தம குணங்களைப் பெற்ற நன்மக்களது அவையே 'அவை' என அவையடக்கத்தில் பணிமொழி கூறுகிறார்.

உத்தமரைப்போல, நூலைக் கண்ட மாத்திரத்தில் பொருளைக்கொள்ள மாட்டாது, மாணிக்கத்தின் தன்மையையும், பழமையையும் ஆராய்ந்து அணிவதைப்போல, பழைய ஆகமங்களைக் கொண்ட இப்புதிய நூலை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் தன்மையினர் "நடுவாம் தன்மையினார்" (மத்திமர்) எனப்படுவர்.

மணியையும், அணியையும் பற்றித் தெளிந்த அறிவில்லாதவர்கள் பலர் கூறப் புகழ்ந்தால் புகழ்ந்தும், பலர் கூடி இகழ்ந்தால் இகழவும் செய்வர். அதைப்போல நன்று, தீது என்றறியத் தங்களுக்கெனவோர் அறிவிலாதவர்கள் பலர் கருத்துக்களைப் போற்றும் புன்மையர் அதாவது அதமர் ஆவர்.

சான்றோர் செய்தியுஞ் சார்பிலார் தன்மையுள் தோன்றுமாறு இவ் அவையடக்கப் பாடல் சொல்லப்பட்டது என்று காவை அம்பலநாதத் தம்பிரான் குறிப்பர்.

சீகாழித் தத்துவப் பிரகாசரும் இவ் அவையடக்கப் பாடலை விரித்துக் கூறும் முகமாக தாம் படைத்த 'தத்துவப் பிரகாசம்' என்றும் நூலில் அவையடக்கம் சொல்கிறார்.[12]

இங்ஙனம், உமாபதி சிவாசாரியார், சான்றோர்கள் நிறைந்த உத்தமர் அவைக்குத் தம் நூற்பொருள் விளக்கத்தாலும், பணியுமாம் பெருமையினாலும் அடங்கி, மத்திமர் அவையையும், அதமர் அவையையும் தம் அறிவுத்திறனால் அடக்கி நின்று, தமிழ்ச் சிவஞானத்தை உணர்த்தியருளினார்.

சைவ சித்தாந்த சாத்திர இலக்கணங்களை எல்லையாகக் கொண்டு உமாபதி சிவாசாரியார் தவப்பிரகாசத் தன்மையாலும், திருவருள் பலத்தாலும், புதுமைச்செறிவும், புரட்சித் துணிவும் கொண்டு சைவசித்தாந்த கருத்துக்களின் வளர்ச்சியை, "தொன்மையவாம்" என்னும் சிவப்பிரகாசப் பாடல் வழியாக தொடங்கி வைக்கின்றார் என்று சொன்னால் மிகையாகாது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம்; 1370
2. கம்பராமாயணம் ; 6:3,4
3. திருவிளையாடற்புராணம்; 25: 2,3.
4. பெரியபுராணம்; 6:3,4.
5. கந்தபுராணம்; 33:3,4.
6. கம்பராமாயணம்; 9:1,2
7. C.R. Devadhar, Malavikagnimitram of Kalidasa, p. xi.
8. சிவப்பிரகாசம்; 12:1,2
9. மேலது; 12: 3,4
10. பெரியப்புராணம்; 7.
11. சிவஞானபோதம், அவையடக்கம்; 1,2,

# 8. 'சிவப்பிரகாச'த்தில் முத்திவகை (10)

- திரு க. கிருசுணன், எம்.ஏ., எம்.காம்., பி.எல்.,
*பொருளாளர், சைவ சித்தாந்தப் பெருமன்றம்*

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் அநாதியானவை. தோற்றமும், அழிவும் அற்றவை. ஆண்டவன் பேரின்பமும், பேரறிவும் ஆனவன். ஆன்மா அறிவிக்க அறியும் இயல்பினது; ஆணவம் அறிவில்லாத சடப் பொருள்.

ஆன்மா சார்ந்ததன் வண்ணம் வினைப்படும் இயல்பினது. ஆண்டவன் வயப்படும்போது, அவன் ஆட்படுத்தும்வழி நல்வினைகளையும், ஆணவத்தின் வயப்படும்பொழுது, ஆணவத்தின் தாக்கத்தால் தீவினைகளையும் வினைப்படுத்தும் இயல்பினது. இவ்வாறு வினைப்படும் ஆன்மா நல்வினையால் புண்ணியத்தையும், தீவினையால் பாவத்தையும் சேர்க்கிறது. அதன் பயனால் இன்ப, துன்பங்களை அனுபவிக்க பிறப்பு, இறப்புக்களில் மாறி, மாறிக் கிடந்து உழல்கின்றது.

நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகளும் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒப்பு (இருவினையொப்பு) ஏற்படும்பொழுது சத்திநிபாதம் நிகழ்கிறது. அதன் பயனாக ஆன்மா முக்தியடைகிறது. இந்த முக்தியை ஒவ்வொரு சமயத்தினரும் - ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் கருத்துக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கூறுவர். இதை உமாபதி சிவாச்சாரியார் தமது சிவப்பிரகாசம் நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

*அரிவையரின் புறுமுத்தி, கந்த மைந்தும் அறுமுத்தி, திரிகுணமும் அடங்கு முத்தி,*
*விரிவுவினை கெடுமுத்தி, மலம்போம் முத்தி, விக்கிரக நித்தமுத்தி, விவேக முத்தி,*
*பரவுமுயிர் கெடுமுத்தி, சித்தி முத்தி, பாடாண முத்தி, இவை பழிசேர் முத்தி,*
*திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே.*

இப்பாடலில் பல்வேறு சமயத்தவரும் கூறும் பத்துவித முத்தி பேதங்களின் இயல்புகளைக் கூறி அவை முத்தியல்ல என மறுத்து உண்மை முத்தியின் நிலையைக் கூறுகிறார் உமாபதி சிவம்.

**1. அரிவையர் இன்புறு முத்தி**

உலகாயதர் பெண்களை நினைத்து அவர்களது காலடியில் வீழ்ந்து கிடப்பது பெருந்தவம் என்றும், அப்பெண்களோடு, தன் அறிவுகெட்டுக்கூடுவது முத்தி என்றும் கூறுவர் (சித்தியார் பரபக்கம் 32). ஆனால், உயிர்களோ, உடலோ, தாமே ஒன்றோடு ஒன்று சேருவதில்லை. இறைவனே உயிர்களின் வினையை அறிந்து அதற்குரிய உடலைத் தருகிறா., தோல், இரத்தம், மாமிசம், நரம்பு முதலியவற்றால் ஆகிய பெண்ணின் உடல் தன் நிலை மாறி அழியக்கூடியது. எனவே, அதனால் பெறும் இன்பமும் நிலையற்றதே. ஆகவே, இந்த இன்பமே முத்தி என்பது பொருந்தாது (சித்தியார் - பர. 59-60).

**2. ஐந்தும் அறு முத்தி**

புத்த சமயத்துள் ஒரு பிரிவினரான சௌந்தராதிகள் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை,

விஞ்ஞானம் ஆகிய ஐந்து கந்தமும் பிறப்புக்குக் காரணம் ஆகிய கட்டுகள் ஆகும். இவை ஒழிந்து போதலே முத்தி என்பர் (சித்தி பர. 94). ஒரு பொருள் பல்வேறு நிலைகளில் வளர்ந்து, தேய்ந்து, கெடுவது அதன் காரியப் பகுதியே, காரண நிலையில் அழிவதில்லை (சித்தி பர. 108). ஒன்றிலிருந்தே மற்றொன்று உருவாகும். இல்லாததிலிருந்து எதுவும் வருவதில்லை. கந்தங்கள் ஐந்தும் அழிந்தால் முத்தியில் செல்பவர் இல்லை. மனத்தினால் அறியும் அறிவு கெடாது இருந்தால் கந்தங்கள் உண்டாக வேண்டும். அப்போது கட்டுக்கு ஏதுவாகிய துயரம் ஏற்படும். ஆகையால் கந்தங்கள் அழிவதே முத்தி என்பது சரியல்ல (சித்தி பர. 133).

**3. திரிகுணமும் அடங்கு முத்தி**

நிரீச்சுர சாங்கியன், சுத்த புருடன் பிரகிருதியின் இடத்தில், அறியாமை காரணமாக, நான் என்ற உணர்வுடன் இருக்கிறான். அவனுக்கு ஞானம் வந்து எதுவும் தனக்கு இல்லை என அறிந்ததும் பந்தம் நீங்கி முத்தி கிடைக்கும் என்பர். ஆனால், சுத்த புருடன் என்பவன் பிரகிருதியை நீங்காவிட்டால் பிரகிருதியே அஞ்ஞானத்தைச் செய்கிறது. ஆன்ம புருடன் தானாக அறியமாட்டான். பிரகிருதி சடம். வேறு ஒரு கருத்தா இல்லாமல் பாசஞானமோ, பசுஞானமோ கொண்டு உணர்வதால் புதிய பந்தம் ஏற்படாது. எனவே இதுவும் முத்தி ஆகாது (சித்த.பர. 260-263).

**4. வினைகெடு முத்தி**

பிரபாகரன் என்பான் அரிதாக வினை செய்து முடித்த பின்பு அபூர்வம் ஒன்று உண்டாகும். வினையில் அறிவு கூடி நின்று செயற்படும்போது, வினைக்குரிய பயனை அந்த அபூர்வம் தரும். அந்த அறிவும், செயலும் அற்று மண்போலும் கல்போலும் இருப்பதே முத்தி என்பர். ஆனால் அபூர்வம் என்ற ஒன்று பயன் தரும் என்பது வேதத்திற்கு முரண். அறிவு கெட்டுக் கிடப்பதே முத்தி என்பது பொருத்தமல்ல. அறிவு, உயிரின் இயல்பு. எனவே அறிவு கெட்டால் உயிர் நிலை பெறாது. முத்தி அமையும் என்பதும் பொருந்தாது (சித்தி. பர. 205-207).

**5. மலம் போம் முத்தி**

பேதவாதி, சிவனது அருளினாலே ஆன்மாவுக்கு மலம் கெட்டு, பெறுவானும், பேறுமாக இருப்பதே முத்தி என்பார். ஆனால் பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி என்பது அறிந்ததே. அவ்வாறிருக்கப் பாசம் அழியும் என்பது ஏற்புடைத்தன்று. மேலும், பேதவாதி கூறியதுபோல குளிகை செம்பைப் பொன்னாக்கியதுபோல ஆன்மா தனது தன்மையும் கெட்டு சிவசொரூபமாகாமல் வேறு பொருளாகும் என்பதும் பொருந்தாது. (சங்கற்ப நிவாகரணம் 7.16-20, 8.17).

**6. விக்கிரக நித்த முத்தி**

சிவசமவாதி என்னும் சமயப் பிரிவினர், ஆன்மா, சிவனுடைய பஞ்சக் கிருத்தியத்தையும், சர்வக்கியத்தையும் தன்னை விட்டு நீங்காதவாறு பெற்று, இதற்கு முன் இந்த அறிவு, தொழில் இரண்டையும் பெற்று நீங்காதிருக்கின்ற பெரியோர்களின் கூட்டத்தோடு சென்று கூடி நிற்பதே முத்தி என்பர். இதற்கு அவர்கள், புழுவை, வேட்டுவாளி (பிள்ளைப்பூச்சி) தன் கொடுக்கினாற் கொட்டி மாற்றியதை உதாரணமாகக் கூறுவர். இரண்டு நிலையிலும் உருவமுண்டு. இது முத்தியில் ஆன்மாவுக்கு உடல் உண்டு என்பது போலாம்; இது பொருத்தமல்ல. மேலும் இறைவனைப்போல, பஞ்சக்கிருத்தியங்களை ஆன்மாக்கள் பெற்றுச் செயல்படும் என்பதும் தவறு. உதாரணமாக சுந்தரர் முதலையுண்ட குழந்தையைத் தரவேண்டுமென இறைவனை வேண்டினாரேயொழியத் தான்

அழைக்கவில்லை. இறைவனின் திருவருளைப் பெற்றவர்கள் இறைவனைப் போல ஐந்தொழில் செய்வதில்லை. எனவே அருளோடும் கூடிய ஆன்மா எல்லாவற்றையும் அறியும் என்பது பொருந்தாது (சங்கற்ப நிராகரணம் 8.19-25, 9.73-79, 113).

**7. விவேக முத்தி**

மாயாவதி எனும் சமயத்தினர் விவேக ஞானம் உண்டாவதே முத்தி என்பர். அதாவது பல்வேறு வினைகளின் தாக்கத்தால் இந்த உடலிலே மயங்கி நிற்கிற சீவான்மாவிடத்து ஒரு விவேக ஞானம் தோன்றி அந்த மாயா அவத்தையை நீக்குவதே முத்தி என்பதாகும்.

இதில் கூறப்பட்ட விவேகம் பிரமத்துக்கு முதலிலேயே இருந்திருந்தால் பிரமத்திற்கு மயக்கம் ஏற்படாது; இடையிலே வந்ததாகக் கொண்டால், முன்பு இல்லாதது தோன்றாது; அதேபோலப் பின்னர் உண்டானதாகவும் கொள்ள முடியாது. அறிவான பிரமத்தின் முன் அறியாமையாகிய தேகாதி பிரபஞ்சமும், பிரபஞ்சத்தின் முன் பிரமமும் நில்லாது. அகம் பிரமம் என்பது இந்தப் பிரபஞ்ச முழுமையும் அறியத்தக்க சீவன் பிரமத்துக்கு வேறானவன். உடலின் உண்டாகும் சலனம் உடலுக்கு மட்டுமே; அது ஆன்மாவுக்கல்ல. எனவே சீவன் முத்தி என்ற இந்தக் கருத்தும் ஏற்புடைத்தல்ல (சங்கற்ப நிராகரணம் 3.37-49, 4.174-178).

**8. உயிர் கெடு முத்தி**

மாயா வாதத்தில் பாற்கரியன் என்பவர் ஆன்மா கெடுவதே முத்தி என்றனர். அதாவது பரப்பிரமம் தானே பிரபஞ்சமாகவும், ஆன்மாவாகவும் செயற்படும்போது ஆன்மா கன்மத்தை அனுபவித்து ஞானம் பெற்று பிரமத்தோடு கூடி அழிவதே முத்தி என்பது.

ஆனால் பரப்பிரமம் பிரபஞ்சமாகவோ, ஆன்மாவாகவோ ஆவதில்லை. ஆன்மா முத்தியில் அழிவதும் இல்லை. ஞானமும் கிரியையும் மாறினால் வீடுபேறு பெற இயலாது. எனவே இந்தக் கருத்தும் எற்புடைத்தன்று (சித்தி.பா. 254,255,259).

**9. சித்தி முத்தி**

அடுத்து, சங்கிராந்தவாதி எனும் சமயத்தார் (அணிமா, மகிமா, லகிமா, கரிமா, ஈசத்துவம், வசித்துவம், பிராரத்தி, பிராகாமியம் ஆகிய) அட்டமா சித்தி பெறுவதே முத்தி என்பர். அதாவது ஐம்பொறிகளின் ஞானத்தை உட்கரணங்கள் அறியும் அந்தக் கரணங்கள் நீங்கியவிடத்து பொறிகளோடு செயல்கள் பொருந்தாது, பிராணவாயு நீங்கிடில் உடல் அவத்தைப்பட்டுக் கிடக்கும். அப்போது பிராரத்தம் நீங்க இருவினையொப்பும், சத்திநிபாதமும் உண்டாகும். ஆன்மா தன் தன்மை கெட்டுச் சிவகரணமாக மாறி அருளோடும் கூடி நிற்பதே முத்தி.

பிராணவாயு காரியப்படுத்த உடல் காரியப்படும் என்பது சரியல்ல. உறக்கத்தில் பிராண வாயு செயல்பட்டும் உடல் செயற்படவில்லை. ஆகவே, ஆன்மா உடலைக் காரியப்படுத்தும்போது பிராணவாயு காரியப்படுத்தாது என்பதும் ஐம்பொறிகளின் ஞானத்தையும் உட்கரணங்கள் அறியும் என்பதும் தவறு. ஏனெனில், எல்லாப் பொறிகளும் ஏககாலத்தில் தொழிற்படுவதில்லை. அசுத்த மாயையில் தோன்றி பலவினைகளுக்குக் காரணமாயிருக்கிற இந்தக் கருவிகளைச் சிவ சொருபமென்பதும் தவறு. அவை திருவருளோடு கூடும் என்றால், திருவருளும் மாயையும் ஒன்றாகக் கொள்ள வேண்டும்; இதுவும் தவறு. அருளும், ஆன்மாவும் கூடி நிற்கும் என்பதும் தவறு(சங். நிரா. 9.103-111, 10.22-24).

**10. பாடாண முத்தி**

அடுத்து, பாடாணவாதி எனும் பிரிவினர், அறிவில்லாத ஆன்மாக்கள் அதிக அவத்தைப்பட்டுக் கிடக்கும் தன்மைபோலச் சுத்த அவத்தையிலும் ஆன்மா ஒன்றுமறியாமல் கல் போலக் (பாடாணம்) கிடக்கும். சுட்டிக் காணும் காட்சியின்றி, அனுபவமுமின்றி இருக்கும் இந்நிலையே முத்தி என்பர். இந்தக் கருத்தில் அநாதியான பாசம் கெடும் என்றும், ஆன்மா தன் தன்மை கெட்டு, சிவ சொரூபமாகாமல் வேறு பொருளாக (பாடாணம்) மாறும் என்றும் சொல்வது பொருந்தாது(சங்நிரா. 6.38-40, 7.9-15).

இவ்வாறு பல்வேறு சமயத்தவரும் சொன்ன பத்து வகையான முத்தி நிலைகளும் தவறு என்றும், அவை முத்தி நிலையின் உண்மையல்ல என்றும் சிவஞான சித்தியாரும், சங்கற்ப நிராகரணமும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இனி உண்மையான முத்தியைக் காண்போம்:

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையும் இயல்பும் சிவாகமங்கள் கூறும் காமக்குரோதங்களைக் கைவிட்டுப் பெருமானின் திருவடியையே வழிபட்டு, திருவருளையே விரும்புவர். மும்மலங்களை விட்டு நீங்கி, திருவடியைக் கூடுவதே முத்தி இன்பம். தொடக்க காலம் தொட்டு இயல்பாகவே பாசங்களின் நீங்கி, தோற்றமும், அழிவும் அற்று, பேரறிவும், பேரருளும், பேராற்றலும் உடைய சிவ பெருமான், உயிர்கள்பால் கருணை மேலீட்டால் உயிர்களின் நல்வினை தீவினை ஒப்பு ஏற்படும்போது ஆன்மாக்களிடத்து அருட்சக்தியைப் பதியும்படிச் (சத்திநிபாதம்) செய்கிறான்; பெருங்கருணை மிக்க தன் திருக்கரத்தால் பொல்லாப் பிறவிக் கடலில் ஆன்மாக்கள் மீண்டும் விழாமல் எடுத்து என்றும் மாறாத பேரின்பப் பெருங்கரையில் வைத்து அருளுவதே உண்மை முத்தி. இதுவே சைவ சித்தாந்தம் அறிவிக்கும் முத்தி (சித்தியார், பரபக்கம் - 63,134).

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!

# 9. 'திருவருட்பயன்' உணர்த்தும் அணைந்தோர் தன்மைகள்

– சித்தாந்த கலாநிதி, சைவநன்மணி, முனைவர் திருமதி. கோமதி சூரியமூர்த்தி,
*மதுரை - 19.*

திருவருட்பயன் கூறும் அணைந்தோர் தன்மைகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றன. கருத்துக்கட்கு அரணாகத் திருக்குறள், பிற திருமுறைகள், சாத்திர நூல்கள் இவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

**'அணைந்தோர்' - ஒரு விளக்கம்**

இறைவன் திருவடியை அணைந்தோர் எனப் பொருள். உடம்பு நீங்கியபின் உயிர்கள் இறைவனுடன் கூடித் துய்க்கும் பேரின்பம் பரமுக்தி எனப்படும். அத்தகைய பரமுக்திநிலையை உடம்போடு கூடிய இப்பிறவியிலேயே அனுபவிப்பது சீவன் முக்தி எனப்படும். அவ்வாறு அனுபவிப்பவர்கள் சீவன் முத்தர்கள் எனப்படுவர். தமிழில் அணைந்தோர் என்பர்.

**அணைந்தோர் இயல்புகள்**

உயிர்களின் முடிந்த முடிவான குறிக்கோள் பாசத்தை விட்டு நீங்கிப் பதியை உணர்ந்து அழுந்திப் பேரின்பத்தை அனுபவித்தலாகும். எனவே நூலின் இறுதி அதிகாரத்தில் அணைந்தோர் இயல்புகளை உமாபதிசிவம் விளக்குகிறார்.

**சிவஞானத்தால் நிட்டை கூடுவர்**

சீவன் முத்தர்கள் சிவஞானமாகிய திருவருளில் தம் அறிவு, இச்சை, செயல்கள் அடங்கப்பெற்றுப் பேரின்பம் துய்ப்பர். பேரின்பத்தில் ஆழ்ந்துள்ளதால் அவர்களுக்கு வேறு நினைவும் இல்லை. நினைவினால் எழும் சொல்லும் இல்லை. எனவே பேச்சடங்கி மோனநிலை பூண்டிருப்பர். மோனம் என்பது வாய் பேசாதிருத்தல் அன்று. அது ஞானநிட்டையைக் குறிக்கும். "மோனம் என்பது ஞானத்தின் வரம்பு" என்கின்றார் ஔவையார். இதனை உமாபதிசிவம்,

" *ஓங்கு உணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத்*
*தூங்குவர் ; மற்று ஏதுண்டு சொல்*" (*திருவருட்பயன், 91*)

என்கின்றார். தூங்கும்போது உலக நினைவும், வாதனையும் இராது. அதுபோல ஞானிகள் உலகவாதனையின்றி ஆனந்தத்தில் தம்மை மறந்திருப்பதால் அவர்களைத் தூங்குவர் என்கின்றார்.

" *ஓங்குணர்வு அகத்து அடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்க*
*நேரே தூங்குவர்*"

என்று தம் "சிவப்பிரகாச" நூலிலும் (செ. 93) கூறுகின்றார்.

" *தூங்காமல் தூங்கிச் சுகப் பெருமான் நின் நிறைவில்*
*நீங்காமல் நிற்கும் நிலை பெறவும் காண்பேனோ*" (*காண்பேனோ என் கண்ணி, 10*)

என்று தாயுமானவரும் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. சிவத்தையே உணர்ந்து நிற்றல் தூங்காநிலை; உலக வாதனை இன்றி இருத்தல் தூங்கும் நிலை. இவ்விரு நிலைகளும் இவர்களிடத்துக் காணப்படுதலால் "தூங்காமல் தூங்கி" என்றார்.

**செயலற்றவர்கள்**

சீவன் முத்தர்கள் சிவனைப்போன்று ஐந்தொழில்களையோ, சிவனருளால் அவன் ஏவலால் பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் போன்றோர் செய்யும் ஏதாவது ஒரு தொழிலையோ, போகம் நுகர்வதற்குக் காரணமான வெய்ய வினைகளையே எதுவுமே செய்யார் (தி.ப. 92).

" *உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்*
*உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்தே*"

(*சிவஞான சித்தியார் சுபக்கம், 319*)

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுவதும்,

*" போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்" (திருச்சதகம், 72)*

என்று மாணிக்கவாசகர் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

**ஒப்பற்ற சிவனையே உணர்பவர்கள்**

சீவன் முத்தர்கள் எல்லாவற்றையும் அறியும் வியாபக அறிவைப் பெற்றிருந்தாலும், சிவம் ஒன்றையே உணர்ந்து நிற்பர். வேறு பொருட்களை அறிய விரும்பார் (தி.ப. 93).

*" ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்*
*ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண்*
*கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்*
*அங்கையற்கு ஆளாம் அது" (அற்புதத் திருவந்தாதி, 11)*

என்று காரைக்காலம்மையார் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**புலனடக்கம் மிக்கவர்கள்**

*" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள், 126)*

என்று வள்ளுவர் புலனடக்கம்பற்றிக் கூறுகின்றார். உமாபதிசிவம், "நிலத்தில் நடக்கும் ஆமை இடையூறு எதிர்ப்படும்போது தன் நான்கு கால்களையும், முகத்தையும் ஓட்டிற்குள் அடக்கி அசைவற்றுக் கிடக்கும். அதுபோல, சீவன் முத்தர்கள் துன்பம் தரும் உலக விடயங்களில் செல்லவிடாது, தம் புலன்களை அடக்கிக் கொள்வர். தமக்குப் புகலிடமான சிவபரம்பொருளை விட்டு என்றும் நீங்கார்" என்கின்றார்.

*" மன்னு திருப்பெருந்துறை இறைதாள்*
*பூண்டேன் புறம் போகேன் இனிப் புறம் போகல் ஒட்டேனே" (உயிருண்ணிப்பத்து, 7)*

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**சர்வ வியாபகர்**

சீவன் முத்தர்கள் பசுத்துவம் (ஆணவம்) நீங்கி, சிவத்துவம் (சிவமாம் தன்மை) பெற்றவர்கள். சிவனது தன்மை வியாபகநிலை. இவர்களும் சிவனைப்போன்று சர்வவியாபகர். எந்த இடமும் சிவனையின்றி இல்லாதவாறுபோல, சீவன்முத்தர்களின்றி எந்த இடமும் இல்லை என்கின்றார் உமாபதி சிவம் (செ, 95).

*" கண்ணுதல் நிறைவதனில் கலந்து காயம்*
*கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன்" (சித்தியார் சுபக்கம், 283)*

என்று அருணந்தி சிவாசாரியார் ஞான நிட்டையாளர்பற்றிக் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**உள்ளும், புறம்பும் ஒரு தன்மைக் காட்சியர்**

இதற்கு இருவிதமாகப் பொருள் கூறலாம்.

1. சீவன் முத்தர்கள் உள்ளத்தில் இடையறாது இறைவனை நினைத்துக்கொண்டிருப்பதுபோல, புறத்தில் எல்லாப் பொருள்களிலும் சிவனையே காண்பர். நாவுக்கரசர் திருவையாற்றில் அனைத்து

அஃறிணை உயிர்களையும் சிவசக்தியாகக் கண்டதும் (4:3:1), காரைக்காலம்மையார் நாளின் ஒவ்வொரு பொழுதிலும் இறைவனைக் கண்டதும் (அற், திரு.65) இங்கு நினைவுகூர்க.

*" இச்சகத்தில் நேரார்கள் நேரிடினும்*
*தற்பரமாகக் கண்டிருப்பார் தாமே" (உடல் பொய்யுறவு, 27)*

என்று தாயுமானவர் கூறுவதும் இங்கு நினைவுகூர்க.

*" பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே*
*பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்"*

*" சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்" (சித்தியார், சுபக்கம், 311)*

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுவதையும் இங்கு நினைவுகூர்க.

2. சீவன் முத்தர்கள் புறத்தே சிவவேடமான விபூதியும், உருத்திராக்கமும் அணிந்துள்ளனர். விபூதி தூய்மையின் அடையாளம். உருத்திராக்கம் இரக்கத்தின் அடையாளம். அதுபோல அவர்கள் உள்ளமும் தூய்மையும், அனைத்துயிர்களிடத்து இரக்கமும் உடையது. தூய்மை என்பது அழுக்கு எனப்படும் ஆணவம் நீங்கிச் சிவத்துடன் விளங்குதலைக் குறிக்கும். "சீவன் முத்தர்கள் உலகப் பொருட்கள் அனைத்திலும் சிவத்தைக் காண்பதால் எதையும் அவர்கள் வெறுப்பது இல்லை" (தி.ப. 96) என்கின்றார் உமாபதிசிவம்.

**பற்றற்ற செயலால் பேரின்பம் துய்ப்பவர்கள்**

யான், எனது என்ற அகப்புறப் பற்றுடன் செயலாற்றும் உயிர்கள் பிறப்பிறப்பில் உழலும். சீவன் முத்தர்கள் அத்தகைய பற்று நீங்கி, எல்லாம் சிவன் செயல் எனக் கருதிச் செயலாற்றுவதால் பேரின்பம் துய்ப்பர். இதனை உமாபதி சிவம்,

*" உறுந்தொழிற்கு தக்க பயன் உலகம் தத்தம்*
*வறுந்தொழிற்கு வாய்மை பயன்" (தி.ப. 97)*

என்கின்றார். (உறுந்தொழில் - பற்றுடன் ஆற்றும் செயல். வறுந்தொழில் - பற்றின்றி ஆற்றும் செயல், வாய்மை - சிவம், பேரின்பம்).

*" நம் செயல் அற்று இந்த நாம் அற்றபின் நாதன்*
*தன் செயல் தானே என்று உந்தீபற*
*தன்னையே தந்தான் என்று உந்தீபற" (திருவுந்தியார், 6)*

என்று திருவியலூர் உய்யவந்த தேவர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**வினையிலிருந்து விடுபட்டவர்கள்**

உயிர்கள் எடுத்துள்ள பிறவியில் ஆணவத்துடன் செய்கின்ற புதிய நல்வினை, தீவினைகள் ஆகாமியம் எனப்படும். அவ்வாறு பிறவிகள்தோறும் செய்த வினைகளின் தொகுப்பு சஞ்சிதம் எனப்படும். அதிலிருந்து ஒரு பிறவியில் அனுபவிக்க எடுத்து வந்த வினை பிராரப்தம் எனப்படும். சீவன்முத்தர்கள் பிராரப்த வினையை உடலால் அனுபவித்துக் கழிப்பர். அஃது அவர்கள் உயிரைத் தாக்காது. பிராரப்த வினையை அனுபவிக்கும்போது உண்டாகும் விருப்பு, வெறுப்பு காரணமாகச் செய்யும் செயல்களால்தான் புதிய ஆகாமியவினை உண்டாகும். சீவன்முத்தர்கள் பிராரப்தத்தை

விருப்பு, வெறுப்பின்றி அனுபவிப்பதால், அவர்கட்குப் புதிய ஆகாமியவினை உண்டாகாது. அப்படியின்றி ஒருவேளை உண்டாகுமானால் அவர்கள் அருள்வழி நிற்பதால் திருவருளே அந்த ஆகாமிய வினையைச் சுட்டெரித்துவிடும். (குருவருளால் அவர்களின் சஞ்சிதவினை நீங்கும்). எனவே சீவன் முத்தர்கட்கு வினை இல்லை. இதனை உமாபதிசிவம்,

*" ஏன்ற வினை உடலோடு ஏகும் இடை ஏறும்வினை*
*தோன்றில் அருளே சுடும்" (தி.ப. 98)*

என்கின்றார். (ஏன்றவினை - பிராரப்தம். இடை ஏறும்வினை - ஆகாமியம்).

**இம்மையிலேயே பரமுக்தி அனுபவம் பெறுபவர்கள்**

*" மும்மைதரும் வினைகள் மூளாவாம் மூதறிவோர்க்கு*
*அம்மையும் இம்மையே ஆம்" (தி.ப.99)*

என்பதில் மும்மைதரும் வினைகள் என்பதற்குப் பின்வருமாறு பொருள் கூறலாம். 1. இம்மை, மறுமை, அம்மைப் பலன்கள் தரும் வினைகள், 2. ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்ற மூவகை வினை இல்லை. இம்மூவகை வினை இல்லாமல் போவது எப்படி என்பது முன்பத்தியில் விளக்கப்பட்டது.

*" அல்லல் என் செயும் அருவினை என் செயும்*
*தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும்*
*தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு*
*எல்லை இல்லாததோர் அடிமை பூண்டேனுக்கே" (5:114:4)*

என்று நாவுக்கரசர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. (அல்லல் - பிராரப்தம், அருவினை - ஆகாமியம், தொல்லை வல்வினைத் தொந்தம்- சஞ்சிதம்). சீவன் முத்தர்கள் பரமுக்தியை (அம்மை) உடம்போடு கூடிய இப்பிறப்பிலேயே (இம்மை) அனுபவிப்பர். ஆதலால் "அம்மையும் இம்மையே ஆம்" என்கின்றார்.

**பெருங்கருணை உடையவர்கள்**

சிவனுடைய தலைமையை மறந்து தம்மையே தலைவர்களாகக் கருதும் பெத்தான்மாக்களின் (கள்ளத் தலைவர்) துன்பம் கண்டு சீவன் முத்தர்கள் இரங்குவர். தாம் வாழும் தெய்வீக வாழ்க்கை மூலமும், தம் அருளுபதேசம் மூலமும் அவர்கட்கு ஞானமார்க்கத்தைக் காட்டி உய்யும்படி உதவுவர் (தி.ப. 100).

*" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்க நின்*
*தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே" (பராபரக் கண்ணி, 65)*

என்று தாயுமானவர் கூறுவதையும், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (திருமந்திரம், 85) என்று திருமூலர் கூறுவதையும் இணைத்து முற்கூறிய திருவருட்பயன் கருத்துடன் ஒப்பு நோக்குக.

கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை எடுத்துள்ள நாமும் இப்பிறவியிலேயே சிவனை உணர்ந்து அழுந்தி அனுபவித்துப் பேரின்பம் துய்ப்போமாக.

# 10. கொடிக்கவி

- சிவஞானச்செல்வி திருமதி. கிருஷ்ணவேணி இராமச்சந்திரன்,
கோவை

'கொடி' அரசர்களுக்குரிய தச அங்கங்களுள் ஒன்று. தசாங்கமாவது பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை, கொடி ஆகிய பத்து. கொடி கட்டி ஆட்சி செய்தல் என்பது குடிகள் பசியால், நோயால், வறுமையால், பகையால் வாடி வருந்தாமல் காக்கும் தொழிலை அரசன் மேற்கொண்டுள்ளான் என்பதைக் குறிக்கிறது. ஒவ்வொரு தேசத்திற்கும் கொடி உள்ளதுபோல் ஒவ்வொரு மதத்திற்கும் கொடி உள்ளது. உயிர்களின் அறியாமையாகிய இருட்பகையை நீக்கி, வீடு பேறடையச் செய்யும் நெறியில் உயிர்களைச் செலுத்துவதால், மதங்கள் கொடிகளைக் கொண்டுள்ளன.

உலகையாளும் சக்ரவர்த்தியாகிய சிவபெருமானது தசாங்கங்களை மணிவாசகர் கிளிப்பத்து என்று சொல்லக்கூடிய 'திருத்தசாங்க'ப் பதிகத்தில் அழகுறப் பாடியுள்ளார். அதில் குற்றமற்ற ரிஷபக் கொடியே இறைவனது கொடி என்கிறார். குற்றமற்ற அறவடிவமே, தருமவிடையே இறைவனது கொடியாகும்.

*'கோதிலா ஏறாம் கொடி' - திருத்தசாங்கம் - திருவாசகம்*
*'ஏற்றுயர் கொடிஉடையாய் எமையுடையாய்' - திருப்பள்ளி எழுச்சி- திருவாசகம்.*

திருவிழாக் காலங்களில் கொடியேற்றப்படுதல் ஆணவம் என்ற பெரிய பகையை நீக்குவதன் அடையாளமே ஆகும். அதாவது ஞான விளக்கை ஏற்றுதலாகும்.

தில்லையம்பதியில் தடைபட்டிருந்த கொடியேற்றத்தை உமாபதி சிவாச்சாரியார், 'கொடிக்கவி' என்ற நூலை அருளிச் செய்து கொடியை ஏற்றினார் என்பது வரலாறு. கொடிக்கவி என்ற நூல் வடிவில் சிறியது; பொருளில் பெரியது. மூல நூலில் நான்கு செய்யுள்கள் மட்டுமே உள்ளன. 'துகளறு போதம்' என்ற நூலில் 100வது பாடலாக உள்ள "அந்த மலமறுத்து அங்கு ஆன்மாவைக் காட்டி............... கூறாமல் கூறக் கொடி" என்ற பாடல் கொடிக்கவியின் 5வது பாடல் என்பது நமது பரமகுருநாதர் காஞ்சி தொண்டை மண்டலாதீனம் ஞானப்ரகாச சுவாமிகளது (229ம் பட்டம் - முத்து. சு. மாணிக்கவாசகர்) கருத்து.

'கொடிக்கவி' சித்தாந்த சைவத்தை சுருங்கக் கூறும் அற்புத நூல்; சாத்திர வடிவில் அமைந்துள்ள தோத்திர நூல். இதனை தினமும் பாராயணம் செய்து, பொருள் உணர்ந்தால், சித்தாந்த சைவ நூல்கள் அனைத்தையும் ஒரு முறை படித்ததற்கு ஒப்பாகும். நாம் நம் அறியாமையை நீக்கிக்கொள்ள எப்படி கொடி கட்ட வேண்டும் என்று நமக்கு வழிகாட்டுகிறார் உமாபதியார்.

1. 'திரி மலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே' என்று முதற் பாடலிலும்
2. 'அருளாளா நீ புரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன் கோபுரவாசற் கொடி' என்று இரண்டாவது பாடலிலும்

3. 'அறிவு தம்மில் பிரியாமை தானே குறிக்கும் அருள் நல்கக் கொடி' என்று மூன்றாவது பாடலிலும்

4. 'பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி' என்று நான்காவது பாடலிலும்

5. 'இந்த அறிவை மாறாமல் மாற்றி மருவு சிவப்பேறு என்றுங் கூறாமல் கூறக் கொடி' என்று ஐந்தாவது பாடலிலும் அருளியுள்ளார்.

**1. அருள் கூடும்படி கொடி கட்டினனே:** உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது. அது சாரவேண்டிய இடம் அருளே என்று முதற்செய்யுளில் நமக்கு உபதேசிக்கிறார் உமாபதியார். ஞானத்திற்கும், ஆணவத்திற்கும் இடமாக இருப்பது உயிர். உயிர் என்பது உயிரறிவே. ஞானம் உயிரறிவில் மேலிட்டகாலத்து அறியாமையாகிய இருள் நில்லாது; இருள் மேலிட்ட காலத்து ஞானம் விளங்கித் தோன்றாது. தெளிவு பெறக்கூடிய, சிற்றறிவாக உயிரறிவு இருந்தாலும், மும்மலத்திலேயே ஊடாடிக் கொண்டிருக்கிறது. யான், எனது என்ற அகப்புறப் பற்றுகள் இருப்பதினால் மாயாமல சம்பந்தமும், யான் செய்தேன், நான் தலைவன் என்று இறுமாந்திருப்பதினால் கன்ம மல சம்பந்தமும் மேலோங்கி நின்கின்றன. இவை இரண்டும் ஆணவ மல சம்பந்தத்தினால்தான் விளைந்தது. எனவே யான், எனது என்ற பற்றுகள் இருக்கும்வரை, உயிர் மும்மலத்தில் அழுந்திக் கொண்டே இருக்கும். வினைகளைச் செய்த பிறவிக்கு வித்தை விளைவித்துக் கொண்டேயிருக்கும். அதனின்றும் நீங்க அருளுடன் கூடவேண்டும். 'நம' என்ற மலநடையிலிருந்து 'சிவ' என்ற அருள் நடைக்குச் செல்ல வேண்டும். அதற்குத் திருவருள் கூட்டவேண்டும். 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று அருணகிரிப் பெருமான் அருளிய வண்ணம் உண்மை குரு வரவேண்டும் என்று வேட்கையுடன் இருக்கவேண்டும். குருநாதன் சொன்ன சீலத்தை ஒளவையார் தம் விநாயகர் அகவலில்,

*'இருள்வெளி இரண்டிற்கும் ஒன்றிடம் என்ன*
*அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்*
*எல்லையில்லா ஆனந்தம் அளித்து*
*அல்லல் களைந்தே அருள்வழி காட்டி'*

என்று அருளியுள்ளார்.

**முதற்பாடல்:**

*'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடின் ஒன்ற*
*ஒளிக்கும் எனினும் இருள் அடராது - உள்ளுயிர்க்குயிராய்த்*
*தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள்*
*கூடும்படி கொடிகட்டினனே.*

**2. கோபுர வாசற்கொடி:**

இரண்டாவது பாடலில் சூக்கும பஞ்சாட்சரமாகிய 'சிவயநம' என்பதை விளக்கி, அதன் மூலம் நாம் அடைய வேண்டிய நிலையை உபதேசிக்கிறார்.

**இரண்டாவது பாடல்:**

*பொருளாம் பொருள் ஏது? (சி) போது ஏது? (வ) கண்(ய) ஏது?*
*இருளாம் வெளி(ந) ஏது? இரவு (ம) ஏது? - அருளாளா*
*நீ புரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்*
*கோபுர வாசற்கொடி.*

'சி' காரம் (பொருள்) - பொருளாம் பொருள் - அதாவது ஒப்பற்ற தலையாய பொருள் - அங்கிங்கு எனாதபடி அறிவாகி ஒழிவற நிறைந்து நிற்கும் சிவம் - அது 'கற்பனை கடந்த சோதி' - சிவசூரியன் எனக் கொள்ளலாம்.

'வ' காரம் (அருள்) - போது - சக்தியைக் குறிக்கிறது. தடையில்லா ஞானமே சக்தியின் வடிவமாகும். இது 'கருணையே உருவமாகி அற்புதக்கோலம் நீடி' - சூரிய கிரணங்களைப் போன்றது.

'ய' காரம் (தெருள்) - கண் - சூரியனையும், இருளையும் உணர்வது கண் - அதுபோல இறைவனையும், அறியாமையையும் அறிவது உயிர்.

'ந'காரம் (மருள்) - இருளாம் வெளி - தனு, கரண, புவன, போகமாகிய மாயையின் காரியம். மாயை நமக்கு அறிவு விளக்கத்திற்காக வந்ததாயினும், மயக்கத்தைச் செய்து, இறைவனைக் காட்டாது மலநடையில் செலுத்துவதால் 'இருளாம் வெளி' (தீபம்) எனப்பட்டது.

'ம'காரம் (இருள்) - இரவு- அறியாமையாகிய ஆணவம்.

இருளாம் வெளி = சகலம் - நினைப்பு

இரவு = கேவலம் = மறப்பு

நினைப்பு மறப்பு இன்றி நாம் நிற்க வேண்டும் என்று உபதேசிக்கிறார். 'வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரம் வாசல்' என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க, 'வாய்மையே தூய்மையாக, மனமே மணிலிங்கமாகக்' கொடிகட்டினால் 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்' என்பதை உணரலாம். இந்நிலை, 'நம் செயல் ஒன்றும் இல்லை, எல்லாம் நாதன் செயல்' என்பதனைக் கண்டு சிவமாய் நிற்கும் நிலையாகும். 'நீ புரவா வையமெல்லாம் நீ அறிய' என்பதினால் உயிர் சிவமாய் நிற்கும் நிலை உணர்த்தப்படுகிறது. இது தசகாரியத்தில் சிவயோகமாகும்.

**3. அறிவு தம்மில் பிரியாமை:**

மேற்செய்யுளில் அருளிய 'சிவமாய் நிற்றல்' என்றால் என்ன? என்பதனை மூன்றாவது செய்யுளில் விளங்குகிறார். இறைவன் வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாதவன். அது எப்படி எனில், அவனுடைய பாதம், 'பாதாளம் ஏழினும் கீழ்ச் சொற்கழிவு பாதமலர்', அவனுடைய திருமுடியோ, 'போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே' எனவே, இறைவனுடைய பாதாதி கேசம் அல்லது கேசாதி பாதத்தை எவ்வாறு விரித்துரைக்க முடியும்? எத்துணைதான் கூறினாலும் அவனுடைய ஒரு சிறிய பகுதியையே உரைக்க முடியும்! உணர முடியும்? நாம் உணர்வது அனைத்தும் சக்தியின் ஒரு சிறு துளியே ஆகும். இதனையே 'வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும் தாக்காது உணர்வறிய தன்மையன்!' என்கிறார். அந்த சக்தியை உணர்ந்து, அதனை உடையது சிவம் என்று அறிந்து நம் செயலற்று, நாதன் செயலில் அடங்கி நிற்றல் சிவமாய் நிற்றலாகும். அது,

*தீதும் பிடித்த வினையேதும் பொடித்துவிழ*
*சீவன் சிவச்சொரூப மெனத்தேறி*
*நாளினன்பதற்று உயிரோடு ஊனென்பதற்றுவெளி*
*நாதம் பரப்பிரம ஒளிமீதே*
*ஞானம் சுரப்ப மகிழானந்த சித்தியொடெந்*
*நாளும் களிக்கப் பாதம் அருள்வாயே!*

என்று அருணகிரிப் பெருமான் அடைந்த அனுபவமாகும்.

அதாவது, காண்பான், காட்சி, காணப்படுபொருள் என்ற மூன்றும் ஒன்றாகவே நிற்க வேண்டும். காண்பவனாகிய என் அறிவில் அறிவாகி இருப்பவனும் நீ, கண்டற்கு ஏதுவாகிய சிவஞானமும் நீ, காணப்படுபொருளாக இருப்பவனும் நீ என்பதை உள்ளவாறு உணர்தல். இதனை 'நோக்கிப் பிறத்தல்' என்று அருளின்றார். இதனையே,

*'அறிவானும் தானே அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற*
*மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்*
*அப்பொருளும் தானே அவன்'*

என்று காரைக்கால் அம்மையாரும் அனுபவித்தார். அந்த அனுபவத்தை நாமும் பெற வழி அருள்கிறார் உமாபதியார்.

**மூன்றாவது பாடல்:**

*'வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
*தாக்காது உணர்வரிய தன்மையனை நோக்கிப்*
*பிறித்து அறிவுதம்மில் பிரியாமை தானே*
*குறிக்கும் அருள்நல்கக் கொடி.'*

**4. கூசாமற்காட்டக் கொடி:**

நான்காவது செய்யுளில் சிவமாய் நிற்றற்குரிய வழியைக் காட்டுகிறார். அஞ்செழுத்தை விதிப்படி உச்சரித்து, அதன் பயனாக அஞ்செழுத்தும் அஞ்சுபதம்.

சிகாரம் = சிவம் (பொருள்)
வகாரம் = சக்தி (அருள்)
யகாரம் = உயிர் (தெருள்)
நகாரம் = உலகு + திரோதாயி (மருள்)
ம = ஆணவம் (இருள்)

என்று உணர்ந்து, குருவருளால் நிற்கும் முறையை அறிந்து நிற்றலை இங்கு விளக்குகிறார்.

**நான்காவது பாடல்:**

*அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்*
*பிஞ்செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்*
*பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்*
*கூசாமற் காட்டக் கொடி.*

அஞ்செழுத்து - நமசிவாய - இது சமய தீட்சையில் கிடைக்கப்பெறுவது - ஊன நடனம்.
ஆறெழுத்து = ஓம் சிவாயநம
எட்டெழுத்து = ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம
இது விசேஷ தீட்சையில் கிடைக்கப் பெறுவது - ஞானநடனம்
நாலெழுத்து - ஓம் சிவாய - இது நிர்வாண தீட்சையில் கிடைப்பது.

இவ்வாறு அவரவர்க்குரிய விதிப்படி உச்சரித்து, பின் அவ்வுச்சரித்தலினின்றும் நீங்கி, 'பிஞ்செழுத்து' என்றும், 'பேசும் எழுத்து' என்றும் போற்றப்படுகின்ற 'வ'காரமாய் நிற்க வேண்டும் அதாவது ஞானமாய் நிற்றல்.

*'அறிவு ஒன்று அற நின்று அறிவார் அறிவில்*
*பிறிவு ஒன்று அற நின்ற பிரான் அலையோ'*

என்ற 'கந்தர் அநுபூதி' நிலையில் நிற்றல். இதுவே 'நினையாமல் நினைந்து' என்பது 'பார்ப்பிடமெங்கும் சிவமாய்த் தோன்றல்' என்ற பரை தரிசனமும், 'செவ்வையே உயிருட்காண்டல்' என்ற ஞான தரிசனமும் பெற்று நிற்றல். அந்நிலையில் 'மேலைப் பெருவெழுத்தும்' 'பேசா எழுத்து'மாகிய, 'சி'காரத்தை, ஆனந்தத்தை அனுபவிக்கலாம். அவ்வனுபவத்தை வாக்கினால் சொல்ல இயலாது. 'இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன்' என்றதனால் அது பேசா எழுத்து எனப்பட்டது. ஒப்பற்ற சிவபோகம் என்றும், ஆன்மலாபம் என்றும் போற்றப்படுவது இதுவேயாகும்.

*மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்*
*(பாவிக்கப்) பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்*
*கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரையூரில் பாண்டிக் கொடுமுடி*
*நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே*

என்ற சுந்தரர் தேவாரமும் இங்கு உணரத்தக்கது.

**5. மருவு சிவப்பேறு என்றுங் கூறாமல் கூறக்கொடி:-**

மேற்கூறிய நான்கு செய்யுள்களில் அருளியதன் தொகையாக இப்பாடல் அமைந்துள்ளது. மருவுதல் = பொருந்துதல். சிவத்துடன் பொருந்தி நில் என்று, 'கற்றபின் நிற்க அதற்குத்தக' என்ற வள்ளுவர் வாக்கை கடைபிடிக்கச் சொல்கிறார்.

**ஐந்தாவது பாடல்:**

*அந்த மலமறுத்து அங்கு ஆன்மாவைக் காட்டியதற்கு*
*அந்த அறிவை அறிவிற்கு அங்கு - இந்த அறிவை*
*மாறாமல் மாற்றி மருவு சிவப்பேறு என்றுங்*
*கூறாமல் கூறக் கொடி.*

இது 'துகளறு போதம்' என்ற நூலின் 100வது பாடலாக அச்சிடப்பட்டு உள்ளது.

'எட்டுக் கொண்டார் (அட்டமூர்த்தமாக விளங்குபவரை) தமை தொட்டுக் கொண்டே நின்றால்' இந்த அறிவு மாறாமல் மாறும். 'வீடே வீடாகி', 'சிவப்பேறு' கிட்டும்.

உமாபதியார் அருளிய நெறியில் நாமும் நிற்க, குருவருளையும், திருவருளையும் இறைஞ்சுவோம்.

# 11. 'நெஞ்சு விடு தூது' காட்டும் ஞானாசிரியர்

- திருமதி. மதி வேலாயுதம்,
தூத்துக்குடி.

சந்தான குரவருள் நான்காமவராகிய *உமாபதி சிவாசாரியார்* அருளிச் செய்த எட்டு நூல்களுள் "*நெஞ்சு விடு தூது*" ஒன்றாகும். "தூது" என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். இறைவனே மறைஞானசம்பந்தராய்த் தம்மை ஆட்கொண்டார் என்று எடுத்துக் கூறுகிறார். தம்மைத் தலைவியாகவும், தம் ஞானாசிரியரைத் தலைவராகவும் பாவித்து, அவர் திருவுலாச் செல்லும்போது அவரிடம் ஈடுபாடு கொண்டதாகவும் தம் உள்ளம் கவர்ந்த தலைவரணிந்துள்ள மாலையைப் பெற்று வரத் தம் நெஞ்சைத் தூதாக அனுப்புவதாகவும் இவ்வருமை நூலை யாத்துள்ளார். 129 கண்ணிகள் கொண்ட இந்நூல் கலிவெண்பாவால் ஆனது.

இவ்வுலகத்திலே வாழ்கின்ற உயிர்கள் அனைத்தும் உலகத்து இன்பங்களைத் துய்த்து அதிலேயே உழல்கின்றன. மலங்களால் பிணிக்கப்பட்டுள்ள இவ்வுயிர்களின் கட்டுகளை அறுக்கின்ற பேராற்றல் உடையது சிவ பரம் பொருளேயாகும். ஆனால் அப்பரம்பொருளும் தானாகத் தன் அருளால் வெளிப்பட்டுத் தோன்றும் என்றும் கூறுவார்கள் நம் அருளாளர்கள். ஐம்புல வேடர்களால் வளர்க்கப்பட்ட உயிர் தனது முதலாகிய இறைவனை மறந்து இருக்கின்றது. அத்தகைய உயிர்க்கு உணர்த்தும் முறைமையை,

"*.. தம் முதன் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு*"

என்று *சிவஞான போதம் - எட்டாம்* நூற்பாவில் *மெய்கண்ட சிவாசாரியார்* கூறுகிறார். அதே கருத்துப்பற்றித் "*திருவருட்பயன்*" நூலும்,

"*ஆர் அறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும்*
*பேரறிவான் வாராத பின்*"

என்று கேள்வி எழுப்புகிறது. உயிர்கள் ஞானம் பெறுவதற்கு இறைவன்தான் குருவாக வர வேண்டும் என்று உணர்கின்ற வேளையில், அவ்விறைவன்,

"*மாலும் அயனும் பன்றியும் அன்னமுமாய்ப் பார் இடந்தும் வான் பறந்தும் என்றும் அறியா இயல்பினான்*" எனவும், இந்திரன் முதலான வானோரும், புவி, மந்திரங்கள், வேதங்கள் இவையாவும்,

"*காணா நலத்தினான்*"

எனவும் நெஞ்சு விடு தூது உணர்த்துகிறது. வானோர்க்கும், ஏனையோர்க்கும் அரியவனாகத் தோன்றும் அவன், தன்னிடம் தீராத அன்புகொண்டு ஒழுகுவோர்க்கு எத்தகையவன் என்பதையும் விளக்குகிறது இந்நூல்.

"*மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான*
*மெய்யர்க்கு மெய்யன் வினைக்கு வினை ஆயினான்*"

என வரும் வரிகள் அவனை நினைப்பவர்கள் மனத்திலே உண்மையாக நிறைந்து நிற்கிறான் இறைவன் என நம்மைத் தேற்றுகின்றன.

இறைவன் ஒருவனே குருவாக வந்து உணர்த்தினாலன்றி உயிர்கள் உய்வு பெறா என்று உறுதி செய்யப்பட்டுவிட்டது. அவ்விறைவனும் வானோர்க்கும் அரியன்; அடியார்க்கு எளியன் என்பதும் உணர்த்தப்பட்டது. இனி, இறைவன் குருவாக வருவானா என்ற ஐயத்தை நீக்க முயல வேண்டும். மணிவாசகப் பெருந்தகை அருளிச்செய்த திருவாசகத்தில் உள்ள "*போற்றித் திருஅகவல்*" இவ்வையத்தை நீக்குகிறது.

உயிர்கள் அனைத்தும் படும் அல்லல்களை வரிசையாகக் கூறி வருகையில் "*மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து*" என்று தொடங்கி "*பல்கோடி விக்கினங்களைக்*" கூறுகிறார். உலகியலிலே உழல்கின்ற உயிர்கள் இறைவனை நோக்கித் திரும்புகின்ற வேளையிலே,

*" அருபரத் தொருவன் அவனியில் வந்து*
*குருபரனாகி அருளிய பெருமை"*

என்று உறுதி கூறுகின்றார். இறைவன் அவ்வாறு குருவாக வருவது அவனது அளவிறந்த கருணையைக் காட்டுகிறது. அந்தக் கருணையே திருவுருவாகக் கொண்டுதான் இறைவன் குருவாக எழுந்தருள்கிறான் என்பதைத்தான் *குமரகுருபர சுவாமிகள்* தமது "*கந்தர் கலிவெண்பா*"வில்,

*"பிறியாக்*
*கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்*
*குருபரன் என்று திருப்பேர் கொண்டு"*

என்றமைக்கிறார். முன்னோர் சொல்லும் பொருளும் பொன்னேபோல் போற்றி உமாபதி சிவாசாரியாரும் தம் நூலில்,

*"சுத்த*
*வெறு வெளியாய்ப் பாழாய் வெறும் பாழுக்கு அப்பால்*
*உறுபொருளாய் நின்ற ஒருவன் - பொறியிலியேன்*
*வெம்பும் பிறவி அலை விழாமல் வீடு அளித்த*
*சம்பந்த மாமணி எம் தம்பிரான்"*

என்று கூறுகிறார். இறைவனே தனக்குக் குருவாக மறைஞான சம்பந்தராகி வந்துள்ளார் என்று மனம் நெகிழ்ந்து பாராட்டுகிறார். முப்பொருள்களின் இயல்பையும் உள்ளவாறு உணரும்படி உணர்த்திக் கட்டினின்றும் ஆன்மாவை விடுவித்து மெய்ப்பொருளாகிய சிவனிடத்து அன்பு பூணச் செய்து அவனது திருவடியைப் பற்றிக்கொள்ளச் செய்கின்ற ஞானாசிரியர் சிவமே அன்றி வேறில்லை. எனவே தம் குருநாதரைப்பற்றி விரிவாகக் கூறுகையில் இறைவனுக்குரிய இயல்புகளை உபசரித்துக் கூறுகிறார். தன்னுடைய நெஞ்சினை, தம் குருநாதர் இருக்கும் திருஓலக்க மண்டபத்தைச் சென்று சேர்ந்து, அவரை வணங்கச் சொல்கிறார்.

*"ஆர்த்தகரி*
*அன்று உரித்தாய்.............*
*வேளை எரித்த விழியாய்"*

எனப் பாராட்டிக் கூறுகிறார். மறைஞான சம்பந்தப் பெருமான் ஆனையை உரித்தவர் எனவும்,

காமனை எரித்தவர் எனவும் சிறப்புச் சேர்க்கிறார். சிவபெருமான் பெருங்கருணைத் தடங்கடல் என்றாலும், அறநெறி நில்லாதவரை ஒறுத்து நன்னெறியில் நிறுத்துவதும் அவரே. மறக்கருணை விளைவித்த 8 பதிகளுள் ஒன்றான திருவழுவூர் யானை உரித்த இடமாகும். திருக்குறுக்கை காமனை எரித்த இடமாகும். இந்நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து இங்கே குறிப்பிடுகிறார். இறைவனின் திருவடிகளைச் சென்று சேர வேண்டிய உயிர்கள் உலகியலில் உழன்று கொடு நரகில் புகுவரோ என்று ஐயங் கொள்கிறார். உயிர்கள் செல்லக்கூடாத வழிகளை எல்லாம் கூறுகையிலே இந்த மறக்கருணை நிகழ்வுகளைச் சொல்கிறார்.

*"குணம் குறி ஒன்று இல்லாப்*
*பெருவேடமாய் நிறைந்த பெம்மான்"*

என்றெல்லாம் சிறப்பேற்றிக் கூறுகிறார் *உமாபதி சிவாசாரியார்*. திருவருள் வயப்பட்டவர்க்கு அவனையன்றி வேறு இன்பங்கள் இல்லை. ஆயினும் மற்ற உயிர்களுக்கு குணங்களோ அடையாளங்களோ இன்றி அருள் உருவமாக எங்கும் நிறைந்திருக்கிறான். அதுமட்டுமன்றி,

"*பெருமானை நான் எட்டிப் பிடிப்பேன்*" என்று தன்முனைப்போடு முயல்பவர்களுக்கு அவன் எட்டாமல் இருப்பான் என்பதை,

"*எட்டுமவர்க்கு எட்டா இயல்பினான்*" என்று வியக்கிறார்.

தன் மனங்கவர்ந்த தலைவனாகத் தமது குருநாதர் மறைஞானசம்பந்தப்பெருமான் தில்லையில் எழுந்தருளியிருக்கிறார் என்கிறார். அவரைச் சிவபெருமானாகவே எண்ணிப் போற்றிப் பாடுகிறார். தம் ஞானாசிரியரின் இயல்புகளை இந்நூலில் வரிக்கு வரி வியந்து கூறுகிறார் என்றால் மிகையில்லை.

## 12. மாதவச் சிவஞான முனிவர்

- பேராசிரியர், முனைவர் சோ.ந. கந்தசாமி, தஞ்சாவூர் 613 007.

**முனிவரின் தோற்றம்**

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சைவத்தமிழ் வானில் ஒருபெருங் கதிரவனாக ஒளிவீசியவர் மாதவச் சிவஞான முனிவர். இவர் பிறப்பிடம் பாண்டிய நாட்டில் உள்ள விக்கிரமசிங்கபுரம் என்னும் விழுமிய நகராகும். இவர்தம் பெற்றோர் சைவ வேளாளர் மரபில் வந்த ஆனந்தக் கூத்தரும் மயிலம்மையும் ஆவர். இவர்கள் புரிந்த நற்றவப்பயனால் பொதிய முனிவர் ஆகிய அகத்தியர் வரத்தினால் இவர்களுக்குத் தோன்றியவர் முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட

சிவஞான முனிவர் ஆவர். இளமையிலேயே அருள்நாட்டம் மிக்கவராய்ச் சைவத் துறவியரிடம் பத்தி பூண்டு விளங்கினார். பெற்றோர் இசைவுடன் திருவாவடுதுறையினை நணுகி, சின்னப் பட்டத்தில் இருந்த பின்வேலப்ப தேசிகரிடம் சிவதீக்கையும் கல்வியும் பெற்று, துறவு பூண்டு அவர்களால் சூட்டப்பெற்ற "**சிவஞானயோகி**" என்னும் தீட்சா நாமம் எய்தினார். ஆதீன முதல்வர் நமசிவாய தேசிகரின் திருமுன்னர் அருள் பெற்றார்.

**புலமைச் சிறப்பு**

இளமையிலேயே தென்மொழி, வடமொழி ஆகிய இருபெரும் மொழிகளிலும் வரம்பிலாப் புலமை நிரம்பப் பெற்றார். மணலி வள்ளல் சின்னையா முதலியார் என்பாரின் உதவியால் வடமொழி வல்லுநர்களிடம் வேதம், உபநிடதம், ஆகமம், பல்வகைத் தத்துவங்கள், தருக்கங்கள் பயின்று புலமை முற்றினார். அப்பர் பெருமானைப் போலச் சிறந்த சீலம் பேணும் துறவியாகத் துலங்கினார். யோகியாகவும் விளங்கினார். இதனால், இவரை மாதவச் சிவஞான முனிவர் என்றும், சிவஞானயோகி என்றும், சிவஞான சுவாமிகள் என்றும் சைவர்கள் போற்றுதல் மரபு.

**இலக்கணப் புலமை**

சிவஞானமுனிவர் இலக்கணம், இலக்கியம், சமயம், தருக்கம், தத்துவம் ஆகிய பல துறைகளிலும் வித்தகம் படைத்த பேரறிஞர் ஆவர். சிறந்த உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், போதகாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் ஒப்பற்ற கவிஞராகவும் ஒளிவீசினார். தமிழ்மொழியையும் வடமொழியையும் உறழ்ந்து ஆராய்ந்து அரியபல உண்மைகளை முதன்முதல் உணர்த்திய ஒப்பியல் அறிஞராகவும் திகழ்ந்தனர். இவ்வுண்மையினை,

"தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல் இலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா... (காண்க: தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, திருவாவடுதுறை ஆதீனம், 1968, ப. 9-10) என்று தெளிவுறுத்துவதால் புலனாகும். டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதுவதற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னமே, தென்மொழி வடமொழியினின்றும் வேறுபட்டு விளங்கும் திறம் குறித்து அறிஞர் பெருமக்கள் போற்றும்பாங்கில் சிவஞான முனிவர் ஆராய்ந்து கூறியிருத்தல் நோக்கத்தக்கது. தம்மைப்போலவே இருமொழிப் பெரும்புலமை படைத்த சேனாவரையர் ஒருவரைத்தான் தொல்காப்பிய உரையாசிரியர்களில் உயர்த்திப் பேசும் ஒட்பம் உடையவர். "**தென்மொழிக் கடலையும் வடமொழிக் கடலையும் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்**" என்பது அவர்தம் பாராட்டுரை.

இவர் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியும் எழுதினார். நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயர் எழுதிய விருத்தியுரையில் பலதிருத்தங்கள் செய்து புத்தம் புத்துரை தந்துள்ளார். எனின், வைத்திய நாத நாவலர் எழுதிய *இலக்கண விளக்கம்* என்ற சிறந்த நூலில் யாது காரணம் பற்றியோ முனிவர் செயற்கையான சில குற்றங்களைக் கற்பித்துச் சூறாவளி எழுதினர். அம்மறுப்புரையினைப் பலரும் ஏற்றிலர்

**சாத்திர உரை**

மெய்கண்ட தேவரின் சிவஞானபோதத்திற்குப் பாண்டிப் பெருமாள் என்பார் முதன் முதல் விருத்தி உரை செய்தனர். எனின், முனிவர் தம் சாத்திரப் புலமையும் தருக்கப் புலமையும் ஒருங்கே தோன்ற **திராவிட மாபாடியம்** என்னும் பேருரையும் அனைவரும் விளங்கிக் கொள்ளும் நோக்கத்தில் **சிற்றுரையும்** செய்தனர். மெய்கண்டாரின் தலைமை மாணாக்கர் அருணந்தி சிவம் இயற்றியருளிய சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குத் தமக்கு முன்பே மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாசர், நிரம்ப அழகியர் என்பார் எழுதிய உரைகள் இருப்பினும் மிகச்சிறந்ததொரு நல்லுரையினை வரைந்தனர். இவர் உரையினை ஒட்டியே சுப்பிரமணியதேசிகர் உரை உள்ளது. சைவ சித்தாந்தக் கயிலாய மரபினைக் காக்கும் நோக்கில் இவர் எழுதிய கண்டன நூல்கள் சுட்டத்தகுவன. எனினும், தருமை ஆதீனக் குரவர் மாசிலாமணிதேசிகரிடம் தீட்சைபெற்றுக் காசிவரை சென்று சைவத்தையும் தமிழையும் நிலைநாட்டிய தவராச சிங்கமாகிய குமரகுருபரரிடத்தில் சிவஞான முனிவர்க்கு ஈடுபாடு உண்டு. இவர் பாடிய **சிதம்பர மும்மணிக்கோவையிலிருந்து** சிவஞான முனிவர் மேற்கோள் காட்டியிருத்தல் இக்கருத்தினை உறுதி செய்யும்.

**மொழிபெயர்ப்பாசிரியர்**

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு நூல்களின் தேவையினை முனிவர் நன்கறிந்தவர். அந்நாளைய தத்துவ மாணவர்களுக்குத் தருக்கம் கற்பிக்கும் போதகாசிரியர்கள், அன்னம்பட்டர் வடமொழியில் எழுதிய **தருக்கசங்கரகம்**, அதன் உரையாகிய தீபிகை ஆகிய இரண்டனையும் கற்பித்தல் மரபு. இவற்றை நல்ல தமிழில் மொழிபெயர்த்து, மொழிபெயர்ப்பாளர்க்கு வழிகாட்டிய சிறப்பு முனிவர்க்கு உண்டு.

சிவபிரானின் முழுமுதல் தன்மையினை உறுதிப்படுத்தும் பாங்கில் கஞ்சனூர் அரதத்த சிவாச்சாரியார் இருபத்திரண்டு ஏதுக்கள் காட்டி வடமொழியில் **சுலோக பஞ்சகம்** என்ற நூலினை இயற்றினர். இதனை அகவல் யாப்பில், "**உயர் காயத்திரிக்கு உரிப்பொருள் ஆதலின்**" என்று முனிவர் மொழிபெயர்த்துப் பேருரையில் தந்துள்ளார். அங்ஙனமே, அப்பைய தீட்சிதர் வடமொழியில் எழுதிய **சிவ தத்துவ விவேகம்** என்ற அரிய நூலினையும் தமிழில் அதர்ப்படயாத்தனர். இந்நூலில் உபநிடதங்கள், இதிகாசங்கள் முதலிய பனுவல்களின் கருத்தும் சிவபிரானின் முழுமுதல் தன்மையை விளக்குதலே என்பதை நிலைநாட்டினார்.

**விழுமிய கவிஞர்**

சித்தாந்தத்தினை அதிகாரபூர்வமாக விளக்கிக்கூறும் அறிஞர் முனிவர் ஆவர் (Official interpretor) என்று எண்ணுதல் சாலும். ஆயினும், அவரிடம் படைப்பாற்றல் நிரம்பியிருந்தமையினைப் பலர் கருதார். திருக்குறளில் பொதிந்துள்ள அறங்களை யாவர்க்கும் விளங்கவைக்கும் வகையில், **குளத்தூர்ச் சோமேசர் முதுமொழி வெண்பா** என்னும் பனுவலைப் பாடினார். விநாயகர்க்குக் கூறப்பெற்ற வாழ்த்துடன் 133 வெண்பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சான்றாக ஒருபாடலை இங்குக் காண்போம்:

*"பாடினர்மூ வாண்டினிற்சம் பந்தரென யாவோரும்*
*சூடும் மகிழ்ச்சிமெய்யே சேமேசா! - நாடியிடில்*

*தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது." (7)*

இவர் பாடிய சிற்றிலக்கியங்கள் பல. **வடதிருமுல்லை வாயில் அந்தாதி, குளத்தூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவேகம்பர்அந்தாதி** என்பன அந்தாதிப் பிரபந்தங்கள் ஆகும். முதற்பாடலின் அந்தத்தில் உள்ள எழுத்து, சீர், சொல், தொடர் இவற்றுள் ஒன்றனை அடுத்து வரும் பாடலின் ஆதியில் வைத்துப் பாடுதல் அந்தாதி எனப்படும் சிற்றிலக்கியம் ஆகும். காரைக்காலம்மையார் பாடிய அற்புதத்திருவந்தாதி திருமுறைகளில் தொன்மை சான்ற பிரபந்தம். **அந்தாதி என்ற சொல் வடமொழிக்கு உரியதாயினும் வடமொழியில் ஒருவர்கூட அந்தாதி பாடவில்லை என்பது சிறப்பாகச் சுட்டுதற்குரியது.**

**கச்சிஆனந்த ருத்திரேசப் பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் திருத்தொண்டர் திருநாமக்கோவை, காஞ்சிப்புராணம் முதற்பாகம்** முதலியன சிவஞான முனிவரின் கற்பனைப் பெருக்கிற்கும் கவியாற்றலுக்கும் சித்தாந்தச் சிந்தனைக்கும் நிலைக்களமாகத்திகழும் கலைக் களஞ்சியம் எனலாம். **செப்பறைப்பதி அகிலாண்டேசுவரர் பதிகம்** சித்தாந்த சாரமாகும். இவர் காஞ்சிமாநகரில் பிள்ளையார் பாளையத்தில் தங்கியிருந்தபொழுது செங்குந்த மரபினரால் உபசரிக்கப்பெற்றார் என்பது வரலாறு, அப்பொழுதுதான் காஞ்சிப் புராணம் பாடினார் என்பர்.

**போதகாசிரியர்**

உரையாசிரியராகவும் நூலாசிரியராகவும் ஒளிவீசிய சிவஞான முனிவர்க்குமாணாக்கர் பலர். சிறந்த போதகாசிரியராக விளங்கியதால் பலரும் இவரிடம் கல்வி பயின்றனர். அவர்களில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் **கவிராட்சதர் கச்சியப்பர்** ஆவர். இவர் காஞ்சிப்புராணத்தின் இரண்டாம் பாகத்துடன் **விநாயக புராணம், தணிகைப் புராணம்** ஆகியவற்றைப் பாடியவர். இலக்கணம் சிதம்பரநாத முனிவரும், காஞ்சிபுரம் சரவண பத்தரும், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரும், முகவை சோமசுந்தரம் பிள்ளையும் முனிவரின் சுட்டத்தக்க மாணாக்கர்களே. திருவாவடுதுறை ஆதினத்திற்குரியர் என்பதால், "**ஆதீன குல தெய்வம்**" என்றும் சிவஞான முனிவர் போற்றப்பெற்றார்.

மாணிக்கவாசகர், ஆதிசங்கரர் ஆகிய பெரியோர்கள் தம் முப்பத்திரண்டாம் அகவையில் வீடுபெற்றனர் என்பர். அவர்களைப்போலவே, நம் குரவராகிய சிவஞான முனிவரும் முப்பத்திரண்டாம் அகவையில் சிவப்பேறு எய்தினார். அவர் நூல்கள் என்றும் நின்று நிலைபெறுவன எனலாம்.

(குறிப்பு: 30-4-1993 அன்று திருவாவடுதுறை ஆதீனக் குருமகா சன்னிதானத்தின் தலைமையில் சிவஞான முனிவரின் 208 ஆம் ஆண்டு குருபூசையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இப்பொழுதுள்ள குருமகாசன்னிதானம் சிவஞானமுனிவர் பிறந்த ஊரில், மரபில் தோன்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

# 13. 'சொக்கநாத வெண்பா'வில் உயிர்க் கோட்பாடு

- ஜா. திரிபுரசூடாமணி,
*தமிழ் விரிவுரையாளர், தருமபுர ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை - 609 001.*

**முன்னுரை**

வணிகத்தின் மொழி ஆங்கிலம், தூதின் மொழி பிரெஞ்சு, காதலின் மொழி இத்தாலியம், தத்துவத்தின் மொழி செருமானியம். அதுபோல உலகிலேயே பக்தியின்மொழியாகத் தமிழ் விளங்குவதாகக் கூறுவார் தனிநாயக அடிகள். இதற்குத் தக, தமிழ் மொழியில் ஒப்புயவர்வற்ற பக்தியிலக்கியங்கள் நிரம்ப உள்ளன. இதனைச் சமய இலக்கியங்கள் என்பர். இவ்விலக்கியங்கள் தோத்திர இலக்கியங்கள், சாத்திர இலக்கியங்கள் என இரு கூறுகளாக அமைந்து சிறக்கின்றன.

இவற்றில் சாத்திர வகை சாற்றும் கருத்துக்கள் மூன்றாம். அவை இறை, உயிர், தளை என்பனவாகும். இவற்றுள் நடுநாயகமாய் அமைந்த உயிர் குறித்த சில செய்திகளைக் குருஞானசம்பந்தர் 'சொக்கநாத வெண்பா' வழிக் குறிப்பிட்டுச் சொல்வதே இக்கட்டுரையின் மையக் கருத்தாகும்.

**குருஞானசம்பந்தர்**

ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த குருஞானசம்பந்தர், மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் ஸ்ரீ சொக்கநாதரைக் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெற்றார். குருவாணையின்படி வில்வாரண்யமாக விளங்கிய தருமபுரத்தில் வீற்றிருந்து பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தைப் பரவச் செய்தார். இவர், சொக்கநாத வெண்பா முதலான எட்டு நூல்களை அருளியுள்ளார். இவற்றைக் 'குருஞானசம்பந்தர் அட்டகம்' என்று அழைப்பர்.

குருஞானசம்பந்தர் பல்லாண்டுக் காலம் தருமையில் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின்கீழ் ஜீவசமாதி கூடினார். இக்குருமூர்த்தம் தற்பொழுது ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற தருமை ஆதீனம் மொழித் தொண்டு, சமயத்தொண்டு, சமூகத்தொண்டு மற்றும் கல்வித் தொண்டை ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகிறது. குருஞானசம்பந்தரின் பரம்பரையில் தைலதாரையாக (இடைவிடாது) தற்பொழுது இருபத்தாறாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியார் ஆவார்.

**சொக்கநாத வெண்பா**

தருமையின் குருமுதல்வரான குருஞானசம்பந்தரின் ஆத்மார்த்த மூர்த்தியாகிய மதுரைச் சொக்கலிங்கப் பெருமான்மீது இவர் பாடிய 101 வெண்பாக்களே சொக்கநாத வெண்பா என்ற நூலாக அமையப் பெற்றுள்ளது. இந்நூலில் அடியார்க்கினிமையான இறைவன் திருவிளையாடல்கள்

குறித்தும் இறை, உயிர், தளை குறித்தும் மிக அழகாகவும், பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் சொல்லப்பட்டுள்ளது. இவற்றுள் உயிரின் நிலை மட்டும் இங்கு எடுத்தியம்பப்படுகிறது.

**உயிரின் நிலை**

'சார்ந்ததன் வண்ணம் ஆதல்' என்பது உயிர்களின் இயல்பு. அதாவது தான் எந்தப் பொருளைச் சார்கிறதோ, அந்தப் பொருளின் தன்மையைக் கொண்டு உயிர் நிற்கும். நீருக்குத் தனித்த நிலை எதுவும் இல்லை. எதனைச் சார்கிறதோ, அதன் குணத்தையோ, நிறத்தையோ, வடிவத்தையோ பெறும். அதுபோல உயிர், தளையைச் சார்ந்த வழித் தளையேயாகவும், இறையைச் சார்ந்த வழி இறையேயாயும் நிற்கும். இறைக்கும், அசித்தாயும் அசத்தாயும் நிற்கும் பாசத்திற்கும், ஒன்றால் மற்றொன்றிற்கு யாதொரு தொடர்போ, ஒன்றால் மற்றொன்றிற்கு வருவதோ எதுவும் இல்லை. இடையில் உள்ள உயிரே இரண்டனோடும் தொடர்பு உடையது. இரண்டாலும் வரும் நன்மை தீமைகளை அடையக் கூடியது. இதனை மெய்கண்டார் தமது ஏழாம் நூற்பாவில், ''இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'' - என்று குறிப்பிடுவார்.

இத்தகைய உயிர், உணர்த்த உணரும்; உயிருக்குப் பிறப்புப் பல; பொறிபுலன்களுக்கு ஆட்படும்; பாசத்தோடு நட்பு இருக்கும்; ஊழ்வழியில் செல்லும். இவற்றைச் சொக்கநாத வெண்பா அழகாக விளக்குகிறது.

**உணர்த்த உணரும் உயிர்**

இறை வினையின் நீங்கியது; தானே உணர்வது; அறிவானது; அநாதியானது; அழிவற்றது. உயிரும் அநாதியானது; அழிவற்றது, ஆனால் வினைக்கு உட்பட்டது; தானே உணர்வது அல்ல.

உயிரானது அறிவித்தால் அறியும்; அறிவிக்காவிடில் ஒரு விநாடியளவுகூட அறிவை உணர முடியாது இக்கருத்தை,

*''உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்*
*கணத்தும் உணரும்வகை காணேன்''* - *சொ.வெ26.*

எனக் குருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். இதேபோல நன்மை தீமை அறியாது உயிர் என்பதை,

*''நல்லாங்கு தீங்கிதென நாடறியேன்''* (53)

அவனின்றி ஓர் அணுவும் அசையாது. இதனை மணிவாசகர்,

*'அவனருளாலே அவன்தாள் வணங்கி'*

என்பார். குருஞானசம்பந்தர்,

*''நீயற்றல் ஆக்கா தணுவும் அசையுமோ''* (87)

என்கிறார்.

**உயிருக்குப் பிறப்புப் பல**

உயிர் நால்வகைப் பிறப்பிலும், எழுவகைப் பிறவியிலும் மாறி மாறிச் சகட சக்கரம் போலப் பிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கும், இதனை 'புல்லாகிப் பூடாய் புழுவாகி மரமாகி' என்பார்

மணிவாகர். உயிரானது நல்வினை, தீவினைத் தொடர்பால், அவற்றை அனுபவிக்கும்பொருட்டுப் பல பிறவிகளை அடைகிறது. வினை நீக்கம் பெற்றபின், உயிர் இறையருளால், தான் பிறவா நிலையடையும். குருஞானசம்பந்தர் 'அடியேன் எத்தனையோ முறை பிறந்தும், இறந்தும் இளைத்தேன் அதனை நீயே அறிவாய், இனிமேல் பிறவா நிலை தந்தருள்வாய், இறைவா' என்கிறார். இக்கருத்தை,

*'நீள்நாள் பிறந்திறந்து நின்ற துயர் நீயறிவை' (35)*

*'இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான்*
*மறந்தும் பிறவா வரம்தா' (40)*

என்று சொக்கநாத வெண்பா விளக்குகிறது.

**பொறிபுலன்களுக்கு ஆட்படும்**

ஐம்பொறிகளான கண், காது, மூக்கு, மெய், வாய், கண்டு கேட்டு, உயிர்த்து உற்று உண்டு அறியும் ஐம்புலன்களுக்கும் உயிர் ஆட்பட்டது. அதோடு மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும் ஆழ்ந்திருக்கின்றது. மாயையின்மேல் மோகமும் உடலின்மேல் ஆசையும் முற்றும் நீங்காமல் இருக்கிறது. இதனைக் குருஞானசம்பந்தர்,

*'பொறிபுலனாய் வெம்புவேன்' (6)*

*'வாக்கிலுரை பொய்யே மனம்நினைப்பதும் கவடே*
*ஆக்கைதினம் செய்வதகிர்த் தியமே' (43)*

என்றெல்லாம் சுட்டுகின்றார்.

**பாசத்தோடு நட்பு இருப்பது**

நீரிலுள்ள பாசியானது, விலக்கும்போது விலகும்; மீண்டும் சேர்ந்து விடும். அதுபோல, பாசமானது விலக்க நினைத்தாலும் விலகாது; விலகுவதுபோல் இருந்தாலும் மீண்டும் வந்து ஒட்டிக் கொள்ளும். பாசமாகிய தளையால் (ஆணவம், கன்மம், மாயை) உயிர்கள் கட்டப்பட்டுள்ளது. இவை நீங்கினாலன்றி இறைவனடி சேர இயலாது; ஐம்மலமாகிய ஆணவம், கன்மம் மாயை, மாயேயம், திரோதாயி ஆகியவற்றில் ஆழ்ந்து கிடக்கிறது; உடல், ஆசை, சினம் இவற்றிலிருந்து நீங்காமல் இருக்கிறது. அருவருக்கத்தக்க இவ்வுலகானது கக்கப்பட்ட சோறுபோலத் தோன்றவில்லை. அழியக்கூடிய உடம்புமீது பற்று வைக்கிறது.

*'வாழ்ஐம் மலத்தால் வருத்தி மிக உடைந்த*
*ஏழையினுக்கையோ இரங்குவாய் - கோழையனாய்ப் போனேன்' (48)*

*'எக்காலம் தாகங்கள் இற்றிடுமோ - காயங்கள்*
*எக்காலம் ஆசைசினம் இயற்றிடுமோ' (49)*

*'கான்ற சோறாயுலகம் காணவில்லை' (20)*

*'அருவருப்பே மெத்திடும் ஆகத்தைச் சற்றும்*
*அருவருக்கத் தோன்று தில்லை' (23)*

**ஊழ்வழியில் செல்லும்**

உயிர் விதி வழியே செல்லும். 'நீர் வழிப்படுஉம் புணைபோல ஆருயிர் முறைவழிப்படுஉம்' என்று புறநானூறு புகல்கிறது. 'அவ்வினைக்கு இவ்வினை' என்பார் திருஞானசம்பந்தர். குருஞானசம்பந்தரோ அவ்வினைக்கு இவ்வினை என்றாலும் அதனைக் கட்டுவிப்பவன் இறைவன் என்று சுட்டுகிறார்.

*'இக்காலத் தின்னவினை என்றமைப்பை அப்படியே*
*அக்காலத் தவ்வூழ் அருத்திருவை'* (42)

இதையே இன்னோர் இடத்தில்,

*'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்'*

என்று விளக்குவார். ஊழ் வலிமையானது என்பதை வள்ளுவரும்,

*'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன் று*
*சூழினும் தான் முந் துறும்'* - என்பார்.

உயிர் செய்த பாவ புண்ணியத்திற்கேற்ப இறைவன் பலன்களைக் கூட்டுவிக்கின்றார். இச்செய்தியை,

*'கெடுங்காலம் வந்தால் கெடுப்பை கதியில்*
*விடுங்காலம் வந்தால் விடுவை - கொடுந்தவங்கள்*
*பண்ணிடினும் பாவம் பயிற்றிடினும்'* (28)

என்று சொக்கநாத வெண்பா விளக்குகிறது.

**துன்புறும் உயிர் இன்புறுவது எங்ஙனம்?**

பெருமானுக்கு நிவேதனப் பொருள் வாழைப்பழம். எத்தனையோ பழங்கள் இருக்க வாழையை வாழைக்காயானது பிஞ்சாக இருப்பினும் நடுநிலைக் காயாக இருப்பினும் மிக முதிர்ந்த காயாக இருப்பினும் புகையூட்டப்பட்டது என்றால், உடன் எல்லா வகைக் காய்களும் பழுத்து இனிப்புச்சுவை பெற்றுவிடும். காயினுடைய அளவு வேறுபடுமே அல்லாமல் சுவையில் வேறுபாடு இருக்காது. அவ்வாறே உயிர்கள் பக்குவநிலை அடைந்திருந்தாலும், பக்குவம் பெறாத நிலையில் இருந்தாலும் இறையருள். எனும் புகை மூட்டப்பட்டுவிட்டால் எவ்வகை உயிராக இருப்பினும் பெருமான் திருவடிகளை அடைந்து பேரின்பத்தில் திளைத்து நிற்கும்.

முடிவுரை

நிறைவாக, இறை, உயிர், தளை என்னும் முப்பெரும் உண்மைகளில் உயிர் குறித்த சிந்தனைகள் 'சொக்கநாத வெண்பா' வழி ஒரு சில சிந்திக்கப்பெற்றன. 'சிந்தாமணி என்னும் கடலுள் ஓர் அகப்பை மொண்டு கொண்டேன்' என்று கம்பர் கூறியது போலச் 'சொக்கநாத வெண்பா' எனும் நூலிலிருந்து ஓர் அகப்பை மட்டுமே சுட்டப்பெற்றுள்ளது. விரும்பியோர் நூலினை முழுதும் கற்று வாழ்வில் உயர்ந்து விளங்குவார்களாக!

# 14. சாத்திரங்களில் அன்புநெறி

- புலவர் ஞான. ஏகாம்பரம், எம்.ஏ., எம்.எட்.,
*திருவத்திபுரம் - 604 407.*

**தோத்திரங்களும் சாத்திரங்களும்**

சைவத் திருமுறைகள் தமிழ் மொழியின் உயிரெழுத்துகளைப் போன்று பன்னிரண்டாக உள்ளன. நெட்டெழுத்துகள் ஏழைப்போல மூவர் தமிழ். விண்மீன்களின் எண்ணிக்கைபோலப் பன்னிரு திருமுறை ஆசிரியர்கள் இருபத்தெழுவர். இத்திருமுறைகள் சைவத் தோத்திர நூல்களாகும். இவை வழிபாட்டு இலக்கியங்கள். இவ்வழிபாட்டு இலக்கியங்கள் எள் என்றால், சாத்திரங்கள் எள்ளிலிருந்து பிழியப் பெற்ற எண்ணெய், தோத்திரங்கள் நெய் என்றால், அந்நெய்யின் உறுசுவை சாத்திரங்கள்.

"*வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம்நால்வர்*
*ஓதும் தமிழ்அதனின் உள்ளுறும் நெய் - போதமிகு*
*நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்*
*செய்ததமிழ் நூலின் திறம்*". - *தனிப்பாடல்*

தோத்திர நூல்கள் சைவ இலக்கியங்களாகத் திகழ, சாத்திரங்கள் இலக்கணங்களாகத் திகழ்கின்றன. இச்சாத்திரக் கருத்துகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் குறிப்பாக அமைந்திருக்க, பன்னிரு திருமுறைகளில் வெளிப்படையாக அறியக்கிடக்கின்றன. திருமுறைகளில் உள்ள அச்சித்தாந்தக் கருத்துகளைச் செம்மையாகத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் நூல்முறையாக அறிவுறுத்தும் நூல்கள் பல பிற்காலத்தில் தோன்றின. அவற்றுள் சிறந்தவை பதினான்கு. அவை மெய்கண்ட நூல்கள் எனப்படும். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, கொடிக்கவி, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன.

"*உந்தி களிறு உயர்போதம் சித்தியார்*
*பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருட்*
*பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு*
*உண்மைநெறி சங்கற்ப முற்று*"

இவற்றுள் திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் சைவத் திருமுறைகளை ஆதாரமாகக் கொண்டு சிறந்த சிவானுபவப் பயனாய் மிளிர்கின்றன.

**அன்பே விடுபேறு அளிக்கும்**

"'ஞானத்தால் வீடு' என்றே நான்மறைகளும் புராணங்களும் ஆகமங்களும் சொல்லுகின்றன" என்றருளினார் அருணந்தி சிவாசாரியார்.

(சிவஞான சித்தியார் சுபக்கம். சூத்திரம் 8 அதிகரணம் II பாடல் 27) 'ஞான நெறி' என்பது வேறு, 'ஞானத்தால் வீடு' என்பது வேறு. 'ஞான நெறி'யில் வரும் ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பன. 'ஞானத்தால் வீடு' என்பதில் வரும் ஞானம் என்பது சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து நிற்கும் ஆன்மாவின்கண் பதிந்துள்ள பதிஞானம்.

ஞானநெறியில் நின்றவர்க்கே வீடுபேறு கிட்டும்; மற்றவர்கட்குக் கிட்டாது என்று கூறினால், திருக்கோயிலுக்குப் பூமாலை புனைந்து ஏத்துவதும், சிவபெருமான் புகழை உரைப்பதும், திருக்கோயிலில் அலகிட்டு, மெழுகி, உழவாரப் பணிசெய்வதும் பயனற்றது என்றாகிவிடும். திருத்தொண்டின் உறைப்பால் திருநாவுக்கரசு சுவாமிகள்,

*"நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி*
*அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர(சு) அமர்ந்திருந்தார்."*

*-திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் - 427*

என்று சேக்கிழார் சுவாமிகள் கூறியருளியதை நினைவு கூர்தல் வேண்டும்.

முற்றிய ஞானமாவது அன்பே ஆகும். எனவே, 'ஞானத்தால் வீடு' என்பது ஞானம் அன்பாக வடிவெடுத்த பொழுதே ஆகும். சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்தரது திருப்பாசுரத் திருப்பதிகத்திற்குக் கருத்து கூறுமிடத்தில்,

*"ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்."*

*திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் - 843*

என்றருளியுள்ளார். அன்பின் திருவுருவாம் கண்ணப்ப நாயனாரைக் **கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்** என்றே சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றியருளினார். எனவே அறிவுடையவர் என்பவர் அன்பு உடையவரே; இறைவனிடத்து மறவா அன்பு செய்யும் யாவரும் அறிவுடையவரே.

**உள்ளம் உருகின் உடனாவர்**

பொன் உருகினால் மணியைப் பொருத்தலாம். உள்ளம் உருகினால் சிவம் பொருந்தும். ஆன்மாக்களது உள்ளம் தீயில் பட்ட மெழுகுபோல் உருகிப் பக்குவ நிலையைப் பெற்றால் உயிரியல்பு மறைந்து இறை இயல்பு உயிரின்கண் புலப்பட்டுத் தோன்றும். அப்போது ஆன்மாவே சிவம் என்னும்படி சிவன் ஆன்மாவோடு ஒட்டி உடனாவன் என்பதைத் திருவுந்தியாரில்,

*"உள்ளம் உருகில் உடனாவர் அல்லது*
*தெள்ள அரியர் என்று உந்தீபற"* *- திருவுந்தியார் - 7*

என்று திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அருளியுள்ளார்.

நெஞ்சம் நெக்குருகிய மெய்யடியார்களே இறைவனது திருவருளாகிய தீயில் பொருந்தி, மலமாசு நீங்கித் தூய்மை பெறுவர். அத்தகையோர் ஆன்ம இயல்பு மறைந்து சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்ற செம்புலச் செல்வர் ஆவர்.

உள்ளம் உருகில் உடனாவர் என்பதைத் திருஞானசம்பந்த சுவாமிகள்,

*"பண்ணிற் பொலிந்த வீணையர்*
*பதினெண் கணமும் உணராநஞ்சு*

*உண்ணப் பொலிந்த மிடற்றினார்*
**உள்ளம் உருகில் உடனாவர்**
*சுண்ணப் பொடிநீ றணிமார்பர்*
*சுடர்பொன் சடைமேல் திகழ்கின்ற*
*வண்ணப் பிறையோ டிவரானீர்*
*வாய்மூரடிகள் வருவாரே"* - தேவாரம் II 247 : (2672)

என்ற பாடலில் அருளியுள்ளார்.

உள்ளம் உருகப்பெற்ற மெய்யடியார்கள் வாயிலாக சிவபரம்பொருளைத் தெளிந்து உணர்வதல்லது, உள்ளம் உருகப் பெறாதார் தம் சுட்டறிவால் ஆய்ந்து அறிதற்கு அரியர் இறைவர் என்பதனால் 'தெள்ள அரியர்' என்றார் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்.

இறைவன் உள்ளம் உருகாதார்க்கு அரியர் என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

*"ஒருகாலத்து ஒன்றாகி நின்றார் போலும்*
*ஊழி பலகண்டு இருந்தார் போலும்*
*பெருகாமே வெள்ளம் தவிர்த்தார் போலும்*
*பிறப்பிடும்பை சாக்காடொன்று இல்லார் போலும்*
**உருகாதார் உள்ளத்து நில்லார் போலும்**
*உகப்பார்தம் மனத்தென்றும் நீங்கார் போலும்*
*அருகாக வந்தென்னை அஞ்சேல் என்பார்*
*அணியாரூர்த் திருமூலட்டான னாரே"* - தேவாம் VI : 241: 10 பாடல் 2373

என்றருளிச் செய்தார். மேலும் திருநல்லூர்த் திருமுறையில்,

*"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்"* தேவாரம் VI 227:1 பாடல் 2222

(நைய - மேலும் மனம் இளக) என்றும் அருளியுள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகள் நமது உள்ளம் சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து உருகி வழிபட வேண்டும் என்பதை,

*"ஆமாறு உன் திருவடிக்கே* **அகம் குழையேன்; அன்பு உருகேன்;**
*பூமாலை புனைந்து ஏத்தேன், புகழ்ந்து உரையேன், புத்தேளிர்*
*கோமான் நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்;*
*சாமாறே விரைகின்றேன், சதுராலே சார்வானே"* . திருவாசகம் - 18

என்றும்,

எவ்வாறு உருகி வழிபட வேண்டும் என்பதை,

*அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய்,* **அழல்சேர்ந்த**
**மெழுகே அன்னார்,** *மின்னார் பொன்னார் கழல்கண்டு*
*தொழுதே உன்னைத் தொடர்ந் தாரோடும் தொடராதே*
*பழுதே பிறந்தேன்: என்கொண்டு உன்னைப் பணிகேனே"* - - திருவாசகம் - 92

என்றும் அருளிச் செய்துள்ளார்.

**உள்ளம் உருக, செய்ய வேண்டுவன**

இறைவனை அன்பு செய்து உள்ளம் உருகப் பெறுதற்குரிய படிநிலைகளாக வகுக்கப்பெற்ற நன்னெறிகள் நான்கு. அவற்றுள் சரியை என்பது சிவாகமங்களில் விதித்தவாறு திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் திருமேனியை வழிபடும் முறையில் திருக்கோயிலில் அலகிடுதல், மெழுகல், பூக்கொய்து மலர்மாலை தொடுத்தல் முதலாக உடம்பின் பணிகளாக நிகழ்வன.

கிரியை என்பது அருவுருவமான சிவலிங்கத் திருமேனியைப் புறத்தும் அகத்தும் பூசனை புரிதல். யோகம் என்பது பொறிபுலன்களை அடக்கி மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை அருவநிலையில் அகத்தே வழிபடுதல். ஞானமாவது உருவம், அருவுருவம், அருவம் எனும் முத்திறத்தினும் அடங்காது ஞானமே திருமேனியாக உடையான் இறைவன் எனத்தெளிந்து ஞானத்திரளாய் நின்ற இறைவனது பொருள்சேர் புகழ்த்திறங்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய அறிவுத் தொழில்களால் வழிபடுதல்.

இந்நால்வகை நெறிகளுள் சரியை, கிரியை என்னும் இரண்டினையும் சிவதன்மம் என ஒன்றாகக் கண்ட திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார், இந்நெறிகளால் தன்முனைப்புக் கெட்டவர்கள் யாவராயினும் இறைவன்பால் அன்பு செய்தால் அவர்பால் சிவபெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவன் என்கின்றார்.

*"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்*
*நல்லசிவ ஞானத்தால் நானழிய - வல்லதனால்*
*ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படும்காண்*
*ஆரேனும் காணா அரன்"* - *திருக்களிற்றுப்படியார் - 15*

இந்நான்கு நெறிகளால் நானழியுமாயின் உள்ளம் உருகும். உள்ளம் உருகின் அவர் உடனாவர். எனவே இந்நெறிகளில் ஒன்றை மேற்கொண்டு, நானழியப்பெற்று உள்ளம் உருகி அவனைப் பெறலாம். உள்ளம் உருகி அன்பு செய்யின் என்றும் அவர் நம்முடனே இருப்பர்.

**நானழியப் பெற்றவர்கள்**

திருமுறை ஆசிரியர்கள் நானழியப் பெற்றவர்களே 1. சண்டீசப் பெருமான் 2. அரிவாட்டாய நாயனார் 3. கண்ணப்ப நாயனார் 4. சேந்தனார் 5. மங்கையர்க்கரசியார் இவர்களைச் சுட்டலாம்.

**1. சண்டீசப் பெருமான்:**

சண்டீச நாயனார் பாலப்பருவத்தை உடையவராய் இருந்தபோது, தன் முனைப்பு அற்றவராய் அன்பு மீதூர மனம் ஒன்றித் தம்மை மறந்து இறைவனை அருச்சித்து மகிழுங்கால், அவரது தந்தை எச்சதத்தன் கடிது சென்று கைத்தண்டு கொண்டு மகனார் திருமுதுகில் பலகால் புடைத்துக் கொடிதாம் மொழி கூறினார். தொண்டு புரியும் சிறிய பெருந்தகையோ தம்பெருமான்மேல் மண்டு காதல் அருச்சனையில் மனம் வைத்தமையால் ஒன்றும் அறிந்திலர். ஆயினும், திருமஞ்சனம் ஆட்டும் பணியில் சலியாது நின்றார். எச்சதத்தன் திருமஞ்சனப்பாலைக் காலால் இடறிச் சிந்தும் பொழுதில், தீயோனைத் தந்தை என அறிந்து அவர்தம் தாள்களை முன்கிடந்த கோல் எடுத்து எறிந்தார். தந்தை இருகாலும் துணியப் பெற்று மண்மேல் விழுந்தார். இச்செய்தியைத் திருக்களிற்றுப்படியார்,

*"பாதகமென்றும் பழியென்றும் பாராதே*
*தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்*
*கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே*
*சண்டீசர் தன்செயலால் தான்" (19)*

என்றருளியுள்ளது.

பாதகம் என்பன கொலைமுதலிய கொடும்பாவங்கள். பழியாவது அத்தீவினைகளைச் செய்தோரைக் குறித்து உலகத்தாரால் கூறப்படும் இகழ்ச்சி உரை. சண்டீசப் பிள்ளையார் சிவபூசைனைக்கு இடர்செய்த எச்சதத்தன் என்னும் தன் தந்தையின் கால்களை வெட்டி வீழ்த்திய ஒருசெயல் பிறப்பால் வேதியனைக் கொன்றதும், உறவால் தந்தையைக் கொன்றதும், உணர்வால் தனக்கு மறை ஓதுவித்த குருவைக் கொன்றதும் ஆகிய முத்திறக் கொலைப் பாவங்கட்கும், அவை பற்றிய பழிப்புரைகட்கும் இடனாகிய செயல் என்பதனைத் தெரிந்தநிலையிலும், அதனைப் பொருட்படுத்தாமல் சிவகருமம் சிதைத்தானைக் கோறல் தீதில்லை என்ற துணிவுடன் பால்குடத்தை உதைத்துச் சிதைத்த காலுடன் அக்காலுக்கு உறுதுணையாய் நிலத்தில் ஊன்றி நின்ற காலையும் வெட்டி வீழ்த்தினார். தீச்செயலுக்குத் துணை போவாருக்கும் தண்டனை உண்டு அல்லவா? இவ்வாறு சண்டீசப் பிள்ளையார் இறைவன்பால் கொண்ட பேரன்பினால் சுற்றத் தொடர்பறச் செய்த அரிய செயல்கண்டு, சிவபெருமான் பத்தி முதிர்ந்த பாலகனாராகிய அவரைத் தம்மைந்தர் என அருளால் எடுத்து சண்டீசன் எனும் பதம் தந்தார்.

சண்டீச நாயனாரின் இவ்வரலாற்றுக் குறிப்பை அருணந்தி சிவாசாரியாரும் தாம் அருளிய சிவஞான சித்தியார் சுபக்கத்துள்,

*"அரனடிக்கு அன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்*
*பரனடிக்கு அன்பிலார் புண்ணியம் பாவமாகும்*
*வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி*
*நரரினில் பாலன்செய்த பாதகம் நன்மையாய்த்தே" - சூத். 2 அதி. 2-29*

என்றருளிச் செய்துள்ளார்.

சேக்கிழார் சுவாமிகளும்,

*"வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்*
*அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்;*
*இந்த நிலைமை அறிந்தார் ஆர்? ஈறிலாதார் தமக்கன்பு*
*தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றோ சாற்றுங்கால்."*
*பெரியபுராணம் : சண்டேசுர நாயனார் புராணம் - 59*

என்றருளினார்.

சண்டீசப் பிள்ளையின் இச்செயலை மாணிக்கவாசக சுவாமிகள்,

*"தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்*
*சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்*
*சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்*
*பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" - திருவாசகம் 321*

என்றருளினார்.

சண்டீசப் பெருமானின் இச்செயல் சிவதன்மம் ஆகும்.

**2. அரிவாட்டாய நாயனார்**

சோழநாட்டில் கணமங்கலம் என்னும் ஊரிலே வேளாண் குடியிலே தோன்றிய தாயனார் சிவபெருமானுக்குச் செந்நெலரிசியும், செங்கீரையும் மாவடுவும் ஆகியவற்றை நாள்தோறும் கொடுப்பதாகிய திருத்தொண்டினை நியமமாகக் கொண்டு வாழ்ந்தார். செல்வம் நீங்கிய வறுமை நிலையிலும், கூலிக்கு வேலை செய்து இத்திருத்தொண்டினைத் தடையின்றிச் செய்துவரும் தாயனார், ஒருநாள் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் ஆகிய திருவமுதினை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு முன்செல்ல, இறைவரது திருமஞ்சனத்துக்குரிய பால் முதலியவற்றை அவர்தம் மனைவியார் எடுத்துக் கொண்டு பின்சென்றார். செல்லும் வழியில் தாயனார் பசியினால் களைப்புற்று வயல் வெடிப்பில் இடறி விழுந்தார். அவர் கொண்டு சென்ற உணவுப் பொருள்களும் வயல் வெடிப்பினுள் விழுந்தன.

இறைவன் இவற்றைத் திருவமுது செய்தருளும் பேறு பெற்றிலேனே என வருத்தமுற்ற தாயனார் தம் கையிலுள்ள நெல்லறுக்கும் கதிர்வாளால் தமது கழுத்தை அரியத் தொடங்கினார். அந்நிலையில் சிவபெருமானது திருக்கை வயல்வெடிப்பினின்றும் வெளிப்பட்டுத் தாயனார் கையைப் பற்றிப் பிடிக்க, மாவடுவுடன் கூடிய திருவமுதினை இறைவன் அமுது செய்தமைக்குரிய அடையாளமாக அம்மாவடுவைக் கடிக்கும் ஓசையும் வயல் வெடிப்பினின்றும் தோன்றியது. அந்நிலையில் சிவபெருமான் உமை அம்மையுடன் விடை மீது விசும்பில் தோன்றித் தாயனார்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் திருவருள் புரிந்தார்.

தாயனார் தமது கழுத்தை அரியத் தொடங்கிய காட்சியை,

*"ஆட்கொளும் ஐயர் தாமிங் கமுதுசெய் திலர்கொல் என்னாப்*
*பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு*
*காட்டிய நெறியின் உள்ளம் தண்டறக் கழுத்தி னோடே*
*ஊட்டியும் அரியா நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார்"*

*பெரியபுராணம் : அரிவாட்டாயர்புராணம் - 17*

என்றருளிச் செய்தார்.

இவ்வாறு தம் உடற்பற்று அற்றொழிய நிகழ்த்திய இச்செயலைச் சிவதன்ம வகையுள் வல்வினைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தருளினார் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்:

*"செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை*
*ஐய இதுவமுது செய்கென்று - பையவிருந்*
*தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவரை*
*நாட்டியுரை செய்வ தென்னோ நாம்"*

*திருக்களிற் றுப்படியார் -20*

**3. கண்ணப்பரின் அன்பு**

மாணிக்கவாசகர், அன்புடையவர்களிலே கண்ணப்பருக்குச் சமம் ஒருவரும் இலர்; அன்பு இல்லாதவர்களிலே எனக்குச் சமம் ஒருவர் இலர் என்பார் போல,

*"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்*
*என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி*

*வண்ணப் பணித்து என்னை வாஎன்ற வான்கருணைச்*
*சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"* திருவாசகம் - 218.

என்று பாடியருளினார்.

மேலும், "இறைவன் கண்ணப்பன் அன்பின் தன்மையை உலகு அறியுமாறு செய்ய அவரது செருப்பணிந்த சிறந்த அடியும், வாயாகிய குடமும், மாமிசமாகிய உணவும் ஆகமப் பொருள்பற்றிச் செய்கின்ற பூசைகளைப் போல விளங்குமாறு விருப்பமாய் ஏற்று மெய்குளிர்ந்தான்" என்கிறார் மாணிக்கவாசகர்.

*"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்க*
*செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்*
*விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்*
*கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ."* - திருவாசகம் -317

கண்ணப்ப நாயனாரின் அன்பின் சிறப்புக்கருதி அவரது பொருந்தாச் செயல்களை இறைவன் சிறந்த வேத ஆகம முறைப்படி செய்கின்ற பூசைபோல ஏற்று மகிழ்ந்து அருள்புரிந்தான். இத்தகு அன்பின் சிறப்பினைப் பிறர் அறிய இயலாது என்று திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் திருக்களிற்றுப் படியாரில் அருளியுள்ளார்:

*"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்*
*கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் - கண்ணப்பர்*
*தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்று*
*யாமறியும் அன்பன்று அது"* (52)

அன்புடையார் செய்கை எவையாயினும் அவை அன்பு செய்யப்பட்டாருக்கு உவகையே விளைவிக்கும் என்பதைத் தெய்வச் சேக்கிழார்,

*"அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனியவாம்"*

என்று இறைவன் சிவகோசரியார்க்கு உணர்த்தியருளியதாகக் கூறியருளினார்.

*"குறையாத உவகைக் கண்ணீர் ஆறாக ஆனந்தத்து*
*அடியார் செய்த அனாசாரம் பொறுத்தருளி அவர்மேல்*
*என்றும் சீறாத பெருமான்"* - தேவாரம் VI.293 : 5

என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்கும் இங்கு ஒப்பு நோக்குதற்கு உரியதாகும்.

**4. சேந்தனாரின் அன்பு**

சேந்தனார் என்ற அடியவர் தில்லையில் விறகு விற்றுவரும் ஊதியத்தைக் கொண்டு நாள்தோறும் சிவனடியார் ஒருவருக்கு உணவளிக்கும் கடமை மேற்கொண்டிருந்தார். ஒருசமயம் பலநாள்கள் மழை தொடர்ந்து பெய்தமையால் போதிய வருவாயின்றிப் பசியால் வாடிய சேந்தனார் விறகு விற்றுக் கிடைத்த மாவினைத் தம் துணைவியார் கையில் கொடுத்துக் களிமட்டும் செய்யச் சொன்னார். சிவபெருமான் முதிய அந்தணர் வடிவில் சென்று அவர் அன்போடு கொடுத்த களி உணவை உண்டு மகிழ்ந்து அடுத்த வேளைக்கும் வேண்டும் என்று கேட்டு வாங்கிப் பழம்

கந்தையில் முடிந்து பொன்னம்பலத்தை அடைந்தார். அங்குக் களியமுதைச் சிந்தச் செய்து சேந்தன் கொடுத்த களியைத் தான் உண்டதைப் பல்லோரும் காணச் செய்தார்.

"நூல்கள் பிரிந்து விரிந்த கந்தைத் துணியில் முடிந்த குழைந்த களியமுதினை மலர்ந்த உள்ளத்தோடு அவிழ்த்து நிவேதிக்க அக்களியமுது விரிசடை வேந்தனார்க்கு இன்னமுதாயிற்று. இதுவன்றோ மெய்யன்பினை உடைய சேந்தனார் ஆன்ம போதம் கெடச் செய்த அன்பின் செயல்" என்று போற்றுகின்றது திருக்களிற்றுப்படியார்.

*"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை*
*அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்த சடை*
*வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பில்*
*சேந்தனார் செய்த செயல்"* (53)

இவ்வாறு சேந்தனார் மிகுந்த பேரன்புடன் தில்லைக் கூத்தப் பிரானுக்கு எளிய களியமுதை அளித்த திறத்தை,

*"பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொன் னம்பலத்து*
*வேந்தன் தனக்கன்றி யாட்செய்வ தென்னே விரிசடைமேல்*
*ஆந்தண் பழைய அவிழை அன்பாகிய பண்டைப் பறைச்*
*சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர் தாகியதே."*
கோயில் *திருப்பண்ணியர் விருத்தம் -26*

என்று நம்பியாண்டார் நம்பிகளும் போற்றியருளியுள்ளார்.

**5. மங்கையர்க்கரசியார் அன்பு**

பொதுவாகப் பெண்களுக்கு மகவு பிறந்ததும் பால் சுரப்பது இயற்கை. பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் சோழவளநாட்டிலே ஞானசம்பந்தப் பெருமான் உமையம்மையார் கொடுத்த சிவஞானம் குழைத்த திருமுலைப்பாலை அருந்தினார் என்று கேட்ட அளவிலேயே கொங்கை சுரந்தார். "என்னே! அவரது தாழ் மனநிலையும் மெய்யன்பின் மிகுதியும்!" என்று திருக்களிற்றுப்படியார் வியக்கின்றது.

*"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்*
*சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல - சுரந்த*
*தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த*
*மனமுடையாள் அன்பிருந்த வாறு."* (54)

சிவப்பிரகாச சுவாமிகளும் தம் நால்வர் நான்மணி மாலையில், 'சம்பந்தா உன்னை ஈன்றெடுத்த தாய் பகவதி அம்மை அன்பிற் சிறந்தவளா? அல்லது நீ சீர்காழியில் பிரம்ம தீர்த்தக் கரையில் அழுதபோது உமையம்மை தன் திருமுலைப்பாலைக் கறந்து சிவஞானத்தைக் குழைத்து உனக்கு ஈட்டினாளே அவள் அன்பில் சிறந்தவளா? அல்லது இச்செய்தியைக் கேட்ட அளவிலே பாண்டிய நாட்டில் உள்ள மங்கையர்க்கரசியின் கொங்கை சுரந்ததே அவள் அன்பில் சிறந்தவளா? சொல், என வினவுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

இங்ஙனம் அன்பு வழிபாடு மேற்கொண்ட அனைவருக்கும் அரன் வெளிப்பட்டு அருள்வான் எனில் நாமும் ஏன் அத்தகு வழிபாட்டினை மேற்கொள்ளக் கூடாது? அன்பு மீதூர ஆணவப்புல்

தேயும். அன்பால் வழிபடுவோருக்கு ஆணவ வலிமை குன்றும்; சிவன் வெளிப்பட்டு அருள்வான். எனவே,

*"கற்றாமனம் போல் கசிந்துகசிந் தே உருகி*
*உற்றாசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக*
*முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்*
*பத்திதனில் நின்றிடுவர் பார்." - உண்மை விளக்கம் -53*

## 15. பதிபசுபாசவியல்*

**- ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்**

சருவ அண்ட பிண்ட சராசரங்கட்கும் ஆதி பிதாவாய் வயங்கும் ஈசனொருவன் என்றும் நித்தியனாயுளன். அவன் அனாதியெனப்படுவன்; பரிசுத்தமுடையவன்; பரிசுத்தஞானமுடையவன்; வேதாகமாதி நூல்களாற் றுதிக்கப்பட்டவன்: சமான ரகிதன். சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றையு மொருங்கே பொருந்தி நாம ரூப பேதங்களாயுள்ள சமத்த சராசரங்களிலுஞ் சச்சிதானந்த சொரூபமென நிறைந்த பொருளு மவனே. அவனே பரமசிவன் என்னும் பரமான்மா; பிரமம். அவனே பதி, அவனே குகன்.

சருவ புவனங்கட்கும் அவன் ஒரே தெய்வமாயுளனென்பதற்கும், ஒரு ஞானியினுடைய சுவானுபூதியிற் சகலசராசரமுமறையச் சிதாகாச சோதியொன்றே தோன்றுதலும், அவசியமான நிக்கிரக அனுக்கிரகாதி அற்புதங்கள் அந்த ஞானியகத்து நிகழ்தலும், இவைகள் அந்த ஞானி போல்வார்க்கெல்லாம் விகற்பின்றி எய்தலுந் தக்க ஏதுக்களாம்.

ஆன்மாக்க ளனந்தம்: அவை, பசுவென்னுமொரு சொல்லிலடங்கும். ஆன்மா, பாசத்திற் கட்டுண்டமையாற் பசுவெனப்பட்டது, அதற்கே - அகர்த்தா, அணு, சீவான்மா, சுதந்திரஈனன், கிஞ்சிஞ்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான், சேதனன், ஆதன், இயமானன், உயிர், ஆவி, புத்தி, பிராணன், சதசத்து, புற்கலன், தேகி யென்னும் பெயர்களுளவென்று நூல்க ளுவலும். இச்சீவான்மா, அனாதி நித்தியப்பொருளென்று மவை கூறும்.

மேலே சொன்ன அனாதி நித்திய பரமான்மாவென்னுமொரு சூரியனுடைய பிம்பமே உயிர்களி னுள்ளிடங்க ளென்னுங் கடசலங்கடோறுந் தோன்றுகிற பிரதி பிம்பங்களாகும். அந்த பிம்பத்தை அந்தரியாமி யென்னலாம். அது, தெளிவான சலத்திலேயே தெளிவாகக் காணப்படுமாதலின்

அந்தகார அஞ்ஞான ஆன்மா அதனைத் தரிசியாது; ஞானவிழியான்மா தரிசிக்கும். அந்தரியாமிக்கு, அக்கடமே தூலசரீரமும் அச்சலமே சூக்கும சரீரமுமாம். சூரியபிம்பந் தோன்றுகின்ற கடசலங்களு ளொன்று கசுமாலமாயின், எல்லாக் கடசலங்களு மங்ஙனமாத லில. அவ்வாறே, ஒருயிர்க்குள்ள சுக துக்கங்கள் ஒருயிர்க் கில. எல்லாக் கடசலங்களுள் கெட்டுப்போயினும் பிம்பசூரியன் கெடுதலின்று. அவ்வாறே, உயிர்கட்குள்ள சுக துக்கங்கள் அந்தரியாமித்துவ பரமான்மாவுக்கில்லை.

பரமான்மாவாகிய பரமசிவன், ஆன்மாக்களி னாசையிருந்தவாறு சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னு மைம்பெருந் தொழில்களையும் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவனென்னு மைவர்களுள்ளுமிருந்து சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயையென்னும் முதற்காரணங்கண் மூன்றையுங் கொண்டு செய்வன். பிரமா முதலிய ஐவரு ணின்று அஞ்செழுத்தென நின்று செய்தலைத் தன்மையென்றும், அவன் அவள் அஃதாஞ் சேதனப்பிரபஞ்சத்தினின்று செய்தலை முன்னிலை யென்றும், பஞ்சபூதாதி மூர்த்தங்களி னின்று செய்தலைப் படர்க்கையென்றும் பகரலாம். பிரமாமுதலிய நான்கு மேனியும் உருவமெனவும், சதாசிவமேனி உருவமு மருவமு மெனவும், இவ்வைந்திற்கும் மேலதாயுள்ள குடிலைப்பரம் அருவமெனவும் விளம்பப்படும். அருவம் இரகசியமாம். இந்த ஆறும் பிரசன்னமா நிற்குமூர்த்தியை அறுமுகச்சிவ னெனவும், அருவம் அருவமேயாக மற்றைந்தோடும் பிரசன்னமாய் நிற்கும் மூர்த்தியை ஐம்முகச்சிவ னெனவுங் கூறலாம். ஒருவனுக்கு விழிகளிரண்டாயினும் அவை, காண்டொழிலினுடங்கியைந் தொன்றாய்க் "கண்" எனவே நிற்குமாறு போல அவ்விரு மூர்த்திகளு மொருசிவ னெனவே நிற்றல் ஈங்குணரக் கிடக்குமுண்மை யென்க. நிற்க.

அச்சிவனுடைய இலீலா விக்கிரங்கள் பலவற்றுள்ளும் இலிங்கம், இலிங்கோற்பவம், முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாமகேசுவரம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்திரசேகரம், விருஷபாரூடம், விருஷபாந்திகம், புஜங்க லளிதம், புஜங்கத்திராசம், சந்தியாநிருத்தம், சதா நிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்காவிஸர்ஜநம், திரிபுராந்தகம், கலியாணசுந்தரம், அர்த்தநாரீசுவரம், கஜயுத்தம், ஸ்வராபக்நம், சார்த்தூலஹரி, பாசுபதம், கங்காளம், கேசவார்த்தம், பிக்ஷாடநம், சிம்ஹக்நம், சண்டேசானுக்கிரகம், தக்ஷிணாமூர்த்தம், யோக தக்ஷிணாமூர்த்தம், வீணாதக்ஷிணா மூர்த்தம், காலாந்தகம், காமாரி, இலகுளீசுவரம், பைவரவம், ஆபதோத்தாரணம், வடுகம், க்ஷேத்திரபாலகம், வீரபத்திரம், அகோராஸ்த்ரம், தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அசுவாரூடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏக பாதத்திரி மூர்த்தம், திரிமூர்த்தித்திரிபாதம், ஏகபாதம், கௌரீவரப் பிரதம், சக்ரதாகஸ்வரூபம், கௌரீலீலாஸமந்விதம், விஷாபஹரணம், கருடாந்திகம், பிராண சிரச்சேதம், கூர்ம ஸம்ஹாரம், மச்சாரி, வராஹாரி, பிரார்த்தநாமூர்த்தம், ரக்தபிக்ஷா ப்ரதாநம், சிஷ்யபாவம் என்னும் அறுபத்து நான்கும் அட்டாமூர்த்தங்க ளெனப்படும்.

இவ்வாறாய சருவேசுவரனுக்குத் தூலவடிவமாயுள்ள சருவப்பிரபஞ்சமுந் தூல வுடம்பாகும். சூக்கும வடிவயுள்ள சருவப்பிரபஞ்சமுஞ் சூக்கும வுடம்பாகும். இவை, மாவிசுவரூபமென்றும், பரமேசுவர வடிவமென்றும் பகரப்படும். ஆகாசத்திற் புகை யணுக்கள், தங்குதல்போல இத்தகைய அண்ட பிண்ட சராசரப் பிரபஞ்ச நாயகனுடைய அற்புதாகாச சத்தியின்கண் உண்டை வடிவமான அண்டகோடிளெல்லாந் தங்கியிருக்கின்றன வாகலின் யாவும் அவனடைய சுவாதீனப் பொருள்களேயாமென்க. இத்தகைய பரம்பொருள் இன்னும் மூவகையாக நிச்சயிக்கப்படும். விவரம்:- (க) கருவ வியாபக சருவானந்த ஞானாகாசப் பிரம சொரூபம். (உ) வரப்பிரசாத ஞானானுக்கிரக கிருபாகடாக்ஷ தடஸ்த பரம், (ங) அகோர வுக்கிர கரும பாவதகன கோபக்கினி ரூபம் எனவாம்.

இவற்றுண் மூன்றாவதாலே மறக்கருணையாக ஆன்மாக்களைத் தண்டித்தலும், இரண்டாவதாலே அனுக்கிரகித்துத் தன்பக்கலிலிருந் துய்திபெறத் தக்க பலன்களைக் கொடுத்தலும், முதலாவதாலே ஒன்றாய் வயங்கும்படி கடாக்ஷித்தலுமாம். ஒன்றாய் வயங்குதல். - பரமான்ம போதத்திற் சீவான்மபோதம் இலயமாய் ஞானாகாசமேயாய்ப் பேதமின்றிப் பிரகாசித்தலாம். இதுவே, நித்திய கைவல்லிய முத்தியெனவும், சிவ ஐக்கியமெனவும், வாக்குங்கெட்டாத நிருவாணமெனவுங் கூறப்படும். இந் நிருவாணத்தினைச் சீவப் பிரம ஐக்கியமாகக் கூறுதல், பிரமம் அனாதியாகவே யாண்டுங் கலந்துள்ளதென்னும் அத்துவைதத்தோடு முரணுவதுமாம். ஈண்டேகான்ம முடிவுகொண்டு யாங்களே கடவுளென்று ஈசுவரோபாசனையைத் தள்ளிவிட்ட வாதிகளையும் இயமன் றனததிகாரத்தா னடாத்துவனாகலின், அவர்கணிற்குநிலை முத்திநெறி யாதலு மில்லையென லுணரக் கிடக்கின்றன. இதனை,

*பன்மு கச்சமய நெறி படைத்தவரு மியாங்க ளேகடவு ளென்றிடும்*
*பாதகத் தவரும் வாத தர்க்கமிடு படிற ருந்தலை வணங்கிடத்*
*தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம தரும னும்பகடு மேய்க்கியாய்த்*
*தனியிருப்பவட நீழ லூடுவளர் சனக னாதிமுனி வோர்கடஞ்*
*சொன்ம யக்கமது தீர வங்கைகொடு மோன ஞானம துணர்த்தியே*
*சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள சோம சேகரகிர் பாளுவாய்த்*
*தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு வெம்மு கத்தினும் வணங்குவேன்*
*றெரிவ தற்கரி யபிரம மேயமல சிற்சு கோதய விலாசமே.*

என்று தாயுமானாரும்,

"*பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா*
*ரிறைவனடி சேரா தார்.*"

என்று திருவள்ளுவனாருந் தெரிவித்தவாறு கொண்டு மறிக. இறைவனடி சேராதார் பிறவிப்பெருங்கட னீந்தாரென்றது தானே, அறுபான்மும்மை நாயன்மார் கொண்ட கொள்கைகளானும் வலியுறுகின்றது.

ஆன்மாக்களைத் தண்டித்தலென்பது, பாவ நிவாரண காரியமாய்த் தண்டநாயகனாகிய காலமூர்த்தியாதி தேவர்களாலும் அரசர் முதலியோராலும் மறுமையிலேனும் இம்மையிலேனுந் தக்கபடி தண்டித்து நியாயங் கொடுப்பதாம். அப்படிச் செய்தல், பிள்ளைக்குற்ற பிணியைப் பிதாவானவன் வைத்தியனாக னீக்க முயல்வதுபோல முயல்வதாம். இது கருணையே யன்றிக் கொடுமையன் றாகலின் நியாய வழிப் போதரும் மறக்கருணை யெனப்படும். இங்கே கருத்தன், தன்னை யண்ணினவர்கட்கே கற்பகந் தரித்திரத்தையும், தண்ணீர் தாகத்தையு நீக்குதல் போலத் துன்ப நீக்கம் புரிவன்; அண்ணாதார்க்கு அது செய்யானெனலு முணரக் கிடக்கின்றதென்க. நிற்க.

ஈசுவர சிருட்டி நசித்துவிடுமாயின் ஒருவருக்குஞ் சனனநோய் நசியாது, எதனாலெனின், அன்னமய கோசத்துள்ள உதிரம், மச்சை, மாமிசம், சருமம், என்பு, நரம்பு என்னும் ஆறுதத்துவத்தூல மழியின் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களும்; சக்கு, சுரோத்திரம், ஆக்கிராணம், சிகுவை, துவக்கு என்னும் ஞானேந்திரியங்களும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கருமேந்திரியங்களும்; பிராணன், உதானன், சமானன், அபானன், வியானனென்னும் வாயுக்களுமாகிய 20 தத்துவங்களொருசேர யாக்கப்பட்ட சூக்குமவுடம்பை யுடைய

சீவான்மா, தான் நினைத்தவண்ணம் யாதானுமொரு காரியத்தை முடிக்க முடியாமே சொப்பன சீவனென மயங்குந்தன்மையா லென்க. இதனால், தூலமிருக்கும்போதே தகு தவங்களைச் செய்து தக்க பலன்களை மக்களடையவே உளர். இக்காலத்தே எச்சித்தி யில்லாதொழியினுஞ் சிருட்டி காரியம் நிகழ்ந்து கொண்டிருத்தலின் விடுதலையுண்டென்பது இங்ங னுய்த்துணரத் தக்க நுட்பமா மாதலின் அவ்விடுதலை முயற்சி வீணாகாதென்பதூஉம், அம்முயற்சிக்கு உபகாரப் பொருளாய தூல உடம்பும் அளவுடைய யாகாரத்தாற் பேணிக் கொள்ளத் தக்கதென்பதூஉம் மறுக்கற்பாலன அல்ல.

தூலம்பெறற்குக் கருவிற்புகூஉம் ஆன்மா, வித்தினுள் அங்குரம்போலச் சுக்கிலத்தி லடங்கியிருந்து சுரோணித சம்பந்த மாதலும் ஆசயத்துளிருந்து வளராநிற்கும். சுக்கிலத்தி லுயிருள தென்பதைப் பூதக்கண்ணாடி வாயிலாகக் காணலாம். இவ்வுற்பத்தியின்மீ துண்டாம் ஆகாமியமாகிய புதிய வினைகள், மரித்தவுடன் மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா, வென்னும் ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாகிய சஞ்சிதமாகும். பிரார்த்த வினைக்கானது போக எஞ்சிய சஞ்சிதம் பின்னே தொடரக் காத்திருக்கும். இதனாற் புதிய ஆகாமியமே பிறவிக்கடலாய்ப் பெருகிவருந் தன்மை யுண்மையால் விவேகியானவன், பிராரத்தவினையைத் தேவகட்டளையென்று திருத்தியாக அனுபவித்துக் கொண்டு ஆகாமியத்தை அணுத்துணையுஞ் செய்யாதிருக்க வேண்டும். செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்தவிருத்தி கச–சூ: சீவ சிருட்டியே ஆம். விவரம்:-

(க) காமம் = இச்சை; தனதானியாதிகளை மேன்மேலுந் தேடுந்தன்மை, (உ) குரோதம் = சினம்; பூசல், (ங) உலோபயம்=ஈயாமை, (ச) மோகம் = தான் றேடிய பொருண்மீதுள்ள அதிவிருப்பம், (ரு) மதம் = செருக்கு; கிருத்தியாகிருத்தியங் கருதாதெழுதரு கருவம், (சா) மாற்சரியம் = பொறாமை, (எ) இடும்பை = அவமதிப்பு; உதாசனம், (அ) வேட்கை = பல திறந்த நசை, (கூ) ஈரிடை (ஷ)=நமக்குள்ள துன்பம் பிறருக்கும் வரல்வேண்டுமென் றெண்ணும் ஒருவகைப் பொறாமை, (க) தர்ப்பம் (உவ:) = தன்னையே யுயர்த்திப் பேசு மியல்பு, (கக) இராகம் = பரதார கமன விருப்பம், (கஉ) துவேஷம் = பிறர்செய்த தீமைகருதி அதுபோன்றதை அவர்க்குத் தானுஞ்செய்யொரு தன்மை, (கங) இடம்பம்= பிறர் கண்டு புகழுமாறு பொருந்தா தளிக்குந் தானம் முதலியன, (கச) அகங்காரம் = நானென்றெழு மகந்தை எனவாம் இந்தப் பதினான்கும் நசித்தாற் பிறப்பிறப்பும் நசிப்பது உறுதிதான். இவை, சிவசிருட்டியல்ல; சீவசிருட்டியே யென்பதற்கு ஏற்புடை நியாயம் உண்டுகொலோ? எனின், சிவ சிருட்டியாகிய சராசரப் பிரபஞ்சம் பிரளயத்தி லழியுங் காலத்துஞ் சீவர்களுடைய சனன மரண காரணங்களொழியாம னிலைத்து நிற்றலும், சிவசிருட்டி யிருக்கும் பொழுதே அச்சீவசிருட்டி சூனியப்படுமாயிற் போக்கு வரவற்ற மோக்கம் பெறலுமாகிய வுண்மை யுண்டென்க.

மோக்கத்தை நல்கியருளுங் கடவுளன்றி ஏனையோரானீக்கப்படாப் பாசமாகிய ஆணவமலம், பசுக்களாகிய உயிர்கட்கு அனாதி யியற்கைத் தென்பதைப் பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கமுடையார் (சிவஞான தேசிகர்),

*“ஆணவமலமான் மாவுக் கனாதியி லியற்கை யென்னில்*
*ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையா தாவி*
*ஆணவ மலமான் மாவுக் கணாதியிற் செயற்கை யென்னில்*
*ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையு மான்மா.”*

என்னுஞ் செய்யுளான் மறுத்து, அனாதி செயற்கையாதல் வேண்டுமென்பாராயினார். செயற்கையினை அனாதியென்பது பொருந்துமாறு முளதாமோ? என்னுங் கடா ஈண்டுப் பிறத்தல்கூடும்.

அக்கடவுள் காருண்ணிய மெய்தற் கேதுவாஞ் சிவபுண்ணிய தவங்களு ளொதுவுஞ் சற்குரு முகத்தானன்றிப் பயன்படாதென்பது,

*"புங்க மாஞ்சிவ புண்ணியந் தேசிகர்*
*தங்கள் வாக்குப தேசம தன்றியே*
*இங்கி யற்றி னிரும்பய னில்லையாய்*
*மங்கு மென்னும் வரன்புக லாகமம் "* - *சிவபுண்ணியத்தெளிவு*

*"த்யாநமூலம் குரோர்மூர்த்தி:- பூஜாமூலம் குரோ: ப்பதம்*
*மந்த்ரமூலம் குரோர்வாக்யம்:- முக்திமூலம் குரோ:க்ருபா:"*

என்பனவற்றா லறியப்படுகின்றது. இன்ன பல. ஒருவனுடைய பரிபாக தசையை ஈசுவரனறிந்து அவனே குருமூர்த்தியா யெழுந்தருளிவந் துரைப்பன வுரைத்தலுமுண்டு; அடியார்களைக் கொண்டப்படி யிழைத்தலு முண்டு. இவ்வித காரியம், அவனது கருணைப்பிரவாக நியாயத்திற் பொதுவாயுள்ளது. மாயாப்பிரபஞ்ச பலனைச் சீவனாகிய கிஞ்சிஞ்ஞன் இச்சிப்பான். ஈசுவரனாகிய சருவஞ்ஞன் இச்சியான். இனையவாறு வீடுபேறன்றிப் பிறிதொன்றும் இச்சியாத் தன்மை வாய்ந்தவனே பக்குவமுள்ள சீடனாவன். அவனே, இந்நூலில் விளக்கப்படுமின்பத்தைப் பெறற் கதிகாரியாவன். இப்பக்குவத்தையே மந்ததரம், மந்தரம், தீவிரம், தீவிரதரமென்னுஞ் சத்திநிபாத நான்கனுள்ளும் முதிர்வுடைய தீவிரதாமென்று சிவசாத்திரங்கள் கூறும்.

தனதுண்மையையும், பசுவையும், சிவத்தையும் ஆவிகாணாவா றாவரணித்துச் செம்பிற் களிம்பெனப் பரிபாகத்தினீங்குமொரு சத்தித்தெனவுள்ள அவ்வாணவமும், சிருட்டி காலத்திற் காரியப்பட்டு வருவதெனவுள்ள கன்மமும், பிரபஞ்சத்தை மெய்யென் றனுபவிக்கச் செய்கின்ற திரோதையும், விஞ்ஞானாகலருக்குத் தனு கரண புவன போகமுஞ் சுத்தவித்தையாதி ஐந்து தத்துவமுமா யிராநின்ற சுத்தமாயையும், பிரளயாகலருக்குஞ் சகலருக்குந் தனு கரண புவன போகங்களாயும் பிரகிருதிக்கலை முதலிய ஏழு தத்துவங்களாயு மிராநின்ற அசுத்த மாயையுமென மலங்களைந்தாம். இவ்வைந்தும் பாசமென்னுஞ் சொல்லிலடங்கும்.

அட்ட வித்தியேசுரரும், அணுசதாசிவரும், சத்தகோடி மகாமந்திரருமாகிய இம்முத்திறந்தவருமே விஞ்ஞானகலர். இவர்கள், ஆணவ மலமுஞ் சுத்த மாயாயோகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பரமசிவனாலனுக்கிரகிக்கப்பட்டுப் பரமுத்தியை யடைவர்.

நூற்றுப் பதினெட் டுருத்திரர்களும் புவனகருத்தாக்களுமா யிருப்பவர்களே பிரளயாகலர். இவர்கள் ஆணவங் கன்ம மென்னு மலமிரண்டும் அசுத்த மாயாபோகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பார்வதி பதியாகிய அந்தப் பரமசிவன் மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திரங்கடுலங்கத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து செய்யுமனுக் கிரகத்தாற் பரமுத்தியை யடைவர்.

பிரமா விட்டுணுமுதற் கிருமி யீறாகவுள்ள சீவர்களே சகலர். இவர்கள், ஆணவங் கன்மம் மாயையென்னு மல மூன்றும் பிரகிருதியிலே தனு கரண புவன போகமுமடையார். இவர்கள்,

பக்குவத்தில் அப்பரமசிவன் மானுடச் சட்டை சாத்திச் சீவனுடைய ஊரும் பேரு மொழிப்பான் ஊரும் பேருங்கொண்டு ஞானாசாரியனா யெழுந்தருளி வந்து சத்திநிபாத முறைகண்டு செய்யுமனுக்கிரகத்தான் முக்தியையடைவர். விட்டுணுவைச் சகலரிற் கூட்டற்கு இடங்கொடாது கடவுளெனக் கூறுவது வைணவாகமம். அஃதெவ்வண்ணமாயினும் இந்நூலுழைக் கூறப்படுஞ் சிவ ஞானத்திற் கிழுக்கில்லை.

தனுவென்றது - பல்வேறு வகைப்படு தூலவுடம்பாம், ஆயுள், ஒரு கடிகை முதற் பத்துத் திங்கள்காறும் பல திறமாம்.

கரணமென்றது - சூக்கும வுடம்பாம். தூலமழிதல் போலழியா வன்மைத்து.

புவனமென்றது - பலதிறப்பட நாடு நகரமுமாயுள்ளது.

போகமென்றது - கன்மானுபவங்கட்குரிய உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, விழுங்குவன, நக்குவன, உடுப்பன, முடிப்பன, தரிப்பன, திமிர்வன, இடுவன, ஏற்பன, நடப்பன, படுப்பன, பார்ப்பன, கேட்பன, தாரம், தனயர், பந்து, மித்திரர், பொன், மணி முதலியனவாக வகை செய்து கூறப்படுவதாம்.

இவற்றுள், தனுவும் புவனமும் போகமுந் தூலசிருட்டியிலுள்ளன: கரணஞ் சூக்கும சிருட்டியிலுள்ளது: பூததன்மாத்திரை, அகங்காரம், புத்தி, பிரகிருதி, கலையென்பன ஒன்றற்கொன்று சூக்குமமா யிருக்குமென்ப.

* நன்றி : சிவஞான தீபம் - ஸ்ரீமத் குமரகுருபரசுவாமிகள், சைவ சித்தாந்த மகா சமாஜம், 1955, பக். 2-11..

## 16. அருள் இயக்கம்*

– சித்தாந்தக் கலாநிதி ஒளவை சு. துரைசாமி,
*மதுரை*

மாற்பித்தியார் என்னும் சான்றோர் காட்டில் ஒரு பெரியவர் கடும் தவம் புரிவதைக் கண்டார், அவரை,

*"கழைக்கண் நெடுவரை அருவி யாடிக்*
*கான யானை தந்த விறகின்*
*கடுந்தெறல் செந்தீ வேட்டுப்*
*புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே"*

என்று பாடினார். இது புறநானூற்றில் உளது. இதனைப் படிக்கும்போது, மலையருவியில் நீராடுவது

பொருந்தும்; காட்டில் வாழும் யானை அவர்க்கு விறகு கொணர்ந்து உதவும் என்றும், அதைக் கொண்டு அவர் செந்தீ வேட்பர் என்றும் கூறுவது எங்ஙனம் என்று வியப்புண்டாகும். மேலும் விறகு தரும் யானையை அத்தொழிற்குப் பழக்கப்பட்ட யானை என்றற்கும் இடமில்லை; பழகியதாயின் அது வினைநவில் யானை என்று குறிக்கப்பட்டிருக்கும். இது பழகாத யானை காட்டு யானை என்பது நன்கு தோன்றக் கான யானை என்று திட்டவட்டமாகச் செப்புகின்றார். இப்போது இவ்வாறு தவம் செய்வோரையும் கான யானைகள் விறகு தந்து அவர்கட்கு உதவுவதையும் நாம் காண்பதில்லை. அதனால் இச்செய்தி நமது அறிவை அசைக்கின்றது. இது வெறுங் கற்பனையோ என்று நினைப்போமாயின், கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் வேறொரு சான்றோரும்,

*"செந்தீப் பேணியமுனிவர் வெண்கோட்டுக்*
*களிறு தரு விறகின் வேட்கும்*
*ஒளிறிலங்கு அருவிய மலைகிழ வோனே"*

என இக்கருத்தையே எடுத்தோதுகின்றார். தொண்டைமான் இளந்திரையனைச் சென்று காணுமாறு பாணன் ஒருவனுக்கு, இளந்திரையனுடைய ஊரும் மலையும், ஊர்க்குச் சென்று சேரும் வழியும் உரைக்குமிடத்தே அவர் இதனைக் குறிக்கின்றார். ஆகவே, இதனை வெறுங் கற்பனை யென்று கொள்ளுவது அறமாக இல்லை; உண்மையை யாராவது கற்பனை யெனப் புறக்கணிப்பது அறிவுடைமையாகவும் தோன்றவில்லை.

கல்வி கற்ற மக்களிடையே நம் நாட்டில் இப்போது விஞ்ஞான அறிவு ஓரளவு பரவி யிருக்கிறது. நாம் வாழும் நிலவுலகுக்குப் பொருளை ஈர்த்துப் பிடிக்கும் ஆற்றல் ஒன்று உண்டு என்பது மேனாட்டு விஞ்ஞானியான ஐசக் நியூட்டன் கால முதல் நாடெங்கும் தெரிந்திருக்கிறது. மேலும், வானத்தில் காணப்படும் நாண்மீண் கோண்மீன் அனைத்திற்குமே இந்த ஆற்றல் உண்டென்றும் விஞ்ஞானம் கண்டிருக்கிறது. மேனாட்டுக் கல்வியறிவின் பயனாய் இந்த அறிவு நமது நாட்டில் இப்போது நன்கு பரந்துளது. என்றாலும், இது தமிழ் மக்களின் பழந்தமிழ் நூல்களைப் பயின்றவர்களுக்குப் புதுமையாகத் தோன்றாது. பழைய நூல்களான தமிழ்ச் சங்க இலக்கியங்களில் ஞாயிற்று மண்டிலத்துக்கே இந்த ஈர்ப்பாற்றல் உண்டென்று சான்றோர்கள் குறித்துள்ளனர்.

*"செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்*
*பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்*
*வளிதிரிதரு திசையும்*
*வறிதுநிலைஇய காயமும் என்றிவை*
*சென்று அளந்தறிந் தோர்"*

என்பது அக்குறிப்பு. இதன்கண்ணும் காயமென்றது ஆகாயம்; அது காற்று இயங்காத வெற்றிடம் என்றற்கு வறிது நிலைஇய காயம் என்று கூறுகின்றார். இவ்வாறே வேறு சான்றோரும், "வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்" (புறம் - 365) என்றும், "விசும்பு நீத்தம்" என்றும் குறித்துள்ளனர். இன்றைய வானநூல் அறிஞர் அனைவரும் இஃது உண்மையென உரைக்கின்றனர்; அமெரிக்க நாட்டு ஆராய்ச்சியாளர் வானவூர்திகளிற் பறந்து சென்று அந்த உண்மையைத் தெளிந்துள்ளனர். இவ்வாற்றால் ஞாயிற்றுக்குப் பரிப்பு என்ற ஈர்ப்பாற்றல் உண்டெனப் பண்டையோர் குறித்தது உண்மையை அடிப்படையாகக் கொண்ட தென்பது தேற்றம்.

இனி, பரிப்பு என்னும் சொல்லின் பொருள் இதுதானா என்றோர் ஐயம் சிலர் உள்ளத்தில்

எழலாம். ஞாயிற்றின் பரிப்பு என்பதற்கு உரை வகுத்த புறநானூற்றுப் பழையவுரைகாரர் ஞாயிற்றினது இயக்கம் எனப் பொருள் கூறி, "பரிப்பு என்றது இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லும் என்னும் இயக்கத்தை" என்று விளக்கமும் கூறினார். ஞாயிறு நிலவுலகத்தைச் சுற்றுகின்றதென்னும் கொள்கை அக்காலத்தே நிலவியதனால் அவர் இவ்வாறு கூறவேண்டியவரானார். இக்கால விஞ்ஞானிகளுள்ளும் அதனை முற்றிலும் மறுப்பவர் இலர்; ஞாயிற்றுக்கும் இயக்கமுண்டு; அது நிலவுலகு முதலிய வானுலகப் பொருள்கள் எல்லவாற்றையும் விட மிகமிகப் பெரிதாக இருத்தலால் ஏனைத் திங்கள் முதலியவற்றைப்போல இயக்கம் புலப்படத் தோன்றவில்லை என்பர். நிற்க, பரிப்பு என்னும் சொல்லுக்குத் தாங்குதல் என்னும் பொருள் உண்டு; "வாழும் நாளினில் தமைப் பரித்தவரையும் வணக்கித் தாழும் நாளினில் சரண் என அவரையே சாரும், ஏழை" என்று பிற்காலத்து ஆன்றோரான செவ்வந்திப் புராணமுடையார் கூறுவதாலும் ஞாயிற்றின் செலவும் எனச் செலவு கூறிப் பின்னர் அஞ்ஞாயிற்றுப்பரிப்பும் எனக் கூறுதலாலும் தாங்குதல் என்ற பொருளே ஏற்றது என்பது விளங்கும்.

இப்பரிப்பினால், ஞாயிறு, நாள்கோள் ஆகிய வானப் பொருள்களை ஈர்த்துப் பற்றித் தாங்குகிறது; அதனால் அவை ஞாயிற்றைச் சூழ்வருகின்றன. அன்றியும், ஞாயிற்றின்பால் உள்ள இப்பரிப்பாற்றல் அதனைச் சூழ்வரும் நிலவுலகு முதலியவற்றிற்கும் பாய்கிறது. அதனால் நிலவுலகைத் திங்கள் மண்டிலம் சுற்றி வருகிறது. நிலத்திலுள்ள பரிப்பு அதன் மேலே உள்ள பொருள்களை ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஞாயிறு முதலிய கோள்களிடத்தே பரிப்பென்னும் ஈர்ப்பாற்றல் இயல்பாக அமைந்திருப்பதை நியூட்டனுக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நம்மவர் கண்டிருந்தாராயினும், அதன் உண்மை கண்டு அளந்து பயன்படுத்திய பெருமையும் அருமையும் மேனாட்டவர்க்கே உரியவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

நிலம் தனது பரிப்பாற்றலால் திங்களை ஈர்த்து நிற்பதனால் அது நிலவுலகைச் சுற்றி வருகிறது. இவ்வாறு நிலம் பிற பொருள்களை ஈர்த்து நிற்பதுபோல் தன்னகத்தே உள்ள எல்லாப் பொருள்களையும் தன்னின் நீங்காதவாறு பரித்துக் கொள்கிறது. அதனால், அது ஞாயிற்றைச் சுற்றி வரும்போதும் தன்னைத்தானே சூழ்வரும்போதும் நாமும் ஏனை எவ்வகைப் பொருளும் வானவெளியில் வீழ்ந்துபடாமல் தாங்கிக் கொள்கிறது. அன்றியும் அதன் பரிப்பாற்றல் நிலத்தின் மேலும் கீழும் உள்ள எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிப் பரந்திருக்கிறது. எல்லாப் பொருளிலும் என்ற போது எல்லா உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் கருதப்படும். தம்மைப் பெற்ற தாய் தந்தையர் தூரத்தில் வரக் கண்டதும், குழந்தைகள் அவர்களை நோக்கிப் பாய்ந்தோடுவதும், மக்கள் வழங்காத நிலப் பகுதியில் தனித்துச் செல்பவர் மக்கள் வாழுமிடத்தைக் கண்டதும் அங்கே சென்று சேர்வதும் இந்தப் பரிப்பினால் விளையும் பயனாகும்.

இப்பரிப்பு மாவும் புள்ளுமாகிய உயிர்களிடத்தும் காணப்படுகிறது. கொடுமை மிக்க விலங்குகளும் பிறவும் தத்தம் இனத்தோடு கூடி யிருப்பதும் இதனாலேயாம். உயிரில் பொருள்களாகிய கல், மண், நீர் என்ற யாவும் சிறு சிறு அணுக்களால் ஆகியவை. அவை தம்மில் கூடிச் செறிந்து கற்பாறைகளாலும் நீர்ப்பெருக்காகவும் உருக்கொண்டிருத்தற்கும் ஒவ்வொன்றின்கண்ணும் ஊடுருவி நிற்கும் பரிப்பாற்றலே ஏதுவாகும். உயிர்களிடத்தே நிலவும் பரிப்பை அன்பு என்றும், உயிரில் பொருள்களிடத்தே நிலவுவதைப் பரிப்பு என்றும் விஞ்ஞானம் கூறுகின்றது. இதனால், ஈர்ப்பு அல்லது பரிப்பு எனப்படும் இவ்வியல்பு எல்லாப் பொருளிடத்தும் கலந்து நிற்பதொன்று என்பது தெளியப்படும்.

பொருள்களிடத்தே காணப்படும் பரிப்புக்கு முதல் நிலவுலகு என்பதும், நிலவுலகும் ஏனை நாள் கோள்களைப் போல வானத்தில் சுழன்று திரியும் பொருளாதலால் இதற்கு ஞாயிற்றின் பரிப்புக் காரணம் என்பதும் முன்பே கூறப்பட்டன. ஞாயிற்றை ஆராய்ந்த விஞ்ஞானிகள் அதுவும் சுழலுகிறதென்று சொல்லுகின்றார்கள். நமது நிலவுலகுபோல ஞாயிறும் சுழலுவதோர் பொருளாயின் அதனை ஈர்த்துப் பற்றிச் சுழல்விக்கும் பொருள் ஒன்று வேறே இருத்தல் வேண்டும். இவ்வண்ணமே நுணுகி நோக்கின் ஞாயிறு முதலிய எல்லாப் பெரும் பொருட்கும் வேறாய் மேலாய் ஏனை எல்லாவற்றையும் ஈர்த்துக்கொண்டு நிற்கும் முழுமுதற் பொருள் ஒன்று உண்டு என்பதும், அதன் சூழ்நிலையில், பரிப்பில், எல்லா வுலகுகளும் எல்லாப் பொருள்களும் ஈர்ப்புண்டு நிற்கின்றன என்பதும் நன்கு தோன்றுகின்றன. அந்த முழுமுதற் பொருளை நம் முன்னோர் சிவம் என்றும், அதன் பரிப்பை அருள் என்றும் குறிக்கலாம். அதன் இயக்கமே அருள் இயக்கமெனப் படும். அதனால் இயக்கப்படாத பொருளோ, அதன் இயக்கத்துக்கு அகப்படாத பொருளோ யாதும் இல்லை. அதனை மெய்யுணர்வால் கண்ட காரைக்கால் அம்மையார், "அருளே உலகெல்லாம் ஆள்விப்பது" என்பர்; உமாபதி சிவனார், "அருளிற் பெரியது அகிலத்து வேண்டும் பொருளில் தலையிலது போல்" என்று உரைப்பர்.

ஒவ்வொரு பொருளிடத்தும் அமைந்து கிடக்கும் பரிப்பாகிய இந்த அருளை மனவுணர்வால் அறிந்து கொள்ளும் மாண்புடையது மக்களுயிர். ஏனைப் பொருள்போல அருள் வேறாகப் பெறப்படுவதின்றி ஒவ்வொருவரிடத்தும் அமைந்து கிடப்பதால், அதனை நன்னெறிக்கண் ஆண்டு பயன் கொள்வது அறமென்ற கருத்துத் தோன்றவே திருவள்ளுவரும் "அருளாள்க" என்றும், "அருளாட்சி" என்றும் குறித்தருளினார். முழுமுதற் பொருளைச் சிவம் என்றும் அன்பு என்றும் சான்றோர் கூறுவர்; அதனால், சிவமாகிய அன்பின் பரிப்பை அன்பு ஈனும் அருள் என்று தமிழறிஞர் மேற்கொண்டனர். "அருள் என்னும் அன்பீன் குழவி" என்று திருவள்ளுவனாரும் குறித்தருளினார். இவையெல்லாம் அடங்கக் கண்ட திருமூலர்,



*"அருளே சகலமும் ஆய பவுதிகம்*
*அருளே சராசர மாய அமலம்*
*இருளே வெளியேஎனும் எங்கும் ஈசன்*
*அருளே"*

என்றும் இனிமையாக இசைக்கின்றார். முழு முதற் பொருளிடத்திலிருந்து பாயும் பரிப்பு அதனை இயக்கும்; அதனால் ஞாயிற்றின்பால் தோன்றும் செலவும் பரிப்பும் நிலத்தையும் திங்களையும்




இயக்குகின்றன. இதனை மேலே காட்டிய படத்தில் தெளியக் காணலாம். இவ்வாறே முழு முதலாகிய சிவத்தின் அருளாகிய பரிப்பினால் நம்முடைய உயிரும் உடலும் இயங்குகின்றன. அருளால் பரிப்புண்டு நிற்கும் உயிர் ஞாயிறு போலத் தானும் இயங்கித் தன்னைச் சூழ்ந்து தாங்கும் உடற்கூறுகளையும் இயக்குகிறது. அதனால் உயிர் உள்வழிக் காணப்படும் வளமும் ஒளியும், அது நீங்கியபோது உடலிடத்தே அவை காணப்படாமற் போகின்றன. உயிரும் உடம்பும் பரிக்கப்படும் திறத்தை இப்படத்திற் காணலாம். உடம்பின் பரிப்பினால் உயிரும் ஈர்க்கப்படுவதனால், "துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்" என்று திருவள்ளுவனாரும், "உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார், மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே" என்று திருமூலனாரும் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

இனி, இந்த உயிர்க்கும் உடலுக்கும் இடையே மன முதலிய நுண்பொருள்கள் சான்றோர்களால் உணர்ந்துரைக்கப்பட்டுள்ளன. உடம்புக்கு முதற் காரணமான மாயையே மன முதலியவற்றுக்கும் முதல் என்பர். இதனைத் திருமூலர் "மனமாயை மாயை" என்றும், "மனத்து விளக்கது மாயா விளக்கே" என்றும் கூறுவது காண்க. மேனாட்டறிஞர் மனத்தை உடம்போடு சேர்க்காமல் அதனின் வேறாய் உயிரோடு ஒன்றிய பொருளாகக் கருதுகின்றனர். இந்த மன முதலிய பொருள்களை உயிர்க்கென அமைந்த அகக்கருவி என்றும், அந்தக்கரணம் என்றும் நம்மவர் குறிக்கின்றனர். அகக் கருவியாகிய மனம் உயிருடம்புகளின் பரிப்புக்கும் திருவருட் பரிப்புக்கும் இலக்காகி நின்று உடலினகத்தும் புறத்தும் அது கறங்குகிறது. அதன் பரிப்புக்கு உயிரும் உடம்பும் அகப்பட்டு இயலும். இதனைப் பின்வரும் படத்தால் அறிந்து கொள்ளலாம்.




இனி, உயிரின்கண் கிளர்ந்தெழும் பரிப்பு உடம்பையும் மனத்தையும் இயக்குகிறது. அதனால் உயிர் மனத்தைக் கொண்டு நினைத்தலும் உடம்பைக் கொண்டு உரையும் செய்கையுமாகிய செயலும் செய்துகொள்கிறது. மனமும் உடம்பும் இல்லையானால் உயிர்க்குச் செயலில்லை; வினையில்லை. "இருவினை என்பது என்னைகொல் அருளிய, மனமே காயம் வாக்கெனும் மூன்றின், இதமே அகிதமே எனும் இவை" என்று அருணந்தி சிவனார் கூறுவது காண்க. மனத்தின்கண் நினைவு இயல்பும் வாய் உடம்புகளில் உரையும் செயலுமாகிய தொழிற் பண்பும் திருவருளின் பரிப்பியக்கமாகும்.

இதனால் உயிர் திருவருளியக்கத்தின் துணைகொண்டே மனம் உடம்பு ஆகிய கருவிகளை இயக்கி வாழ்க்கைத் தொழிலைச் செய்வது இனிது தெளியப்படும். திருமூலனாரும்,

*"பாசத்தில் இட்டது அருள்அந்தப் பாசத்தின்*
*நேசத்தை விட்டது அருள்அந்த நேசத்தில்*
*கூசற்ற முத்தி அருள்அந்தக் கூட்டத்தின்*
*நேசத்துத் தோன்றா நிலைஅரு ளாமே"*

என்றும், "அருள் ஐங்கருமத்து அதிசூக்கம் உன்னார், அருள் எங்கும் கண்ணானது ஆர்அறிவாரே" என்றும் குறித்தருளினார். இதைத் தான் "அழிப்பு இளைப்பாற்றல்" என்ற சிவஞான சித்தித் திருவிருத்தத்தில், "பார்த்திடின் அருளே எல்லாம்" என்று அருணந்தி சிவனார் முடித்துக் காட்டினார்.

இதுகாறும் கண்டவற்றால் உயிரும் மனமும் உடம்பும் தம்மில் ஒன்றினொன்று ஈர்ப்புண்டு இயங்குதற்குத் திருவருளின் பரிப்பியக்கமே இன்றியமையாத முதல் என்பது கண்டோம். சுருங்கச் சொல்லுமிடத்து, திருமூலர் அருளியது போல நாம் "அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு அருளில் அழிந்து இளைப்பாறி" வாழ்கின்றோம் என்பது தெளிவாம். உயிர் என்பது யாது? உணரும் தன்மையும், அறிவு விழைவு செயல் என்ற மூவகை ஆற்றலுமுடைய ஒரு பொருள். திருவருளின் பரிப்பால் இம்மூன்று ஆற்றலும் உயிர்ப் பொருளின்கண் கிளந்து நின்று செயற்படச் செய்யும். எல்லா அண்டங்களையும் பொருள்களையும் பரித்து இயக்கும் திருவருளின் பேராற்றல் அளப்பரும் தன்மை வாய்ந்தது. உயிர்ப் பொருளின் ஆற்றலை நோக்க அது மிக மிக உயர்ந்திருத்தலால்

அதன் வேகம் கெடுத்து ஆள்வதற்கென மூன்று வகைத் தத்துவங்கள் உயிரைச் சூழ்ந்து நிற்கின்றன. அவை வித்தை, அராகம், கலை என்று பெயர் கூறப்படுகின்றன. திருவருள், கலையின் வாயிலாகச் செய்கையாற்றலும், அராகத்தின் வாயிலாக விருப்பமும், வித்தை வாயிலாக அறிவாற்றலும் உயிரின்பால் எழச் செய்கிறது.




இவ்வாறு நிலவும் திருவருள் இயக்கத்தால்தான் உயிர் உடம்பொடு கூடி மன முதலிய கருவிகளையும் உடலையும் கொண்டு உடலில் வாழ்வு நடத்துகிறது. வாழ்வாவது மன முதலிய கருவி வாயிலாக அறிவன அறிந்தும் செய்வன செய்தும் நுகர்வன நுகர்வதாம். இந்நுகர்ச்சி முதலிய வற்றால் உயிரைப் பற்றியிருக்கும் அறியாமை நீங்க அறிவு விளக்கமும் தூய்மையும் பெறுகிறது. அறிவு விளக்கம் பெற்ற உயிர், உலகின் இயல்பும் உடம்பு மனங்களின் இயக்கமும் யாவும் திருவருட் பரிப்பு என்பதைத் தெளிந்து, அத்திருவருளில் தன்னை அழுத்தி 'யான்', 'எனது', என்று பற்றின்றி நிற்கும். அதனால் உயிரின் நினைவு செயல் யாவும் திருவருளின் செயலாகி விடும். அப்போது திருவருட் செல்வனான சிவன் அதனைத் தானாக்கித் தன் திருவடிக் கீழ் நிறுத்துவன். இதனைத் திருஞான சம்பந்தர்,

*"முக்குணங்கள் வாய்*
*மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்*
*சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம் பொருள்*
*சேர்வார் தாமே தானாகச் செயும்அவன் உறையுமிடம்*
*கத்திட்டோர் சட்டங்கம் கலந்திலங்கு நற்பொருள்*
*காலோ ஓவாதார் மேவும் கழுமல வளநகரே"*

என்று பாடி யருளுகின்றார்.

மக்களுயிர் மனவுணர்வால் ஏனை எல்லா வுயிர்களினும் சிறந்த மாண்புடையது. எனினும் அதன் உடம்பு, ''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்" இருந்து விலங்கு நிலையெய்திப் போந்தது; அதனால், பழம் பிறப்புக்களில் இருந்து வந்த பழக்கத்தால்

உடம்பின் பரிப்பு இளமைக்கண் மக்களின் உயிரையும் மனத்தையும் ஈர்த்துத் தன்பாற்படுத்தித் தன் வழியே நிற்கப்பண்ணும். அச்செய்கையால் உடம்புக்கு வளர்ச்சியும் வேறு உடம்புகளைப் படைக்கும் செய்கையும் உண்டாகின்றன. அப்போது, அப்பரிப்பின் வேகத்தை அடக்கியாளும் வன்மை பெறும் உயிர் மனத்தையும் உடம்பையும் தன் வசமே நிறுத்தித் தன்னை இயக்கும் திருவருள் உண்மை யுணர்ந்து அதன்வழி நிற்குமாயின் பிறவிப் பயனாகிய அறவாழ்வும் வீடுபேறும் பெற்று இன்புறும். அதன் நினைவு முற்றும் திருவருளையே எண்ணி,

*"அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்*
*அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே*
*மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்*
*எப்பொருளும் ஆவது எனக்கு"*

என்று பாடிப் பரவுவதிலே ஒன்றி யிருக்கும்.

இவ்வண்ணம் ஒன்றியிருந்ததனால், திருவருள் இயக்கத்தின் வழி நிற்கும் கானயானையும் ஏனைக் கொடு விலங்குகளும் அருஞ்செல்வர்களான தாபதர்கட்கு விறகு கொணர்ந்து உதவுவது இயற்கையறமாதல் இனிது விளங்குகிறது. ஆகவே, மாற்பித்தியார் பாட்டில் கண்ட கான யானையின் செயல் அறிவுக்குப் பொருந்துவதென்பது மேற்கொள்ளற்பாலதாகிறது.

* நன்றி : சித்தாந்தம்.

## 17. சதசத்தாகும் ஆன்மா

– "சித்தாந்த இரத்தினம்" கி. முத்துசாமி,
*சென்னை*

*"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி*
*அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால், அடியேன் உன்*
*அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய், பொன்னம்பலத்தெம்*
*முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே" - திருவாசகம் 376*

தெய்வத்திரு நாடாம் தென் தமிழ்நாட்டு அருளாளர்களின் சிவ போதத்தில் முகிழ்த்து, அரும்பி, மலர்ந்த இறை, உயிர், தளை என்ற முப்பொருள் விளக்கமே சைவ சித்தாந்தமாகும்.

அவற்றுள் நடுநாயகமாகத் திகழும் உயிரைப் பற்றிச் சிவஞான சித்தியார் பாடல் 250-இல் வரும் "ஆன்மா நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடும் இரண்டன்பாலும்" என்ற அடியை ஒட்டி என் ஆய்வுரை அமைகிறது. "சிவாய நம" என்ற மூல மந்திரத்திலும் அது யகரமாய் நடு நாயகமாகத் திகழ்வது காண்க. ஆன்மா 'சதசத்து' என்பதை விளக்குவதற்கு முன்னர், ஆன்மாவின் இலக்கணத்தை மெய்கண்டார் நிறுவிடும் பாங்கினைக் கவனத்தில் கொள்வது அவசியமாகிறது.

உயிர் கண்களுக்குப் புலப்படாததொன்று. ஆகவே, அதன் இருப்பைக் கருதல் அளவையால்தான் நிறுவுதல் வேண்டும். உணரும் தன்மை உடையது எதுவோ, அதுவே உயிர் ஆகும். உணர்வு அறிவுடைப் பொருளுக்கே உளதாதலின், அப்பொருளின் அறிவாய் விளங்குவதே உயிர் எனல் வேண்டும். அறிவாய் இருப்பது எது என்ற வினாவிற்குப் பல்வேறு கொள்கையினரின் கருத்துக்கள் பல்வேறு வகையாக உள்ளன. 'உயிர் இலது' என்று எந்த அறிவைக் கொண்டு சூனிய ஆன்ம வாதிகள் கூறுகிறார்களோ, அந்த அறிவே உயிர் எனச் சைவ சித்தாந்தம் நிறுவுகிறது. 'எனது உடல்' என்ற வழக்கே உயிர் உடலின் வேறாய் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. ஐம்பொறிகளுள் ஒன்று அறிவதை மற்றொன்று அறிவதில்லை. ஆதலால் ஐம்பொறிகளைக் கொண்டு ஐம்புலன்களையும் ஒருங்கே அறியும் உயிர், ஐம்பொறிகளின் வேறாய் உளது என்று சைவ சித்தாந்தம் தெளிவு படுத்துகிறது. இந்தக் காரணமே அந்தக் கரணான்ம வாதிகள் கொள்கை மறுப்புக்கும் பொருந்தும்.

சூக்கும தேகத்தில் நின்று ஆன்மா கனவில் கண்டதை நனவில் தெளிவாய் அறிய முடியாததால் சூக்கும தேகம் ஆன்மா அல்ல என்கிறது சைவ சித்தாந்தம். பிராணன் என்கிற உயிர்க்காற்று விழிப்பு, உறக்கம், பேருறக்கம் என்ற மூன்று நிலைகளிலும் இயங்கினும், விழிப்பினில் உள்ளதுபோல உறக்கம் பேருறக்கம் ஆகிய நிலைகளில் தொழிற்பாடும், நுகர்ச்சியும் இல்லாததால், பிராண வாயு ஆன்மா அல்ல எனச் சைவ சித்தாந்தம் நிறுவுகிறது.

உயிர், கருவிகளின் துணையால் அறிவதாயும், ஆசிரியர் உபதேசத்தால் அறிவதாயும், விட்டு விட்டு அறிவதாயும், அறிவதை மறப்பதாயும் இருக்கிறது. ஆதலால் இவற்றிற்கு ஆளாகாத பிரமம் ஆன்மா அல்ல எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது. உடல், பொறி, சூக்கும தேகம் ஆகிய இவற்றிற்குத் தனித் தனிப் பெயர்கள் உள்ளன. எனவே, அவற்றின் சமுதாயம் அல்லது கூட்டத்திற்கும் உயிர் எனப் பெயர் இல்லை எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. இக்கருத்துக்களைக் கொண்டு மெய்கண்டார்,

*"உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்,*
*ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்,*
*உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின்,*
*மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"*

எனச் சிவஞானபோதம் சூ-3ல் வைத்தும், அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று எனத் தொடங்கும் சூ-4ல் வைத்தும் ஆன்ம இலக்கணத்தை விளக்குகிறார்.

மெய்யார்ந்த இந்தக் கருத்துக்கு முன்னர், ஆன்மா என்ற சொல்லுக்கு உரிய விளக்கம் இல்லாது இருந்தது. இதுதான் ஆன்மா என மறுக்கவொண்ணாத வகையில், மேற்கண்டவாறு தெளிவாக மெய்கண்டார் விளம்பினார் என்க. விளம்புதல் என்பது சாதாரணமாகக் கூறியது

என்பது அல்ல. இவ்வகையில் பிறர் கருத்துக்களை வலுவாக மறுத்து உயிருக்கு இதுதான் முடிந்த முடிவான இலக்கணம் என உலகுக்குப் பிரகடனப்படுத்தும் (Proclamation) அழகினைக் கண்டு மகிழ்க.

ஆன்மாவைப் பசு என்பர். பசு என்றால் பாசத்தால் கட்டப்பட்டது எனப் பொருள்படும். ஆனால் என்றுமே அது பசுத் தன்மையுடன் இருப்பதல்ல; பசுத் தன்மை ஆன்மாக்கள்தோறும் வேறுபடும். பசுத்தன்மை அழிய அழியத்தான் ஆன்மா படிமுறையில் இறை நோக்கிய பயணத்தைத் தொடர முடியும். ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்பது பொருள். அது அநாதி நித்தியப்பொருள். தோற்றமும் அழிவும் இல்லாதது. ஆன்ம இலக்கணத்தை "அசித்து அருவியாபகம்போல்" எனத் தொடங்கும் சித்தியார் பாடல் 210 வரையறுத்து உரைக்கிறது. "விளையாததோர் பரிசில் வரு பசு பாச வேதனை ஒண்தளை யாயின தவிர அவ்வருள் தலைவன்" என்ற திருஞான சம்பந்தர் மறை மொழியும், "பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில், பதியினைப் போல் பசு, பாசம் அநாதி" என்ற திருமூலர் திருவாய்மொழியும், "என்றுளை நீ அன்றுளம் யாம்" என்ற தாயுமானவர் பாடலும் ஆன்மாவின் அநாதித் தன்மைக்குப் பிரமாணமாக உள்ளன.

அநாதி கேவலத்தில் அசத்தாகிய ஆணவமலத்தைப் பற்றிய ஆன்மா, காவலன் கொடுத்த மெய்ப் பொறிகளைச் சகலத்தில் பெற்றபோதும், சத்தாகிய சிவத்தை நோக்காது அசத்தாகிய பாசப் பொருள்களைப் பற்றி, போக்கு வரவு புரிந்து மலங்கள் நீங்கியபோது சுத்த நிலை மேவி, சிவமாம் தன்மை பெறும் எனச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

இறைவன் அநாதி கேவலத்தில் உயிரின் சூக்கும தேக மன விகாரத்தால் ஏற்படும் விருப்புக்கேற்ப தூல தேகத்தைக் கொடுத்துப் பிறப்புக்குட்படுத்துகிறான். இதுவே உயிரின் முதல் பிறப்பு ஆகும். இம்முதற்பிறப்பு தாய், தந்தை வழித்-தோன்றாமல், இறைவனே தாய் தந்தையாகத் திகழ்கிறான். இதனை, "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என மணிவாசகர் அருளியுள்ளார்.

பிறவிக்குட்பட்ட உயிர் சகல நிலையில் நாள்தோறும் பல அனுபவங்களைப் பெறுகிறது. அப்பொழுது உயிரின் உணர்வு நிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுகிறது. அதனை அவத்தை என்பர். இவ்வவத்தைகளை ஐந்தாகப் பகுத்துள்ளனர். அவை நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் எனப்படும். இம்முறையில் ஆன்மா மாயை கன்மங்களுடன் கூடி சகலத்தில் ஐந்தவத்தைப்படுதல் அதன் பொது இயல்பாகும். உயிர், சார்ந்ததன் வண்ணமாய் நின்று முடிவில் இறைவனைச் சார்ந்து சிவமாம் தன்மை அடைவதே அதன் சிறப்பியல்பாகும்.

மேற்சொன்ன தன்மைகளைக் கொண்ட உயிர், அசத்துடன் சகலத்தில் நின்று அசத்தாயும், சத்துடன் சுத்தத்தில் நின்று சத்தாயும், ஒளிரும் இயல்பும் உரிமையும் கொண்டது. தோற்றுதல், அழிதல், வளர்தல், தேய்தல் என்ற மாற்றங்களுக்குட்படுகின்ற பொருள்கள் அசத்து எனப்படும். அதன்படி, நாம் காணும் மாயா காரியங்கள் அனைத்தும் அசத்தேயாகும். எக்காலத்திலும் எவ்வித மாற்றமும் அடையாமல் என்றும் ஒரே தன்மையுடன் இருக்கும் பொருள் சத்து எனப்படும். இவ்விலக்கணப்படி பதிப் பொருளே சத்து எனப்படுவதற்கு முழு உரிமை உடையதாகிறது.

ஆன்மாவாகிய பசு, இறைவனை நோக்க சத்துமன்று; பாசப்பொருள்களை நோக்க அசத்தும் அன்று. அவ்விரண்டின் தன்மையும் உடையது. ஆகவே அது 'சதசத்து' எனப்படுகிறது. இதனைத் திருவருட் பயன் "சத்து அசத்தைச் சாராது, அசத்து அறியாது அங்கண் இவை உய்த்தல் சதசத்தாம்

உயிர்" (பாடல்-17) எனக்குறிப்பிடுகிறது. சதசத்து என்பதற்குச் சத்தும் ஆகாமல், அசத்தும் ஆகாமல், சத்தோடு-கூடியபோது சத்தாயும் அசத்தோடு கூடியபோது அசத்தாயும் மாறும் தனித்தன்மையுடையது எனப் பொருள்படும். உயிரின் இந்தச் சிறப்பு இயல்பினைத் திருவாசகத்தில், "சிந்தனை நின் தனக்கு ஆக்கி" எனத் தொடங்கும் பாட்டில் (30) "இரண்டுமிலி தனியனேன்" என்னும் தொடரில் வைத்து மணிவாசகப் பெருந்தகை விளக்கி அருளியுள்ளதைக்காண்க.

அசத்தாகிய பாசப் பொருள் சடப்பொருள். இது சத்தாகிய சிவனை அறிந்து அனுபவிக்காது சத்தாகிய சிவத்தின் முன் பாசப் பொருள்கள் வேறாய் எதிர்ப்பட்டு நில்லாமையால் அவற்றைச் சிவன் அறிந்து அனுபவியாது. எனவே, சத்து, அசத்து ஆகிய இரண்டினைப் பற்றியும் அறிவதாகிய இயல்புடையது சதசத்தாகிய பசுவே. இதனை மெய்கண்டார், "யாவையும் சூனியம் சத்து எதிர் ஆகலின் சத்தே அறியாது, அசத்து இலது அறியாது, இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" என்று சிவஞானபோதம் சூ-7லும், அருள் நந்தி சிவாச்சாரியார், "சத்து அசத்து அறிவது ஆன்மா தான், சத்தும் அசத்தும் அன்று, நித்தனாய்ச் சதசத்து ஆகி நின்றிடும் இரண்டன்பாலும் ஒத்து உடன் உதித்து நில்லாது, உதியாது நின்றிடாது; வைத்திடும் தோற்றம், நாற்றம் மலரினில் வருதல் போலும்" எனச் சித்தியார் 250-ம் பாடலிலும், உமாபதி சிவாச்சாரியார்,

*"சத்து இது என்று அசத்துத் தான் அறியாது, அசத்தைச்*
*சத்து அறிந்து அகல வேண்டா அசத்து இது சத்து இது என்று ஓர்*
*சத்து இருள் ஒளி அலாக்கண் தன்மையதாம்; அசத்தைச்*
*சத்துடன் நின்று நீக்கும் தன்மையால் சதசத்து ஆமே"*

எனச் சிவப்பிரகாசம் 57-லும் அருளியுள்ளனர்.

உயிர், ஆன்மா இரண்டும் ஒரு பொருட்கிளவி. அறிவு விளக்கம் பெற்ற உயிரே ஆன்மா எனச் சைவ சித்தாந்தம் கொள்கிறது. இவ்வாறு சதசத்தாகிய உயிர் பிறவிக்குட்பட்டபோது, "கல்லில் உறங்குகிறது; தாவரங்களில் அசைகிறது; பறவை விலங்குகளில் கனவு காண்கிறது; மனிதனில் விழிப்பு அடைகிறது; மாமனிதனில் உயிர்ப்பணி ஆற்றுகிறது; அருளாளப் பெருமக்களில் உண்மை காண்கிறது" என ஆங்கில நாட்டுத் தத்துவ மேதை ஒருவர் சொல்வது நம் சிந்தனைக்குரியது. இந்நிலையில் பரிணாம வளர்ச்சியில் கன்மத்தின் செயற்பாட்டையும் மறுத்தல் இயலாது. பரிணாம அறிவு வளர்ச்சி பெறும் உயிரைப் பற்றிக் கூறப்படும் இக்கருத்தை ஒட்டி நம் வாதவூர் பெருமான், கல் பிறவி தொடங்கி எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்கிறார். முழுவளர்ச்சி அடைந்த மனித உயிர் பாச ஞானத்தை முனைந்து கற்று, பசு ஞானத்தைக் கடந்து, பதி ஞானத்தின் வழியாகத் திருவருள் துணையுடன் சிவபரம்பொருளுடன் அத்துவிதமாக இணைந்து, இருமையில் ஒருமையாக இறைவன் வழங்க அந்த பேரின்பத்தைப் பெற்று உய்வு பெற உரிமை உடையது உயிரே எனச் சைவ சித்தாந்தம் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளது.

# 18. சைவ சித்தாந்த நோக்கில் வினை

- டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார்,
கோலாலம்பூர்

**பதி, பசு, பாசமாகிய முப்பொருள் தன்மை:**

| பெயர் | பொருள் | வடிவம் | தன்மை |
|---|---|---|---|
| 1. ஆணவமலம் | வியாதி | இருள் | அகமறைப்பு |
| 2. கன்மமலம் | மருந்து | விடயம் | மலமடக்கல் |
| 3. சுத்தமாயை அசுத்தமாயை மலம் | பாத்திரம் | தேகம் | கன்ம தாரகம் |
| 4. திரோதமலம் | திரை | படம் | புறமறைப்பு |
| 5. பசு (உயிர்கள்) | வியாதியஸ்தன் | சேர்ந்ததன்வண்ணம் | இரட்சைப் படுதல் |
| 6. பதி (இறைவன்) | வைத்தியன் | பிரகாசம் | இரட்சித்தல் |

**ஆணவமலம் - பிரதிபந்தம்:**

அறிவுக்கு மறுதலையாய் உயிர்களை நேரே தடைசெய்து நிற்றலால் ஆணவமலம் பிரதிபந்தம் எனப்படுகிறது.

**கன்மமலம் - அநுபந்தம்:**

ஆணவ பந்தத்தின் பலனை உயிர்கட்கு உறுவித்து நிற்றலால் கன்மமலம் அநுபந்தம் எனப்படுகிறது.

**மாயாமலம் - சம்பந்தம்:**

கன்மத்தால் தொடர்புபடுத்தப்பட்டு நிற்றலால் மாயாமலம் சம்பந்தம் எனப்படுகிறது.

**கன்மம் (வினை) : தன்மை:**

1. ஆன்மாக்கள் எடுக்கப்பட்ட உடம்புகளுக்கு முன்நிலை காரணமாக வியாபகமாய் இருக்கும்.
2. உயிர்கள் தோறும் வெவ்வேறாய் ஜனன மரணத்தை உண்டாக்குவதாய் இருக்கும்;
3. மனோ வாக்கு காயங்களினால் அறிந்தும் அறியாமலும் இயற்றுவதனால் வந்தேறுகிற புண்ணிய பாவங்களாய் இருக்கும்;
4. சுக துங்கங்களைப் பண்ணுவதாயிருக்கும்;

5. இதா அசிதங்களினால் ஆவதாய் இருக்கும்;

6. அனுபவித்தாலன்றித் தீராததாய் இருக்கும்;

7. ஒன்றால் ஒன்று அழிக்கப்படாததாய் இருக்கும்;

8. விதிப்படி பரிகாரஞ்செய்யின் நீங்குவதாயும் இருக்கும்;

9. நெல்லுக்குள் முளைபோல ஆன்மாவிற் பற்றியிருக்கும்;

10. சங்கிலி போலத் தொடர்ச்சியாய், அழிந்தும் ஆகியும் வருவதாய், பிரவாகத்து அலைபோல்வதாய் இருக்கும்;

11. சிருஷ்டிக்காலத்தே காரியப்படுவதாய் இருக்கும்;

12. ஆன்ம தன்மமும் மாயாகாரியங்களும் கூடின இடத்திலே உண்டாகையால் தன்மா தன்ம அதாவது தன்ம அதன்ம சொரூபமாய் இருக்கும்;

13. பிரளயத்திலே பக்குவப்படுவதாய் இருக்கும்;

14. சங்காரகாலத்திலே மாயையிலே இருக்கும்.

இத்தகைய கன்மம் அதிட்டம், தாரகம், போக்கியம் என்று சொல்லப்படும்

**அதிட்டம்:**

பண்ணின கன்மம் ரசித்துப் பலமுண்டாக்குமட்டும் புவனத்திலும், மருத்தெண்ணை வாதனை போலப் புத்தியிலும் தங்கிக் கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டம் எனப்படுகிறது.

**தாரகம்:**

எல்லாவற்றையும் தரிக்கையால் தாரகம் எனப்படுகிறது.

**போக்கியம்:**

புசிக்கப்படுகையாற் போக்கியம் எனப்படுகிறது.

இந்தக் கன்மம் மானதம், வாசிகம், காயிகம் என மூன்று வகைப்படும்.

**மானதம்:**

மனத்தினால் செய்யப்படும் வினை மானதம் எனப்படுகிறது. தேவதையை தியானம் பண்ணுதல், பிறர் உடைமையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சிந்தித்தல் முதலிய புண்ணிய பாவம் மானதம்.

**வாசிகம்:**

வாக்கினால் செய்யப்படும் வினை வாசிகம் எனப்படுகிறது. தேவதையைத் தோத்திரம் செய்தல், ஒருத்தனைத் தூஷித்தல் முதலிய புண்ணிய பாவம் வாசிகம்.

**காயிகம்:**

காயத்தினால் (மெய்யினால், உடம்பினால்) செய்யப்படும் வினை காயிகம் எனப்படுகிறது. தேவதையைப் பூசித்தல், ஒருத்தனை அடித்தல் முதலிய புண்ணிய பாவம் காயிகம்.

இந்தக் கன்மம் 1. சூக்குமம் (சஞ்சிதம்) 2. அதிசூக்குமம் (பிராரத்தம், 3. தூலம் (ஆகாமியம்) என மூன்று வகைப்படும்.

**1. சஞ்சிதம்:**

அநாதிதொட்டுச் சனனங்கள் தோறும் ஆர்ச்சித்த வினை புசித்து விஞ்சியதாகி ஆறு அத்துவாக்களிலும் கட்டுப்பட்டிருக்கிற புண்ணியம் பாவங்களாயிருக்கும்.

பயிர் செய்தவன் ஒருவன் தன் முயற்சியால் விளைந்த தானியத்தைச் சேர்த்து வைத்திருக்கும் நெற்களஞ்சியம் போன்றதாகும்.

**2. பிராரத்தம்:**

சஞ்சிதத்தில் சிறிது புசிக்கப் பக்குவப்பட்ட வினை ஒரு சரீரத்தை எடுப்பித்து உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, நீண்ட ஆயுள், அற்ப ஆயுள், இன்ப துன்ப போகங்களைக் கொடுக்கும்.

இது களஞ்சியத்திலிருந்து தானியத்தை எடுத்து அனுபவித்து வருதல் போன்றதாகும்.

இந்த பிராரத்த கன்மம் ஆதி தெய்வீகம், ஆதி பௌதீகம், ஆதி ஆன்மீகம் என்ற மூன்று முறையிலே வரும்.

**ஆதி தெய்விகம்:**

பிறப்பு, இறப்பு, நரை, திரை, நோய், யமதண்டனை, நரகவேதனை முதலியவாய் முன்னிலையின்றி வரும்.

**ஆதி பௌதீகம்:**

குளிர், வெப்பம், காற்று, மழை, தீ, மின்னல், இடி சுவர் விழுதல், கல் விழுதல் முதலியனவாய் பூதமுன் நிலையாக வரும்.

**ஆதி ஆன்மீகம்:**

தத்தம் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும், மிருகங்களினாலும், அரசாங்கத்தாலும், கள்வராலும், மனிதராலும், பசாசுகளாலும் உண்டாகும் துக்கம், பிறருடைய கல்வியும் சௌந்தரியமும் செல்வமுங் கண்டு பொறாமை கொள்ளல், அபிமானங் கெடுதல், எழுந்தது புத்தியாகச் செய்தல், கோபித்தல் முதலியனவாக உயிர்கள் முன்னிலையாக வரும்.

இந்தப் பிராரத்த கன்மம் திருஷ்டமாகவும் (தான் நினைத்தபடியும்) வரும், அதிர்ஷ்டமாகவும் (தான் நினைக்காதிருந்தாலும்) வரும். திருஷ்டாதிருஷ்டமாகவும் (தான் ஒன்று நினைக்க மற்றொன்றாகவும் வரும்). இப்படி மூன்று விதமாகவும் வரும்.

**3. ஆகாமியம்:**

பிராரத்தம் புசிக்குமிடத்து மேலும் செய்கின்ற புண்ணிய பாவங்களான இருவினைகளாயிருக்கும். இது களஞ்சியத்தினின்றும் எடுத்தனுபவித்து வருங்கால், களஞ்சியம் குறையாவண்ணம் மறுபடியும் வினைவித்து களஞ்சியத்தில் சேர்த்து களஞ்சியத்தை நிரப்பிக்கொள்வது போன்றது.

இந்தக்கன்மம் சாதி, ஆயுள், போகங்களைக் கலந்தே பண்ணுவிக்குமேயன்றி, ஒருவர்க்காயினும் நல்ல ஆயுளும், நல்ல ஜாதியும், நல்ல போகமுமாகப் பண்ணாது. புண்ணியத்தினாலே பாவமும், பாவத்தினாலே புண்ணியமும் அழியாது. இந்தத் தன்மாதன்ம ரூபமான கன்மம், தனக்கு மூலகாரணமான ஆணவ மாயைகளைப் போல நித்தியமாய்ச் சகசமாயிருக்கும்.

**கன்மம் உண்டென்பதற்குப் பிரமாணம்:**

இரண்டு பேர் ஒத்த நிலத்திலே கோளாறு. சரியாகப் பயிரிட்டிருக்கையில் ஒருத்தனுக்கு விளைகிறதும், மற்றொருத்தனுக்கு விளையாதே போகிறதும் நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கின்றோம். இதற்கு யாதொன்று காரணமோ அதுவே கன்மம். அது வல்லாமலும் ஒருவன் சுவர்க்கத்திலே சுகத்தை அனுபவிக்கிறான். மற்றொருவன் நரகத்திலே துன்பத்தை அனுபவிக்கிறான். இது அவரவர் செய்த கன்மத்திற்கு ஈடாக இப்படியிருக்கிறதென்பதே துணிபு.

**கடவுள் பிராரத்த கன்மம் கொடுத்தல்:**

ஒரு வண்ணான் பலபேர் துணிகளை வாங்கிக் கூட்டி வெளுத்து, அதில் அவரவர் துணியைத் தெரிந்து எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பது போலவும், ஒரு மாடு மேய்ப்பவன், பலபேர் மாடுகளையும் கூட்டிமேய்த்து, அவரவர் மாட்டைத் தெரிந்து பிரித்து அவரவர் வீட்டில் கொண்டு போய் விடுவது போலவும், கடவுள் ஒருவராய் இருந்து தமது ஞானாசக்தியினாலே எண்ணிறந்த உயிர்கள் செய்யும் ஆகாமியத்தை அறிந்து, அதன் கட்டுப்பாடாகிய சஞ்சிதம் எல்லாம் ஒன்றாய் இருந்தும், அதில் அவரவர்கன்மத்தைத் தெரிந்து எடுத்து அவரவருக்குப் பிராரத்தமாகப் புசிக்கச் செய்கிறார்.

**கன்ம தேட்டம்:**

உயிருக்கு பிராரத்த கன்மத்தைத் தேடும் தன்மை, கடவுள் கொடுத்த தாகில் வீடுபேற்றிலும் கொடுக்க வேண்டும். உயிருக்கு உள்ள தன்மையாகில் வீடுபேற்றிலும் தேடவேண்டும். இவ்விரண்டும் இல்லாததால், குழந்தைக்கு அதன் பசியே, தாய் சங்கினால் கொடுக்கும் பாலைத் தேடு தன்மையைக் கொடுப்பதுபோலவும், பிணியாளனுக்கு அவனுடைய பிணியே வைத்தியன் ஒரு கலத்தில் வைத்துக் கொடுக்கும் மருந்தைத் தேடும் தன்மையைக் கொடுப்பது போலவும், உயிருக்கு ஆணவமலமே பிராரத்த கன்மத்தைத் தேடும் தன்மையைக் கொடுக்கிறது.

**கன்மம் ஒரு பொருளாகக் கருதப்படுவது:**

திரவம் ஒரு பொருளாக இருந்து எண்ணிறந்த பேர் வியாதிக்கு எண்ணிறந்த ஊர்களிலே எண்ணிறந்த மருந்தாக இருப்பது போல, கன்மம் ஒருபொருளாக இருந்து எண்ணிறந்த உயிர்கள் மலத்துக்கும் எண்ணிறந்த உலகங்களிலே எண்ணிறந்த பொருள் நுகர்ச்சியாயிருக்கும்

**கன்ம மயக்கம்:**

இறைவனாலே ஐந்து பொருள்கள் இன்ப துன்பமாய் வந்து பொருந்துகின்றதை, உயிர் தன் முயற்சித் திறத்தினாலே இன்பம் வந்ததென்றும், தன்முயற்சிக் கேட்டினாலே துன்பம் வந்ததென்றும் கொள்வதே கன்ம மயக்கம்.

**கன்மம் அனுபவிக்கப்படும் விதம்:**

கன்ம புசிப்பு ஊழ்வினையாலல்லது உண்டாகாது. அந்தப் புசிப்பு முன்பு ஆர்ச்சித்த ஒழுங்கிலேயும், கன்மத்தின் வன்மை மென்மைகளுக்கு ஈடாயும் வரும். முதலில் பனையும், பின் தென்னையும், பின் கத்தரியும், அதன்பின் கீரையும் விதைத்தவன், கீரையின் பலனை 15 நாட்களிலும், கத்தரியின் பாலன 30 நாட்களிலும், தென்னையின் பலனை 5 வருடங்களிலும், பனையின் பலனை 10 வருடங்களிலும் அனுபவிப்பது போலத் தன்ம பலன் ஆர்ச்சித்த ஒழுங்கிலோ அல்லது முன்பின்னாகவோ புசிக்கப்படும்.

**கன்மமாறல்:**

வினையை மதிப்பீடு செய்யும் விதம்:

செயலை மட்டும் உற்று நோக்காது அச்செயலைச் செய்பவரையும், அவரது நோக்கத்தையும் கருத்திற் கொண்டு மதிக்கவேண்டும். அன்பு மிகுதியால் செய்த மறச்செயலும் அறச்செயலாகும். அன்பின்றிச் செய்யும் அறச்செயலும் பாவமாகும்.

*“அரனடிக்கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்*
*பரனடிக்கன் பிலாதார் புண்ணியம் பாவமாகும்*
*வரமுடைத் தக்கன் செய்த மாவேள் விதீமையாகி*
*நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே” - சிவஞான சித்தியார் 119*

**பஞ்ச கலைகளில் அடங்கிய ஐந்துவகைக் கன்மங்கள்:**

கன்மம் உலக வினை, வைதிக வினை, அத்தியான்மிக வினை, அதிமார்க்க வினை, மாந்திர வினை என ஐந்து வகைப்படும்.

1. உலக வினை - கூவல், குளம், தண்ணீர் பந்தல் முதலியன செய்தலால் உண்டாவது. இது நிவர்த்திகலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிக்கும்.

2. வைதிக வினை - வேதத்துள் விதிக்கப்பட்ட அக்கினிட்டோமம் முதலிய வேள்வி முதலியவற்றைச் செய்தலால் உண்டாவது இது பிரதிட்டா கலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிக்கும்.

3. அத்தியான்மிக வினை - வேத நெறியாற் செய்யும் பூசனை, துறவு முதலியவற்றைச் செய்தலால் உண்டாவது. இது வித்தியா கலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிக்கும்.

4. அதிமார்க்க வினை - இயமம் நியமம் முதலிய யோகப் பயிற்சியால் உண்டாவது. இது சாந்தி கலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிக்கும்.

5. மாந்திர வினை - சுத்த மந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானப் பயிற்சி விசேடத்தால் உண்டாவது. இது சாந்தி அதீத காலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிக்கும்.

மேற்கூறப்பட்டவற்றுள் முன்னைய இரண்டும் அசுத்த கன்மம் எனப்படும். மூன்றாவது மிச்சிர (சுத்தா அசுத்த) கன்மம் எனப்படும். நான்காவதும் ஐந்தாவதும் சுத்த கன்மம் எனப்படும்.

**மலசக்தியும், உடலும் வினையும்:**

உயிரை அனாதியே பந்தித்திருக்கின்ற ஆணவ மலசக்தியை முதிர்ச்சியடையச் செய்து, நீக்கி, உயிரை இரட்சிக்கும் பொருட்டு, இறைவன் உயிருக்கு மலசக்தியாகிய அவாவின் தரத்திலும் அதிக தரமாகிய மாயா உடலை கொடுத்தாலும் அல்லது சரிதரமாகிய மாயா உடலை கொடுத்தாலும், அவ்வுடலை மலசக்தி விழுங்கி வெளியிலே பொங்கி வரமாட்டா தென்பதை உத்தேசித்து, மலசக்தியின் தரத்திலும் குறைந்த தரமாகிய உடலைக்கொடுத்து அந்த மலசக்தி அந்த உடலை விழுங்கி வெளியிலே வரச் செய்கிறார். இப்படி வெளியிலே பொங்கி வந்த மலசக்திக்கு மலசக்தியின் தகுதியிலும் குறைந்த நிலையாகிய பிராரத்தத் துய்த்தலைக் கொடுத்தால் மல சக்தியை அடக்கி விழுங்க மாட்டாதென்று, அதிகத் தகுதி நிலையாகிய பிராரத்தத் துய்த்தல் என்னும் துன்பத்தை அந்த உடலோடு வைத்து மறைப்புச் சக்தியினாலே (திரோதான சத்தியால்) மறைத்துக் கொடுத்து மலசக்தியை அடக்கி விழுங்கப் பண்ணுகிறார். மல சக்தியை அடக்கி விழுங்கும்படியாகக் கட்டளையிட்ட துன்பத்தில், மலசக்திக்கு உள் அடங்கிய பொறிக்குள்ளே அடங்கின துன்பப் பண்ணுகிறார். மல சக்தியை அடக்கி விழுங்கும்படியாகக் கட்டளையிட்ட துன்பத்தில், மல சக்திக்கு உள்ளடங்கிய பொறிக்குள்ளே அடங்கின துன்பப் புசிப்பை மாத்திரம் மலசக்தியோடு சேர்ந்த உயிர் அறிவு இன்பமாகக் கொண்டு விரும்புகிறது. இந்தப் பொறியுள் அடங்காத துன்ப நுகர்ச்சியை மலசக்தியோடு சேர்ந்த உயிர் அறிவு துன்பமாகக் கொண்டு வெறுக்கிறது. இப்படி விரும்பி வெறுத்துத் துய்க்கையில், அந்தத் துய்த்தலை வேண்டும் வேண்டாம் என்று உயிர் கருதும் நிலையில், அத்தகைய நினைவை மேல் நடத்தத் தெரியாத உயிருக்குக் கடவுள் உயிருக்கு இத அகிதமாக முடிகிற இருவினையை ஆகாமியத்தைக்) காட்டினார். அந்த நல்வினை தீவினையாகிய ஆகாமியத்தை உயிர் செய்ய, அது மாயையிலே கட்டுக்கடையாகி சஞ்சிதமென்னும் புண்ணிய பாவமாக கட்டுப்பட்டது. இந்தக் கட்டுப்பாடு வருபிறப்பையும் விளைவித்து அதற்குப் பிராரத்தம் என்னும் இன்ப துன்பத்தையும் விளைவிக்கிறது. இப்படி வினையினால் பிறப்பும் பிறப்பினால் வினையும் (மரமும் மரத்தின் வித்தும் வந்து இயைவது போல்) ஒன்றுக்கொன்று காரண காரியமாக காற்றாடியும் கொள்ளிவட்டமும் போல் சுழன்று கொண்டேயிருக்கும் நிலையில், ஆணவ மலமானது சிறிது சிறிதாகத் தேய்ந்து வலிகுன்ற, இதுகாறும் தான் இன்பமென்று கருதி விரும்பியது துன்பத்திற்கு ஏதுவாகவும், துன்பமென்று கருதி வெறுத்தது இன்பத்திற்கு ஏதுவாகவும் இருப்பதை இந்த உயிர் உணர்ந்து, இந்த இரண்டிலும் அதற்கு சமநோக்கு (இருவினையொப்பு) ஏற்படுகிறது.

**இருவினையொப்பு:**

ஒரு இல்வாழ்வான் பரத்தையினிடம் மயங்கி அவளுடன் வாழ்ந்து வருகிற நாளில், இல்லற நூல் கேட்டுப் பரத்தையினால் துன்பம் வருவதை அறிந்து அவளை வெறுத்து, தன் இல்லாளுடன் வாழ்ந்து வருகிற நாளில் துறவற நூல் கேட்டு, இவளாலும் துன்பம் வருதலை அறிந்து வெறுத்து இருவரையும் ஒன்றாகக் காண்பதுபோல, தீவினை பிறப்பு இறப்புத் துக்கத்தைக் கொடுப்பது போல நல்வினையும் பிறப்பு இறப்புத் துக்கத்தைக் கொடுப்பதை அறிந்து இருவினையும் சமமென்று கண்டு மறுத்தல். இந்தநிலை கீழ்கண்ட பாடல்கள் மூலம் நன்கு விளங்கும்.

1. *கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
   *ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர்*
   *கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி*
   *வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.* - *பெரியபுராணம், சேக்கிழார்*

2. *மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதிலும்*
*இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும்*
*சித்திரத் தினலர்ந்த செந்தா மரையினை*
*ஒத்திருந்த முகம் உன்னுவாள் - கம்பர், ராமாயணம்.*

**புத்திபூர்வ அபுத்திபூர்வ இருவினை:**

நல்வினை தீவினையாகிய இரண்டும் புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என நான்காக நிகழும்.

*(1) புத்திபூர்வ நல்வினை:*

புத்தியில் பட்டு, அதாவது அறிந்து மனம், மொழி, மெய்களினாலே உயிர்களுக்குச் செய்யப்பட்ட இதங்கள் எல்லாம் மனப்பூர்வமென்ற பெயரையுடைய புத்திபூர்வ நல்வினையாகும்.

*(2) அபுத்திபூர்வநல்வினை:*

உயிர்களுக்கு தீமையை நினைக்க சொல்ல, செய்ய நன்மையாக முடிவதும், ஒருவன் பொருள்களைக் கள்வர் முதலாகிய உயிர்கள் கனவில் கொண்டு போவதும், கேவலத்தில் உடல் காரணத்தினாலே நன்மையாக முடிவதும் ஆகும்.

*(3) புத்திபூர்வ தீவினை:*

புத்தியிலே பட்டு, அதாவது அறிந்து திரிகரணங்களினாலே உயிர்களுக்குச் செய்யப்பட்ட தீமையெல்லாம் மனப்பூர்வம் என்ற பெயரையுடைய புத்தி பூர்வ தீவினை.

*(4) அபுத்திபூர்வ தீவினை:*

உயிர்களுக்கு நன்மையை நினைக்க, சொல்ல, செய்ய தீமையாக முடிவதும், கேவல்த்தில் உடலின் காரணத்தினாலே தீமையாக முடிவதும் ஆகும்.

**சத்திநிபாதம்:**

கதிரவன் ஒளியினாலே இருள் முழுவதும் கெட்டவிடத்துக் கண்ணானது மாயா பதார்த்தத்தைக் காண்டல் போல, உயிரின் மலசக்தி சிறிது நீங்கி உயிர் இருவினையொப்புக் கண்டவிடத்து முன் கூடியிருந்த சிவசக்தி மிகுந்து (விரகு அறியா இளம் பெண்ணைத் திருமணம் செய்து வைத்திருந்த மாப்பிள்ளை பெண்ணின் பக்கவ காலம் பார்த்து வந்து செய்யவேண்டிய சடங்கெல்லாம் செய்து, அவள் இணங்கும் படிக்குள்ள விளையாட்டுகள் செய்து, அக்காலம் வரையும் அவள் அறியாத இன்பத்தைக் கொடுத்து அந்த இன்பத்தில் அவளை மூழ்கிவிப்பது போல) கடவுள் பிறவா முதல்வன் ஆகையால் பரவிந்துவாகிய திருவருளே உண்மை வடிவாக திருமேனி கொண்டு உயிரின் வழித்தாக ஒத்தொழுகி ஞானாச்சாரியர் மூர்த்தமாக வந்து முப்பொருளின் இயற்கையை அருளித் தெளிவித்து, மெய்த்தவமாகிய உண்மைச்சரியை, கிரியை, யோகம், ஞானமேயான சிவநல்வினையே உயிருக்குப் பேரின்பத்தைக் கூட்டுமென்று உணர்த்துகின்றார்.

# 19. சைவ சித்தாந்தச் செந்நெறி*

- அறிஞர் ஆ. குணநாயகம்,
*இலங்கை.*

உலகத்தில் தொன்மை வாய்ந்த சமயங்களுள் சைவ சமயமும் ஒன்று. இப்போது உலகில் நிலவி வரும் சமயங்களுள் சைவ சமயமே மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் ஒரு நோக்கும் உள்ளது. இஃது எவ்வாறாயினும் சைவ வழிபாடு 4,000 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் நிலவியிருந்ததற்கு அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உள்ளன. இப்பள்ளத்தாக்கின் கண்ணேயுள்ள சிதைவுச் சின்னங்களை ஆராய்ந்த சேர். ஜோன் மார்ஷல் என்னும் பெரியார் இவ்வாறு கூறுவர்:

"மொகெஞ்சதாரோ, ஹரப்பாப் பகுதிகளிற் காணப்பட்டவற்றுள் மிகவும் அதிசயத்திற்குரியதான விடயம், சைவ சமயத்தின் வரலாறு கற்காலம், உலோக காலம் என்பனவற்றிற்கு முற்பட்டது என்பதேயாகும். உலகத்தின் கண்ணே உள்ள சமயங்களுள் மிகவும் தொன்மையானது இது என்பதனை இவ்வாராய்ச்சி புலப்படுத்திற்று."

இப்பெரியாருடன் இணைந்து செயலாற்றிய டாக்டர் பிரான் நாத் என்பவர், சாசனப் பொறிப்புக்களிலிருந்து சுதந்திரமாகத் தன்னாற் பெறப் பெற்றுள்ள ஆராய்ச்சியின் பயனாக, சிவ வழிபாடும், அன்னை வழிபாடும் கி.மு. 3,000 ஆண்டு வரையில் இருந்ததாகக் கூறியுள்ளார்.

இந்து மதத்தின் இருபெருங் கூறுகள் வேதாந்தம், சித்தாந்தம் என்பனவேயாகும். வேதாந்தக் கோட்பாட்டின்படி, பிரமம் ஒன்றே உண்மைப் பொருள். ஏனையவையெல்லாம் இப்பிரமத்தின் பிரதிபிம்பமேயாகும்.

சைவ சித்தாந்தத்தின்படி கடவுள், உயிர், உலகம் என முப்பொருள்கள் உண்டு. சைவ சித்தாந்த இலக்கியம் இரு கூறாக அமைந்துள்ளது. ஒன்று, சைவத்திருமுறைகள். மற்றது மெய்கண்ட நூல்கள். முன்னையது தோத்திரம் எனப்படும். பின்னையது சாத்திரம் எனப்படும்.

தோத்திரங்கள் அடியவரின் உணர்ச்சிப் பிரவாகத்தால் எழுந்தவை. பின்னையவை, அறிவின் ஆராய்ச்சியால் தோன்றியவை. உணர்ச்சிக்குக் காரணம் கிடையாது. ஆராய்ச்சி கிடையாது. அன்பின் நெகிழ்ச்சி மாத்திரமே அதற்குத் தோற்றமும் ஆதாரமுமாகின்றது. அறிவு அப்படியான தொன்றல்ல. ஒன்றினை மேற்கொள்வதற்கு முன்னர், தனக்கு வாய்த்துள்ள ஐம்பொறிகள், ஐம்புலன்கள், உட்கருவிகள் முதலிய சாதனங்களும் பிறவும் எவை உளவோ, அவற்றின் துணை கொண்டு, இயன்ற வரையிற் சரி, பிழை, நன்று, தீது என்பனவற்றை ஆராய்ந்து, இறுதியில் ஒரு முடிவுக்குவந்து அதன்படி செயலாற்றும். உலகத்தின் தன்மையையும், உயிர்களின் இயல்பையும், இவற்றுக்கு உயிராய் விளங்கும் பேருயிரையும் விளங்கிக் கொள்ளும் முயற்சியில் அறிவு ஒரு அளவு மாத்திரமே செல்ல முடியும், அப்பாற் செல்ல இயலாது என்ற உண்மையை உணர்ந்த நம் முன்னோர்கள், "**நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறியேன், உடையாய் அடியேன் உன்**

**அடைக்கலமே**" என்ற முடிவுடன் அன்பு நெறியாய் வந்த தோத்திர நூல்களுக்கு முதலிடம் அளித்தனர்.

ஆனாலும், பகுத்தறிவு படைத்த மக்கள், அறியவேண்டியவற்றைத் தமது அறிவின் துணைகொண்டு, அறியக்கூடிய அளவுக்கு அறிதல் வேண்டும் என்னும் தேவையையும் உணர்ந்தனர். தமது அறிவை ஒன்றன்பாற் செலுத்தி உணருதல் வேண்டும் என்பதற்கு "உய்த்து உணருதல்" என்னும் சொல் வழக்கே சான்று பகருகின்றது. அன்புக்குத்தானும் அறிவு ஒரு அளவு வேண்டப்படுகிறது. அறிவுத் துணையில்லாத பைத்தியக்காரனுக்கு அன்பு செலுத்த முடியாது.

உய்த்து உணரும் என்னும் பிரயத்தனத்தால் எழுந்ததே சைவ சித்தாந்தச் செந்நெறி. 'சித்' என்பது, பெறப்பட்டது என்னும் பொருளுடையது. அந்தம் என்பது, முடிபு. இதுகாறும் பல்லாற்றானும், பலராலும் பெறப்பட்ட முடிபுகளைத் துருவி ஆராய்ந்து, அறிவு விளக்கத்தாலும் அனுபவ ஞானத்தாலும் இறுதி முடிவாகப் பெறப்பெற்ற முடிபே சித்தாந்தம் எனப்படுகிறது. காணப்படும் உலகத்தைக் கொண்டு காணாத கடவுளை உணருகிறது. பிற சமயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதால் சமயாதீதம் எனப்படுகிறது. "சைவ சமயமே சமயம்" என்று அருளினார் தாயுமானவ அடிகளார்.

"**இந்திய நாட்டின் சகல சமயங்களுள்ளும் மிக்க விரிவானதும், செல்வாக்குடையதும், தங்கு தடையின்றித் தன்னளவில் மேன்மதிப்புடையதும் சைவ சித்தாந்த நெறியேயாகும்**" என்று போற்றும் மேல் நாட்டு ஜீயூ. போப் என்றும் வணக்கத்திற்குரிய பாதிரியார். "தமிழரின் சமயம் இதுவே" என்று மேலுங் கூறியுள்ளார்.

சித்தாந்தி எவரும் "நான் இதனைக் கூறுகின்றேன். இதுவே சரி, எனவே கேள்வியின்றி இதனையே ஒப்புக்கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தார். மெய்கண்டதேவ நாயனார் அருளிய "சிவஞானபோதம்" என்னும் தலைசிறந்த மெய்ந்நூலின் 12 சூத்திரங்களின் முதற் சூத்திர முடிவில் "என்மனார் புலவர்" என்றும், 6ம் சூத்திர முடிவில் "இசைக்கும் மன்னுலகே" என்றும் ஏனைய பெரியோர்களின் வாக்குகளாகக் கூறினாரேயொழியத் தனதுரையாகக் கூறியதில்லை. உபதேசிப்பது, ஆசிரியரின் கடமை; ஏற்பது, விடுவது மாணவரின் பொறுப்பு.

உண்மையாராய்ச்சியின் போது சைவ சித்தாந்தம் கையாளும் முறை தனித்தன்மை வாய்ந்தது. சிவஞான சித்தியார் பாட ஒழுங்கு அமைந்திருக்கும் முறையைப் பார்த்தால் இது நன்கு புலனாகும்.

முதற்பிரிவு, **பிராமணவியல்** - இதனால் மெய்ப்பொருள் உண்மை உணர்த்தப்பெறுகிறது.

இரண்டாம் பிரிவு, **இலக்கணவியல்** - இதனால் மெய்ப்பொருளின் இயல்பு உணர்த்தப் பெறுகிறது.

மூன்றாம் பிரிவு, **சாதனவியல்** - இதனால் மெய்ப்பொருளை அடையும் நெறி உணர்த்தப் பெறுகிறது.

நான்காம் பிரிவு, **பயனியல்** - இதனால் மெய்ப்பொருளை அடைவதால் பெறும் பயன் யாது என்பது உணர்த்தப் பெறுகிறது.

இதனை வேறுவகையாற் சொன்னால், இவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் என வரிசைக் கிரமமாய் அமைவதைக் காணலாம். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது சித்தாந்தக் கோட்பாடு. ஆராய்ந்து அறிதலுக்கு முன்னிடம் கொடுத்தனர் நம் முன்னோர்கள். "ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்" என்றோதினார் வள்ளுவனார். ஓர்த்து என்பதற்கு ஆராய்ந்து என்பது பொருள்.

இவ்வாறு சைவ சித்தாந்தம் கண்டறிந்த பொருள்கள் மூன்று. அறிவிக்காமலே அறியும் பொருள் ஒன்று; அறிவித்தால் அறியும் பொருள்; அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள் ஒன்று; அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் ஒன்று. இந்த மூன்று பொருள்களும் கடவுள், உயிர், உலகம் என்று அமைகின்றன. சித்தாந்த மரபில் இவை பதி, பசு, பாசம் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் இலக்கணத்தை விவரிக்க வியாபகம், வியாப்பியம், வியாப்தி என்ற மூன்று பதங்கள் கையாளப்படுகின்றன. ஒரு நீர் குடிகுவளையை எடுத்துக் கொள்வோம். இதனுள் எங்கும் பரவியிருக்கும் ஆகாயம், வியாபகத்துக்கு உதாரணம். குவளையில் நிறைந்திருக்கும் தேநீர், வியாப்பியம். தேநீரிற் கலந்துள்ள சீனி, பால், சாயம் மூன்றும் வியாப்தி. பாத்திரத்தினுள் ஆகாயம் போல உள்ளது கடவுள். பால், சீனி, சாயம் ஆகிய மூன்றும் தன்னுள்ளே அடங்கியிருப்பதற்கு இடம் கொடுத்து, இவற்றினுள்ளே விரவியும் இருக்கிறது இவ் ஆகாயம். இடமாகிய வியாபகத்துடன் ஒன்று கூடி நிறைந்து நிற்கும் தேநீர், உயிருக்கு உவமையாகின்றது. உயிராகிய வியாப்பியத்துள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் வியாப்தியாயுள்ளன.

விஞ்ஞான ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் அமைந்துள்ளது சைவ சித்தாந்தச் செந்நெறி. Law of the Conservation of Energy என்ற ஒரு அடிப்படை விதி விஞ்ஞானத்தில் உள்ளது. இதனைச் சித்தாந்தம் சொல்லும் முறை, "**உள்ளது போகாது, இல்லது வாராது**" என்பதேயாகும். இந்த விதியின் அடிப்படையிலேயே, கடவுள், உயிர், உலகம் மூன்றையும் உள்பொருளாகச் சித்தாந்தம் கைக் கொண்டுள்ளது. இங்கு, உலகம் என்பதனை உள்பொருளாகக் கொள்ளும் போது ஒரு மலைப்பு ஏற்படலாம். இவ்விடத்தில் நாம் உலகம் என்று கூறுவது, வெளித்தோற்றமாய் அமைந்துள்ள புறஉலகத்தையன்று. சைவ சித்தாந்தக் கொள்கையின்படி, இவ்வுலகத் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாயுள்ளது "மாயை" என்று அழைக்கப்படும் நுண்ணாற்றல் வஸ்துவேயாகும். இது அழியாத உள்பொருள்.

இந்நெறியை விளக்கும் சாத்திர நூல்கள் பதினான்கு. இவை மெய்கண்ட சாத்திரங்கள் என அழைக்கப்படும். இவற்றுள் சிறந்தது, சிவஞானபோதம். இதற்கு வழி நூலாகவும், சார்பு நூலாகவும் முறையே சிவஞானசித்தியாரும், சிவப்பிரகாசமும் அமைந்துள்ளன. பதினான்கு சாத்திரங்களுள்ளும் காலத்தால் முந்தியவை, திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாருமாகும். இந்நூல்கள் யாவும் 12ம், 13ம் நூற்றாண்டுகளில் எழுந்தவை. ஆனாலும் சைவ சித்தாந்த நெறியோ மிகமிகத் தொன்மையான காலத்திலேயே நிலவிவந்துள்ளது. திருமூலர் காலத்திலேயே நிலவியநெறி இது. எனவே, மெய்கண்ட சாத்திரங்களே சைவ சித்தாந்தத்திற்கு ஆரம்பம் என்று சொல்லின், அது பிழையாகும். மெய்கண்ட நூல்கள் பதினான்கும், எவ்வளவோ காலத்திற்கு முன்பதாக நிலவி வந்துள்ள கோட்பாடுகளை ஒரு நெறிப்படுத்தி நூல்வடிவு கொடுத்தனவே எனலாம்.

மெய்கண்ட நூல்கள் கூறும் பொருட்சுருக்கத்தைப் பார்ப்போம். உலகத்துக்கு முழுமுதலாகிய கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரே உடையான். உயிர்கள் அவரது உடைமைகள். உயிரை அநாதியே ஆணவ மலம் என்னும் அறியாமை இருள் பற்றி நிற்கின்றது. இந்த அறியாமை இருளைப் போக்கிச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வை அருளும் நோக்குடன், உடம்பும் உடற்கருவிகளும், உலகமும், உலகத்துப் போகப் பொருள்களும் இறைவனால் அருளப் பெறுகின்றன. இவற்றைச் சாதனமாகக்

கொண்டு, தனது முயற்சியால் உய்தி பெற வேண்டியது உயிரின் பொறுப்பு. உய்தற்குரியது, உயிர். உண்மைச் சார்பு எது என்பதனை உணர்ந்து, பொய்ச்சார்பு கெட ஒழுகுதல் வேண்டும். பொய்ச் சார்பு கெடுதற்கு உதவும் ஒழுக்க நெறிகள் நான்கு உள்ளன. உடலாற் பணி செய்யும் சரியை நெறி. உடலும் உயிரும் சேர்ந்து இயற்றும் கிரியை நெறி. உள்நோக்குடைய யோக நெறி. இவற்றுக்கு அப்பாற்பட்ட ஞான நெறி.

கண் காண்கின்றது. வாய் பேசுகின்றது. காதுகேட்கின்றது. இவை தாமாகவே தம் தொழிலைச் செய்கின்றனவா அல்லது பிற உதவியோடு செயற்படுகின்றனவா?. உயிர் பின்னணியில் நின்று இயக்காவிட்டால் கண்காணாது. வாய்பேசாது. காது கேட்காது. அதுபோலவே, உயிர்க்குயிராகிய கடவுளின் சகாயம் இல்லாது போனால், உயிர் செயற்படாது.

*"விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு*
*அளந்தறிந்து அறியா; ஆங்கவை போலத்*
*தாம் தம் உணர்வின் தமியருள்*
*காந்தம் கண்ட பசாசத்தவையே"* - *சிவஞானபோதம்*

தமியருளினாலேயே நாம் செயற்படுகின்றோம் என உணர்தலே சமய நெறியின் முதற்படி. பூமியிலே நடந்து வரும் ஒருவரைப் பார்த்து, "நீர் யாருடைய உதவியுடன் நடந்து வருகின்றீர்" என்று கேட்டால், அவர் கோபத்துடன், "நானாகத்தானே நடந்து வருகிறேன்" என்பார். ஆரச் சோரப் பார்த்தால் உண்மை புலனாகும். பூமியின் திண்மையின்றேல் அவர் நடந்து வர முடிந்திருக்குமா? திண்மை தரும் பூமியை, அண்ட வெளியில் தாங்கி நிற்கும் திருவருட் சகாயம் இன்றேல், நடந்து வருபவருக்கு என்னாகும்?

*"தரையை உணராது தாமே திரிவார்*
*புரையை உணரார் புவி"* - *திருவருட்பயன்*

"புரை" என்பதற்குத் திருவருள், அல்லது குற்றம் என இருபொருள்கள் உள. உண்மையான தன்மையை உணராது தாமே உணர்பவராகக் கருதுகின்றவர், திருவருட் சகாயத்தை உணராத உலக மக்கள் என்பது ஒருபொருள். அல்லது, தமது அறிவின் குறைபாட்டை உணராதவர் என்பது இன்னொரு பொருள்.

இவ்வாறு, பூமியின் தன்மையையும், வானவெளியின் தன்மையையும், திருவருள் தன்மையையும் அறிந்து கொள்ளாதவர் தமக்குத் தாமே கேடு செய்கின்றவராவர்.

*"மலை கெடுத்தோர், மண் கெடுத்தோர், வான் கெடுத்தோர்,*
*ஞானத்தலை கெடுத்தோர், தற்கேடர் தாம்"* - *திருவருட்பயன்*

சைவ சித்தாந்தச் செந்நெறியை விளக்கும் நூல்களுள் மெய்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதம் தலையானது என முன்னர்க் குறிப்பிட்டோம். மொத்தம் நாற்பது அடிகளை மாத்திரமே உள்ளடக்கிய பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டுள்ள மிகச் சிறிய நூல் இது. எனினும் சைவ சித்தாந்தப் பிழிவு முழுமையும் இதனுள் அடங்கும். இதன் சூத்திரம் ஒவ்வொன்றும் யாது கூறுகின்றது என்பதனைப் பார்ப்போம்.

சூத்திரம் 1 - பதியாகிய கடவுளின் உண்மையைக் காண்பிக்கிறது.
சூத்திரம் 2 - பாசமாகிய ஆணவ அறியாமை இருளின் உண்மையைக் காண்பிக்கிறது.

சூத்திரம் 3 - பசுவாகிய உயிரின் உண்மையைக் காண்பிக்கிறது.

சூத்திரம் 4 - பசுவின் இலக்கணம் கூறுகின்றது.

சூத்திரம் 5 - பாசத்தின் இலக்கணம் கூறுகின்றது.

சூத்திரம் 6 - பதியின் இலக்கணம் கூறுகின்றது.

சூத்திரம் 7 - பதியைஅடையும் இன்றியமையாமையைக் கூறுகின்றது.

சூத்திரம் 8 - பக்குவ ஆன்மாவுக்குச் சிவமே குருவாக முன்வந்து அருளுவது கூறப்படுகின்றது.

சூத்திரம் 9 - ஆன்மா பக்குவம் அடையும் பரிசு கூறப்படுகின்றது.

சூத்திரம் 10 - பாச நீக்கத்தின் பயன் கூறப்படுகின்றது.

சூத்திரம் 11 - சீவன் முத்தராம் சிறப்புக் கூறப்படுகின்றது.

சூத்திரம் 12 - சீவன் முத்தர் நிலையினின்றும் பிறழாது நிற்றற்குரிய உபாயம் கூறப்படுகின்றது.

இந்தத் தலைசிறந்த நூலின் முதலாவது சூத்திரத்தைச் சிறிது பார்ப்போம்.

*"அவை அவள் அது எனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே; ஒடுங்கி*
*மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்"*

அவனென்றும், அவளென்றும், அது என்றும் சுட்டிக் கூறப்படும் தொகுதியாகிய உலகம், தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையினால் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருள்களேயாம். இப்பிரபஞ்சத் தொகுதி, ஆணவமலம் காரணமாக முன்னர் தோன்றி நின்ற முறைப்படியே ஒடுங்கிப் போக, அவ்வாறு ஒடுங்கிய இடமாகிய கடவுள் இடத்தினின்றும், மீண்டும் தோன்றுவதாகும். இங்ஙனமாக, அந்தத்தைச் செய்யும் கடவுளே, முதற்கடவுள் என்று கூறுவர் அறிவுடையோர்.

உலகப் பொருள்கள் இருவகையான. ஒன்று அறிவுடைச் சித்துப் பொருள். மற்றது அறிவற்ற சடப்பொருள். சித்துப் பொருள் தன்வயத்ததாக மாத்திரமே இயங்காது. அது எப்போதும் சடப்பொருளுடன் சேர்ந்து தான் இயங்க வல்லது. உதாரணமாக உயிர் தன் மட்டிலே தானாகவே தனித்து இயங்காது. சடமாகிய உடலுடன் கூடியே இயங்கும். இச்சடமாகிய உடல் தானாகவே உயிருடன் வந்து சேராது. இதனை ஒன்று சேர்ப்பதற்கு அறிவுடைய பொருள் ஒன்று வேண்டப்படும்.

சடப்பொருள் இருப்பதால் மாத்திரமே ஆக்குவோன் வேண்டும் என்றதில்லை. ஆனால் சடப் பொருளில் மாற்றம் ஏற்படுமாயின் அதனை அவ்வாறு மாற்றம் செய்யும் ஒருவர் வேண்டப்படும். சடம் தன்னைத் தானாகவே மாற்றிக்கொள்ளும் ஆற்றல் உடையதன்று.

உதாரணமாக, மண் தானாகவே குடமாக மாற முடியாது. குயவன் ஒருவன் வேண்டும். மேலும், ஒரு சக்கரம் வேண்டும். இங்கு மண் முதற்காரணம், சக்கரம் துணைக்காரணம், குயவன் நிமித்த காரணம்.

அவன், அவள், அது என்பன உள்பொருளாகக் கொள்ளப்பட்டன. ஏனெனில், இல் பொருளிலிருந்து உள்பொருள் ஆகாது. இது அடிப்படை விஞ்ஞான விதியை ஆதாரமாகக் கொண்டது. "**உள்ளது போகாது இல்லது வாராது**".

எமது கண்ணுக்குப் புலப்படும் இவ்வுலகமானது, சைவ சித்தாந்தத்தில் "மாயை" என்று அழைக்கப்படும் நுண்ணாற்றல் வஸ்துவினின்று தோற்றுவிக்கப்படுகிறது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதச் சேர்க்கையாலும் உலகம் பரிணமிக்கின்றது. இவை யாவும் சடப்

பொருள்கள். இவற்றைச் செயற்படுத்தும் அறிவுடைப் பொருள் ஒன்று இருத்தல் வேண்டும். இதுவே "பதி" என்று போற்றப்படுகிறது. சூத்திரத்தில் "தோன்றிய" என்று செய்வினையாகச் சொல்லப்படவில்லை. "தோற்றிய திதி" என்று செயற்பாட்டு வினையாற் சொல்லப்பட்டுள்ளது. இதன் தாற்பரியம். உலகிற் காணும் அவன், அவள், அது எனச் சுட்டி உணரப்படும் முப்பொருள்களும் ஒருவனாற் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள்களேயாம். எனவே உலக தோற்றத்தின் பின்னணியில் அறிவுடைய ஒருவர் உளர் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு தர்க்க ரீதியாக கடவுள் உண்மை நிரூபிக்கப்படுகிறது. ஒடுக்க நிலையில் காரண வடிவான நுண்ணிய நிலையிலிருந்து காரிய வடிவாகிய தூல வடிவைத் தருபவர் இவரேயாம்.

சித்தாந்தச் செந்நெறியை மேற்கோள் வேண்டி முறைமையையும் பயனையும் சிவஞான சித்தியார் விளக்குகிறது.

*"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்*
*தாழ்வெனும் தன்மையோடும் சைவமாஞ் சமயஞ் சாரும்*
*ஊழ் பெறல் அரிது; சால உயர் சிவ ஞானத்தாலே*
*போழிள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே"*

வாழ்வெனும் மையல் - குலம், கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் செருக்கு. வறுமையென்றது அறிவின்மையாகிய வறுமை; அறிவின்மை சிறுமையைத் தரும்; சைவ சமயம் சார்ந்தால், வறுமை நீங்கும்; சிறுமை பெருமையாக மாறும். பெருவாழ்வு கிட்டும்.

நன்றி : உலக சைவப் பேரவை மாநாடு - சிறப்புமலர், 1995, கொழும்பு.

## 20. மாணவருக்குச் சைவ சித்தாந்தம்

- அறிஞர் தி.கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்.

**தோற்றம்:**

உடலில் உயிர் ஒன்று உண்டு என்ற நம்பிக்கை நீண்ட காலமாக மனிதனிடம் உண்டு. உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், பிரிந்த உயிருக்கு, வேறு வாழ்க்கை உண்டு. ஆதலால் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை, உடலை அடக்கம் செய்யும் குழியில் உடன் இட்டுக் காக்கக் கல்லறை நன்று என்று முடிவு கட்டினான். பல நாடுகளில் பல வேறு காலத்தில் அமைந்த கல்லறைகளைத் தோண்டி அவைகளில் உள்ள புதை பொருளை ஆய்ந்த அறிஞர்கள் இந்த உண்மைகளைச் சொன்னார்கள். பிரிந்த உயிருக்குப்பின் வாழ்க்கை ஒன்றாபலவா, மானிடச்சட்டையிலா, வேறு உடலிலா, பின்வாழ்க்கைகட்கு எப்போதாவது முடிவு உண்டா?

இல்லையா? முடிவு இருந்தால் அது யாது? பின் வாழ்க்கைகளுக்கும் அவற்றின் முடிவுக்கும் காரணங்கள் எவை? இன்ன பிற வினாக்கள், ஒன்றின் மேல் ஒன்றாக எழுகின்றன. இதற்குச் சமய நூல்கள் கூறும் விடைகளில் பல. அடிப்படையான உண்மைகளில் ஒற்றுமையும், செயல் முறை பிறவற்றில் எண்ணற்ற வேறுபாடுகளும் உண்டு. சைவம் உலக சமயங்களில் ஒன்று. அதற்குப் பல உள் கிளைகள் உண்டு. அவற்றுள் ஒன்று சைவ சித்தாந்தம். சித்தாந்தம் என்றால் முடிபு. எச்சமயத்தினரும் பிற சமயத்தினர் முடிவுகளை ஆய்ந்து, மறுத்து, தம் கொள்கைகளை நிலைநாட்டுவது பழைய வழக்கம். இந்த வழியில் ஆதிசங்கரர், உடையவர், மத்துவர் முதலியவர்கள் தங்கள் பேருரை (பாஷியம்) களை எழுதினார்கள். அவ்வழியே சைவசமயிகள் தம் கொள்கைகளையும், வேறு பல சமயத்தவர் கொள்கைகளையும் ஆராய்ந்து அவற்றுள் சைவத்திற்கு ஏற்ற பகுதிகளையும் ஏற்காத பகுதிகளையும் விளக்கினார்கள். அதுவே "பரபட்சம் (பிறர்பக்கம்)" என்பது. சைவத்தின் சிறப்பு உண்மைகளைத் தெளிவாகக் கூறி, மற்ற சமயத்தவர் சொல்லும் தடைகளுக்கு விடை தரும் பகுதி "சுபட்சம் (தன்பக்கம்)" என்பர். எல்லாச் சமயங்களையும் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்று நான்கு பெரும் பிரிவுகளாக்கி, இவைகளை ஏணிப்படிகளாக முறையாக வைத்து, இவற்றையும் கடந்த உச்ச நிலையில் உள்ளது சைவ சித்தாந்தம் (முடிந்த முடிபு). இந்தப் படி முறையை இறைவனே அமைத்து, இதில் பல படிகளில் உள்ளவர்களுக்கும் அவரே அருள் செய்து மேல் படிகளுக்குச் செல்லத் துணை செய்து முடிவில் சித்தாந்தச் செந்நெறியில் அவர்களுக்குப் பேரின்பம் தருகிறார் என்பது சைவ சித்தாந்தக் கூற்று. நான்காக வகுக்கப்பட்ட பெரும் பிரிவுகளில் ஒவ்வொன்றிற்கும் 6 கிளைகளாக மொத்தம் 24 உள்கிளைகள் உண்டு. படி முறையில் உள்ள முதல் 6 உள் பிரிவுகள் 'புறப்புறச் சமயங்கள்' என்பன. இவற்றைப் பொதுவாக "நாத்திக சமயங்கள்" என்பர். இக்காலத்தில் கடவுள் இருப்பை ஒப்புக் கொள்ளாமைக்கே 'நாத்திகம்' என்று வழங்கி வருகிறோம். சாத்திர மரபில் வேதங்களை ஆதாரமாக ஒப்புக் கொள்ளாமைக்கே நாத்திகம் என்று பெயர் இருந்து வந்தது. (1) உலகாயதம், (2) மாத்தியமிகம், (3) யோகசாரம், (4) சௌத்திராந்திகம், (5) வைபாஷிகம், (6) ஆருகதம் என்ற 6-ம் புறப்புறச் சமயங்கள். இவற்றில் 2 முதுல் 5 வரையுள்ளவை பொதுவாகப் பௌத்தம் என்ற கூறப்படும் சமயத்தின் உள்பிரிவுகள். 6-வது சமணம் என்பது. இவை வேதம், சிவாகமம் இரண்டையும் ஆதார நூல்களாக ஏற்க உடன் படாதவைகள். படி முறையில் இவைகளுக்கு மேல் 7 முதல் 12 வரையுள்ளவை 'புறச் சமயங்கள்' என்பன. இவை (1) நியாயம் (2) வைசேஷிகம் (3) சாங்கியம் (4) யோகம் (5) பூர்வமீமாம்சம் (6) உத்தரமீமாம்சம் (வேதாந்தம்) என்பன. இவை சிவாகமங்களையும் வேதங்களில் சில பகுதிகளையும் ஏற்பதில்லை. ஆதலின் இவை புறச் சமயங்கள் எனப்பட்டன. இவையே ஆறு (ஷட்) தரிசனங்கள் (ஆறு சமயங்கள்) எனப்படுவது. இந்த 6-க்கும் முறையே மூல நூல்களை எழுதியவர்கள் (1) கௌதமர், (2) கணாதேவர், (3) கபிலர், (4) பதஞ்சலி, (5) ஜைமினி, (6) வாதராயணர் ஆவர். வேதாந்தம் என்று பொதுவாக அமைக்கப் பெறும் உத்தரமீமாம்சைக்கு (1) மாயாவாதம், (2) கிரீடாப் பிரமவாதம், (3) ஏகான்ம வாதம், (4) பேதா பேதவாதம், (5) துவைதம், (6) விசிஷ்டாத்துவைதம், (7) சுத்தாத்துவைதம் என்ற பல கிளைகளும் உரைகளும் உண்டு.

அடுத்து 13 முதல் 18 வரை படிமுறையில் உள்ளவை அகப்புறச் சமயங்கள். இவை வேத சிவாகமங்களை ஆதார நூல்களாக ஏற்பதோடு, இவைகளுக்கு மாறுபட்ட தாழ்ந்த ஒழுக்கங்களையும் உடன்பாடாக ஏற்பவை. அவை மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாதம் (லிங்காயதம்) ஆகும்.

அடுத்து, வேத சிவாகமங்கள் முப்பொருள் உண்மையை ஒப்புக்கொண்டு, முப்பொருள்களுக்கு வகுக்கப்பட்ட சிறப்பு, பொது இயல்புகள் பற்றிய கருத்துக்களில் வேறுபாடுகளைக் கூறும் பாஷா, பேத, சிவசம, சங்கிராந்த, ஈஸ்வர அவிகார, நிமித்த காரண பரிணாம (சிவாத்துவிதம்) வாதங்கள் அகச் சமய வகுப்பில் (19-24) அடங்கும். இந்த நான்கு பெரும் பிரிவில் அடங்கிய 24 சமயங்களிலும் பல உள் பிரிவுகள் உண்டு. இவை அனைத்தையும் கடந்து மேல் நிலையில் உள்ளதே சைவ சித்தாந்தம். பல உபநிடதத்தொடர் மொழிகளுக்கும், பிரம்ம சூத்திரத்திற்கும் பேருரை (பாஷிய)க்காரர்கள் பலபடியாக உரைகண்டனர். வேதாந்தம் (அத்துவைதம்) பற்றிப்பல கருத்துக்கள் உண்டு. அ+துவைதம் என அத்வைதம் என்ற வடசொல் பிரிகிறது. அதில் அ- என்பதற்கு வடமொழி இலக்கணத்தில் ஆறு வகையான பொருள்கள் உண்டு. (பாணினி வியாகரணம் 2ஆம் பிரிவு 'நஞ்' என்று தொடங்கும் சூத்திர விதி பார்க்க) பதஞ்சலி (பாணினி சூத்திரப் பேருரைகாரர்) ஆறு பொருள்களைக் கூறினார். அவை தமிழில் வேற்றுமை, (ததந்யத்வம்) குறை, (ததல்பதா) பொறை இன்மை, (அப்ராஸஸ்த்யம்) மறுதலை, (விரோதம்) இன்மை, (அபாவம்) அன்மை, (தத் சாத்ருச்யம்) என்பன. ஆதிசங்கரர், உடையவர் (இராமாநுஜர்) இருவரும் "இன்மை"ப் பொருள் கொண்டனர். சங்கரர் உயிர் (ஆன்மா) ஒன்றே உள்பொருள், அதுவே கடவுள் (பிரம்மம்) என்பது, உயிர்கள் யாவும் கடவுளின் விவர்த்தன (தன் இயல்பு விடாமல் வேறு இயல்பு காண்பித்தல்) மாய இப்பிறவியில் வெள்ளிபோல அறியாமை (அவிச்சை)யால் காணப்படும் பொய்த் தோற்றங்களே என்ற ஏகான்ம வாதத்தை நாட்டினார். உடையவர், கடவுள் ஒன்றே உள்பொருள், அறிவு உலகமாகிய உயிர் இனமும் அறிவு இல்லா உலகமாகிய உலகப் பொருள்களும் கடவுளின் உடல்களாகிய பிரிக்க முடியாத சிறப்பு (விசேடணம்) களாகும். இச்சிறப்போடு கூடிய அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் என்றார். இக்கொள்கை சாரீரகமீமாம்சம் என்றும் சொல்லப்படும். கடவுள் உயிர் (சரீரி) ஆகவும், அறிவு உள்ள, அறிவு அற்ற உலகங்கள் உடல்களாகவும் கொள்ளப்படுவதால் இதற்கு இப்பெயர் பொருந்தும். 'அன்மை'ப் பொருளைக் கொள்வது சைவ சித்தாந்தம். கடவுளும் உயிர்க்கூட்ட (வர்க்கம்)மும் இரண்டும் அல்ல. ஒன்றிற்கு ஒன்று அது அதுவாய் ஒன்றிய (தாதான்மிய) தொடர்பு உடையவை. கடவுள் நிறைவு (வியாபகம்), உயிர்கள் அடங்கிய நிறைவு (வியாப்பியம்), உலகம், பாசம், முதலியன ஒப்பு நிறைவு (வியாப்தி) என்ற வகையில் தொடர்பு உடையன என்பது சித்தாந்த சைவம். இதையே கடவுள், "உலகெலாம் ஆகி, வேறாய் உடனுமாய்" இருக்கிறார் என்று சொல்வது உண்டு. இதற்கு அரண் செய்வன சிவாகமத் தொடர் மொழிகளும் தேவார திருவாசகங்களும் ஆகும். அது நீ ஆகின்றாய் (ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம-ரிக்), அதுவானேன் (அஹம் ப்ரஹ்மாஸ்மி-யசுர்), அது இது (தத்வமசி-சாமம்), அது நான் (அயமாத்மா ப்ரஹ்ம-அதர்வணம்) இவற்றின் உண்மைப் பொருள் சைவ சித்தாந்தம் கூறும் அத்துவைதமே என்பதைச் சிவாகமங்கள், தேவாரம், திருவாசகம் தெளிவாக்குகின்றன.

ஒரு சாத்திர நூலை ஆசிரியர், மாணவர் முறையில் ஒழுங்காக ஓதி உணரும் தகுதியுடையவருக்குப் பரிபாஷையில் அந்த நூலுக்கு அவர் 'அதிகாரி' என்பது மரபு. ஒரே பொருளை அதிகாரி வேறுபாட்டிற்கு ஏற்ப நுட்பமாகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லலாம். இந்த இருவகை நூல்களையும் மேற்போக்காக ஒப்பிட்டுப் பார்த்தால், பலமாறுபாடுகளும் முரண்பாடுகளும் இருப்பன போலத் தோன்றும். உபநிடதங்கள், சிவாகமங்கள் முதலியன. இவ்வாறு பல நிலைகளிலுள்ள 'அதிகாரிகள்' பொருட்டுச் சொல்லப் பட்டவை. அதர்வசிகை, சுவேதாச்சுவதரம், கைவல்லியம் முதலியன மேலானவர்களுக்குச் சொல்லப்பட்டவை. இவைகளைக் கொண்டே சாந்தோக்கியம் முதலியவற்றிற்கு உண்மைப் பொருள் காணவேண்டும். பௌஷ்கரம், மதங்கம்,

மிருகேந்திரம் முதலியவற்றை முனிவர் முதலியோருக்கும், சர்வஞானோத்திரம் கணபதி, கந்தர், உமை முதலியோர்க்கும் சொல்லப்பட்டதும் என்பது மரபு. முன்னைய ஆகமங்களின் கருத்தை, பின்னதின் துணை கொண்டே தெளிய வேண்டும். மக்கள் உய்யவேண்டும் என்பதை மனத்துட் கொண்டு ஆகம முரண்பாடுகளைத் தெளிவாக்கி, உண்மையான உட்கருத்தை அருள வேண்டு மென்று திருநந்தி தேவர், சீகண்ட ருத்திரரிடம் வேண்ட அவரும் அருளினார். நந்தி தேவர், சனத்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதிமுனிவர் என்ற முறைப்படி காதின்வழி காதாக உபதேச முறை வந்தது. பரஞ்சோதியார் வான்வழி சென்றபோது திருவெண்ணெய்நல்லூரில் வெண்காடரான இளங்குழந்தையைக் கண்டார். இக்குழந்தையின் மெய்யுணர்வின் நிலையை ஞானக்கண்ணால் அறிந்து, தம் ஆசிரியர் பெயரின் நேர் தமிழ்ப் பெயராம் மெய்கண்டார் என்பதைத் தீட்சைப் பெயராகச் சூட்டித் தாம் பெற்ற உபதேசப் பொருளை உபதேசித்தார். மெய்கண்டார் தாம் பெற்ற உபதேசத்தைச் சிவஞானபோத நூலாகச் செய்து, தம் தலைமாணாக்கரான அருள் நந்தி சிவனுக்கு அருளினார். அவர் சிவஞான சித்தியார் நூலை, தன் (சு)பக்கம், பிறர்(பர)பக்கம் என்ற இரு பெரியபிரிவுகளாகவகுத்து முடித்தார். சித்தியாரைச் சைவ சித்தாந்திகள் பலபடியாகப் புகழ்வர். 'சிவத்தின் மேல் தெய்வமில்லை, சிவஞான சித்திக்கு மேல் ஒரு சாத்திரம் இல்லை' என்பதும், 'பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும்' என்பதும், புகழ்ப் பகுதியின் ஒரு கூறு ஆகும். சுபக்கம், 8-ஆம் நூற்பா (சூத்திரம்) வின் 30-ஆம் விருத்தப் பாடலின் முற்பாதி அப்படிப் பாராட்டப்படும் பகுதி ஆகும். அருள் நந்திசிவம் இருபா இருபஃது நூலையும் செய்தார். அவர் மறைஞான சம்பந்தருக்கு அருளினார். இவர் நூல் செய்யாது, வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டி உமாபதி சிவத்திற்கு அருளினார். அவர், திருஅருட்பயன், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம் முதலிய விரிவான நூல்களைச் செய்து விளக்கினார். இந்த நூல்களோடு திரு உந்தியார், திருக்களிற்றுப் படியார் முதலிய சிலவற்றைச் சேர்த்து சைவ சித்தாந்த சாத்திரம் 14 என்றும், தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள் 12 என்றும், இவைகளுக்கு மாறுபடாத வேதசிவாகமப் பகுதிகளும் சேர்ந்த தொகுதியே சைவ சித்தாந்தத்தின் ஆதார அடிப்படை (பிரமாண) நூல்கள் என்பதும் சைவ சித்தாந்திகள் கொள்கை. இதற்கு ஏற்றபடி 'வேதாகமோக்த சுத்தாத்வைத சைவசித்தாந்தம்' என்பதே சைவ சித்தாந்தத்தின் முழுப் பெயர் ஆகும். திருநந்திதேவர், சனத் குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதியார் நால்வரும் 'அகச்சந்தானகுரவர்' ஆவர். மெய்கண்டார், அருள் நந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் வரையுள்ள நால்வர் புறச்சந்தான குரவர் ஆவர். இவர்கள் அனைவரும் சேர்த்து ஆசிரியர் மாணவ (குருசிஷ்ய) பரம்பரையைத் 'திருக்கைலாய பரம்பரை' என்று கூறுவது மரபு. உமாபதி சிவனார் சீடர்களின் மூலமாகவே, திருஆவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனத்தை ஏற்படுத்தியவர்கள் உபதேசம் பெற்றமையால், இந்த ஆதீனங்களையும் திருக்கைலாய பரம்பரை என்பர்.

மூலமாகிய 12 நூற்பா (சூத்திரம்) க்களையும் சீகண்ட ருத்திரரே வடமொழியில் திருநந்தி தேவருக்கு உபதேசிக்க அவை அருளிவருகிற முறைப்படி மெய்கண்டார் வரையில் வந்தன; அவற்றைத்தமிழில் மொழிபெயர்த்து, வார்த்திகப் பொழிப்புரையும் செய்யுமாறு பரஞ்சோதி இட்ட கட்டளையின்படியே மெய்கண்டார் தமிழ்ச் சூத்திரங்களையும் வார்த்திகத்தையும் அருளினார் என்பர் சிலர். சூத்திரங்கள், வார்த்திகங்கள் மட்டுமன்றி எடுத்துக்காட்டான உதாரண வெண்பாக்களையும் மெய்கண்டாரே செய்தார் என்பர் வேறு சிலர். சாத்திரங்களில் ஒன்றான 'உண்மை நெறி விளக்கம்' இயற்றியவர் உமாபதி சிவம் அல்லர்; சீர்காழி தத்துவநாதர்தான் என்றும் சொல்லுவர் சிலர். சீர்காழித் தத்துவ நாதருடைய குருவான சிற்றம்பல நாடிகள் அருளிய 'துகளறு போதம்' 14

சாத்திர நூல்களில் ஒன்று எனவும் சிலர் கொள்வர். மெய்கண்டார் கருத்துக்கு மாறுபட்ட சிலவற்றை அருள்நந்திசிவம் நுழைத்தார் என்றும், உமாபதிசிவம், இந்த இருவருக்கும் ஒவ்வாதன சிலவற்றைக் கூறுகிறார் என்றும் சிலர் சொல்வது உண்டு. இவற்றை ஒட்டிப் பல கட்டளை நூல்களும், வேறு நூல்களும் வளர்ந்தன. சிவபூசை முறைகளிலும் மாறுபாடுகள் தோன்றின. இவற்றுக்கு மாறுபாடாகவும், தழுவலாகவும், அரணாகவும், இன்றைய மெய்ப்பொருளியல் கற்கும் மாணவர்களின் விஞ்ஞான முறை ஒட்டிய வேறு சில முடிவுகளும் உண்டு. சைவ சித்தாந்தம் தமிழர் பண்பாட்டில் விளைந்த கலப்பற்ற தூய தமிழ் மெய்ப்பொருள். அது தமிழ் மொழிக்கே உரியது; தமிழரின் ஒப்பற்ற தலைமணி என்பார் தொகையும் வளர்ந்து வருகிறது.

உலகப் பொருள்கள் யாவும் 3 பிரிவுகளில் அடங்கும். (1) அறிவிக்காமல் அறிகின்ற பொருள், (2) அறிவித்தால் அறிந்து, அறிவிக்காவிடில் அறிய முடியாத பொருள் (3) அறிவித்தாலும் அறிய முடியாத பொருள். இம் முப்பொருள் பிரிவினையையும் முப்பொருள் உண்மையையும் சித்தாந்த சைவம் அடிப்படையான உண்மையாகக் கொண்டுள்ளது. இது பரிபாஷையில் முறையே பதி, (கடவுள்) பசு, (உயிர்) பாசம் (தளை) என்று கூறப்படும். இம் மூன்றும் என்றும் இருப்பவை. இந்த உண்மை இயல்பாக அமைவது. இம்மூன்றில் வந்த ஒன்றும் வேறு ஒன்றாக எப்போதும் மாறமுடியாது. ஆகையால் இவை மூன்றும் தொன்மையாகவே நிலை (நித்தியம்) பேறுடையன. இப்படித் தொன்மையாக, நித்தியமாக, வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தனவாக இருந்த போதிலும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளனவாக இருக்கின்றன. இத்தொடர்பு நிறைவு (வியாபகம்), அடங்கிய நிறைவு (வியாப்பியம்), ஒப்பு நிறைவு (வியாப்தி) என்ற வகையில் தொடர்புடையன. கடவுள் நிறைவில் உயிர்களும் பாச இனமாகிய உலகங்களும் அடங்கி இருப்பதோடு, கடவுளின் நிறைவு இப்பொருள்கள் எல்லாவற்றிலும் ஊடுருவி நீக்கமற நிறைந்திருக்கின்றது. உயிர் இனமாகிய அடங்கிய நிறைவில் (வியப்பியம்) ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் ஒப்பு நிறை (வியாப்தி)யாக இருக்கின்றன. மாயையின் பல பிரிவுகளுள் ஒன்றால் ஆகியது உலகம். எனவே கடவுள், உயிர், மலங்களின் தொடர்பு 'சாரீரகம்' என்றாவது 'விவர்த்தனம்' என்றாவது வேறு ஏதேனும் என்றாவது கூறப்படாமல் அடங்கிய ஒப்பு நிறைவு (வியாப்பிய வியாப்தி) என்று சொல்லப்படுவதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஞானத்தின் இன்மையே (அபாவமே) அஞ்ஞானம் என்பர் வேறு சமயத்தவர். அஞ்ஞானம் உள்பொருள் (Positive entity) அது ஞானம் இல்லாமை என்ற இன்மைப் பொருள் அன்று என்பது சைவ சித்தாந்தம். மாயைவிளக்கம் செய்யும் ஆற்றலுடைமை, தத்துவங்களின் பாகுபாடு, வகை தொகை, கடவுளின் பொது சிறப்பு இலக்கணங்கள், மல நீக்கம் பெறுதற்கு உரிய சாதன முறைகள், கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை, அதன் உட்கருத்து, வீடு (முத்தி) பேற்றின் இலக்கணம் இன்னபிறவற்றின் நுட்பமானவைகளில் சித்தாந்த சைவம் ஏனைய இந்து சமயத்தவர் கொள்கைகட்கு மாறுபட்டது. இதன் கொள்கைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை முப்பொருள் உண்மையும் அவற்றின் இலக்கணமும் ஆம்.

சித்தாந்த சைவத்தில் கடவுளுக்கு 2 நிலைகள் உள. ஒன்று தன் இயல்பாகிய சிறப்பு இயல்பு (சொரூப இலக்கணம்) என்ற நிலை. இந்த நிலையில் கடவுளுக்குப் பெயர், குணம், குறி இன்னபிற ஒன்றும் இல்லை. வடிவம் (உருவம், ரூபம்) அருவம் (வடிவுஅற்றது அரூபம்) அருவுருவம் (ரூபா ரூபம்) என்ற 3ம் இல்லை. வாக்கு, மனம், காயம் என்ற மூன்றாலும் அறியப்படாத அனாதிமுத்த சித்தராயிருக்கும் இந்தக்கடவுள் நிலை பரமசிவம் எனப்படும். பெயர் இல்லாத கடவுளுக்குப் பெயர் தருகிறோம். சிறப்பு இயல்பு நிலையில் உள்ள பரமசிவன் உயிர்களின் துன்பங்களைப்போக்கி உயிர்களுக்கு அருள் செய்வதற்காக இரக்கம் கொண்டு, தானாகவே பல படிகள் இறங்கி வந்து,

பல நிலைகளில் உள்ள கடவுளரை மேற்கொள்ள (அதிஷ்டித்து) வைத்து, அவர்கள் மூலமாக ஆணை செலுத்தி, ஐந்தொழில் (பஞ்சகிருத்யம்) செய்கின்றான். இந்த நிலை பொது இயல்பு (தடஸ்தலட்சணம்) எனப்படும். இதில் பல உட்பிரிவுகள் உள. ஒன்று இலயம், போகம், அதிகாரம் என்ற பிரிவு. இந்த நிலையில் உள்ளவர் சிவன், சதாசிவன், மகேசுவரன் எனப் படுபவர். சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன் என்ற 9 கடவுளர் நிலைகளும் மற்றொரு பிரிவு. ஒன்றிலும் தோய்வு இல்லாமல் சுயம்பிரகாசமாய் நிற்கும் தன் உண்மையில் சிவம் எனவும் உலகெலாம் ஆகி, வேறாய், உடனாய், உயிர்களின் வழி நிற்கும் நிலைசக்தி எனவும், நீங்காமை (தாதான்மியம்) யால் இரு திறப்பட்டுப் பின் ஐந்தொழில் (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல்) செய்யும் தன்மையில் பதி எனவும் ஒருவனே பெயர் பெறுகின்றான். உலகெலாம் ஆகி, வேறாய், உடனாயிருக்கும் நிலைகளைச் சித்தாந்த சைவம் திறமையாக விளக்கியுள்ளது. உடலுக்குள் உயிர் இருப்பது போல, உயிருக்குள் உயிராகக்கடவுளைக் கூறுவது அந்தர்யாமித்துவம் என்ற நிலை. 'கலப்பினால் ஒன்றாய் இருக்கும் நிலை' என்பது இதுவே. சூரியன் ஒளியும் கண்ணின் ஒளியும் கலந்து ஒரு பொருளைப் பார்த்த போதிலும், கண் ஒளி வேறாகவும் சூரிய ஒளி வேறாகவும் இருப்பது போல, இறைவன் பொருள் தன்மையால் வேறாயிருக்கும் நிலையும் புலப்படும். ஒன்றைப் பார்க்கும் போது கண் ஒளிக்கு உயிர் உணர்ச்சி உடனாய் இருப்பது போல, கடவுள் உயிர்க்கு உடனாய் இருக்கும் நிலை எத்தன்மையது என்பதையும் அறியலாம். தாதான்மியத் தொடர்புடைய சிவமும் சத்தியும் பிரிக்க முடியாது ஒப்பி இயைந்துள்ளன. இதைப்பல உவமைகள் நன்கு விளக்கும். சுவையைப் பழத்திலிருந்தும், இசையைப் பண்ணிலிருந்தும், ஒளியை மணியிலிருந்தும், வைரத்தை (காழ்ப்பு) மரத்திலிருந்தும் பிரிக்க முடியாதது போலவே சிவமும் சக்தியும் ஒன்றி இருக்கும். இதை உலக வழக்கை ஒட்டி நாயகன் நாயகி என்றும் கூறப்படும்.

'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'. 'பவன் பிரமசாரியாகும், பால் மொழி கன்னியாகும்' என சித்தியார் கூறுவது அது. சத்தி நிலையிலும், இச்சா, கிரியா, ஞானசக்திகள் என்ற பாகுபாடும், நவசக்தி முதலிய வேறுபலபிரிவுகளும் உள. விரிவுகளைச் சித்தியாரிலும் சிவஞானபாடியத்திலும் தெளிவாகக்காணலாம். ஒருவனே நவந்தரு பேதமாகவும் வேறு பல கடவுள் நிலையாளராகவும் வருதலிலும் ஒரு நுட்பம் உள்ளது. 'ஆகின்றான்' என்ற சொல்லே அவன் இவற்றின் வேறு என்பதை உணர்த்தும். இதைச் சங்கற்ப நிராகரணத்தில் நிமித்தகாரண பரிணாமவாதி மறுப்பில் (80,81 அடிகள்) 'ஆனால் என்பது அனைத்தும் அவ்வவைதான் ஆகாமையைச் சாற்றிடும் என்க' என விளக்கப்பட்டது. 'ஈறாய் முதல் ஒன்றாய்' என்ற சம்பந்தர் வீழிமிழலைப் பாட்டும், 'பெண்ணாகி ஆணாய்... விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி' என்ற மணிவாசகமும் காண்க. பல கருத்துக்களை உள் அடக்கிக், கூறும் அஷ்டமூர்த்தம் 'அஷ்ட குணங்கள்' என்ற தொகைச் சொற்கள் சில வழக்கத்தில் உள்ளன. நிலம், நீர், தீ, வளி, வான் (ஐந்து பூதங்கள்) சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய 8 இடங்கள், கடவுள் இருப்பிடங்கள் என்பது அட்டமூர்த்தம் ஆகும். கடவுளைப் பற்றிய பல கருத்துக்களை அவனது 8 குணங்களில் அடக்கி விடலாம். முக்குணங்களும் (சத்வ, ரஜஸ், தமஸ்) அவற்றின் சேர்க்கை வகைகளும் மக்கள்குணங்கள். கடவுள் இந்தக் குணங்களைக் கடந்தவன், அப்பாற் பட்டவன். குணாதீதன் என்ற அவன் பெயர் அதனைத் தெரிவிக்கும். ஆகமங்கள், திருமுறைகள், திருக்குறள், கடவுளுக்கு 8 குணங்களைக் கூறுகின்றன. அவை (1) அளவில் ஆற்றல் உடைமை (2) இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல் (3) இயற்கை உணர்வினன் ஆதல் (4) தன் வயத்தன் ஆதல் (5) முற்றும் உணர்தல் (6) பேர் அருள் உடைமை (7) தூய உடம்பினன் ஆதல் (8) வரம்பில் இன்பம் உடைமை என்பன. 3,7 வது,

குணங்களை முறையே 2லும், 6லும், அடக்கி கடவுள் குணங்கள் 6(ஷட் குணஸ்வரூபி) என்ற மரபும் உண்டு. 'எண்குணத்தான்' என்ற குறள் மொழிக்கு பரிமேல்அழகர் கூறுவது மேற்கூறிய 8 குணங்களே. இப்படி இறைவனுடைய பெருமை, அருள் முதலியவைகளை நாம் அறிந்து, அவனை வழிபடுவதற்காக அவனருள் பெற்ற அனுபவ ஞானிகள் நமக்கு அளித்தவை இவை ஆகும். இப்படி அறிந்து செய்யும் வணக்கத்தையும் வழிபாட்டையும் அவன் ஏற்று அருளுகிறான்.

உயிர்கள் நுகரும் துன்பங்களை ஒழித்து, பேரின்பம் தருவதற்கே கடவுள் ஐந்தொழில்களைச் செய்கின்றான். (1) ஆக்கல் (சிருஷ்டி) என்றால் கடவுள் உயிர்களைப் படைப்பதில்லை. உயிர் என்றும் உள்ள நிலையான பொருள் அல்லவா? உயிர்கட்கு-உடம்பு (தனு) வாழ்க்கைக்குத் தேவையான கருவி, கரணங்கள் (கரணம்) வாழ்க்கையை நடத்தும் இடங்கள் (புவனம்) நுகர்தற்கு உரிய பொருள்கள் (போகங்கள்) எனும் இவைகளைத்தான் கடவுள் படைக்கிறான். படைப்பு என்றால் இல்லாததை உண்டாக்குவதாக நினைக்கக் கூடாது, நுண்மை (சூக்ஷமம்) யாக அல்லது காரணமாக உள்ளதிலிருந்து, பருமை (ஸ்தூலம்) ஆக அல்லது காரியமாக வெளிப்படுவதே படைப்பு. இக்கொள்கை 'சத்காரியவாதம்' எனப்படுவது. 'இல்லாதது வாராது, உள்ளது போகாது' என்பது இந்த வாதத்தின் சுருக்கம்.

ஒரு செயலுக்கு 3 காரணங்கள் உண்டு. பானையைக் குயவன் மண்ணால், சக்கரம் - கோல் முதலியன கொண்டு செய்கிறான். இதில் மண் - முதற்காரணம். சக்கரம், கோல் முதலிய கருவிகள் - துணைக் காரணம். குயவன் - நிமித்த காரணம். கடவுள் படைப்பில் மாயை - முதற்காரணம், சக்தி - துணைக்காரணம், கடவுள் நிமித்தகாரணம். சிலமதங்களில் கடவுளை 3 அல்லது 2 காரணங்களாகச் சொல்வதுண்டு. கடவுள் முதற்காரணன் அல்லன் என்பது சித்தாந்த சைவத்தின் உறுதியான முடிவு. முதற்காரணமாகிய மாயையில் சுத்தமாயை, அசுத்தமாயை என்ற 2 பெரும் பிரிவுகளும் பல உட்பிரிவுகளும் உள்ளன. உடம்பு, உலகம் ஆகிய நுகர்ச்சிப் பொருள்கள் அசுத்த மாயையால் ஆகியவை. சித்தாந்த சைவத்தில் படைப்புக்கு முடிவு இல்லை. முடிவின்றி என்றும் எப்போதும் நடப்பது. பெரிய கால எல்லையாகிய பிரளயத்தில் எல்லா உலகங்களும் உயிர்களும் நுண் (சூட்சும) நிலையில் மறைந்திருக்கும். பிறகு மறு தோற்றமாக எல்லாம் தோன்றும். இப்படித் தோன்றுதலும், அழிதலும், என்றென்றும் நிகழும் (2) காத்தல் (திதி) தோன்றிய உலகங்களையும் உயிர்களையும் அவைகளுக்கு உரிய கால எல்லை வரையில் காப்பாற்றி, கன்ம நுகர்ச்சிக்குத்துணை செய்தல் (3) அழித்தல் (சம்ஹாரம்) - இளைப்பாறவைத்தல் பகலில் உழைக்கும் ஒருவனுக்கு இரவில் இளைப்பாற, உறங்குவது எவ்வளவு அவசியமோ அப்படியே சம்ஹாரம் என்பது உயிர்களை இளைப்பாற வைக்கும் கருணைச் செயல்கள் ஆகும். மறைத்தல் (திரோபவம்) என்பது கன்ம ஒப்பு வருவித்து, மலங்களை முதிர்விக்கும் அருட்செயலாகும். மனை (இடம்)யில் பெரிய கட்டடம் கட்ட நினைத்தால், முதலில் அந்த இடத்தை, நாற்புறமும் மதில் எழுப்பி, சூழ்ந்துள்ள ஏனைய மனைகளிலிருந்து மறைத்தல் போல, மல முதிர்ச்சிக்குத் துணையாகக் கடவுள், திரைச் சீலையால் மறைப்பதுபோல மறைத்து, உயிரின் கவனத்தை ஒருமுகப்படுத்தி, கன்மஒப்பினை வருவிக்கிறார். (5) அருளல் (அனுக்கிரகம்) உயிர்களின் பந்தங்களை ஒழித்து, அவைகட்கு வீடு (மோட்சம்)பேறுதரும் அருட்செயலாகும். இந்த 5 தொழில்கள் என்றும் இடைவிடாது பல படிகளில் நடந்து கொண்டே இருக்கும். கடவுள் முன்னிலையில், அவன் நினைப்பால், கீழ்ப்படியிலுள்ள அதிகாரிகளால் இவை நிகழும். ஒரு குளத்தின் தாமரைப்பூக்களில் சில மொட்டாகவும் சில சிறிது அலர்ந்தும், சில நன்றாக மலர்ந்து முதிர்ந்தும் பல நிலைகளில் இருக்கும். ஒரே சூரியனுடைய முன்னிலையில் ஒளியிலும் வெப்பத்திலும் மொட்டு அலர்ந்தும், அலர்ந்தது மலர்ந்தும், மலர்ந்தது

வாடியும், வாடியது உதிர்ந்தும் நிற்றல் போல, உயிர்களின் பக்குவம் பிற பொருள்களின் பக்குவ வேறுபாடுகட்கு ஏற்ப இந்த 5 தொழில்களும் கடவுளின் திருமுன்பு நினை (சங்கற்பம்) ப்பளவால் நிகழும். மறைத்தலை காத்தலிலும், அருளலை அழித்தலிலும், உள் அடக்கி முத்தொழில் என்று சுருங்கச் சொல்வதும் உண்டு.

கடவுள் எப்படியோ அப்படி. உயிர்கள் தொன்மையே நிலைபேறாக என்றும் இருப்பவை. உயிர்களின் மொத்த எண்ணிக்கைக்கு அளவே இல்லை. இன்றைய கணக்கு முறைப்படி அனந்தம் (infinity) எனலாம். உயிர்களின் அறிவு நிலைகளுக்குத்தக, ஓர் அறிவு உயிர் முதலாக ஆறு அறிவு உயிர் ஈறாக, 6 வகையாகத் தொல்காப்பியம் முதலிய நூல்கள் கூறும் பிறப்பு முறையை ஒட்டி 4 வகைப் பிறப்பு என்றும் தோற்றமுறையை ஒட்டி 7 வகைத் தோற்றம் என்றும் கூறலாம். வேறுவிதமான பாகுபாடுகளும் உண்டு. பறவைகள் என்னும் பாகுபாட்டில் பலவகை இருப்பதுபோல ஒவ்வொரு பாகுபாட்டிலும் உள்ள வெவ்வேறு வகைகளை எண்ணி, 7 வகைத் தோற்றம் 4 வகைப் பிறப்புகளிலுள்ளவற்றின் மொத்தம் 84 லட்சம் யோனி பேதம் எனக் கணக்கிடுதல் விரிவான முறை. ஒவ்வொரு பிறப்பு (யோனி) வேறுபாட்டிலும் உயிர்கள் அளவற்றன. உயிர்கள், மலங்கள் உடைமையைக் கருதிச் சித்தாந்த சைவம் 3 வகையாகக் கூறும். ஆணவமலம் ஒன்றே உடையார் - விஞ்ஞானகலர்; ஆணவம், கன்மம் என்ற இருமலங்கள் உடையார் பிரளயாகலர்; ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் உடையார் சகலர். இம் 3 வகை உயிர்களிடத்தும் ஆணவம் இருப்பதால், அதுவே மிகக் கொடிய மலமாகும். வியாபகநிலையில் இருக்க வேண்டிய உயிரைச் சிறுமைப்படுத்தி அணுத்தன்மை ஆக்குவதாலும், குற்றங்கள் யாவற்றிற்கும் காரணம் ஆதலாலும், இம் மலத்தினை ஆணவ மலம் என்றும் மூலமலம் என்றும் கூறுவர். மலம் உள்ளவரையில் பிறப்பு உண்டு. பிறப்பு, அறிவு, ஒழுக்கம், செல்வம் முதலிய நல்லவை நிறைந்த அல்லது தீயவை மிகுந்த குடும்பத்திலும் பிறக்கலாம். பல பிறவிகளில் முன்பு செய்த பாவ புண்ணியங்களின் பயனாகவே நல்ல அல்லது கெட்ட சூழ்நிலையில் உயிர் பிறக்கிறது என்பது சித்தாந்த சைவத்தின் துணிபு. தனிப்பட்ட உயிரின், பாவபுண்ணியங்களின் மொத்தத் தொகுதி மலையினும் பெரிது. அதுவே 'சஞ்சிதம்' எனப்படுவது. அதனை முழுமையும் ஒரு பிறவியில் அனுபவிக்க முடியாது. கடவுள் கருணை மிகுந்தவராகையால், இதில் மிகச் சிறியதொரு பகுதியையே ஒரு பிறப்பில் துய்க்கத்திட்டம் செய்கிறான். இப்பகுதியைப் 'பிராரப்தம்' என்பர். இப்பகுதியை ஒவ்வோர் உயிரும், நுகர்ந்தே தீரவேண்டும். துய்க்கும் போது, உயிர் புதிதாகச் சேர்ப்பது 'ஆகாமியம்' எனப்படும். ஆனால் சில ஒழுக்கங்களை மேற்கொண்டால் இப்பிறவியிலேயே எல்லாக் கன்மங்களையும் ஒழிக்கலாம். பிறவிக்கடலைத் தாண்டலாம். அந்தமில் இன்பஅழிவில் வீடு சேரலாம் என்று சைவம் தைரியம் கூறுகிறது. இதற்கு வழி, கடவுளை அடைந்து வழிபடுதலே ஆம். வழிபாட்டிற்கு மக்கட் பிறவியே மிகமிகச் சிறந்தது. மேல் உலகத்தவரும் நிலஉலகம் வந்தே இறைவழிபாடு செய்து, தமது தீமை, தீமொழி (சாபம்) முத்லியவற்றைப் போக்கி நன்மை பெறுகின்றார்கள் என்பதைப்பல பழங்கதைகளால் தெளியலாம். 'புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம் போக்குகின்றோம் அவமே' என்று வருந்தி மேலவர் பூவுலகிற் பிறக்க ஆசைப்படுகிறார்கள் என்பது திருவாசகம். உயிர் கடவுளைச்சாரும் போது சத்தாகவும், இருளைத் தருகின்ற உலகைச் சாரும்போது அசத்தாகவும் இருக்கிறபடியால், உயிர்க்கு 'சதசத்து' (சத்+அசத்து) என்ற பெயரும் உண்டு. உயிர், சத்தைச் சார்ந்து முத்தி பெறுதற்கென்றே மனிதப் பிறவியைக் கடவுள் கொடுத்துள்ளார் என்பது சித்தாந்த முடிபுகளுள் ஒன்று.

* நன்றி : சித்தாந்தம், மலர் 36, பக். 127-130; 193-195, 277-284.

# 21. சுத்தாத்துவிதம்

- பாம்பனார் - வாரியார் அடிப்பொடி, சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன்,
*தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.*

திருமந்திரத்தில் "**தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே**" என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இறைவன் அறிவுப் பொருள் எனப்படும் சித்தாகிய ஆன்மாவில் இருக்கிறார். அறிவற்ற பொருள்கள் எனப்படும் அசித்தாகிய உலகப் பொருள்களிலும் இருக்கிறார். சித்து, அசித்து என்ற தொடர்பு இல்லாமல் எதிலும் தோய்வுறாமல் இருக்கும் இறைவன் '**பரம்**', '**தற்பரம்**' எனப்படுவார். இத்தகைய பரம்பொருளை, தானே தன் நிலையில் தனித்து இருக்கும் இறைவனை அடைவது '**சுத்தாத்வைதம்**' எனப்படும். இந்தத் தற்பரம் எனப்படும் இறைவனைக் கண்டுள்ளோர் சைவ சித்தாந்தரே என்கிறார் திருமூலர்.

சுத்தாத்துவிதத்தைப்பற்றி விரிவாகச் சிந்திப்பதற்கு முன் அத்துவிதம் என்ற சொல்லின் பொருளைக் காண்போம். இரண்டு பெரிய மகான்கள் நமக்காகச் சிந்தித்து விளக்கியிருக்கின்றார்கள். ஒருவர் சிவஞான முனிவர்; மற்றவர் பாம்பன் சுவாமிகள் என்றழைக்கப்படும் குமரகுருதாச சுவாமிகள். இருவருக்குமே வேதாகமங்கள் அடிப்படை என்றாலும் விளக்கிச் சொல்லும் முறை வேறுபடுகின்றது.

**சிவஞான முனிவர் விளக்கம்**

அத்துவிதம் என்ற சொல் பிரிப்பின்றி நிற்றலை எவ்வாறு உணர்த்துமெனின் நத்துவிதம் என்ற வடமொழிச் சொல்லில் உள்ள நகர மெய் (ந்) கெட்டு அதன்மேல் நின்ற அகரம் (ந்+அ=ந) முதலாக நின்று தமிழில் அத்துவிதமென வழங்குவதாயிற்று.

அத்துவிதம் என்னுஞ் சொல்லில் முன்னின்ற அகரம் அன்மை, இன்மை, மறுதலையென்றும் மூன்று பொருளை யுணர்த்தும். உதாரணமாக அப்பிராம்மணன் என்றவிடத்து பிராம்மணன் அல்லாத க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரைக் குறியாது பிராம்மணனாயிருந்தும் பிராம்மணத் தன்மையில்லாமையைக் குறித்தலால் அகரம் அன்மைப் பொருளில் வந்தது. அமலம் என்றவிடத்து மலம் இன்மையைக் குறித்தலால் அகரம் இன்மைப்பொருளில் வந்தது. அநீதி என்றவிடத்து நீதியின் மறுதலையைக் குறித்தலால் அகரம் மறுதலைப் பொருளில் வந்தது. மறுதலை விரோதி எனப்படும்.

ஏகான்மவாதிகளும் மாயாவாதிகளும் இன்மைப் பொருள் மட்டும் கொள்வர். அதாவது நத்விதீயம் எபறது இரண்டற்ற ஒன்று. (த்விதீயம் என்பது இரண்டினைக் குறிக்கும்). அவர்கள் இரண்டு இன்மை என்னப்படும்போது அவற்றுள் இரண்டு அடங்கும். எனவே, இரண்டு இன்மை ஒன்றேயாகும். எனவே அத்துவிதம் என்ற சொல் ஒன்று என்றே பொருள்படும் என்று கொள்ளுவார்கள். அந்த ஒரு பொருளும் குணம் உடைய பொருள் என்று கொண்டால் குணம் ஒன்று, அதனையுடைய குணி ஒன்று என்று ஆகிவிடும். ஆதலால் ஒன்றாகிய பிரமப்பொருள் குணம் அற்றது என்பர். அதனையே நிர்க்குணப்பிரமம் என்று வழங்குவர். இவ்வாறு கொள்ளாவிடில்

அத்துவிதம் என்ற சொல் ஏற்றுரை (உபசாரம் வார்த்தை) யாகுமேயன்றி ஒன்று என்று பொருள் தராது. பரப்பிரமம் தன்னின் வேறாக ஒரு பொருளுமின்றித் தானும் தனக்கு ஒரு குணம் உடையாததலின்றி நிருவிசேடமாய் நிற்கும் என்பது அவர்கள் கொள்கை. இக்கொள்கை **கேவலாத்துவிதம்** என்று அழைக்கப்படும். (கேவலம் - தனிமை). இக்கொள்கையை விரிவாகப் பரப்பியவர் **ஆதிசங்கரர்.**

**இராமாநுஜரும், சிவாத்துவித சைவரும்** இந்த இன்மைப்பொருளையே கொண்டனர். எனவே அவர்களும் பொருள்கள் இரண்டல்ல ஒன்றே என்னும் கருத்தை உடையவர்களே. ஆயினும் உபநிடதங்களில் பிரமப்பொருளுக்கு சத்தி, சங்கற்பம் முதலிய குணங்கள் உண்டு என்று கூறப்படுவதாலும், பசு, பாசங்கள் என்பனவும் உண்டு என்று கூறப்படுவதாலும், நிர்க்குணப் பிரமம் என்ற கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் பிரமப்பொருள் தன் குணங்களாகிய சத்தி சங்கற்பம் முதலியவற்றாலும் தன்னில் வேறாகாத பசு பாசங்களாலும் விசேடிக்கப்பட்டு நின்றதே என்று பொருள் கொண்டனர். விசேடம் என்பது சிறப்பு இயல்பு என்று பொருள் தரும். எந்தப் பொருள் சிறப்பு இயல்புகளை உடையதோ அது விசேடியம் என்ற சொல்லால் குறிக்கப்படும். இந்த இரண்டும் சேர்ந்து ஒரே சொல்லால் குறிக்கப்படும்போது விசிட்டம் என்று பெயர்பெறும். அத்துவிதம் என்ற சொல் "**பிரமப்பொருள் ஒன்றேயன்றி இரண்டில்லை**" என்று மட்டிலுமே பொருள் தருவதாக இவர்கள் கொண்டனர். பிரமப்பொருள் நிர்க்குணம் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இராமாநுஜர் கொள்கைக்கு **விசிட்டாத்துவிதம்** என்று பெயர் வழங்குகிறது.

நீலகண்ட சிவாச்சாரியருடைய கொள்கையும் இதுவே. ஆயினும் அவர் சிவனைப் பரம்பொருள் எனக் கொண்டதால் அவரைப் பின்பற்றியவர்கள் சிவாத்துவிதசைவர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

பேதவாதிகள் எனப்படுவோர் துவிதவாதிகள் என்று அழைக்கப்படுவர். இவர்கள் அத்துவிதம் என்ற சொல்லில் உள்ள அகரத்திற்கு மறுதலைப்பொருள் கொண்டவர்கள். இவர்களின் கருத்துப்படி இரண்டின் மறுதலை ஒன்று. ஆனால் நேரடியாக ஒன்று அதாவது ஏகம் என்று கூறாமல் அதனை எதிர்மறை வாய்ப்பாட்டால் அத்துவிதம் என்று கூறுவதால் ஒன்றற்கு மறுதலையாக இரண்டாவதாக ஒருபொருள் உண்டு என்பதும் கொள்ளக்கிடந்தது என்று கூறுவர். அதனால் அத்துவிதம் என்ற சொல்லே துவிதம் என்ற பொருளையும் தரும் என்பர்.

இவர்கள் யாவரும் அத்துவிதம் என்னும் சொல்லுக்குப் பொருள் '**ஒன்று**' என்று கொண்டே தத்தம் கொள்கைகளோடு முரண்படாத வண்ணம் கேவலம், விசிட்டம், மறுதலை என்னும் அடைச் சொற்களைச் சேர்த்து வலிந்து பொருள் கொண்டவர்கள் ஆவார்கள்.

மாயாவாதிகளின் கொள்கையாகிய கேவல அத்துவிதமும் பேதவாதிகளின் கொள்கையாகிய துவிதமும் வேதங்களோடு முரண்படுவன. எனவே அவை பொருந்தா. வைணவர் கூறும் விசிட்டாத்துவிதம் பொருந்துமேனும் அத்துவிதம் என்னும் சொல்லுக்குப் பொருள் ஒன்று என்று அவர்கள் கொண்டது பொருந்தாது. ஏனெனில் பொருள் ஒன்று என்பது உண்மையாயின் அவ்வாறே நேரடியாகக் கூறுதலே அமையும்.

ஆனால் அத்துவிதம் என்ற சொல்லால் உய்த்து உணருமாறு கூறியது ஒரு பயன் கருதியே ஆதல்வேண்டும். அப்பயன் வேதங்களில் கூறப்படும் மகாவாக்கியங்கள் என்பவற்றின் பொருளை விளக்குவதே ஆகும்.

வேதாந்த கருத்துரைக்கும் மகாவாக்கியங்கள் என்னும் பெரும் பெயர்ச் சொற்றொடர்கள் மூன்று என்று கூறப்படும். அவை "**அது நீ ஆகின்றாய்**" என்றும், "**அது நான் ஆகின்றேன்**" என்றும் "**அது இது ஆகின்றது**" என்றும் பொருள் தருவன. இவற்றை உற்று நோக்கினால் முதல் சொற்றொடர் முன்னிலையாகவும், இரண்டாவது சொற்றொடர் தன்மையாகவும், மூன்றாவது சொற்றொடர் படர்க்கையாகவும் அமைந்திருப்பதை உணரலாம். வடமொழியில் இவை மூன்றும் முறையே **தத்துவமசி, அகம் பிரம்மாஸ்மி, சோயம் அஸ்தி** என வரும் முன்னிலை, தன்மை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும் வைத்து ஒரே கருத்து வலியுறுத்தப்பட்டது. இந்த மகாவாக்கியங்களைக் கேட்டபோது அது என்பது ஒரு பொருள், நீ என்பது ஒரு பொருள் என்பது புலப்படும். ஒருபொருள் மற்றொரு பொருள் ஆவது எவ்வாறு என்ற ஐயம் தோன்றும். அந்த ஐயத்தை நீக்குவதற்கு இரண்டு பொருள்களுக்கும் இடையே உள்ள தொடர்பின் சிறப்பை உணர்த்துவதே அத்துவிதம் என்ற சொல்லின் கருத்தென்பது உணரற்பாலது. அதாவது **இருமையில் ஒருமை அத்துவிதம்**. எனவே அத்துவிதம் என்னும் சொல்லில் உள்ள அகரம் அன்மைப் பொருள் தந்து இரண்டன்று என்று இரு பொருள்களுக்கிடையேயும் வேற்றுமை இன்மையை விளக்கும். இதனையே **மெய்கண்டார்** "அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு" என்றார். (நாத்தி - இன்மை). **உமாபதி சிவனாரும்** "பிறிவரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினதாய்" என்றார் சிவப்பிரகாசத்தில். இது பிரிந்துநிற்கும் இயல்பற்ற அத்துவிதம் என்று பொருள் தரும்.

மேற்கூறியவற்றால் அத்துவிதம் என்பது அபேதக்கொள்கை உடையார் கூறும் ஐக்கியம் அன்று. (ஐக்கியம் என்னும் சம்பந்தம் ஆற்றுநீரும் கடல்நீரும் தம்முள் கலந்தது போலவும், குடத்துக்குள்ளே இருக்கின்ற ஆகாயம் குடம் உடைந்தபோது பேராகாயத்தோடு சேர்ந்ததுபோலவும் என்று உவமை கூறி விளக்கப்படும். அவ்வாறு சேருவது ஒரே பொருள் ஆதலால் ஒன்று என்று கூறுவதே போதுமானது. அத்துவிதம் என்ற சொல்லால் உய்த்து உணரும்படி சொல்லவேண்டிய தேவை இல்லை. மேலும் முத்தி காலத்திலும் ஆன்மா அதுவதுவாய் நின்றறியும் இயல்புடையது என்று ஆன்மாவுக்குக் கூறப்பட்ட இலக்கணம் இங்குப் பொருந்துவதில்லை. ஆதலின் அத்துவிதம் என்பதற்கு ஐக்கியம் என்னும் பொருள் பொருந்தாது.

அவ்வாறே ஒருவாற்றால் பேதமும், ஒருவாற்றால் அபேதமும் ஆகிய தாதான்மியமுமன்று. (தாதான்மிய சம்பந்தம் என்பது குணத்துக்கும் குணத்தை உடைய குணிப்பொருளுக்கும் உள்ள தொடர்பு ஆகும். ஆன்மா இறைவனைப்போல குணிப்பொருளுக்கும் உள்ள தொடர்பு ஆகும். ஆன்மா இறைவனைப்போல குணிப்பொருளே யன்றி இறைவனுக்கும் குணம் ஆகாது. எனவே தாதான்மிய சம்பந்தம் என்ற சொல்வது பொருந்தாது. சமவாய சம்பந்தம் என்பது நுட்பமாய் நோக்கும்போது தாதான்மியத்தின் வேறு அன்று என்று புலப்படும். எனவே சமவாய சம்பந்தம் என்பதும் இங்கு பொருந்தாது.)

பேதவாதிகள் கூறும் சையோக சம்பந்தமும் அன்று என்பது விளங்கும். (சையோகம் என்பது அடுத்தடுத்த விரல்களை ஒட்டி வைப்பதனால் பெறப்படும் தொடர்பு. ஒட்டி இருந்தாலும் அவை

ஒன்றோடு ஒன்று கலந்ததாகக் கூறுதல் தகாது. ஆன்மாவும் முதல்வனும் வியாபகப் பொருள்கள். ஆகையால் இத்தகைய ஒரு சம்பந்தம் இங்குப் பொருந்தாது.)

சொரூப சம்பந்தம் என்பது இரண்டு பொருள்களுக்கிடையே ஏதாவது ஒரு இயல்புபற்றி அவை இரண்டும் வடிவத்தால் ஒன்றுபட்டிருக்கும் என்று கொள்ளுவது ஆகும். மகாவாக்கியப் பொருளை விளக்கும் அத்துவிதம் என்னும் சொல்லுக்கு இதுவே பொருள் என்று கொள்ளமுடியாது. வீட்டு நிலையில் ஆன்மா சிவானந்தத்தை அனுபவிக்கும் என்று கூறப்பட்டமையால் சொரூப சம்பந்தம் இங்குப் பொருந்தாது. ஏனெனில் இத்தகைய சம்பந்தத்தில் இரண்டு பொருள்கள் இணைந்து நிற்கும் என்றல் கூடாது.

மேலே கூறப்பட்ட ஐக்கியம், தாதான்மியம், சமவாயம், சையோகம், சொரூபம் என்ற ஐந்தும் பொருள்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்க தருக்க நூலாரால் கூறப்படுபவை.

அநிர்வசனம்தான் அத்துவிதம் என்று சிலர் கொள்ளுவார்கள். மேலே கூறப்பட்ட சம்பந்தங்களில் இருந்து வேறுபட்டு இன்னது என்று அறிய இயலாத தொடர்பை அவர்கள் அநிர்வசனம் என்பர். அவ்வாறு கொள்ளுவது மாயாவாதிகளின் கூற்றாகி இழுக்குப்படும்.

எனவே அத்துவிதம் என்பது இங்குக் கூறப்பட்ட சம்பந்தங்களில் எல்லாம் அடங்காமல் இவற்றிலிருந்து வேறுபட்ட தொடர்பே ஆகும்.

தாதான்மிய சம்பந்தம் என்பது இரண்டு வகைப்படும். ஒரே பொருள் அங்கமும் அங்கியுமாக அல்லது குணமும் குணியுமாக வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்பது தாதான்மிய சம்பந்தம் என்பதன் முதல் வகை.

இரண்டாவது வகையான தாதான்மியம் என்பது இரண்டு பொருள்கள் அது அதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்பதாகும்.

முதலில் கூறப்பட்டதனை தாதான்மியம் என்றும் இரண்டாவது கூறப்பட்டதனை அத்துவிதம் என்றும் வழங்குவர். அதாவது ஒருமையில் இருமை தாதான்மியம். **இருமையின் ஒருமை அத்துவிதம்**. எனவே அத்துவிதம் என்னும் சொல்லில் உள்ள அகரம் அன்மைப் பொருள் தந்து இரண்டு அன்று என்று இரு பொருள்களுக்கிடையே வேற்றுமை இன்மையை விளக்கும்.

இவ்வாறு உணரவே சைவ **சித்தாந்தம் கூறும் அத்துவிதம் என்பது கலப்பும், உடனாதலும், வேறாதலும் ஆகிய மூன்றையும் தன்னுள் அடக்கிய, அம்மூன்றற்கும் பொதுவாகிய நிலையே** என்பதும் விளங்கும்.

இவ்வத்துவிதத்தை விளக்குவதற்கு சித்தாந்திகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு உவமை கூறுவர். அவையெல்லாம் ஒருபுடை ஒப்புமைபற்றிக் கூறியனவாகவே கொள்ளப்படும். அப்படியானால் சைவ சித்தாந்தக் கொள்கைக்கு ஏற்ப முற்றிலும் பொருத்தமான உவமை கூற முடியாதா என்ற வினா எழும். அத்துவிதத்திற்கு மிகச்சிறப்பாக எடுத்துக் காட்டப்படும் உவமை "ஆன்ம போதமும் கண் ஒளியும் போல" என்பதே. இதில் மேற்கூறிப்போந்த மூவகை இயல்புகளும் பொருந்தி இருப்பதை உணரலாம். எனவே இந்த உவமை முதல்நூல் (**சிவஞானபோதம்**), வழி (**சிவஞான சித்தியார்**), புடைநூல் (**சிவப்பிரகாசம்**) ஆசிரியர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்" - மெய்கண்டார்.

"காட்டிக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு, ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமாபோல ஈசன் உயிர்க்கு காட்டிக் கண்டிடுவன்" - அருள்நந்தி சிவனார்.

"அறிவு ஒளிபோல் பிறிவரும் அத்துவிதமாய்" - உமாபதிசிவம்.

ஆதிசங்கரரின் அத்துவிதக் கொள்கை கேவலம் என்னும் அடைமொழியுடன் சேர்த்துக் **கேவலாத்துவிதம்** என்று வழங்கப்படும். இராமநுஜரின் அத்துவிதக் கொள்கை விசிட்டம் என்னும் அடைமொழி சேர்த்து **விசிட்டாத்துவிதம்** என்று வழங்கப்படும். மாத்துவரின் கொள்கை மறுதலை என்ற அடைமொழி கூட்டியே வழங்கப்படும். ஆனால் சைவ சித்தாந்தம் கூறும் அத்துவிதம் எந்தவிதமான அடைமொழியும் இல்லாமல் சொல்லத் தகும். எனவே இது அடைமொழி வேண்டாது பொருள் காணத்தகுந்த கொள்கை என்று விளங்குவதற்கு இதனை **சுத்தாத்துவிதம்** என்று வழங்குவர்.

சுத்தம் என்பதும் அடைமொழியன்றோ என்று சிலர் வினவலாம். அவர்கள் ஐயம் தருக்க மதத்தில் வழங்கும் "விச்ச சத்தை", "சுத்த சத்தை" என்ற வாய்ப்பாட்டைக் கொண்டு தெளியலாம் என்கின்றார் சிவஞான முனிவர்.

சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் "சுத்தாத்வைதம்" எனப்பட்டது என்கிறார் **பாம்பன் சுவாமிகள்**. இறைவன் (பதி), ஆன்மா (பசு), உலகம் (பாசம்) ஆகிய முப்பொருள்களும் என்றும் அழியாமல் நித்திய பொருள்களாக இருப்பவை என்று சுத்தாத்துவிதம் கூறும். ஆன்மா பாச நீக்கம் பெற்று இறைவனுடன் இரண்டறக் கலந்திருக்கும் நிலை **'சுத்தாவத்தை'** எனப்படும். "அத்துவிதமான அயிக்கிய அனுபவமே சுத்தநிலை" என்கிறார் **தாயுமான சுவாமிகள்**. இவர் கூறியருளிய சுத்த நிலையாய சுவானு பூதிக்குரிய தமது சித்தாந்தத்தைச் 'சுத்தாத்வைதம்' என வழங்கி வந்தார்.

"சுத்தாத்தை ஸித்தி": 'சுத்தாத்வைத ஜாட்ய': 'சுத்தாத்வைத பரஹ்மாஹம்' என உபநிடதங்களில் வருவதால் இச்சுத்தாத்வைதம் வேதமொழியாகக் தொன்றுதொட்டு வருவதாக உணர்கிறோம்.

சுத்தாத்துவித சித்தாந்த வைதீக சைவ சமயத்துண்மை தென்மொழிப் பிரமாணங்களாலும், வடமொழிப் பிரமாணங்களாலும் பாம்பன் சுவாமிகள் "**பரிபூரணானந்த போதம் - சிவசூரியப் பிரகாசம் எனும் உரை**" என்னும் நூலினுள் நன்கு விளக்கியுள்ளார். இவர் "**மண்டலப்நூஷ்மனோப நிஷத்தினின்றும்**" பிரமாணங்காட்டி 'சுத்தாவிதம்' நிறுவியுள்ளார். உபநிடதங்களாகிய வேதாந்தத்திற்கும், சித்தாந்தத்திற்கும் சிறிதும் பேதமின்மையைத் தெரிவிக்கின்றார். 108 உபநிடதங்களும் சித்தாந்தமேயென விவரித்திருக்கிறார். உபநிடதங்களில் ஏகான்மவாதிகள் தங்களுக்கு ஆதரவாகக் காட்டிவரும் சுலோகங்களில் சித்தாந்த உண்மையினைச் சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு இசையப் பொருத்திக் காட்டியிருக்கிறார். மேலும் சுவாமிகள் தம்முடைய சிறந்த சாத்திர நூலான **'திருப்பாவின்' திட்பம்** எனும் உரையில் சுத்தாத்துவித நெறியே வைதிக சைவம் எனப்படும் என விளக்கியுள்ளார். உயிர்கள் மலம் நீங்கப்பெற்றுத் தூய

நிலையில் பரம்பொருளுடன் பிரிவிலா ஐக்கியம் (சுத்தாத்வைதம்) அடைதலை வேதமும், ஆகமும் ஒருங்கே விளக்குவதால் இது 'வைதீக சைவம்' என அழைக்கப்பெறும் என்று சுவாமிகள் கூறியுள்ளார்.

சத்து, சித்து ஆனந்தம் ஆகிய மூன்று இலக்கணங்களும் பரம்பொருட்கண் ஒருமைப்பட்டு பிரகாசிக்கும். இவ்வொருமைப்பாடே சிவபெருமான் கொடுத்தருளும் பரமுத்தி யெனுமொரு சோதி சொரூப வியாபகத்திலடங்கும். பெரிய ஞானப்பிரகாசத்திற் கருவி சேட்டைகளுஞ் சீவபோத முனைப்பு ஒழிந்த நிலை "சுத்தாத்துவிதம்" எனப்படும்.

*"இம்மூன் றுமொருங் கிலகு மிதுவே*
*பெம்மான் றருபே ரமுதென் றிடுமோர்*
*செம்மே னியடங் கிடுமா தெளிவிற்*
*சும்மா வமருஞ் சுசியத் துவிதம்"* — *பரிபூரணானந்தம் பாடல் 99*

திருவாசகத் திருப்பள்ளியெழுச்சியில் "செந்தழல் புரைதிருமேனி" எனவரு பிரமாணத்தினைச் "செம்மேனி" என்பது கொண்டிருத்தல் அறியப்படும்.

# VII. மலரும் சமுதாயம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வம்மின் அடியீர் | - *எ. வேலாயுதம்* | 1 |
| 2. | திருஞானசம்பந்தரும் சமுதாயமும் | - *சாரதா நம்பியாரூரன்* | 5 |
| 3. | நாவுக்கரசரின் உழவாரம் எது? | - *ச. சுந்தரபாலு* | 9 |
| 4. | அப்பர் பார்வையில் கடமையும் உரிமையும் | - *த. இராமலிங்கம்* | 13 |
| 5. | சுந்தர வேடம் | - *பா. சுந்தர்* | 15 |
| 6. | பிறப்புப் பற்றிப் பாம்பன் சுவாமிகள் | - *ப. இராமன்* | 18 |
| 7. | வார வழிபாடு | - *ச. சச்சிதானந்தம்* | 23 |
| 8. | தமிழ் வழிபாட்டு மந்திரங்கள் | - *பி.கே. குமாரசுவாமி* | 31 |
| 9. | திருமுறை நெறியில் வழிபாடு | - *ந. ஒளியரசு* | 33 |
| 10. | சிவபூசைச் சிறப்பு | - *க. சுவர்ணகாளீச்சுவரன்* | 36 |
| 11. | திருமண முறையும் திருமுறை நெறியும் | - *இராம. வேங்கடேசன்* | 40 |
| 12. | அன்பு வாழ்க்கை | - *அ.ச. ஞானசம்பந்தன்* | 45 |
| 13. | செந்தமிழில் குடமுழுக்கு | - *மு.பெ. சத்தியவேல் முருகன்* | 51 |
| 14. | சைவமும் ஆன்மநேயமும் | - *வி.ஜே. மதுசூதனன்* | 56 |
| 15. | சைவ நற்சிந்தனை | - *பெ. திருஞானசம்பந்தம்* | 60 |
| 16. | மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் | - *வாசுகி கண்ணப்பன்* | 63 |
| 17. | சீர்திருத்தச் சைவம் | - *ஆர். சிவகுமார்* | 67 |
| 18. | தோத்திர சாத்திர நோக்கில் பெண்ணின முன்னேற்றம் | - *மு. செல்வநாதன்* | 70 |
| 19. | பெரிய புராணம் : ஒரு சமூகப்பார்வை | - *இரா. செல்வகணபதி* | 73 |
| 20. | பெரிய புராணத்தில் பண்பாட்டுச் சிறப்பு | - *ஹேமா சந்தானராமன்* | 77 |
| 21. | நாயன்மார் நாடகங்கள் | - *இரா. குமரவேலன்* | 79 |
| 22. | வள்ளலாரின் சமுதாயப்பணி | - *கே. இராமலிங்கம்* | 83 |
| 23. | திரு.வி.க.வும் சைவமும் | - *வி.கே. வனசாட்சி* | 88 |
| 24. | புதுமைக்கும் புதுமையனே | - *ஆ. திருவாசகன்* | 91 |
| 25. | மறைமலையடிகளின் தனித்தமிழ்த்தொண்டு | - *மறை தி. தாயுமானவன்* | 94 |
| 26. | பெருமன்றத்தில் தமிழ்ச் செம்மொழி | | 97 |
| 27. | பெருகட்டும் சைவ உணர்வு | - *வை. இரத்தினசபாபதி* | 98-102 |

# 1. வம்மின் அடியீர்!

- திருமுறைமணி புலவர் எ. வேலாயுதன், எம்.ஏ.
'சித்தாந்தம்' இதழாசிரியர்.

**தமிழ்**

தமிழ்நாடு பற்றிய அன்புடைய ஆர்வலர் யாவரும் மிகவும் தெரிந்துணர்ந்து போற்றிக் கொள்ள வேண்டியவை திருஞானசம்பந்தர் வரலாறும் அவர் தம் திருப்பதிகங்களும் ஆகும். பிள்ளையார் வரலாறு நன்கு தெரியச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமே முதன்மையாக உள்ளது. திருஞானசம்பந்தர் அவதாரம் தமிழகத்திற்கும் உலகிற்கும் பெருநலம் பயக்கும் பன்முனை நோக்கதிற்காக இறையருள் துணையால் நிகழ்கின்றதாகச் சேக்கிழார் தெரிவிக்கின்றார். மற்றும் பிள்ளையாரின் திருநெறிய தெய்வத்தமிழ் நலம் அமுதகவித்தொடைமணம் அற்புதம் விளைக்கும் மறைமொழி மந்திரப் பொருள்வளம் முதலியவற்றைப் பிள்ளையார் திருப்பதிகம் பாடும் திருத்தலத்தில் நிகழும் திருச்சூழலில் ஆங்காங்கே தெரியக்காட்டுகின்றார்.

**எழுதுமறைமொழிந்தபிரான்**

பிள்ளையார்க்கு ஈராண்டு நிறைவெய்தி மேலோராண்டு எய்தியது. அம்மூவாண்டில் பிள்ளையார்க்கு உலகுய்ய எய்திய நிகழ்வினைத் தெரிவிக்கும் சேக்கிழாரின் திருப்பாடல்களையுணர்ந்து போற்றுவோர் பிறவிப் பெரும் பயனையே யெய்துவர். பிள்ளையார் ஞானப் பாலுண்டு தாதையார்க்கு எம்மையிது செய்த பிரான் இவன் என்று உச்சியினில் எடுத்தருளும் ஒருதிருக்கை விரற் சுட்டிக் காட்டி **உண்ணிறைந்து பொழிந் தெழுந்த உயர் ஞானத்திருமொழியால்** எல்லையிலா மறை முதல் எழுத்து ஓங்காரத்தைத் தமிழ்மெய், தகரத்துடன் எடுத்த எழுது மறையாகப் பெருகு சொல் வளமிக்க தமிழால் "தோ" எனத்தொடங்கி, பரமர் திருச்செவியைச் சிறப்பித்து, தோடுடைய செவியன் எனும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம் இசைத்தார் என்று சேக்கிழார் உணர்த்தும் திறம் தெய்வத் தமிழின் எழுது மறையே திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் என்பதனைத் தெரிய வுணர்த்துகின்றது.

பிள்ளையார், தாம் அருளிய திருப்பதிகம் "**ஒரு நெறி மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த திருநெறிய தமிழ்**" என்கின்றார். தெய்வத் தமிழின் எழுது மறையாகிய இத்திருப்பதிகங்களின் உள்நிறைந்து உணர்த்தும் பொருள் நோக்கினை. ஒவ்வொரு பதிகத்திலும் 8-9-10 ஆவது திருப்பாடல்களில் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

**மும்மைசால்பாடல் - செம்பொருள் நோக்கம்**

பிள்ளையார் திருப்பதிகங்கள்தோறும் வரும் எட்டாவது திருப்பாட்டு இராவணன் - பாடியுய்ந்ததும், ஒன்பதாவது பாடல் அன்பினால் இறைவனைத் திருவடிப்பூசனை புரிந்து போற்றியுணராமல் அறிவுறுத்திறத்தால் உயர்ந்தும் அகழ்ந்தும் தேடி வீழ்ந்த அயனும் அரியும்

வழுவிய இழுக்கையும், பத்தாவது பாடல் இறைவனின் அருள் உண்மையுணராமலும் பூசனைத் திறம் தெரியாமலும் "செய்யசடைநாதன் நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும் போதமிலாப்பிறர் சொல் கேட்பதும் பழியாக்கும் என்றும் தெரிவிப்பதாக விளக்குகின்ற சேக்கிழார் பிள்ளையார் திருப்பதிகங்கள் தோறும் இத்திறம் தொடர்வதனால் பிள்ளையார் அவதார நோக்கமும் அவர்தம் திருஉள்ளக் கருத்தும் திருப்பதிகங்களின் உறுதிப் பொருளும் இம்மும்மைசால் பாடல்களின் ஒருமை என்று வுணர்த்துகின்றார்.

**"இருவினை நீக்கும் திருநெறி"**

இங்ஙனம் பிள்ளையார் அருளிய திருப்பதிகங்கள் எல்லாம் திருக்கோயில்களையும் இறைவனை இசைபாடிப் போற்றியேத்தும் பூசனைத்திறத்தையும், மக்கள் போற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கும் நற்கதி பெற்றுய்வதற்கும் ஆகிய உறுதிப் பொருள் நோக்கினையே பொதுவாகக் கொண்டுள்ளன. மற்று சிறப்பாக அருளிய திருநீலகண்டத் திருப்பதிகம் திருப்பாசுரம் முதலிய திருப்பதிகங்களுள்ளும் இறைவனை பூசனை புரிந்து புகழ்பாடிப்போற்றி பேரருள் பெருகும் பொருள் திறத்தையே போற்றுமாறு வலியுறுத்திப் பாடியருள்கின்றார் பிள்ளையார்.

*கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்*
*செய்வினை வந்தெம்மை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்*

*இருபொழுதும், பூவினைக் கொய்து மலரடிபோற்றுதும் நாமடியோம்*
*தீவினை வந்தெமை தீண்டப் பெறா திருநீலகண்டம்.*

என்றெல்லாம் திருநீலகண்டப் பதிகத்தில் உணர்த்துகின்றார்.

**"ஞானம் ஈசன்பால் அன்பே"**

திருப்பாசுரத்துள் இரண்டாவது மூன்றாவது பாடலுள் சிவபெருமான் காண்பதற்கு அரியர். அங்கையில் நெருப்பேந்தியர், ஏறுகந்தேறுவர், கண்டங்கரியர், காடுறை வாழ்க்கையர் ஆயினும் பெரியர். அவர்பெற்றியை யாரறிவார்? யாராலும் அறிய ஒண்ணாது. வெந்த சாம்பரை விரையுறு மணமெனப் பூசியே தமக்குத் தந்தை தாயிலர் அவர்தம்மை சிந்தையில் மறவாது எழுவார் வினையைத் தீர்ப்பரால். எந்தையாரவர் எவ்வகையார் கொலோ! என்று தொடங்கி

ஆதி;அவர் ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும்; மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை எனவே அவற்றைக்கிளக்க (ஆராய்ச்சி செய்ய) வேண்டாம். குறித்தன பெறவும் வினையுங்குறு காமையுறவும் எந்தை திருவடியினைப்பூசை புரிந்து வணங்கி அதுவே முதன்மையாக இருந்து, இவை கேட்கத்தக்கார்.

உணர்வில் அன்பாகவும், புறத்தே சோதியாயும், சுடர்விட்டுளன் எங்கள்பெருமான், அவனை - அறிவுத்திறத்தால் சோதித்தறிதல் வேண்டா, மனம் பற்றி வாழ்மின்! மாதுக்கம் நீங்கலுறுவீர்.

இறைவன், ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து, வேதம் பாடும் எனவும், நாடுந்திறத்தார்க்கு, அத்திறம் இறைவன் அருளே என நாட்டலாகும்.

இத்தகு அருள் திருநெறியில், மணமலர்களைக் கொண்டும் பால்கொண்டும் பூசனைபுரிந்த அதனைப் பொறாது வெகுண்டுதைத்த தந்தையின் காலை அடிவெட்டிய சண்டீசர் முக்கண் மூர்த்தியின் திருவடி சேர்ந்த வண்ணம் அறிந்தார் சொலக் கேட்டுக்கொண்டிருக்கின்றோமன்றோ! என்று தொடர்ந்து. பூசனை புரிந்து இறைவன் திருவருட்கு ஆளாகும்பேறே பிறவிப் பெரும்பேறு என்றுணர்த்தியருள்கின்றார். இதனைத் திருப்பாசுரம் எழுதிய ஏடு, வையையாற்றில் எதிர்த்து செல்லில் "ஞானம் ஈசன்பால் அன்பே" என்றனர். ஞானம் உண்டார் என்று சேக்கிழார் விளங்கத்தெரிவிக்கின்றார்.

ஆக ஈசன்பால் அன்புபெருகும் பூசனைத் திருநெறியே ஒருநெறியே மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழின் மெய்ப்பொருள் என்று உறுதியாகத் தெரிகின்றது காணலாம்.

பிள்ளையாருடன் இருந்த அப்பர் சுவாமிகளும்

*பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்*
*நாக்கைக் கொண்டரன் நாமம் நவிற்றிலார்*
*ஆக்கைக்கே இரை தேடி யலமந்து*
*காக்கைக்கே இறை யாகிக் கழிவரே*

என்றெல்லாம் மக்கள் திருக்கோயில் வந்து பூசை புரிந்துள்ள வருந்தி யரற்றுகின்றார். பிள்ளையாரும்

*வம்மின் அடியீர்! நாள் மலரிட்டுத் தொழுதுய்ய*
*உம்மன்பினோடு எம்மன்பு செய்த ஈசனுறைகோயில்* (திருவீழிமிழலைப்பதிகம்)

என்று பல்லாற்றானும் மக்களை யழைக்கின்றார்.

**எனக்கு எய்ப்பில்வைப்பே**

அதன்பணியால் கச்சித்திருவேகம்பத்தின் அருளாட்சி மண்டலத்துள் திருமாற்பேறுக்கு வடமேற்கில் வேலூர்மாவட்டம். அரக்கோணம் வட்டம், அகவலம் மோட்டூரின் தெற்கில் குசத்தலையாற்றின் வடகரையில் வெண்குன்றின் மேவிய, எண்கோணத்தேரெழிலாய், பன்னிரு தூண் ஓங்க, நாற்றிசையும் வாயில் காட்டி அருள்திருமனத்துணைநாதர் வெண்ணமுதக் கோயில் கொண்டு அருள்கின்றார். மக்கள் யாவரும் வெண்ணிறணிந்து தம் கையால் பூசனைபுரியப் பேரருள்புரிகின்றார்.

"*மாசில் தொண்டர் மலர்கொண்டு வணங்கிட*
*ஆசையார அருள் நல்கிய செல்வத்தராய்*" (திருஞானசம்பந்தர்)

விளங்குகின்றார்.

மாசித்திங்கள் சிவராத்திரியில் ஆறுகாலப் பெரும்பூசனையும் பூசனைப்யோரமுதமும். மக்கள் அன்புப்பயிர்க்கு அருள்வெள்ளமாய் வழங்குகின்றது. அருள்திருமனத்துணைநாதர்திருவடி. வைகாசியில் சுவாதியும், மூலமும், (திருஞானசம்பந்தர் திருநாள்). ஆகிய நாள்மின், முதன்மையாகக்

கொண்டு நிகழும் பெரும் பூசனைப் பெருவிழாவில் புரியும் பேரருள் மக்கள் பிறவிப் பேறாகவே விளங்குகின்றது. அன்பர்தம்திருக்கூட்டம். மன்றம், மனைமக்கள், காலையும், மாலையும். ஒருங்கிருந்து பூசனைபுரியவும், பூசனைபுரி யடியவர்கள் எல்லோருக்கும் மனையறம் புரிமக்கள். பெருகுசுற்றமுடன் மாகேசுவரபூசனைபுரிந்து அமுதூட்டவும், மண்ணினிற் பிறந்தார் பெரும் பயனை அருளும் பெருவிழாவாக பத்து நாள்களும் கண்ணாரமுதக் கனியாக விளங்கும் அத்திருவிழாவினை அன்பருடன் இருந்து காண்பதே கண்பெற்ற பயனாகும்.

*நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே*
*பூமாலை கொண்ட புனைந்தன்பாய் நாமோர்*
*அறிவினையே பற்றினால் எற்றே தகுமே!*
*எறிவினையே யென்னும் இருள்*

என்று காரைக்காலம்மையார் பாடும் வண்ணம், மக்கள் அன்புனு சிந்தையர் ஆகி, யாவரும், தாமே தங்கையால். பூமாலைகொண்டு புனைந்தன்பாய், நாமாலையாகத் திருமுறைகளைப் பாடி பூசனைபுரிந்து இன்புற

*வம்மின் அடியீர்! நாண்மலர் இட்டுத் தொழுதுய்ய*
*உம்மன்பினோடு எம்மன்பு செய்து ஈசன் உறைகோயில்.*

என்று திருத்தொண்டர் திருநெறிய அறக்கட்டளையும் வணங்கி வரவேற்கின்றது.

தமிழ்மக்கள் உய்ய, இறைவன் திருவருளைப்பரவி நாடு முழுவதும் திருக்கோயில்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடி அற்புதங்கள் பலவும் புரிந்து பிறசமயங்களை வென்று பூசனைத் திருநெறியை மறுமலர்ச்சி யுறச் செய்து வாழ்வளித்த பேரருளாளர்கள் இருவர்க்கும் தமிழ் மக்கள் ஆற்றும் கைம்மாறும் உண்டோ!

**திருத்தொண்டத் திருநெறி**

இத்தகு தன்மையில் தமிழ்மக்கள் திருக்கோயில் பூசனையைப் போற்றாது விலகுதல், சிலர் மட்டுமே திருக்கோயில் பூசனைபுரிதல், பலர் திருக்கோயிலுக்குத் தொடர்பின்றியே இருத்தல், அப்பெரு மக்கள் புரிந்த - பாடியருளிய பெரு நோக்கத்திற்கு அடுக்குமா? அவர்தம் திருப்பதிகங்களை இசையுடன் பாடியும், கேட்டும், விரிவுரையாற்றினும், அவர்தம் அருட்பணியில் நோக்கினைப் போற்றி, அப்பெருநெறியின்வழி ஒழுகாத நாம் உய்திபெற ஒண்ணுமோ? என்று திருமுறை முற்றோதலின்போது பெரிதும் வருந்திய அன்பர்கள் சிலர், தமிழகத் திருக்கோயில்களில், தற்போதைய சூழலில், வடநாட்டின் பன்னிரு சோதிர்லிங்கத் திருத்தலங்களில் உள்ளது போன்று மக்கள் யாவரும் தாமே பூசனை புரிய அனுமதிக்கமாட்டார்கள். மாறாக பழிசுமத்துவர். ஆகவே, திருமுறைகளை முற்றோதல் புரிந்து அம்மறை மொழியருளால். திருக் கோயில் தோன்ற இறையருளை வேண்டுவோம். என்று பல திங்கள் திருமுறைகளை முற்றோதல்புரிந்து வழிபாடு செய்து. வேண்டினர். திருவருட்பயனாக 1994ஆம் ஆண்டு **திருத்தொண்டர் திருநெறி அறக்கட்டளையமைந்து** பதிவு செய்யப்பெற்றுள்ளது.

# 2. திருஞான சம்பந்தரும் சமுதாயமும்

- முனைவர் சாரதா நம்பியாரூரன்,
*முதல்வர், அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம் - 8.*

வேத நெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், வன்தமிழ் செய்தவம் நிரம்பவும், தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லவும் தோன்றியவர் திருஞானசம்பந்தர்.

இவருடைய தேவாரப் பதிகங்கள் இறைவனின் அருட்சிறப்பு, அடியார்க்கருளும் திறம், பக்தி உயர்வு, இயற்கையழகு, பண்பாட்டு மரபுகள், தமிழ்க் காதல், சமூக உணர்வு அனைத்தையும் வெளிப்படுத்துகின்றன.

மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட போது புறச் சமயங்கள் செல்வாக்கு பெற்றன. மகேந்திர பல்லவன், கூன்பாண்டியன் இவர்கள் சமணத்தைத் தழுவியதால், தமிழ்ச்சமயங்கள், தமிழ் மொழியின் சிறப்பு, தமிழர் பண்பாட்டு மரபுகள் நிலை குலையும் சூழல் எற்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் தோற்றுவித்த பக்தி இயக்கத்தால் மீண்டும் தமிழரிடையே அன்பு நெறி பரவ, தமிழர் மரபுகள் செழிக்க வழி கோலிற்று. இச்சூழலில் ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய சம்பந்தர், தமக்கு முன்னே தமிழில் புதிய இலக்கிய வடிவங்களை வழங்கிய காரைக்காலம்மையாரையும், 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கைத்தொண்டு செய் கடப்பாடு உடைய நாவரசரையும் முன்னோடிகளாகக் கொண்டு, வேதநெறி, சைவத்துறை, தமிழ், சமுதாயப்பணி ஆகியவற்றை ஒருங்கிணைத்தார்.

**தமிழ் ஞானசம்பந்தன்**

இறை வழிபாட்டிற்குரியதும் இம்மை மறுமைப் பயன்களை அளிப்பதும் வடமொழி வேதங்களே எனவும், தமிழ் மொழிக்கு இச்சிறப்புக்கள் இல்லை எனவும் கருதிக் கொண்டிருந்த கால கட்டத்தில், இறையருளைப்பெற இன்தமிழால் முடியும் என்ற கருத்தை வலியுறுத்தவே ஞானசம்பந்தர் தமிழைத் '**திருநெறிய தமிழ்**' என்று போற்றுகின்றார்.

தம்முடைய முதல் பதிகத்தில், 'தோடுடைய செவியன்' என்று தொடங்கி, "திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" என்று பாடி, வினைப் பயன்களை வெல்லக்கூடிய ஆற்றல் உடையவை தமிழ்ப் பதிகங்கள் என்றுணர்த்துகின்றார்.

தமிழ் மொழி மீது கொண்ட காதலால் தம் பதிகங்களைத் 'தமிழ்' என்றும், 'தமிழ் மாலை' என்றும் சுட்டுகின்றார். தமிழ் ஞான சம்பந்தன், தமிழ் விரகன், நற்றமிழுக்கு இன்துணைவன் ஞானசம்பந்தன், மறைஞான சம்பந்தன் தமிழ், நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞான சம்பந்தன் என்று சம்பந்தர் தமிழோடு 70 இடங்களில் தம்மைப் பிணைத்துக் காட்டியுள்ளார் (மறை. திருநாவுக்கரசு, பெரியபுராண ஆய்வுரை, ப-42). சங்கமலி செந்தமிழ், பாவார் தமிழ், சந்துலாம் (சந்தன மணமுள்ள) தமிழ் என 52 இடங்களில் தமிழ் மொழியைப் பாராட்டியுள்ளார். மொழி உணர்வும், இன உணர்வும் நீங்கினால் நாகரீகமும், பண்பாடும் கெடுமென்பதை உணர்ந்தே தமிழொடு தம்மை இணைத்துப் பாடியுள்ளார் "செந்தமிழ்" ஞானசம்பந்தன்.

**சொற்றமிழ் பாடுதல்**

ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவன் மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி பண் சுமந்த பாடல்களைப் படைத்துத் தமிழிசைத் தொண்டும் புரிந்துள்ளார் சம்பந்தர்.

'**இசையார் தமிழ் விரகன்**' என்று தம் தமிழிசைத் திறத்தை வெளிப்படுத்தும் சம்பந்தர், சாதி வேறுபாடு பாராட்டாது மொழிக்கும், இசைக்கலைக்கும், சமய உணர்வுக்கும் முதன்மை தந்து திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் இணைந்து ஊர் ஊராகச் சென்று தமிழிசைப் பணியாற்றினார். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' எனவும், 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடும் நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துக' என்றும் நாவாரப் போற்றவார் நம்பி ஆரூரன்.

நட்டபாடை, தக்கராகம், குறிஞ்சி, இந்தளம், காந்தாரம், செவ்வழி, தாசாரி போன்ற பல்வேறு பன்களில் தாளத்தோடு இறைவன் புகழைப்பாடிப் பரவினார் சம்பந்தர். திருக்கோலக்காவில் 'மடையில் வாளை பாய' என்ற பாடித் திருக்கரங்களால் தாளமிட, இறைவனின் கருணையினால் திருவைந்தெழுத்து பொறித்த பொற்றாளம் பெற்றார்.

"தமிழை ஏற்காமலும் இறைவனுக்குப் பூசனை புரிவதற்குத் தமிழ் தகுதியற்றது என்றும், வேள்வி முதலியன செய்பவர்கள் தமிழைப் போற்றிக் கற்க வேண்டியதில்லை என்றும் கூறும் கூட்டம் ஒன்று அரசியல் வலுவுடன் இங்கு (தமிழ் நாட்டில்) இருந்திருக்க வேண்டும். அவர்கள் வாயை அடைக்கவே பிள்ளையார் ஓயாமல் தமிழைத் தம்முடன் தொடர்புபடுத்திக் கூறியிருத்தல் வேண்டும்" என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பது போலத் தமிழ் மொழியையும், தமிழிசையையும் காப்பாற்றத் தனியொரு மனிதனாக நின்று போராடியவர் சம்பந்த பெருமான்.

இவருடைய இசைத்தொண்டும், சமயத் தொண்டும் இவருடன் இணைந்த சிவனடியார்களின் சமயத் தொண்டும் சோழர் காலத்தில் பல கோயில்கள் கட்டப்படுவதற்கும், நுண்கலைகள் பல வளர்வதற்கும் துணையாய் நின்றன.

**சாதி ஒழிப்பும் சம்பந்தரும்**

மறையவர் குலத்துதித்த சம்பந்தர், சாதி வேற்றுமையினைப் பாராது திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியுடன் அவரைக் காணவந்தபோது சீர்காழி எல்லைவரை எதிர்சென்று வரவேற்று வணங்கி, 'ஐயர் நீர் உளம் மகிழ இங்கு அணைந்த உறுதியுடையோம்' என்று வரவேற்றார்.

'ஐயர்' (சான்றோர்) என்று பிள்ளையாரால் விளிக்கப்பெற்ற காரணத்தால் 'பெரும்பாணர்' என்றழைக்கப்படும் பேற்றினைத் திருநீலகண்டர் பெற்றார். இவரையும் திருக்கோயில் புறமுன்றில்வரை அழைத்துச் சென்று, "ஏயும் இசையாழ் உங்கள் இறைவருக்கு இங்கியற்றும்" என்று கூறியது அக்கால கட்டத்தில் மிகப் பெரிய சமூகப் புரட்சியாகும்.

சம்பந்தரும், பாணரும், அவர்தம் துணைவியாரும் வேதியர்கள் மிகுந்த சாத்தமங்கலம் வருகின்றனர். முத்தீ வளர்த்து நாளும் வேள்வி செய்வதும், சிவனையும் சிவனடியார்களையும் வழிபடுவதையுமே கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் திருநீலநக்கர். அவருடைய இல்லத்திற்கு வந்த சம்பந்தர் திருநீலநக்கரைத் தனியே அழைத்து, யாழ்ப்பானரும் துணைவியாரும் தங்குவதற்கு ஓர் இடம் அமைத்துத் தரும்படி வேண்டினார். திருநீலநக்கர் சம்பந்தருடன் பழகும் அடியவராயிற்றே. முத்தீ வளர்க்கும் வேதிகையின் அருகே அவ்விருவரும் தங்க இடமளித்தார். ஓம குண்டத்திலிருந்த

செந்தீ வலமாகச் சுழன்று முன்னைவிட ஒரு படி உயர்வாக ஒளி வீசியதாகக் குறிக்கின்றார் சேக்கிழார்.

**மக்கள் பணியே மகேசன் பணி**

தவங்கள்தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடியதோடு சம்பந்தர் நின்றுவிடவில்லை. பல்வேறு வகைகளில் சமுகப் பணியாற்றியமைக்கு இவர் பதிகங்கள் அகச் சான்றுகளாய் அமைகின்றன. திருப்பாச்சிலாச்சிராமம் என்ற நகரில், மழ நாட்டின் அரசனான கொல்லிமழவன் மகள் 'முயலகன்' என்ற நோயினால் வருந்தியபோது, 'துணிவளர்திங்கள்' என்று பதிகம் பாடி நோய் நீக்கினார். திருச்செங்குன்றூரில் உடன் வந்த சிவனடியார்களுக்கேற்பட்ட குளிர்சுரத்தை, '**அவ்வினைக்கு இவ்வினையாம்**' என்ற பதிகம் பாடிப் போக்கினார். வைப்பூரில் வாழ்ந்த தாமன் என்ற வணிகன் மகள் உடன்போக்கு செல்லும் போது, அவள் காதலன் பாம்பு தீண்டி மடிய, '**சடையாயெனுமால்**' என்ற பதிகம் பாடி உயிர்ப்பித்து, தாமே முன்னின்று திருமணமும் செய்வித்தார். மயிலையில் வாழ்ந்த சிவநேசன் மகள் பூம்பாவை அரவு தீண்டி இறந்தாள். மயிலை வந்த சம்பந்தர் '**மட்டிட்ட புன்னையங்கானல்**' பதிகம் பாடி இறந்தவளின் சாம்பலிலிருந்து மங்கையை உயிர்ப்பித்தார். திருவீழி மிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று, பசியால் வாடும் அனைவருக்கும் உணவளித்துப் பசிப்பிணி போக்கினார். "நாதன் விரும்பு அடியார்கள் நாளும் நாளும் உண்பதற்கு வருக என்று தீதில் பறை நிகழ்வித்து" அப்பரும், பிள்ளையாரும் உணவிட்டார்களாம்! 'நாதர் விரும்பும் அடியார்கள்' என்ற தொடர் இங்கு, நாதனால் விரும்பப்பட்ட அடியார்கள் என்று பொருள் தந்து அனைவருக்கும் எந்த வேறுபாடுமின்றி உணவு படைத்தனர் என்பதை நுட்பமாக உணர வைக்கிறது.

**நாளும் கோளும் நல்ல**

மங்கையர்க்கரசியாரின் அழைப்பையேற்றுச் சம்பந்தர் மதுரை கிளம்பியபோது, நாளும் கோளும் சரியில்லை என்று நாவரசர் தயங்க, எம்பெருமானை மனதில் உறுதியாகப் பற்றிக்கொண்டு ஒரு செயலில் ஈடுபடுவார்க்கு எல்லாமே நல்லவைகளாகவே அமையும் என்று பொருள்பட,

*வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே*
*ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே*

என்று உறுதியுடன் பாடிய 'கோளறு பதிக'த்தை ஓதினோமென்றால் ராகு காலம், எம கண்டம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. நல்லவற்றைச் செய்யப் புறப்படும்போது சகுனம் பார்த்தல் தேவையற்றதென்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

**சம்பந்தரும் பெண்மையும்**

சம்பந்தரின் முதல் பதிகம் 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகிறது. நாயகன் நாயகி பாவனையைப் பதிவு செய்தமை இப்பதிகத்தின் தனிச் சிறப்பெனலாம்.

ஆணும் பெண்ணும் சரிபாதி என்னும் கருத்தமைந்த உமையொருபாகன் வடிவத்தை மனதில் கொண்டு 'தோடுடைய செவியன்' என்று பதிகத்தைத் தொடங்கியுள்ளார்.

பாண்டிமாதேவியின் அழைப்பையேற்று மதுரை செல்கிறார். மதுரையை நெருங்கியவுடன், மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை, வரிவளைக்கை, மடமானி, பங்கயச் செல்வி என்று ஐந்து சொற்களால் தான் அன்னையாகக் கருதும் அரசியாரை நாவாரப் போற்றி, பின்னரே பாண்டிமாதேவி என்று சுட்டுகின்றார். தென்தமிழ் நாட்டின் சிவநெறி தழைத்தோங்கத் துணையாயிருந்த அரசியாரைத் திருப்பதிகத்தில் வைத்துப் பாடியிருப்பது பிள்ளையார் பெண்ணினத்திற்குக் கொடுத்திருக்கும் பெருமையாகும்.

பெண்மையைப் போற்றினால், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று அறிவுறுத்துகின்றார். 'பெண்ணிணல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என்று இல்லாளோடு இனிதே இருக்கும் (3:24:1) ஈசனைச் சுட்டிக்காட்டி இல்வாழ்வின் சிறப்பைப் போற்றுகின்றார். 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்', 'பெண்ணாணென நின்ற பெம்மான்', 'பெண்ணினேரொரு பங்குடைப் பெருமான்' என்று உமையொரு பாகனைப் போற்றுகின்றார். அக்காலத்தில் இறைவழிபாட்டில் மகளிரும் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்ததை பலபடப் பாராட்டுகிறார்.

'கோல விழாவின் அரங்க தேறிக் கொடியிடை மாதர்கள் மைந்தரோடும் பாலெனவே மொழிந்தேத்தும் ஆவூர்'. 'நறுமலர் புனலொடு தூபம் சாந்தமும் ஏந்திய கையினராகிக் கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும் கழுமலம்'. 'மாதரொடும் ஆடவர்கள் வந்தடியிறைஞ்சி நிறைமாமலர்கள் தூவி' என இருபாலரும் இறைபணியில் கலந்து கொண்டதைப் போற்றுகின்றனர்.

அனைத்திற்கும் சிகரம் வைத்ததுபோல, ஆதிபூமி என்னும் மணவறையில் அருநிதிப் பாவையின் கரம் பிடித்து, திருநல்லூர்ப் பெருமணம் திருக்கோயிலை அடைந்து, 'கல்லூர்பெருமணம் வேண்டா' என்ற பதிகம் பாட, மிகப் பெரிய ஜோதி தோன்ற, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாதன் நாமத்தை (ஐந்தெழுத்து மந்திரத்தை) ஓதியவாறு மனையாளொடும் மற்றும் மணம் காண வந்த நல்லாருடனும் ஜோதியுள் கலந்தார்.

சம்பந்தருக்கு முன்னும் பின்னும் தோன்றிய அருளாளர்கள் தாம் மட்டுமே முக்திபெற, மனையாளும் மற்றவர்களும் முக்தி பெறச் செய்த பெருமை சம்பந்தருக்கே உரியது.

**முடிவுரை**

பாண்டி நாட்டில் புறச் சமயத்தை வென்று திருநீறு பரப்பி, தமிழ்மொழி, தமிழிசை, தமிழ்ப்பண்பாட்டினைக் காத்து, சாதி வேற்றுமை களைந்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகப் பணியாற்றி, மூடநம்பிக்கைகளைத் தகர்த்து, பெண்மையைப் போற்றிப் பல்லாற்றானும் தொண்டு செய்தவர் திருஞான சம்பந்தப் பெருமான்.

தமிழ் இனம் முழுவதும் யாராவது ஒருவருக்குக் கடமைப் பட்டிருந்தது என்றால், அந்த ஒருவர் ஞானசம்பந்தப் பிள்ளையாரே என்பதை உணர்ந்த சேக்கிழார் 63+9 பேரைப் பாட வேண்டிய கடப்பாடுடைய தம் நூலில் ஒருவருக்கு மட்டும், மூன்றில் ஒரு பங்கு வழங்கித் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் (பெரியபுராணம் - ஓர் ஆய்வு – ப. 138) என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் கூறுவது முற்றிலும் பொருந்தும்.

# 3. நாவுக்கரசரின் உழவாரம் எது?

- சா. சுந்தரபாலு,
*முனைவர்பட்ட ஆய்வாளர், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

## முன்னுரை

உழவாரப்படை, உழவாரம், உழைவாரம் = ஓர் ஆயுதம்; புற்செதுக்கி. இக்கருவி நாவுக்கரசரிடம் சென்று கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து 21ஆம் நூற்றாண்டுவரை மறையாமல் மக்களின் பயன்பாட்டில் நின்று வருகின்றது. விவசாயத்திற்குப் பயன்பட்டுவந்த கருவிகளுள் எத்தனையோ அழிந்திருந்தாலும் விவசாயக் கருவியில் ஓர் கருவியை நாவுக்கரசர் கையில் எடுத்ததால் அக்கருவிக்கு அழிவில்லை. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்த அதே புற்செதுக்கும் கருவிதான் இன்றும் நாவுக்கரசரின் தோளில் இருக்கின்றதா? அல்லது அக்கருவி மாற்றம்பெற்று புதிய வடிவில் இருக்கின்றதா அல்லது 6ஆம் நூற்றாண்டில் நாவுக்கரசர் வைத்திருந்த கருவி இன்று பயன்பாட்டில் உள்ளதா, எந்த வடிவ உழவாரத்தை நாவுக்கரசர் வைத்திருந்தார் போன்ற செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாவுக்கரசரின் காலம்

பல்லவ மன்னன் கல்வெட்டின்படி சீனயாத்திரிகர் யுவான் சுவாங் குறிப்பு மற்றும் பாஹியான், எழுதிய குறிப்பின்படி சமணப்பள்ளிகள் இருந்திருக்கின்றன. அவர்களின் குறிப்பு மற்றும் கல்வெட்டின் சான்றுகள்படி அப்பர் காவியம் புனைந்துரைக்கப்பட்டது அல்ல. அது உண்மை வரலாறு என்று துணியப்படுகின்றது. காஞ்சியில் கி.பி. 550-ல் இராஜசிம்ம பல்லவன் கட்டிய கைலாசநாதர் ஆலயத்தைப் பற்றி அப்பர் பாடி இருப்பதாலும், சாளுக்கிய அரசன் புலிகேசியினுடைய தலைநகராகிய வாதாபி நகரத்தைப் பல்லவ அரசனது படைத்தலைவரான பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் துகளாக்கியதைச் சேக்கிழார் எடுத்துக் கூறியதாலும் இவ்விரு பெருமக்களுக்கிடையே காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக ஆராய்ந்திருக்கின்றார்கள். இவ்வாராய்ச்சியையும் பின்னர் பல புலவர்கள் செய்த ஆராய்ச்சியினையும் துணைக்கொண்டு அப்பர் சுவாமிகள் கி.பி. 574க்கும் 655க்கும் இடையில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று துணியப்படுகின்றது. அப்பர் பிறந்த ஊர் திருமுனைப்பாடி நாடு திருவாமூர். இது பழைய கடலூர் ஜில்லாவின் ஒருபகுதி.

## அப்பர் உருவம் பொறித்தல்

தஞ்சை இராஜராஜேச்சுரம் உடையார் கி.பி. 1014 இராசராசர் 29ம் ஆண்டு அப்பர் முதலிய உருவங்களை தாபித்ததும் - தானம் செய்ததும் (98.1888). கி.பி. 1017 இராஜேந்திரன் மூன்றாம் ஆண்டு அப்பர் முதலிய 4 உருவங்கள் தானம் செய்துள்ளான் என்ற சான்றுகளும் அவரின் முட்டிக்குமேல் வேட்டி உருத்திருராட்சமாலை, கையில் உழவாரப்படை போன்ற உருவங்கள் வைத்துப் படைத்துள்ளான். எனவே, அப்போதிலிருந்து அவர் கையில் உழவாரப்படை வைத்துள்ளார் என்பது நமக்கு புலனாகும். அவரது உருவச் சிலையை நாட்டின் அரசர்கள், காலம், கல்வெட்டு: ராஜராசர்

1-985-1031-1, ராஜேந்திரர் 1013-1045-1; ராஜராஜர்-11-1146-1178-1; குலோத்துங்கர் - III-1178-1261-2; ராஜேந்திரன் - III-1245-1267-1; ஜடாவீரபாண்டியன் - 1253-1; மாறவீரபாண்டியன் 1262-1; விக்கிரமபாண்டியன் 1282-1; ஜடாபராக்கிரமம் - 1184-1; ஆக சோழர் 5 அரசர்களும் பாண்டியர் 4 அரசர்களும் ஆவர்.

மேலும், சேக்கிழாரின் சான்றுகளாக

*"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவம் மதுரவாக்கிற்*
*சேர்வாகுந் திருவாயிற் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே*
*சார்வான திருமனமும் உழவாரத்தனிப் படையும் தாமும் ஆகிப்*
*பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்"*

என்று சேக்கிழார் பெருமானே மேலும் சான்று வைத்துள்ளார்.

**நாவுக்கரசர் வைத்திருக்கும் உழவாரத்தால் புல்லை செதுக்க முடியுமா?**

தற்போது நாவுக்கரசருடைய உருவத்தில் வைக்கப்பட்டுள்ள கருவி தோசை புரட்டி போன்ற நேர் வடிவில் அமைந்துள்ளது. இதன் உருவத்தைப்பற்றி எந்த நூலிலும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. அப்பர் வைத்திருக்கும் கருவியால் புல்லையோ மற்றபொருள்களையோ சுத்தம் செய்யமுடியுமா; எடுக்க முடியுமா? அப்படி எடுப்பது சுலபமான காரியம் அல்ல (செய்துபாருங்கள்) அப்படி செதுக்கினால் புல்லைமட்டும் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செதுக்கினால் செங்குத்தாக மண்தரையில் குத்தும். நாம் எதை எடுக்க வேண்டும் என்று நினைத்தோமோ அதை சுலபமாக எடுக்க இயலாது. மேலும் நாம் புல்லை மட்டும் எடுக்க வேண்டுமானால் நாம் தரையோடு தரையாக சாய்க்க வேண்டும். அப்படி சாய்த்தால் பிடித்திருக்கின்ற நம் கைவிரல்கள் தரையில் தேய்க்கப்படும். நாம் என்ன பணியை நாவுக்கரசர் செய்தார் என்று எடுத்துஇயம்புகின்றோமோ அப்பணியை நாவுக்கரசர் உழவாரத்தினால் செய்ய இயலாது. இப்படி சிரமப்படக்கூடிய கருவியை 80வயது நாவுக்கரசர் வைத்திருப்பது சாத்தியமா?

**கருவி எதனால் செய்யப்பட்டது**

தற்போது நாவுக்கரசர் கையில் வைத்திருக்கும் கருவி முழுவதும் இரும்பினால் செய்ததுபோல் தெரிகிறது. அப்படி அக்கருவி இரும்பினால் செய்யப்பட்டிருந்தால் அதன் கனம் சற்று அதிகமாகவே இருந்திருக்கும். சென்ற இடமெல்லாம் அதனை தோளில் சுமந்து, நடந்தே செல்வது சிரமமாகவும் இருக்கும். நாவுக்கரசர் 81 வயதுவரை அக்கருவியை சுமந்திருந்தால் பலதுன்பங்களை அக்கருவியினாலே அனுபவிக்க நேர்ந்திருக்கும். எனவே அப்பரின் தொண்டிற்கு அக்கருவி சாத்தியமாகாத ஒன்று, மட்டுமல்லாமல் அக்கருவி மரத்தினால் செய்து, செதுக்கும் முனை இரும்பினால் ஆன நேர்வடிவமாக இருந்தாலும் அக்கருவியினால் புல்லை செதுக்கமுடியாது. அப்படி இரும்பினால் இருந்திருந்தால், எவ்வளவோ கல்வெட்டுகளும், செப்பேடுகளும், சிலைகளும் பூமிக்கடியில் புதைந்து கிடைத்திருப்பதுபோல் இக்கருவியும் கிடைத்திருக்க வாய்ப்புண்டு.

**தற்பொழுதுள்ள கருவி**

பழைய மாவட்டமான தென்னார்க்காடு ஜில்லா (தற்போது அரியலூர் மாவட்டம்) திருக்களப்பூர் என்ற ஊரில் விவசாயக் கருவிகளுள் ஒரு கருவியின் பெயர் உழவாரம், இன்றும் அக்கருவியின் பெயர் உழவாரமே.

இக்கருவியின் பிடி மரக்கட்டையினாலும் செலுத்தும் நுனிப்பகுதி தட்டையான இரும்புத் தகட்டாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது களகொட்டு, மண்வெட்டி இரண்டையும் சேர்ந்த ஒரு வடிவம். நேர்வடிவில் இல்லாமல் வளைந்துள்ளது. அதனை கையிலோ, துணிப்பையிலோ வைத்து எடுத்து செல்லலாம். அதனால் தூய்மை செய்வது எளிது. கை காய்ப்பு கொடுக்காது. புல்லை எந்த அளவில், எந்த ஆழத்தில் நம் தேவையைப் பொறுத்து எடுக்கவேண்டுமோ, அக்கருவியின் அமைப்பை (உயரம்) மேலே தூக்குவதோ கீழே இரக்குவதோ செய்தால் நாம் நினைத்த புல்லையோ, மண்ணையோ எடுக்கலாம். இன்று திருக்களப்பூரில் கால்நடைகளுக்கு புல்லை செதுக்க இக்கருவி பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. மண்வெட்டிக்கு இலை மாட்டுவது போன்று இதற்கும் இலை மாட்டுகிறார்கள். அக்கருவியின் பிடியானது நேராக சென்று சிறிது வளைந்து மீண்டும் நேராக உள்ள பகுதியில்தான் இலை சொறுகப்பட்டுள்ளது.

### விவசாயக் கருவிகளுள் ஒன்று

சிறப்பு முறையால் உழைப்பு நெறி (சரியை) யை விளக்க வந்தார் நாவுக்கரசர். வழிபடும் நெறியை விளக்கவந்தார் (கிரியை) ஞானசம்பந்தர். மன ஒருமையைக் காட்ட (யோகம்) ஆரூராரும், மெய்யுணர்வு (ஞானம்) நெறியை உணர்த்த மாணிக்கவாசகரும் வந்தார்கள். இதில் சரியை - உடலுழைப்பின் பணியை விளக்கியவர் அப்பர். உழவாரப்படை, எளிமையாக புற்களை மட்டும் செதுக்கக்கூடியது. ஆண்களுக்குகென்று தனிக் கருவியும் பெண்களுக்குகென்று தனிக் கருவியும் விவசாயத்தில் பயன்பட்டு வந்த காலத்தில் (களகொட்டு- பெண்கள் கருவி; மண்வெட்டி - ஆண்கள் கருவி) இவ்உழவாரம் இருவருக்கும் பொதுவாக பயன்படக்கூடியதாக அமைந்துள்ளது. இக்கருவி விவசாயக் கருவிகளுள் ஒன்று. பெரும்பாலும் இக்கருவி வானம்பார்த்த பூமியாக (Dry land) உள்ள நிலத்திலேயே பயன்பட்டு உள்ளது. இதன் பணி புல்லைச் செதுக்குவது, களம், வழி மற்றும் ஆடு-மாடுகளுக்கு புல் செதுக்குவதற்கும் பயன்படுகிறது. இக்கருவி மண்வெட்டி, களகொட்டு, அரிவாள் போன்ற மூன்று கருவிகளின் வேலைகளும் ஒருங்கே செய்யும் ஒரு கருவியாகும்.

### இன்று எது புழக்கத்தில் உள்ளது

அப்பர் பெருமான் வைத்திருக்கின்ற கருவி போன்ற விவசாயத்தில் அப்படியொரு கருவி எந்த ஒரு மாவட்டத்திலும் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. அப்படி அப்பர் வைத்திருக்கின்ற கருவி தான் உண்மையானதென்றால் அக்கருவி எப்படி மறைந்துபோனது. எனவே, இன்று அப்பருடைய தோளில் வைத்திருக்கின்ற கருவியை அன்று அப்பர் பெருமான் வைத்திருக்க வாய்ப்பில்லை. இன்று புழக்கத்தில் மக்கள் பயன்படுத்துகின்ற இந்த உழவாரத்தைத்தான் அன்று அப்பர் வைத்துக்கொண்டு தொண்டு செய்திருக்கவேண்டும். இன்றும் திருக்களப்பூரிலும் மற்ற ஊர்களிலும் பயன்பாட்டில் உள்ளது. அதனைப் பெயர்சொல்லி அழைக்கும் பெயரே இன்றும் 'உழவாரம்' தான்.

### எப்படி மாறியது

அன்று அப்பர் வைத்திருந்த கருவி இடைப்பட்ட காலத்தில் கற்றளி/படங்களில் அதன் உருவம் எப்படி மாற்றம் பெற்றது? சற்று சிந்தித்தால், அப்பரின் உருவத்தைப் பிற்காலத்தில் வந்த மன்னர்கள் தான் வைத்துள்ளார்கள். அப்பரோ அகச்சான்றாக தன் எந்தப் பாடலிலும் அவரது உடல்தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அந்தக் கருவியின் அமைப்புப் பற்றியும் குறிப்பிடவில்லை. மன்னர்கள் காலத்தில் ஏற்பட்ட கற்சிலையின் வடிவத்தின் போது சற்று

வளைவுள்ளதாக இருந்திருக்கலாம். காலம் மாற மாற அடுத்து வந்த சிற்பத்தின் வடிவங்கள் நேராக உருவம் பெற்றிருக்கலாம்.

**தற்போது அப்பரின் உருவம்**

தற்போது உள்ள அனைத்துக் கோயில் மற்றும் பல்வேறு சைவ அமைப்புகள், மடங்கள் வெளியிடும் படங்கள் அனைத்திலும் தோசைத் திருப்பி போன்ற உழவாரப்படையே உள்ளது. பழையபடத்தில் உள்ள உழவாரம் அழகைத் தருபவனவாகவே அமைந்துள்ளது. ஆனால் தற்போது கிடைத்த உழவாரத்தைப் பொருத்திப் பார்த்தால் தொண்டின் சிறப்பு, மேலும் கூடுகின்றது.

சைவசித்தாந்த வெளியீடு - தேவாரப்பதிகங்கள் - 1974 (சதாசிவம் செட்டியார்). இப்புத்தகத்தில் அப்பரின் செயல்பாடுகளை விளக்குவதாக 8 படம் வரைந்து பதிப்பித்துள்ளார்கள். அது திலகவதியாரிடம் திருநீறு பெறுதல் தவிர யானையை ஏவுதல், கடலில் மிதந்து வந்த காட்சி, அப்பூதி அடிகளாரின் பிள்ளையை உயிர்ப்பித்த காட்சி, சம்பந்தரும் அப்பரும் ஒருவரொடொருவர் வணங்கும் காட்சி, நீற்றறையில் அமர்ந்த காட்சி, அரம்பையர் கண்டு வணங்காதிருத்தல் போன்ற படங்களில் அப்பர் கையில் உழவாரப்படை பொருத்தப்பட்டுள்ளது. திலகவதியாரிடம் திருநீறு பெறும்போது மட்டும் அவரின் தோளில் உழவாரம் இல்லாமலும் அதிலிருந்து இறைவனடி சேர்ந்த கடைசி நிகழ்ச்சி வரை கையில் உழவாரம் வைத்துள்ள காட்சியே படமாக அச்சிடப்பட்டுள்ளது. இதிலிருந்து அப்பர் சமணத்திலிருந்து சைவத்திற்கு வந்து திலகவதியார் செய்த தொண்டைக் கொண்டே இக்கருவியை கையில் எடுத்திருக்க வேண்டும். மற்ற கருவிகளைக் கொண்டு ஒரு வேலையைச் செய்யும்போது ஏற்படுத்தாத ஒரு மன அமைதி இக்கருவியினால் உட்கார்ந்துகொண்ட இருகைகளாலும் பிடித்துச் செதுக்கும்போது, நம் மனம் ஒரு கணம் அமைதியைப் பெறுகின்றது; செய்து பாருங்கள்.

**சேக்கிழாரின் கருத்து**

பெரியபுராணப் பாடலின் படி (416, 417) அப்பர் இறுதியாக புகலூரில் உழவாரப்பணியை குளத்தின்கரையில் செய்கின்ற பொழுது, பொன்னும் மணியும் உழவாரம் நுழைத்திட்ட இடமெல்லாம் தோன்றின என்கிறார்.

அப்பொழுது சேக்கிழார் (417), "வாகீசப்பெருமான் உழவாரத்திலேந்தி வாவியினிற் புக எறிந்தார்" என்று குறிப்பிடுகின்றார் (வாவி-நீர்). அந்த நீரில் பொன்னும் மணியும் பருக்கைகளும் நீரில் அமிழ்ந்து மறைந்து போகும்படி உழவாரத்தில் ஏந்தி எறிந்தார் என்று உள்ளது. ஏந்தி என்று வந்துள்ளதால் நாவுக்கரசரின் உழவாரத்தினால் ஏந்தி அள்ள முடியாது. ஏந்தி என்ற சொல் இன்றும் மக்களிடத்தில் வழங்கி வருகின்றது. (மண்வெட்டியால் மண்ணை ஏந்து, சொறண்டு, செதுக்கு, வரண்டு) ஏந்து கெந்து என்றால் உழவாரத்தின் இலையில் எந்த அளவு மண் கொள்ளுமோ, அந்த அளவு அள்ளினார் என்ற பொருள். அவ்வாறு ஏந்தக்கூடியது தற்பொழுது கிடைத்துள்ள உழவாரத்தினால்தான் செய்யமுடியும். தற்பொழுது உழவாரப்பணி என்ற சொல்லின் பொருள் கோயிலைச் சுத்தம் செய்வதையே குறிக்கின்றது. ஆனால் இதன் பழைய பொருள் மாடு - ஆடுகளுக்குப் புல்லைச் செதுக்குவதே குறித்தது எனலாம். (உழவாரத்தினால் செய்யும் பணி - உழவாரப்பணி)

**வட்டார வழக்கில் உழவாரம்:**

இந்த உழவாரம் கருவி பழம் தமிழகம் முழுவதும் விவசாயத்துப் பயன்பட்டிருக்க வேண்டும். பல ஊர்களில் மறைந்து, சில வட்டங்களில் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. கருவிகளில் வடிவமாற்றம் இல்லை ஆனால் வார்த்தையில் ஒலிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

அரியலூர் - உழவாரம் / ஒழவாரம்,

புதுக்கோட்டை - உலவாரம் / எழவாரம்

கன்னியாகுமரி மற்றும் கேரளா - புல்லுசெத்தி.

# 4. அப்பர் பார்வையில் கடமையும் உரிமையும்

- புலவர் த. இராமலிங்கம், எம்.ஏ., எம்.எட்.
*மேனாள் தலைமை ஆசிரியர் - செயலாளர் - மாணவர் மன்றம், சென்னை.*

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர் அப்பரடிகள். திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவராகிய வாகீசர் இறைவனுக்கும் சைவ சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் தொண்டு செய்வதே தம்முடைய கடமையாகும் என்று எண்ணினார். எண்ணியவாறே தொண்டுச் செல்வராய்த் திகழ்ந்தார்.

தனிமனிதன் வாழ்க்கையில் உயர வேண்டுமானால் - வளமாக வாழவேண்டுமானால் கடமை தவறாமல் செயலாற்ற வேண்டும். சமுதாயம் முன்னேற வேண்டுமானால் சமுதாயத்தில் வாழும் மக்கள் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை உரியநேரத்தில் பொறுப்புணர்ச்சியோடு செய்திடல் வேண்டும். கடமையைச் செய்தவர்களுக்கே உரிமையைக் கேட்டும் தகுதி உண்டு என்று அப்பரடிகள் தம்முடைய தேவாரப் பாடலில் மிக அருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

*"கருவாய்க் கிடந்து உன்கழலே நினையும் கருத்துடையேன்*
*உருவாய்த் தெரிந்து உன்நாமம் பயின்றேன் உன தருளால்*
*திருவாய் பொலிய சிவாய நமஎன் று நீறணிந்தேன்*
*தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூர் அரனே."*

வாக்கின் மன்னர் தம்முடைய வாழ்க்கை அனுபவத்தையே இப்பாடலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். "யான் என்தாய் மாதினியார் மணிவயிற்றில் கருவாய் இருந்தபொழுதே, திருப்பாதிரிப்புரியூரில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய உன்னுடைய திருவடியையே நினைந்த வண்ணம் இருந்தேன். குழந்தையாகப் பிறந்தபின் உன்னுடைய திருநாமத்தையே - திருப்பெயரையே

சொல்லிக் கொண்டிருந்தேன். அருள் நலம் கனிந்த உன்னுடைய திருவருளினால் திருவாய் பொலிய 'சிவாய நம' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லித் திருநீறு அணிந்தேன். என்னுடைய கடமைகளை யான் மிகுந்த ஈடுபாட்டுடன் பக்தியுடன் செய்துள்ளேன்" என்று தாம் செய்த கடமைகளை எல்லாம் முதலில் பெருமானிடம் எடுத்துச் சொல்லுகிறார். பின்பு "எனக்கு நீ சிவகதியை - வீடு பேற்றைத் தந்தருள வேண்டு"மென்று உரிமையுடன் கேட்கின்றார்.

அப்பரடிகளின் கடமை உணர்வும் உரிமை வேட்கையும் இன்றைய சமுதாயத்திற்கு வரவேண்டுமானால், மக்கள் அனைவரும் முதலில் தாம் தம்முடைய கடமைகளைச் செய்தோமா என்ற வினாவை மனத்தில் எழுப்பவேண்டும். கடமையைச் செய்த பின்பே உரிமைக்குக் குரல் கொடுக்கவேண்டுமென்ற உணர்வு உருவாக வேண்டும். அப்பொழுதுதான் இந்தச் சமுதாயம் முன்னேறும்!

நாட்டு முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட தலைவர்கள் "காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது" என்று காலத்தின் அருமையையும் கடமையின் இன்றியமையாமையையும் வலியுறுத்தி வருகின்றனர். 'தொண்டுக்கு முந்து; தலைமைக்குப் பிந்து' என்பார் விவேகானந்தர்.

'தொண்டலால் துணையுமில்லை' என்ற சிந்தனையுடன் வாழ்ந்த அப்பரடிகள் காஞ்சியம்பதியில் ஏகாம்பரநாதரிடம் உள்ளம் உருகிப் பாடுகின்ற தேவாரப் பாடலில் கடமை உணர்வுடன் கூடிய உரிமை வேண்டும் பாங்கு எதிரொலிக்கின்றது.

*"கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு*
*உருகிற்று என் உள்ள மும்கிடந்து அலந்து எய்த்தொழிந்தேன்*
*திருவொற்றி ஊரா, திருஆலவாயா, திருவாரூரா*
*ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே."*

"யான் என் தாயின் வயிற்றில் கருவாகத் தோன்றிய நாள் முதலாக உன் திருவடியைக் காண்பதற்கு என் உள்ளம் உருகியது. மனம் வாடி, மெய்வருந்தி இளைத்தேன்" என்று தம் நிலையை முதலில் உணர்த்துகிறார். பின்னர் "திருவொற்றியூர் பெருமானே! திருஆலவாய் இறைவனே! திருவாரூர் ஈசனே! ஒருபற்றுக் கோடும் இல்லாமல் வாடி வருந்தும் என் நிலை கண்டு இரங்கி அருள்புரிவாயாக" என்று கச்சி ஏகம்பனிடம் வேண்டுகிறார்.

தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள அம்பலவாணரை வாக்கின் மன்னர் அகம் குழைந்து பாடும் பாடலிலும் கடமையும் உரிமையும் வெளிப்படுகின்றன:

*"படைக்கலமாக உன்நாமத்(து) எழுத்(து) அஞ்சு என்நாவிற் கொண்டேன்*
*இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட் செய்கின்றேன்*
*துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன்*
*அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத் தரனே."*

"'சிவாய நம' என்னும் ஐந்தெழுத்தை என்னைக் காக்கும் படைக்கலமாக நாவில் கொண்டுள்ளேன். ஏழு பிறவிகளிலும் உனக்குத் தொண்டு செய்கின்றேன். என்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் உன்னை விட்டுப் போகேன். உன் திருவடியைத் தொழுது வணங்கித் திருநீறு அணிகின்றேன். என்னை உன் அடைக்கலமாக ஏற்றருள்வாயாக" என்று நெஞ்சம் நெகிழ்ந்து வேண்டுகிறார்.

*"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்*
*இன்பநிலை தானே வந்தெய்தும் பரா பரமே"*

என்பது தாயுமானவர் வாக்கு. பயன் கருதாது தொண்டு செய்தால் இன்பநிலை தானாகவே வந்தடையும்.

தாண்டக வேந்தர் ஆற்றிய கடமைகளை நினைக்கும்பொழுது வான்புகழ் வள்ளுவரின் பின்வரும் குறள் நம் மனக்கண் முன் தோன்றுகிறது:

*"கடனென்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."*

ஆன்மிகத்துறையில் தனிமுத்திரை பதித்த அப்பரடிகளின் கடமையும் உரிமையும் பற்றிய சிந்தனைகள் மக்கள் உள்ளங்களில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

# 5. சுந்தர வேடம்

- தமிழாகரர், முனைவர் பா. சுந்தர் எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, உருமு தனலட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 019.*

சைவ சமய குரவர் நால்வர், இவர்களுள் திருஞானசம்பந்தர் குழந்தைத் திருமேனியுடன் திருக்கையில் தாளத்தோடு காட்சி தருவர். திருநாவுக்கரசர் முதிர்ந்த திருமேனியோடு உழவாரப்படையுடன் காட்சி நல்குவர். மாணிக்கவாசகர் திருக்கையில் திருவாசகச் சுவடியோடு தரிசனம் அளிப்பர். ஆனால் நம்பியாரூரர் இவர்களிடமிருந்து மாறுபட்டுத் தோன்றுவர். அவர் தாங்கியுள்ள திருவேடம் குறித்து இக்கட்டுரை விளக்குகின்றது.

சுந்தரர் தாங்கியுள்ள வேடம் சுந்தரவேடமாகும். இவ்வேடத்தை அறிந்துகொள்ளப் பெரியபுராணமும் ஏழாம் திருமுறையும் துணைசெய்கின்றன. முதற்கண் அவரது திருமணக் கோல அலங்காரத்தைச் சேக்கிழார் வாயிலாக அறியலாம்.

### திருமணக் கோலப் புனைவு

நம்பியாரூரர் ஆதிசைவ மரபில் பிறந்து நரசிங்க முனையரையருக்கு மகனாக வளர்ந்தார். அவருக்க புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகளை மணம் பேசினர். சுந்தரர் மணக்கோலம் பூண்டார். அவர் மாலையும் தாரும் வாசம் வீசும் மஞ்சனச்சாலையில் திருமஞ்சனம் செய்விக்கப்பட்டார். நறுமணமிக்க பசும் கர்ப்பூரச் சுண்ணத்தில் பனிநீர் கூட்டி அதனுடன் சந்தனம் கலந்து மான்மதச் சாந்து தோய்த்துக் கலவையாக்கி மேனியெங்கும் பூசினர். மாலை தாமம் முதலியவற்றால் அலங்காரம் செய்வித்தனர். இருளைப் போக்கும் ஒளியுடைய மணிகள் பதித்த அணிகலன்களை அணிவித்தனர்.

இவ்வாறு மணமகனுக்குரிய கோலம் கொண்டாலும் அவர்தம் மரபுக்குரிய வைதிகத் திருவும் பொங்கக் காணப்பட்டார். இக்காட்சியைக் கண்டோர், கண்கள் எண்ணிலாதன வேண்டும் என வியக்குமாறு சுந்தரர் மணவேடம் அமைந்ததாகச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். இறைவன் கிழ வேதியர் வடிவில் தோன்றிச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார்.

**என்றும் மணக்கோலம்**

திருவெண்ணெய் நல்லூரில் இறைவனுக்கு ஆட்பட்ட சுந்தரர் பல தலங்களைத் தரிசித்த வண்ணம் திருவாரூர் வந்தார். ஆரூர் இறைவன் அங்கு ஓர் அற்புதம் நிகழ்த்தினான். தம்மைச் சுந்தரருக்குத் தோழமையாகத் தந்தான்; ஓர் அறிவிப்பையும் செய்தான்.

*"வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவ னார் அருளாலோர் வாக்குத்*
*தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம் நாம்முன்பு தொண்டு கொண்ட*
*வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம் என்றும் புனைந்துநின் வேட்கைதீர*
*வாழிமண் மேல்விளை யாடுவாய்"*

என்று சேக்கிழார் பெருமான் ஆரூர் இறைவன் செய்த அதிசயத்தைப் பாடியுள்ளார். இப்பாடலில் இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஒன்று, சுந்தரர் ஆரூர் இறைவனுக்குத் தோழராதல். மற்றொன்று, சுந்தரர் கொண்ட கோலம். அதாவது, புத்தூரில் இறைவன் தடுத்தாட்கொண்டபோது சுந்தரர் தரித்த கோலமாகும். இறைவனை மாணிக்கவாசகர், 'நித்த மணாளர் நிரம்ப அழகியர்' என்று பாடியுள்ளார். இறைவன் தாம் மணக்கோலத்துடன் மிகுந்த அழகுள்ளவனாக இருப்பது போன்று தம் தோழரான சுந்தரரையும் என்றும் மணக்கோலத்துடன் அலங்கார நிலையில் இருக்குமாறு பணித்தான்.

**சைவத் திருக்கோலம்**

சுந்தரர், இக்கோலத்துடன் ஆரூரில் பரவையாரைக் கண்டார்; காதல்வயப்பட்டார். அம்மையாரும் இக்கோலம் கண்டு அவர் வயப்பட்டார். சுந்தரர் ஆரூர் இறைவனிடம் பூவின் மங்கையைத் தந்து ஆவி நல்குமாறு வேண்டினர். ஆரூர் இறைவன், சுந்தரர் - பரவையார் திருமணத்தை முடித்தான். சுந்தரர் பரவையாருடன் ஆரூர் இறைவனை வழிபடப் புறப்பட்டார். வழியில் அவரைக்கண்ட மங்கையர்கள் வாயிலாக மீண்டும் அவரது வேடப் பொலிவைச் சேக்கிழார் இருபாடல்களின் பாடியுள்ளார்:

*"அந்தரத் தமரர் போற்றும் அணிகிளர் ஆடைசாத்திச்*
*சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்*
*சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி*
*இந்திரத் திருவின் மேலாம் எழில்மிக விளங்கித் தோன்ற"*

*"கையினிற் புனைபொற் கோலும் காதினில் இலங்கு தோடும்*
*மெய்யினில் துவளு நூறும் நெற்றியில் விளங்கு நீறும்*
*"ஐயனுக் கழகிதாம்" என்றாயிழை மகளிர் போற்றச்*
*சைவமெய்த் திருவின் கோலந் தழைப்பவீ தியினைச் சார்ந்தார்"*

இப்பாடல்களில் சேக்கிழார் சுந்தரரின் சுந்தர வேடத்தைக் குறித்துள்ளார். "மேனியின் அழகிய பட்டாடை தோள்களிலும் மார்பிலும் சந்தனக் குங்குமக் கலவை, சுந்தரச் சுழியம் சாத்தி, சுடர்மிகு

அணிகலன்கள் அணிந்துள்ளவராக"ச் சுந்தரர் புனையப்பட்டுள்ளார். இத்திருக்கோலம் இந்திரன் பெற்றுள்ள செல்வத்திற்கும் மேலான எழிற்கோலமாகும். மேலும் கையினில் பொன்னால் புனையப்பட்ட பொற்கோலம் சுந்தரர் தாங்கியுள்ளார். திருக்காதுகள் தோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மார்பினில் முப்புரி நூல் விளங்கியது. நெற்றியில் திருநீற்றுக்கோலம் எனச் சேக்கிழார் இவ்வடிவழகைத்தியான சுலோகமாகப் பாடியுள்ளார். இத்திருக்கோலமே சைவத் திருக்கோயில்களில் நாம் இன்று வழிபடும் சுந்தரர் திருமேனியாகும்.

செய்வச் சேக்கிழார் சுந்தரர் வேடம் குறித்துப் பெரியபுராணத்தில் மூன்று இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஒன்று, திருமணக் காலத்தில் புனையப்பட்ட மணக்கோலம். நான்கு பாடல்களால் இக்கோலம் புனையப்பட்ட விதத்தைச் சேக்கிழார் பாடியுள்ளார். ஆரூர் இறைவன் தோழமை அறிவிப்புச் செய்தபோது அவரால் குறிப்பிடப்படும் கோலம். அதாவது, சுந்தரர் மணக்காலத்துக் கொண்ட கோலமாகும். இது இரண்டாவதாகச் சேக்கிழார் குறிப்பிடும் சுந்தரர் வேடம் குறித்த செய்தியாகும். ஆரூர் வீதியில் கண்டோர் கூற்றாக இடம்பெறும் கோலம் மூன்றாவதாகும்.

**ஐயனுக்கு அழகு**

ஆரூர் இறைவன் ஆணைப்படி அன்றுமுதல் சுந்தரர் எவ்வாறு தம்மை அலங்கரித்துக் கொண்டார்? இத்திருக்கோலம் அவரது திருமேனிக்குப் பொருந்தியதா? சைவத்தொண்டராகிய அவர் தாங்கிய இக்கோலம் மற்றவரால் எவ்வாறு மதிக்கப்பட்டது? சிவவேடத்திற்கு இக்கோலம் எவ்வகையில் அழகூட்டும்? என்பன போன்ற வினாக்கள் சேக்கிழாரின் உள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண்டும் அல்லது இவ்வினாக்கள் படிப்பவர் மனதில் தோன்றலாம் என்று சேக்கிழார் கருதியிருத்தல் கூடும். இவ்வினாக்களுக்கு விடையாக மீண்டும் மூன்றாம் முறையாகச் சுந்தரர் தரித்த வேடப் புனைவைக் கண்டோர் கூற்றாகச் சேக்கிழார் பாடியுள்ளார்போலும். மேலே குறிப்பிடப்பெற்ற இரண்டாம் பாடலில் மூன்றாம் அடிக்கண் 'ஐயனுக்கு அழகு இதாம்' என்னும் தொடர் காணப்படுகின்றது. இது பொருள் பொதிந்த தொடராகும். சிவனடியார்கள் ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையாகக் கோலம் கொள்வர். சுந்தரர் வேடம் இதிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றது. இதனை ஆழ்ந்து சிந்தித்த சேக்கிழார் சுந்தரருக்கு மட்டும் திருவருள் ஆணையால் இக்கோலம் பொருந்துவதாக இக்கூற்று வழிக் குறித்துள்ளார். இத்தொடரை 'ஐயனுக்கு (சுந்தரர்) அழகு இதாம்' எனவும் பொருள்படுமாறு சேக்கிழார் அமைத்துள்ளார். ஐயனுக்கு இக்கோலத்தால் அழகாம்; இக்கோலம் ஐயனால் அழகு பெறுகின்றது என இருநிலையில் பொருள்படுமாறு உடன்பாட்டுப் போக்கில் இத்தொடரைச் சேக்கிழார் பாடியுள்ள திறம் வியப்புக்குரியது. மேலும் சிவனடியாருக்கு இக்கோலம் அழகா? எனப் பொருள் கொள்ளவும் இத்தொடரமைப்பு வழிசெய்கின்றது. வினாப் பொருண்மையில் கண்டோர் கூற்றாக அமைந்துள்ளமையும் இப்பொருள் காணுதற்கு வழிசெய்கின்றது.

**சுந்தர வேடம்**

திருத்தொண்டர்கள் இறைவனிடம் வீடுபேற்றையும் விரும்பாதவர்கள், கும்பிடும் பணியை மட்டும் செய்பவர்கள். இது திருக்கூட்டச் சிறப்பை உணர்த்த, சேக்கிழார் அருளியது ஆகும். சுந்தரர் இதிலிருந்து மாறுபட்டுள்ளார். தமது தேவைகளை இறைவனிடம் உரிமையோடு பாடிப் பெற்றுள்ளார். இது தோழமையால் வந்த உரிமையாகும். இவ்வழி திருநாகைக் காரோணத்து இறைவனிடம் தம் விருப்பங்களைச் சுந்தரர் ஒரு பதிகம் வரி பாடியுள்ளார்.

“அணிவதற்கு முத்துமாலையும் மாணிக்க மாலையும் வேண்டும். உடம்பில் பூசிக்கொள்வதற்கு கத்தூரியும் சந்தனமும் வேண்டும். உடுத்திக் கொள்வதற்குப் பட்டாடைகள் வேண்டும். கந்தம் முதல் ஆடை ஆபரணம் வேண்டும். பட்டோடு சாந்தம் வேண்டும். கற்றனைய கடும்புரவி வேண்டும். பொற்சுரிகை, பொற்பூ, பொற்பட்டிகைத் தந்தருள வேண்டும். கறிவிரவு நெற்சேறு முப்போதும் வேண்டும்”.

மணக்கோலம் என்னும் புனையுமாறு இறைவன் ஆணையிட்டான். இக்கோலப் பராமரிப்பிற்குச் சுந்தரர் மேற்குறித்த பொருள்களை இறைவனிடம் வேண்டியுள்ளார். கோலம் புனைந்து கொள்ளுமாறு அருளிய இறைவனே அக்கோலப் பராமரிப்பிற்கும் துணை செய்தல் வேண்டும் என்ற கருதிய சுந்தரர் இவ்வாறு வேண்டியுள்ளார். சேக்கிழார் புனைந்துள்ள சுந்தரர் வேடத்திற்கும் மேற்படிப் பதிகத்தில் சுந்தரர் இறைவனிடம் பணித்தருளுமாறு வேண்டிய பொருள்களுக்கும் தொடர்பு இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். தாம் இவ்வாறு தம் வாழ்நாளில் வேடம் புனைந்தமையைச் சுந்தரரே,

*“சுந்தர வேடங்களால் துரி சேசெயுந் தொண்டன்”*

என்று திருநொடித்தான் மலைப் பதிகத்தில் பாடியுள்ளார். இவ்வடிக்கு “அடியவர் வேடத்தை மேற்கொள்ளாது அழகைத் தரும் வேடங்களைப் புனைந்து கொண்டு” என்று மகாவித்துவான் சி. அருணை வடிவேலர் வரைந்துள்ள பொழிப்புரையும் ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இவ்வாறு, திருத்தொண்டர்கள் மேற்கொள்ளும் சிவவேடத்திலிருந்து சுந்தரர் தாங்கிய வேடம் மாறுபட்டுள்ளமையை அறியலாம். இவ்வேடம் இறைவன் ஆணையால் சுந்தரர் ஒருவருக்கு மட்டும் அமைந்த சுந்தர வேடமாகும்.

## 6. ‘பிறப்பு’ப் பற்றிப் பாம்பன் சுவாமிகள்

– பேராசிரியர் முனைவர் ப. இராமன்,
44, இராமகிருட்டிண மடம் சாலை, சென்னை – 4.

இவ்வுலகில் பிறக்கும் வேறு வேறு வகையான பிறப்புக்களையும் அவற்றின் தனித் தனித் தொகையையும் பற்றிப் பழம்பாடல் ஒன்று பின்வருமாறு விளக்குகின்றது:

*ஊர்வ பதினொன்றாம்; ஒன்பது மானிடம்;*
*நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய*
*பந்தமாம் தேவர் பதினா லயன்படைத்த*
*அந்தமில் சீர்த்தா வரம்நா லைந்து.*

எழுவகைப் பிறப்பில் ஊர்வன பதினோரு இலட்சம் வகையின; ஒன்பது இலட்சம் வகையினர் மானுடர்; நீர்வாழ்வன பத்து இலட்சம் வகையின; பறவைகள் பத்து இலட்சம் வகையின; விலங்குகள் பத்து இலட்சம் வகையின; தேவர்கள் பதினான்கு இலட்சம் வகையினர்; தாவரம் இருபது இலட்சம் வகையின; இவற்றின் தொகை எண்பத்து நான்கு இலட்சம் ஆகும்.

எழுவகைத் தோற்றத்தையும் ஆய்வு செய்த விஞ்ஞானிகள் எவரும் ஒவ்வொரு வகைப் பிறப்பிலும் இலட்சக்கணக்கான வேறுபாடுகள் உள்ளன என்று அறிந்து கூறியுள்ளதாகத் தெரியவில்லை. ஓரளவே அவர்கள் கூறியுள்ளனர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். விஞ்ஞானிகள் பசுநூல்களையும் பாச நூல்களையும் கற்று ஆய்வுசெய்பவர்கள். அவர்கள் ஞானம் பசுஞானமும் பாசஞானமும் ஆகும். இவ்விரு ஞானங்களால் பசு, பாசங்களை முழுமையாக அறிதல் இயலாது. ஆயின் எதனால் முழுவதும் அறிய இயலும் எனின், பதிஞானம் ஒன்றால் மட்டுமே என்க. முற்கூறிய இலட்சக்கணக்கான பிறப்புவகைகள் பதிஞானம் பெற்ற ஞானிகளால் எளிதில் அறிய முடியும். இப்பழம் பாடலும் இந்த உண்மையையே உணர்த்துகின்றது.

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில், சிவபுராணத்தில் "புல்லாகி" எனத் தொடங்கி "எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" என முடித்துள்ளார். திருவாசக உரையாசிரியர் கா. சு. பிள்ளை பின்வருமாறு கூறியுள்ளார்: "உலகத்தோற்றத்தில் கற்பாறை அணுக்களின் அடங்கிக் கிடந்து பின்பு புல்லாகியும், அடர்ந்த புற்செடிகளாகியும், மரங்களாகியும் படைக்கப்பட்டு நிகழ்கின்ற பல்கோடி நிலையியற் பொருள்களுள்ளும் புழு, பாம்பு, முதலிய ஊர்வனவாகியும் பறப்பனவாகியும், விலங்குகளாகியும், மக்களாகியும், பேயினங்களாகியும், பூதகணங்களாகியும், வலிய அசுரராயும், முனிவராயும், விண்ணவராயும், படைக்கப்பட்டு இயங்குகின்ற பல்கோடி பிராணிகளுள்ளும், அடங்கிய எல்லா வகையான பிறப்பினும் உடலெடுத்து இறந்து உழன்று அலுத்தேன்".

மாணிக்கவாசகர் கூறியது போலவே 'அமிர்தமதி' (முதன் மண்டலம்) என்னும் பதிகத்தில் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பிறப்புப் பற்றிப் பாடியருளியுள்ளார்:

*விண்ணவராய்த் தானவராய் இராக்கதராய் பல்கணமாய் வெறியார் பேயாய்*
*மண்ணில் உறை மானுடராய் வல்விலங்காய் அண்டசமாய் மணியார் பாம்பாய்த்*
*திண்ணிய கல்லாய் மலையாய்ப் புன்மரமாய்ப் புழுஅளியாய்ச் செடியாய் மற்றும்*
*எண்ணரிய பிறப்பெல்லாம் பிறந்ததற்கும் கணக்குண்டோ ஏழையேனே. (9)*

அறிவில்லாத நான் தேவராய், தானவராய், இராட்சசராய்ப் பலவகையான கணங்களாய், வெறிமிகுந்த பேயாய், மண்ணுலகில் வாழுகின்ற மனிதராய், வலிய விலங்காய், முட்டையில் பிறப்பனவாய், அழகுடைய பாம்பாய், உறுதியான கல்லாய், மலையாய், புல்லாய், மரமாய், வண்டாய், செடியாய், பின்னும் அளவிடற்கரிய பிறப்புக்கள் எல்லாம் பிறந்ததற்கும் ஓர் அளவுண்டோ?

மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் இல்லாத அளியாய், மலையாய் எனச் சுவாமிகள் குறித்துள்ளார் என்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. கல்லே மலை உருவாக உள்ளது. மண்ணே மலை உருவாக உள்ளது என்பதால் இருவகையாகக் கூறினார். உயிர்கள் பாடாணம் (கல்) போல் கிடக்கும் நிலையும் உண்டு என்பர். உலகத்தோற்றத்தில் கற்பாறை அணுக்களில் முதலில் அடங்கிக் கிடந்து உயிர்கள் பல பிறப்புக்களையும் எடுக்கிறது எனக் கா.சு. பிள்ளை "கல்லாய்!" என்பதற்கு விளக்கம் அளித்துள்ளார். சுவாமிகள் முதன் மண்டலத்தில் 'தேர்ந்தேனே' என்ற கண்ணியில் வேதாந்த சித்தாந்தக் கருத்துகளின் அடிப்படையில் பிறப்பு முறையை வரிசைப்படுத்தி மிக்க

அழகுடன் விளக்கியுள்ளார்:

*செய்த வினைக்கு ஈடாகச் சேர்ந்த பிறப்பினின் றும்*
*தெய்வம் உயர் சென்மம் அதில் சேர்க்கும் என் றும் தேர்ந்தேனே (6)*

*மாயையின் கர்ப்பத்துள் மல இருளிலே கிடந்து*
*தோய் உயிரைச் சுத்தி செய்வான் விட்டதையும் தேர்ந்தேனே (7)*

*விட்ட உயிராம் பசுவின் மெய்ம் மூல தேகம் ஒளி*
*ஒட்டும் இடம் மாயை எனும் உண்மையையும் தேர்ந்தேனே (8)*

*காரண அம்மூல உடல் கட்டு உயிர்க்குச் சூக்கம் எனும்*
*சாரஉடம்பு ஈதல் அருள் தாதை என் றும் சேர்ந்தேனே (9)*

*சூக்க உயிர் தூலம் எய்தும் கால அளவு ஆகாயத்து*
*ஏக்கம் உற் றுத்தான் கிடக்கும் என்பதையும் தேர்ந்தேனே (10)*

*சூக்குமத்தில் பக்குவம்தான் கண்டால் தொடர்புபற்றி*
*ஆக்கல் அசையாத தாவரத்தில் என் றும் தேர்ந்தேனே (11)*

*தாவரத்தில் பக்குவம்தான் உற்றால் சரிக்கும் உயிர்*
*ஆவன உள் ஊர் உருவம் அண்ணும் என் றும் தேர்ந்தேனே (12)*

*ஊர் உயிரில் பக்குவம்தான் உற்றால் உதகம் அதில்*
*சேர் உயிருள் பலஉருவம் சேரும் என் றும் தேர்ந்தேனே (13)*

*நீர்உயிரில் பக்குவம்தான் உற்றால் நிகழ்விசும்பில்*
*சாரம் கொள் புள்ளாய்ச் சமையும் என் றும் தேர்ந்தேனே (14)*

*புள்உருவில் பக்குவம்தான் உற்றால் புவியில் உய்யும்*
*மற்ற விலங்கு உருவம் வாங்கும் என் றும் தேர்ந்தேனே (15)*

*விலங்கு உருவில் பக்குவம்தான் உற்றால் விவேகம்*
*இலங்கு பல மக்கள் உடம்பு ஏற்கும் என் றும் தேர்ந்தேனே (16)*

*அம்மக்களில் சிலர்தாம் ஆசு தவம் இழைத்துச்*
*செம்மைச் சுவர்க்கம் அடைவார் எனவும் தேர்ந்தேனே (17)*

ஒவ்வொரு உயிரும் முன்பு செய்த வினைக்கு ஈடாகவே பிறப்பைப் பெறுகின்றன. எடுத்த பிறப்பினின்றும் உயர்ந்த பிறப்பில் தெய்வம் சேர்க்கும். இதுவும் அவரவர் செய்த வினைக்கு ஏற்பவே நிகழும்.

மாயையின் கர்ப்பத்துள் ஆணவமல இருளில் கிடந்து மூழ்கும் உயிரை அம்மலத்தை நீக்கித் தூய்மை செய்தற்பொருட்டே அதனினின்று இறைவன் வெளியில் விடுகின்றான். ஆணவமலத்தில் கட்டுண்டு தனித்துக் கிடக்கும் நிலையைக் 'கேவலாவத்தை' என்பர். இந்நிலையில் உயிர்க்கு அறிவு இச்சை செயல் ஒன்றும் இன்று. குழாயுள்ள மூங்கிலின் இரு பக்கத்திலும் தீப்பற்றி எரியும்போது அதன் குழாய்க்குள் ஓர் எறும்பு அகப்படுமாயின் அது தானாக வெளிவர இயலாதல்லவா? கருணையுள்ள ஒருவர் இருமருங்கிலும் உள்ள தீயை அணைத்து அந்த ஏழை

எறும்பை வெளியில் எடுத்துவிட்டால்தான் அது உயிர்பிழைக்கும். கேவலாவத்தையில் ஆணவமலத்திற் கட்டுண்ட உயிரையும் பெருங்கருணை கொண்டு இறைவன் வெளியில் விட்டாலன்றி அதற்கு விடுதலை இல்லை. காரிட்ட ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்டு கிடக்கும் உயிர் ஒன்றையும் அறியாது, ஒரு விருப்பும் இல்லை, ஒரு செயலுமில்லை என்ற அவலநிலையில் கிடக்கும். தற்பயன் கருதாத வள்ளல் உயிரைத் தூய்மை செய்தற்பொருட்டு அம்மலத்தினின்றும் எடுத்து வெளியில் விடுகின்றான்.

அவ்வாறு விடப்பட்ட உயிரின் உண்மையான மூலஉடம்பு ஒளியுடன் ஒட்டும் இடம் 'மாயை' என்பதாகும். இதனையே 'சகலாவத்தை' என்பர். ஆணவமலக் கட்டிலிருந்து நீக்குதற் பொருட்டு உயிர்க்குத் தனுகரண புவன போகங்களை அளிக்கின்றான். 'காரண உடம்பு' பெற்ற உயிர்க்கு இறைவன் 'சூக்கும உடம்பை' அளித்தருள்கின்றான். சூக்கும உடம்புடன் கூடிய உயிர் 'தூல உடம்பு' பெறும் வரை எங்கு இருக்கின்றது என்பது நமக்குத் தெரியாது. அது ஆகாயத்தில் ஏக்கத்துடன் கிடக்கும் என்பது சுவாமிகள் ஆய்ந்துரைக்கும் உண்மையாகும். அவ்வாறு கிடக்கும் அது அடுத்த பிறப்பிற்குரிய பக்குவத்தை அடையும்போது அதனைத் தாவரமாகப் பிறக்கச் செய்கின்றான். முதன் முதலில் இம்மண்ணுலகில் பிறப்பெடுக்கும் உயிர் தாவரமாகவே பிறக்கின்றது என்றும், அதன் மூலம் மானுடமாகப் பிறக்கிறதென்றும் சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது. உயிர் இறக்கும் காலத்தில் புகை வழி அல்லது ஒளி வழி எனும் இருவழிகளில் ஒன்றில் செல்லும். புகை வழியில் சென்ற உயிர் மீண்டும் பிறக்கும்; ஒளி வழியில் சென்ற உயிர் மீண்டும் பிறப்பதில்லை.

### புகைவழி

இல்லறத்திலிருந்து அறவினை புரிவோன் இறுதிநாளில் அங்கிருந்து புகையை அடைவான். புகையிலிருந்து இரவிற்குச் செல்வன். இரவிலிருந்து அபரபட்சத்திற்குச் செல்வன். அங்கிருந்து வருடத்தை அடையாமல் பிதிருலகத்தை அடைவான். அங்கிருந்து ஆகாசத்திற்கும், அங்கிருந்து சந்திரனுக்கும் செல்வான். இவனே சோமராசா. இவன் தேவர்களுக்கு அன்னம். இவனைத் தேவர் உண்பர். தன்னுடைய வினை எல்லாம் நுகர்ந்து முடியும் வரை அவ்விடத்திலிருந்து பின்பு வந்த வழியே ஆகாயத்திற்கும் அங்கிருந்து வாயுவுக்குமாக மீளுவன். பின்னர் முறையே வாயு, புகை, அப்ரம், மேகம், என்பன போல் ஆவன். ஆகி மழை ஆவன். பின் நெல், யவை, ஓடதி, மரம், எள், உளுந்து என்பனவற்றுள் எதிலேனும் சூக்குமமாக இருப்பான். இவ்விருக்கையிலிருந்து நீங்குதல் அரிது. நெல் முதலியனவற்றை எவன் அருந்தி விந்துவை மாதரிடத்து விடுகின்றானோ அவ்விடத்தில் இவன் கருவாகிப் பிறக்கிறான். இவன் செல்லும் வழியைத் 'தட்சிணாயனமார்க்கம்' என்றும் 'தூமாதி (புகை) மார்க்கம்' என்றும் கூறுவர். பற்றினால் வருவது பிறப்பு என்பதும், தாவரத்தின் மூலமே பிறப்பு நிகழுகிறதென்பதும் அறியலாம்.

### ஒளிவழி

துறவு பூணுவதால் பெறும் பயன் போக்குவரவு அற்ற 'சிவசமவாதம்' அடைதலாம். தெய்வீக இன்பம் அடைந்த ஞானிகள் எல்லாம் பற்றிய நெறி இஃதே. இந்த ஞானிகள் வனத்திலிருந்து தவஞ் செய்யும்போது அங்கிருந்து ஒளியை அடைவர். அவ்வொளியிலிருந்து பகலுக்கும் அங்கிருந்து பூருவபக்கத்திற்கும் அங்கிருந்து உத்தராயணத்திற்கும், அதன் மாதங்களிலிருந்து வருடத்திற்கும் அங்கிருந்து சூரியனுக்கும் அங்கிருந்து சந்திரனுக்கும் அங்கிருந்து மின்னலுக்கும் செல்வர்; அங்கிருக்கும் அமானவன் (மனிதனல்லாதவன்) எனும் புருடன் பிரமத்தை அடையும் வழியை

அவர்கட்குக் காட்டுவான். இவர்கள் ஆயுள் காலம் இருந்து பிரமத்தை அடைகின்றனர். மீளத்திரும்பார். இவ்வழி 'தேவயான மார்க்கம்' அல்லது 'ஒளிவழி' எனக் கூறப்படுகிறது; மீளத்திரும்பார். மீளத்திரும்பார் எனச் சொல்லப்படுவதால் பிரமத்தில் இரண்டறக் கலந்துவிடுவர் என்பது கருத்தாகும்.

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் தம் 'சிவாத்துவித சைவ பாடியத்தில்' இக்கருத்தையே வேறு விதமாக விளக்கியுள்ளதை நினைவுகூர்தல் நலம்பயக்கும்:

"பிராமணாதி சரீரத்துள்ள ஆன்மா ஆகுதி முதலிய பிறகருமங்களையும் புரிந்து அக்கருமப் பயன்களைத் துய்க்கும் பொருட்டு, இச்சரீரத்தை விடுத்துப் போகுங்கால், இச்சரீரத்துள்ள மற்றைப் பூதங்களோடியைந்த சூக்கும பூத அப்பினோடு கூடி அக்கினியாகக் குறிக்கப்பட்ட தியு (சுவர்க்க) லோகத்தை அடைந்து, அந்த அமிர்தமயமாகிய தேகாகாரமாய்ப் பரிணமித்து அப்புக்களோடு சேரப்பெற்றுத் தேவர்களுக்கு உபயோகமாகி அவர்களோடுதானே அங்கே விசேஷ போகங்களை அனுபவித்துப் பிராம்மணாதி சரீரத்தைக் கொடுக்கும். எஞ்சிய கன்மத்தோடு அவ்வான்மா கன்மங்கள் செய்யும்பொருட்டு இவ்வுலகத்துக்கு வந்து அந்த அப்புக்களோடு கூடியே அக்கினியாகக் குறிக்கப்பட்ட மேகத்தை அடைகின்றான். பின்னர் மழைத்துளிகளோடு அக்கினியாகக் குறிக்கப்பட்ட பூமிக்கு வருகின்றான்; அங்கிருந்து நெல் முதலிய தானியங்களோடு உணவு வடிவாகி அக்கினியாகக் குறிக்கப்பட்ட புருஷ சரீரத்தை அடைந்து, இந்திரியமாகிய அந்த அப்புக்களோடு கூடி மற்றோர் அக்கினியாகக் குறிக்கப்படும் பெண்ணை அடைகின்றான். புருஷ சரீரம் என்று கூறற்கியன்ற சரீரமாக மாறிய அப்புக்களோடு சேர்ந்து கன்மத்துக்கியையப் பிராம்மணாதி சரீரமாகப் பிறக்கின்றான். இஃதெல்லாம் பின்னர் விளக்கப்படும். ஆகலின் ஆன்மா மற்றோர் சரீரத்தை எடுக்க வேண்டுமாயின் அது சூக்கும தேகத்தோடு கூடியே போகின்றது" (ப.428). (ஆன்மாவே அப்பு எனக் கூறப்படுகிறது. அப்பு = நீர்)

(பிராம்மணாதி என்பது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வருணங்களைக் குறிக்கும்.)

"யக்ஞும் பிறதருமங்களும் செய்துகொண்டு கிராமத்திலே வசிக்கின்றவர்கள் தூமத்துக்குச் செல்வார்கள். தூமத்திலிருந்து இரவுக்கும், இரவிலிருந்து அபரபக்ஷத்திற்கும், அபரபக்ஷத்திலிருந்து தக்ஷிணாயனத்திற்கும் செல்வர். ஆனால் அவர் வர்ஷத்தை அடைவதில்லை. தக்ஷிணாயனத்திலிருந்து பிதிர்லோகத்திற்கும், பிதிர் லோகத்திலிருந்து ஆகாயத்திற்கும், ஆகாயத்திலிருந்து சந்திரனுக்கும் போகின்றனர். அவர்தான் சோமராஜன்; அங்கே தேவர்களுக்கு அவர்கள் (சீவான்மாக்கள்) அன்னமாக, அவர்களைத் தேவர்கள் அயில்கின்றனர். தமது கருமம் எல்லாம் முடியும்வரையும் அங்கே இருந்து வந்தவழியே ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து வாயுவுக்கும் ஆக மீள்கின்றனர்; பின் யக்ஞகாரன் வாயுவாகி, தூமமாகி, பனியாகி, முகிலாகி, மழையாகின்றான். பின்னர்த் தானியமாயும், ஔஷதிகளாயும், மரங்களாயும், எள் ஆயும், பயறுமாகின்றான்; இங்கிருந்து நீங்குதல் வெகு கஷ்டத்துக்குள்ளாகும். எதனால் எனின், எவன் எவ்வன்னத்தை உண்டு வீரியத்தை உகுக்கின்றானோ அவன் போலாகின்றான் (அந்தச் சீவான்மா) எனும் பிற சுருதி வாக்கியங்களிலே யக்ஞாதி செய்தவர் சோமராஜ என்று கூறப்பட்ட அமிர்தமயமாய விசேஷ தேகத்தோடு சுவர்க்கத்திலே நல்வினையின் பயனாகத் துய்த்து, அந்நல்வினை ஒழியுங்கால் ஈண்டு வந்து கர்ப்பத்திலே பிரவேசிப்பர் என்று அறியப்படுகின்றமையான்" (ப.431).

தேவர்களால் சீவான்மா உண்ணப்படுகிறான் என்பது கவுணமே. அவன் பரமான்மாவை அறியாமையாலே தேவர்களுக்கு அனுபவிக்கும் கருவியாகின்றான் என்பதே அபிப்பிராயம். அன்னம் என்பது உபகரணமாய்ப் பிரியமாயுள்ளதின்மேற்று. தேவர்கள் உண்கின்றனர் என்பது தேவர்களுக்கு அவர்கள் பிரீதியாகின்றனர் என்பதின்மேற்று.

திருவாசக உரையாசிரியர் கா.சு. பிள்ளை ஆன்மா கற்பாறையில் அணுக்களாய்க்கிடந்து அங்கிருந்து புல்லாய்ப் பூடாய்ப் பிறப்பதாகக் கூறுகின்றார். உபநிடதம் ஆகாயத்திலிருக்கும் எனக் கூறுகின்றது. அங்கிருந்து மழைத்துளி வழியாகத் தாவரத்தைச் சார்ந்து பின் மனித உருவைப் பெறுகிறதென்றும், சுவாமிகள் ஆன்மா மாயா கருப்பத்தில் கிடந்து காரண உடம்பு பெற்றுப்பின்பு சூக்கும தேகம் அடைந்து பின் தூல உடம்பைப் பெறுகின்றதென்றும் அவ்வாறு முதன்முதலில் பெறும் தூல உடம்பே தாவரம் என்றும் கூறியுள்ளார். தாவரம், அதிலிருந்து ஊர்வன, பின் நீர்வாழ்வன, பறப்பன, விலங்கு, விலங்கு பக்குவப்பட்டால் மனிதன் என்றும், மனிதன் தவம் முதலியன செய்தால் அதன் பயனாகச் சுவர்க்கம் அடைந்து தேவனாக நல்வினை அளவிற்கேற்ப வாழ்ந்து அந்நல்வினை கழிந்தவுடன் மீண்டும் மண்ணுலகில் பிறக்கிறான் எனச் சுவாமிகள் விளக்குவர்.

டார்வின், கூர்தல் அறம் (Evolution) என்ற ஆய்வில் புல் பூண்டு முதல் பல மாற்றங்கள் பெற்றுக் குரங்காகி அதற்குமேல் மனிதன் ஆகின்றான் என்று கூறியுள்ளார். இவர் ஆய்வு மனிதனைக் கடந்து மேலே செல்லவில்லை. அறிவியல் ஆற்றல் அந்த அளவுதான். விஞ்ஞானம் எட்ட முடியாததை மெய்ஞ்ஞானம் எட்டும் ஆற்றலுடையது என்க. 'தேர்ந்தேனே' என்ற கண்ணிகளில் பிறப்பின் இரகசியத்தை மெய்ஞ்ஞானியாகிய சுவாமிகள் அழகுற விளக்கியுள்ளார்; சிந்தியுங்கள்.

## 7. வார வழிபாடு*

– 'சைவப்பெரியார்' ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.

*"ஞால நின்புகழே மிகவேண்டும் தென்*
*ஆலவாயில் உறையும்எம் ஆதியே"* - *சம்பந்தர்*

**தோற்றுவாய்**

உலகத்தில் அடிக்கடி சமாதானம் குலைந்துவிடுகிறது. மக்கள் பெருந்துன்பத்துக் குள்ளாகிறார்கள். மூல காரணம் என்ன? அது, மக்களிற் பலர், இவ்வுலகத்தின் அமைப்பையும், படைப்பின் நோக்கத்தையும் போதுமான அளவு அறியாமலிருப்பதும், அதனால் அன்பும் அருளும் குன்றிய வாழ்க்கையை நடாத்தி வருவதுமே என்னலாம். ஹிட்லர் முஸோலினி முதலிய கொடியோர்களும்,

அவர்களைப் பின்பற்றுவோரும் செய்யும் அட்டூழியங்களில் இதனுண்மையை இந்நாளில் விளக்கமாய்க் காண்கின்றோம். இத்தீயோரை எதிர்த்து நிற்கும் இருபெரும் சனநாயகப் பெரு நாடுகள், போர் முடிவில் உலக சமாதானத்தை அன்பு, அறம், சுதந்தரம், சமத்துவம், இவற்றை அழிக்க எழுந்தீமையை வெல்ல வல்ல தருமவீரம் என்னும் அத்திவாரத்தின்மீது நிலைபெறுத்தல் வேண்டும் என்னும் தீர்மானத்தை உலகறியக் கட்டுரைத்துள்ளன.

**புதுயுக வாழ்வின் அடிப்படை நன்மனம்**

இந்தத் தீர்மானத்தின்படி விரைவில் தீயவெல்லாம் ஆழ்ந்து வையகந் துயர்தீர்ந்து நன்மை பரவுதற்கு - புதுயுகம் தோன்றி வளர்தற்கு - இன்றும் இனியும் மக்களனைவரும் செயற்பாலதொன்றுண்டு. அது என்னெனில், ஒவ்வொருவரும் தத்தம் மனத்தில் மாசு மிகப் படியாதபடி பார்த்து வருதலேயாம். செம்பில் இயற்கையாய்க் களிம்பு பிடிப்பதுபோல் மனதில் இயற்கையாய் அவா, அழுக்காறு, வெகுளி முதலிய அழுக்குப் பிடிக்கும். களிம்பு நீங்கச் செம்பைத் துலக்குவதுபோல, கெட்ட எண்ணம் நீங்க மனதைத் துலக்குதல்வேண்டும். துலக்கினால் நல்ல மனமுண்டாம். அஃதுண்டானால், நல்ல சொல்லுண்டாம்; நல்ல செயலுண்டாம். ஆதலால் நன்மன வளர்ச்சியே எவர்க்கும் எஞ்ஞான்றும் வேண்டுவதொன்றாம். இதுவே இறைவன் குறிப்பறிந்து, ஒத்துச் சென்று, அவன் திருவருளைக் கூடுதற்கு ஏற்ற உபாயமாகும். இந் நன்மனமில்லையெனில் செல்வம், சுதந்திரம், அறிவு, ஆண்மை முதலிய வேறென்ன வசதியிருப்பினும் தனி மனிதனோ சமுதாயமோ நெடுநாள் இன்புடன் வாழ முடியாது. Righteousness exalteth a nation என்று விவிலிய வேதம் கூறுவதும் இங்குக் கருதத்தக்கது.

**நன்மன வளர்ச்சிக்குரிய உபாயம் நற்சார்பு**

அச்சாதனங்களின் நோக்கமாயிருப்பது பொய்வழியோடும் இயல்புடைய மனத்தை மெய்வழியே திருப்பவேண்டி, உண்மையினிடத்து-உயர்ந்த பொருளினிடத்து - சாரவைத்தலேயாகும். அப்படிச் சாரவைத்தலால், மனமாசு அகலும்; புன்மனம் நாளடைவில் நன்மனமாகும், இதை எவ்வகையிற் செய்வது என்னில், சத்திய சொரூபரும் தன்னொப்பில்லா உயர்பொருளுமாகிய கடவுளையும் அவர் வழி நிற்கும் ஆன்றோர்களையும் நினைத்தல், அவர் குணங்க ளுரைத்தல், அவர் சொற் கேட்டல், அவர் சொன்ன வழி நடக்க விரும்புதல் ஆகியவற்றைப் புரிதலால் என்று கூறலாம்.

**அறிவு அன்பு வளர்ச்சியும் இருவகை வழிபாடும்**

இதனை ஒவ்வொரு மனிதனும் தனிமுறையிலும் சமூக முறையிலும் செய்து வருதல்வேண்டும். உடம்பிற்குச் சோறும் நீரும் இன்றியமையாதன வாதல்போல, உயிருக்கு அறிவும் அன்பும் இன்றியமையாதனவாகும். ஆதலால், தனிமுறையில் ஒவ்வொருவரும் நாடோறும் இரண்டு முறையாயினும் தன்னந்தனியே சிறிது நேரமிருந்து, தங்கள் மனதைக் கடவுளிடத்திலும் அவன் மெய்யடியாரிடத்திலும் பொருத்தி நிறுத்திவைக்க விடாமுயற்சி செய்தல்வேண்டும். நித்திய வழிபாடு என்று பல சமயங்களிலும் விதிக்கப்பட்டிருப்பதன் பெருநோக்கம் இதுவாகும். இறைவனைத் தங்கள் தங்கள் பக்குவத்திற்கு ஏற்ற முறையிலும் அளவிலும் நினைத்து, உணர்ந்து, அன்பு செலுத்தி, அவ்வுணர்வில் இயன்ற கால அளவும் இலயித்து நிற்றல் வேண்டும். அதற்குப் பெருந்துணையாகக் கைக்கொள்ளத்தக்க சாதனங்களுள், அநு பூதிமான்களுடைய அருள் வாக்குக்களைப் பொருளுணர்ந்து நாளுக்கு ஒரு முறையேனும் பாராயணஞ் செய்தல் சிறந்ததொன்றாகும்.

**சமூக வழிபாடு**

இத் தனிமுறை வழிபாட்டுடன் சமூக வழிபாட்டையும் மனிதன் செய்தல்வேண்டும். சமுதாயத்தினின்று தனிமனிதன் என்றும் அடியோடு பிரிந்து வாழமுடியாதவன். தனிமனிதன் நன்மை தீமைகள் சமுதாயத்தைத் தாக்குவது போலவே, சமுதாயத்தின் நன்மை தீமைகள் தனிமனிதனைத் தாக்கும். தனிமனிதன்பால் தோன்றாத நல்ல உணர்ச்சிகள், அநுபவங்கள், உண்மைகள் என்னு மிவைகள், ஒருப்படுசிந்தையினர்கள் குழுமியுள்ள சமுதாயத்திற் சேர்வதால் அவனுக்குக் கிடைக்கும். ஆதலால், "நல்லாரோ டிணங்கி யிருப்பதுவும் நன்று"

**சமூக வழிபாட்டின் தொன்மை**

இப்பயனை அளிக்கவல்ல சமூகவழிபாடு பன்னெடுங் காலமாக இப்புவியிடை இருந்து வந்துள்ளது. சரித்திர காலத்துக்கு முற்பட்ட மக்களினங்களி னிடையிலும், பண்டை நாகரிகத்திற் சிறந்த பேரினங்களினிடையிலும், இது பல்வேறு முறையில் கையாளப்பட்டு வந்துள்ளது. யூதர்கள் குழாங்கூடித் தங்கள் கோயில்களில் வாரத்திற் கொருமுறை இறைவன் வழிபாடும் சாத்திர விளக்க போதனையும் செய்து வந்திருப்பதை ஓர் எடுத்துக் காட்டாகக் குறிக்கலாம். இன்றும் கிறிஸ்துவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒழுங்கான முறையில் சமூக வழிபாடு செய்து வருவது யாவரு மறிந்ததென்றே. முஸ்லீம்கள் இவ்வாறே தவறாமல் வெள்ளிக்கிழமை தோறும் தம்மூர்ப் பெரிய மசூதிகளில் ஒன்றுசேர்ந்து ஆண்டவன் வழிபாடும் அவன் அருளிய வாசக விளக்க போதனையும் நன்றாக நிகழ்த்தி வருகின்றனர். இன்னும் பல சமயத்தினர் இவ்வாறு செய்து வருகின்றனர். இந்துக்களும் இந்நெறியைப் போதிய கட்டுப்பாடில்லாத முறையில் இன்றும் பின்பற்றி வருகின்றனர். பண்டை நாளில், பெரும்பாலும் எல்லா ஆலயங்களிலும் உருவ வழிபாட்டுடன், ஆன்றோர் பாடற் பாராயணமும், புராண படனமும் நிகழ்ந்து வந்தன. இவற்றின் வாயிலாக, மக்கள் அவசியமாய் அறிய வேண்டிய ஆன்றோர் வரலாறுகளும், சமய ஒழுகலாறும், சமயக் கோட்பாடுகளும் கற்றார்க்கும் கல்லார்க்கும் தெரிந்து வந்தன.

**இந்துக்கள் வழிபாட்டின் பிற்காலச் சிறுமை**

சிறிது காலமாய் இந்துக்களது சமூக வழிபாடு பயன் நிரம்பிய இம்முறையில் நிகழ்வதில்லை. ஆலயத்திற்குச் செல்வோர் தொகையே அளவிற் சுருங்கிவிட்டது. அப்படிப் போவோரும், உருவ வழிபாட்டின் நன்மையை மட்டும் ஒரு சிறிது பெற்றுத் திரும்பிவிடுகிறார்கள். அவ் வழிபாட்டின் முழுப் பயனையும் தருதற்கேற்ற சாதனங்கள் நம் கோயில்களில் இப்போதில்லை. அவசியமான சமய ஞானமும் மெய்யன்பும் உண்டாக்கவல்ல சமய போதனை அங்கே கிடைக்கவில்லை. விழாக் காலங்களிலுங்கூட, கொட்டும் முழக்கும், கூத்தும் பாட்டும், வேடிக்கை விளையாட்டும், பெரும்பாலோர்க்கு விளங்காத சடங்குமே மிகுத்துக் காணப்படுகின்றன. சிலமாதங்களாகத்தான் பல கோயில்களின் திருவிழாக்களில் சில நற்பகுதிகள் புகுத்தப்பட்டு வருகின்றன.

**வார வழிபாட்டிற்கு ஏற்ற காலம்**

ஆயினும் வார வழிபாடு போன்ற நெறிப்பட்ட சமுதாயவழிபாடு இன்னும் இந்துக்களிடையே ஏற்படவில்லை. இது இவர்களுள்ளும் ஏற்படுதல் இன்றியமையாததாகும். உத்தியோகத்தர்கட்கும், கலாசாலைகட்கும், தொழிற்சாலைகட்கும் இன்னும் பல தாபனங்கட்கும் வாரத்தில் ஒரு நாள் ஒய்வு நாளாய்க் கிடைத்திருக்கினறது. பிறர் கீழன்றித்தாமே வேலைசெய்வோரும் இப்படி வாரத்திற் கொருநாளை அவ்வவ்விடத்தின் வசதிக்கேற்ப அமைத்துக் கொள்ளுதல் எளிதேயாகும்.

நகரங்களிலும், நகரச் சார்புடைய பேரூர்களிலும் ஞாயிற்றுக்கிழமையையே சமுதாய வழிபாட்டிற்குரிய நாளாகக் குறித்துக்கொள்ளலாம். இந்துக்கள் செய்யும் வாரவழிபாட்டிற்குப் பெரும்பாலும் மாலைப்போதே ஏற்ற வேளையாயிருக்கும்.

**ஏற்ற இடம் ஆலயம்**

இவ்வாறு வாரவழிபாட்டிற்கு உரிய நாளென அவ்வவ்வூரினர் நாளை வரித்துக் கொண்டதும், அவரவர் வாழும் ஊர் அல்லது ஊர்ப்பகுதியிலுள்ள கோயிலையே வழிபாட்டிற்குரிய இடமாகக் கொள்ளுதல் சிறப்பாம். கோயிலில்லா ஊர் பெரும்பாலும் இந்நாட்டி லிராதாகையால், வழிபடுமிடத்தைத் தேர்ந்தெடுத்தல் அரிதல்ல. எவ்வூரிலேனும் வசதியான ஆலயம் இல்லாவிடில் சபை, பஜனைக்கூடம், மரத்தடி நிழல் முதலிய பொதுவிட மொன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

சைவ வைணவ பேத உணர்ச்சியுள்ளவர்கள் வாழுமிடத்தில் எவர் எக்கோயிலிற் கூடுவது என்னும் கேள்வி ஒருகால் பிறக்கலாம். சிறப்பு வகையில் சைவப்பற்றுடையா ரெல்லாம் சிவாலயத்திலும், வைணவப்பற்றுடையா ரெல்லாம் விஷ்ணு வாலயத்திலும் ஒன்றுசேர்ந்து வழிபடலாமாகையால், இடத்தால் இடர் விளையவேண்டிய அவசியமில்லை. போதிய மனவிசாலம் உண்டான பின்பு, இரு தொகுதியினரும் ஒன்ற சேர்ந்து சமரச சன்மார்க்க நெறிபற்றி எந்த ஆலயத்திலும் வழிபடலாம்.

**சிலருக்கு ஆலயந் தொழுவதில் அருவருப்பேற்பட்ட காரணம் - அதை நீக்கும் ஐம்பேர் உபாயம்**

ஆங்கிலங் கற்றுப் பிறநாட் டியல்புணர்ந்த நம்மவர்களில் பலர், தெய்வ நம்பிக்கையும் வழிபாட்டில் விருப்பமும் உடையவர்களாயிருந்தும், நம்முடைய தேவாலயங்களுக்கு வந்து வழிபடுதலில் ஆர்வமில்லாதவர்களாய் - அசூயை கொண்டவர்களாக - இருக்கிறார்கள். இதற்குக் காரணம், இவ்வாலயங்களிற் காணும் துப்புரவின்மையும், பொருள் விளங்காப் பூசை முறைகளும், பொருந்தாக் காட்சிகளும், வழிபட வருவோரது ஒழுங்கின்மையும், ஆலயத்தில் அமைதிக் குறைவும், பிரயோசனச் சுருக்கமும் இவைபோன்ற இன்னும் சில குறைவுகளுமாம்.

ஆதலால், கற்றோரும் மற்றோரும் ஒன்று சேர்ந்து வாரவழிபாட்டைச் சீர்பெற நடாத்தி வருவதற்கு ஆலயவழிபாட்டு முறையில் சில திருத்தங்கள் தேவை. இவைகள், சுத்தம், சுருக்கம், ஒழுங்கு, அன்பறிவுப் பெருக்கம், ஒற்றுமை யுணர்ச்சி என்னும் ஐம்பெரு நலங்களைத் தருவனவாயிருத்தல்வேண்டும்.

**வாரவழிபாட்டிற்கு மக்கள் செல்லுமுறை**

இந்த நன்மைகள் பொருந்த எம்முறையில் இந்துக்கள் வாரவழிபாட்டை நடாத்தி வரலாம்? இவ் வழிபாட்டிற்கெனத் தேர்ந்தெடுத்த நாளின் மாலைப்போதில், குறிப்பிட்ட நேரத்தில், அவ்வவ்வூர் ஆடவரும் மகளிரும் உடம்பைத் தூய்மை செய்த, ஆடம்பரமற்ற நல்லாடை யுடுத்து, வழிபாட்டில் ஆர்வம் பெருகு நெஞ்சோடு ஆலயத்தை அடைதல்வேண்டும். மாலைப் பூசைத் தீபாராதனையைத் தரிசித்து முடித்ததும், குறித்த நேரந் தவறாது, ஆலயத்தில் அமைதி நிலவும் விசாலமானதொரு பகுதியில் ஒன்றுகூடுதல் வேண்டும். ஆண்களும் பெண்களும் தனித் தனித் தொகுதியினராய்ச் சேர்ந்த, ஒரு தொகுதி முன்னும் மற்றது அதன் பின்னுமாய் அணிபெற அமர்தல்வேண்டும். பின்பு, கீழ்க்கண்ட ஆறு அங்கங்களையுடைய வழிபாட்டினை நடாத்தல்வேண்டும்.

**வழிபாட்டின் ஆறு அங்கங்கள்**

இவை, (க) தோத்திரம் (உ) பாராயணம் (ங) சமயபோதனை (ச) மோனத்தியானம் (ரு) வாழ்த்து (சு) மூர்த்தி வழிபாடு என்பனவாம். சிவாலயங்களில் நடைபெறற்கேற்ற முறைமட்டும் இங்கே குறிக்கப்படும். இதனை அறிஞர்கள் அவசியமான அளவு மாற்றி, விஷ்ணு வாலயங்களில் நிகழும் வாரவழிபாட்டிற்கும் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வாரக்கூட்டத்திலும் தோத்திரப் பாடல் பாடுவோரும், சமயபோதனை செய்வோரும் பாடும் பாட்டும், பேசும் பொருளும் முன்னதாகவே சித்தஞ் செய்யப்பட்டதொரு திட்டப்படி இருத்தல்வேண்டும்.

(க) **தோத்திரம்:** இது, கடவுளைத் தம் மநுபவத்திற் கண்ட பெரியோர்கள் அருளிச் செய்துள்ள துதிகளுள் ஒன்றாக இருத்தல் சிறப்பாம். அப்பாடல் கடவுளது சகள நிலையையேனும், நிஷ்கள நிலையையேனும் குறிப்பதாயிருக்கலாம். சகள நிலை குறிக்கும் பாசுரமாயிருந்தால், சிவாலயங்களில் சிவமூர்த்தங்களில் ஒன்றையும், விஷ்ணுவாலயங்களில் விஷ்ணு மூர்த்தம் ஒன்றையும் குறிப்பதாயிருத்தல் வேண்டும். அன்றியும் அது பிறசமய மூர்த்த மெதனையும் குறைத் துரையாத பாட்டாயிருத்தல் மிகவும் நன்றாம். பாடுதற்கு நியமிக்கப் படுவோர் அப்பாட்டின் பொருளை உணர்ந்து, இனிய குரலில், மனமுருகப் பாடவல்ல நல்லவராயிருத்தல்வேண்டும். இது ஐந்து நிமிடத்திற்குள் முடியவேண்டும். கூட்டத்தினர் மனதை அமைதிப்படுத்துதல் இதன் நோக்கம்.

(உ) **பாராயணம்:** வழிபாட்டின் தோத்திரப் பகுதியில் செய்யுளைப் பாடுவோர் ஒருவர்; பிறரெல்லாம் கேட்டு அமைதி பெறுவோர். ஆனால், பாராயணம் என்னும் இப்பகுதியில் வழிபாட்டுக் கூட்டத்தா ரனைவரும் பங்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆண் பெண், கற்றார் கல்லார், முதியோர் இளையோர் என்னும் பாகுபாடு இருத்தலாகாது. எனவே பாராயணத்திற் கென்று தேர்ந்தெடுக்கும் அநுபூதிளர் திருவாக்கானது, செம்பாகமான நடையிலுள்ளதாயும், கடினமான இராகதாளங்களில் கட்டுண்ணப்படாததாயும், யாவரும் ஒரே குரலில் எளிதாகப் பொளுணர்ச்சியுடன் ஓதக்கூடியதாயும் இருத்தல்வேண்டும். சிவாலயங்களில் நிகழும் வார வழிபாட்டிற்குத் திருவாசகத்தின் முற்பகுதியிலுள்ள சிவபுராணமும் திருவண்டப்பகுதியும் போன்ற திருமுறைப் பகுதிகள் ஏற்றனவாகும். தாயுமானார், இராமலிங்க அடிகள் முதலிய பிற்கால அநுபூதிமான்கள் இயற்றிய எளிய நடைத் தோத்திரங்களில் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒழுங்காய் எளிதில் ஓதக்கூடிய பாக்களையும் தேர்ந்தெடுத்து ஓதலாம்.

விஷ்ணுவாலய வழிபாட்டிலும் இம்முறைமையினைப் பின்பற்றித் திருமாலடியார்கள் அருளிச் செய்த அநுபவ வாக்குக்களைப் பொருளுணர்ச்சியுடன் பாராயணம் செய்தல் நலமாம். இவ்வகைப் பாராயணம் 15 நிமிடங்கட்குள் முடிதல் வேண்டும்.

(ங) **சமயபோதனை:** பல காரணங்களால் இக்காலத்தில் இந்துச் சிறுவர் சிறுமியர்கட்குத் தம் சமயத்தைப்பற்றிய அறிவு மிக மிகக் குறைவு. பெரும்பாலும் அவர்கள் வீட்டிலும் பாடசாலைகளிலும் அவர்கட்குச் சமய அறிவு புகட்டப்படுவதில்லை. இவர்கள் முதியோராய் வாழ்க்கைத்துறைகளில் இறங்கிய பிறகும் இவர்கள் சமய ஞானம், ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றங்கட்கும் உட்பட்டதாயிருக்கின்றது. வாழையடி வாழையாய் அஞ்ஞானக் கூட்டம் அதிகரித்துவிட்டது. ஆனால், வேதாகமங்களின் அடிப்படையான கோட்பாடுகள், அவரவர் சமயங்களின் சிறப்புக் கொள்கைகளில் முக்கியமானவைகள், இன்றியமையாத சமய அநுட்டானங்கள், ஆலய அமைப்புகள், ஆலய நித்திய நைமித்திகங்களின் நோக்கங்கள், மூர்த்தி

தத்துவங்கள், சமயப் பெரியார் வரலாறுகள் முதலியவற்றைப்பற்றிக் கற்றார்மட்டுமன்றி, ஆண் மக்கள் பெண் மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளும் அளவில், முறையில், சமயபோதனை வாரந்தோறும் நிகழ்ந்து வருதல்வேண்டும். அருள் பெற்ற ஆன்றோர் சரிதங் கூறுதல், அவர் வாக்குகளின் பொருளை விளக்குதல் முதலிய பல முறைகளைப் பின்பற்றி இத்தொண்டினை நிகழ்த்தி, பொது மக்களது சமய அறிவை வளர்த்து வருதல்வேண்டும். இத்தொண்டு நிகழ ஏற்பாடுசெய்யுங்கால், சில எச்சரிக்கைகளைக் கவனித்தல்வேண்டும்: (1) சமயபோதனை செய்வோர், தாம் போதிக்கும் விஷயத்தில் உள்ளபடி நம்பிக்கையும் அன்பும் உடையராயிருத்தலோடு, யாவரும் விரும்பும் நல்லொழுக்கமுடையரா யிருத்தல் வேண்டும். (2) போதனையானது, கேட்கும் பொதுமக்கள் அறிவிற்கு எளிதில் எட்டும் அளவினதாக இருத்தல்வேண்டும். கடினமான தத்துவ சாஸ்திர விஷயங்களை விளக்கத் தலைப்பட்டுவிட லாகாது. *தூய வாழ்க்கையில் விருப்பும், இறைவனிடத்தில் உள்ளக் கசிவும், உயிர்களிடத்து அருளும், ஒற்றுமை உணர்ச்சியும் விளைப்பதே இப்போதனையின் பெரும் பயனாக இருத்தல் வேண்டும். இவற்றை விளைக்காதவெறும் பாண்டித்தியமும் சொற்சாலமும் சிறிதும் வேண்டற்பாலன வல்ல. (3) சிவாலயங்களிற் சைவ நூல்களும் சிவ சரிதங்களும் விளக்கப்படுதல் பொருத்தம். இது போன்றதொரு முறையே விஷ்ணுவாலயங்களில் நிகழும் வாரக்கூட்டப் பிரசங்கங்கட்கும் ஏற்றதாகும். ஆனால், எக்கூட்டத்திலும் பிற சமயங்களையும், பிற இன மக்களையும் குறைவாகப் பேசுதல் சிறிதும் விரும்பத் தக்கதன்று. பிற சமயங்களில், அவற்றின் சாத்திரங்களில், உள்ள ஒற்றுமைப் பகுதிகளையும் நன்மைகளையும் அன்போடு பாராட்டிப் பேசுதல் அனைவர்க்கும் நன்மைதரும். அது வாய்க்காத இடத்து, பிற சமயங்களைப்பற்றி ஒன்றும் சொல்லாது விடுதலே நலம். அன்பும் ஒற்றுமையும் இந்திய சமூகத்தினிடையே விரைவில் வளர்தல் அவசியமாதலின், சமயபோதனை செய்யும்பெரும் பொறுப்புடைய அறிஞர்கள் யாவரும் இந்த அறநெறியைக் கடைப்பிடித்துத் தம் சமயபோதனையைச் செய்தல்வேண்டும். வார வழிபாட்டில் சமயபோதனை 30 அல்லது 35 நிமிடத்திற்குள் முடிதல்வேண்டும்.

(ச) **மோனத்தியானம்:** இஷ்ட மூர்த்தங்களைத் தியானிப்பதிலோ, அல்லது சமயபோதனையில் கேட்ட நற்பொருளைச் சிந்திப்பதிலோ இதற்கெனத் தரும் சிறுபொழுதைச் செலவிடுதல் வேண்டும். வழிபாட்டிற்கு வந்தோர் அனைவரும் சுகாசனத்தமர்ந்து, மன அலைகளை அடக்கி, அதனை ஒருமுகப்படுத்தி, நற்பொருளில் நாட்ட முயலுதல்வேண்டும். முழு அமைதி நிலவுதல் வேண்டும். இதற்கு மூன்று நிமிட காலம்போதும். இது தொடங்கு நிமிடத்தையும் முடியு நிமிடத்தையும் கைம்மணி யோசையால் - அல்லது சிவநாம சப்தத்தால் - கழக வினையாளர் தெரிவிக்கலாம்.

(டு) **வாழ்த்து** : மௌனத் தியானம் கலைந்த பின்னர், ஆன்றோர் உலகுய்ய அருளிய வாழ்த்துப்பாட் டொன்றைப் போதகர் பாடி வாழ்த்தலாம். உள்ளத்தைக் கவரும் பெரு நிகழ்ச்சி உலகில் யாதாமொன்று நிகழ்ந்த காலை, அதுபற்றி ஆண்டவனை நோக்கிக் கூட்டத்திலிருந்து ஒருவர் விண்ணப்பித்தலையும் அவ்வப்போது ஏற்றுக்கொள்ளலாம்.

(கூ) **வழிபாடு** : பின்னர் வழிபாட்டுக் கூட்டத்தாரனைவரும் எழுந்திருந்து உட்பிரகாரத்தில் வலம் வந்து, சுவாமி சந்நிதியை அடைந்து, அமைதியாய் இருமருங்கும் நிற்றல் வேண்டும். உடனே

* குறிப்பு:- சிவவழிபாட்டிற்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும். இவையல்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியத்தைக் கொள்ளாமலும் தின்கின்ற மருந்துக்குச் சமானமாகும் - ஆறுமுகநாவலர். (இம்மேற்கோள் 1938-ல் வெளிவந்த நாவலர் நினைவு மலரில் 70-ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.)

கற்பூர தீபாராதனை மட்டும் நிகழ ஏற்பாடு செய்தல் வேண்டும். நிவேதனம் அருச்சனை முதலிய நிகழ்ச்சிகள் இவ்வேளைக்கு ஏற்புடையனவல்ல. சுவாமிப் பிரசாரத்தை - திருநீற்றை அல்லது தீர்த்தம் துளசியை - வந்திருக்கும் அன்பர்களுக்குள் எவ்வித ஏற்றத்தாழ்வும் காட்டாது, சமபாவனையுடன், அவரவர் நிற்க நேர்ந்த முறையையே தொடர்ந்து வழங்குதல்வேண்டும். இஸ்லாம் மார்க்க வழிபாட்டில் இப் பெருநன்மை பொதிந்து அச் சமூகத்தினர்க்குள் சகோதர ஒற்றுமையை வளர்த்து வரும் உண்மையை உணர்ந்து அம்முறையைப் பின்பற்றுதல் அவசியம். இச்சுருக்க முறையிலேயே அம்பிக்கையையும் வழிபட்டானதும், அனைவரும் தத்தம் வீடு செல்லலாம். கால இயல்பையும் பொழுதுச் செட்டையும் கருதி இவ்வழிபாட்டினை 15 நிமிடங்களில் நிறைவேற்றி விடுதல் நல்லது. இவ் வாரவழிபாட்டிற்கு வேண்டிய மொத்த நேரம் ஒரு மணி பதினைந்து நிமிடமாகும்.

**எங்கும் வார வழிபாடு நடத்துதற்கு வேண்டிய அமைப்பு**

இத்துணைச் சிறப்புவாய்ந்த வார வழிபாட்டை இடைவிடாது நடாத்திவருவதற்கு ஓர் அமைப்பு வேண்டுமன்றோ என்னும் ஓர் எண்ணம் தோன்றலாம். விரிவான அமைப்பொன்றும் வேண்டுவதில்லை. சிதம்பர சபாநாயகரே இச்சங்கங்கட்கும் சபா நாயகர் - தலைவர். அவர் வாழ்க்கைத்துணை நலமாகிய உலகீன்ற அன்னையே துணைத் தலைவர். வாரவழிபாட்டில் நம்பிக்கையுடைய அன்பரனைவரும் சங்க உறுப்பினர். இவருள்மிக்க ஆர்வமுள்ள நல்ல இளைஞர் ஒருவரைச் சங்கச் செயலாளராக ஆண்டுக்கொருமுறை ஏற்படுத்திக் கொள்வது சாலும். மாத சந்தா என்னும் நியமந்தானும் அவசியமன்று. பூட்டி முத்திரையிட்ட உண்டியொன்றில் கூட்டத்தில் அன்பர் மனமுவந்திடும் சிறு காசுகளும், அவசியம் நேர்வுழி அன்பர் அளிக்கும் நன்கொடைப் பொருளும், வழிபாட்டுச் செலவுகட்கு வேண்டிய வருவாயாகும். இதனைக் கொண்ட பாராயணப் பாசுரங்கள் முதலிய சமயப் பிரசுரங்களை வெளியிடுதல், ஆலய வழிபாட்டின் சார்பாக நேரும் சொற்ப செலவுகளைச் செய்தல் முதலிய தொண்டுகளை இயற்றி வரலாம். மாதத்திற்கொருமுறை வழிபாட்டுக் கூட்ட முடிவில், உண்டியைத் திறந்து, அதிற் சேர்ந்த பொருளைக் கணக்கிட்டு, கூட்டத்திலேயே மாத வரவு செலவு கணக்கைச் செயலாளர் படித்துக் காட்டிவிடலாம்.

**வாரவழிபாட்டின் விழுமிய பயன்**

உள்ளன்புடன்கிராமந்தோறும்-பேட்டைதோறும்-மேற்குறித்த சுருங்கிய அமைப்பில் வாரவழிபாட்டை இந்துக்கள் ஒன்று சேர்ந்துசெய்துவந்தால், அவர்கள்பால் இப்போதுகாணும் பல்வகைக் குறைகள் விரைவில் நீங்கும். உற்றுநோக்குவோர் இதனுண்மையை எளிதில் உணர்வர். நிலையில் திரிந்துள்ள இக்கால இந்துசமுதாயத்தில் நற்பண்புகள் வேரூன்றி வளர்வதற்குத் தெய்வ மின்சாரசக்தி ஒன்று அதனுட்பாய வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். மின்சாரத்தை உற்பத்தி செய்யுமிடம் தேவாலயம், உற்பத்தி செய்யும் உபாயங்களில் சிறந்ததொன்று வாரவழிபாடு வாரத்தோடு (வாரம் = அன்பு) வாரந்தோறும் இவ்வழிபாடு எங்கும் நிகழ்ந்துவரின், ஆலயங்களில் தெய்வக்கலை மீண்டும் வீசும். உயரிய குறிக்கோள் நம்மவருள்ளத்தைக் கவரும். சாதிகுலம் பிறப்பென்னும் தடுமாற்றம் நீங்கும். உலகவாழ்வில் காணும் செருக்கு, போட்டி, பகை, வறுமை முதலிய சிறுமை யெல்லாம் ஒழியும். அறிவும், அன்பும், அறனும், அறஞ்சார் வீரமும், ஒற்றுமையும், பலமும், செழிப்பும், புத்துயிர்பெற்று ஓங்கும். வீட்டு வாழ்வும் நாட்டு வாழ்வும் மாசற்று விளங்கும். காலத்தின் தேவையை உணர்ந்து பலர் ஒன்று சேர்ந்து, எளியவர்கட்குக் கல்வி, கைத்தொழில், நல்லொழுக்கம், தெய்வபக்தியாதி நலங்கள் வளர்வதற்கான சீவகாருணியச் செயல்களை மேன்மேற் செய்து புண்ணியமும் புகழும் பெறுவர். சிவபத்தி மேலிடும்.

இப்பெருந் தொண்டினை ஊக்கத்துடன் தொடங்கி நிகழ்த்தி வரும் பொறுப்பு, சிறப்பு வகையில் நம் சமய சகோதரிகளைச் சார்ந்தது. அவர்கள் ஒத்துழைப்பும் தூண்டுதலும் இன்றியமையாதவை. திலகவதியார், பகவதியார், மங்கையர்க்கரசியார், செம்பியன் மாதேவி யார்* முதலிய பெண்மணிகளின் திருநாமங்கள் இக்காலப் பெண்மணிகளையும் சமயப் பெரும்பணியை மேற்கொள்ளுமாறு ஊக்கவல்லன. இங்ஙனம் இருபாலாரும் இறைவனை வழிபட்டு வருவாராயின், தெய்வம் தோன்றுந்துணையாய் வெளிப்பட நின்று அருள் புரியும். இந்நாடு மட்டுமன்றி, உலக முழுதுமே துயர் தீர்ந்து இனிது வாழும்.

**முடிப்புரை**

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றும், "கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறி சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" என்றும் ஆன்றோர் பணித்துள்ளனர். மக்கள் "ஊன் நோக்கும் இன்பம் வேண்டி" உழலாமல், "வான் நோக்கும் வழியாவது" நிற்றல் வேண்டும் என்னும் உணர்ச்சியுடையராயிருத்தல் எந்நாளிலும் போலவே இந்நாளிலும் அவசியம். அவ்வழியில் அனைவரும் விரைந்து செல்லுதல் வேண்டும் என்று நல்லோல் நாடுவர்; அதற்குத் தம்மாலியன்ற அளவிலும் தளராது பாடுபடுவர். அவர் செய்யும் முயற்சி, அவர் குறித்த அளவு பயனைத் தருமோ தராதோ என்று அதிகமாய் ஆராயவேண்டுவதில்லை. "ஆயக்கடவேன் நானோ தான்? என்னதோ இங்கதிகாரம்?" என்று வினவும் ஒரு மணிவாசகம் இங்கு நினைவிற்கு வரலாம். "வேண்டி வினைசெயேல்" என்னும் கருமயோகக் கட்டளையை மேற்கொண்டு, திருவருள் வழிகாட்டு மளவில், நற்கருமங்களை நல்லா ரனைவரும் ஒன்றுசேர்ந்து செய்துகொண்டே போதல் அவர் கடனாம். இந்த நிலையிலிருந்து எழுதப்பட்டதே இச்சிறு கட்டுரை. இந்து சமுதாய முன்னேற்றங் கருதி இதிற் கண்டுள்ள முறையினைவிடச் சிறந்ததொன்று ஆன்றோர்க்குத் தொன்றலாம். அதனை அவர்கள் வெளியிடுவதற்கும், பலர் அதனை யொட்டி நடத்ததற்கும், இது ஒரு தூண்டுகோலாயிருக்குமாயின், இது தன் பணியை நிறைவேற்றியதாகும். "தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர் மருவி எப்பொருளும் வளர்ப்பார்" ஆதலின், எல்லாம் நன்மையாம்.

*"அடியா ரானீர் எல்லீரும்*
*அகல விடுமின் விளையாட்டை;*
*கடிசே ரடியே வந்தடைந்து*
*கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பை."*

*"நிற்பீ ரெல்லாம் தாழாதே*
*நிற்கும் பரிசே ஒருப்படுமின்;*
*பிற்பால் நின் று பேழ்கணித்தால்*
*பெறுதற் கரியன் பெம்மானே."* *-மாணிக்கவாசகர்.*

* இவர் திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர் என்னும் சோழமன்னருடைய மனைவியார்; சிவபத்தியிற் சிறந்தவர்; பல சிவாலயங்களைக் கட்டி முடித்த செம்மனச் செல்வி யார்.

* நன்றி : திரு. வி. உலகநாத முதலியார் மணிவிழா மலர், பக். 91-96.

# 8. தமிழ் வழிபாட்டு மந்திரங்கள்

- பெரியபுராணச் செல்வர் பீ.கே. குமாரசாமி,
*தலைவர், சைவ சித்தாந்தப் பேரவை, வெள்ளக்கோயில்.*

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், தமிழ்மக்களின் அயராத உழைப்பினாலும், அவர்களின் பொருளுதவியாலும் வழிவழிச் சைவர்களாகிய சோழ மன்னர்களால் எடுக்கப்பட்ட திருக்கோயில்கள் ஆகும். பிரம்மாண்டமான இத்திருக்கோயில்களைத் தமிழ்த் தச்சர்களைக் கொண்டு ஆகம முறைப்படி கட்டியதுடன் தமிழ் மக்களிடத்திலே ஆறிலொரு கடமை பெற்று ஏராளமான நிலங்களையும் வாங்கி நிபந்தம் அமைத்தார்கள். 'பொங்குமாமறைப் புற்றிடம் கொண்டவர் எங்குமாகி நிறைந்தவர் பூசனைக்கு, அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்துளான் துங்க ஆகமம் சொன்ன முறைமையால்', என்று மனுநீதிச் சோழனைச் சேக்கிழார் பெருமான் போற்றுகிறார்கள். இதிலிருந்து தமிழ்நாட்டுத் திருக்கோயில்களை ஆக முறைப்படி கட்டியவர்கள் தமிழர்கள்தான் என்பது போதரும்.

எண்ணிலாத ஆகமங்களை இயம்பிய இறைவர், அதே திருவாயால்தான் சைவத்தையும் திருநெறி தமிழையும் பரப்புவதற்காகவே தோன்றிய ஆதிசைவராகிய நம்பியாரூராரிடம் "நமக்கு அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ்பாடு என்றார் தூமறை பாடும் வாயார்". நாம் விரும்பி ஏற்றுக்கொள்ளுகின்ற அர்ச்சனை தமிழ் பாட்டுக்கள்தான். ஆகவே தமிழிலேயே என்னைப் போற்றிப் பாடு என்று ஆணையிட்டருளினார். இறைவனின் இந்த ஆணையை ஏற்று நம் அருளாளர்கள் தமிழிலே இறைவனைப் போற்றிப் பாடினார்கள். இதைத்தான் ஞானசம்பந்தப் பெருமான் "எனதுரை தனதுரையாக" என்று பாடினார்கள். அத்தகைய ஞானம் காட்டும் திருமுறைத் தமிழ் மந்திரங்களை ஓதித் திருக்கோயிலில் வழிபட வேண்டும். ஆகமங்களை இறைவன் அருளினார் என்றால் திருமுறைகள் பாடுமாறு அடியெடுத்துக் கொடுத்தவரும் இறைவன்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

திருக்கயிலையில் எண்ணிலாத ஆகமங்களை இயம்பிய இறைவன், 'இறைவி, தன்னை அர்ச்சனை புரிய ஆதரித்தார்' என்கிறார் சேக்கிழார். அதன்படி இறைவனைப் பூசை செய்வதற்காக அம்பிகை வட நாட்டில் உள்ள காசிக்கோ, அரித்துவாருக்கோ, அயோத்திக்கோ செல்லவில்லை. நேராகத் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரத்திற்கு வந்த கம்பையாற்றங்கரையில் அமைந்துள்ள சிவலிங்கத் திருமேனிக்கு பூசை செய்கிறார்கள். அந்தப் பூசையைத் தமிழ் முறைப்படி ஞானசம்பந்தப் பெருமான் தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டபடி பூவும் நீருங்கொண்டு இறைவனைத் திருமுழுக்காட்டி அர்ச்சனை செய்து வழிபட்டார்கள் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

*"கொய்த பன்மலர்க் கம்பை மாநதியில் குலவு மஞ்சனம் நிலவு மெய்ப்பூச்சு*
*நெய்தருங் கொழு தூப தீபங்கள் நிறைந்த நெஞ்சினில் நீடிய அன்பின்*
*மெய்தரும்படி வேண்டின் எல்லாம் வேண்டும் யாவையும் உதவ மெய்பூசை"*

என்கிறது பெரிய புராணம்.

சைவசமயத்தின் தனிப்பெருந் தலைவராக விளங்கிய ஞானசம்பந்தர் தமிழ் நாட்டுத்

திருக்கோயில்களில் தமிழில் வழிபடுவதை எதிர்க்கின்றவர்களுக்கு அறிவுரை கூறுமுகத்தான் பதிகம் தோறும் தமிழின் பெருமையைப் பேசி, திருவைந்தெழுத்தாகிய திருமுறைப் பாடல்களே முடிவான மந்திரம் என்று உறுதிப்படுத்துகிறார்கள். தமிழின் பெருமையை ஏற்றிப்பாடும் இடங்கள் அவர்களின் திருப்பதிகங்களில் நூற்று நாற்பதுக்கு மேல் இருக்கின்றன. தமிழ்மாலை கூறுவாரையும் கேட்கவல்லாரையும் குற்றங்கள் குறுகாவே, ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே, ஆய்ந்து சொன்ன அருந்தமிழ் பத்தும் வல்லார் வேந்தராகி உலகாண்டு வீடு நெறி பெறுவாரே, என்று ஆணையிட்டுச் சொல்கிறார்கள். இறைவனே தமிழ் வடிவமாகத்தான் இருக்கிறார் என்று பல பதிகங்களில் பாடுகிறார்கள்.

*பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத்தமிழ் அவையும்*
*விண்ணும் முழுதானான் இடம் வீழிமிழலையே, தமிழின்*
*நீர்மை பேசித் தானம் வீணை பண்ணி நல்ல முழவம்*
*மொந்தை மல்கு பாடல் செய்கை இடம் ஓவார்*

என்று சொல்லித் தமிழ்பாடும் இடங்களில் தான் இறைவன் விரும்பி எழுந்தருளியிருப்பார் என்று பாடுகிறார். மற்றும் திருவீழிமிழலைப் பதிகத்தில் செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்தவரோடு அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர் என்று குறிப்பிட்டுத் தமிழாய்ந்த அறிஞர் பெருமக்கள், சைவ நெறி மெய்யுணர்ந்த சான்றோர்கள், கலைஞானம் கற்றவர்கள், சைவசமய ஒழுக்கங்களைக் கடைபிடித்து ஒழுகின்ற அடியார்கள் அனைவரும் திருக்கோயிலுக்குள் சென்று அர்ச்சனை செய்தார்கள் என்கிறார். அடுத்து திருவிடைமருதூர்த் திருப்பதிகத்தில் திருவிடைமருதூர் வட்டாரத்திலேயிருக்கின்ற அடியார்களும் பொது மக்களும் ஒன்று கூடிக் குளிர்ச்சி பொருந்திய, சுத்தமான தண்ணீரைக் குடங்களிலே எடுத்துக்கொண்டு திருக்கோயிலுக்குள் சென்று குடமுழுக்கு நடத்தினார்கள்.

*தடங் கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்*
*குடம் கொண்டு அடியார்கள் குளிர்நீர் சுமந்தாட்டப்*
*படம் கொண்டதோர் பாம்பரையார்த்த பரமன்*
*இடம் கொண்டிருந்தான்றன் இடைமருதீதோ.*

என்பது தேவாரம். மற்றும் ஞானசம்பந்தப் பெருமான் "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று சொல்லி வேதங்களிலே சொல்லப்படுகின்ற வடமொழி மந்திரங்களைவிடப் பலமடங்கு சக்தி வாய்ந்தும் ஓதுகின்றவர்களுக்கு உன்னதமான பலனைத் தரக் கூடியதும் திருமுறைத் தமிழ் மந்திரங்கள் தான் என்று வேதம் ஓதுகின்ற வேதியர்களுக்கு அறிவுரை கூறுகிறார்கள்.

*மந்திரம் நான்மறை ஆகி வானவர்*
*சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன*
*செந்தழல் ஓம்பியசெம்மை வேதியர்க்கு*
*அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே*

என்று பாடுகிறார்கள்.

இதனைச் சேக்கிழார் பெருமான் மந்திரங்களான வெல்லாம் அருளிச் செய்து மற்றவற்றின் வைதீக நூல் சடங்கில் வந்த சிந்தை மயக்கிலும் ஐயம் தெளிய எல்லாம் செழுமறை யோர்க்கருளி

அவர் தெருளுமாற்றால் முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்பார். 'அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே' என்று அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார் என்று விரிவுரை செய்கிறார்கள். ஆகவே இனியும் திருமுறைகள் மந்திரங்கள் அல்ல வெறும் தோத்திரங்கள் தான் என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. திருமுறைகளை அருளிய அருளாளர்களின் அறிவுரையை ஏற்று நடப்பதுதான் சைவர்களுக்கு அழகு. திருமுறையைப் புறக்கணிப்பவர்கள் உண்மைச் சைவர்களாக இருக்கமுடியாது. சிவபெருமானே வழிபடு கடவுள். திருவைந்தெழுத்தாகிய திருமுறைகளே திருக்கோயில் வழிபாட்டு மந்திரம்.

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே - திருமூலர்*

# ௯. திருமுறை நெறியில் வழிபாடு

- திருமுறைத் திருமண ஆசிரியர், சைவத் தமிழ்மணி ந. ஒளியரசு,
*சென்னை.*

தமிழர்கள் கடவுள் என்று ஒருவர் உண்டு என்னும் கொள்கையை உடையவர்கள். தம் இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய நலங்களைப் பெறவும் பின்னர் வீடு பேற்றை அடையவும் கடவுள் வழிபாட்டை முதன்மையாகக் கொண்டனர். அவ்வழிபாட்டைத் தமிழர்கள் பண்டு தமிழிலேயே ஆற்றிவந்தனர்.

வழிபாட்டில் "போற்றி" "போற்றி" என்னும் தனித்தமிழ் மந்திர மறைமொழிகளை ஓதி, தளிரேனும் மலரேனும் சொரிந்து வழிபாடு செய்வது பண்டை நாள் வழக்கமாகும். அவ்வாறு வழிபாடு செய்யும் மரபில் வந்தவர்களை இன்றும் தென் தமிழகத்தில் "போற்றிமார்" "போத்திமார்" என்று வழங்கப்படுகின்றனர். பல்வேறு விதமான அரசியல் முதலிய தாக்கங்களால் அதைத் தொடர இயலவில்லை.

இவ்வாறு "போற்றி" மறை ஓதி வழிபாடு செய்ததை, "பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப் போற்றி இசைத்துப் பூசை செய்து" எனச் சுந்தரரும், "அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் ஆக்கையாற் பயன் என்" எனத் திருநாவுக்கரசரும், "போற்றி என்பார்க்கு அல்லது அருளான்" எனத் திருஞானசம்பந்தரும், "போற்றி என்பார் அமரர் புனிதன் அடி, போற்றி என்பார் அசுரர் புனிதன் அடி, போற்றி என்பார் மனிதர் புனிதன் அடி, போற்றி என்

அன்புள் பொலிய வைத்தேனே!" எனத் திருமூலரும், "பொருளும் ஞானமும் போகமும் போற்றி என்பார்க்கு அருளும் அங்கணர்" எனச் சேக்கிழாரும் தெரிவித்துள்ளமை ஈண்டு எண்ணி உணரத்தக்கது.

மேலும், "செந்தமிழோர் பரவியேத்தும் சீர்கொள் செங்காட்டங்குடி" என்றும், "செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்த அவரோடு அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்" என்றும் நந்தம் செந்தமிழ் சைவத் திருமுறைகளில் தமிழ் வழிபாடு பண்டைக் காலத்திலேயே நடந்ததற்குப் பல சான்றுகள் உள்ளன.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப" என்னும் தொல்காப்பிய வரிகளுக்கு உரை எழுதிய பேராசிரியர், "இங்ஙனம் கூறப்பட்டன தமிழ் மந்திரங்கள்" என்றும், "அவற்றை வல்லார் வாய்க் கேட்டுணர்க" என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இதிலிருந்து தமிழிலும் மந்திரங்கள் பண்டைக் காலத்திலேயே இருந்திருக்கின்றன என்பதை ஓர்ந்து உணர முடிகிறது.

தில்லைவாழ் அந்தணராகிய உமாபதி சிவாச்சாரியார் "கண்டதிரு மந்திரமே மூவர் பாடல்" என்று குறிப்பிட்டுள்ளதை நன்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். எனவே திருமுறைகள் அனைத்தும் தெய்வ ஒண்தீந்தமிழ் மந்திரங்களாகும். இந்நிலையில் தமிழர்களாகிய நாம் நம் வழிபாட்டிலும் வாழ்க்கைச் சடங்குகளிலும் இனியேனும் தமிழில் திருமுறை வழியில் செய்துகொள்ள முன்வருதல் வேண்டும்.

நாம் நம் தாயை எப்படிப் போற்றுகின்றோமோ அதுபோல நம் மொழியையும் நாட்டையும் போற்ற வேண்டும் என்பதை உணர்த்தவே நம் முன்னோர்கள் "தாய்" என்ற சொல்லை மொழியோடும் நாட்டோடும் இணைத்து, "தாய் மொழி" - "தாய் நாடு" என வழங்கி உள்ளனர்.

மனிதனுக்கு விழி போல்வது வாழ்க்கைக்கு மொழி. அம்மொழி தாய் மொழியே ஆகும். விழி இல்லாதவன் வழியறிந்து நடக்க இயலாது. அதுபோல, தாய் மொழி மூலம் வாழ்வை மேற்கொள்ளாதவன் கடமைகளை உணரவோ உரிமைகளைக் காத்துக்கொள்ளவோ இயலாது. எனவே அவரவர் தாய் மொழியை அவரவர் போற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழர்களாகிய நாம் தமிழில் நம்முடைய வழிபாடு, சடங்குகள், திருக்கோவில் குடமுழுக்குகள் முதலியவற்றைத் தமிழில் செய்து கொள்ளாமல் வேறு ஒரு மொழியில் செய்துகொள்வது சிறப்புடையது அன்று. மேலும் தாய் மொழி அல்லாத வேறு ஒரு மொழியில் செய்து கொள்வது நம்மை நாம் அறிந்தோ அறியாமலோ அம்மொழிக்கு அடிமைப்பட்டு இருப்பதைக் காட்டுவதாகும். எனவே, தமிழர்களாகிய - சைவர்களாகிய நாம் நம் தாய் மொழியில் அதாவது நம்முடைய பன்னிரு திருமுறைகளைக் கொண்டே செய்துகொள்ள வேண்டும்.

பன்னிரு திருமுறைகள் அனைத்தும் நிறைமொழி மாந்தர்களாகிய அந்தண்மை மிக்க செந்தண்மை பூண்ட ஒழுக்க சீலர்களாகிய நால்வர் முதலான அருளாளர்களால் இறைஅருளால் அருளிச் செய்யப்பட்ட தெய்வ ஒண்தீந்தமிழ் மந்திரங்களாகும். இத்திருமுறைகள் பல அற்புதங்களை நிகழ்த்தி உள்ளன. மேலும் இத்திருமுறைகள் நம்முடைய இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்து நலங்களையும் நல்கவல்லனவாகும். எனவே, திருமுறைகளைக் கொண்டே நம்முடைய வழிபாடு, சடங்குகள் முதலியவற்றைச் செய்துகொள்வதே சிறப்புடையதாகும்.

பன்னிரு திருமுறைகளின் பெருமைகள் விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும். எனவே, இப்பன்னிரு திருமுறைகளின் அரும்பெரும் சிறப்புகள்பற்றி எளியேனுடைய சிறிய தந்தையார் புலவரேறு ந.ரா. முருகவேள் எழுதியுள்ள ஒரு கவிதையை ஈண்டு எடுத்துக்காட்ட விழைகிறேன்:

*"திருமுறை நூல்களின் சிறப்பும் பயனும்*
*உணர்தொறும் உணர்தொறும் உலப்பில வாகும்*
*களைப்புறின் நமக்குக் கட்டிலாய் விளங்கும்*
*நளி இருள் தன்னில் ஒளிமிக நல்கும்*
*பசிவரின் சிறந்த ருசிமிகும் உணவாம்*

*பயமுறில் போரிடக் கவசமாய்ப் பயன்படும்*
*நோயுறில் போக்கும் வாயுறை மருந்தாம்!*
*செந்தமிழ் மணங்கமழ் திருமுறை நூல்கள்*
*தனிமையிற் சூழும் கனியுயர் நட்பு*
*பணிசெய முனையில் அணிமிகு கருவி*

*விளையாட்டு அயரக் கலையாட்டு இனிய யாழ்*
*பேதைமை பிறங்கிடின் மாபெரும் பள்ளி*
*தளர்ந்து விழின் நமைத்தாங்கும் தரைநிலம்*
*குளிர்மிக வாட்டின் ஒளிமிகும் நெருப்பு*
*துணிந்து விரும்பினால் அணிந்தெழு சிறகு*

*வழியினை விடுப்பின் மதிவழி காட்டி*
*தெய்வ ஒளிதிகழ் திருமுறை நூல்கள்*
*ஆடையில் நிலையுறின் அரும்பெறல் உடைதரும்*
*சிறைப்படில் நல்ல நிறைப்படு வெளியாம்*
*புயல்எழுந்து ஆர்ப்பின் புகலிடம் அளிக்கும்*

*அருஞ்செயல் ஆற்றப் பெருங்கடல் போலும்*
*ஒய்வுற விழையில் சாய்பெரும் பசுந்தரை*
*கவலையிருள் கவ்விற் கடிந்தருள் ஞாயிறு*
*அழகிலாச் சூழலில் அழகொளிர் பூங்கா*
*தாகம் கொளின் அதுதணிக்கும் நல் ஓடை*
*மூச்சு முட்டிடில் ஆற்றல்தரு காற்று*
*சிவநெறிச் செல்வமாய்ச் செம்மை செறிந்தொளிர்ந்து*
*இங்ஙனம் எல்லாம் எனைப்பல வகைகளில்*
*நமக்குப் பயன்தரும் நலமிகு திருமுறை*
*நூல்களின் சிறப்பு நுவலுதற் கெளிதோ!*

இத்தகைய அரும்பெரும் சிறப்புகளைக் கொண்ட திருமுறைகளைக் கொண்டு தமிழில் சடங்குகள் தகவே செய்திட- செய்துகொள்ள முன்வந்தால் எல்லா நலங்களையும் பெற்று நாம் வாழவாங்கு வாழலாம்.

மக்கள் வாழ்க்கையில் குழந்தை பிறந்ததுமுதல் அவ்வப்போது செய்கின்ற தொட்டிலில் இடுதல், பெயர் சூட்டல், முடியெடுத்துக் காதணி சூட்டுதல், எழுத்தறிவித்தல், மஞ்சள் நீராட்டல், திருமணம், கருவளர் சிறப்பு, ஐம்பது அகவை நிறைவு பொன் விழா, அறுபது அகவை நிறைவு மணிவிழாத் திருமணம், எழுபது அகவை நிறைவு பவளவிழா, எண்பது அகவை நிறைவு முத்து விழா, தொண்ணூறு அகவை நிறைவு வைர விழா, நூறு அகவை நிறைவு நூற்றாண்டு விழா என எல்லாச் சடங்குகளையும் திருமுறைகளை ஓதி வேள்வியுடன் செய்துகொள்ள முடியும்.

திருமுறை வழியில் வாழ்க்கைச் சடங்குகளைத் தமிழில் செய்வதற்குத் தமிழ்க்கடல் மறைமலையடிகள், பண்டித இராமநாத அடிகள், திருக்குறள்பீடம் அழகரடிகள், ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், கேதாரச் செல்வர் ந.ரா. ஆடலரசு மற்றும் இன்னபிற சைவத் தமிழ்ச் சான்றோர்கள் பலர் சென்ற நூற்றாண்டில் வழிகாட்டியுள்ளனர். அவர்களின் அடியொற்றித் தொடர்ந்து தமிழில் திருமுறைகளை ஓதி வாழ்க்கைச் சடங்குகளைச் செய்து கொள்ள முன்வரவேண்டும்.

திருமுறைகளைத் திருக்கோவில்களிலும் சைவர்களின் இல்லங்களிலும் பட்டுத்துணி சுற்றிப் பெட்டகத்தில் வைத்து வழிபடுவது, பாராயணம் செய்வதுடன் நிற்காமல் அத்திருமுறைகளைப் பயன்படுத்திச் சடங்குகளைச் செய்துகொள்வது பீடும் பெருமையும் சிறப்பும் நல்கவல்லது. எனவே திருமுறை ஓதி வழிபாடு மற்றும் சடங்குகளைச் செய்துகொள்வோம். வாழ்க திருமுறைகள்! வளர்க திருமுறைவழிச் சடங்குகள்! வளர்க சைவ சமயம்!

## 10. சிவபூசைச் சிறப்பு*

- பேராசிரியர். டாக்டர் க. சுவர்ணகாளீச்சுரன், டி.லிட்.,

*திருவையாறு.*

சிவபூசையின் பெருமையை சிவபெருமானே உமாதேவியாருக்கு அருளினார். அம்மையார் அவ்வாறே பூசையைச் செய்தார். அப்பூசனை முடிவதற்குள்ளேயே அப்பெருமான் குழைந்தருளும்படி தழுவுதலாகிய சிறந்தபயனைப் பெற்றார். எனவே சிவபூசையே உத்தமோத்தமமாவது எனச் சிவாகமம் கூறும். அச்சிவபூசை "ஆன்மார்த்தம்", "பரார்த்தம்" என இருவகைப்படும். இதற்குரிய அதிகாரிகள் "சமயம், விசேடம், நிருவாணம்" என்னும் மூவகைத்தீக்கை பெற்றோராவார். அவருள்ளும் ஆசாரியாபிடேகம் பெற்ற சிவாச்சாரியர்களே பரார்த்த பூசைக்குரியார். பரார்த்த பூசைக்கு இன்றியமையாது முன்னிற்பது ஆன்மார்த்த பூசையே யாகும். இவ்வான்மார்த்த பூசையின் பயன்களையும், தத்துவங்களையும் சிறிது காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இச்சிவபூசையானது இவ்வுலக மக்களுக்கு இம்மையில் வேண்டிய பெருஞ்செல்வம், நல்ல மகப்பேறு, வாழ்வில் வெற்றி, மாண்பார் கல்வி, சிறந்த புகழ், சிறந்த அழகு, குற்றமிலாச் சொல்வன்மை, சிறந்த சிந்தனை, நற்குடும்பம்,நல்லாயுள் ஆகிய பயன்களைத் தரும். இதனைச் சூதசங்கிதையும் காஞ்சிபுராணமும் பின்வருமாறு கூறுகின்றன.

*"திருவ மிக்கடைய வேண்டில், செம்மகப் பேறு வேண்டில்,*
*மருவலர் செகுக்க வேண்டில், மாண்பொடு கல்வி வேண்டில்,*
*வரும்பெரும் புகழ்ச்சி வேண்டில், வான்முதல் எவ்வி டத்தும்*
*பொருவலி பூசை யன்றி மற்றெவற் றாலும் பூவா"* - சூதசங்கிதை

*"செல்வம், ஆண்மை, ஏர்சீர்த்தி, வாழ்வருள்,*
*கல்வி, கட்டெழின் மகளிர், காழிலாச்*
*சொல்வளத்திறம், சூழ்ச்சி, எனவும்,*
*அல்வெரு உங்களன் அருச்சனைப் பயனே"* - காஞ்சிபுராணம்

இவ்வாறு உலகியல் நலன்களைச் சிவபூசைப் பயன்தரினும் சிவானுபவமே சிவபூசையின் இறுதிக் குறிக்கோளாகும். இவ்விறுதிக் குறிக்கோளில் உறுதியாக இருந்து பதி போதத்தோடு செய்யும் பூசை பதி புண்ணியமாகும். உலகியலிலே வாழ்வது வரையிலும் உலகியல் நலங் கருதியும் பூசை செய்யலாம். அப்பூசையும் படிப்படியாக உயர்ந்து தூய்மை செய்து ஞானநாட்டத்தைத் தரவல்லதாக அமையவேண்டும்.

*"முத்தனே! முதல்வா! முக்கணா! முனிவா*
*மொட்டுஅறா மலர்பறித்து, இறைஞ்சி,*
*பக்தியாய் நினைந்து, பரவுவார் தமக்குப்*
*பரகதி கொடுத்து, அருள் செய்யும்"*

*"சித்தமே புகுந்தெம்மை ஆட்கொண்டு*
*தீவினை கெடுத்து உய்யலாம்*
*பத்திதந்து தன்பொன் கழல்கணே*
*பன்மலர் கொய்து சேர்த்தலும்*
*முத்திதந்து இந்தமு வுலகுக்கும்*
*அப்புறத் தும்எமை வைத்திடும்*
*அத்தன்மா மலர்ச் சேவடிக் கண்நம்*
*சென்னி மன்னி மலருமே!"*

என்னும் திருவாசகங்களும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

இச்சிவபூசை சுத்தம், கேவலம், மிச்சிரம் என்று மூவகைப்படும். சிவலிங்கத்தை மட்டும் பூசித்தல் சுத்தம், சிவம், தேவி, விநாயகர், முருகன், இடபதேவர் முதலியவர்களோடும் பூசித்தல் கேவலம். சூரியன் முதல் சண்டிகேசுவரர் வரை பூசித்தல் மிச்சிரம். துறவிகள் சுத்த பூசையினைச் செய்வர். இல்லறத்தார் கேவலபூசை செய்யலாம். ஆச்சாரிய அபிடேகம் பெற்றோர் மூன்றுவித பூசைக்கும் உரியராவார்.

இந்த ஆன்மார்த்தபூசை இட்டலிங்கபூசை எனவும் க்ஷணிகலிங்க பூசை எனவும்

இருவகைப்படும். இட்டலிங்கபூசை பாணம், மரகதம், படிகம், கல், ஆகியவற்றால் ஆகிய சிவலிங்கம் ஒன்றை ஆசாரியனிடம் விரும்பிப்பெற்று ஆயுள் உள்ளவரையும் வைத்துக்கொண்டு பூசிப்பது ஆகும். க்ஷணிகலிங்கபூசை புற்றுமண், ஆற்றுமணல், பச்சைஅரிசி, அன்னம், பசுச்சாணம், வெண்ணெய், உருத்திராட்சம், விபூதி, சந்தனம், மலர், கூர்ச்சம், வெல்லம், பழம், தளிர், தண்ணீர் எனப் பன்னிரு வகையாகும்.

பூசையின் உயிர்நாடி பாவனை எனல் வேண்டும். பூசைசெய்பவர் தம்மைச் சிவபாவனையில் நின்றே பூசிக்கவேண்டும். தம்முன் உள்ள சிவலிங்கத்தைச் சிவபெருமானே எழுந்தருளியதாகப் பாவிக்கவேண்டும். முற்றமுடியப் பாவனை உலகிலிருந்து செய்யப் பெறுவது மானதபூசை.

பல உபகரணங்களையும் தேடிவைத்துக் கொண்டு சிவலிங்கம், அபிடேகப் பொருள்கள், அருக்கியாதி கிண்ணங்கள், மலர்கள், ஆடை, தூபதீபங்கள், இருக்கை, பூசாபத்திரங்கள் போன்றவற்றை அமைத்துக் கொள்ளவேண்டும்.

**பஞ்சசுத்தி**: ஐந்து வகையான சுத்தி; அவை ஆன்மசுத்தி (பூதசத்தி), தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி எனப் பெயர்பெறும்.

**பூதசுத்தி**: சிவசுத்தி, சூக்குமதேகசுத்தி, தூலதேகசுத்தி என மூவகைப்படும். ஆன்மபோதம் நீங்கிச் சிவபோதம் தலைக்கூடுவதாகப் பாவனை. தத்துவத் தொடர்பு நீங்கி அருள் தொடர்பு ஏற்படுவதாகப் பாவனை செய்தல். இதனைப் பஞ்சசுத்திகளுள் ஒன்றாகிய ஆன்மசுத்தி எனக்கூறுவர்.

**தானசுத்தி**: பூசைசெய்யும் இடத்தை மந்திரத்தால் சுத்தி செய்தல்,

**திரவியசுத்தி**: பூசைக்குரிய பொருள்களை மந்திரத்தால் சுத்தி செய்தல்.

**மந்திரசுத்தி**: மூலமந்திரம், பஞ்சப்பிரமமந்திரங்கள், சடங்கு மந்திரங்களை முறையோடு உச்சரித்தல்.

**இலிங்கசுத்தி**: இறைவன் சாந்நித்யத்தை சர அசரங்களிலும் பாவித்தல் இலிங்கசுத்தி என்பர். இவ்வாறு பஞ்ச சுத்திகளும் செய்து பாவனையோடு பூசனை செய்யவேண்ண்டும்.

"பஞ்சசுத்தி செய்து நின்னைப்பாவித்துப் பூசைசெய்தால் விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே" எனப் பாடுவார் தாயுமானார்.

இவ்வாறு ஞானம் நிகழ்த்தப் பெறும் சிவபூசை பதினாறு வகை உபசாரங்களாகப் பகுக்கப்பெறும்.

1. **ஆவாகனம்:** சிவனை எழுந்தருள அழைப்பது.
2. **தாபனம்:** இவ்விலிங்கத்தில் எழுந்தருளி இருக்க வேண்டுமென்ற பாவனை.
3. **சந்நிதானம்:** சிவபெருமானது பூரணத்துவம் பூசை செய்வோன் அறிவிலும், அவ்வறிவு சிவபூரணத்திலும் படிதல். அருள்பவனும் அருளப்படுபவனுமாகிய சம்பந்த பாவனை.
4. **சந்நிரோதனம்:** சிவனருள் தொடர்ந்திருக்கச் செய்யும் மனோ பாவனை.
5. **அப்பியுட்சணம் அவகுண்டனம்:** மூடுதல், சுற்றுதல் என்பதற்குரிய பொருள்களைத் தரினும் கவச மந்திரத்தால் செய்யப் பெறும் ஒருவகைச் சடங்காகும்.
6. **தேனுமுத்திரை:** பசுவின் மடிபோல் காட்டும் முத்திரை. அவகுண்டனம் செய்தபின் தேனுமுத்திரையால் அமுததாரை ஒழுகுவதாகப் பாவித்தலாகும் பரமிகரணம் எனப்படும்.

7. **பாத்தியம் :** கால் கழுவ நீர்தருதல்.

8. **ஆசமனியம்:** ஆசமனம் செய்ய நீர்தருதல்.

9. **அருக்கியம்:** கைகழுவ நீர்தருதல். இறைவன் திருவடியில் பொருந்தி நிற்றல் பாத்தியம். அவன் திருமுடியில் பொருந்தி நிற்றல் அருக்கியம். அவன் அருள் முகத்தில் பொருந்தி நிற்றல் ஆசமனம். பாத்தியம் ஞானாசத்தியின் காரியம். ஆசமனியம் கிரியா சத்தியின் காரியம். அருக்கியம் இச்சாசத்தியின் காரியம்.

இம்மூன்றனையும் பூசனை செய்வோர் ஆன்ம சுத்திக்காகவே செய்யப் பெறுகின்றது.

10. **புஷ்பதானம்:** கடந்த நிலையில் சென்று சிவானந்தம் பெறுவதற்காகவே முடியில் புஷ்பம் சாத்துவது.

11,12. **தூப தீபம் காட்டுதல்:** திருமஞ்சனமாட்டுவது மலமகலுவதற்கும், தூபதீபம் காட்டுவது வாசனா மலம் அகலுவதற்குமாகும்.

13. **நைவேத்தியம்:** தூய உணவு வகைகளைப் படைத்தல் (தற்போதத்தைப் படைக்கும் பாவனை)

14. **பானீயம்:** ஏலம், சந்தனம், பச்சைக்கற்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ கலந்த நீரைப் படைத்தல், இவற்றை நிவேதனம் செய்து தாம்பூலம் கொடுத்தல் வேண்டும்.

15. **ஜெபசமர்ப்பணம்:** இறைவனுக்குரிய மந்திரத்தை நூற்றெட்டுத்தரம் ஜெபித்து, சிவனருளால் தனக்குச் சித்தியாக வேண்டும் என்ற பாவனை, செபத்தை வரத ஹஸ்தத்தில் கொடுத்தல்.

சர்வகுணங்களும் சுழன்று விடுவதாகப் பாவனை.

16. **தீபாராதனை:** தீபங்கள் பல அடுக்குகளாக உள்ளன. தனித்தனிப் பயன்கள் - கற்பூர தீபாராதனை சிறப்பானது. "தீதணையாக்கர்ப்பூர தீபமென நான் கண்ட சோதியுடன் ஒன்றித்துத் துரிசறுப்ப தென்னாளோ" என்பது தாயுமானவர் திருவாக்கு. பூசையின் இறுதியில் தோத்திரம் செய்து வலம் வந்து வந்தனைசெய்து முடிப்பார்கள். பூசை முடிவில் அக்கினி காரியம் செய்தலு முண்டு.

"உமையொருபாகனை உணர்மின்கள் உள்ளத்தில்" என்று அப்பர் சுவாமிகள் அருளுகின்றார். சண்டேசர் பூசையோடு சிவபூசனை நிறைவெய்துகிறது.

சிவபூசையில் பாவனை மிகுந்து நின்றாலும் புறத்தே புலனாகுமாறு விளங்குவன மந்திரம், முத்திரை, உபசாரம், ஓமம் என்பனவாம். முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து சென்று அங்குறையும் சிவத்தோடு கலத்தல் சைவர்களின் முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோள் சிவபூசையில் பல நிலைகளிலும் விளங்கத் தோன்றக் காணலாம்.

சிவபூசைக்குரிய மலர்கள் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை யாகிய எட்டு மலர்கள், சாதகர்களுக்கு இருக்க வேண்டிய கொல்லாமை, அடக்கமுடைமை, பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எட்டு குணங்களையும் அஷ்டபுஷ்பம் எனக்கூறுவர். வில்வத்தால் சிவார்ச்சனை செய்வதன் பலனோடு இக்கட்டுரையை நிறைவு செய்வோமாக....

*நோயுற வேண்டி னும் நோன்மை வேண்டி னும்*
*மாயிரும் புவி அடி வணங்க வேண்டி னும்*
*தூயவிண் வேண்டி னும் துறந்து மும்மலம்*
*ஒயருன் முத்தியை உதவும் வில்வமே. (பேரூர் புராணம்)*

---

நன்றி : சிவத்திரு. பொன்னம்பலம் பிள்ளை முத்துவிழா மலர், பக். 37-42.

## 11. திருமண முறையும் - திருமுறை நெறியும்

- திருமுறைத்தமிழ்மணி புலவர் இராம. வேங்கடேசன்,
*சென்னை*

உலக நாடுகள் எல்லாம் அறியாமை இருளில் ஆழ்ந்து அல்லல் உற்று உழன்று கொண்டிருந்த காலத்தில், இரு நில உலகின் பெருநிலப் பரப்பில் ஒரு மொழி கொண்டு ஒப்பிலா வாழ்வு நடத்திய இனம் தமிழ் இனம். கல்தோன்றிமண் தோன்றாத வரலாற்று ஆராய்ச்சிக்கு முற்பட்ட பழங்காலம் தொட்டே ஒழுக்கம். அன்பு, அருள், கல்வி, கலை, பண்பாடு முதலியவற்றில் தமிழின மக்கள் மேம்பட்டு விளங்கினர். 'அகம்', 'புறம்' - என இரு கூறாக இயங்கும் தம் வாழ்க்கை முறைகளில் மிக உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருந்தனர் தமிழர்.

அவ்விரு கூறுகளுள் முதன் முதல் வாழ்க்கைத் துணைவர்கள் ஒருவரை ஒருவர் களவில் கண்ட ஒன்றுபட்ட களவியல், அக்களவின் வழித்தாகிய கற்பியல், அதில் ஆற்றுப்படுத்தும் மணவியல், அம்மண வாழ்க்கையின் நிலைக்களமாகிய இல்லறத்தின் நல்லறம் - முதலிய முறைகளைத் தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், ஆகியவற்றில் விளக்கமாக அறியலாம்.

திருமண முறைகள் இலைமறைகாய் போல் இவற்றுள் அமைந்திருக்குமாற்றையும், இடைக்காலத்தில் திருமணமுறைகளில் புரோகிதர்களும், சடங்குகளும், ஆரிய மொழியும் ஊடுருவிய இயல்பினையும், தற்காலம் நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும் ஒருவாறு சிந்திக்க முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பழங்காலத் தமிழகத்தில் ஒத்த குணமும் ஒத்த நிறமும், ஒத்த வயதும், ஒத்த கல்வியும் உடைய ஒரு தலைவனும் தலைவியும் கூடி இன்புற்று வாழும் வாழ்வு 'அகம்' எனப்பட்டது. இதனை

*'ஒன்றி உயர்ந்த பாலதாணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'*

என்ற தொல்காப்பிய நூற்பாவாய் உணரலாம். அன்றியும்

*"சொற்பால் அமுது இவள்: யான் சுவை என்னத் துணிந்திங்ஙனே*
*நற்பால் வினைத் தெய்வம் தந்தின்று நானிவளாம் பகுதிப்பொற்பு ஆர் அறிவார்"*

என்ற திருச்சிற்றம்பலக் கோவையார்ப் பகுதியாலும், இதற்குப் பேராசிரியர் "நல்வினைத் தெய்வம் களவின்கட்கூட்ட அமுதமும் அதன்கட் கரந்து நின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள் கண்ணே கரந்து ஒடுங்க, யான் என்பதோர் தன்மை காணாதொழிய, இருவர் உள்ளமும் ஒருவேம் ஆமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின் கட்பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்ற யானே அறியின் அல்லது) யாவரால் அறியப்படும் என்று மகிழ்ந்துரைத்தான்" - என்று எழுதிய உரைப்பகுதியாலும் உணரலாம்.

*யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*.................................. செம்புலப் பெயர் நீர்போல்*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவால்*

என்ற குறுந்தொகை முதலிய சங்க இலக்கியம் அனைத்தும் அகவாழ்க்கைக் களவு நெறியில் தலைவனும் தலைவியும் கூடி வாழும் இல்லற மாண்பைப் புலப்படுத்தும் சான்றுகளாம்.

காலப் போக்கில் தலைமக்களிடையே பொன்னாசை முதலியவற்றால் பிணக்கு ஏற்படத் தலைமகனைத் தலைவன் பிரிந்து சென்றதோடன்றி 'அவளுக்கும் தனக்கும் எந்த உறவும் இல்லை' - என்று கூற ஆங்காங்கே கட்டுக் கோப்பான அகவாழ்வு குலைந்தது.

*யாரும் இல்லை, தானே கள்வன்*
*தானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ*

என்று தலைவி வருந்துவதாகக் கூறும் அகப்பாடலும்,

*"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப"*

என்ற தொல்காப்பிய நூற்பாவும் சடங்குகளுடன் கூடிய திருமணவாழ்வு அமையக் காரணமாக அமைந்ததை உணரலாம்.

அக்காலத்து இக்காலம் போன்று திருமணத்திற்கெனத் தனித்த புரோகிதர் இருந்ததில்லை. "உழுந்து தலைப்பெய்த" - என்னும் 861 ஆம் அகநானூற்றுப் பாடலும் "மைப்புறப்புழுக்கின்ற நெய்க்கள் வெண்சோறு" என்னும் 136-ஆம் அகநானூற்றுப் பாடலும், அந்தந்த குடும்பத்தில் முதிர்ந்த கல்வி, கேள்வி, ஒழுக்க நெறியில் உயர்ந்த அனுபவம் மிக்க மங்கல மகளிரும், பெரியோரும் இணைந்தே "**பொற்றோன் பிணையை ஆகு**" - எனவும் '**பேரிற் கிழத்தி ஆகு எனத் தமர்தர**' - எனவும் அமைந்த தொடர்களே **புரோகிதர் இல்லாத்திருமணம் நடந்ததற்குச் சான்றுகளாம்.**

ஆரியக்கலப்பு ஊடுருவியதால் தனித்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திலேயே, புரோகிதன், சடங்கு எரிவலம் போன்றவை தோன்றி உள்ளன. இதனை

*"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்*
*தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை"*

என்று கோவலன் கண்ணகி திருமணம் நடந்த முறையைக் கூறுமுகத்தான் இளங்கோவடிகள் இயம்புவார். நாளடைவில், 9, 10ஆம் நூற்றாண்டு இறுதிவரை பலகுடி, இன மக்களிடையே இம்முறை பரவியதாகச் சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய காப்பியங்களில் கவினுறக் காணலாம். இவை சங்க கால முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையே!

ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தனித்து வாழ்வது தன்னல அடிப்படையில் அமையும். இணைந்து குடும்பமாக ஒன்றி வாழ்வதே தன்னலத்தோடு, சுற்றம், நட்பு, சமுதாயம் - என இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்றுடன் உலகப் பொது நோக்கில் வாழ அடிப்படையாக உதவும் என்பது இலக்கிய இலக்கணச் சான்றோர் கொள்கை மட்டும் அன்று; திருமுறை இலக்கியங்களும், மெய்கண்ட சாத்திரங்களுமே இவற்றை வலுப்படுத்தும். எல்லா உயிரும் பேரின்பப் பெருவாழ்வு

பெற விரும்பும். இறைவன் அம்மையும் அப்பனுமாக விளங்கும் வடிவமே 'தொன்மைவடிவம்' எனச் சைவ சித்தாந்தம் கூறும்.

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்" என்றும், "காதல் மடப்பிடியோடும் களிறுவருவனகண்டேன்" என்றும், "மாதினுக்கு உடம்பு இடம் கொடுத்தானை" என்றும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" - என்றும் நால்வர் அருளிய திருமுறைத் தொடர்களும், "ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே" - என்ற சிவஞானபோதத்தொடரும், "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" - என்ற சிவஞான சித்தியார் தொடரும் "சத்தி பின்னம் இலான் எங்கள் பிரான்" - என்ற திருவருட்பயன் தொடரும் "இறைவனும் இறைவியும் இணைந்த கோலமே" உயிர்கட்கு அருள்பாலிக்கும் கருணைக்கோலம் என்பதை உணரலாம்.

போகவடிவம், யோக வடிவம், வேக வடிவம் - மூன்றிலும் அம்மையும் அப்பனுமாக விளங்கும் போகவடிவமே முதன்மையான பழமையான தொன்மையான கோலம் என்பதில் ஐயம் இல்லை. அந்த இறைவனும் இறைவியும் போல ஒவ்வொரு தலைவனும் தலைவியும் தங்கள் குடும்பத்தில் அல்லது இனத்தில் உள்ள கல்வி ஒழுக்கம் பண்பு நிறைந்த பெரியவரைத் திருமண ஆசானாகக் கொண்ட உற்றார் உறவினர் மகிழும் வண்ணம் ஏற்ற சடங்குகளுடன் திருமுறை நெறியில் நடத்திக் கொள்வதே பொருத்தம் உடையதாம்.

ஆதலின் இங்கே சுட்டப்பெறும் சடங்குகளைப் புரோகிதர் எனப்படுவோர் செய்யும் சடங்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் ஆகாது. "அவர்கள் செய்வன போலத்தான் இவையும் இருக்கின்றன" - என்றோ, "அவர்கள் செய்யும் சடங்குகளில் இந்தச் சடங்குகள் இல்லையே" - என்றோ, அவர்கள் செய்யாத சடங்குகள் எல்லாம் உள்ளனவே" - என்றோ குறை காணல் கூடவே கூடாது. "அடிப்படை திருமுறை வழிபாடு - என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அவரவர் பழக்க, வழக்க, கால, இட, சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சடங்குகளைக் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ அமைத்துக் கொள்ளலாம். செய்யும் சடங்குகளுக்குப் பொருந்திய திருமுறைப்பாடல்களின் பொருள், பொருத்தம் சிறப்புகளை உணர்ந்து மனநிறைவு கொள்ளுதல் வேண்டும்.

*நிகழ்முறை விளக்கம்*

பொதுவாக எல்லாத் திருமண மண்டபங்களிலும் மணமேடை கிழக்குமுகம் நோக்கியே அமைந்திருத்தலைக் காணலாம். அம்மேடையில் திருமண ஆசான் வடக்கு முகமாகவும் மணமேடையில் உரிய பலகை அமைத்து மணமக்கள் கிழக்கு முகமாகவும் அமரச் செய்து எதிரில் இரண்டு குத்துவிளக்கு காமாட்சி அம்மன் விளக்கு, இடையில் விநாயகப் பெருமானை மஞ்சளில் ஆவாகனம் செய்து, அம்மையப்பர் (சிவசக்தி) கலசம் அமைத்து, உரிய முறையில் மங்கலநாண் தட்டு, காப்புநாண் தட்டு, வாழ்த்திற்கான பூக்களுடன் கூடிய மஞ்சளரிசித்தட்டு, வேள்வி வழிபாட்டிற்கான ஓமகுண்டம் - முதலியவற்றை அவரவர் இயல்பிற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம்.

*நிகழ்ச்சி நிரல்*

அ. திருமண ஆசான் பன்னிரு திருமுறை விண்ணப்பம். மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் ஓதி, திருமணமுறை விளக்கம் முதலில் அமைய வேண்டும்.

ஆ. மணமகன் (மாப்பிள்ளை) அம்மான் (தாய்மாமன்) அவர்களால் மேடைக்கு

அழைத்துவரப்பட்டு அவையோரை வணங்கி அமர்தல் வேண்டும். ஆசான் விநாயக வழிபாடு, அம்மையப்பர் வழிபாடு, ஆற்றுதற்குரிய பாடல்கள்.

*ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை (விநாயகர் வழிபாடு)*
*வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி*

---------------------------------------

*கயிலை மலையானே போற்றி போற்றி (சிவசக்தி வழிபாடு போற்றித் திருத்தாண்டகம்)*

*விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினல் இடவல்லார்க்கு*
*கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே! (தூபம் காட்டல்)*

*கற்பனை கடந்த சோதி... (தீபம் காட்டல்)*

"மந்திரமாவது நீறு - ஓதி, திருநீறு வழங்கல்

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" - ஓதியும், 'கலையாத கல்வியும்' - அபிராமி பதிகம் ஓதியும் புத்தாடை வழங்கலாம்.

இ) **மணப்பெண் வழிபாடு**: அம்மான் அவர்களால் அழைத்து வரப்பெறல்: மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் வருகைப்பருவம் - தொடுக்கும் படவுட் பழம்பாடல், சிந்தித்து; 'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி':- மூலம் வழிபாடாற்றி, 'வேதத்தின் உள்ளது நீறு' ஓதி திருநீறு வழங்கி, 'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்" பதிகம் ஓதி, புத்தாடை வழங்கலாம்.

ஈ) **சுமங்கலியர் ஐவர் அரசாணிக்கால்** வழிபாடாற்றி நீர், பால், மஞ்சள், குங்குமம் பூசி, காப்புநாண் கட்டச் செய்தல் வேண்டும். "போற்றி ஓம் நமச்சிவாய" - திருவாசகம்

உ) **மணப்பொங்கல் படையல்** : மணமக்கள் விருந்தோம்பல் - முதலிய இல்லறத்தொண்டுகளை யெல்லாம் ஆற்றுதற்குரிய உரிமை படைத்தவராகின்றனர். என்பதற்கான அறிகுறி 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' பாடலுடன், "ஆட்சி உலகை உடையாய் போற்றி - அடியார்க்கு அமுதெலாம் ஈவாய் போற்றி" - ஓதி, தூப, தீபம் காட்டல் வேண்டும்.

ஊ) **காப்புநாண் (கங்கணம் /அணிவித்தல்):** திருமண ஆசான் மணமகன் வலக்கையில் கட்டி "வேண்டத்தக்கது அறிவோய் நீ!" திருவாசகப்பாடல் ஓதி, குங்குமம் அணிவித்தல், மணப்பெண்கையில் மணமகனை (இடக்கையில்) கட்டச் செய்து "முன்னம் அவனுடைய நாமம் கேட்டான்" - திருத்தாண்டகம் ஓதி, குங்குமம் அணியச் செய்தல் வேண்டும்.

எ) **மணமக்கள் பெற்றோர் வழிபாடு:** மணமகன் தாய் தந்தையாரின் திருவடிகளுக்கு நீர், பால் மஞ்சள், குங்குமம், மலர், தீபம் காட்டல் ஆசான் "ஈன்றாளுமாய்" - எனத் தொடங்கும் தேவாரத்தையும் "**அம்மையே அப்பா**" - என்ற திருவாசகத்தையும் ஓதலாம். மணமகளும் அவ்வண்ணமே வழிபாடு செய்ய ஆசான் "அப்பன் நீ அம்மை நீ" எனத் தொடங்கும் தேவாரத்தையும், "பாலை நினைந்தூட்டும்" எனத் தொடங்கும் திருவாசகத்தையும் ஓதலாம்.

ஏ) **மங்கலநாண் வழிபாடு** : ஆசான் "**ஒன்றிய மங்கலநாணின் ஒளி போற்றி**" என்ற தொடர் அமைந்த உமாபதி சிவனார் அருளிய கோயில்புராணப் பாடலை ஓதி, அவையோரின் வாழ்த்துப்பெற மஞ்சளரிசி பூக்களுடன் அனுப்பலாம்.

ஐ) **அழல் ஓம்பல்** : வேள்வி வழிபாடு ஞாயிறு, திங்கள், தீ - ஆகிய முச்சுடர்களையும், வலக்கண்ணாகவும், இடக்கண்ணாகவும், நெற்றிக் கண்ணாகவும் கொண்டு உயிர்களுக்கு அருள் பாலிக்கும் பெருமானை ஓமகுண்டத்தில் 'ஒளிப்பிழம்பாக' - எழுந்தருளச் செய்தல் ஆல், அரசு, அத்தி, வன்னி, மா - ஆகிய சமித்துக் குச்சிகளையிட்டு, கற்பூரம் இட்டு, நெய்வார்த்து மணமக்கள் வழியாக ஆசான் வழிபாடாற்றல். ஓதுதற்குரிய திருமுறைப்பாடல்கள்:

**அப்பர் தேவாரம்:**

*"விறகில் தீயினன் - மாமணிச் சோதியான்"*

*"வேதமும் வேள்வியும் ஆவன"*

*"வேள்வியின் பயனாகி நின்றான் தன்னை"*

*"நாரையூர் நன்கையில் கண்டேன்தானே"*

*"அஞ்சிப் போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி"*

*"எல்லா உலகமும் ஆனாய் நீயே ............*
*........... திருவையாறகலாத செம்பொற்சோதி"*

**திருஞானசம்பந்தர் தேவாரம்:**

*"கற்றாங்கு எரியோம்பி"*

"செந்தழல் ஓம்பிய செம்மைவேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" 'நமச்சிவாயப் பதிகம்' - ஏற்றபெற்றி ஓதலாம். "**வேயுறுதோளிபங்கன்**" - கோளறுபதிகம்

"ஓர் உருவாயினை" - எனத் தொடங்கும் "**திரு எழு கூற்றிருக்கை**" - ஓதினால் தேவாரம் முழுமையும் ஓதிய பயன்உண்டு எனப் பெரியோர் கூறுவர்.

ஒ) **திருப்பூட்டு** (மங்கல நாண்சூட்டல்): மாப்பிள்ளை சகோதரி நாத்தனார் விளக்கு ஏந்த "**விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாரும்**", "**ஞானச்சுடர்விளக்காய் நின்றாய் நீயே**" - என்ற அப்பர் தேவாரத்தை ஆசான் ஓதிக் கொடுத்தல் வேண்டும். மணப்பெண் பெற்றோர் வழியாக ஆசான் மங்கல நாணை மணமகன் பெற்றோரிடம் வழங்க அவர்கள் மணமகனிடம் கொடுத்து அணிவிக்கச் செய்தல் வேண்டும்.

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"*

என்ற தேவாரமும்,

"தனம் தரும் கல்வி தரும்" - என்று தொடங்கும் அபிராமி அந்தாதிப்பாடலும் ஓதி ஆசான் கெட்டி மேளம் முழங்கச் செய்த அவையோர் வாழ்த்த

*"தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி*
*ஏகம்பத்துறை எந்தாய் போற்றி*
*பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி"*

என்று அம்மையப்பர் திருவருள் முழுமையும் மணமக்களுக்குப் பாலிக்குமாறு முழங்குதல் நலம்பயக்கும்.

ஓ) மாலை மாற்றல், வலம் வரல், மாறி அமர்தல், பொரி இடல், பட்டம் கட்டல், மெட்டி இடல், மோதிரம் இடல் அவரவர் வழக்கத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். ஆசான் காப்புநாண் அவிழ்த்து திருக்குறள், திருமுறை ஓதி, பஞ்ச புராணத்துடன் "வான்முகில் வழாது பெய்க" - ஓதி நிறைவு செய்யலாம்

*"குவளைக்கண்ணிகூறன் காண்க"*

*"அவளும் தானும் உடனே காண்க."*

*"காவாய் கனகத்திரளே போற்றி"*

*"கயிலை மலையானே போற்றி போற்றி."*

## 12. அன்பு வாழ்க்கை

- பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம்

**அச்சம்:**

இன்றைய வாழ்வு அமைதியானதாய், வளமுடையதாய் அமையவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். அதற்கு குறுக்கே நிற்கின்ற ஒன்று ஆசை எனச் சொல்லப் படுவதாகும். திருமூலர் சொல்லுவார்:

*"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்*
*ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்"*

ஏன் அப்படி?

*"ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்"*

என்று சொல்லுவார். திருவள்ளுவர், "தவாஅப் பிறப்பீனும் வித்து" என்று சொல்லுவார். இந்தத் திருமூலர், அந்தத் திருவள்ளுவர் இரண்டுபேருமே ஆசையைப்பற்றிச் சொல்லும்போது, ஆசை அறுமின்கள் அவா அறுத்தல் என்று சொல்லுவார்கள். வல்லின உச்சரிப்போடு கூடிய அறுத்தல் என்ற சொல்லினைப் பயன்படுத்துவதன் நோக்கம், ஆசை அறுத்தல் என்பது அவ்வளவு எளிதான காரியம் அன்று என்பதாகும்.

எளிதான காரியம் அன்று என்பதற்காக அதை விட்டு விட்டால் நம்முடைய வாழ்க்கை மனித வாழ்க்கையிலிருந்து மாக்கள் வாழ்க்கையாக மாறிவிடும். ஆசை என்பதற்கு எல்லை இல்லை. தன்னுடைய வாழ்வு ஓரளவு வளமுடையதாக இருக்க வேண்டுமென்பதிலே எவ்விதமான தவறும் இல்லை. ஆனால் எந்த மனிதனும் அத்தோடு நிறுத்துவதேயில்லை.

*"ஆசைக்கோர் அளவில்லை அகில மெல்லாம் கட்டி*
*ஆளினும் கடல் மீதிலே*
*ஆணைசெலவே நினைவர் அளகேசன்*
*நிகராக அம்பொன்மிக வைத்தபேரும்"*

என்று சொல்லுவார் தாயுமானவர்.

ஆக, ஆசை அதிகமாக அதிகமாகத்தான் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கூடப் பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறான், மேலும் மேலும் ஆசைப்படுவதனாலே; மேலும் மேலும் சேகரிக்க வேண்டுமென்ற பேராசை உந்த, வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டியவற்றை, உரிய காலத்தில் அநுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. தன்னுடைய குடும்பத்திற்கும் கூடச் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாமல் போய்விடுகிறது. அவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்ததனாலேதான் ஆசை அறுமின்கள் என்று சொன்னார். ஆசை அறுமின்கள் என்று சொன்னவுடனே எல்லோரும் துறவிகளாகப் போய்விட வேண்டுமென்று திருமூலர் கருதவேயில்லை. இந்த நாட்டுக்காரர்கள் துறவை ஏற்றுக் கொள்ளவேயில்லை.

*"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை"*

என்று சொல்லுவார் ஞானசம்பந்தர். ஆகவே ஆசை தேவையான அளவுக்கு மேலே விரிந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் அடிப்படை நோக்கமாகும்.

இந்த ஆசை அதிகப்படுவதானலே என்ன ஆகிறது? மனித நேயமே நம்மைவிட்டுப் போய்விடுகிறது. தன்னுடைய குடும்பத்தில் பிள்ளை முதலானவர்கள் அதிகமாக இருந்தாலும் கூட, 'இவர்கள் எல்லாம் இந்தப் பொருளை வீணாக்கி விடுகிறார்கள். நாம் சேர்த்து வைத்தது பாழாகப் போய்விடுகிறதே' என்ற அளவிலே, தன்னலமாக வளர்ந்து, மனம் விரிந்து செல்வதற்குப் பதிலாகச் சுருங்கிச் சுருங்கிக் கொண்டே செல்கிறது.

மனம் விரிய வேண்டுமேயானால் ஒரே வழி ஆசையற்றதாக இருக்கவேண்டும். ஆசையற்ற இடத்திலேதான் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எதனைச் செய்யவேண்டும். என்னுடைய தேவைக்கு எது செய்யவேண்டும். சமுதாயத் தேவைக்கு என்ன செய்ய வேண்டும். நாட்டின் தேவைக்கு என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிறது. ஆக அடிப்படையாக இருக்கின்ற இந்த ஆசையைப் போக்குவது இன்றியமையாததாகும். ஆசையே போய்விடு என்றதனாலே ஆசை போய்விடப் போவதில்லை. இதனை நன்கு ஆராய்ந்த வள்ளுவன் வழி சொல்லுகிறான். ஆசை போக வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உண்டு.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை."*

எல்லாப் பற்றுகளையும் கடந்து நிற்கின்றானாகிய பரம்பொருளின் திருவடிகளைப் பற்றுவதனாலேதான் பற்றுவிட வேண்டும். ஆசையை அறுக்க முடியும். அப்படி இறையருளிலே ஈடுபட்டு, தெய்வநம்பிக்கை வலிவுடையவர்களாக இருந்து தங்களுடைய ஆசையைப் போக்கிக் கொள்வார்களே யானால் தாங்கள் வாழுகின்ற சமுதாயத்தில் ஒப்பற்றவர்களாக அவர்கள் இருக்க முடியும். தங்களுடைய குடும்பத்தில் ஒப்பற்ற தலைவர்களாக ஆக முடியும்.

இப்படி ஆசையற்றவர்கள் நடத்துகின்ற குடும்பங்கள் பல சேர்ந்து வளர்கின்ற சமுதாயம், மிகச் சிறந்ததாக அமையும். அந்தச் சமுதாயங்கள் பலகோடி அமைகின்ற நாடு ஈடிணையற்றதாக இருக்கும். அங்கேதான் பிற உயிரும் தம் உயிர்போல் எண்ணி உள்ளே ஒத்து நடக்கின்ற கடப்பாடுடையவர்கள் தோன்றுவார்கள்.

அந்த வளர்ச்சி என்றைக்கு இந்த நாட்டில் வருகின்றதோ, அன்றைக்குத் தான் இந்த நாடு ஒப்பற்ற நாடாகும்.

தனி மனிதன் ஆசையற்று, அச்சமற்று வாழத் தொடங்கினானேயானால், முழுத்தன்மைபெற்ற மனிதனாக ஆவான். அத்தகைய மனிதர்கள் நிறைந்த சமுதாயம் - ஒப்பற்றதாக அமையும் என்பதில் ஐயமே இல்லை.

உலகத்தில் பெரியவர்கள் எல்லாக் காலங்களிலும் தோன்றி, தேவையான நீதிகளையும், அறங்களையும் கூறியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை காலத்திற்கேற்பவற்றைத் தேர்ந்தெடுத்து அதன்படி வாழ்வது மிக முக்கியமானதாகும்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் இன்று மிக முக்கியமான தேவை ஒன்று. அது எது என்று ஆராய்வோமேயானால் தனி மனிதர்கள், நாடு, சமுதாயம் ஆகிய எல்லாவற்றையும் பீடித்திருக்கின்ற - நீக்கமற நிறைந்திருக்கின்ற ஒரு அச்சம் என்பதாகும்.

*"அஞ்சி அஞ்சிச் சாவார் இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே"*

என்று பாரதி பாடுவான். அச்சம் தவிர் என்று சொல்லுவான். பாரதி காலத்தில் மட்டுமா இது? இல்லை. ஏழாம் நூற்றாண்டிலே திருநாவுக்கரசர் பெருமான் சொல்லுகிறார்.

*"அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை"*

என்று. ஆகவே இந்த அச்சம் என்ற ஒன்று நம்மைப் பிடித்திருந்து ஆட்டுகிறது.

தனி மனிதர்கள் மறுநாளைப் பற்றி அச்சம் அடைகிறார்கள். தம்முடைய எதிர்காலத்தைப் பற்றி அச்சம் அடைகிறார்கள். தம்முடைய வளமான வாழ்வு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். இது தனி மனிதர்கள் வாழ்வு என்றால் சமுதாயமும் இதே முறையில் உள்ளது.

இரண்டு பெரிய வல்லரசுகள் போட்டியிட்ட காலத்தில் அச்சம் சரி. இன்று ஒரு வல்லரசு இருந்த இடம் தெரியாமல் போன நிலையிலும் மற்றொரு வல்லரசு அஞ்சிக் கொண்டுதான் இருக்கிறது. இந்த அச்சத்தின் காரணமாக, தேவையில்லாதவற்றில், ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் கவனத்தைச் செலுத்துவதனாலே, மக்களுக்குப் பயன்பட வேண்டிய செல்வம் வேறுவகையிலே போகின்றது. ஆகவே நாடு முழுவதையும் தழுவியிருக்கின்ற இந்த அச்சத்தின் அடிப்படையைச் சிந்திப்போமேயானால், வள்ளுவன் சொல்வான்.

*"அச்சமே கீழ்களது ஆசாரம்"*

என்று. பண்பில்லாதவர்களிடத்தில்தான் அச்சம் இருக்க வேண்டும். பண்புடையவர்களிடத்தில் அச்சம் இருப்பதற்குக் காரணமே இல்லை. வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்துப் பேசுகிறான் பாரதி. சிந்தித்துச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகின்றான்.

*"முன்னர் நமது இச்சையினால்*
*பிறந்தோமில்லை*
*முதல் இறுதி இடை நமது*
*வசத்திலில்லை"*

இது தெரிந்த பிற்பாடு அச்சம் அடைவதற்கு என்ன இருக்கிறது?

வருவது வந்தே தீரும். அதை யாரும் நிறுத்தப் போவதில்லை. நியூட்டனுடைய மூன்றாவது சட்டத்தைப் போல எந்தச் செயலும் எதிர்ச்செயலைப் பெற்றே தீரும் என்றால் வருவதை நிறுத்த முடியாது யாரும். அது தெரிந்த பிற்பாடு அதனை ஏற்றுக் கொள்வதற்கு, வரவேற்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமே தவிர, அஞ்சுவதானாலே பயன் ஒன்றுமில்லை. அஞ்சுவதனாலே எதையும் நிறுத்திவிடப் போவதுமில்லை. இப்படி அச்சம் அச்சம் என்பதாலே வாழ்க்கையே இருண்டுவிடுகிறது.

தனி மனிதர்களுடைய அச்சம், குடும்பத்தைப் பற்றிய அச்சம், சமுதாயத்தைப் பற்றிய அச்சம் இன்று சாமியார்களும், குருமார்களும் நூற்றுக்கணக்கில் தோன்றிவிட்டார்கள். நம்முடைய அச்சம்தான் அவர்களுக்கு மூலதனமாக இருக்கிறது. இந்த அச்சத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தொழில் நடத்துகிறார்கள்.

ஓரளவு சிந்திப்போமேயானால் இறையுணர்வு என்ற ஒன்று இருக்குமேயானால், உறுதிப்பாடு நெஞ்சில் வந்தே தீரும். நாம் இறைவனுடைய கருணையின்கீழ் இருக்கின்றோம். அவனுடைய கருணை நம்மை என்றும் காப்பாற்றும் என்ற உறுதிப்பாடு இருக்குமேயானால் அஞ்சுவதற்குக் காரணமே இல்லை. 'உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை' என்று சொல்லுவார்கள்.

இந்த அச்சத்தைப் போக்குவதுதான் இன்று நாம் இன்றியமையாமல் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான ஒன்றாகும். எந்த ஒன்று பற்றியும் அஞ்சாமல் இருப்பது, நம்முடைய பண்பாட்டை, ஆண்மையை, உறுதிபாட்டை, நெஞ்சு அழுத்தத்தை வளர்த்துக் கொள்ள வழிசெய்வதாகும். அச்சமே போய்விடு என்று சொன்னால் அச்சம் போய்விடப் போவதில்லை. அச்சம் போகவேண்டுமானால் அதற்கு ஒரே வழி இறைவழிபாடுதான். நம்மைவிட உயர்ந்த ஒரு பொருளிடத்தில் - நம்மைப் படைத்து, காத்து, அளித்து, அழிக்கின்ற பொருளிடத்தில் கொண்டிருக்கின்ற உறுதிப் பாட்டின் நம்பிக்கையின் அடிப்படையில்தான் அச்சத்தைப் போக்க முடியும்.

குழந்தை தனியே நடப்பதற்கு அஞ்சுகிறது. ஆனால் தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டவுடன் அதனுடைய அச்சம் போய்விடுகிறது. தாய் தன்னைக் காப்பாற்றுவாள் என்ற உறுதிப்பாடு இருக்கின்ற காரணத்தினாலே குழந்தையின் அச்சம் போய்விடுகிறது.

அது போல நம்முடைய அச்சம் போக வேண்டுமானால், நாளை என்ன நடக்கும் என்பதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

*"முன்னர் நமது இச்சையினால் பிறந்தோமில்லை முதல் இடை இறுதி நம்*
*வசத்திலில்லை"*

என்று பாரதி சொன்னபடி நம்முடைய முயற்சியினாலே ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்ற உறுதிப்பாடு இருக்குமே யானால், அஞ்சுவதற்குத் தேவையே இருக்காது. அச்சத்தை நாம் போக்கியவர்களாகிவிடுவோம்.

அச்சத்தைத் தனி மனிதன் போக்கினால் அவனது வாழ்வு வளம் பெறுகிறது. தனி மனிதர்கள் கூடி வாழ்கிற சமுதாயம் அச்சத்தைப் போக்கிவிட்டால் அது இன்பமுடைய சமுதாயமாக இருக்கிறது.

அச்சம், ஆசை என்ற இரண்டையும் நீக்கிய வாழ்வு பற்றிச் சிந்தித்தோம். அப்படியானால் நீக்கிவிட்ட இடத்திலே எதை வைத்து நிரப்புவது? அன்பு என்ற ஒன்றை வைத்து நிரப்ப வேண்டும்.

அன்பு என்ற ஒன்று இருக்குமேயானால், அந்த வாழ்வு பிறருக்குப் பயன்படுகின்ற வாழ்வாக அமையும். தமிழர்களைப் பொறுத்த மட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த உலகத்தில் தோன்றிய உயிர்கள் அனைத்தையும் உறவு கொண்டாடினார்கள்.

*"ஓரறிவு உயிரே"*

என்று தொடங்குகின்ற தொல்காப்பியம், ஓரறிவு உடைய உயிர் முதல் நம்மவர் வரையில் உள்ள உறவை எடுத்துச் சொல்கிறது. இந்த உறவின் பிணைப்பை அறிந்து கொண்டவர்கள் - அன்பு பெருகுவார்கள்.

அன்பு பெருகுவது எப்படி? அனைத்தும் நம்முடைய உறவு என்று தெரிந்துவிட்டபிற்பாடு, தானே அங்கு அன்பு வெளிப்படுகிறது. அந்த அன்பு வெளிப்படுகின்ற நிலையில்தான்

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*

என்பது உண்மையாகிறது.

எல்லா உயிர்களும் நம்முடைய உறவு என்று தெரிந்த பிற்பாடு, அந்த வாழ்க்கையிலே வெறுப்பிற்கோ, அச்சத்திற்கோ, ஆசைக்கோ இடமே இல்லை. ஆகவே அன்பு நிறையுமேயானால் வாழ்வு முழுத்தன்மை பெற்றதாகும். அதனாலேதான் நம்முடைய பெரியவர்கள் ஆண்டவனையே அன்பின் வடிவம் என்று சொன்னார்கள். திருமூலர் சொல்லுவார்.

*"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"*

என்று சொல்லுவார். ஏதோ இறையன்பு, அல்லது கடவுள் பக்தி என்பது நம்மிலும் வேறுபட்டதொன்று அது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டவர்கள் பார்த்துச் செய்கின்றது என்ற எண்ணம் நம்மைவிட்டு நீங்கவேண்டும்.

அன்பு நிறைந்திருக்குமேயானால் அந்த வாழ்க்கை முழுநேர வாழ்க்கையாக அமையும். அந்த வாழ்க்கையிலே இறைவன் வந்து குடிபுகுகின்றான். அன்புடையவர்கள் நெஞ்சத்திலே இறைவன் வருகின்றான் என்பதை வள்ளல் பெருமான்,

*"அன்பெனும் குடில்புகும் அரசே"*

என்று சொல்லுவார்.

ஆண்டவனை நாம் தேடிச் செல்ல வேண்டியதில்லை. அன்பு நிறைந்தவர்கள் உள்ளத்தை ஆண்டவன் தேடிக் கொண்டிருக்கிறான். அன்பு நிறைந்தவர்கள் உள்ளத்திலே அவன் வந்து குடியேறுகின்றான். அவன் குடியேறிவிட்டால் கிடைக்க வேண்டியது, அமைய வேண்டியது வேறு

எதுவுமே இல்லை. ஆகவே அன்பு ஒன்றைப் பெருக்கிக் கொள்வோமேயானால், அன்பு வாழ்க்கை வாழத் தொடங்குவோமேயானால் நம்மைவிடச் சிறந்த வாழ்க்கை வாழ்பவர்கள் வேறு யாருமே இருக்க முடியாது.

*"அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும், ஆருயிர்களுக்கு எல்லாம்*
*நான் அன்பு செய்தல் வேண்டும்."*

என்ற சொல்லுவார் வள்ளல்பெருமான்.

அன்பு எப்படி வெளிப்படுகின்றது? வாடிய பயிரைக் கண்டபோது யாருடைய உள்ளம் துடிக்கின்றதோ, பிறருடைய துன்பத்தைக் கண்ட மாத்திரத்தில் யாருடைய உள்ளம் துடிக்கின்றதோ, யாருடைய கண்ணில் கண்ணீர்அரும்புகின்றதோ, அதுதான் அன்பு வாழ்க்கை என்று சொல்லப்பெறும்.

தன்னோடு தொடர்புடையவர்களிடத்தில் மட்டும் செல்வது அன்பாகும். இந்த அன்பு வளருமேயானால் அது அருளாகப் பரிணமிக்கின்றது. நாம் நம்முடைய குடும்பம், நம்முடைய பிள்ளைகள், நம்முடைய உறவினர் என்ற நிலைமாறி, உலகத்திலுள்ள அனைவரையும் நம்முடைய குடும்பமாகக் காணுகின்ற நிலை அருள்நிலை என்று சொல்லப்படும். இந்த அருள்நிலை வளர்ச்சியைத்தான்

*"அருள் என்னும் அன்பீனும் குழவி"*

என்று சொல்லுவார் வள்ளுவப் பெருந்தகை.

ஆகவே அன்பிலே தொடங்குமானால் இந்த வாழ்க்கை அது அருளிலே சென்று முடியும். அருளிலே சென்று முடியுமானால் முழுவதும் இறையருள் பெற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள் அவர்கள். இறைவனை அவர்கள் தேடிச் செல்லாமல், இறைவன் அவர்கள் இருக்கும் இடத்தை நாடி வருகிறான். அப்படி வாழத் தொடங்கிவிட்டால் அந்த ஒரு மனிதனாலே உலகத்தை மாற்றியமைக்க முடியும். வன்முறையினாலே அல்லது தண்டனை கொடுக்கும் முறையினாலே அவன் மாற்ற விரும்புவது மில்லை. அதற்குப் பதிலாக வன்பு செய்கிறவர்களிடத்தில் கூட அன்பு காட்டுகின்றதனாலே அனைவரையும் தனக்கு உறவாக ஆக்கிக் கொள்ள முடியும். எத்தகைய பகையையும் வென்றுவிட முடியும்.

*"யாருடனும் பகை கொள்ளலன் என்றபின் போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது."*

என்று சொல்லுவான் கம்பன்.

அன்பு நிறைந்துவிடுமேயானால் யாருடனும் பகைகொள்ள வாய்ப்பே இல்லை.

அப்படிப் பகையே இல்லாதபோது அந்த வாழ்க்கை அன்பு வாழ்க்கையாக, உலகம் தழுவியதாக, அனைவரையும் ஏற்றுக் கொள்வதாக, இறைவன் தன்னிடத்தில் வந்து குடியிருக்கக் கூடிய ஒப்பற்ற சிறப்பைப் பெற்றதாக அமைந்துவிடுகின்றபோது சான்றோர்கள் கூறிய உண்மை அங்கே பளிச்சென்று தெரிகிறது.

"அன்பெனும் குடில்புகும் அரசே" நம்மிடம் வந்து இருக்கின்றான் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

# 13. செந்தமிழில் குடமுழுக்கு - ஒரு சிந்தனை

- திருமந்திர ஞான சரஸ்வதி மு.பெ.சத்தியவேல் முருகன். B.E., M.A.,

தமிழில் குடமுழுக்கு செய்யலாமா? அண்மைக் காலத்தில் கரூரை அடுத்த திருமுக்கூடலூரில் நடைபெற்ற தமிழ் குடமுழுக்கைப் பற்றி சிவாச்சாரியார்கள், தமிழறிஞர்கள் ஆகிய இரு பக்கத்திலிருந்தும் செய்தித் தாள்களில் பதற்றமும் பரபரப்புமான அறிக்கைகளும், செய்திகளும் வரிந்து கட்டிக் கொண்டு வரிசையாக வந்தவண்ணம் உள்ளன.

இதுபற்றி 21-10-2002 மற்றும் 22-10-2002 ஆகிய இரு நாட்களில் தமிழ் நாடு அர்ச்சகர்களின் ஆகம வல்லுநர் குழுவும், தருமையாதீன அமைப்பான அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்தரங்கின் பயனாகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் இரு சார்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேறி அது தினமணி உள்பட பல நாளேடுகளில் வெளி வந்துள்ளன:

1. ஆகம முறைப்படி அமைந்த திருக்கோயில்களில் ஆகம முறைப்படியே பூசித்தல் வேண்டும்.
2. திருமுறை ஓதல், ஓதுவித்தல் மனப்பூர்வமாக மதித்துப் போற்றப்படல் வேண்டும்.
3. திருமுறை அர்ச்சனை மனப்பூர்வமாக - இயல்பாக செய்தல் வேண்டும்.
4. சிவாச்சாரியார்கள் நுண்சிகை ஞானமாம் என்னும் மரபுவழி மாறாக் கோலங்களுடன் பூசனை புரிதல் வேண்டும்.
5. நித்திய நைமித்திக பூசையில் திருமுறை முதலியன ஓதிய பிறகே ஆசிர்வாதம் செய்தல் வேண்டும். ஓதுவா மூர்த்திகள் இல்லாத சமயங்களில் - இடங்களில் சிவாச்சாரியார்களே திருமுறை விண்ணப்பம் செய்தல் வேண்டும்.
6. ஆகம முறைப்படி அமையாத கோயில்களுக்குத் திருக்குடமுழுக்கு திருமுறைகளின் வழி நடத்தலாம்.

தருமையாதீனம், திருவாவடுதுறை ஆதீனம், மதுரை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் உள்ளிட்ட தமிழ் நெறி மடங்களின் 14 குருமகா சந்நிதானங்கள் முன்னிலையில் மேற்கண்ட தீர்மானங்களை 55 சிவாச்சாரியப் பெருமக்களும் தமிழறிஞர்களும் ஏற்றுக்கொண்டிருப்பது சமய வரலாற்றில் சாகா வரம் பெற்ற ஒரு சாதனை என்றே கூற வேண்டும்.

இந்தத் தீர்மானங்களால் ஆகம முறைப்படி அமைந்த கோயில்கள், அவையல்லாதவை எனத் தமிழகத் திருக்கோயில்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் மொத்தம் 35000 கோயில்கள் உள்ளன என்று தமிழக அறநிலையத் துறை புள்ளி விவரம் கூறுகிறது. அவைகளில், 274 பாடல் பெற்ற தலங்களில் உள்ள கோயில்களே ஆகம முறைப்படி அமைந்தவை என எண்ணத்தக்கவை. இதில் ஆகம முறைப்படி அமைந்த கோயில்களைச் சிவாச்சாரியார்களுக்குத் தமிழ் ஆர்வலர்களும், ஏனையவற்றைத் தமிழ் ஆர்வலர்களுக்குச் சிவாச்சாரியார்களும் இந்தத் தீர்மானங்களால் விட்டுக் கொடுத்திருப்பது இரு சார்பிலும் ஏற்படவேண்டிய இனிய இணக்கத்திற்கு வழி கோலியுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இந்தக் கட்டுரை ஆசிரியரும் கலந்துரையாடிப் பங்கேற்றபோது பெற்ற கருத்துப் பரிமாற்றங்களில் சில வாசகர்களின் சிந்தனைக்கு உரியவை.

தமிழில் தமிழ் அறிஞர்களுக்கு உள்ள பற்றுக்குச் சற்றும் சளைக்காத பற்று உள்ளவர்கள்தான் சிவாச்சாரியார்கள். அவர்கள் தமிழ் திருமுறை மீது பெரு மதிப்பு வைத்திருக்கிறார்கள். கோயிற் சடங்குகளைத் தமிழ்த் திருமுறைகளில் செய்தால் தீட்டு என்று தாங்கள் ஒரு போதும் கூறியதில்லை; கூறவும் மாட்டோம் என்றும், அதைப்புரளி என்று புறக்கணிக்க வேண்டும் என்றும் சிவாச்சாரியார்கள் தெளிவாகத் தெரிவிக்கிறார்கள். அதேபோல இந்தப் பக்கத்தில் தமிழறிஞர்களுக்கும் வடமொழி மீது தனிப்பட்ட வன்மம் ஏதுமில்லை என்பது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் பிரச்சினை எங்கே வேர்விட்டு கிளம்புகிறது?

கோயிற் கிரியை முறைகளில் பயன்படுத்தும் மந்திரங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. அவற்றை மொழி மாற்றம் செய்ய இயலாது என்பது சிவாச்சாரியார்களின் ஆணித்தரமான கருத்து.

இந்த உலகம் மாறிக் கொண்டே இருப்பதை யாராலும் மாற்ற இயலாது. அதனால்தான் மாணிக்க வாசகர் "மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம் தேற்றனே" என்று பாடினார். காலத்தால் வெவ்வேறு மாற்றங்கள் வந்துறினும் அவ்வம்மாற்றத்தில் அறிவாய் நின்று தேற்றுபவன் இறைவன் என்பது அதன் கருத்து. ஆகையால் மந்திரங்களை அறிவுபூர்வமாகத் தமிழ் மொழியில் மாற்றினாலும் தவறில்லை என்பது தமிழறிஞர்களின் தெளிவான கருத்து.

வடமொழி மந்திர ஒலிகளில் ஒரு வகையான அதிர்வு உண்டு. அந்த அதிர்வுகள் மந்திரத்தின் ஆற்றலை ஓங்கச் செய்து வேண்டிய பயனை அளிக்க வல்லவை. மொழி மாற்றத்தில் இந்த ஒலி அதிர்வுகள் அடிப்பட்டுப்போய் அமுங்கி விடுவதால் அவை மந்திர ஆற்றலை இழந்து அதன் பயனை அளிக்க சக்தியற்றவை ஆகி விடும். எனவே மந்திரத்தை மொழி மாற்றம் செய்வது பயனில்லாப் பணி என்பது சிவாச்சாரியார்கள் கவலையோடு எடுத்துரைக்கும் கருத்து.

ஒலிகள் சடமானவை; சடமான ஒலிகளா எல்லையில்லாச் சித்தான பரம்பொருளைக் கட்டி இழுக்க வல்லவை? இதைத்தானே, "மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும், இத்தந்திரத்தில் காண்டும் என்றிருந்தோர்க்கு அத்தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்" என்று மாணிக்கவாசகர் கூறினார். இந்த பொத்தானை அழுத்தினால், இந்த பால் பாக்கெட் வந்து விழ வேண்டும் என்பதுபோல இந்த ஒலி அதிர்வை ஏற்படுத்தினால் இப்படி வந்து தோன்றும் ஒரு பௌதிக விளைவா இறைவன்? மந்திரங்களின் பொருளைப் பொருட்படுத்தாமல் அவற்றின் ஒலி அதிர்வை மட்டும் நம்பி இறைவனையே தம் கட்டுக்குள் கொண்டு வர நினைத்த தாருகா வனத்து வைதீக முனிவர்களைத் தண்டித்தான் இறைவன் என்பதல்லவா புராண வரலாறு? இறைவன் ஒலியால் வருபவன் அல்லன்; உள்ளம் உருகிப் பாடுவார் முன்னே அவர்தம் அன்பினால் தோன்றுபவன். "உள்ளம் உருகில் உடனாவர் அல்லது தெள்ள அரியர் என்று உந்தீ பற" என்று இதைத்தானே சித்தாந்த சாத்திரமான திருவுந்தியார் தெளிவுபடுத்துகிறது?

ஒரு கல்லோ, செம்போ, லிங்கமோ எதுவானாலும் அந்தக் குறியிடத்தில் இறைவனை எழுந்தருளச் செய்வதை ஆவாகனம் என்று வடமொழியில் கூறுவர். ஆனால் தமிழ்த் திருமுறைகளை உருகிப் பாடி நின்றாடினால் வடமொழி ஆவாகன மந்திரமோ அல்லது அதற்குரிய ஒலி அதிர்வுகளோ கொண்டு இறைவனை அழைக்கின்ற மந்திரம் எதுவும் இல்லாமலே இறைவன் எழுந்தருளி அருள்புரிவான் என்று ஞானசம்பந்தர் பாடுகிறாரே!

*"... ... பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்*
*அழையா மேஅருள் நல்குமே"*

அதுவும் இப்பாட்டு ஆண்பனையைப் பெண்பனையாக்கிய அற்புதச் செயலைச் செய்த பதிகத்தில் வரும் பாட்டு. எனவே, ஒலியின் அதிர்வுகளும் அவற்றையுடைய வடமொழி மந்திரங்களும் எதற்கு என்பது தமிழறிஞர்கள் வைக்கும் வாதம்.

அப்படியானால் திருமுறைகளைப் பாடினால் மட்டும் போதுமா? கோயில் கிரியைகளில் மந்திரங்கள் வேண்டாமா? என்று சிவாச்சாரியார்கள் கேட்கிறார்கள்.

இல்லை, கிரியைகள் என்பன செய்கைகள். இறைவனை எழுந்தருளச் செய்தல், தீய சக்திகளை விலக்கி வைத்தல், இறைவனை ஒரு குறியிடத்தில் நிலை நிறுத்தல் என்பன போன்ற செய்கைகள். அச்செய்கைகளைச் செய்கின்ற முத்திரைகளுக்கு மொழி தேவையில்லை. அச்செய்கைகளால் வேண்டியது விளைந்ததாகப் பாவிக்க மனம் வேண்டும். மனத்தின் நினைவாக எழும் பாவனைக்கும் மொழி தேவை யில்லை. இங்கே மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றையும் வடமொழி ஆகமம் கூறுகிறது. பாவனையையும் செய்கைகளையும் சொல்லில் உறுதி செய்வதுதான் மந்திரம். சொல்லே மந்திரமானாலும், சொல்லைவிடச் சிறப்புடையது மந்திரம். அதனால்தான் அதனை நிறைமொழி என்று தொல்காப்பியரும் வள்ளுவரும் கூறினார்கள். அப்படி வேண்டுங்கால் திருமுறைகளே நிறைமொழியாதலால் அவற்றையே மந்திரமாகப் பயன்படுத்தலாமே? செய்ய வேண்டிய செய்கைகளுக்குப் பொருத்தமான திருமுறைப் பாடல்கள் உள்ளனவே?

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என்று தில்லை தீட்சிதர்களில் ஒருவரான உமாபதி சிவம் பாடவில்லையா? எனவே செய்ய வேண்டிய செய்கைகளுக்குப் பொருத்தமான திருமுறைப் பாடல்களை, குறிப்பாகத் திருமந்திரப் பாடல்களை மந்திரமாகப் பயன்படுத்தி, கோயிற் கிரியைகளை ஆற்றுவதில் என்ன தவறு? என்று கேட்கிறார்கள் சித்தாந்தத் தமிழறிஞர்கள்.

திருமுறைப் பாடல்களைக் கோயில்களில் பயன்படுத்தலாம். அவை ஆற்றல் மிகுந்தவைதாம். கோயில்களில் தோத்திரமாக அவைப் பாடப்படலாம். ஆனால் கோயில் கருவறைகளில் செய்யும் கிரியைகளில் இதுவரை ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் திருமுறை பயன்படுத்தப்படவில்லையே? திடீரென இந்த மாற்றம் தேவைதானா? என்பது சிவாச்சாரியார்களின் கேள்வி.

ஏறத்தாழ வடமொழி ஆகமத் தோற்றத்தின் வரலாறு கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அதற்கு முன் வழிபாடுகளெல்லாம் தமிழிலேயே தமிழகத்தின் எல்லாக் கோயில்களிலும் நடந்திருக்கின்றன என்பதற்குத் திருமுறைச் சான்றுகள் இருக்கின்றன:

*"செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற் கலைதெரிந்த அவரோடு*
*அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்"*

*"செந்தமிழோர்கள் பரவியேத்தும் சீர்ொகள் செங்காட்டங் குடியதனுள்"*

*"ஊறும் இன்தமிழால் உயர்ந்தார்.. .. .. .. .. தொழுதேத்தும் தில்லை"*

*"தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழல் சேர"*

*"பண்ணியல் பாடல் அறாத ஆவூர் பசுபதி ஈச்சுரம்"*

*"தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்"*

*"அன்பன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே"*

*"ஊறு பொருள் இன்தமிழ் இயற்கிளவி தேரு மட மாதர் உடனார்*
*வேறு திசை ஆடவர்கள் கூற இசைதேரும் எழில் வேதவனமே"*

இப்படி எத்தனையோ திருமறைச் சான்றுகள் உள்ளன. ஏறத்தாழ கி.பி. 13ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற குகையிடிக் கலகத்தால் திருமுறைப் பதிகங்களின் கல்வெட்டுகள் கோயில்கள்தோறும் அழிக்கப்பட்டதாக 1913ஆம் ஆண்டு தொல்லியல் ஆவணம் (AR 1913) குறிப்பிட்டிருக்கிறது. அப்போது ஏறத்தாழ கிருஷ்ணதேவராயர் தமிழகத்தை ஊடுருவிய காலம். அப்போதுதான் தமிழ் வழிபாடுகள் வடமொழிக்கு மாற்றப்பட்டன. இப்படி ஏறத்தாழ 800 ஆண்டுகளாக வடமொழியால் வழிபடுவதால் பக்தியும் தேய்ந்து, கோயில்களுடன் தொடர்பும் உரிமையும் அறுந்து தமிழ் மக்கள் கோயில் கருவறைகளை விட்டு ஒதுங்கி நிற்க வேண்டி வந்தது. இப்படி இருப்பதை மாற்றி, புரியும் தமிழில் வழிபாடு செய்வதே சிறப்பு என்கிற மக்கள் எழுச்சி ஒன்று உதயமாகி யுள்ளது. அதுதான் கரூரில் நடந்த நிகழ்ச்சியாக மலர்ந்துள்ளது. எனவே இதை மாற்றம் என்று சொல்ல இயலாது. வரலாற்றுப்படிப் பார்த்தால் இது ஒரு மறுமலர்ச்சி என்கிறார்கள் தமிழறிஞர்கள்.

நீண்ட வாதப் பிரதிவாதங்களின் சாரம் இதுதான். இதில் மந்திரங்களை மொழி மாற்றம் செய்வதில் தான் சிவாச்சாரியார்கள் மெத்தக் கவலை தெரிவிக்கிறார்கள். அதே சமயத்தில் திருமுறைகளை மந்திரங்கள் தாம் என்று ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. என்றாலும், காலம் காலமாக இருந்து வந்ததை மாற்றும்போது அது தொடர்பானவர்களுக்கு இயல்பாக ஏற்படும் ஒரு மறுப்புணர்ச்சியும், பதற்ற உணர்ச்சியும் தான் அவர்களை விட்டு நீங்குவதாக இல்லை. வரலாற்று அளவில் ஒரு பெரிய மாற்றம் நிகழும்போது இது இயல்புதான். இதை மாற்றம் என்று நினையாமல் வரலாற்றுப் பின்னணியில் இது சில நூற்றாண்டுகளுக்கு முன் சில வல்லாண்மைகளால் அநியாயமாகத் தடை செய்யப் பட்டுத் தணிந்து நின்றது மீண்டும் தலையெடுக்கிற ஒரு மறுமலர்ச்சிதான் என்பதையும், அந்த மறுமலர்ச்சி காலக் கட்டாயமாக மக்கள் எழுச்சியாக மாறி வரும் நடைமுறை உண்மையையும், இந்த மாற்றத்தில் தமிழ் இனமான தங்களுக்கு எதிர்ப்பதற்கு எதுவுமில்லை என்பதையும் சிவாச்சாரியார்கள் உணர்ந்தால் பிரச்சினை எல்லோருக்கும் பயனாகும்படி தீர்ந்து விடும்.

இன்னும் சற்று சிந்தித்துப் பார்த்தால் ஐந்தெழுத்து என்று போற்றப்படும் மூல மந்திரமான "நமசிவய" என்பதை யாரும் மாற்றப் போவதில்லை. திருமுறையும் சரி, தமிழறிஞர்களும் சரி அதை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். திருமுறையில் ஐந்தெழுத்தின் மாண்பை வலியுறுத்துகின்ற பதிகங்கள் உள்ளன. மூல மந்திரமான "நமசிவய" என்பதே நடராசரின் திருமேனியாக உள்ளதாகத் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன:

*"ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே*
*நாடும் திருவடியி லேநகரம் - கூடும்*
*மகரம் உதரம் வளர்தோள் சிகரம்*
*பகருமுகம் வமுடியப் பார்"*

என்பது உண்மை விளக்கம் என்கிற சாத்திர நூல் கூறுவது. நடராசரின் தூக்கிய திருவடியையும், ஊன்றிய திருவடியையும் இணைத்துப் பார்த்தால் தமிழ் நெடுங்கணக்கில் வருகின்ற 'ந' என்ற எழுத்தின் வரி வடிவம் அதில் தெரிவதைக் கூர்ந்து பார் என்கிறது பாடல். இதேபோல நடராசரின்

வயிற்றுப் பகுதியில் தமிழ் வரி வடிவமான 'ம' என்ற எழுத்தையும், வெவ்வேறு விதமாக வீசியுள்ள தோள்கள் நான்கையும் இணைத்துப் பார்த்தால் தமிழ் வரி வடிவமான 'சி' என்ற எழுத்தையும், நடராசரின் முகத்தின் ஒரு பக்கக் காது முதல் தாடை வழியாக தமிழ் வரிவடிவமான 'வ' என்ற எழுத்தையும், நடராசரின் அபய கரத்தில் தமிழ் வரிவடிவமான 'ய' என்ற எழுத்தையும் கூர்ந்து பார்த்து அறிந்து கொள் என்று கூறுகிறது மேற்பாடல். இதைத்தான் தமிழ்த் திருமந்திர நூலும் "உருவில் சிவாயநம என ஒதே" என்று திருக்கூத்துத் தரிசனத்தில் கூறுகிறது.

அப்படியானால் நடராசரின் திருமேனியாக அமைவது தமிழ் எழுத்துக்கள்தாமே தவிர வடமொழி எழுத்துக்கள் அல்ல என்பதும், அதனால் மூல மந்திரமான 'நமசிவய' என்பது தூய தமிழ் மந்திரம் என்பதும் தெளிவாகிறது. அதனால்தான் வடமொழி வேத வழியினர் காயத்திரி மந்திமே ஆக உயர்ந்தது என்று அன்று முதல் இன்றளவும் கூறி வரும் போது, ஞானசம்பந்தர் காயத்திரி மந்திரத்தின் உள்ளும் இருந்து இயங்குவது தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தே என்றார். இதனை "அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்றும், "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்றும் உறுதி செய்துப் பாடினார்.

தற்போது நடைமுறையில் உள்ள வடமொழி ஆகமங்கள் இந்தத் தூய தமிழ் மந்திரத்தை எந்த மொழி மாற்றமும் செய்யாமல் அப்படியே ஏற்றுக் கொண்டன. ஆகமம் உருவ வழிபாட்டிற்கு கிரியை முறைகளை வகுக்கும்போது, அதற்கு வசதியாக மூலமந்திரத்தை கடவுளின் முழுத் திருமேனியாகக் கொண்டு, அந்த மந்திரத்திற்கு ஏனைய உறுப்புக்களை கற்பித்தது. அதாவது அந்த மந்திரத்திற்கு ஐந்து முகங்களையும், ஆறு அங்கங்களையும் கற்பித்துப் பஞ்சப் பிரம்ம மந்திரம், ஷடங்க மந்திரம் என்று இரு வகையாகப் பதினோரு உறுப்பு மந்திரங்களைக் கற்பித்தது. மூல மந்திரம் ஒன்றும், இந்தப் பதினோரு உறுப்பு மந்திரங்களும் ஆக இந்தப் பன்னிரண்டு மந்திரங்கள் தவிர ஆகமத்தில் வேறு மந்திரங்கள் இல்லை என்பதைச் சிவாச்சாரியார்களே ஒப்புக் கொள்கிறார்கள். இந்த பன்னிரண்டு மந்திரங்களைக் கொண்டு ஆகமத்தின் கிரியைகள் எல்லாம் விரிகின்றன.

எனவே, ஆகம மந்திரங்களை மாற்ற முடியாது என்று சிவாச்சாரியார்களால் குறிப்பிடப்படுவது இந்தப் பன்னிரண்டு மந்திரங்கள் தாம். இதில் மூல மந்திரம் தமிழ் மந்திரம் என்பது சாத்திரங்களாலும், நடராசரின் உருவத்தாலும் உறுதியாகிறது. மூல மந்திரமே தமிழாய் இருக்கும் போது பின்னர்க் கற்பிக்கப்பட்ட ஏனைய உறுப்பு மந்திரங்கள் பதினொன்றையும் தமிழாக்குவதில் என்ன தவறு இருக்க முடியும்? உறுப்பு மந்திரங்களில் ஒன்றான "ஈசான மூர்த்தாய நம" என்பது வடமொழி இலக்கணப்படி தவறு என்று சிவாச்சாரியார்களே கூறுவது இதில் கவனிக்கத் தக்கது.

இவற்றைக் காய்தல், உவத்தல் இன்றிச் சிவாச்சாரியார்கள் சிந்திப்பார்களானால் அவர்களிடம் குடமுழுக்கு முறைகளைத் தமிழில் மாற்றிக் கொள்வதில் இருக்கும் சிறிய நெருடலும் நீங்கி விடும் என்பது திண்ணம். எனவே இதுபற்றித் திறந்த மனதோடு சிவாச்சாரியப் பெருமக்கள் முன்வர இவர்களும் தமிழறிஞர்களும் என இரு சாராரிலும் ஆழ்ந்த அறிவு படைத்தவர்கள் இணைந்து அமர்ந்து ஆகமக் கிரியை முறைகளை எல்லாம் தமிழில் தொகுக்கவோ அல்லது ஏற்கெனவே தமிழில் குடமுழுக்கு செய்து வருபவர்களின் தொகுப்புகளைச் செம்மைப் படுத்தவோ செய்தால், அது வீணான சர்ச்சைகளுக்கும், வேண்டாத பகைமை மூட்டங்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்க உதவும்.

இதற்கு முன்னோடியாக இரு சாராரும் சற்று விட்டுக் கொடுத்து தருமையாதீனத்தில் மேற்கண்ட தீர்மானங்களைத் தோற்றுவித்திருப்பது நடுநிலையாளர்கள் அனைவராலும் வரவேற்கத் தக்கதே. இந்த இணக்கமான சூழ்நிலையைத் தொடர்ந்து முன்னே கூறியபடி முன்னேற்றம் ஏற்படுமானால் அது, திருவீழிமிழலையில் "தமிழோடு இசை பாடல் கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கிய" இறைவனுடைய திருவுள்ளமே.

## 14. சைவமும் ஆன்ம நேயமும்

- சித்தாந்த இரத்தினம் வீ.ஜெ. மதுசூதனன், பி.இ., (சிவில்)
*மெய்கண்டார் சைவசித்தாந்த ஆய்வு மையம், தஞ்சை.*

**முன்னுரை**

உலகில் வாழும் மனிதர்களைப் பக்குவப்படுத்தி அவர்களிடம் இருக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துவது சமயம் ஆகும். மக்கள் அனைவரும் சிறப்பாக வாழ்வதற்கு உரிய அன்பு, அருள், சமத்துவம், மனிதநேயம், பணிவு, அறம், எளிமை, தொண்டு, பக்தி, பெருந்தன்மை போன்ற வாழ்வியல் நெறிகளே சைவ சமயம் ஆகும்.

**சைவத்தின் தொன்மையும் பெருமையும்**

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே வழிவழியாக வழங்கி வருவது சைவ நெறியாகும். தொன்மையான இச்சைவ நெறியில் தத்துவம், சமயம், வாழ்வியல் மூன்றும் அடங்கியுள்ளன. சமயாதீத நிலையில் நின்று எல்லாச் சமயங்களும், பண்பாடுகளும், இறைவனது வெளிப்பாடுகளே என்று உணர்ந்து மகிழக்கூடிய ஒரு தனிச் சமயம். இச்சமயம் மூடப்பழக்க வழக்கங்களைப் போக்கி, அறியாமையைக் கடிந்து, ஞானத்தெளிவைத்தந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே சிறப்பு என்று வாழ்க்கையை நன்கு வாழ வழிகாட்டுகிறது.

**சைவத்தின் சிறப்பு**

இச்சைவத் திருநெறி விரிந்த நோக்கம் உடையது. குலப்பிறப்பு, நூல் நம்பிக்கை, சடங்குமுறை கட்டுப்பாடு முதலிய தடைகள் இல்லாத ஒரு தனித்த நெறியே சைவ சமயம். இச்சைவ நெறி இன்னும் உயிருடன் ஊட்டம் பெற்று வளர்ந்து வருகின்றது.

### சைவத்தின் கொள்கை

சைவத்தின் கொள்கையாகிய சைவ சித்தாந்தம் உலகில் உள்ள எல்லாச் சமய நெறிகளையும் விளக்கி அருள்கின்ற உண்மை விளக்கம் ஆகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருணந்தியார், தாயுமானவ சுவாமிகள் போன்ற அருளாளர்கள் எங்கெங்கு எவ்வழியில் எத்தெய்வம் தோன்றிடினும், அங்கெல்லாம் அம்மையப்பராகிய சிவபரம்பொருளே அவ்வடிவில் நிற்கின்றார் என்று விளக்குகின்றார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்குரிய பக்குவத்திற்கேற்ப வழிபடும் உரிமையைச் சைவம் போற்றுகின்றது. ஆணவ மலத்தின் பந்தத்தால் வரும் சிற்றறிவுத் தன்மையைப் போக்கி எல்லா மாயாமல மற்றும் கன்மமல பந்தங்களைக் கழற்றி வீசிச் சுத்தமாகி, சிவபாதத்தை அடைவதை வாழ்க்கையின் குறிக்கோள் என்று வாழ்வியலை நன்கு விரிப்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு.

### பரந்த மனப்பான்மை

சைவம் எப்போதும் சமய பேதங்களைப் போற்றியதன்று. சைவர்களின் வேதம் எனப்போற்றப்படும் திருக்குறளும், "ஞாலம் நின்புகழே மிக வேண்டும்" என்ற திருஞானசம்பந்தருடைய அமுத மொழியும், "சேரவாரும் செகத்தீரே" என்ற தாயுமானவருடைய வாக்கும் சைவர்களின் விரிந்த கொள்கையைக் காட்டும்.

### வேற்றுமையின்மை

சாதி, சமயப்பிரிவுகளைச் சைவம் ஏற்கவில்லை. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது உயர்ந்தோரின் உணர்வில் தோன்றும் ஒரு அருள் அனுபவம். சேரமான் பெருமாள் என்ற சிவனடியார் அரச மரபில் உதித்தவர். அரச பதவி எற்றபின்பு பட்டத்து யானையில் ஒருநாள் வந்துகொண்டு இருந்தார். அப்போது எதிரே வந்து கொண்டு இருந்த சலவைத்தொழிலாளி ஒருவனைக் காண்கின்றார். அவனுடைய உடலெல்லாம் உவர் மண் கரைந்து, படிந்து வெண்மையாக இருந்தது. யானையில் இருந்து இறங்கி சேரமான், வண்ணானை வணங்குகிறார். வண்ணான் பதட்டத்துடன் அரசனை வணங்கி, "அடியேன் அடி வண்ணான்" என்கிறான். அதற்குச் சேரமான் பெருமான், "அடிச்சேரன் அடியேன்" என்றும், திருநீறு பூசிச்சிவ வேடத்தை நினைக்கச் செய்த அவன் செயல் உயர்ந்தது என்று கூறுகிறார். சேரமான் பெருமாள் தன்னை வண்ணானிடம் இருந்து பிரிந்து பேசவில்லை. அவருடைய உயர்ந்த உள்ளம் போற்றுதற்குரியது. இதுவே சைவத்தின் வேற்றுமை இன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### வழிபாட்டில் நெகிழ்வு

வழிபாட்டு முறைகளை அவரவர் கருத்திற்கேற்பவும், வசதிக்கேற்பவும் வகுத்துக் கொள்ளச் சைவத்தில் இடமுண்டு. இக்கருத்தினை

*"அப்பனை நந்தியை ஆராவமுதனை*
*ஒப்பிலி வள்ளலை ஊழிமுதல்வனை*
*எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்*
*அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"*

என்று திருமந்திரத்தில் திருமூலர் அருளியுள்ளார்.

அறுபத்திமூன்று நாயன்மார்களுள் பலர் வெவ்வேறு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினர். சாக்கிய நாயனார் கல்லை மலராகத்தூவி நற்கதி அடைந்தார். கண்ணப்ப நாயனார் தமக்குத் தெரிந்த முறையில் ஊனை நிவேதித்து இறைவனைப் பேரன்பினால் வழிபட்டு முக்தி அடைந்தார். பூசலார் நாயனார் உள்ளத்திலேயே இறைவனுக்குக் கோயில்கட்டி வழிபட்டார். வாயிலார் என்ற சிவனடியார் உள்ளத்திலேயே இறைவனை வழிபட்டார். ஆனாய நாயனார் குழலில் ஐந்தெழுத்தை ஓதி வீடுபேறு பெற்றார். இவ்வாறாகச் சைவ சமயத்தில் வழிபாட்டுமுறைகள் பலவற்றைக் காணலாம்.

**அன்பு**

அன்பு செய்தால் கடவுளை அடையலாம் என்று பல சமயங்கள் கூறுகின்றன. ஆயினும், "அன்பே சிவம்" என்று கூறும் சமயம் சைவம் ஒன்றே. அன்பிற்கும் சிவத்திற்கும் இடைவெளி இல்லை. அன்பு உள்ளம் படைத்தவர்கள் சிவமாம் தன்மையைப் பெறுகின்றார்கள். அன்பினால் உருகச் சிவத்தை அடையலாம்.

**அருள்**

அன்பின் வெளிப்பாடே அருள். "அருளே உலகெல்லாம் ஆள்விப்பது" என்பது காரைக்கால் அம்மையாரின் அமுதமொழியாகும். அற்புதங்கள் பல நிகழ்த்திய திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனது அருளை முழுமையாகப் பெற்றவர். இவர் இறைவனது அருளைப் பெற்றதினால் திருமாலும், நான்முகனும் காணாத சிவசோதியைத் தம்முள்ளேயே கண்டுகொண்டார் என்பதனை,

*"தேடிக் கண்டு கொண்டேன் - திரு*
*மாலொடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே*
*தேடிக் கண்டு கொண்டேன்"*

என்னும் திருவாக்கால் அறியலாம்.

**அறநெறி**

அறம் பண்பட்ட உள்ளம் கொண்டவர்களது அறிவிலிருந்து தோன்றக்கூடிய பண்பாடாகும். மனிதனுடைய மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் இந்த அறமானது வாழ்வுடன் கலந்து இருக்கவேண்டும்.

**சைவம் உலகிற்கு அளித்த கொடை**

சைவ உலகப் பண்பாட்டிற்கு நன்கொடையாகப் பலவற்றை அருளியுள்ளது. இலக்கிய வகையில், திருக்குறள், தேவாரத்திருமுறைகள், திருவாசகம், பெரியபுராணம் முதலியவையும் தத்துவநிலையில், சிவஞானபோதம் உள்ளிட்ட மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்குடன் பிறவும், கலைகள் வரிசையில், பெரும் கோயில்களும் உள்ளன.

**முடிவுரை**

பழமையும், மேன்மையும் கொண்ட இச்சைவ நெறியில் ஆன்மநேயம் மிளிர்ந்து ஒளி வீசுகின்றது. எனவேதான் இன்றும் சைவ நெறி பெருமையோடு திகழ்கிறது.

## 3. நாவுக்கரசரின் உழவாரம் எது? - (தொடர்ச்சி)

தற்போது கிடைத்துள்ள கருவியின் படம் →





← அப்பர் வைத்திருக்கும் கருவியின் படம்



← தற்பொழுது பயன்பாட்டிலிருக்கும் உழவாரக்கருவி



எலவாரம் (பில்லு எழைக்கிற எலவாரம்)
புதுக்கோட்டை மாவட்டத்தில் கிடைத்தப்படம்

# 15. சைவ நற்சிந்தனை*

- பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.,
*முன்னாள் தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம்.*

சைவம் பாரதநாட்டில் மட்டுமின்றி கடல் கடந்தும் தொன்று தொட்டு பயிலப்பட்டு வருகிறது. இன்று கன்னட நாட்டிலும் காச்மீர நாட்டிலும் கன்னித் தமிழ் நாட்டிலும், வீரசைவம், காச்மீர சைவம், சித்தாந்த சைவம் என்ற பெயர்களில் சைவம் வழங்கி வருகிறது. தொல்காப்பியர் காலத்தில் பெரியோனாகிய சிவனுக்குக் கோயில் எடுக்கப்பட்டது. சங்க காலத்தில் ஆலமர்செல்வன், மாதொருபாகன், முப்புரம் எரித்த முதல்வன் போற்றப்பட்டுள்ளான். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமூலர் வேதாகமங்களை ஆதாரமாகக்கொண்ட சைவ சித்தாந்தத்தை நமக்கும் காட்டுகிறார். களப்பிரர் ஆட்சியில் மறைந்து வாழ்ந்த சைவம் ஞானசம்பந்தர், அப்பர் ஆகிய இரு சைவக்கண்களைக் கொண்டு புத்தொளிபெற்று விளங்குவதாயிற்று. அவர்களின் திருப்பதிகங்களிலும் அவர்களுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த காரைக்காலம்மையார், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோரின் திருப்பதிகங்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன.

'வேதாந்த சித்தாந்தம்' என்று திருமூலரால் குறிப்பிடப்பட்ட சைவத்தைப் பல்லவர், சோழர் குலத்து மன்னர்கள் போற்றி வளர்த்திருக்கிறார்கள். இவ்விரு குலமன்னர்களும், ஆரியம், தமிழ் இரண்டையும் போற்றி வந்திருக்கிறார்கள். உலகிலேயே தொன்மையும் இலக்கிய வளமும் கொண்ட இருமொழிகள் இவையே தெய்வமணம் மிகுதியாகக் கொண்ட மொழிகளும் இவையே. பல்லவர்கள் குறிப்பாக சமஸ்கிருத வளர்ச்சிக்குப் பேராதரவு தந்தார்கள். சோழ மன்னர்கள் வேதம் ஓதுவதற்கும் தமிழ்த் திருப்பதிகங்கள் ஓதுவதற்கும் நிபந்தங்கள் ஏற்படுத்தினார்கள். வேந்தர்களன்றி ஊர் மக்களும் இவ்வகையில் பங்குபெற்றுள்ளார்கள். விருத்தாசலத்தில் திருப்பதிகம் ஓதுவதற்கு நெற்குப்பையில் வாழ்ந்த மக்கள் வழிவகை செய்துள்ளது முதலாம் இராசராசன் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளது. 'சைவ சித்தாந்த மார்க்கத்தை அறிந்தவன்' என்று தன்னைப் பெருமையுடன் அறிமுகப் படுத்திக்கொள்கிறான். பல்லவ வேந்தனான இராஜசிம்மன், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் போன்ற அரசர்கள் தெய்வப் பாடல்களைப் பாடியும் தெய்வீக வாழ்வு வாழ்ந்தும் வந்திருக்கிறார்கள். மன்னராட்சியின்றி மக்களாட்சி நடைபெறும் இந்நாளில் மடங்களும் மக்கள் மன்றங்களுமே சிவம் பெருக்கும் பணியை மேற்கொள்ளவேண்டியவைகளாக இருக்கின்றன.

சைவசமயிகள் மூல நூல்களாகக் கொள்பவை நால் வேதமும் இருபத்தெட்டுச் சிவாகமங்களும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், பன்னிரு திருமுறைகளுமாம். வேதமோடகமமெய்யாம் இறைவன் நூல் சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே என்னும் திருமூலர் கூற்று இரண்டையும் ஒத்த நிலையில் வைத்துப் போற்றும் பண்பினைக் காட்டுகிறது. எப்படி இவை இரண்டும் சிவபெருமானால் வெளியிடப்பட்டதால் பிரமாணநூல்களாக ஆகிற்றனவோ அப்படியே சிவாநுபவம் வாய்க்கப்பெற்ற ஆசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் பிரமாண நூல்களே.

'திருமுறை' என்ற சொல் மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டில் காணப்படுகிறது. திரு என்னும் சொல் செல்வன் கழல் ஏத்தும் செல்வத்தையும் குறிக்கும். திருவே என்செல்வமே என்று அடியாரால் போற்றப்படும் சிவபெருமானையும் குறிக்கும். திருமுறை நமக்குக் கிடைத்துள்ள அரிய செல்வம். அதைப்போற்றும் வகையில் விழா எடுக்கும் பழம் மரபை யொட்டி இங்கும் விழா எடுக்கிறோம். விழா எடுப்பதோடு அமையாது தினந்தோறும் திருமுறையை ஓதிவந்தால், சார்ந்ததன் வண்ணமாகும். நமது உயிர் சிவசம்பந்தத்தை இடையறாது பெற்று சிவாயுச்சிய நிலையை அடைய இயலும்.

சிவன், சீவன், தளை என்ற முப்பெரும் உண்மைப் பொருள்களில் முதலாவதாக நிற்பது சிவன். அவன் புகழைப்பேச முயன்ற வேதமும் தோல்வியுற்றது. மனத்தாலும் எண்ணிப்பார்க்கவியலாத அருமை பெருமைகளை உடையவன். இதைத்தான் வேதம் 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா துஹ' என்று கூறுகிறது.

சிவனே பிரம்மாசாரி வேடம் தாங்கித் தன்னை நோக்கித் தவம் புரிகின்ற பார்வதியை நோக்கிப் பேசுகிறார். 'சிவனுக்கு வீடுவாசல் சொத்து சுகம் ஏதாவது உண்டா? அவர் மண்டையோட்டை ஏந்தி மயானத்தில் திரிகின்றான். கிழட்டுக்காளை மீதேறி கைலாய மலை மீது சுற்றுகின்றான். அவனது தாய் தந்தையரை யாரறிவார்? பாம்பணிந்து சாம்பலைப் பூசி புலித்தோலை அரைக்கசைத்து கூத்தாடுகின்றானே. அவனையா விரும்புகிறாய்?' என்று கேட்டார். பார்வதி கோபமுற்றுக் கூறுகிறாள்.

அவர் மயானத்திலிருந்தாலும் மூவுலகிற்கும் நாயகன். வேண்டுதல் வேண்டாமையிலானாகிய அவனுக்குப் பாம்பும் பொன் அணியும் ஒன்றுதான். சாம்பலும் சந்தனமும் ஒன்றுதான். சொல்லப் போனால் அவரது அளப்பரிய பெருமையை யாரே உண்மையிலேயே அறியவல்லார்? என்று பதில் கூறினாள்.

நீலமணிமிடற்று ஒருவர் என்ற சொல் அவனது தன்னலமற்ற உலக நலத்தையே நாடும் பண்பை யல்லவா பறைசாற்றுகின்றது. தேவரும் அசுரரும் நஞ்சைக் கண்டு அஞ்சியோட அனைவரையும் காத்தற்பொருட்டு கண்டத்திலே பதியவைத்துக்கொண்ட அவர் திருவருளை நினைந்து போற்றிய நூலோர் பலர். நஞ்சுண்டமைந்த அந்த நாகரிகத்தையும் இன்று உண்ணும் உணவிலும் பருகும் நீரிலும் உள்ளிழுக்கும் காற்றிலும் நஞ்சைக் கலக்கும் நாகரிகத்தையும் எண்ணிப் பார்ப்போமாக.

ருக், யஜுர், சாமம் என்ற மூவேதங்களுள் நடுவாயுள்ள யஜுர் வேதத்தின் நடுப்பகுதியிலமைந்துள்ளது ஸ்ரீருத்ரம். அதன் நடுவே அமைந்துள்ளது 'சிவம்' எனும் சொல். சிவனும் சக்தியுமாய் இருக்கும் அவன் அனைத்திற்கும் தோற்றுவாய். நீலமேனி வாலிழை பாகத்து ஒருவனது இருதாள் நிழற்கீழ் மூவகை உலகும் முகிழ்த்தன முறையே என்று கூறுகிறது ஐங்குறுநூறு. இதையே 'பவன்' என்ற வேதச் சொல் குறிக்கிறது. ருத்ரன், பசுபதி, சர்வன் (உலகை ஒடுக்குபவன்) கபர்தீ (சடையன்), கிரிசன் (கைலாயன்) பிருகத் (நெடியோன்), பூர்வஜன் (பழையோன்) என்றெல்லாம் வேதங்களில் போற்றப்படுகின்றான். உள்ளன்போடு போற்றும் உத்தம அடியாரின் உள்ளத்தில் கட்டையின் அளவின் வீற்றிருக்கும் இறைவன் உலகனைத்தையும் கடந்த கடவுளாய் அப்பாலுக்கப்பாலாய் இருக்கிறான் என்பதை கடோபநிடதம் கூறுகிறது. திருவாசகமும் கூறுகிறது.

'அங்குஷ்டமாத்ர, புருஷ, அந்தராத்மா ஸதா ஜனானாம் ஹருதயே சந்நிவிஷ்ட, பூமிம் விச்வதோ வ்நத்வா அத்யதிஷ்டத் தசாங்குலம்' (கடோபநிடதம்-111 (3))

*'அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே*
*ஒப்பாக ஒப்புவித்த உள்ளத் தாருள்ளிருக்கும்*
*அப்பாலைக் கப்பாலைப்*
*பாடுதுங்காண் அம்மானாய்'* - (திருவம்மானை)

திருக்கோயிலாகிற படமாடும் கோயில் நடமாடும் கோயிலாகிற நம் உடலமைப்பை ஒட்டியே அமைந்துள்ளது. நமக்குப் பாத ரட்சை கால், வயிறு, கழுத்து, மூக்கு, தலை, குடுமி முதலிய உறுப்புக்கள் கோயில் கட்டட அமைப்பை முறையே கீழிருந்து மேலே நோக்கினால் உபானம், பாதம் (தூண்), ஸித்தி (சுவர்), க்ரீவா (கழுத்து), நாசிகை (மூக்கு), சிகரம் (தலை), ஸ்தூபி என்ற சிற்ப நூற்சொற்களால் குறிக்கப்படும் பகுதிகளோடு ஒத்திருப்பதைக் காணலாம். கோயிலில் ஐந்து பிரகாரங்களும் உடலின் தன்மையும் பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று சொல்லப்படும் ஐந்து கோசங்களோடு ஒத்தன. கர்ப்ப கிருகத்திலுள்ள இறைவன் நம் உடலில் உள்ள உயிர் போன்றவன். வெளிப் பிரகாரங்கள் தொடங்கி கருவறைக்குச் செல்லும் ஒருவன் உலகியலிலிருந்து சிறிது சிறிதாக விலகிச் சிவனோடு ஒன்றும் நிலைக்குச் செல்லத் தன்னைத் தயார் செய்து கொள்கின்றான்.

மக்களின் பக்குவ நிலைகள் வெவ்வேறாக இருப்பதால் அவரவர் நிலைக்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படி முறைகளை நமது ஆசாரியர்கள் அமைத்தும் வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள், எப்பிறப்பினருக்கும் எந்நிலையினருக்கும் நமது சமயம் இடம்கொடுக்கிறதென்பதை நமது நாயன்மார்கள் வரலாற்றிலே, திருமறைகளில் காணலாம். ஆவுரித்துத் தின்னும் புலையரேனும் நம் ஈசர்க்கு அன்பராகில் அவருக்கு முக்தியுண்டு. உண்மை பக்தி இருந்தால் அந்த பக்திவலையில் படுவான் பரமன். பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு சிரிப்பாராம் நம் சிவபெருமான். காஞ்சியில் பெருங்கோயில் எழுப்பிய காடவர்கோனைவிட திருநின்றவூரில் மனக்கோயில் எழுப்பிய பூசலாரின் பூசனையை உவந்து ஏற்றுக்கொண்டான் நம் புனிதன்.

பூசை செய்யும்போது நாம் இறைவனிடத்தில் எதைவேண்டுதல் வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா, உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம்தர வேண்டும்" என்கிறார். பொன்னும் மெய்ப்பொருளும் தருவானிடத்தில் பொன்னையும் பொருளையும் போகத்தையும் வேண்டுவோரே இன்று பலர் இம்மைக்குப் பொருளையும் மறுமைக்கு வீட்டையும் மறவாது வேண்டினால் பக்குவநிலை எய்தியபோது மெய்ப்பொருளையே நாடும் மனம் அமையும் உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால் அவன்முன் நிற்பான்.

சான்றோர், செந்தண்மைபூண்டு ஒழுகுவோர், வாழ்ந்தால் அவர் வழி மக்கள் அனைவரும் வாழ்வர். வானவர் வாழ்ந்தால் மக்கள் வாழ்வும் செழிக்கும். ஆனினம் வாழ்ந்தால்தான் உயிரியக்கம் உண்டு. ஆகவே அனைவரும் வாழ வாழ்த்தினார் ஞானசம்பந்தப் பெருமான். வாழ்க அந்தணர், வானவர், ஆனினம் என்பதாக, நமது ஞானசம்பந்தரும் அப்பரும் சமுதாயத்தில் மலிந்திருந்த பிற சமய தீய கருத்துக்களை அகற்றி நன்னெறியாம் சிவநெறியைப் பரப்பவே பாடுபட்டார்கள். அத்தகைய சமுதாயக் கண்ணோட்டத்துடன் ஒவ்வொருவரும் இறையருளை வேண்டுதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

யாண்டும் அரன் நாமம் சூழ்கவே.

---

நன்றி : .... பக். 37-40.

# 16. மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

- திருமதி. வாசுகி கண்ணப்பன், சென்னை - 600 004.

**முன்னுரை**

உலகம் நாகரிகக் கலாச்சாரத்தின் படியில், முதல் காலை வைக்கத் தொடங்கிய காலத்திலேயே எல்லாத் துறைகளிலும் முதன்மையாக அறிவினைப் பெற்றிருந்தது நம் பாரதமணித் திருநாடு. அன்றே எல்லாக் கலைகளிலும் சிகர உச்சியை பிடித்திருந்தது நம் தாய்த் திருநாடு.

**நமது சொத்து**

நமது பாரம்பரியக் கொள்கையைப் பறைசாற்றும், தேவாரம், திருவாசகம், இதிகாசங்கள், இலக்கியங்கள், நீதிநூல்கள், வேதங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள் கூறும் மெய்ஞ்ஞானம் அனைத்தும், விஞ்ஞான அடிப்படையில் அமைந்தவை என்பதை மேலைநாட்டு விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டு, போற்றி, அதனை ஆராய்ச்சி செய்து பூரணமான பலனைப் பெற்றுப் பயன் பெறுகிறார்கள்.

**உலகம் உருண்டை**

உலகம் உருண்டை என்பது எப்போது தெளிவாயிற்று? 'விக்டோரியா' என்ற கப்பல் உலகை வலம் வந்தபோது. அதற்கு முன்னால் உலக மக்கள் உலகம் தட்டை என்றனர். திருவாசகத்தில் "அண்டப்பகுதியில் உண்டைப் பிறக்கம்" என்றும், கம்பன் தன் இராமாயணத்தில் "பூமி உருண்டைக்கு அப்பால் உள்ள உலகு" என்ற வரிகள் மூலம் விஞ்ஞானத்திற்கு முன்னே நம் மெய்ஞ்ஞான மக்கள் கூறிய உலகம் உருண்டை என்ற விஞ்ஞான உண்மை புலனாகிறது.

அதேபோல் மனத்தின் இருப்பிடம் எது என்கின்றபோது, மூளை என்கின்றனர் சிலர், இதயம் என்கின்றனர். வேறு சிலர், மேலும் சிலர் வயிற்றுப்பகுதி என்கின்றனர். ஆனால் இன்றைய ஆராய்ச்சியில் புருவ மத்தியில்தான் மனத்தினை அடக்கவும், கட்டுப்படுத்தவும், மயக்கவும் தேவையான மானசீகமான சக்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஹிப்னாடிசம், மெஸ்மரிசம் போன்றவற்றில் மயக்குவோர் புருவமத்தியில்தான் குறிவைப்பார்கள். அதைக்கொண்டு ஆட்டிப் படைப்பார்கள். அதனால்தான் அவ்விடத்தில் பொட்டிட்டு அதனைத் தடுக்கின்றோம். பல நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய நமது யோக சாஸ்திரம், ஸ்ரீ வித்யா சாஸ்திரம், மனதின் இருப்பிடம் புருவமத்திதான் எனக் கூறியுள்ளது. மறந்து போனதை நினைவுபடுத்த நெற்றியில் தட்டிப் பார்த்துக் கொள்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

**அரசும் வேம்பும்**

பிள்ளையில்லாதவர்கள் அரசும், வேம்பும் இணைந்த மரத்தைச் சுற்றி வந்தால் பிள்ளை உண்டாகும் என்பர். இதை விஞ்ஞான அடிப்படையில் பார்த்தால், இயற்கையில் நமக்குப் பல வைட்டமின் சத்துக்கள் கிடைக்கின்றன. அரச மரம் அதிக அளவான பிராணவாயுவை வெளியிடக் கூடியது. அதனால் மரத்திற்கு அரசன் என்ற பொருளில் இம்மரத்திற்கு அரசமரம் என்று பெயர். அதேபோல் வேப்பமரம் (Pollution) சுற்றுப்புற அசுத்தத்தை, சுத்திகரிக்கக்கூடிய தன்மை கொண்டது.

வேப்பமரக்காற்று உடல் நலத்திற்கும் நல்லது. ஒரு கிருமி நாசினியும்கூட. அதைப்போல அரசமரக்காற்றும், வேப்பமரக்காற்றும் சேர்ந்து வீசும் இடத்தில் வைட்டமின் E சத்து அதிகமாகக் கிடைக்கின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் ஹார்மோன் பக்குவநிலை பெற்று, கர்ப்பம் தரிக்க சாதகமான சூழ்நிலை ஏற்படுகின்றது. இப்படி மெய்ஞ்ஞானக் கருத்தான வேம்பு அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை பிறக்கும் வாய்ப்பு உண்டாகும் என்ற நம்பிக்கை விஞ்ஞான ரீதியான உண்மை என்பதை உணரலாம்.

ஆத்மாவையே ஆராய்ச்சிப் பொருளாகக் கொண்டு ஆழ்ந்த, தெளிந்த, ஆணித்தரமான உண்மைகளைக் கூறுவது மெய்ஞ்ஞானம். அழியக்கூடிய பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்து விளக்கம் தருவது விஞ்ஞானம். மனிதனுக்குப் பதிலாக, எதையும் செய்யக்கூடிய இயந்திரங்களைக் கண்டுபிடித்து இயந்திர உலகத்தில் வாழ்பவர்கள் மேலை நாட்டு மக்கள். ஆனால் அமைதிக்காக, மெய்ஞ்ஞானத்தைத் தேடி, நாடி, நம் நாட்டை நோக்கி ஓடி வருகிறார்கள். சில நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானத்தால் கிடைத்த புதிய சாதனங்களில் கிடைக்காத அமைதி, பல ஆயிரம் ஆண்டுகள் பழமையைக் கொண்ட நம் மதத்தில் உள்ள மெய்ஞ்ஞானத்தில் கிடைக்கிறதெனத் தேடி வருகிறார்கள்.

**மெய்ஞ்ஞான விளக்கம்**

விஞ்ஞானத்தின் மூலம் புதுமைகளைக் கண்டுபிடித்து விட்டோம். இப்படித் தொட்டும், பார்த்தும், கேட்டும், சுவைத்தும் உணரக் கூடிய இந்த உயர் சக்தியைப் புரிய வைப்பது எது? நம்முடைய மனம். அதை இயக்குவது யார்? அதன்பின் உள்ள சக்தி என்ன? பின்புலத்தின் தத்துவம் என்ன? இதில் இன்றைய விஞ்ஞானிகள் தம் பார்வையை உள்நோக்கியிருக்கின்றார்கள். இதைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு நமது மதத்தின் அரிய நூல்கள் தந்த அறிவு சாதித்திருக்கின்றது. சுருங்கக்கூறின் இன்றைய விஞ்ஞானம் மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையை ஆராய்ந்திருக்கிறது. நமது மதம் தந்த மெய்ஞ்ஞானம் மனிதனையே ஆராய்ந்திருக்கிறது. அது ஆராய முற்பட்டது மனிதனின் தத்துவ ஞானம்.

இயற்கை அன்று முதல் இன்றுவரை அப்படியே, இருந்தவை, இருப்பவை. ஆனால் மனிதன் கோடிக்கணக்கான ஆண்டுகளில் வெகுதூரம் முன்னேறிவிட்டான். அப்படி முன்னேறிய மனிதனையே சோதனைப் பொருளாக்கி ஆராய்கிறது நமது மதம்.

விஞ்ஞானியும் மனிதனை ஆராய்ந்தான். உடற்கூறுகள், நரம்பு மண்டலங்கள், புலன்கள், அமைப்புகள் என ஆராய்ந்தான். ஆனால் இவையெல்லாம் வெளிப்படையாக தோற்றங்களின் அறிவேயாகும். உடம்பிலுள்ள கோடிக்கணக்கான அணுக்களை இயக்கும் மிகப்பெரிய சக்தி, உடல்வடிவத்தில் எங்கே இருக்கின்றது. விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை. மனிதனை அறிந்துகொள்வது அரிய கலை. உள்மனதை உணர்ந்து கொள்வது மிக நுட்பமான கலை. அதன் வெளி விளிம்பைக் கூட நமது விஞ்ஞான முன்னேற்றங்கள் தொடவில்லை என்கின்றார் **ஜான் ஹக்ஸ்லி.** ஆக, அழியக்கூடிய பொருள்களை ஆராய்ச்சி செய்வது விஞ்ஞானம். அழிவற்ற ஆத்மாவையே ஆராய்ச்சிப் பொருளாக்கி கண்டுபிடித்து சொல்வது மெய்ஞ்ஞானம். *அதுதான் நம் சைவ சமயம்.*

இரண்டாம் உலகப்போரில் ராட்சச இயந்திரக் கருவிகள், அழிவு சக்தியின் மூலம் வெற்றியைத் தேடித் தந்தன. ஆனால் மனித முன்னேற்றத்திற்கு அவை என்ன செய்யமுடியும். ராட்சச சக்திக்கு

அடிமையானபின், மனிதனுக்கு நிம்மதி கிடைக்குமா? ஆன்மீக சக்தி ஒன்றுதான், மன நிம்மதியைக் கொடுக்க வல்லது என்று **பெட்ரண்ட் ரஸ்ஸல்** தனது கட்டுரையில் கூறியுள்ளார்.

**பூஜ்யத்தின் இராஜ்யம்**

பூஜ்யம் என்ற எண்ணை உபயோகத்துக்குக் கொண்டு வந்தது நமது இந்தியாதான் பூஜ்யம் என்ற எண்ணால் என்ன பயன் என்று கேட்டால், உண்மையில் அதை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அதற்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கி விட்டால் ஒன்று, பத்தாகும், நூறு, ஆயிரம், லட்சம், கோடானு கோடியாகும்.

இறை உணர்வும் இப்படித்தான். அதைத் தேடப்போனால் இல்லாததுபோல் தோன்றும். கண்டு உணர்ந்துவிட்டால் அதை மதிப்பை அளவிடவே முடியாது; இன்றைய விஞ்ஞானத்திலும், வான்கணிதம், மின்னணுவியல் அணுசக்தி அளவு ஆகியவற்றின் பின்புலமாக உள்ளது பூஜ்யம்தான்.

**கற்பனைக் கெட்டாக் கடவுள்**

வான் வெளியில் நிறைந்து, மின் இயலாய் இயங்கி, அணுவிலும் சக்தியை உணர்த்துபவனை நாம் கடவுள் என்று கூறி வணங்குகின்றோம்.

எவ்வளவு ஆராய்ச்சி செய்தபோதும் பிறப்பின் இரகசியம் அறிய D.N.A. பரிசோதனை நடந்தபோதும் மனித குலத்தின் உணர்ச்சிகளைப் பாகுபடுத்த இயலவில்லை. பரம்பரை ஒற்றுமைகளை ஆராய்ச்சி செய்ய விஞ்ஞானம் முற்படுகிறது. உள்ள உணர்ச்சி, ஒற்றுமைகளுக்கு வடிவம் கொடுக்க முடியவில்லை. இத்தகைய உருவமைக்க முடியாத உணர்ச்சியின் எல்லையே, கடவுளை உணரும் பரமானந்தம்.

"கடவுளைத் தேடி வெளியே ஓட வேண்டியதில்லை, உனக்குள்ளேயே இருக்கிறார்", "அவனன்றி ஓர் அணுவும் அசையாது", "உன்னை இயக்குபவன் அவனே" என்று, நமது தத்துவங்கள் கூறுகின்றன. இதை உடலின் அமைப்பில் பொருத்திப் பார்ப்போம். உடலில் கோடிக்கணக்கான அணுக்கள் உள்ளன. இதில் ஒரு சில தமது கதியில் மாறினாலும் உடல், மூளை என ஒவ்வொன்றாகப் பாதிக்கப்படுகின்றது. ஆக நமது உடல் வெறும் எலும்பும், சதையும், இரத்தமும் கொண்டது மட்டுமல்ல. இதன் இயக்கம் என்பது மற்றொரு சக்தி. இதை முழுமையாகக் கண்டுணரவில்லை. உயிருள்ள உடல் உணருகிறது. வளருகிறது. இயங்குகின்றது. உடலில் உயிர் பிரிந்தபின் இயக்கமே இல்லை. இந்த மூலாதார சக்தி எது? இதற்கு மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் விளக்கம் தர இயலாது. ஏனென்றால் இது அளந்தறிய முடியாதது. இதையே மெய்ஞ்ஞானம், ஆத்மா என்ற வர்ணிக்கிறது. ஆத்மாவை கடவுளின் பிம்பம் என்றும் கூறுகிறது. அதனால்தான் கடவுளுக்கும், நம்மால் விஞ்ஞான விளக்கம் தரமுடியவில்லை. ஆக நமது மதம் எல்லாம் கடந்த மெய்ஞ்ஞான விளக்கமாகும்.

**மார்க்கோ போலோவின் கணிப்பு**

13ஆம் நூற்றாண்டில் பிரயாணம் செய்த **மார்க்கோபோலா, "சைவ சமயம் வெறும் சடங்குகளும், சம்பிரதாயங்களும் கொண்டதல்ல. உயர்ந்த கட்டுப்பாடுகள், ஆச்சாரங்கள், விதிமுறைகளைக் கொண்டது.** அடிப்படை விதிகளைப் பார்த்தால், ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும், இறைவனுக்கு பூஜை செய்யும் முன் தூய்மையான குளிர்ந்த நீரில் குளித்து தன்னை சுத்தப்படுத்திக் கொள்கிறார்கள். சாதாரண பாத்திரமானாலும் தனிப்

பாத்திரம் வைத்துக்கொள்கிறார்கள். ஒருவருடையதை மற்றவர் உபயோகிப்பதில்லை. வாய் வைத்து அருந்துவதில்லை. காலைக் கழுவாமல் வீட்டிற்குள் வருவதில்லை இப்படி அடிப்படை சுகாதார விதிகள் போன்று ஒவ்வொன்றும் ஒரு அர்த்தமுள்ளது" என்கிறார்.

**தியானம்**

அழியக்கூடிய மனிதனுக்கு அப்பால் அழிக்கமுடியாத ஆன்ம சக்தி உள்ளது. இவ்வான்ம சக்தியை வளர்ப்பதுதான் தியானம். தியானம் என்பது என்ன? எங்கும் தண்ணீர் மயம். இதன் நடுவில் மீன் சுதந்திரமாக நீந்துகிறது. நீந்தி களைத்தபின் நிலையாக நிற்கிறது. இதுதான் தியானம் என்கின்றார் இராமகிருஷ்ண பரமஹம்சர். இது கடினமான இருந்தாலும், மலரைத் தொட்டவுடன், மணம் நாசியை எட்டுவதுபோல், சந்தனம் அரைத்தாலே கையில் மணம் கமழ்வதுபோல், மந்திரங்கள் சொன்னாலே தியானத்தின் பலனை உணரலாம். ஏதாவது ஒரு பொருளைச் சிந்தையில் கொண்டு மனம் அலையாது அதன் மீது படிந்து நிற்கச் செய்வதுதான் தியானம்.

சுவாமி விவேகானந்தர், தியானம் என்பது தண்ணீர் கொட்டுவதுபோல் இல்லாது எண்ணை பொழிவதுபோல் இருக்க வேண்டும் என்றார். மேலும் இவர் கூறுகிறார்: "நாம் கடவுளிடம் பேசினால் பிரார்த்தனை. கடவுள் நம்மிடம் பேசினால் அது தியானம்" என்கிறார். தியான நிலையில் பக்தன் யோக நித்திரை நிலையை அடைகின்றான். இந்நிலையில் அவன் எண்ணிய உருவில் பக்தி சொரூபம் கண்டு களித்தான். இதன் வழியில்தான் இறைவனுக்குப் பல உருவங்கள் தோன்றின.

**விந்தைமிகு மந்திரங்கள்**

அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்த மந்திரங்கள் பயன்படுகின்றன. மந்திரத்தின் சக்தி மனதின் அடித்தளத்தில் அழுத்தமாகப் படிந்து விடுகின்றது. உதாரணமாக "ஆப்பிள்" என்று ஜபிக்கத் துவங்கினால் உடனடியாக அதன் உருவம், மனதில் படியும், அதன் மணத்தை உணர்வீர்கள்; அதன் ருசியை மானசீகமாகப் பெறுவீர்கள்; உங்கள் உள்ளத்தில் சுகமான நல்ல உணர்வைப் பெறுவீர்கள்.

அதேபோல் கொலைகாரன் என்று நினைத்தவுடன் உங்களுக்கு, கொடூரம், கோபம், ஆத்திரம் போன்ற உணர்வுகள் ஏற்படும். அந்தச் சொல்லில், வார்த்தையில் ஏதும் இல்லை. அது உண்டாக்கும் உணர்ச்சிதான் உங்களை இயக்குகின்றது. இதுதான் மந்திரச் சொல்லின் விந்தை.

ஓம் நமசிவாய என்னும் சக்தி வாய்ந்த மந்திரம், நமது உள்ளத்துக்குத் தெம்பும், பலமும் தரும். நம்மை உயர்ந்த சக்தியுடன் ஒன்றிவிட வைக்கின்றது. ஒவ்வொரு அணுவிலும் உறைந்துவிடுகின்றது. ஆக அகம், புறம் இரண்டுமே பலன் பெறுகிறது இப்பலனால் சக்தி உருவாகின்றது. இந்த சக்தி விரிவடைய, உங்களுக்குள் பெரிய ஆத்ம சக்தியை உருவாக்கிவிடும். இதுவே குண்டலினி சக்தி. இவ்வாறு இச்சக்தி தூண்டப்பட்டு விட்டால் அது தொடர்ந்து நம்மை வழிப்படுத்தி, மேன்மை அடையச் செய்யும் என்கிறார் பாபா முக்தானந்தா. காலையிலும், மாலையிலம் 20 நிமிடங்கள் ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட்டால் மனம் ஒருமுகப்படுத்தப்படுகின்றது. இதனால் மனிதன் புதிய சக்தியைப் பெறுகின்றான் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை. இப்படிப்பட்ட பல்வேறு கலைகளையும் நமது இதிகாசங்களும், புராணங்களும், சாத்திர நூல்களும் 2000 ஆண்டுகளுக்கு முன்பே விவரித்துள்ளதை இன்று மேலை நாடுகள், கீழை நாடுகள் உணர்ந்து மதித்துப் பாராட்டுகின்றன.

**முடிவுரை:**

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றுக்கும் எல்லை உண்டு. ஏனென்றால் விஞ்ஞானம் மனித மூளை உருவாக்கிய தத்துவம். ஆனால் மெய்ஞ்ஞானம் இப்படி உருவாக்கக் கூடியதல்ல. இது மனிதனால் கண்டுணர்ந்து தனக்குத்தானே விளங்கிக் கொண்டு, புரிந்து கொள்ள வேண்டிய அனுபவம்.

இப்படி கடவுளைத் தேடிச் செல்ல தனியாகப் பயிற்சிசெய்ய வேண்டியதில்லை. மலைச்சாரல்களையும், காடுகளையும் நாடவேண்டியதில்லை. நம்மைச் சுற்றியுள்ள உயிர்களிடத்து அன்பு காட்டி, நல்ல ஒழுக்கத்துடன் வாழ்க்கையை நடத்தினாலே போதும். எல்லோரையும் தன்னைப் போல் மதித்தாலே போதும். அங்கு இறைவன் வந்து சேர்ந்துவிடுவார். இப்படி தன்னுள் உறையும் இறைவனே, எல்லா உயிர்களிலும் கலந்து நிற்கிறார் என்பதை புரிந்துகொள்ளும் உணர்வையே, மெய்ஞ்ஞானத்தின் முதிர்ந்த நிலையாக சைவசமயம் கூறுகின்றது.

# 17. சீர்திருத்தச் சைவம்

– திரு ஆர். சிவகுமார்,

*ஆசிரியர், தமிழன் எக்ஸ்பிரஸ், சென்னை.*

**சைவ சமயம்**, சமீப பாலமாகப் பெரும் வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. ஆலயங்களில் திரு. விழாக்கள் நடைபெறும்போது பெருந்திரளாக மக்கள் வந்து தரிசிக்கின்றனர். பிரதோஷங்களின்போது எல்லாக் கோயில்களிலும் கூட்டத்தைப் பார்க்க முடிவது மன நிறைவைத் தருகின்றது.

பேதாக் குறைக்கு ஜோதிடர்களும் தங்கள் பங்குக்குப் பரிகாரங்களைப் பரிந்துரைக்கின்றனர். இதனாலும் சிவன் கோயில்களில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.

திருவண்ணாமலை கிரிவலம் புகழ் பெற்றதையடுத்து, பல்வேறு தலங்களில் பௌர்ணமி பிரதட்சிணத்துக்கு மௌசு ஏற்பட்டுள்ளது.

ஆங்காங்கே திருநீறு பூசிய நெற்றிகளைப் பரவலாகக் காணமுடிகின்றது. சிவலிங்கம் என்றாலே பாம்பைக் கண்டதுபோல் பயந்த மக்கள், இன்று ஆட்டோக்களின் பின்னாலும், பஸ்-கார் போன்றவற்றின் பின்புறக் கண்ணாடியிலும், 'ஸ்டிக்கர் சிவலிங்க பிரதிஷ்டை' செய்தபடி உலா வருகின்றனர்.

இத்தகைய மாற்றங்கள், மாதேவன் அடியாரின் மனங்களை மகிழ வைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவை ஒருபுறமிருக்க, 'வீக்கம் வேறு; வளர்ச்சி வேறு' என்பதனை நாம் மறக்கக்கூடாது. பிரதோஷங்களின்போதும், பரிகார ஸ்தலங்களிலும் கூடுகின்ற கூட்டத்தைப் பார்த்தும், மறுபடியும் சம்பந்தர் வாழ்ந்த பொற்காலம் பூத்துவிட்டதாக நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. இன்றைய முதல் தேவை நல்லிணக்கம். புறச்சமயங்களோடு நமக்கு நல்ல இணக்கம் தேவை என்ற பொருளில் இதைக் கூறவில்லை. சைவர்களுக்கு இடையே முதலில் நல்லிணக்கம் உருவாக வேண்டியது அவசியமாக உள்ளது.

நமது மதத்தின் பெருமையே, ஒரு தனிப்பட்ட மனிதரின் தலைமையின்கீழ்தான் அனைவரும் இயங்கவேண்டும் என்ற அவசியத்தைத் திணிக்காமல், தனி மனித சுதந்தரத்தை அனுமதித்திருப்பதுதான். ஆனால் இந்த அளவற்ற சுதந்திரமே ஆபத்துக்கு வழி வகுத்துவிடக்கூடாதல்லவா?

இதை ஒரு கருத்தாக வைப்பதற்கு வலுவான காரணம் உள்ளது. நம்மால் முழுவதும் உணரப்படாமல், ஆனால் அநேக பேதங்களுக்கான விதைகளை, அறியாமையால் நாம் ஊன்றிக்கொண்டே இருக்கிறோம். இந்த விதைகளின் அவசியம் இல்லாதவற்றை அழிக்க இப்போதே ஆன்றோர்கள் முயற்சி செய்யாவிட்டால், புதுப்பிரிவுகள் பல தோன்றுவதுதான் மிஞ்சும். அப்படியொரு அவலம் நமக்குத் தேவையா என்பதுபற்றிப் பெரியோர்கள் சிந்திக்க வேண்டும்.

'வேத நெறி தழைத்தோங்குவதற்காக' திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்கிறார் சேக்கிழார். எனவே வேரை வெட்டி பழம் பறிக்கும் அபாயகரமான முயற்சியில் நாம் என்றென்றும் ஈடுபடக் கூடாது.

சைவத்திருமுறைகளை ஆழ்ந்து படிக்கின்றவர்களுக்கு, மரபின் மீது அந்த மஹான்கள் வைத்திருந்த மகத்தான நம்பிக்கை எளிதில் புரியும். காழ்ப்புணர்வு என்ற கறுப்புக் கண்ணாடியை அகற்றி விட்டுப் பார்த்தால், நமது மூதாதையர்களான அருளாளர்களின் கருத்துக்கு எதிராக ஒழுகுவதன் மூலம் சிவ கோபத்துக்குத்தான் நாம் ஆளாவோம் என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். எனவே நமக்குப் புரிகின்றதோ இல்லையோ, மரபுகளை மாற்றுவதை நாம் ஆதரிக்கக் கூடாது.

**சைவத் திருமுறைகள்**, சிவபெருமானது திருநாமங்களைப் பாடுவதால் மட்டுமே நல்ல கதி அடையமுடியும் என்பதை ஆணித்தரமாகப் பல்வேறு விதங்களில் வலியுறுத்துகின்றன. எனவே சைவத்தை வளர்க்க உண்மையிலேயே ஆசைப்படுபவர்கள், மற்ற அனைவரையும் சிவ நாம ஜபத்தில் ஊக்குவிக்க வேண்டும்.

சைவத் திருமுறைகள் அனைத்திலும், 'நம: சிவாய' என்ற திருநாமத்தின் பெருமை பல்வேறு விதங்களிலும் எடுத்துக் காட்டப்படுகிறது. அவற்றை பிரமாணம் இல்லையென்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, சித்தாந்த சாத்திரங்களில் காணப்படும் ஓரிரு ஆதாரங்களை மட்டும் வைத்துக் கொண்டு, "சிவாய நம" என்று ஜபித்தால்தான் மோட்சம்; "நம: சிவாய" என்று சொல்லக்கூடாது' என்றெல்லாம் பிரச்சாரம் செய்வது குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும்.

அது நம: சிவாயவோ, சிவாய நமவோ... அவரவர் ருசிக்கு ஏற்றபடி ஜபிக்கலாம் என்று சமய பிரசாரகர்கள் துணிந்து கூறவேண்டும். அறியாத மக்களைக் குழப்பக் கூடாது.

இந்த இரண்டு நாமங்களுமே மஹிமை வாய்ந்தவைதான். ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் சித்தாந்தம் செய்யப்பட்ட விஷயத்தை, அறுநூறு வருஷத்துக்கு முந்தைய ஆதாரங்களைக் காட்டி அடிக்க நினைப்பது அறிஞர் செயல் அல்ல! அப்படிச் செய்தால், '**நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே**' என்று பாடிய அப்பர் பெருமானுக்கே பரவுலக லாபம் இல்லை என்றாகிவிடும்!

சீடனுக்கு பக்குவம் வரும்வரை, 'நம:சிவாய' ஜபம்; அப்புறம் 'சிவாய நம' ஜபம் என்றெல்லாம் படிக்கலாம். அப்படியெல்லாம் பக்குவம் பார்க்கத் தெரிந்த ஞான குருமார்கள் எத்தனை பேர் இங்கே உண்டு? நமக்கு நாமே பொய் சொல்லிக்கொள்ளாமல், மனசாட்சியை மதித்து பதில் தேடினால் உண்மையை உடனடியாக உணர்ந்துவிடலாம்.

அதேபோல் புதுப் புது 'தியரிகளை' உருவாக்கி இளம் சைவர்களைக் குழப்புவதும் கூடாது. நமது மதத்தின் பெயர்களைக் கொண்ட மக்களிடமே, 'நீங்கள் ஹிந்துக்களே அல்ல' என்று சொல்ல சில இயங்கள் புறப்பட்டிருக்கும் வேளையில், யுகத்தின் பெயர்களை மனம் போனபடி சொந்தக் கற்பனையின் பேரில் மாற்றிக் கொண்டிருப்பதால் என்ன பிரயோஜனம்?

அடுத்ததாக ருத்ராக்ஷம்... தாமாகவே முன் வந்து ருத்ராக்ஷம் அணிய ஆசைப்படும் ஒரு சிலரையும், சில சிவனடியார்களே பயமுறுத்தி விரட்டி விடுகின்றனர். சிவ தீக்ஷை பெற்று பூஜை, புனஸ்காரம் என்று வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குப் பல நியமங்கள் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் பக்தி மார்க்கத்துக்கு எந்த நியமமும் கிடையவே கிடையாது. '**ஸர்வ காலேஷு**' என்ற பதத்தினால் நித்திரை உள்பட எல்லாச் சமயத்திலும் ருத்ராக்ஷம் அணிந்து கொள்ளலாம் என்று சிவ மஹா புராணத்தில் சிவபெருமானே தெரிவிக்கின்றார். அதேபோல், '**ஸர்வாஸ்ரமாணாம். ஸ்திரீணாம்...**' என்ற ஸ்லோகத்தின் மூலம் பாலகன், பிரம்மசாரி, கல்யாணம் ஆனவன், ஸந்யாஸி, பெண்கள் என அனைவரும் ருத்ராக்ஷம் அணியலாம் என்றும் சிவபெருமானே உறுதிப்படுத்தியுள்ளார். ஆனாலும், 'கல்யாணம் ஆனவன் ருத்ராக்ஷம் போடக்கூடாது; கருமாதி பண்ணுகிறவன் போடக்கூடாது' என்றெல்லாம் ஏன் குட்டையைக் குழப்ப வேண்டும்?

ஒரு வேளை நிஜமாகவே இத்தனை நியமங்கள் இருந்தால் சிவபெருமான் அப்படிக் கூறுவாரா? அவர்தானே சைவத்தின், highest authority...? அவர் சொன்னதை நம்பி, எல்லாச் சந்தர்பத்திலும் ருத்ராக்ஷம் அணிகின்ற பக்தனை அவர் எப்படித் தண்டிப்பார்? அப்படிச் செய்தால் பக்தனை ஏமாற்றிய குற்றம் அவருக்கு வந்துவிடாதா?

எனவே சிவனடியார்கள் அனைவரும் தவறாமல் ருத்ராக்ஷம் அணிந்து, மற்றவர்களையும் ருத்ராக்ஷம் அணியத் தூண்டவேண்டும். திருநீற்றின் அவசியத்தை குறைந்தபட்சம் அவரவர் குழந்தைகளிடமாவது வலியுறுத்தவேண்டும்.

காணாபத்யம், கௌமாரம், சாக்தம், சௌரம், வைஷ்ணவம், சைவம் என்ற பிரிவுகளை உள்ளடக்கியது ஹிந்து மதம். இதில் நாம் 'தனி' சைவம் என்று நம்மை வகுத்துக் கொண்டாலும், மற்ற மதத்தவர்கள் நம்மை 'ஹிந்து' என்ற ஒரே அடையாளத்தின்கீழ்தான் பார்ப்பார்கள். நாம் குட்டிக்கரணம் போட்டாலும் ஹிந்து மதத்தில் உள்ள மற்ற பிரிவுகளை ஒழித்துக்கட்ட முடியாது;

அதற்கு அவசியமும் இல்லை. எனவே நமது மதத்தின் உட்பிரிவுகளாக உள்ள வைஷ்ணவம் போன்ற இதர மார்க்கங்களை இழித்துரைக்காமல் பக்தி பண்ணுவது அவசியம்.

'நமது சிவனே வைணவர்களுக்கு விஷ்ணுவாக இருக்கிறார்' என்ற அளவிலோ, அல்லது 'மூத்த கண்ணப்பர்' என்ற முறையிலோ விஷ்ணு துவேஷம் செய்யாதிருப்பது ஒட்டு மொத்த சமய வளர்ச்சிக்கு உதவும்.

'அவன் நம்மைத் திட்டுகிறானே?' என்று நாமும் ஆரம்பித்தால் ஹிந்து மதத்துக்குத்தான் பின்னடைவு. இதிலிருந்து தனியே சைவத்தை இழுத்துக் கொண்டுபோய் தனியொரு மதத்தை ஸ்தாபிப்பது எல்லாம் நடக்கவே நடக்காது.

இப்படி எத்தனையோ சொல்லலாம். 'மேன்மைகொள் சைவ நீதி' உலகமெங்கும் பரவ, காழ்ப்புணர்வற்ற திருத்தொண்டை நாம் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டும்.

அதைச் செய்யாமல் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசித் திரிவதால் எந்தப் பயனும் இல்லை.

## 18. தோத்திர, சாத்திர நோக்கில் பெண்ணின முன்னேற்றம்

- சித்தாந்த இரத்தினம் மு. செல்வநாதன், எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,
*சோளிங்கர்.*

இன்று, தமிழகத்திலும் மகளிர் முன்னேற்றம் குறித்துப் பேசப்படுகிறது. பெண்கள் ஒருங்கிணைந்து சங்கம் வைத்து முன்னேறலாம் என்னும் கருத்து பரவுகிறது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் உயர வேண்டும் என்று பேசப்படுகிறது. ஆண், பெண் பற்றித் தமிழ்ச்சைவ மரபு வழிக் கருத்துகளைக் கவனத்தில் கொள்ளாமையே, இப்படி மேலை நாட்டுச் சிந்தனைத் தாக்கத்திற்கு ஆளாகின்ற நிலைக்குக் காரணம் ஆகும்.

உலகிற்கு ஒரு குருவாக இறைவனால் அடையாளம் காட்டப்பெற்ற திருஞானசம்பந்தப் பெருமானின் திருநீற்றுப் பதிகத்தில் முதற்பாடலில் ஒரு வரி 'செந்துவர் வாய் உமை பங்கன்' என்பது. சிவந்த பவழம் போன்ற வாயினை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவன் என்பது இதன் பொருள். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களை எப்படிப் பிரிக்க முடியாதோ, அதுபோலச் சிவத்தையும் சத்தியையும் பிரிக்க முடியாது; பிரித்துப் பார்க்கக் கூடாது என்பதை இத்தொடர் விளக்குகிறது.

இறைவன் அருளை உடையவன். இறைவி அவன் குறிப்புணர்ந்து அந்த அருளை அடியார்களுக்கு ஊட்டுபவள். எனவேதான், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் இறைவியைக் குறிக்கின்ற போது, 'அருள்தரு', 'அம்மை உடனாய அருள்மிகு ஈசுவரர்' என்று குறிப்பிடல் வேண்டும். 'அருள்மிகு' என்பதை இறைவனுக்கு - சிவபெருமானுக்கு - மட்டுமே குறிப்பிடல் வேண்டும்.

'இறைவி உடனாய இறைவன்' என்பதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியக் கருத்து ஒன்று உள்ளது.

'எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்' (சித்தியார் 165). இறைவனின் கருத்து உணர்ந்து செயற்படுபவள் இறைவி. இறைவன் ஞான சொரூபன்; இறைவி கிரியா சொரூபி. அதனால்தான் ஐந்தொழில் ஆற்றுவதற்காக, இறைவன் இச்சையால் ஞானநிலையில் சங்கற்பிக்க, இறைவி கிரியையால் இறைவனின் ஒன்பது திருமேனிகளாக ஆகிறாள். மேலும் மேலும் இறைவன் எடுக்கும் திருமேனிகளாக ஆகிறாள். சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், அயன், இவை நவந்தரு பேதம்.

*சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவம் திகழும் ஈசன்*
*உவந்து அருள் உருத்திரன் தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாப்*
*பவம் தரு அருவம் நாலு, இங்கு உருவம் நாலு, உபயம் ஒன்றா*
*நவம் தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர். (சித்தியார் 164)*

சிவத்திடமிருந்து சத்தி தோன்றுகிறபோது, சிவத்திற்குச் சத்தி மகள் ஆகிறாள். சத்தியிடத்திருந்து நாதம் (சிவம்) தோன்றுகிறபோது, சத்தி தாய் ஆகிறாள். திருமாலை நோக்க உமை சகோதரி ஆகிறாள். சிவத்தையும் சத்தியையும் பிரிப்பிலா இணைப்பில் பார்க்கிறபோது, சத்தி மனைவி ஆகிறாள். எனவே, சத்தி மகளாகவும், தாயாகவும், சகோதரி ஆகவும், மனைவ ஆகவும் நிற்கிற நிலையைப் பார்க்கிறோம்.

உலகியலிலும் உயிர் ஆணாகவும், பெண்ணாகவும் பிறக்கிறது. ஓர் உயிர் ஆணாகவும், இன்னோர் உயிர் பெண்ணாகவும் பிறப்பதற்குக் காரணம் என்ன? எல்லா உயிர்களும் பிறவி எடுப்பதற்கு அதனதன் வினையே காரணம். ஆனால், செயலை விட அறிவில் மிகு விருப்புடைய உயிர் ஆணாகப் பிறக்கிறது. அறிவை விடச் செயலில் மிகு விருப்புடைய உயிர் பெண்ணாகப் பிறக்கிறது. நம் குடும்ப அமைப்பிலே வைத்து, இந்த உண்மையை உணர்ந்து கொள்ளலாம். மேலும், நடைமுறையில், 'ஆணுக்குப் பெண் இங்கே அறிவினில் இளைப்பில்லை காண்' என்னும் நோக்கில் அறிவு நாட்டம் மிகுதியும் உடைய பெண்ணிடத்து ஆண் சாயலைக் காணலாம். அறிவை விடச் செயல் நாட்டம் மிக உடைய ஆணிடத்துப் பெண் சாயலைக் காண முடியும்.

இற்றை மேலை நாட்டுச் சிந்தனையின் தாக்கத்தில் பெண் இனம் தன்னை முன்னேற்றிக் கொள்வதற்காகச் சங்கம் வைத்து, உரிமை கோரியும், போராடியும் வருகிறது. இது சரியான முறையா என்பதைச் சிந்தித்திட வேண்டும். சத்தி உரிமை கோரியதாகவோ, உரிமை கோரிச் சிவத்துடன் பிணங்கியதாகவோ எங்கேயும் குறிப்பு இல்லை. அது மட்டும் அன்று; நம் அறுபான் மும்மை நாயன்மார்களின் வாழ்வில் இடம் பெற்றுள்ள சைவப்பெண்கள் தம் பெண்மையின் ஆழத்தினையும் அற்புதத்தையும் உணர்ந்து இருந்ததனால், ஆண்களோடு முரணுகிற நிலை வந்தபோது, தம் பெண்மையின் பேராற்றலால் ஆணையும் சரி செய்த, தம் பெண்மையின் உயர்வாம் உண்மைத் தன்மையையும் நிலைநாட்டி இருப்பதைக் காண முடிகிறது.

பெரிய புராணத்திலே ஒரு தாய் - கமலவதி - தன் மகன் ஒரு நல்ல ஆண்மகனாக, சிறந்த அரசனாக விளங்கிட வேண்டும் என்று கருதியதால், 'ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமேல் இப் பசுங்குழவி புவனம் ஒரு மூன்று அளிக்கும்' என்று சோதிடர் சொல்லியதற்கேற்ப, அந்த நேரம் வருகின்ற வரை நிறை கர்ப்பிணி ஆகிய தன்னைத் தலை கீழாகக் கட்டித் தொங்க விடுமாறு செய்து, குழந்தையைப் பெற்றெடுத்து, கண்கள் சிவந்து பிறந்த குழந்தையைப் பார்த்து, "என் மகன் கோச் செங்கண்ணானோ?" என்று கூறிப் பூரித்து மகிழ்ந்தாள்; மரிக்கவும் செய்தாள். இந்தத் தாய் இல்லை என்றால் சைவர்களாகிய நமக்காக, எண் தோள் ஈசற்கு எழுபது மாடக் கோயில்கள் கட்டிய ஓர் ஆண்மகன் கிடைத்திருப்பானோ?

பகவதியார் தம்கணவர் சிவபாத இருதயரோடு இணைந்து பரசமயம் நிராகரித்து, நீறாக்கும் புனைமணிப் பூண் காதலனைப் பெறப் போற்றும் தவம்புரியவில்லை யென்றால், 'திருஞானசம்பந்தப் பெருமான்' என்னும் ஒப்பிலா ஞான குரு நமக்குக் கிடைத்திருப்பாரா?

மங்கையர்க்கரசியார் என்னும் மாதின் நல்லார் சமண இருளிலும் சைவ ஒளி குன்றா வண்ணம் பாதுகாத்து வழிநடத்த வில்லையென்றால், கணவன் கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனாய் நிமிர்ந்திருப்பானா? நன்றி இல் நெறியில் அழுந்திய பாண்டிய நாடும் நலம்தான் பெற்றிருக்குமா?

'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று ஆணையிட்டு, அன்புறுபுணர்ச்சி இன்மை அயல் அறியாது வாழ்ந்த மனைவியாரால் அல்லவா, அவர் கணவர் திருநீலகண்டக் குயவர் திருநீலகண்ட நாயனார் ஆனார்!

திலகவதியார் என்னும் அக்காள் தம்பியார் உளராக வேண்டும் என்னும் தயா வைக்கவில்லையென்றால் - நாற்பதாண்டுக் காலம் இடைவிடாத் தவம் இயற்றவில்லையென்றால், நமக்கு அப்பர் பெருமான் கிடைத்திருப்பாரா? அதாவது, மருள்நீக்கியார் (தருமசேனர்) திருநாவுக்கரசு நாயனாராக ஆகியிருப்பாரா?

திருமண நாளில் அடியவராய் வந்த இறைவன், 'இவள் தன் தலைமுடி நமக்குப் பஞ்சவடியாம்' என்று சொல்ல, திருமணக் கோலத்து மகள் இசையவில்லை யென்றால் தந்தை மானக்கஞ்சாறரால் கூந்தலை அரிந்து கொடுத்திருக்க முடியுமா?

இப்படிச் சைவ சமயப் பெண்கள் தாயாகவும், மனைவியாகவும், சகோதரியாகவும், மகளாகவும் இருந்து முறையே மகனும், கணவனும், சகோதரனும், தந்தையும் ஆன ஆண்களை நல்ல ஆண்மக்களாக - பெருமைக்குரிய ஆண்மக்களாக ஆக்கியிருக்கிறார்கள். அப்பெண்களும் தம் வாழ்வில் பெருமையுற்றிருக்கிறார்கள்.

இச்செய்தி, இன்றைய பெண் இன முன்னேற்றத்திற்கு ஓர் உறுதியான வழியைக் காட்டுகிறது. ஆம்; பெண்கள் தம்மோடு உறவில் அமைகிற தந்தையும், கணவனும், சகோதரனும், மகனும் ஆன ஆண்களை நல்ல ஆண்மக்களாக ஆக்குவது ஒன்றுதான், பெண்கள் முன்னேற, அமைதியாய், அச்சமின்றி இன்பமாய் வாழ்ந்திட ஒரே வழி!

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!

என்று ஔவையாரும் அன்றே இதை உணர்ந்து உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார்.

# 19. பெரிய புராணம் - ஒரு சமூகப் பார்வை

- பேராசிரியர், முனைவர் இரா. செல்வக்கணபதி,
*சென்னை.*

**தோற்றுவாய்**

தமிழ் இலக்கிய வரலாற்றில், சேக்கிழார் அருளிய பெரிய புராணத்திற்குத் தனியான ஒரு சிறப்பு உண்டு. சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளுள், அது ஒன்றாக இருந்தாலும், அதில் சமயக் கூறுகளை விடச் சமுதாயக் கூறுகள் மிகுதி.

**இருவகை இலக்கியங்கள்**

தமிழ் இலக்கியங்களை, அவற்றின் உள்ளீடு கருதி, இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று, தமிழ் இலக்கியங்கள்; இரண்டு, தமிழில் எழுதப்பெற்ற இலக்கியங்கள். கற்பனையாயினும், வரலாறாயினும், காப்பியக்கரு, தமிழ் மண்ணில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால், அதனைத் தமிழ் இலக்கியம் என்று கூறல் பொருந்தும். கதைக்கரு, பிற மண்ணில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால், அதனைத் தமிழில் எழுதப்பெற்ற இலக்கியம் எனலாம். சிலப்பதிகாரமும் பெரியபுராணமும், நூற்றுக்கு நூறு தமிழ் இலக்கியங்கள். பெருங்கதை, சிந்தாமணி, இராமாயணம், பாரதம், தேம்பாவணி, சீறாப்புராணம், இரட்சணிய யாத்திரிகம் முதலியவை தமிழில் எழுதப்பெற்ற இலக்கியங்கள்.

**பாடுபொருள் - ஓர் ஆய்வு**

பெரியபுராணம், தமிழ் மண்ணில் வாழ்ந்த, மானுடர்களின் வாழ்க்கையின்மேல் பின்னப்பட்டிருப்பதால், இதனைச் சமய நோக்கில் ஆராய்வதோடு, சமூக நோக்கிலும் ஆராய்வது பெரிதும் பொருத்தமுடையதாகும்.

சங்க காலத்தில், மனிதனைப் பாடு பொருளாகக் கொண்ட இலக்கியங்கள், பெருவாரியாகத் தோன்றின. ஒன்றிரண்டைத் தவிர, பிறவற்றுள் கடவுளர் உவமையாகவே வந்து சென்றனர். சிலப்பதிகாரத்திலும் இம்முறை தொடர்ந்தது. இருண்ட காலத்திற்குப் பின், கி.பி. 7ஆம் நூற்றாண்டை அடுத்துத் தமிழ்க் கவிதையின் பாடுபொருளாகக் கடவுளர் முன் நிறுத்தப்பட்டனர். அதன்பின், ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கி.பி. 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பெரியபுராணத்தில் மீண்டும் மானுடம் பாடுபொருளாக உருக்கொண்டது.

பெரியபுராணத்தில், கடவுளர்களோடு மனிதர்களும் உறவாடி வருதலைக் காண்கிறோம். என்றாலும், இதில் மானுடத்திற்கே முதன்மை தரப்பட்டது என்பதை, இனங்கண்டு காட்டப்பட வேண்டுவது சமயவாதிகளின் கடமையாகும். இறைவன் இடையிடையே வந்தாலும் செயற்கரிய செயல் செய்த மானுடர்களின் முயற்சிக்கு, வாழ்த்துக் கூறவே இறைவன் வந்ததாகச் சேக்கிழார் இனம் காட்டுகிறார்.

**இரு பெரும் புராணங்கள்**

தமிழில் இறைவனும், உயிர்களும் கைகோத்து நடமாடிய இலக்கியங்கள் இரண்டு. ஒன்று பெரியபுராணம்; மற்றொன்று, திருவிளையாடல் புராணம். முன்னது, மானுடரின் செயற்கரிய செயல்கள், விண்ணில் இருந்த இறைவனை மண்ணுக்கு ஈர்த்து வந்த வரலாறு. பின்னது, சிற்றுயிர்பால் கொண்ட கருணையால், இறைவன் தானே விண்ணில் இருந்து மண்ணுக்கு இறங்கி வந்து கருணை பாலித்த வரலாறு. இவ்வகையில், சமயத் துறையில் நின்று, மனித எத்தனத்திற்கு எல்லை காட்டிய, அறுபத்து மூன்று மானுடர்களின் மன உறுதியைப் பெரியபுராணம் பேசி நிறைகிறது.

**அற்புதங்கள்...ஏன்? எதற்காக?**

எந்தச் சமயமாயினும், இறைக்கோட்பாட்டை ஏற்று நிற்குமானால், அந்தச் சமய நூல்களுள், அற்புத நிகழ்வுகள் என்பன தவிர்க்க இயலாதன. சமயவாதிகள், தம் நூல்களுள், ஆங்காங்கே பதிவு செய்யும் அற்புதங்கள், எளிய மக்களைச் சமயத்துறையின் பால் ஈர்ப்பதற்குரிய ஒரு உத்தியாகவே கையாளப்பட்டுள்ளன. உன்னதமான நூல்களில், இத்தகு அற்புதங்கள் உண்மையா? பொய்யா? நடக்குமா? நடக்காதா? என்று ஆராய்ச்சியில் காலம் கழிப்பதை விடுத்து, அவற்றின் சமூகப் பயன்பாட்டைத் தேடி வெளிப்படுத்துவதையே, அறிஞர்கள் தம் கடமையாகக் கருத வேண்டும்.

**ஓர் எடுத்துக்காட்டு**

சேக்கிழாரின் பெரிய புராணத்தில், இத்தகு தேடல்களுக்கு ஏராளமான களங்கள் அமைந்துள்ளன. அரவு தீண்டி இறந்த தன் தாய் மாமனை நினைத்து அழுத ஒரு பெண்ணின் கண்ணீரை மாற்றி, இறைவன் துணையோடு, திருமருகலில், திருஞானசம்பந்தர், இறந்த மாமனை மீண்டும் உயிர்ப்பித்துத் தருகிறார் என்கிறது பெரிய புராணம்.

இங்கே, இறந்தவன், பதிகம் பாடினால் பிழைப்பானா என்ற ஆராய்ச்சியை விடுத்து, ஏதேனும் சமூகக் கூறுகள் இக்களத்தில் உள்ளனவா என்று தேடுதல் பயனுடையதாகும் என்ற நோக்கில் சேக்கிழார், இங்கே ஒரு சிற குறிப்புத் தருகிறார். காதலன் பிரிவால் கண்ணீர் விட்டு அழுத பெண், தன் அழுகைக்கு இடையே, "எங்கிருந்தோ வந்த பாம்பு, மாமனோ! உன்னைத் தீண்டும் உரிமை பெற்றிருந்தது. ஆயினும், ஊரறிய உனக்கும் எனக்கும், மணம் நிகழாத காரணத்தால், இறந்து கிடக்கும் உன் மேனியைத் தீண்டி அழும் பேறு, எனக்கு இல்லையே" என்று பேசுவதைக் காண்கிறோம்.

சேக்கிழார், இங்கே கூற வரும் சமூகச் செய்தி பெரியது. செத்தவன் உயிர் பிழைத்தான் என்பதைவிடச் சமூகம் போற்றும் உயர் ஒழுக்கங்களைப் பின்பற்றி நிற்பார்க்கு, இறைவன் திருவருள் உண்டு என்பதை இக்களம் உறுதி செய்து நிற்கிறது. சமயம், சமூக ஒழுங்குக்கு என்றும் அரணாக நிற்கவல்லது என்ற சமூகத் தேடல் இங்கே ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

**சாதியத்திற்கு எதிராக...!**

இன்று சாதி ஒழிப்பிற்குக் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டும் என்று பரவலாகப் பேசக் காண்கிறோம். இதன் முதல் அடையாளங்கள், பெரிய புராணத்தில் பொதிந்து வைத்துள்ளதைக் காணலாம்.

சிவாலயங்களில், பெருமானின் திருமேனியைத் தீண்டிப் பூசிக்கும் சிவாச்சாரியர் மரபினர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூரில், தந்தை பெயர் இன்னது என்று தெரியாத, கணிகையர் குலத்தில் வந்தவர் பரவையார். இவ்விருவரும், திருக்கோயில் வளாகத்தில் சந்தித்துக் காதல் கொள்ள, ஆரூர்ப் பெருமானே, அவர்களை முன்னின்று கூட்டுவிக்கிறான் என்கிறது பெரிய புராணம். இது, கலப்புத் திருமணத்தின் முதல் அடையாளம் அல்லவா?

சீர்காழியில், சுமார்த்த பிராமணக் குடும்பத்தில் பிறந்த திருஞானசம்பந்தருக்கு, மயிலாப்பூரில், வணிகர் குலத்தில் வந்த சிவநேசர், தம் மகள், பூம்பாவையை மணம் முடிக்க விரும்பினார் என்ற பெரிய புராணக் கூற்று, அக்காலச் சமூக அமைப்பில், சாதியம் திருமணத்திற்கு ஒரு தடையாக இருந்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

**முதல் ஆலயப் பிரவேசம்**

காந்தியடிகள் காலத்தில், தமிழகத்தில் ஆதி திராவிடப் பெருமக்களைத் திருக்கோயில்களுக்குள் அனுமதிக்கலாம் என்ற நிலையை நீண்ட போராட்டத்திற்குப் பிறகு உருப்பெற்றதை நாடு அறியும்.

இந்த நிகழ்வுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த இசைவாணர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பாரை, பிராமணராகிய திருஞானசம்பந்தர், தாம் செல்லும் திருக்கோயில்களுக்கெல்லாம், கருவறைவரை அழைத்துச் சென்று, தம் பாடல்களுக்கு யாழ் மீட்டச் செய்தார் என்ற செய்தியை, நாம் முறையாகச் சமூக ரீதியாக வெளிப்படுத்தியிருந்தால், இந்த மண்ணில், காந்தியடிகள் காலத்தில், ஓர் ஆலயப் பிரவேசத்திற்கு அவசியம் நேர்ந்திருக்காது.

சேக்கிழார், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த கணவனையும் மனைவியையும், ஓர் அந்தணர், தம் இல்லத்தில் ஆகுதி செய்யும் இடத்தில், இரவு நேரத்தில் தங்க வைத்தார் என்றும், அதனால், மறுநாள், வேள்வித் தீ முன்னிலும் சிறப்பாக வலம் சுற்றி எழுந்தது என்றும் பதிவு செய்து காட்டுகிறார்.

பெரியபுராணம் தந்த ஏற்றத்தால், ஆதி திராவிடக் குடியைச் சேர்ந்த பலரது திருமேனிகள் திருக்கோயில் வளாகத்துள் அறுபத்து மூவராக நின்ற பெருமிதம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

**பெண்மைக்குப் பெருமை**

இன்று, பெண் விடுதலை பற்றிச் சமூகத்தில் பெரிதாகப் பேசப்படுகிறது. சேக்கிழார், தம் காப்பியத்துள் எந்தவொரு பெண்ணையும், "அவள்" என்று குறிப்பிடாது, "அவர்" என்று பன்மை விகுதி கொடுத்துச் சிறப்பித்திருப்பதை நாம் காணலாம்.

ஒரு பெண்ணுக்கு, வாழ்வின் தொடக்கத்திலிலேயே பிரச்சினை தோன்றினால், அவள் சமூகத்தில் தனித்து எங்ஙனம், தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை, திலகவதியார் வரலாற்றிலும், இல்லறத்தின் இடையில், கணவனால் பிரச்சினை வருமானால், வாழ்க்கைப் போக்கை மாற்றி அமைத்துக் கொண்டு, பெண் எப்படிச் சமூகப் பெருமிதத்தைப் பெற முடியும் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றிலும், கணவனே பிரச்சினையானால், அவனையும் சரிப்படுத்தித் தன் வழியில் நடை பழகவைத்து, வாழ்வை வளமாக்கிக் கொள்ளும் பெண்மையின் சாதுர்யத்திற்கு, மங்கையர்க்கரசியார் வரலாற்றையும், நாம் ஏன் முன்னோடியாகக் கொள்ளல் கூடாது?

**சத்தியாக்கிரக முன்னோடி**

இந்திய விடுதலை வரலாற்றில், தனி மனித சத்தியாக்கிரகத்தையும், பகைவர்களைப் பணிவிக்கத் தன்னை வருத்திக் கொள்ளும் உண்ணா நோன்பையும், போராட்டக் கருவிகளாகக் காந்தியடிகள் முன்நிறுத்தினார் என்பது, நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால், 1300 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டில், ஒரு சமயவாதி, மன்னர் அழைத்த போது, "நாம் யார்க்கும் குடியல்லோம்" என்று கூறி, ஆட்சியாளர்க்கு எதிராகக் குரல் கொடுத்த பெருமிதத்தையும், அதில் இழையோடும் தனிமனிதச் சத்தியாக்கிரகத்தையும், நாம் நினைவூட்டிக் கொள்ளவேண்டும்.

சமணர்கள், எச்சில் இலைகளாலும், குப்பைக் கூளங்களாலும் பழையாறையில் இருந்த சிவாலயத்தை மூடிவிட்ட நேரத்தில், உண்ணாநோன்பு மேற்கொண்டு, அரசன் உதவியோடு அவற்றை அகற்றி, இறைவனைத் தரிசித்த அப்பர் அடிகள் மன உறுதியை, நம்மில் யாரும் காந்தியடிகளிடம் வியந்து கூறி மகிழ்ந்ததாகத் தெரியவில்லை.

**தனிமனித ஒழுக்கம்:**

இன்று, தனி மனித ஒழுக்கம் என்பது, கேள்விக்குரியதாக மாறிவிட்டிருக்கிற அவலத்தைப் பார்க்கிறோம். உலகின் மிகப்பெரிய தலைமையை அலங்கரிப்பவர்கள், ஒழுக்கச் சிதைவில் சிக்கித் திணறுவதைச் செய்தித் தாள்கள் பறைசாற்றுகின்றன.

ஒரு ஆணும், பெண்ணும் கூடி நடத்தும் இல்லற வாழ்வில், அவர்கள் இல்லத்தில், பெண் தனித்திருக்கும்போது, அன்னிய ஆடவன், அந்த இல்லத்திற்குள் புகுவது கூடாது என்று, தமிழர் பண்பாட்டைச் சேக்கிழார் பதிவு செய்து காட்டுகிறார்.

சமயவாதிகள்- துறவிகள், ஒழுக்கம் தவறி, அவமதிப்பிற்கு உள்ளாகும் காலம் இது. இறந்த மகளை, இறைவன் திருவருளால் உயிர்ப்பித்துத் தந்த திருஞானசம்பந்தரிடம், என் மகளைத் தாங்கள் மணந்துகொள்ள வேண்டும் என்று தந்தை சிவநேசர் கூறியபோது, 16 வயது திருஞானசம்பந்தர், இப்பெண்ணுக்கு, இறைவன் திருவருளால், மீண்டும் உயிர் தந்த நான், இவருக்குத் தந்தை ஆக முடியுமே தவிர, கணவனாதல் எங்ஙனம் கூடும் என்று கேட்ட சமயத் தலைவர்களின் பண்பாட்டை நாம் உலகுக்குக் பறைசாற்ற வேண்டும்.

திருநாட்டியத்தான்குடியில், தன் மகள் இருவரையும் மணந்து கொள்ளுங்கள் என்று, தந்தை கோட்புலி வழங்க முன்வந்தபோது அவர்கள் இருவரையும் தன் அருகழைத்து, அமரச் செய்து, 'இவர்கள் இருவரும் என் பெண்கள்' என்று கூறித் தம்மைச் 'சிங்கடியப்பன்' 'வனப்பகையப்பன்' என்று பேசி மகிழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளை, நாம் சமயத் தலைவர்களுக்கு ஒழுக்கம் கற்பிக்க முன்னோடியாக நிறுத்த வேண்டும்.

**நிறைவாக...!**

இப்படி சேக்கிழாரின் பெரிய புராணத்தில் இருந்து, சமூகம் கற்க வேண்டிய பாடப் பகுதிகள் ஏராளம் எஞ்சியிருப்பதை நம்மால் காணமுடிகிறது.

எந்தவொரு இலக்கியத்தையும், நிகழ்கால வாழ்வோடு இணைத்து, இன்றைய சமூகத்திற்கு அது தரும் பாடங்களும், படிப்பினைகளும், இவை, இவையென்று இனம் கண்டு காட்டல், சமயம் சார்ந்த தமிழ் அறிஞர்களின் மாபெரும் கடமையாகும்.

## 20. பெரிய புராணத்தில் பண்பாட்டுச் சிறப்பு

– முனைவர் ஹேமா சந்தானராமன், பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,
*சென்னை.*

**விருந்தோம்பல்**

நமக்குச் சாதகமான இடங்களில் சில குறள் கருத்துக்களை எடுத்தாளுவோம். நாம் பொய்யுரைக்க வேண்டிய சூழ்நிலையில், "பொய்மையும் வாய்மை இடத்த" என வள்ளுவர் கூறியதை மேற்கோளாகக் காட்டுவோம். அவ்வாறே விருந்தோம்பலில், "அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்" என்ற குறளை நமக்குச் சாதகமாக எடுத்துக் கூறுவோம்.

"வாருங்கள்! வாருங்கள்! எங்கே இவ்வளவு தூரம்? போன முறை வந்தபோதும் இரண்டு வேளைதான் தங்கிச் சென்றீர்கள். இப்போதாவது.. .." என்று விருந்தினரை உபசரிப்பார்.

"சென்ற முறை உடனே புறப்படவேண்டிய அவசரம்; அப்படியும் இரண்டு வேளை சிறப்பாக விருந்து அளித்துத்தான் அனுப்பினீர்கள்; உங்கள் துணைவியாரும் விழுந்து விழுந்து கவனித்தார்கள்" என்று வந்தவர் புகழுவார்.

"நாங்கள் என்ன பெரிதாகச் செய்துவிட்டோம்? உங்கள் பெருந்தன்மை யாருக்கு வரும்? சென்ற முறை குழந்தையின் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களைத் திணித்து விட்டீர்கள்! அதனை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. குழந்தை இருநூறு ரூபாய் மாமா எப்போது வருவார்? என்று கேட்டுக்கொண்டிருக்கிறான்". இப்படி, தற்காலப் பொருளாதாரக் கண்ணோட்டத்தைக் குறிப்பாகக் கூறுவார் இல்லத்தரசி!

விருந்தினரும் விருந்தோம்பும் இல்லத்தினரும் போலியாக, ஒருவரையொருவர் புகழ்ந்து, உபசரித்துக் கொள்ளும் இந்த மனோபாவத்தை, "திருப்பூந்துருத்தி உபச்சாரம்" என்று தஞ்சை மாவட்டத்தில் குறிப்பிடுவார்கள்.

திருப்பூந்துருத்தி உபச்சாரம் என்ற வழக்கின் பின்னணி வரலாறு பெரிய புராணத்தில் பொதிந்துள்ளது. எப்படி?

அப்பர் பெருமான் திருவையாற்றை அடுத்த திருப்பூந்துருத்தி என்ற திருத்தலத்தில் தங்கி உழவாரம் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டிருந்தார். திருஞானசம்பந்தர் அவரைக் காணத் திருப்பூந்துருத்திக்கு வந்துகொண்டிருந்தார்.

திருப்பூந்துருத்தி ஊரெல்லையில் அடியவர் கூட்டம் சம்பந்தரை வரவேற்கக் கூடியிருந்தது. கூட்டத்தில் அப்பரைத் தேடினார் சம்பந்தர். அவரைக் காணவில்லை!

*திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத் திக்கு*
*அருகாக எழுந்தருளி "எங்குற்றார் அப்பர்?" என*
*உருகா நின்று "உம்அடியேன் உம்மடிகள் தாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப் பெற்ற இங்குற்றேன்" என்றார்.*

திருஞானசம்பந்தர் ஏறி வந்த சிவிகையை அடியவர்களுடன் அப்பர் பெருமானும் சுமந்து வந்துகொண்டிருந்தார். "அப்பர் எங்கே?" என்று சம்பந்தர் கேட்டார். "தங்களைச் சுமந்து வரும் பெருவாழ்வு கிடைக்கப்பெற்றேன்!" என்று கீழிருந்து, பணிவாகக் குரல் கொடுத்தார் அப்பர்.

அதனைக் கேட்ட சம்பந்தர் துணுக்குற்றார்! "எண்பது வயதான முதியவர் அப்பரா எம்மைச் சுமப்பது? அதுவும் ஈசனின் அருட்டொண்டர்? அபச்சாரம் அல்லவா?" என்று விரைவாகக் கீழே இறங்கினார். திருநாவுக்கரசரைப் பணிவுடன் வணங்கினார். அவரை முந்திக் கொண்டு அப்பர் வணங்கினார். அடியவர் கூட்டம் இறைவன் திருநாமங்களைக் கூறி ஆர்ப்பரித்தது! இதனைச் சேக்கிழார்,

*"பிள்ளையார் அதுகேளாப் பெருவிரைவுடன் இழிந்தே*
*உள்ளமிகப் பதைப்பெய்தி உடைய அரசினை வணங்க*
*வள்ளலார் வாகீசர் அவர் வணங்காமுன் வணங்க*
*துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாம் தொழுது ஆர்த்தார்."*

இவ்விரு சைவச் சான்றோர்களின் பண்பாட்டு முதிர்ச்சி இதனால் புலப்படுகிறது. இருவரிடத்தும் பணிவே மேலிட்டு நின்றது. ஆணவம் சிறிதும் இல்லை. ஒருவர் பெருமையை மற்றவர் மதித்துப் போற்றினார். போட்டி, பொறாமை அற்ற சமத்துவ நெறியே சமய ஒழுக்கத்தின் அடித்தளம் என்பதை இந்த நிகழ்ச்சி உணர்த்துகிறது.

திருநீலநக்க நாயனாரின் இல்லத்தில், சம்பந்தர் அடியார்களுடன் ஓரிரவு தங்க நேர்ந்தது. திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியாரும் தம்பதியராக வந்திருந்தனர். இங்கிதம் என்ற பண்பாடு அறிந்த சம்பந்தர் தம்பதியர் தங்குவதற்கு ஏற்ற இடமொன்றை அளிக்குமாறு திருநீலநக்கரிடம் வேண்டினார்.

**சாதிவேறுபாடற்ற சமுதாயம்**

திருநீலநக்கர் தமது இல்லத்தில் வேதிகை (ஹோமகுண்டம்) இருந்த இடத்துக்கு அருகே யாழ்ப்பாணர் தம்பதியருக்குத் தக்க இடமளித்தார். சாதி வேறுபாடு கருதாத திருநீலநக்கரின் சிறப்பைப் போற்றும் வகையில், அவர் நாளும் அழலோம்பும் அவ்வேதிகை வலஞ்சுழித்து எரிந்தது என்கிறார் சேக்கிழார். தெய்வீக நிகழ்வுகளின்போது வேதிகைத்தீ வலஞ்சுழித்து எரியும் என்பர்.

**முதியவர்களுக்கு மரியாதை**

சுந்தரர் சித்தவட மடத்தில் படுத்துக்கொண்டிருந்தபொழுது இறைவன் அவருக்குத் திருவடி தீட்சை கொடுத்தருள அங்கு வந்தான். முதியவர் வடிவில் வந்த சிவபெருமான் தன் திருவடி, சுந்தரரின் தலையில் படும் வகையில் காலை நீட்டிப் படுத்தான். தமது தலையில் உதைப்பது யாரென வினவினார் சுந்தரர். முதியவர் (ஈசன்) தனது மூப்பினால் திசையறியாமல் போய்விட்டது என்றார். அதனைக் கேட்ட சுந்தரர் முதியவரைக் கோபிக்காமல், தம் தலையை வேறு பக்கத்தில் வைத்துப் படுத்தார். முதியவர்களுக்கு உரிய மரியாதை அளிப்பது தமிழரின் பண்பாடு. இன்றும் தமிழகப் பேருந்துகளில் முதியவர்களுக்கெனத் தனி இருக்கைகள் ஒதுக்கியுள்ளனர் அல்லவா? அப்பண்பாட்டைத் தவறாது பின்பற்றிய சுந்தரரைச் சேக்கிழார், "தமிழ்நாதன்" என்ற சிறப்புடன் போற்றுகிறார்.

**பகைவனுக்கும் அருளும் பண்பு**

"பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே!" என்று பாரதியார் பாடினார். தன்னைப் பகைவனாகக் கருதி இறுதி செய்தவனுக்கும் பாதுகாப்பு அளித்து, மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார் மெய்ப்பொருள் நாயனார். பகைவனை மன்னிக்கும் பண்பாட்டுச் சிறப்பை விரிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார் சேக்கிழார்.

சமயச் சான்றோர்கள் தன்னலம் கருதாத, பொன்னையும், பொருளையும், போகத்தையும் விரும்பாத நன்னெறியில் வாழ்ந்து வழிகாட்ட வேண்டும். வழிகாட்டுவோர் பண்பட்டவர்களாக இருந்தால்தானே சமுதாயத்துக்குத் தக்க வழிகாட்டமுடியும்? ஆகவே, சேக்கிழார், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் அச்சான்றோர்களை நினைவுபடுத்துகிறார்.

**தமிழர்களின் நன்றியுணர்வு**

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தன்னைத் தமிழ் விரகர் என்றும் தமிழ் ஞானசம்பந்தன் என்றும் தலைநிமிர்ந்து, பதிகந்தோறும் பெருமைபடக் கூறிக்கொண்டார் சம்பந்தர். சைவம், தமிழ், தமிழிசை, சமூகச் சீர்திருத்தம் என்ற பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட திருஞானசம்பந்தரைச் சேக்கிழார் பெரிதும் போற்றுகிறார்.

தமது பெரியபுராணத்தில் ஆயிரத்து இருநூற்று ஐம்பது பாடல்களைச் சம்பந்தருக்கு ஒதுக்கிப் பாடி, தமிழர்களின் நன்றியுணர்வை வெளிக்காட்டியுள்ளார் சேக்கிழார் என்று அமரர் திரு அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அடியவர்களின் புனித வரலாறுகளை உரைக்கும் நூல் பெரியபுராணம். எனினும், அதனுள் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பை ஆங்காங்கே பதிவுசெய்துள்ளார் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான்.

## 21. நாயன்மார் நாடகங்கள்

- முனைவர் இரா. குமரவேலன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
*தமிழ்ப்பேராசிரியர் (ஓய்வு), சென்னை.*

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் சைவநெறியைப் பரப்பித் தொண்டாற்றிய சிவனடியார்களாகிய நாயன்மார்கள் மக்கள் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தவர்கள் ஆவர். பல நூற்றாண்டுகளாக அவர்களின் பணி கதாகாலட்சேபமாகவும், தெருக்கூத்தாகவும், நாடகமாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. இறைமையுணர்வும், இன்ப நுகர்வும் அடிப்படையாக அமையும் இத்தகைய நாடகங்கள் வாயிலாக மக்கள் மனநலம் பெற்றனர்.

நாயன்மார்களுள் மாணிக்கவாசகர், சிறுத்தொண்டர், திருநாளைப்போவார், திருநாவுக்கரசர் ஆகியோர் வரலாறுகள் பாமர மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்வனவாக அமைந்தன. ஒழுக்கம், இறைமை உணர்வு, தொண்டு நெறி, மக்கள் நலன் ஆகியனவற்றின் அடிப்படையில் நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. ஒவ்வொரு நூற்றாண்டிலும் இவர்களுடைய கதைகள் மக்களுக்கு எழுச்சியையும் நல்லுணர்வையும் ஊட்டுவனவாக விளங்கின எனின் அது மிகையாகாது.

**முதல் நாடகம்**

நாயன்மார்கள் பற்றிய நாடகங்களுள் நமக்கு முதலாவதாகக் கிடைக்கும் குறிப்பு திருமூலர் பற்றியதே ஆகும். தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள முதலாம் இராசராசனின் ஒன்பதாமாண்டு ஆட்சியின்போது பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கருவறையின் மேற்புறச் சுவரில் காட்சியளிக்கிறது. அது, புரட்டாசி மாதம் ஏழு நாள் நடைபெறும் திருவிழாவின்போது, புரட்டாசி பூரட்டாதியில் "திருமூல நாயனார் நாடகம்" கோயில் வளாகத்தில் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது (தென் இந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 4, பகுதி 5). இதுவே நாமறிந்தவரையில் முதன்முதலாக நடிக்கப்பெற்ற நாயன்மார் நாடகம் எனலாம்.

**கீர்த்தனை நாடகங்கள்**

பதினேழாம் நூற்றாண்டுத் தொடங்கிப் பல கீர்த்தனை நூல்கள் இயற்றப்பெற்றன. இவை பெரும்பாலும் கதை சொல்வதற்காகப் பயன்பட்டன எனினும் பல தெருக்கூத்துகளிலும் பிறவகை நாடகங்களிலும் இடம்பெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, கோபாலகிருட்டின பாரதியாரின் "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை" ஆகும். இதன் பாடல்கள் இடம்பெறாத "நந்தன் நாடகம்" எதுவுமில்லை என்றே கூறலாம். அந்த அளவிற்கு மக்களின் எண்ணத்தைக் கவர்ந்தது இந்நூல். இதனை யொட்டி நாயன்மார்கள் வரலாற்றைக் கூறும் பல கீர்த்தனை நூல்கள் தோன்றின. அறுபத்து மூன்று தனியடியார்களைப்பற்றியும் ஒன்பது தொகையடியார்களைப்பற்றியும் கீர்த்தனை வடிவில் எழுபத்திரண்டு பிரிவுகளாக இயற்றப்பட்ட ஒரு நூல் "பெரிய புராணக் கீர்த்தனை" என்பது. இதனைச் சிதம்பர பாரதி, சின்னசாமி பாரதி, சுந்தரமய்யர், சுப்பராமய்யர், இராமசாமி ஐயங்கார் முதலானோர் இயற்றியுள்ளனர்.

கருணைப்பிரகாச சுவாமிகளின் "மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை" (1903), தியாகராச தேசிகரின் "பெற்றான் சாம்பனார் சரித்திரக் கீர்த்தனை" (1915), ச. சரவணப் பிள்ளையின் "கண்ணப்ப சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை" (1891) ஆகியன இவ்வரிசையில் குறிக்கத் தக்கன. பி.ஆவுடையப்ப செட்டியாரின் "சேந்தனார் சரித்திரக் கீர்த்தனை", பிறிதொருவர் இயற்றிய, "அமர்நீதி நாயனார் சரித்திரக் கீர்த்தனை" முதலியனவும் ஈண்டு நினைக்கத்தக்கன.

கோபாலகிருட்டின பாரதியார் "இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை", "திருநீலகண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை", "காரைக்காலம்மையார் சரித்திரக் கீர்த்தனை" ஆகியனவும் ஈண்டுக் கருதத்தக்கன. அனைத்துக் கீர்த்தனை நாடகப் பாடல்களும் முன்னைய சேக்கிழார் கூறியவாறே கதையைக் கொண்டு இலங்குவன. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மட்டுமே பெரிதும் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது. விருடப துவச தீட்சிதர் என்பவர் பாரதியார், அண்ணுவையர் என்பாருடன் இருந்தபோது கூறிய நந்தன் கதையின் அடிப்படையில் தம் காலச் சூழலுக்கேற்பப் பாரதியார் கீர்த்தனையை இயற்றினார் என்பர். பிற கீர்த்தனைப் பாடல்கள் எந்த அளவிற்கு

நாடகங்களில் பயன்படுத்தப்பெற்றன என்பதை அறியக்கூடவில்லை.

**மாணிக்கவாசகர்**

நாயன்மார்களுள் வைத்து எண்ணப்படாதவர் ஆயினும் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் வரலாறு மிகப் பழங்காலந்தொட்டே மக்கள் கருத்தை ஈர்த்தது என்றால் அது மிகையன்று. அதனால் அவர் வரலாறு தமிழில் ஏறத்தாழப் பத்து நாடகங்களுக்குக் கதைக்கருவாக அமைந்தது. திருவாதவூரர் புராணம் முதலானவற்றின் அடிப்படையில் இவை இயற்றப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் நாடகங்களுள் குறிப்பிடத்தக்கவை: குப்புசாமி கிராமணியார் (1876), ஒத்தகடை சுந்தரபாண்டியன், வடுவூர் துரைசாமி ஐயங்கார் (1919), கருமுத்து தி. மாணிக்கவாசகம் (1968), சுத்தானந்த பாரதியார் (மாணிக்க ஜோதி), நாரண. துரைக்கண்ணன், இரா. கணபதி, வே. கணேசன் முதலானோர் படைத்துள்ள நாடகங்களாகும். இறுதியிலுள்ள இரண்டும் ஓரங்க நாடகங்கள்.

பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் 1966-ல் "வழுவிலா மணிவாசகர்" என்னும் அரிய நாடக நூலை இயற்றியுள்ளார்.

அ.மு.ப. தம் நாடகத்தில் மாணிக்கவாசகர் மீது படிந்த கறைகளை நீக்குவதே தம் நோக்கமாகக் கூறியுள்ளார். மன்னன் அரிமர்த்தன பாண்டியன் அளித்த நிதியத்தை அவர் கோயில் பணிகளுக்குச் செலவிடவில்லை என்பதையும், அரச நிதியத்தைப் பாண்டியநாட்டு அமைச்சர்கள் இருவரிடம் திருப்பியனுப்பிவிட்டார் என்பதையும், அவர்களே சூழ்ச்சி செய்து மாணிக்கவாசகரை மன்னனிடம் குற்றவாளியாகக் கைகாட்டி விட்டனர் என்பதையும் அ.மு.ப. நாடகம் வாயிலாக உணர்த்தி, மாணிக்கவாசகரை "வழுவிலாத"வராகப் படைத்துள்ளார்.

**தேவார மூவர்**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பற்றியும் தமிழில் நாடகங்கள் இயற்றப்பட்டுள்ளன.

எஸ்.கே. பார்த்தசாரதி ஐயங்கார் "திருஞானசம்பந்தர்" (1929) என்னும் தலைப்பிலும், கே. கோதண்டபாணிப் பிள்ளை "மங்கையர்க்கரசியார்" (1931) என்னும் தலைப்பிலும் நாடகங்களை இயற்றியுள்ளனர். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த திருவாரூர் கே. தங்கராசு "திருஞானசம்பந்தர்" என்னும் பெயரில் அவரைக் கண்டித்தும் கடிந்தும் தாக்கியும் ஒரு நாடக நூலை இயற்றியுள்ளார்.

திருநாவுக்கரசரைப் பற்றிப் பல நாடகங்கள் தோன்றியுள்ளன. தஞ்சை சங்கர குற்றாலம் "திருநாவுக்கரசர் நாடகம்" என்பதனை 1969ஆம் ஆண்டு இயற்றினார். சுத்தானந்த பாரதியார் "வாகீச விஜயம் அல்லது அப்பரின் அன்பு வெற்றி" என்பதையும், ஔவை சு. துரைசாமி பிள்ளை "மருணீக்கியார்" என்பதையும் தீட்டியுள்ளனர். "திலகவதியார்" என்னும் தலைப்பில் ஓர் ஓரங்க நாடகத்தை அறிஞர் மு.வ. இயற்றியுள்ளார். இதே தலைப்பில் அ. கலியபெருமாள் என்பவர் (1992) ஒரு நாடகத்தைப் படைத்துள்ளார்.

சுந்தரரைப் பற்றிச் சில நாடகங்கள் வெளிவந்துள்ளன. எஸ்.எம். வேலு முதலியார் ஸ்ரீ சுந்தரமூர்த்தி (1916) என்னும் நாடகத்தையும், தஞ்சை ஆறுமுக சேர்வை என்பவர் "சுந்தரமூர்த்தி நாடகம்" (1936) என்பதையும், அரு. இராமநாதன் "சுந்தரரின் பக்தியும் காதலும்" என்னும் நாடகத்தையும் இயற்றியுள்ளனர்.

**சிறுத்தொண்டர் முதலானோர்**

நாயன்மார்களுள் திருஞானசம்பந்தருக்கு முன்னையோர் பற்றியும், அவர் காலத்து வாழ்ந்திருந்த சான்றோர் பற்றியும் பல நாடகங்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன.

காரைக்காலம்மையார் வரலாறு குறித்த நாடகங்களை இரா. பழனிச்சாமி, ப. ஆறுமுகம் (மாம்பழத் திருவிழா, 1994) ஆகியோர் இயற்றியுள்ளனர். கலாக்ஷேத்ரா நாட்டியக் குழுவினர் அவரைப் பற்றிய நாட்டிய நாடகம் ஒன்றை மேடையேற்றி உள்ளனர்.

கண்ணப்பர் வரலாற்றை என். விசுவநாதன் நாடகமாக இயற்றினார். இரா. கணபதி என்பவர் கண்ணப்பரைப்பற்றி ஓர் ஓரங்க நாடகம் படைத்துள்ளார்.

சிறுத்தொண்டர் கதை பலருடைய உள்ளத்தைக் கவர்ந்ததாகும். "சிறுத்தொண்டர் விலாசம்" என்னும் நாடகத்தைப் பரசுராம முதலியார், சாம்பசிவம் பிள்ளை, நாராயணசாமி நாயுடு (1870) ஆகியோர் இயற்றியுள்ளனர். செங்காடு மாசிலாமணிக் கவிராயர் "சிறுத்தொண்டர்" (1913) என்னும் நாடகத்தை இயற்றினார். தவத்திரு சங்கரதாச சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும் சிறுத்தொண்டர் பற்றிய நாடகங்களை இயற்றி மேடையில் நடித்துள்ளனர். வீரலிங்க பாரதி என்பவரும் சிறுத்தொண்டர் பற்றி ஒரு நாடகத்தைப் படைத்துள்ளார்.

நந்தனார் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தவர். மதுரைக் கவிராச கந்தசாமி பிள்ளை "திருநாளைப்போவார் நாடகம்" (1924) என்னும் நாடகத்தை இயற்றினார். திருநாளைப்போவாரை முதன்முதலாக "நந்தன்" என்று பெயரிட்டு வழங்கியவர் கோபாலகிருட்டின பாரதியாரே என்பது இங்கு நினைத்தல் தகும்.

"நந்தனார்" நாடகத்தை நவாப் டி.எஸ். இராசமாணிக்கம் பிள்ளை நடத்தியபோது அண்ணல் காந்தியடிகள் கண்டு மகிழ்ச்சியடைந்ததாகக் கூறுவர். "நந்தன் கதை" என்னும் பெயரில் இந்திரா பார்த்தசாரதி புதுமையான அமைப்பில் நாடகம் படைத்துள்ளார். ஈழத்தைச் சேர்ந்த கவிஞர் இ. முருகையன் "கோபுர வாசல்" என்னும் பெயரில் மற்றுமொரு புதிய கோணத்தில் நந்தன் வரலாற்றைப் புனைந்துள்ளார். கே.பி. சுந்தராம்பாள், எம்.எம்.தண்டபாணி தேசிகர் முதலானோர் நந்தனாராக நடித்துப் பெருமையுற்றதை ஈண்டு நினைவில் கொள்ளலாம்.

**பிறர்**

திருநீலகண்ட நாயனார் (வேங்கடாசலம் பிள்ளை, 1875), சண்டேசுர நாயனார் (கே.என். கல்யாணசுந்தர முதலியார், 1927) ஆகியோர் பற்றியவை காலத்தால் முந்தியவை. புனிதவதி (அ.ச.ஞா.), ஏயர்கோன் (தா.வே.வீராசாமி), மெய்ப்பொருள் நாயனார் (அ.ச.ஞா., தா.வே.வீ., ஆ. கந்தசாமி), இளையான்குடி மாறனார் (இரா. கணபதி, ஆ. கந்தசாமி), அப்பூதி அடிகள் (என். விசுவநாதன் 1934, இரா. கணபதி, வே. சுணேசன்), பூசலார் (ஆ. கந்தசாமி) முதலானவர் குறித்தும் நாடகங்கள் பல புனையப்பட்டுள்ளன. இவற்றுள் ஓரிரண்டு தவிர, பிறவனைத்தும் ஓரங்க நாடகங்களே.

அனைத்து நாடகங்களும் பல்வேறு கோணங்களில் ஆராய்தற்கு உரியன.

# 22. வள்ளலாரின் சமுதாயப் பணி

- பேராசிரியர் டாக்டர் கே. இராமலிங்கம்,
*யுனைடட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், சென்னை - 24.*

**அன்னதானம்**

*அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி - திருக்குறள் 226*

ஏழையின் கொடிய பசியைப் போக்க வேண்டும். அதுவே பொருளைப் பெற்றவன் பிற்காலத்துக்கென சேர்த்து வைக்கும் சிறந்த வங்கியாகும்.

உலக மக்கள் வீடுபேறு பெறுவதற்கு உதவுவது அறம் ஒன்றுதான். நாம் சம்பாதிக்கும் பொருள் இந்தப் பிறவிக்கு மட்டும்தான் உதவி செய்யும். நாம் செய்யும் அறமோ இப்பிறவி, மறுபிறவி ஆகிய இரண்டிலும் நமக்கு உதவி செய்யும். அந்த அறமானது தானம், தருமம் என இருவகைப்பட்டது. தானத்தில் பூதானம், கோதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், சுவர்ணதானம் எனப் பல வகையுண்டு. இவற்றில் தலை சிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றுதான். இதற்குச் சமமானது ஏதுமில்லை என்பதை எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இது எதனால் என்பதைச் சற்று ஆராய்வோம்

*உயிரானது கிருதயுகத்தில் எலும்புகளைப்பற்றி இருந்தது*
*திரேதாயுகத்தில் மாமிசத்தைப்பற்றி இருந்தது*
*துவாபரயுகத்தில் இரத்தத்தைப்பற்றி இருந்தது*
*கலியுகத்தில் அன்னத்தைப்பற்றி இருக்கிறது.* - *ஸ்ம்ருதி முக்தாபலம்*

பசி என்னும் கொடிய நோய் வந்தால் என்ன ஆகிறது. தலை சுற்றுகிறது; காதடைக்கிறது; கண் பஞ்சடைகிறது; காலும், புத்தியும் தடுமாறுகின்றன. அப்படிப்பட்டவனுக்கு அன்னம் கொடுத்தால் அவன் உடனே சாப்பிடுகிறான்; மனம் மகிழ்கிறது; ஆன்மா சாந்தி அடைகிறது. 'மகராஜன் வாழ்க', 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே', எனத் தனக்கு உணவிட்டோரை வாயார வாழ்த்துகிறான். பசி வந்தால் மேல் ஜாதி கீழ் ஜாதி என்ற வித்தியாசமும் மறைகிறது. ஆகவே, இப்படி பலவிதத்தில் ஆராய்ந்தாலும் அன்னதானத்திற்கு ஈடானது ஏதுமில்லை!

பசியினுடைய கொடுமையை அறிந்துதான், வள்ளுவர் பெருமான் அதைப்பற்றிப் பின்வரும் குறள்களில் கூறியுள்ளார்:

1. *ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை*
   *மாற்றுவடார் ஆற்றலின் பின்.*

2. *பாத்தூண் மரீஇ யவனைப் பசி என்னும்*
   *தீப்பிணி தீண்டல் அரிது.*

பசித்தாரது பசியைப் போக்குதலே உண்மை வழிபாடாகக் கொள்க. உயிர்க்குலமே கடவுள் விளங்கும் ஆலயமாகக் கருதி உயர்கட்கு இரங்கி இதம்புரிக - என்று கூறிய வள்ளலார்,

பசியினுடைய கொடுமையை உணர்ந்துதான் 'சத்திய தரும சாலை'யை கி.பி. 1867ல் நிறுவினார்கள். அவர் ஏற்றிய தீ இன்றுவரை அணையாது, அனைவர்க்கும் பசித்தீயை அணைக்க அன்னம் பாலிக்கின்றது. இந்தப் பசித்தீயின் கொடுமையை உணர்ந்துதான், பெருந்தலைவர் காமராஜர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ஆகிய இரு பெருந்தலைவர்களும் அகில இந்தியாவிலேயே முதன்முதலாக ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு திட்டத்தைக் கொண்டுவந்து பிள்ளைகளின் பசிதீர்த்து, படிக்க வைத்துப் பெருமை கொண்டார்கள். இவ்வாறு வள்ளுவரும் வள்ளலாரும் அன்னதானத்தின் ஒப்பற்ற சிறப்பை ஒரே நெறியில் நின்று கூறுகிறார்கள்.

**கருணை**

அருட்பெருஞ்சோதி ஆண்டவர் எனக்குத் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில், "**கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெருக**" என்றதுதான். என்னை ஏறாநிலை மிசை ஏற்றி விட்டது யாதெனில் **தயவு.** தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில்; நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக

*அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி*

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். **தயவு, கருணை, அருள்** என்ப ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம்.

சிறுதெய்வங்களுக்கு பலியிடுதலை விலக்குக; புலால் உண்ணற்க. எவ்வுயிரையும் கொலை செய்யற்க. இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம, நித்திய ஜீவகாருண்ய ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க என்கின்ற அவரது திருநெறிகள், அவரது கருணையின் வெளிப்பாடு என்றறிக.

*"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்*
*வாடினேன் பசியினால் இளைத்தே*
*வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த*
*வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்*
*நீடிய பிணியால் வருந்துகின் றோர் என்*
*நேர்உறக் கண்டுளந் துடித்தேன்*
*ஈடின்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ்*
*சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்"*

கருணையை பற்றி வள்ளுவர் கூறுவது:

*அல்லல்அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்*
*மல்லல்மா ஞாலம் கரி.*

கருணை உள்ளம் கொண்டோரைத் துன்பம் ஒருபோதும் அணுகாது. காற்று நிறைந்த இந்த உலகமே அதற்குச் சான்று.

*அறஆழி அந்தணன் தாள்சேர்த்தார்க் கல்லால்*
*பிறஆழி நீந்தல் அரிது*

என்ற குறள் இறைவனை கருணைக்கடல் என்று வருணிக்கிறது. அப்படிப்பட்ட இறைவனின் அருளைப் பெற அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் ஒரு சிலர்தான் அவன் அருளைப் பெற முடிகிறது. பெரும் பகுதியினர் அவன் அருளைப் பெற இயலாமல் அல்லல் படுகின்றனர். ஏன்? கடவுள் ஒரு கண்ணில் வெண்ணெய், இன்னொன்றில் சுண்ணாம்பு என்று பாரபட்சம் காட்டமாட்டார். அவரோ கருணைக் கடல். பலரும் வந்து நீரை எடுத்துச் சென்றால் கடல் வற்றி விடுமா என்ன? கடவுளுக்கு கருணையே திருமுகங்கள். அவரது திருமுகங்களிலிருந்து கருணை, அருவியெனப் பொழிகிறது. காகங்கள் கோடி கூடி நின்றாலும், ஒரு கல்லிற்கு ஈடாகா. அதுபோல கோடி வினை கூடி நின்றாலும், இறைவனின் கருணை ஒரு துளி பட்டால், கோடி வினையும் அகன்றுவிடும். தண்ணீரில் பஞ்சை வைத்தால், பஞ்சு தண்ணீரை இழுத்துக் கொள்கிறது. கல்லைத் தண்ணீரில் வைத்தால் கல் தண்ணீரை இழுப்பதில்லை. அதுபோல கடின சித்தம் உடையவர்கள் இறைவனின் கருணையைப் பெறமுடியாது. இரக்கமுள்ள மனிதர், முனிவர் ஆகியோர் கடவுளின் கருணையைப் பெறுகின்றனர். கருணையினால்தான் கருணையைப் பெறமுடியும். வைரத்தினால்தான் வைரத்தை அறுக்கமுடியும் அல்லவா? மற்ற உயிர்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு நாம் கருணை புரியாவிட்டால், கடவுளும் நமக்குக் கருணைபுரிய மாட்டார். கருணை இல்லாதவர் செய்யும் பூசையும், ஜபமும் பயனற்றவையே.

கொல்லாமை, புலால் மறுத்தல் இவற்றை வள்ளுவர் பெருமான் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்* குறள் 260

கொல்லாமை, புலால் மறுத்தல் இரண்டும் வள்ளலாரின் இருகண்கள் போன்றவை. அந்த அடிப்படையான கொள்கைகளை அவர், திருவருட்பாவில் நிறைய இடங்களில் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

**வள்ளலாரின் சீர்திருத்த சன்மார்க்கம்**

வள்ளலார் அவர்கள் திருஞானசம்பந்தரை மானசீகக் குருவாகக் கொண்டார். மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தை தம் வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்டார். சைவ சமயத்தின் மூல சாத்திரமான திருமூலரின் திருமந்திரத்தில் அளவில்லா பற்று வைத்திருந்தார். அவர் வேதங்களை வெறுக்கவில்லை.

"வேதங்கள் முக்கியமாக சாகாக் கல்வியைச் சொல்லியிருக்கின்றன. தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ளலாம்".

இந்தத் தெளிவோடு வள்ளலார், நமது பெரியோர்கள், சமயாசாரியர்கள் வற்புறுத்திய கொள்கைகளைத் தழுவி, இக்காலத்தின் சூழ்நிலைக்கேற்பச் சில கொள்கைகளை சீர்திருத்த

முறையில் ஆராய்ந்து அறிவித்தார். பழைய மரபுகளுக்கு விளக்கம் தந்தார். தெய்வம் பல பல என்னும் அறியாமையை அகற்றப்பாடுபட்டார். சிவம் என்னும் ஒன்றையே தெய்வமெனக் கொண்டார். அவரது சிவம், நாமரூப பேதங்களால் வரும் ஆண் தெய்வமோ பெண் தெய்வமோ அன்று. பின் யாது?

"சிவம் என்பதற்குப் பொருள் சச்சிதானந்தம். சச்சிதானந்தம் என்பது எல்லாம் உளதாய், எல்லாம் விளங்குவதாய், இந்த இரண்டினாலும் நிரம்பிய இன்பம்". அடிகளாருடைய இந்த விளக்கம் எல்லா மதங்களுடைய அடிப்படைக் கொள்கைகளுக்கும் மாறுபாடில்லாதது. அதுமட்டுமல்ல. வேதங்களின் உட்கருத்து அதுவே. வள்ளலார் 'மாயை'யிலிருந்து விடுபடாத காலத்தில் கணபதி, முருகன், கலைமகள், திருமகள், திருமால் எனப் பல தெய்வங்களைப்பாடி வழிபட்டதுண்டு. அப்போதும் அவர் நெஞ்சில் இருந்தது 'சிவம்' ஒன்றுதான். ஒரே தெய்வக் கொள்கையில், இறைவனின் அருளைப்பெறும் முறையை வள்ளலார் தொகுத்து அளித்துள்ளார். அதன் பெயர்தான் "**சமரச சுத்த சன்மார்க்கம்**" என்பது. இதை ஏற்கனவே உள்ள மதங்களோடு இன்னொரு மதம் எனக்கூற இயலாது. மதங்களற்ற ஒரு மானிட சமுதாயத்தைப் படைப்பதற்கான இயக்கமென்றே கூறவேண்டும். அதனால்தான் சமரச சுத்த எனும் அடைமொழியைத் தந்து, அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

சமரச சுத்த சன்மார்க்கநெறியில் செல்வோர் அடையும் பலன்களில் தலையாயது "மரணமிலாப் பெருவாழ்வு". அவரே கூறுவது: "சன்மார்க்கத்தின் முடிவு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை, சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சன்மார்க்கி" வள்ளலார், மனிதன் சாவாமல் வாழ முடியும் என்பதில் உறுதிகொண்டிருந்தார்.

**ஓதாதுணர்ந்த ஞானியாகிய வள்ளலார்** பெருமான் சமரச சுத்த சன்மார்க்கியாவதற்கு முக்கிய சாதனம் பிரார்த்தனை - அதாவது **தியானம்** என்றார். பிரார்த்தனையில் வேண்டுவது யாது? வேண்டாதது யாது? என்பதை விளக்குகிறார்.

"**ஓம் சிவாய நம**" என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட்சக்தி, பொருட்சக்தி, கிரியா சக்தி, யோகசக்தி, ஞானசக்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக் கொண்டு இருத்தல் வேண்டும்.

"யோகம் செய்தல் வேண்டுவதில்லை. அதில் அழுந்திவிட்டால் மீளுவது கஷ்டம். சதாசிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும்; உண்மை". இறையை ஏதேனுமொரு உருவமாக மனத்தில் பாவித்து தியானிப்பது ஒருவகை வழிபாடு. "தியானம் செய்ய வேண்டுமானால் ஏதாவது ஓர் உருவத்தை தியானிக்க வேண்டும். நிஷ்களமாக இருக்கப் படாது. உருவமாக இருக்க வேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின் உருவம் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால் அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில் பார்க்கும் தான் கெடுவது அத்வைதம், பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம் சத்தியம்".

சன்மார்க்கம் என்பது சமய உலகில், வழக்கிலுள்ள சொல்லாயினும், வள்ளலார் தந்துள்ள 'சமரச சுத்த' என்ற அடைமொழியோடும் அவர்தரும் விளக்கங்களோடும் இதற்குமுன் யாரும் கூறியதில்லை. ஆம் **சன்மார்க்கம்** என்பதனை ஒரு மாபெரும் சீர்திருத்த இயக்கத்தின் **'மந்திரமொழி'யாக**, முழக்கமாக செய்தவர் நம் வள்ளலாரே ஆவர்.

**மரணமில்லாப் பெருவாழ்வு**

திருமூலர் வழிவந்த சித்தரான இராமலிங்கர், "சுத்த சன்மார்க்க இலட்சிய அனுபவ விருப்பமடையோர்க்கு நனவிலும் மண்ணாசை, கனவிலும் பெண்ணாசை, சுழுத்தியினும் பொன்னாசை மூன்றும் கூடாவாம்". முக்தி அடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாதலின், வேறு தேகத்தால் அடைவது அரிதாதலின் எவ்விதத்திலாயினும் அதனைப் பாதுகாத்தல் வேண்டும்.

மணிவாசகர், "**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்**" "**மாயப் பிறப்பறுக்கும் மன்னன்**" "**அல்லல் பிறவி அறுப்பான்**" என்றெல்லாம் சிவபெருமானைப் பாடினார்.

*பற்றற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்;*
*மற்று நிலையாமை காணப்படும் - குறள் 349.*

வள்ளலாரோ "**இறப்பறுக்கும் பெருமானாக**" இறைவனை வருணிக்கின்றார். மரணமில்லாப் பெருவாழ்வு தரும் திறன் இந்து மதத்திற்கு மட்டுமே உரியதென்கிறார். "வேதங்கள் முக்கியம் சாவாத கல்வியைச் சொல்லி இருக்கின்றன. இந்து வேதாகமங்களில் மாத்திரம்தான் ஏமசித்தி, ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கிறது. மற்ற எந்த சமயங்களிலும் மேற்படி சித்திகளையும், சாவாத கல்விளையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படி ஏதேனும் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதன் ஏக தேசங்களென்பது உண்மை". வள்ளலார் சமய மதங்களைக் கடந்த சன்மார்க்கியாயினும் இந்து மதத்திலுள்ள ஒப்பற்ற ஞானத்தை நடுநிலையோடு எடுத்துக் கூறுகிறார்.

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்.*

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

என்ற இரு குறள்களிலும் வந்துள்ள "**நீடுவாழ்வார்**" என்பதற்கு "இறவாமல் நித்திய தேகத்துடன் என்றென்றும் வாழ்வார்" என்று வள்ளலார் பொருள் கூறுகின்றார். இது வேறெந்த உரையாசிரியரும் கூறாததாகும்.

**மூன்று முழக்கங்கள்**

சாவாத வாழ்வைப்பெற மூன்று மகா மந்திரங்களைப் போதித்தார் வள்ளலார். அவை பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பனவாகும்.

**பசித்திரு** என்றால் உண்ணாவிரதமன்று. "சுகித்திருக்க உண்ணாமல், உயிர்தரிக்கப் பாதி வயிறு உண்" என்பதாகும் சதா 'சிவ' நினைப்புடன் இருந்து எங்கும் எதிலும் கடவுளைக் காணும் திறனுடையார், பசித்திருத்தல் சாத்தியமே. வள்ளலார் பிள்ளைப் பருவம் முதற்கொண்டு இப்பழக்கத்தினை கடைபிடித்து வந்தார். காந்தியடிகளும் இக்கொள்கையைக் கடைபிடித்து வந்தார். நக்கீரர் தனது திருமுருகாற்றுப்படையில், முனிவர்களைப் பற்றிக் கூறும்பொழுது, "நண்பகற் பலவுடன் கழிந்த உண்டியர்" என்றார்.

**தனித்திரு** என்பது சிவ சிந்தையுடன் தனித்திருந்தால் பேரின்பம் துய்க்கலாம் என்று பொருள் கூறினார். ஆரவாரச் சூழ்நிலையில் மனத்தில் இறையுணர்வு பிறக்காது. பிறந்தாலும்

நிலைக்காது. அதனால்தான் தனித்திருத்தல் அவசியமாகும். ஆனால் மலைக்கோ, வனத்திற்கோ ஓடித் தனித்திருத்தலை அடிகளார் ஆதரிக்கவில்லை. மக்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்கு உதவிசெய்து, அடிக்கடி இறையுணர்வை பெருக்குவதே போதுமானது, சரியானது என்று கூறினார். மாபெரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவராக இருந்தபோதும் அமைதியான கிராமத்தில் ஆசிரமம் அமைத்து, அதையே தம் இருப்பிடமாகக் கொண்டார் காந்தி அடிகள்.

விழித்திரு என்பது வள்ளலார் உபதேசித்த மூன்றாவது மந்திரம். சாவா நிலைபெற்ற சித்தர்கள் தூக்கத்தை துறந்தவர்களாய் சதா பேரின்பத்தில் ஆழ்ந்திருப்பர் என்பர் பெரியோர். அவர்கள் அறிதுயில் கொள்வதுண்டு. அதனால்தான் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம் என்றார் தாயுமானவர். காந்தியடிகளும் தினந்தோறும் மூன்றுமணி நேரத்திற்கு மேல் தூங்கியதில்லை என்பது நாடறிந்த உண்மை. பத்தினிப் பெண்டிரும் இந்நிலையில்தான் இருப்பர் என்பதை "பின் தூங்கி முன் எழூஉம் பேதை" என கற்புக்கு அரசியாம் தனது மனையாள் வாசுகி அம்மைக்கு புகழாரம் சூட்டுகின்றார் திருவள்ளுவர்.

"தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கிப் பழகினால் அவன் ஆயிரமாண்டுகள் ஜீவித்திருப்பான். எப்போதும் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்து கொண்டிருப்பதை சாகாத கல்விக்கு ஏதுவாம்" - இராமலிங்க வள்ளலார்.

## 23. திரு.வி.கவும் சைவமும்

- முனைவர் வி.கே. வனசாட்சி, எம்.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி.
*சென்னை - 86.*

*"கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு".*

என்னும் குறளுக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர் திரு.வி.க. பொது வாழ்வில் ஈடுபட்டோர் பலரின் தனிவாழ்வு குறைகள் விரவியதாகக் காணப்படும். ஆனால் தனி வாழ்க்கையிலும் மாசுமறுவற்றவர் திரு.வி.க. அவர்கள். பெரிய மனிதர்களும் பின்னடையும் துறைகளில் எல்லாம் துணிந்து ஈடுபட்டார்; தமக்கே உரிய தனித் தன்மையோடு சிறந்தார்.

திரு.வி.க.வின் சைவ வாழ்க்கையை மூன்று பகுப்பாகப் பிரிக்கலாம். முதற்பிரிவு அவர்தம் பெற்றோர் தழுவிய சைவத் தொடர்பு. இளமைப் பருவமாக இருந்ததால் புறக்கோலச் சைவத்தில்

மனம் ஈடுபட்டது. "என் தந்தையார் சைவர்; யானும் சைவன். அவர் திருநீறிட்டார்; யானுந் திருநீற்றிட்டேன். அவர் கோவிலுக்குப் போனார்; யானுங் கோவிலுக்குப் போனேன்" என்று தம் வாழ்க்கைக் குறிப்ல் கூறியுள்ளார்.

இரண்டாம் பகுதியில் சைவ சமயமே சிறந்தது என்ற நிலைக்கு வரலானார். யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை அவர்களின் புராணச் சொற்பொழிவைக் கேட்பதற்குச் சென்றார். பிள்ளை அவர்களின் சைவ சமயப் பேச்சு திரு.வி.க.வைக் காந்தம் என இழுத்தது. "சில சைவப் பெரியார்கள் கதிரைவேற்பிள்ளையையும் சைவ சமய நூல்களையும் தாக்குவர். நாங்கள் அப்பெரும் பிரசங்கிகளைத் தாக்கப் புறப்பட்டோம்" என்கிறார். பிள்ளை எங்களைத் தூசிப் படை என்பார் என்றார். இக்காலத்தில்தான் 'அருட்பா - மருட்பா போர்' நடைபெற்றது. புதுமையை அறவே மறைக்கும் பழமை வாதிகள் மிக்கு இருந்த காலம். தமிழர் இருவர் தம்முள் மாறுபட்டுச் சமயநீதி கேட்டு ஆங்கிலேய நடுவர்களிடம் முறையிட்ட காலம்.

இந்தச் சமயச் சண்டைதான் திரு.வி.க.வின் பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது என்று அ.ச.ஞா கூறுகிறார். இச்செயல்தான் அவர் சைவக் கடலைக் கடைந்து முத்து எடுக்கச் செய்தது. இக்காலத்தில் அவர் சைவமே மெய்ச்சமையம் என்று நம்பினார்.

அவருடைய ஆசிரியர் மறைவுக்குப்பின் ஏற்பட்ட நிலையே மூன்றாம் நிலை. இந்நிலையே அவர் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நின்றது. அவர் ஆசிரியருக்காக வாதிட முனைந்த பொழுது பெரும் பீரங்கிகளை எதிர்ப்பதற்காகப் பல நூல்களைப் பலமணி நேரம் படித்தார். அவருக்குச் சைவ சமயத்தில் உள்ள உண்மைகளும் பொதுடைமைக் கருத்துக்களும் புலப்பட்டன. ஆசிரியர் மறைவுக்குப் பின் பல அறிஞர்களிடமும் சான்றோர்களிடமும் பாடம் கேட்டார். அவர் வாழ்ந்த வீட்டைச் சுற்றி கிறிஸ்துவர், பௌத்தர், சமணர், இஸ்லாமியர் எனச் சமயச் சான்றோர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் கூட்டுறவால் அவர் அறிவு விளக்கம் பெற்றார். விரிந்த மனப்பான்மை அவருக்கு ஏற்பட்டது. மற்றும் பள்ளி ஆசிரியர் கிருஷ்ணாராவ் பேச்சால் அவர் மனத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. என்று வாழ்க்கைக் குறிப்புக்களில் கூறியுள்ளார்.

"யான்வேறு மனிதன் ஆனேன். கோயில் எனக்குப் பள்ளி ஆயிற்று, தேவாரம் திருவாசகம் எனக்கு நூல்கள் ஆயின எனக் கூறியுள்ளார்." இறுதியில் அவரிடம் இருந்த மதவெறி மறைந்தது. "மதவெறி எனது இயற்கை அன்று. அது எப்படியோ செயற்கையாய் எழுந்து மறைந்தது" என்கிறார். பிற சமயங்கள் அவருக்குப் பொதுமை உணர்ச்சி மலர்தற்கு வழி வகுத்தன என உணரலாம். சைவம் ஒன்றே மெய்யான சமயம் என்று கொண்ட கருத்தினைத் தளர்த்தினார். என்றாலும் அவர் சைவத்தை இகழ்ந்தார் இல்லை. அவரது கருத்தில் செயலில் சைவம் நிலைத்து நின்றது. "சிறு பருவத்தில் வேரூன்றிப் சைவமணம் இவர் உள்ளத் தாமரையை எங்ஙனம் விட்டகலும்" என்று மு. கதிரேசன் குறிப்பிடுகின்றார்.

1910 ஆம் ஆண்டில் பெரியபுராண முதற்பதிப்புக்குக் குறிப்புரை எழுதினார். இக்காலத்தில் சைவச் சிறையில் அவர் கிடந்தார். இளமை மறைந்த பின்பு 1934 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்புக்கு உரை கண்டார். சைவ சமய உரிமைக் கோட்டையில் நின்றார். "முன்னிப் பகுதியில் சைவம் குறுகிய நோக்கிலும் பிள்ளைப் பகுதியில் பொதுமை நோக்கிலும் இடம் பெற்று இருந்ததை நாம் நன்கு உணரலாம். சைவத்தில் இருவகை உண்டு. இதர சைவம் மற்றது சமரச சைவம் அல்லது சீர்திருத்தச் சைவம். இரண்டாவது வகைதான் உண்மைச் சைவம் என்று கண்டு தம்

வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். இனி திரு.வி.க. கண்ட சைவம் பற்றி பார்ப்போம்.

உடல் வளர்ச்சிக்கு உணவு தேவை. அதைப் போல உயிர் வளர்ச்சிக்குக் கடவுள் வழிபாடு தேவை. சமயக் கொள்கைகள் கடவுளிடம் நாம் நெருங்க உதவுகின்றன. மக்கள் நலமுடன் வாழ வேண்டும் என்றால் ஒழுக்கத்துடன் வாழவேண்டும். ஒழுக்கம் இருவகைப்படும். ஒன்று அகஒழுக்கம், மற்றொன்று புறஒழுக்கம். அக ஒழுக்கத்தை நிலைநாட்டுவது சமயம். புறஒழுக்கத்தை நிலைநாட்டுவது ஆட்சி. ஒருவனுடைய செயல் தூய்மையாக்குவது சட்டம். ஒருவனுடைய அகத்தைத் திருத்தித் தூய்மை யாக்குவது சமயம். மக்கள் வாழ்க்கைக்குச் சமயம் தேவை.

சமயம் என்றால் என்ன? "படைப்பு நோக்கம் இன்பப் பேற்றைக் குறிக்கொண்டு நிற்பதென்றும் உண்மை பெறுகின்றோம். உயிர்கள் துன்பக் கடல் கடந்து இன்பக் கரை ஏறுவதெப்படி? அதற்கொரு நாவாய் வேண்டுமென்றோ? அதுவே சமயம்" என்று திரு.வி.க. கூறுகிறார்.

இன்பப் பொருளாம் இறைவன் அடைவதற்கு உயிர்கள் கடைப்பிடித்தொழுகும் ஓர் அறவழியே சமயம் என்று திரு.வி.க. "சைவத்தின் சமரசம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சமயம் என்னும் சொல் சமையம் என்னும் சொல்லின் திரிபாகும். சமையம் என்னும் சொல் கடமையுணர்ச்சியைக் குறிக்கும் என்று ஆங்கில அகராதி கூறுகிறது. மனிதனைத் தீமையிலிருந்து விடுவித்து இன்பநிலை அடையச் செய்வதே சமயம். மேலும் மனிதனின் விலங்குப் பண்பிலிருந்து விடுவித்து மனிதப் பண்பில் மலர்ச்சியுறச் செய்வதே சமயத்தின் குறிக்கோள்.

காலப் போக்கில் சமயம் ஒன்றே என்னும் சமயத்தில் பொதுமைக் கருத்து இருப்பது உண்மை என்னும் அவர் உணர்ந்தன் இதன் அடிப்படையில் சைவத்தின் பொதுமை எண்ணம் அவரது மனத்தில் வளர்ந்தது.

திரு.வி.க. "சைவத்தின் ஆணி வேர் அன்பு அன்பின் மூலம் தான் இறைவனை அடைய முடியும்" என்றார்.

"அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்று
என் பொல்லா மணியின் எய்த ஒண்ணாதே" என்றார்.

திரு.வி.க., இறைவனை நினைந்து அன்பினால் உருகி உருகி அகம் குழைகின்றவர்களால் தான் இறைவனை அடைய முடியும் என்கிறார்.

"தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம் எல்லாம்" என்று திரு.வி.க. தொண்டினைச் சமயமாக மதித்தார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பது அப்பர் அடிகள் தாரக மந்திரம். இவர் உழவாரப் பணியினைச் செய்தார். திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது அப்பர் அடிகளும் ஞானசம்பந்தரும் இறைவனைப்பாடி படிக்காசுப் பெற்று மக்களின் பசிப்பிணியைப் போக்கி மனித நேயம் போற்றினர்.

"சைவ சமயம் சாதி மதம் கடந்தது" என்றார். 63 நாயன்மார்களும் தொழிலால், சாதியால் வேறுபட்டவர்கள் அவர்களை நினைக்கும் போது சாதி மதமா தோன்றுகிறது. சிவனடியார் என்ற எண்ணம் தோன்றுகின்றது. கண்ணப்பர் வேடர் குலம். திருக்குறிப்புத் தொண்டர் வண்ணான் குலம், சுந்தரர் அந்தணர் குலம். இன்று கோவில்களில் இவர்கள் அனைவருக்கும் ஒரே விதமான

பூசையை பிராமணர்கள் செய்கிறார்கள். சேவையில் அன்பு கொண்டால் சாதிமத வேற்றுமை புலனாகாது என்பது திரு.வி.க. கண்ட சைவ சமரசம்.

*"ஆவுரித்துத் தின்னும் புலையரேனும்*
*கங்கைவார் சடை கரந்தார்க்கு அன்பராகில்*
*அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"*

என்பது அப்பர் வாக்கு. சுந்தரர் அந்தணர். திருத்தொண்டத் தொகையில் எல்லாச் சாதியாரையும் 'அடியார்க்கு அடியேன்' என்று வழுத்தி இருக்கிறார். "திருநீலகண்டத்து குயவனார்க்கு அடியேன் இல்லையே என்னாதே இயற்பகைக்கும் அடியேன்" என்றார்

திரு.வி.க. சிவம் என்னும் சொல்லிலும் பொறுமை கண்டார். சிவம் என்பது செம்பொருள். சிவத்தின் உண்மை உணர்பவர் எவரும் சைவர். அஃது ஒரு கூட்டத்தின் சமயமன்று. உலக முழுவதற்கும் பொதுமையாகிய உயர் தனிச் செந்நெறி. சிவம் என்பது என்ன? ஐம்பூதங்களா அல்ல; உருவமா அல்ல; புலன்களா அல்ல; எதுவும் எவையும் அல்ல; எல்லாம் உலவும் இடமாகவுள்ள வெறும் பாழ். பாழே சிவம். அன்பே சிவம் எனத் திருமூலர் கூறிய உண்மையைப் பாழே சிவம் எனக் கூறுகிறார். திருவி.க.

இறுதியாக, சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன். இச்சைவ சமயத்தின் முதன்மையான கொள்கை யாதெனின் இவ்வுலக இயக்கம் அனைத்துக்கும் மூல காரணம் சிவனே என்பதாகும்.

திரு.வி.கவின் சைவம் பற்றித் தெளிய அவர் எழுதிய சைவத்தின் சமரசம், சைவத்திறவு, சைவ சமய சாரம், நாயன்மார் திறம், சிவனருள் வேட்டல், வாழ்க்கைக் குறிப்புக்கள் நமக்கு வழிகாட்டுகின்றன.

## 24. புதுமைக்கும் புதுமையனே!

- ஆ. திருவாசகன், எம்.ஏ.
*ஆசிரியர், வீரசைவ முரசு.*

தமிழகத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி நெறியை வளர்த்துக் கொண்டிருந்த காலம்! ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்களும் பின்னர் சுந்தர மூர்த்தி நாயனாரும் தொடர்ந்து ஆழ்வாராதிகளும், சைவ, வைணவ சமயங்களைத் தமது செந்தமிழ்ப்பாக்களால் செழிக்கச் செய்து கொண்டிருந்தனர். அதனால் சைவமும், வைணவமும் இழந்திருந்த பெருமைகளை மீட்டு, தமிழகத்தை ஆன்மீகப்பூங்காவாக ஆக்கி வைத்திருந்தன. நாத்திகம் பேசி நாத்தழும் பேறியோர் நலிந்தனர்.

தற்போது ஒரு குடும்பத்தில் குடும்பத்தலைவன் ஓர் அரசியல் கட்சியிலும், மகன் வேறொரு அரசியல் இயக்கத்திலும் இருந்து வருவதைப் போல, அக்காலத்தும் ஒரே குடும்பத்திலுள்ளோர் தாம் தாம் விரும்பும் சமயங்களைப் பின்பற்றி வந்தனர். எடுத்துக்காட்டாகத் திருநாவுக்கரசர் சைவ சமயத்தை அணுகுவதற்கு முன்னர், சமண சமயத்தைச் சார்ந்து அதன் தலைமையை ஏற்றிருந்தபோது அவருடைய தமக்கையார் திலகவதியார் சைவ நெறியில் ஊற்றமாக நின்று திருக்கோயில் திருப்பணிகள் செய்து வந்தார் என்பதை வரலாறு கூறிச் செல்கின்றது. அப்பர் பெருமான் சைவம் சார்ந்த பின்னர் பல்லவ நாட்டிலும், ஞானசம்பந்தப் பெருமான் பாண்டி மண்டலத்திலும் தமது அருளிப்பாடுகளால் சைவத்தை ஓங்கி ஒளிரச் செய்தனர்.

பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்து வந்த மன்னன் கூன் பாண்டியன் சமண சமயத்தையும் அவனது பட்டத்தரசி மங்கையர்க்கரசியார் சைவ சமயத்தையும் பின்பற்றி நின்றார்கள் என்பதும் வரலாறு. ஒருவருக்கொருவர் கொள்கைகள், வழிபாட்டு நிலைகளிலே மாறுபாடு கொண்டிருந்தாலும் வாழ்க்கையில் அவை குறுக்கிடவில்லை என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

எனினும் ஒரு சமயத்தைச் சார்ந்தவர் வேறொரு சமயம் சாரும் பொழுது விரும்பத் தகாத நிகழ்வுகளும் நடந்தேறின என்பதும் இவர்களுடைய வரலாறுகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்ற உண்மைகள்.

மாணிக்க வாசகர் காலத்தில் பௌத்த சமயக் கொள்கைகளும் அதன் தத்துவங்களும், பின்னர் தேவார காலத்தில் சமண சமயக் கொள்கைகளும் அதன் தத்துவங்களும் மறுக்கப்பட்டு, சைவ - வைணவக் கொள்கைகள், சித்தாந்தங்கள் மிகுதியும் வளர்க்கப் பெற்றன என்பதும் வரலாற்றாசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன. தமிழகம் புறச்சமய மோகத்தில் வீழ்ந்திருந்த போது நமது மூவர் முதலிகள் ஊர்தோறும் சென்று புதிய நடையில் புதுமை வழியில் இசைத்தமிழாலே இறைவனை ஏற்றியும், போற்றியும், அற்புதங்களை நிகழ்த்தியும் அமைதிவழியில் மக்களைத் தம் சமயத்திற்கு ஈர்த்தனர். திருநாவுக்கரசருடைய பழையாறை உண்ணா நோன்பு (உலகத்தின் முதல் உண்ணாவிரதம்) இதற்கு எடுத்துக்காட்டு. மதுரையில் ஞானசம்பந்தப் பெருமானிடம் தோற்ற சமணர் கழுவேற்றப்பட்டனர் என்பதை அவர்கள் பெருவாரியாகச் சைவத்தைச் சார்ந்து கழுவாய் தேடினர் என்று கொள்வதே பொருந்தும். ஆக பக்தி இயக்கம் காலத்திற்குத் தக்கவாறு புதிய மேடையில் இறைவனையும், தமிழையும் அரங்கேற்றியது

காலம் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாகப் புரண்டோடி விட்டபிறகு, நாடெங்கும் வழிபாட்டிலும், விழாக்களிலும் சமயநெறிகளிலும் புதுமை பரவிநிற்கிறது. தற்காலத்தில் பாரதத்தின் வடபகுதியைச் சேர்ந்த மராட்டிய, ராஜஸ்தான், குஜராத் மக்களில், சமண சமயம் தழுவியோர் வீடுகளுக்கும், கடைகளுக்கும், சென்று பார்த்தோமேயானால் அவர்களது சமயத் தலைவர்களோடும் அடையாளங்களோடும் இந்து சமயத் தெய்வங்களான சிவபெருமான், வெங்கடாசலபதி, இலக்குமி, சரஸ்வதி, முருகன் போன்ற தெய்வங்களின் படங்களையும் வைத்து வழிபட்டுவருவதைக் காண முடியும். எந்தவித வேறுபாடும் காட்டாது அவர்கள் வழிபடும் நிகழ்ச்சி நம்மை மெய்மறக்கச் செய்யும்.

தீபாவளி போன்ற நாடுதழுவிய பண்டிகைகளை இந்துக்களோடு இரண்டறக்கலந்து கொண்டாடி வருகின்ற காட்சியையும், அன்றே தமது வணிக நிலையங்களில் புதுக்கணக்கு எழுதுகின்ற நிகழ்ச்சியை நடத்துவதையும் நாம் பார்க்கிறோம்.

இப்போது மியான்மர் என்று அழைக்கப்படும் பர்மா நாட்டிலும் புத்த பூர்ணிமா என்று அழைக்கப்படுகின்ற பௌத்த மதத்திற்குரிய சிறந்த நன்னாளில் இந்துசமயம் சார்ந்தோர் புத்தர் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதோடு புத்த பூர்ணிமா தொடங்கி மூன்று மாதங்கள் ஜீவ காருண்ய நோன்பு மேற்கொண்டு ஒழுகுவதும் இன்று நடைமுறையில் உள்ள நிகழ்ச்சிகள்!

அந்த நாட்டில் உள்ள சிவன் கோயில்களிலும், திருமால் கோயில்களிலும், முருகன் கோயில்களிலும், காளி கோயில்களிலும், விநாயகர் கோயில்களிலும், புத்தருக்கு என்று ஒரு தனிச்சன்னிதி உண்டு! அச்சன்னிதிகளின் முன்னர் உண்டியல்கள் வைத்திருக்கிறார்கள். மற்ற சன்னிதிகளின் உண்டியல்களைப் போலவே புத்தர் சன்னிதி உண்டியல்களிலும் மிகப்பெருவாரியாகப் பணம் செலுத்தி புத்தர் பெருமானைப் பயபக்தியோடு வணங்கி வருகிறார்கள் இந்துமக்கள்! புத்தபிக்குகள் இந்துக் கோயில்களில் நமது தெய்வங்களை வழிபாடு செய்வது இன்று அங்கே சாதாரண நிகழ்ச்சி! நம்மவர்களைவிட புத்தசமயத்தினர் நமது கோவில்களுக்கு வந்து திருமுன்நின்று கசிந்து கண்ணீர்மல்குவதைக் காணக்கண்கோடிவேண்டும்!

அங்கேயுள்ள கிராமங்களில் சென்று பார்த்தால் கிராமத்தின் காவல் தெய்வங்களாக அமைந்துள்ள வீரமாகாளி, முனீஸ்வரர் கோயில்களில் நடைபெறும் காவடி எடுத்தல், தீ மிதித்தல் போன்ற வழிபாடுகளில் இந்துக்களைவிடப் பெருவாரிய அளவில் பௌத்த மக்கள் எவ்வித விகற்பமுமின்றிக் கலந்து, காவடிகள் எடுப்பதையும், தீமிதித்தல் செய்வதையும் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். வழிபாட்டு முறை எதுவானாலும் சமயப்பொறுமையும், உடன்பாடும் அங்கே மலர்ந்து மணம் பரப்புகின்றன.

சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலும் பௌத்த சமயம் சார்ந்த சீனமக்கள் பெருமளவில் இந்துக்கோயில்களில் தினசரி வழிபாட்டில் கலந்து கொள்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்! இலங்கையிலும் பௌத்த விகாரங்களில் இந்துக்கடவுளரின் படங்கள் வழிபடப்படுகின்றன.

மியான்மர் நாட்டு இந்துக்கோயில்களின் விழா நாட்களில் அந்தந்தக் கோயில்களின் மூலவர்கள் மற்றும் பரிவார தெய்வங்கள் அலங்கரிக்கப்பட்டு திருவீதி உலாவாக எழுந்தருளுகின்றபோது, கண்டிப்பாகப் புத்தருடைய சிலையும் மிக அழகாக அலங்காரம் செய்யப்பட்டு எல்லாத் தெய்வங்களுக்கும் முதல் தெய்வமாக எழுந்தருளச் செய்யப்படுகின்றது.

மத வேற்றுமைகள் சிறிதும் ஏன், நூலளவு கூட இடம்பெறாது வழிபடும் மியான்மர் மக்களைப்பார்த்து, ஏனைய சமயத்தோரும் இவ்வண்ணம் நல்லிணக்கத்தை உலகெங்கிலும் நடைமுறைப்படுத்துவார்களேயானால் உலகில் ஏது சமயப் போர்கள்? சமயப் பூசல்களால் ஏற்படும் மனிதகுல நலிவு, உயர்வு, தாழ்வு, கொலை - கொள்ளைகள் ஏன் நடக்கப்போகின்றன? அந்நிலை வருமா என்று உள்ளம் ஏங்குகின்றது.

இறைவன் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருள், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன்" என்பார் மணிவாசகப் பெருமான். ஒன்றுக்கொன்று புறச்சமயங்கள் என்று சொல்லிக் கொண்டு வாதப் பிரதிவாதங்கள் செய்து தள்ளி நின்ற காலம் போய் இன்று பௌத்தம் இந்துக்களாலும், இந்துக்கள் சமணர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று அவர்கள் தெய்வங்களை இவர்களும் இவர்கள் தெய்வங்களை அவர்களும் தோள்மீது தூக்கி வழிபாடு நடத்துவதைப் பார்க்கையில் இறைவன் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாக மாறுகிறான் என்ற மெய்ம்மை புலப்படுகின்றது.

# 25. மறைமலையடிகளின் தனித்தமிழ்த் தொண்டு

- திரு. மறை தி. தாயுமானவன், எம்.ஏ.,
சென்னை.

தாய்மொழிக்கல்வியின் பெருமையினை உலகிற்கு உணர்த்திடப் பிறமொழியின் புலமையும் இன்றியமையாதது என்று உணர்த்தியவர் பன்மொழி அறிஞர் மறைமலையடிகளாவார். ஆங்கிலத்திலும், வடமொழியிலும் மிக்க புலமை யடையவர்; சைவசித்தாந்தப் புலமையும் கைவரப்பெற்றவர். சைவ சித்தாந்த நெறி நிற்றல் தமிழ் மக்களிடம் அருகிவருவதைக் கண்ட அடிகளார், 7-7-1905ல் கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் சைவ சித்தாந்த மகா சமாசத்தை (இன்றைய சைவ சித்தாந்தப் பெருமன்றம்) தவத்திரு ஞானியார் அடிகளாருடன் இணைந்து தோற்றுவித்தார்.

அக்கால அளவிலேயே தமிழை உயிர்தனிச் செம்மொழியாக அறிவிக்கக் கோரி, திருப்பாதிரிப்புலியூர் சைவ மாநாட்டுத் தீர்மானத்துக்குக் கையொப்பமிட்டு, 02-9-1918ஆம் ஆண்டு அன்றைய சென்னை மேதகு ஆளுநருக்கு அனுப்பிவைத்தார். இப்பதிவினைத் தம் நாட்குறிப்பில் குறித்துள்ளார். தமிழை உயர்தனிச் செம்மொழி ஆக்குவதற்கு மிகுந்த அரசியல் போராட்டத்துக்குப்பிறகு தற்பொழுது நடுவணரசு நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் மூலம் அறிவிப்பு செய்துள்ளது. தமிழ் அறிஞர்களுக்கும் தமிழ்மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும். பிறமொழிகளைக் கற்பவரே தாய்மொழியின் சிறந்த அறிஞராக வரமுடியும் என்பது அடிகளின் கருத்தாகும். அவ்வகையில் அதற்கு எடுத்துக்காட்டும் முகமாக, வடமொழியின் சிறந்த காப்பியமான காளிதாசர் இயற்றிய சாகுந்தல நாடக நூலைத் தமிழில் சிறிதும் சுவை குன்றாமல் மொழியாக்கம் செய்ததைப் படித்துப் பாராட்டிய காஞ்சி சங்கராச்சாரியார் அடிகளாரின் இந்நூலை படித்து சிறந்த கட்டுரை எழுதும் மாணவருக்கு முதல்பரிசாக உரூ. 100 தருவதாக 25-10-1957ஆம் தினமணி நாளிதழில் அறிவிப்பு செய்து, அதுபோல் அளித்துவந்தார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. பிறமொழியிலுள்ள நூலைத் தாய்மொழியில் மொழிமாற்றம் செய்வதென்பது. வரிக்கு வரி அப்படியே பொருள் தந்து எழுதுவதாகும். ஆனால் மொழியாக்கம் என்பது அம் மொழியின் உட்கரு, பொருள்சுவை சிறிதும் குன்றாமல், மொழிமாற்றம் பெறும் மொழியின் கருத்துச்சுவைக் கேற்ப அச்செய்தியை வைத்து எழுதுவதுதான் மொழியாக்கமாகும். இவ்வகையில் அடிகளாரின் இந்நூல் இன்றளவும் சிறப்புடன் விளங்குகிறது.

தற்பொழுது மையவரசு நம்தமிழை உயர்தனிச் செம்மொழி என அறிவித்ததில் மகிழ்ச்சியடைந்தாலும் மேற்படி அறிவிப்பானது சொல்வடிவமின்றி, செயல்வடிவம் பெறல்வேண்டும். இல்லை எனில் ஒருநாட்டில் உணவு உற்பத்தி அதிக அளவில் விளையப்பெற்றும் குடிமக்களிடம் முறையாகச் சென்றடையாமல் இருந்தால், அவ்வுணவு உற்பத்தி விழலுக்கு இறைத்த நீர்போலாகிவிடுவதுபோல் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்று பேச்சு அளவிலேதானிருக்கும். தாய்மொழிமீது உண்மையிலே அக்கறையிருக்குமானால், நம்பக்கத்திலிருக்கும் சிறிய நாடான சப்பான் உலகப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் நாடாக விளங்குகிறது என்பது மறுக்கமுடியாத - மறைக்கமுடியாத உண்மையாகும். உலகத்திலுள்ள எந்த ஒரு நாட்டிலும் புதிய

அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய முழுச்செய்திகளையும் ஆசியாவின் சிறிய சப்பான் நாட்டினர் தங்கள் தாய்மொழியில் அறிந்துகொள்ள, அறிவியல் அறிஞர் குழுவினர் ஒரு திங்களுக்குள் மொழி மாற்றம் செய்து தாளிகை மற்றும் நூலாக வெளியிட்டு மக்களைச் சென்றடையும் வண்ணம் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

உண்மையான மொழிப்பற்றுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் எடுத்துக்காட்டாக அந்நாடு அரசியல்வாதிகள் செயல்படுகின்றனர். பிறமொழியிலுள்ள சிறந்த அறிவியல் கண்டுபிடிப்புக்களை நாம் நமது தாய்மொழியில் மொழிமாற்றம் செய்து அதற்கு ஈடான கலைச் சொற்களைத் தகுந்த காலஅளவில் உருவாக்கி, அது மக்களைச் சென்றடையும் வகையில் திட்டங்கள் தீட்டப்படவில்லை. ஆனால் அவர் காலத்தில் அடிகளார் ஆங்கிலத்தில் நிரம்பப் பெற்றபுலமையின் காரணத்தால், மேனாட்டு அறிவியல் அறிஞர் எடிசன் கண்டுபிடிப்புக்களை - சிந்தனைக்கட்டுரைகள் என்ற பெயரில் நூல் எழுதி வெளியிட்டார். ஆங்கில இலக்கியமான Ronald in Lila வை குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்று தமிழில் சுவைகுன்றாமல் எழுதி வெளியிட்டார். அதுபோல் ஆங்கிலத்தில் சிறந்த அறிவியல் செய்திகளையும் கட்டுரைகளையும் தமிழ்மக்களும் தம் தாய்மொழியில் அறிந்து முன்னேற்றம் காணவேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டு மொழியாக்கம் செய்தார். அத்துடன் தாம் இறக்கும் தருவாயிலும் அன்றாடம் நாட்குறிப்பு எழுதும் பழக்கமுடையவராக இருந்தார். தனித்தமிழ் இயக்கம் கண்ட அடிகளார் பிறமொழிகள்மீது பகைமை பாராட்டதவர் என்பதற்குச் சான்றாக அவரது நாட்குறிப்பு முழுவதும் அழகான ஆங்கிலத்தில் வரையப்பட்டுள்ளது என்பதை வைத்து அறிந்து கொள்ளலாம்.

தாம் எழுதிய தமிழ் நூல்களைனைத்திலும் முன்னுரை முப்பது பககங்களுக்கு மிகாமல் ஆங்கிலத்தில் எழுதினார். ஏனெனில் ஆங்கிலம் படித்தோரும், அம்முன்னுரையைப் படித்து தமிழ்கற்கவேண்டும் என்று விரும்பி எழுதினார். அக்கால அளவில் பிறமொழிச் சொற்கள் அளவின்றித் தமிழில் கலந்து பிறிதொரு மொழி தோன்றாமல் தாய்மொழியைக் காத்தபெருமை அடிகளாரையே சாரும். தமிழில் பிறமொழிச் சொற்களைத் தவிர்த்து தமிழைத் தமிழாகப் பேசவும், எழுதவும் பிற மொழிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டவும், தமிழ்மொழியிலுள்ள சொற்கள் எல்லாவளமும் இயற்கையாகவே பெற்றிருப்பதை செம்மொழி என எடுத்துக்காட்டவே தனித்தமிழ் இயக்கம் 1916ஆம் ஆண்டே அடிகளாரால் தோற்று விக்கப்பட்டது. பிறமொழிக்கலப்பால் தோன்றியதேயன்றிப் பிறமொழி வெறுப்பால் தோன்றியதன்று தனித்தமிழ் இயக்கம்.

மொழிச்சீர்திருத்தம் பற்றி அடிகளார் கூறுவது யாதெனில், ஒரு மொழியைச் சீர்திருத்தும் பண்ணுவது ஒருவரிருவரால் முடியும் எளிய காரியமன்று. சுழன்று செல்லும் புயற்காற்றினையும், அணைகடந்து பெருகும் வெள்ளத்தினையும் இடைமறித்து நிறுத்தினும், நிறுத்தலாகும். ஒரு மொழியின் விரைந்த செலவை அடக்கியாளுதல் யார்க்கும் முடியாததொன்றாகும். தவிர்க்க முடியாத வேளைகளில் சிறப்புப் பெயர்களையும், குறியீடுகளையும் வழங்கும் தேவையான இடங்களில் மட்டும் வட சொற்களை ஏற்கலாம் என அடிகள் கூறியுள்ளார். குமுகாயக (சமூகம்) கருத்துக்களையும், சாதிகள் என்னும் எலும்புருக்கி நோயையும் கடுமையாகச் சாடி 'சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்' என்னும் நூல் எழுதி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

ஆசிரியப்பணியாற்றிய துவக்க காலத்தில் அடிகள் எழுதிய வெளியிட்ட நூல்களில் 'பண்டிட் வேதாசலம்பிள்ளை' என்றே அக்கால முறைப்படி எழுதப்பட்டு வந்தது. பின்னர் தனித்தமிழ் இயக்கம் கண்டபின் தம் பெயரை 'மறைமலையடிகள்' என்று மட்டுமே குறித்துள்ளார் என்பதை நோக்குங்கால்,

அடிகளார் சாதிகளைச் சாடினார் என்பது தெள்ளிதின் விளக்கும். சாதி மக்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தி சமூக முன்னேற்றம் தடைபட வழி வகுக்கும் என்பது அடிகளின் கருத்தாகும். ஏனெனில் ஆங்கிலேயர்கள் தமிழர்களின் சாதிகொண்டுதான் பெயர்களை அழைத்தார்கள். அன்று அவர்கள் வைத்த சாதிப்பாகுபாட்டை இன்றளவும் நாம் கடைப்பிடித்துத் தமிழ் இன மொழி முன்னேற்றத்திற்கு வழிகாணாமல் வாய்ப்பேச்சு வீரர்களாக இருக்கின்றோம். மற்றும் அரசியலில் பொறுப்பும், பொருளும் பெற்றுத்தருவதிலேயே குறியாக இருந்ததின் விளைவு, தாய்மொழி தமிழுக்குத் தமிழ்நாட்டில் மழலையர் பள்ளிகளில் தமிழ் கற்பிக்க போடவேண்டியுள்ளது. தமிழ் நாளிதழ்களில் வருகின்ற செய்தியைக்கூட இனி வருங்கால வழித்தோன்றல்களால் (மாணாக்கர்கள்) படிக்க இயலாமற்போகும் நிலை ஏற்பட்டுவிடும்.

அந்நிலை ஏற்படுமாயின், தமிழ்மொழி, இனப் பண்பாட்டிற்குச் சிதைவு ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும்... கண்போன்ற நமது தாய்மொழித் தமிழ் இருக்காது, ஆனால் தமிழர்கள் மட்டும் இருப்பார்கள். தமிழ் மொழியின்றி, தமிழ்நாட்டில்... மழலையர் பருவத்தில் தாய்மொழித் தமிழில் கற்காமல், பிறமொழிகளில் கற்ற வணிகத்தையே முதன்மையாக்கும் நோக்கத்தைத் தவிர்க்க, தமிழைப் பயிற்சி மொழியாகக் கற்றவர்க்கு மட்டும் அனைத்துத் துறைகளிலும் முன்னுரிமை தரும் சூழல் ஏற்படுமானால் தமிழ்மொழியும் அதன் மக்களும் இந்திய அரங்கில் மட்டுமல்ல உலகஅரங்கில் உன்னதநிலை எய்த இசைவாகும். தமிழ்பண்பாட்டையும் தமிழ்மொழியையும் நம்வாழ்விற்கு வளம்சேரும்.

அடிகள் சிறு அகவை முதற்கொண்டே நூல்கள் படிப்பதில் மிக்க ஆர்வம் கொண்டவர். எடுத்துக்காட்டாக, அடிகள் மணம்முடிக்கும் பருவத்தில் தம் தாயாரிடம் தான் கேட்கும் நூல்களை வாங்கித்தந்தாலன்றி மணம் முடிக்க முடியாது என்று உறுதிபடக் கூறினார். தாயார் அந்நூல்களை வாங்கிக் கொடுத்தபின்பே மணம்முடித்தார்.

தம் வாழ்நாளில் நூல்கள் வாங்குவதற்கே பெரும் தொகையைச் செலவு செய்தார். அடிகள் நூல்கள் வாங்கும் வேட்கை அளப்பரிது. நூல்கள் வாங்கிக்கொண்டு இல்லம் வரும் அடிகளை அவர் துணைவியார், “பிள்ளைகளுக்கும் எனக்கும் என்ன தின்பண்டம் வாங்கி வந்தீர்கள்?” என வினவுவார். “உனக்கோ வயிற்றுப்பசி! எனக்கோ அறிவுப்பசி” என்றுரைப்பார். ஒரு புதிய நூலை வாங்கிப்படிக்கும்பொழுது இறையின்பம் பெற்றதாக உணர்கிறேன் எனத் தம் நாட்குறிப்பில் குறித்துள்ளார். அவர் அரிதின் முயன்று சேர்த்த அனைத்து நூல்களும் பொதுமக்களுக்குப் பயன்பெறும் வகையில் 'மறைமலையடிகள் நூல்நிலையம்' சென்னையில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் சிறப்புடன் நிர்வகித்து வருகின்றனர்.

மறைமலையடிகளார் எழுதிய அனைத்து நூல்களும் (தமிழ்-52, ஆங்கிலம் -4, ஆங்கில இதழ்-1) ஆகஸ்டு திங்கள் 1997 ஆம் ஆண்டு தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது.

ஆண்டுதோறும் தனித்தமிழ் இயக்கத்துக்கு அருந்தொண்டாற்றிய ஓர் தமிழறிஞருக்கு மறைமலையடிகள் பெயரில் விருது வழங்கிச் சிறப்பு செய்தல் தமிழக அரசின் கடமையாகும்.

*தாய்மொழியைப் பாராட்டி வீழ்ந்தநாடும் இல்லை*
*தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை*

# 26. பெருமன்றத்தில் தமிழ்ச் செம்மொழி

**சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்** ஆதரவில் சென்ற வெள்ளிக்கிழமை **(15-3-18)** மாலை 5.45 மணிக்குப் **பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில்** தமிழ் மொழிக்குரிய சில தீர்மானங்கள் செய்தற் பொருட்டு ஏறக்குறைய 400 தமிழ் மக்கள் கூடினர். பல பண்டிதர்களும் வித்துவான்களும் ஆங்கிலேய பட்டதாரிகளும் கூட்டத்தைச் சிறப்பித்தனர். தமிழ் அகராதிக் கழகத் தலைவரான **கனம் சாண்டலர், எம்.ஏ.,** அக்கிராசனராக அமர்ந்து தமிழ்மொழியின் உணர்வைக் குறித்துச் சில விஷயங்கள் பேசிய பின்னர்,

**தீர்மானம் 1.**

“திராவிட மொழிகளுள் தொன்மையும் சீர்மையும் தலைமையும் பெற்றொளிர்கின்ற உயர் தனிச்செம்மொழி தமிழேயாம். இயற்கைச் செவ்வொளிகளானியன்ற எழுத்துடைமையின், என்றும் வழங்குமியல்பிற்றாய்த் தொன்மையே தனக்கென வகுத்த வரிவடிவுடையதாய்ப் பல்வளமிக்க பண்டையிலக்கண இலக்கிய நுண்ணூற் பெருக்குடையதாய்த் தனக்கே சிறக்கும் அகப்பொருள் நுணுக்கமும் புறப்பொருட் பொலிவும் அருணூற் செம்மையும் உடையதாய்த் திகழா நிற்றலின், அது சர்வ கலா சங்கத்தாரால் ஆரியம், அரேபியம், பாரசீக முதலிய ஏனைத்தனி மொழிகளோடொப்ப வைத்துப் போற்றப்படவேண்டு மென்னும் முதல் தீர்மானத்தை **ஸ்ரீமான் கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எம்.ஏ., எம்.எல்.,** பிரேரேபித்தார். தமிழ்மொழி மிகத்தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒரு பாஷை என்றும், திராவிட நூல்களைக் குறித்துச் சில வடமொழி உபநிஷதங்களில் குறிக்கப்பட்டுள்ளமையே அதன் பழமையை நன்கு விளக்குமென்றும், தமிழ்ப் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியம் வடமொழிப் பாணினீயம் என்னும் இலக்கணத்துக்கு முன்னரே செய்யப்பட்டதென்றும் தமிழ்மொழியின்கண் உள்ள எழுத்துக்கள் இயற்கை ஒலிகளால் அமைந்த எழுத்துக்களென்றும், தமிழ்நூல்களை நன்கு ஆராய்ந்தால் அவற்றின் நுணுக்கங்கள் வெளியாகுமென்றும் கூறி முடித்தனர். பின்னர் அப்பிரேரேபணையை **ஸ்ரீமான் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் பி.ஏ.,** ஆமோதித்துப் பேசும் பொழுது தமிழ்மொழியானது ஏனைய உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பவைத்து எண்ணுதற்குரிய உயர்வும் சீர்மையும் உடையதென்றும் இக்காலத்தில் தமிழ் தனிமொழி யென்றும் தென்மொழி யென்றும் பல அறிவாளிகள் ஒப்புக்கொண்டபோதிலும் அம்மொழி நூல் வழக்கோடு உலக வழக்கிலும் காணப்படுகின்றமையால் அது உணர்தனிச் செம்மொழி அன்று என்னும் ஆசங்கை நிகழ்த்துபவர்கள் செம்மொழியின் உண்மை இலக்கணம் உணர்ந்தவரல்லர் என்றும், ஒரு மொழியானது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தியதாயிருப்பின் அதுவே உயர் தனிச் செம்மொழி என்ற பெயருக்கு உரியதென்றும், தமிழ்மொழியின் திருந்திய பண்பு அதன் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் திட்ப நுட்பங்களால் தெளியப் படுமென்றும், ஆதலின் தமிழ் ஏனைய உள்நாட்டு இலக்கண வரம்பில்லா மொழிகள் போல எண்ணப் படுதல் கூடாது என்று நடுநிலை தவறாத ஆங்கிலேய நூல் ஆசிரியர்கள் கூறியுள்ளாரென்றும், தமிழ் நூல்களின் தலையாய சிறப்பும், அகப்பொருள் புறப்பொருள் நுணுக்கமும், சொற்சுவை பொருட்சுவைகளும் அதன்சீர்த்த நாகரிகத்தை

விளக்குகின்றனவென்றும், தமிழ்ப் பண்டை இலக்கியங்களில் ஒன்றாகிய திருக்குறள் இக்காலத்தில் வழங்கி வரும் பல ஐரோப்பிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே அப்பாஷையின் உயர்வை உணர்த்துமென்றும் இன்னும் ஏனைய உயர்தனிச் செம்மொழிகள் பல கிளைப்பாஷைகளுக்குத் தாயகமாய் நிற்றல் போல தமிழ்மொழியும் திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய கிளைப் பாஷைகளையுடைய தென்றும், ஏனைய செம்மொழிகளினும் தமிழ்மொழி தொன்மையுள்ளது என்பது இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டுள்ள தொல்காப்பியமென்னும் இலக்கணத்தாலே நன்கு விளங்குமென்றும், எவ்வாறெனில் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் முறையாதலாலும் இலக்கியத்தினின்று எடுபடுவதே இலக்கணமாதலாலும், நம் தமிழ்மொழி சரித்திர காலத்திற்கு மிகவும் அப்பாற்பட்ட காலத்திலேயே பல இலக்கியங்களை உடையதாய்ச் சிறப்புற்று ஓங்கியிருத்தல் வேண்டுமென்றும் ஆகவே தமிழ் தொன்மையும் சீர்மையும் திருந்திய பண்பும் வாய்ந்த செம்மொழியாயிருத்தலின் சர்வகலா சங்கத்தார் தமிழையும் உயர்தனிச்செம்மொழிகளோடு ஒன்றாக வைத்து எண்ணவேண்டுவதவசியமென்றும் கூறி முடித்தனர். பின்னர் தமிழ்க் களஞ்சியம் பத்திராதிபரான ஸ்ரீமத் ஈசுவர அய்யரவர்கள் தமிழ் தனிமொழி யென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன என்று கூறி ஆமோதித்த பின்னர் பண்டிகை ஸ்ரீமதி அலர்மேல்மங்கைத் தாயாரவர்கள் தமிழ்ப்பாஷையின் சிறப்பை உணர்ந்து கொள்ளாத சர்வகலாசாலை சங்கத்தினர் சிலர் தமிழ்மொழியைக் குறை கூறுகின்றாரென்றும் தமிழ் சிறந்த பாஷைகளுள் ஒன்றாகவைத்து எண்ணுதற்கு உரிய உயர்வுடைமையால் அதனைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் அங்கீகரித்தல் அவசியமென்றும், சொல்லி முடித்த பின்னர் முதல் பிரேரேபணை அங்குக் கூடியிருந்த தமிழ் நன்மக்கள் அனைவராலும் ஒருமுகமாக அங்கீகரிக்கப்பட்டது.

## 27. பெருகட்டும் சைவ உணர்வு*

- சித்தாந்தசரபம் முனைவர் வை. இரத்தினசபாபதி,
*சித்தாந்தம் இதழ் முன்னாள் ஆசிரியர்.*

சைவ அறிவு, சைவ ஞானம் என்ற இரண்டையும் கடந்தது சைவ உணர்வு.

சைவம் பற்றிய அறிவும் ஞானமும் உணர்வும் மக்களிடத்து உள்ளன என்று ஒப்புக் கொண்டே யாதல் வேண்டும். ஆனால் அவை பெருக வேண்டும் என்பதே நம் குறிக்கோள். மேலாக, மூன்றாம் நிலையில் இருக்கும் சைவ உணர்வு மேலும் மேலும் பெருக வேண்டும் என்பதே மார்கழித் திங்களில் வேண்டப்பெறும் பொதுமை நலமாகும்.

சைவ அறிவு என்பது அறத்தின் செழுமையைத் தெரிந்து கொள்ளுதல் இதுவே உலகாசாரம் எனப்பெறும்.

உலகில் ஒளிந்து காணப்பெறும் செயல் நியதியை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும்.

உலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் அருட்சத்தியின் இயங்காற்றல் எனப்பெறும் செயல் திறனால் நடத்தப் பெறுகின்றன. இயக்க நிலை என்பது பேரருளின் செயற்பாடு. உலக இயக்கத்தை - செயற்பாட்டை உணர்தல் வேண்டும்.

*'அருளே உலகை ஆள்விப்பது'*

என்ற கருத்து உணரப் பெறுதல் வேண்டும்.

உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் அறமானது நின்று செயற்படுத்துவதை அறிதல் வேண்டும்.

அறத்தின் செயற்பாட்டை உணர்வதோடு, அறமே அனைத்தையும் வாழவைக்கும். அறத்தில் தவறினால் தண்டிக்கப் பெறுதல் உறுதி என்ற அறஇயற் கோட்பாடு மக்களுள்ளத்தில் மலர்தல் வேண்டும்.

அறமே அனைத்து வகையான வாழ்க்கைக்கு அடிப்படை என்பதை உணர்தல் வேண்டும். அறத்துக்கு அப்பாற்பட்ட, அறத்தின் பெருமை உணராத - அறத்துக்கு முக்கியத்துவம் வழங்காத சமயம் நின்று நிலவாது, பயன்தராது என்பதை உணர்தல் வேண்டும்.

அறநியதியை உணர்தலே உலகாசாரம். இன்று சமயத்துறை சார்ந்த வாழ்க்கையை வாழ்பவர்கள் அறத்தை முன்னிலைப் படுத்திவாழுதல் பெரிதும் இல்லை.

அறத்தின் அடிப்படையை உணர்ந்து தெளிவு பெறாத சமய வாழ்வு சிறத்தல் இல்லை. எனவே சைவ அறிவு எனப்பெறும் அறக்கோட்பாடு மக்கள் வாழ்வில் சிறந்து மலர வேண்டும்.

அறவாழ்வின் பொலிவு தான் சமய வாழ்வை நெறிப்படுத்தித் தளிர் விட வைக்கும்.

சமய வாழ்வைத் தெரிந்து கொள்வதே சைவ ஞானம். அருட்சத்தியின் ஆற்றலால் சிறந்து விளங்கும் உலகுக்கு முதல்வன் சிவனே. அவன் அன்பின் மயமாக விளங்குபவன்; அவன் நம்மால் அடையக் கூடிய, அடைந்து இன்பம் துய்க்கக் கூடிய பரம் பொருள் என உணர்தலே சைவ ஞானம். அதுவே சமய வாழ்வு.

அருளின் ஆற்றலைத் தெளிந்து தேர்வதே பொருள். அதுவே சைவ ஞானம். அதனால் உணரப் பெறும் ஞான வாழ்க்கையே சைவஞானம்.

உலகில் பலராலும் பேசப்பெறும் பல தெய்வங்களையும் ஒரே தட்டில் வழிபட்டுக் கொண்டிருப்பது சமய வாழ்வு ஆகாது. பரம் எது எனத் தெளிய வேண்டும். அத்தகைய வாழ்வியல் ஞானம் பெறுவதே - தெளிந்த நீரோட்டம் பெறுவதே சைவ ஞானம்.

இத்தகைய சைவ ஞானம் இக்காலத்தே மக்கள் வாழ்வில் காணப் பெறவில்லை. காலையில் ஒரு தெய்வ வழிபாடு; மாலையில் வேறு தெய்வ வழிபாடு என்றே மக்களின் சமய வாழ்வியற் கொள்கையானது செயற்படுத்தப் பெற்று வருவதை நாம் காணலாம்.

இனி, மூன்றாவதாக அமைவது சைவ உணர்வு முதல் நின்ற இரண்டு படி நிலைகளும் வெற்றி பெற்றால்தான் மூன்றாம் படிநிலை தோற்றம் பெறும்.

உலகில் காணப் பெறும் அனைத்துப் பொருள்களிலும் (இயங்கும் பொருள் - நிலைப் பொருள்; சரம் - அசரம்) நின்று நிலை பெற்று விளங்கும் சத்தியப் பொருள் சிவமே எனக்கண்டு, அன்பின் வயப்பட்டு உருகி நின்று வழிபடுதல் எனப்பெறும் அனுபவப் படிநிலை. அதுவே சைவ உணர்வு.

அறம் செழித்தால் ஞானம் தோன்றும்; ஞானம் முதிர்ந்தால் சைவ அனுபவம் என்ற சைவ உணர்வு தோன்றும்; சைவ உணர்வு தோன்றினால் தான் ஆன்ம வாழ்க்கை நிறைவுறும்.

சைவ அறிவு, சைவ ஞானம், சைவ உணர்வு என்ற மூன்றையும் மக்கள் உள்ளத்தில் பதியச் செய்து வளர்க்கும் முயற்சியில் தமிழகத்தில் மூவகை விழாக்கள் அமைந்தன.

கடையவனுக்கும் கடைத்தேற்றம் என்பதாக அமைந்த சமுதாயப் பெருவிழா, அதுதான் மயிலாடு துறையில் அமைந்த காவிரி முழுக்குப் பெருவிழா.

முடவன் - சமுதாயத்தில் செயற்பாட்டு நிலை இழந்தவனாகக் கருதப்பெறும் கடைசிக் குடிமகன். அவன்வந்து காவிரியில் மூழ்கிய பின்னரே அனைவருக்கும் திருவருள் நலம் வழங்கப் பெறும் என்பதாக அமைந்த சமுதாயப் பெருவிழா. ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் முழுவதும் நடைபெறும் விழா. அதனால் உணர்த்தப்பெறும் அறஉணர்வு ஒன்றுதான். அது வேறொன்றுமன்று; **அனைத்தும் சமம்**; முடவன் எனப்பெறும் கடையவனுக்கும் - சமுதாயத்தில் தாழ்மடத்தில் இருப்பவனுக்கும் **சமம் என்ற நீதி - அறம்** வழங்கப் பெறும் நிலை.

இத்தகைய அருளாற்றலை உலக மக்கள் மனத்தில் பதிய வைக்கும் நிலையில் அமைக்கப் பெற்றதே அவ்விழா. ஐப்பசி மாதத்தின் இறுதி நாள் கடைமுழுக்கு; கார்த்திகை முதல் நாள் முடுவன் முழுக்கு என்பனவற்றில் சமுதாய அறிவை, அறநிலைச் சமம் என்ற அறிவைப் பெறுதலே **சைவ அறிவு**.

சைவ அறிவை அடிப்படையாகக் கொண்டு 'சமம்' என்ற அறஇயல் நியதியை - திருவருளாற்றலை அடிப்படையாகக் கொண்டு எழுவதே **சைவ ஞானம்**.

'**சைவ ஞானம்**' என்ற மாபெருந் தத்துவத்தை விளக்க எழுந்த வரலாற்று விழாவே திருவாரூரில் நம்பி நந்தி அடிகளால் தொடங்கப் பெற்ற பங்குனி உத்தரப் பெருநாள் விழா.

"பங்குனி உத்தரம் பாற்படுத்தான்"

என்ற தொடர் அப்பரடிகளால் அருளப்பெற்ற தொடர். திருவாரூரில் அமைந்த ஆதிரை விழா வேறு; பங்குனி உத்தரப் பெருநாள் விழா வேறு.

முன்னது சைவ உணர்வுப் பெருவிழா; பின்னது சைவ ஞானப் பெருவிழா.

சைவ உணர்வுப் பெருவிழாவின் சிறப்பினை எடுத்து விளக்கும் வகையில் ஞான சம்பந்தப் பெருமான் அப்பரடிகளை நோக்கிக் கேட்பதாக அமைந்த அருளனுபவப் பெருவிழாவே ஆதிரைப் பெருவிழா.

சைவ ஞானப் பெருவிழாவானது மாசி அத்தம் தொடங்கி, பங்குனி உத்தரப் பெருநாள் வரை அமைந்த பெருவிழா. புல் முதல் மனிதன் வரையில் உள்ள எழுவகைப் பிறவிகளும் இருபத்தேழு நட்சத்திரங்களின் அடிப்படையில் உடம்பைப் பெறுகின்றன. இது உயிர்களின் சகலநிலைப் பேறு. அனைத்துயிர்களுக்கும் பரம் பொருளுணர்வை - ஞானத்தை உணர்த்தும் வகையில் நம்பி நந்தி அடிகளால் அமைக்கப் பெற்ற பெருவிழா.

மார்கழித் திருவாதிரை விழா வேறு; பங்குனி உத்தரப் பெருவிழா வேறு.

பங்குனி உத்திரப் பெருவிழாவானது அனைத்துயிர்களுக்கும் ஞானத்தைச் சமமான முறையில் தொடக்கநிலைப் பேறாக வழங்குவதற்கென அமைக்கப்பெற்ற பெருவிழா.

மயிலாடுதுறைக் கடைமுகப் பெருவிழாவுக்கும் பங்குனி உத்திரப் பெருவிழாவுக்கும் இடை நின்ற பெருவிழாவே மார்கழிப் பெருவிழா.

மயிலாடுதுறைப் பெருவிழாவானது அறநிலைப் பொதுவுணர்வை வளர்க்கும் **சைவஅறிவுப்** பெருவிழா.

பங்குனி உத்தரப் பெருவிழாவானது **சைவ ஞானத்தை** வளர்க்கும் பெருவிழா.

இந்த இரண்டு விழாக்களுக்கும் இடைநின்ற பெருவிழாவே மார்கழிப் பெருவிழா.

மார்கழி மாதம் முழுவதும் அமையப் பெற்ற பெருவிழா. இதுவே **சைவ உணர்வுப்** பெருவிழா.

"மல இருள் உற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருள் செலமுழுக வருக" என அழைத்து, ஆன்மாக்களுக்குத் திருவருட் பேரின்ப உணர்வை அனுபவப் பேறாக ஊட்டுவதற்கென அமைக்கப் பெற்ற பெருவிழாவாகும்.

சைவ அறிவும், சைவ ஞானமும் படிநிலைகளாக அமைய, மேலெழும் சைவ உணர்வே பரம் பொருளருளியலனுபவப் பேறாகும். அவ்வனுபவப் பெரும்பேற்றை ஆன்மாக்களுக்கு எளிதில் வழங்கி வாழ வைக்கும் கொள்கையை உள்ளீடாகக் கொண்டபெருவிழாவே மார்கழி நீராடற் பெருவிழா வாகும்.

'மார்கழி நீர்' என்பதே திருவருள் தான். மார்கழி நீராடலே அருளியலனுபவப் பேற்றை அனுபவித்தல் ஆகும்.

சைவப் பெருமக்கள் மார்கழி மாதத்தின் பேற்றினைத் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைச் சிந்திப்பதன் மூலமாகவும், சிந்தித்தவழியில் நின்று வழிபடுவதன் மூலமாகவும் அனுபவித்தல் வேண்டும்.

மார்கழி மாதத்தில் 'திருவெம்பாவை' தவிர வேறு எந்த ஒரு திருமுறைப் பாடலையும் பாடலாகாது என்ற மரபும் சைவத்தில் உண்டு.

இற்றை நாளில் வைணவப் பெருமக்கள் திருப்பாவையை மார்கழி முப்பதும் தப்பாமே அனுசந்தானம் செய்தல் போல, சைவப் பெருமக்கள் திருவெம்பாவைப் பக்கமே செல்வதில்லை என்பது வருந்தத் தக்க செயல் என்பது மட்டுமன்று; வாழ்வியல் அருளனுபவப் பெரும் பேற்றை இழந்து நின்று வறுமைப்படும் செயல் என்பதையும் உணர்தல் வேண்டும்.

வைணவம் ஆண்டு தோறும் மார்கழி முப்பதும் தப்பமே திருப்பாவையை அநுசந்தானம் செய்வதைச் சைவர்களே பார்க்கிறார்கள்; செவிமடுக்கிறார்கள். சைவர்களாகிய நாம் திருவெம்பாவையைக் கேட்க வேண்டும் என்ற செயலூக்கம் பிறத்தல் இல்லை.

"*தானே வந்து என்னைத் தலையளித்து ஆட்கொள்வான்*"

சிவன் என்று கருதியிருக்கிறார்கள் போலும் என்றுதான். கருத வேண்டியுள்ளது. மார்கழி விழாச் சிந்தனையும் திருவெம்பாவைப் பேறும் சைவர்களால் அநுபவிக்கப் பெறவேண்டும். அதற்குத் தேவை சைவ உணர்வு.

எனவே இறைவனை நோக்கி, "**பெருகட்டும் சைவ உணர்வு**" என்று வேண்டிக் கொள்வது சித்தாந்தத்தின் கடமையாகிறது.

சைவ அறிவும், சைவ ஞானமும் துணை நிற்கச் சைவ உணர்வு சைவர்களிடம் பெருகவதாகுக.

---

நன்றி : சித்தாந்தம் - 2001 சனவரி, பக். 1-6, ஆசிரியர் உரை.

# VIII. ARTICLES IN ENGLISH


1. Origin of Ganesa worship in Tamilnadu - *P.D. Balaji* 1

2. Thiruvasagam and Rev. G.U. Pope - *V. Kandavanam* 4

3. Quest for Felicity in Manikkavasagar and Traherne - *Usha Mahadevan* 7

4. The Twilight Language of Thirumanthiram - *T.N. Ganapathy* 13

6. Siddhars : An Introduction - *T.N. Ramachandran* 21

6. Namasivaya - *N. Thiruvasagam* 25

7. Avasthai (Avaththai) - *M. Kandaswamy* 29

8. Saguna and Nirguna Nature of Pasu, Pasa and Advaita - *J.M. Nallaswami Pillai* 34

9. Saivism Through the Ages - *T.B. Siddhalingaiah* 39

10. Pluralism : the quintessence of the Saiva Siddhanta - *Muruga Ramalingam* 47

11. Glory of Saivism in a Global Perspective - *R. Gopalakrishnan* 51-54

# 1. ORIGIN OF GANESA WORSHIP IN TAMILNADU

**- Dr. P.D. Balaji,**
*Dept. of Ancient History & Archaeology, University of Madras;*
*Editor, 'Saiva Siddhanta'. Perumandram.*

Genesa worship is quite popular in Tamil country. Though it is popular its origin and development is shrouded in mystery and sufficient work has not been done to trace its origin in Tamil country. Hence a pragmatic study undertaken by the author of this paper on the Ganesa specimens (upto 9th cent. AD) found in the caves unfolds various stages of development in his worship. Findings of the study is described hereunder.

The earliest reference to genesa is found in the Sanskrit works such as *Vedas*[1], *Sutras*[2] and *Smrtis*[3]. The term 'Ganapati' occurring in veda does not mean the puranic god ganesa. In **Manavagriha**, Sutra a text compiled in 300 B.C.,[4] the ceremonies to ward off the evil effects of ganesa is narrated. Thus in the centuries before Jesus Christ he was considered as an evil spirit. In *Yagnavalkaya*[5] Smriti one Vinayaga is described as the son of Ambika. Probably this could have served as a basis to the later puranic stories describing him as the son of Parvati. **Manusmrti**[6] another Sanskrit work assignable to 6th cent. AD states that the Sudras had worshipped genesa as their god. Thus in the northern part of India he was initially conceived as the creator of obstacles, but subsequently transformed into a benevolent god and bestower of success.

As far Tamil country is concerned, the earliest known literary source namely, Sangam works, donot contain any reference to genesa. In this connection, presence of an elephant faced garland bearer on the coping stone at Amaravati Buddhist. Sthya[7] (1st cent - 2nd cent. AD) in the neighbouring Andradesa deserves special mention. Therefore absence of any reference in the early Tamil/works should not be construed for non-existence of genesa worship in Tamil country in the early centuries of christian era.

In any case, genasa was certainly under worship in Tamil Country in around 5th-6th cent. An as attested by Kalladam[8], a Tamil work, the introductary part of which starts with a prayer to ganesa. It is corroborated by the presence of a number of Trimurthy stone plaques (6th - 7th cent. AD) of Pallava period, depicting genesa, in places like Madhurantakam, Anur, Manimangalam, Munnur etc., in Tondaimandalam[9]. Incidentally these are the earliest representation of genesa on stone in Tamil country yet he was not found in then rock - cut caves, excavated by the pallavas.

Probably the Muttaraiyar, feudatory of Pallavas ought to be the Forerunner in incorporating ganesa figurines in the cave architecture in Tamil Country, particularly in Pandimandalam in places like Narttamalai, Kunnandarkoil Tiruvellarai etc[10]. These Muttaraiyar caves in some pockets within Pandyan region probably induced the native sculptors, to chisel out ganesa

figurines in the caves excavated by them in places like Pillaiyarpatti, Tirukkokarnam, Kudumiyamalai, Kunnattur, Sevilipatti, Devaramalai, Kunnakudi, Tiruparankunram, Tirumalapuram, and Malakkoyil in Pandimandalam[11] in about 7th 8th cent. AD. Similarly in places like Trichy which was located far away from Tondaimandalam, one could find Pallava inscriptions and the caves excavated therein between 650 AD and 800 AD. However in Tondaimandalam, in the eaves excavated by the early Pallavas, ganesa was not represented. It was only from Rajasimhas' time, Probably after withessing the caves of Pandyas and Muttaraiyar his image was depicted in the structural temples of later Pallavas in Places like Kanchi, Mamallapuram and Tiruttani. Subsequently he was sculptured on the walls - of the already excaved caves in places like vallam, Tentiruparankunram.

An indepth probe on the scheme of his placement divulges that in the early phases (around 6th - 7th cent AD) which very well sinchronised with the date of Trimurthy Plaques, he was caved with Siva, Parvati, Narasimha, Brahma, Durga, Lakshmi and Muruga in a row. In the caves dated to 7th and 8th cent. AD on the rear wall, of the three or Four boys, either in the first boy or in the last boy he was carved, while rest of the boys were occupied by Muruga and Durga as at Tiruparankunram, Vishnu and Siva as at Tirumalapuram, Brahma, Durga, Muruga and Surya as at Trichy lower rock-cut. In all these, Probably to establish his filial relationship, he was always represented with siva. This scheme was followed even in the suceeding centuries as evidenced at Tiruvellarai.

The caves where there is a central shrine, ganesa was carved an one of the side walls. Following this Scheme, at Tirutkokarnam and Kunnandarkoil Ganesa was carved on the left side wall, while on the right gangadaramurthy was depicted. This once again endorses the efforts taken by the sculptors to popularise the filial relationship between Ganesa and Siva. Subsequent to the popularity and acceptance, as stated supra he was carved on the facades of the already excavated caves in places like vallam, Kudumiyamalai, Tentiruparankunram and other places.

Further, the sturdy glears, Ganesa images in the Caves dated between 7th and 9th cent AD were always upto a height of five to six feet and carved in high relief. IN 7th-8th cent. AD they were carved mostly in **ardhapadmasana** as in the Pandyan and Muttaraiyar caves. In this period **samapataka stanagam** and **Lalitasana** were rarely noticed as at Trichy lower rock cut, Triumalapuram and Kudumiyamalai. In 9th cent. AD ganesa in **rajalilasana** was introduced as at Vallam and Tiruvellarai. It is further observed in the 7th-8th cent AD. Ganesa had an oval shaped face and had a projected bareore-head. A convex projection in the centre of the fore - head in between the two eyes was noticeable. The ears were larger in size improportionate to the size of face. However in 9th cent. AD. its size was medium. In this period the fore-head was ornamented and this feature was absent in the early specimens.

Regarding the head dress in 7th cent. AD either it was a small bun like *makuta or* a *karanda makuta* as at Pillaiyarpatti and Kunnandarkoil. In the succeeding century *Kritamakuta* was introduced as evinced at Trichy lower rock cut, Tirumalapuram and Tiruparankunram. However from 9th cent. AD *Karanda Makuta* was uniformly observed. Besides Prominent

head, inproportionate - smeller body, absance of Potbelly were the same of the notable features akin to 7th cent. AD. The Pot belly a characteristic feature of Ganesa began to appear only in 8th cent AD. as witnessed at Trichy lower rock cut, vallam, Kudimiyamalai and Tiruparankunram. It had became more prominent and more projecting from 9th cent. AD onwards. **Udarabanda** was positioned right on the navel and devoid of decorations till 8th cent. AD and in the succeeding century it was decorated and found mostly above the navel. Pillaiyarpatti Specimen dated to 7th cent. AD. may be an exceptional case, where in the *udarabanda* was decorated. Another interesting feature in this period was the introduction of a band around the body between chest and belly.

No *Yagnopavita* was shown till 7th cent. AD. For this the Ganesa image at Pillaiyarpatti could be cited as an example. From 8th cent. AD., it was compulsorily depicted. However sculptors seems to have confused over on which side of the shoulder the sacred - thread should pass throughs. Therefore at Kunnandarkoil and Vallam one could notice the *yagnopavita* on the right shoulder instead of left. It was singular thread in 7th cent AD; double or triple threads on ribbon type from 8th cent. AD onwards. Some times these sacred threads were rarely decorated with floral and beaded deigns as at trichy and Vallam.

As far as the trunk was concerned they were long and suspended up to the navel till the 1st half of 9th cent AD. and thereafter its length had reduced and stops above the navel. No uniformity seems to have been followed in tis position. In 7th cent. AD. it was turning towards right in 'J' shape and embracing a *motaka* as at Pillaiyarpatti and Kunnandarkoil, from 8th cent. AD. in majority of specimens it was turning to left in 'L' shape and holding a *motaka*. However ever after 8th cent. AD. Ganesa images with their trunks turning to right were continued to be carved as at vallam (9th cent to) Kunnakudi (8th cent. AD) and Kudimiyamalai (8th cent. AD).

In most of the specimen, assignable to 7th and 8th cent. AD. the left tusk was broken. However from 9th cent AD. all ganesa images were depicted with broken right tusk. Similary in the early decades of 7th cent. AD. he was with only two arms as at Pillayarpatti. From 8th cent. AD. from arms seems to have become a common form. However the posture had differed. In all the specimens dated between 7th and 9th cent AD. the lower right arm had always held a *motaka*. Regarding the lower left arm it rested on the belly in the 7th cent. AD.; and the thigh in the 8th cent. AD. and on the knee in the 9th cent. AD. The upper hands always held various objects. In 7th and 8th cent. AD. the favourite eatable of elephant such as sugarcane, banana and corn were of ten found in his hands. In the 9th cent. AD. corn, broken tusk, flower buds, *gatha*, margo and rosary were observed. The study further gleaned till 9th cent. AD., depiction of pasa and angusa was very rare. However in the post - 9th cent. AD. probaly due to the popularity agamic principles, ganesa was always with these weapons.

As far as the ornaments were concerned, *Keyura* and wrislets were common right from 7th cent. AD. to 9th cent. AD. These were plain till 8th cent. AD. and decorated there after. Likewise **hara** was mostly not noticeable till 8th cent. However in exceptional cases such as Trichy lower rock-cut and Tiruparankunram double *hara* was noticed. From 9th cent. AD onwards *haras* with beaded docoration began to appear.

None of the ganesa figurines assignable to the period under study had traces of vastra garment except the standing specimen at Trichy lower rock cut. Another notable feature which randy noted in the 7th - 8th cent. AD was the carving of garas and vidhyadaras on either side of ganesa as found at Trichy and Tiruparankunram.

**NOTES**

1. *Rigveda* with commentary of Sayana, Ed : by Maxmullar *Atharva veda* with commentary of Sayan, Ed : by S.P. Pandit
2. *Bandhyayana Grihya Sesha - Sutra; Vaijvepya Grihya Sutra,*
3. *Manusmrit; Yajnavalakya Smriti.*
4. Shanti Lal Nagar, cult of Vinayaga, p. 4.
5. *Yajnavalakya Smriti* 1271ff
6. Gatty, *Tamil Culture*, Vol, III No. 2. P. 179.
7. C. Sivaramamurti, *Early Andra Art and Iconography,* P.3; A.K. Coomara swamy, *Yakshas*; P.7 Coomaraswamy of the view that the elephant headed *yaksha* found in an Amaravati coping stone, is undoubtedly a *yaksha* type ganesa.
8. Kalladam : Stanza 1
9. P.D. Balaji : *'Trimurti Stone Plaque From Anur'* (Tamil in Avanam, No. 8. P.P. 158 - 162.
10. H. Sarkar : *Cave Architecture in India'*, In South India Studies P. 570
11. K.V. Soundararajan : *Early Pandayan Art'* in South India Studies PP. 626-647.

## 2. THIRUVASAGAM AND REV. G.U. POPE

**- Dr. V. Kandavanam,**
*Editor : 'Athmajothy', Canada.*

A unique characteristic of our Tamil language is that it captivates completely any one who lays hands on its rich classical literature. Many foreigners, especially European missionaries, have fell in love with it. At a time when Tamils themselves were ashamed of their own tongue and were eagerly learning English language, many Europeans learnt Tamil and mastered it. Of them Tamil people continue still to pay tribute with gratitude to eminent Tamil scholars like Constantine Beschi (1680-1757), Caldwell (1815-1891) and G.U. Pope (1820-1918), not only for their immense contributions to Tamil literature but also for taking the greatness and sweetness of the Tamil language beyond the borders of the Indian sub-continent.

Rev. G.U.Pope, a Wesleyan missionary, who was sent to Tamilnadu to disseminate Christian faith, learnt Tamil language faithfully, mastered it and became an authority on Tamil literature and culture. He is well known for his unerring rendering of Thirukkural, Naladiyar and Thiruvasagam into English and for letting the world know the classical qualities of Tamil literature. He loved Tamil so much that he wished his tombstone bear the epitaph, 'Rev. G.U.Pope, a student of Tamil Literature.'

Of all his works, his contribution to Saivism is exceptional and Saivites hold him in high esteem for his English translation of Thiruvasagam and scholars quote him often in their speeches and writings about Thiruvasagam.

His book 'திருவாசகம்' THE THIRUVACAGAM OR 'SACRED UTTERANCES' OF THE TAMIL POET, SAINT AND SAGE MANIKKA-VACAGAR' consists of three parts. Part I is entitled 'The legendary History of the Tamil Poet, Saint and Sage Manikka - Vacagar' and contains notes on the Saiva Siddhanta system of religion and philosophy. Part II carries the Fifty-one Poems of Thiruvacagam with introductions, Tamil text and English translations. Part III is a section for Lexicon, Concordance, and General Index.

The Oxford University in 1900 first published the book. The Reverend has dated the Preface April 24, 1900, which was his eightieth birthday. His Preface contains some background information on the purpose, republication, translation and editing of such a marvellous work as Thiruvasagam. His translation that runs generally line for line with the original, maintains its rhythm to a great extent. Here is an example:

*போற்றி,இப் புவன நீர்தீக் காலொடு வானம் ஆனாய்!*
*போற்றி,எவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய்!*
*போற்றி,எல் லாஉ யிர்க்கும் ஈறாய்ஈ றின்மை ஆனாய்!*
*போற்றி,ஐம் புலன்க ளின்னைப் புணர்கிலாப் புணர்க்கை யானே!*

Hail, Thou Who art earth, water, fire, wind, ether too!
Hail, Thou, all life's phenomena, - Thyself invisible!
Hail, all living beings' End, - Thyself without an end!
Thyself reaching through all, by senses five unreached!

The above is the 70th verse in Hymn 5, The Sacred Cento (திருச்சதகம்). As we can see in this example, he is trying to make the meanings clear to the readers by using punctuation marks both in the text and in his translation. He also separates, wherever possible, combination of words and coalescence of letters in the original. He also gives appropriate headings for each of the translated verse - a deviation from the original, which has headings only for the long poems or for the decads. For the above verse his heading is 'The Universal Lord'.

